யூகிமுனிவர் பிடிவாதம் ஆயிரம்

(சித்த மருத்துவம்)

உரையாசிரியர் ந. சேதுரகுநாதன்

UG2939
R006C04
UG
2939

...றை • மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

யூகி முனிவர் பிடிவாதம்

ஆயிரம்

உரையாசிரியர்

ந. சேதுரகுநாதன்

பதிப்புத்துறை

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

பதிப்புரிமை : ©

பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை-625021

Publications Division
Madurai Kamaraj University
Madurai - 625 021

பதிப்பு எண் : 57

Printed under the Scheme of Financial Assistance granted by Government of India, Department of Culture, NEW DELHI for Preservation and publication of manuscripts during 1980-81.

பதிப்பு விவரங்கள்

1) உரையாசிரியர் : பேராசிரியர் ந. சேதுரகுநாதன்
(*Prof. N. Sethuragunathan*)

2) தலைப்பு : யூகிமுனிவர் பிடிவாதம் ஆயிரம்
(சித்த மருத்துவம்)
Ūki Munivar Pitivātham Āyiram
(Siddha Medicine)

3) பதிப்பு

1) இடம் : மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
(*Madurai Kamaraj University, Madurai-625021.*)

2) பதிப்பித்தோர் : பதிப்புத்துறை
(Publications Division)
Madurai Kamaraj University, Madurai.

3) ஆண்டு : 1982 (முதற்பதிப்பு)

4) மொத்த பக்கங்கள் : 326+8

5) பொருள் : சித்த மருத்துவம்
(Siddha Medicine)

6) விலை : ரூ. [redacted] 20

7) அச்சும் அமைப்பும் : மதுரை காமராசர் பல்கலைக்கழகக்-கூட்டுறவு அச்சகம், மதுரை-625 021.

Preface

If the world is to survive, the human beings should live with all happiness, without any physical and mental hazards. Basically if life is to get the light for living, it should cultivate 'Thavam' (Thapas); if the body is to be dynamic, it should be administered necessary medicines; and if the world is to be rich it should possess gold. The Siddhars of Tamil Nadu, prescribed the ways and means to attain the above threefold objects of human beings. The Saint Tirumula Nayanar and Agathiya were the pioneers in this field.

Ūki Muṉivar, the author of this book, is said to have had a close and long association with Agathiya Muṉivar. Thereby he realized the secret of being a Siddha and performed many wonders. He also discovered the relative merits of Siddha medicines. He transcribed such of those findings in several volumes. The book that you are holding is one among them. The methods of preparing the medicines in the forms of powder, liquid, capsules and preservative jams etc., depending upon the nature and ingredients are given in this book.

There was a practice of not revealing the secrets of medicinal properties to others. Because it was believed that if alchemy was done with the knowledge of others, it would only bring ruin for them. As such, Ūki Muṉivar warns the people against divulging the secrets, but he advices them to take to 'Thavam' to attain perfection in the respective fields.

Ūki Muṉivar himself refutes some of his own findings in the latter half of his work. He therefore instructs that one should go through his work meticulously, right from introduction to conclusion.

Some of his sayings are given below :

1) To attain perfection of knowledge (Jñāṉa Siddhi), to diagnose and cure diseases (Vātha Siddhi), to cultivate thavam (Yōga Siddhi) and to attain immortality (Kāya Siddhi), you must have belief in them, failing which you would go to hell (pitivatham, st. 624).

2) Never divulge and boast like a gambler. But, concentrate on the selection of ingredients. You will succeed (717).

3) If you understand all the contents of nine volumes, you can be sure of attaining all that you desire (251). As such, for comprehension all the nine volumes are important.

4) Only idiots would regard the Siddha medicines as failures, without knowing their real values.

5) I pledge in the name of Lord Siva that he who knows, understands and cultivates the art of Siddha system would attain all that he desires.

In short, Ūki Muṉivar gives an analytical description of the five elements which form the universe. (refer stanzas 310 to 362). Besides, he says that preparation of a medicine known as "Panjapootha Senthūram" would cure as many as fifty six diseases. The diseases which get cured, if "Panjapootha Senthūram" is administered are as follows :

1)	Vātham		10)	Kanda	Vātham
2)	Pakka	Vātham	11)	Oruthalai	,,
3)	Thimir	,,	12)	Mērralai	,,
4)	Muṭakku	,,	13)	Tanta	,,
5)	Kūṉi	,,	14)	Pittangal	,,
6)	Naritalai	,,	15)	Pitta	,,
7)	Anta	,,	16)	Tanta	Pittam
8)	Virai	,,	17)	Mayakka	,,
9)	Alachal	,,	18)	Ratta	,,

19) Talai Pittam
20) Vali ,,
21) Kanda ,,
22) Sali ,,
23) Orutalai ,,
24) Vali Kunmam ,,
25) Ratta Kunmam ,,
26) Kandavali Vatha Kunmam
27) Ukaaravali Kunmapittam
28) Tamaraka vali
29) Toṉtavali Cunman
30) Cenmavali
31) Seleppanakkal 96
32) Musal valippu
33) Kuthirai valippu
34) Kundalam
35) Mekam
36) Puvuthiram
37) Peruvayeru
38) Neerampal
39) Kulai mutti
40) Kamaalai
41) Veṭṭai
42) Kallataippu
43) Kannoovu
44) Kaathataippu
45) Oruthalai Nooy
46) Thalai Nooy
47) Thoni ataippu
48) Viranam
49) Vethantha ataippu
50) Sayakasam
51) Veripuraṭṭal
52) Pethi Kasam
53) Utalvatham
54) Naliru cūṭu
55) Soodu
56) Eelai

There are many more Siddha medicines invented by Ūki Muṉivar which are found in this book. If one goes through the contents of this book he would get inspiration for the preparation of wonderful medicines.

Śiddhars had the greatness of finding and bringing out the uses of different acids. Further, they found the uses of copper, silver and mercury, much earlier than others.

Iron deficiency and its bad effects on human beings are yet to be fully understood. Ūki Muṉivar discloses the methods of preparation of iron wax (Aya mezhugu) which would cure as many

as twentysix diseases. "Iron is not so simple an element as would many think" says Ūki Muṉivar.

"Ūki Muṉivar Pitivātham Āyiram" has been selected for publication as a rare manuscript in Siddha medicine.

The above publication project was jointly sponsored by the Publications Division and School of Tamil Studies, Madurai Kamaraj University with the financial assistance given by the Department of Culture, New Delhi.

A note of special thanks is due to Dr. RM. Periakaruppan, Co-ordinator and Head, School of Tamil Studies and Indian Languages for his untiring efforts in bringing out this book for the benefit of humanity at large.

Prof. N. Sethuragunathan

முகவுரை

முதலில் யூகிமுனிவர் வரலாற்றைப்பற்றிப் போகர் ஏழாயிரத்தில் நாலாவது காண்டத்தில் அறுநூற்று இருபத்திரண்டாம் பாடல் முதல் அறுநூற்று முப்பத்து மூன்றாம் பாடல் வரை கூறப்பெற்றுள்ள கருத்-துக்களையும் பாடல்களையும் நோக்குவோம்.

யூகி என்ற முனிவர் சித்தர்களில் ஒருவர். இல்லற வாழ்க்கையில் பெருமிதத்துடன் நெடுங்காலம் இருந்தார். இவர் சமதக்கினி முனிவருக்கும் திரணாக்கினி முனிவருக்கும் குரு இவரின் பெரும் புகழை என் குரு-வாகிய காலாங்கிநாதர் அடியேனுக்குச் சொன்னார் பண்பான யூகிமுனி என்பவர் உலகத்தில் தென்னாட்டு வளாகத்தில் மலைவளம் கண்டு சுற்றிவரும் பொழுது பன்றிமலைக்கு வந்து அதன்வளத்தைச் சுற்றிப் பார்த்து அதன் நடுக்காட்டிற் செல்லும் பொழுது வலிய குத்துக்கல் ஒன்று அங்கே நிற்கக் கண்டார். இந்த மலையோரம் அவர் ஒடுக்கம் அமைத்து மகிழ்வுடன் இருக்கும் காலத்தில் தன்னொடுக்கத்தின் பக்கத்தில் கிடுகிடென்ற பேரொலி கேட்டுத்திடுக்கிட்டு மெய்மறந்து நின்றார். அப்பொழுது அவர்முன் ஓர் அறிவுப் பேரொளி வந்து நின்றது. அந்தச் சித்தொளியைக் கண்டபோது அது கண்காணாப் பேரொளியாகவும் சொல்லிற்கு அடங்காததாகவும் தோன்றிற்று. அண்ட சராசரங்களெல்லாம் கிடுகிடுத்து நடுங்கின. அவ்வொலியைக் கண்டு யூகிமுனிவர் மயங்கிப் போனார். வணங்கி விழுந்து கண்திறந்து பார்க்கும் பொழுது தெளிவான ஸ்ரீசம்பார முனிவரைக் கண்டார். அவருடைய ஒளிவண்ணத் திருமேனியின் தோற்றம் காணமுடிந்தது. கண்டவுடன் சித்து பாலராகிய யூகிமுனிவர் ஸ்ரீசம்பார முனிவருடைய திருவடிகளைத் தொட்டுப் புகழ்ந்து அவரடிகளில் பணிந்து எனக்கு வேண்டிய வரங்கள் தருக என்று விருப்பத்துடன் கைகுவித்து வணங்கினார். அந்தச் சம்பார முனிவர் யூகிமுனிவருக்குப் புகழோடு மெய்உணர்வுப் பயிற்சி பயிற்றுவித்தார். அப்பயிற்சி பெற்ற அவரைத் தமது சமாதிக்கு முன்னே சிலகாலம் இருக்க என்று ஏற்பாடு-கள் செய்து தெளிவான முறைமையோடு மீண்டும் சமாதிக்குள் (ஒடுக்கத்-திற்குள்) புகுந்தார். யூகிமுனிவர் அங்கே நெடுங்காலம் இருந்தார். பின்னர் தாமும் ஒடுக்கத்திற்குப் புக நினைத்து அதனுள் புகும்பொழுது தாம் வெளிவரும் காலத்தில் நிகழும் அடையாளங்களைக் கல்லின் மேல் வரைந்து வைத்தார். அது வருமாறு :

யான் வரும்போது, ''பாருலகம் கருக்கலாய்ப் பகலிரவும் இரண்டு-மொன்றாய் இருக்கும்'' என்று எழுதினார். பின்னர் ஒடுக்கத்தினுள்

புகுந்து பலகாலம் இருந்தார். திடீரென்று ஒருநாள் பேரோசை கேட்டது; வெளியில் வந்தார்.

''பழுதுபடாத் தேகமது என்ன சொல்வேன் பாரினிலே
வெகுகாலம் இருந்து மேதான்
விழுதுபோல் ரோமங்கள் மிக வளர்ந்து விருப்புடன்
மேதினியில் வந்தார் காணே''
''காணவே அதிசயங்கள் சொல்லியே தான் காசினியில்
வெளிப்பட்டார்ஶ்ரீயூகி தாமும்''.

காயகற்பம் உண்டார். புகழாக ஒடுக்கத்தில் இருந்து வந்தார். புகழொடு உலகில் கோடி காலம் இருந்தார். கூடுவிட்டுக் கூடுபாய்ந்தார். உடலுறுப்புக்கள் வேறுவேறாகத் தனித்தனியே கிடக்கும்படியாகத் தோற்றம் அளித்தார், கைவேறாய்க் கால்கள் வேறாய் உடல் வேறாய்த் தலையும் வேறாய் உலகத்தில் இருந்தார். உலகத்தில் சிறப்பாக அவர் ஆடின கூத்துக்கள் மிகுதி. அவரைப் பார்த்தோரும் கேட்டோரும் பாரில் மிகுதி. இந்தக் குருபரனார் நூல்கள் முதலிய எல்லாம் தேர்ந்து யோகம் முதலிய எல்லா உளவுகளும் கற்று என் குருவாகிய காலாங்கி நாதர்மேல் பாசம் வைத்தார். இவர் மிகுந்த சித்து, சொருப சித்து, வெளியான நாதவொளி அதீத சித்து, எல்லை கடந்த அதிசயங்கள் மிகவும் செய்து உலகில் இருந்தவர்.

போகலா மின்ன மொரு மார்க்கம் பாரு பூதலத்தில்
அதிசயங்க ளின்னஞ் சொல்வேன்
வேகமுடன் சித்தர்களில் ஒருவ ரப்பா
வுலகுதனி லிருந்தாரே யூகி தாமும்
சோகமுடன் சமுசார வாழ்க்கை தன்னில்
செருக்குடனே வெகுகால மிருந்தாரப்பா
சாகமுடன் சமதக்கினி முனிவருக்கும் சார்பான
திரணாக்கினி மூனிவர் தாமே.

தாமான முனிவருக்குக் குருவே யாகும் தன்மையுள்ள
குருவினது கீர்த்தி தன்னைக்
கோமானாங் காலாங்கி நாதர் தாமும் கொப்பெனவே
யடியேனுக்குரைத்த துண்டு
நாமான மாகவல்லோ வறிந்த மட்டும் நாதாக்கள்
வரலாற்றை நாமுரைப்போம்
தீமான மில்லாமல் அடியேன்றானும் திறமுடனே
சொல்லுகிறேன் பண்பாய்க் கேளே

பண்பான யூகி முனி யென்போர் தாமும்
பாருலகில் தட்சணப் பிரவேசத்தில்
மண்பான மலைவளம் சுற்றும் போது கண்டாரே
வராககிரி யென்ற மேரு
திண்பான மலைவளத்தைச் சுற்றியே தான்
தீரமுடன் நடுமத்திக் காட தன்னில்
வண்பான குத்துக்கல் கண்டாரங்கே
வாகுடனே யதிசய மொன்றிருக்க லாச்சே

இருந்த தொரு அதிசயத்தைக் கண்டாரப்பா
எழிலான யூகிமுனிச் சித்தர் தாமும்
பொருந்தவே மலையோரம் சமாதி கண்டு
பொங்கமுடன் றானிருக்கும் காலந் தன்னில்
திருந்தமுடன் சமாதிபுறம் சத்தம் கேட்டுத்
திடுக்கிட்டு மெய்மறந்து நிற்கும் போது
அருந்துதி போல் சோதியொன்று காண லாச்சு
அப்போது சித்தொளி வைக் கண்டார் பாரே.

கண்டாரே சித்தொளிவைக் கண்டபோது கண்காணாச்
சோதிமய மென்ன சொல்வோம்
அண்டசரா சரங்களெல்லாம் கிடுகிடுத்து அங்ஙனயே
யொளிதனிலே மயங்கிப்போனார்
தெண்டமுடன் கண்திறந்து பார்க்கும் போது தெளிவான
ஸ்ரீசம்பார னையுமப்பா
பண்டு மிகப் **பிரகாயந்தான்** பாரினிலே தோற்றமது காணலாச்சே.

காணவே யூகிமுனி சித்துபாலன் கண்டாரே ஸ்ரீசம்பாரனையா தன்னைத்
தோணவே யவர்பாதந் தொட்டுமேதான் தொல்லுலகில்
கீர்த்தியுடன் அடி பணிந்து
வேணதொரு வரமெனக்குத் தருகவென்று விருப்பமுட
னஞ்சலிகள் செய்து கொண்டார்
ஊணவே ரிஷியாரு முனியாருக்குப் புகழாக ஞானேபதேசஞ்
செய்தார் பாரே.

பாரே தான் ஞானோபதேசம் பெற்றுப் பாலகனும்
சமாதிக்கு முன்னதாகக்
கூரேதான் சிலகாலம் இருக்க வென்று கொற்றவனும்
உறுதியது மிகவுமாகித்

௬

தேரேதான் லட்சணங்கள் விதியேற்பாடு தெளிவான
முறையோடு சமாதிக்கேக
நேரே தான் பூகி முனி சித்துதாமும் நெடுங்கால
சமாதிதனில் இருந்தார் தாமே.

இருக்கவே பூகிமுனி சிலதுகாலம் எண்ணமுற்றுச்
சமாதிக்குப் போகும்போது
உருக்கலென்றகல்லின்மேல் வரைந்தரூபம் வுத்தமனே
சொல்லுகிறேன் மைந்தாகேளு
பொறுக்கவே சிலகாலம் சமாதிருந்து புவிமீதில்
வரும்போது அடையாளந்தான்
கருக்கலாய்ப் பகலிரவு மிரண்டு மொன்றாய்ப்
பாருலகமிருக்குமென்று எழுதலாச்சே.

எழுதவே சீஷவர்க் கந்தன்னைக். கேட்டு ஏற்றமுடன்
சமாதிதனில் அருகிருந்தார்
தொழுதுமே சிலகாலம் இருந்தார் ஆங்கே தோற்றமுடன்
சத்தமது கேட்கலாச்சு
பழுதுபடாத் தேகமது என்ன சொல்வேன் பாரினிலே
வெகுகாலம் இருந்துமே தான்
விழுதுபோல் ரோமங்கள் மிக வளர்ந்து விருப்பமுடன்
மேதினியில் வந்தார் காணே.

காணவே யதிசயங்கள் சொல்லியே தான் காசினியில்
வெளிப்பட்டார் பூகி தாமும்
பூணவே காயகற்பம் உண்டுமல்லோ புகழாகச் சமாதி
தனில் இருந்து வந்தார்
வேணபடி யுபசாரம் அதிகமாகி மேதினியில்
தாமிருந்தார் கோடி காலம்
தோணவே கூடுவிட்டுக் கூடுபாய்ந்தார் தோன்றாமல்
தேகமது வேறாய்த்தானே.

வேறாகத் தானிருந்த வண்ணம் சொல்வேன் வேண்டியே
கைவேறாய்க் கால்கள் வேறாய்
நேராக வுடல் வேறாய்த் தலையும் வேறாய்
நேர்மையுடன் பூமிதனிலிருந்த சித்து
சீராக லோக மதில் அநேகங் கூத்துச் சிறப்புடனே
யாடினது மெத்தவுண்டு
பாராமல் கேட்டவரும் பார்த்தோருண்டு பாரினிலே
அதிசயங்கள் மெத்தத்தானே,

தானான வதிசயங்கள் சாற்றக் கேளும் தகமையுள்ள
குருபரனார் வித்தை தேடி
தேனான நூல்கள் முதல்யாவுந் தேர்ந்து தெளிவுறவே
யோகமுதலுளவு கற்றுக்
கோனானயெனதையர் காலாங்கி நாதர்
குருபரனாரருளுடனே பாசங்கொண்டார்
வேனான வெகுசித்துச் சொருப சித்து வெளியான
நாதவொளி யதீதமாமே.

யூகிமுனிவர் பிறந்தமாதம். நாண்மீண்

''சீரான யூகிமுனி பிறந்த வண்ணம் சிறப்புடனே
சொல்லுகிறேன் திறமை மெத்த
நேரான ஆவணியாம் திங்கள் அப்பா நெடிதான
பூசமது மூன்றாங்காலாம். (6-ஆம் காண்டம்(944)
''தகைமையுள்ள தன்வந்திரிக்குற்ற பேரன், கோனான சிங்களவ
குலத்துதித்த கொம்பனையாள் கானீனன்
பெற்ற பிள்ளை, தேனான திராவிடத்திற்சொன்னாற்போல
தீர்க்கமுடன் வடமொழியிற் சொல்லலாச்சு

இதுவரை யூகிமுனிவர் வரலாறாகப் போகமுனிவர் கூறியவற்றை நோக்கினோம். இனி கருவூரார் வாதகாவியம் எழுநூற்றில் கூறுவது காண்போம்.

''திரமுள முனிவர் யூகி செய்தகா வியங்கள் ரத்தினம்
உரமுள கம்ப ளத்திலுற்றவரி வருந் தானும்
வரமுடன் தபசு செய்து வகாரத்தில் பேரும் பெற்றுத்
தரமதாய்ச் சித்தரோடு சார்ந்துமே வந்தார் நேரே''

என்பதில் இவர் செய்த காவியங்கள் ரத்தினம் என்று புகழ்ந்துள்ளார். கருவூரார் கம்பளத்திலுற்றவர் என்கிறார். போகர் தாய் சிங்கள குலப்பெண் என்றார். தன்வந்திரி பேரன் என்பது தன்வந்திரி வழி வந்த அசுவினிதேவரையாசிரியராகக் கொண்ட குறிப்பை உணர்த்துகிறது.

யூகியார் தாம் பொன் செய் நூலாகப் பத்தாயிரம் பாடல்கள் செய்தேன் என்று கூறுகிறார்.

யூகிமுனிவர் செய்த நூல்கள்

(1) யூகிமுனிவர் பிடிவாதம் 1000

(2) ,, வாதகாவியம் முதற்காண்டம் 1000.

,, ,, 2-ஆம் காண்டம் 1000.

(3) யூகிமுனிவர் வாதவைத்திய உலா (1000) (4250 வரி).
(4) ,, (வாதகாவியக்) கும்மி 1000. (1021 பாடல்).
(5) ,, பரிபூரணம் 200, (202 பாடல்).
(6) ,, வாதாங்க தீட்சை 300 (302 பாடல்).
(7) ,, வாதவைத்திய விளக்கம் 200.
(8) ,, மதி வெண்பா 100.

இந்நூலில் வெண்பா 21-பாடல்கள் மட்டும் உள. மொத்தம் பாடல்கள் 120. ஆகவே மதிவெண்பா 21-ம் ஏனைய நூறு பாடலாக-வேறொரு நூலாகவும் இருக்கலாம். வெண்பா முதலாகத் தொடங்கிய காரணம் பற்றிப் பெயர் வந்தது என்றால் மதிவெண்பா 100 என்பதற்குப் பொருளில்லை பாடலின் தொகை 120. விருத்தமும் கலி விருத்தமும் விரவி வந்துள்ளன.

(9) யூகி முனிவர் கரிசலை 36.
(10) ,, வைத்திய சிந்தாமணி 800
(11) ,, வைத்திய சாரசங்கிரகம்.
(12) ,, ஆநந்தக் களிப்பு 1000. (கிடைக்கவில்லை) (இந்நூலை ஆனந்தக் கலிப்பா என்பர்)
(13) ,, மூதுரை (கிடைக்கவில்லை).
(14) சிங்கியிருப்பு 100 } (உலா 487-ல் காண்க)
(15) வகுப்பு 32 }
(16) யூகிமுனிவர் பூரண்ம் 100.

ஆகிய நூல்கள் இருக்கின்றன. இராமகுருசாமிக் கோனார் தாம் வெளியிட்ட அகராதியில் யூகிமுனிவர் வெண்பா நாற்பதினாயிரமும் யூகி முனிவர் பன்னீராயிரமும் உண்டென்றும் அவை கிடைக்கவில்லை எனறும் எழுதியுள்ளனர்.

அகத்தியர் பன்னீராயிரம் வெண்பா நாற்பதினாயிரம் இருபத்தோராயிரம் பதினையாயிரம் இவைகளும் கிடைக்கவில்லை. பன்னீராயிரத்துக்குச் சுருக்கம், ''பன்னிரு காண்டச் சுருக்கம்'' என வெளிவந்துளது. தமிழில் கலைக்கோட்டுத்தண்டு என்ற நிகண்டு நூல் இருந்தது என்பர் கலைக்கோட்டு முனிவர் எழுதிய ககனவித்தை பதினெண்ணாயிரத்து எட்டும், ரசாயனமும் சிற்பமும் பற்றி எழுதிய நூல் நூறாயிரம் பாடலும், எழுதினர் என்றும் அவற்றையெல்லாம் போகர் அறிந்து நூலாக விரித்தனர் என்றும் கோரக்கர் சந்திரரேகை 189-ஆம் பாடலில் கூறியிருக்-

7 ,8 , 9 , 10 PAGES MISSING IN BOOK

"வழுத்தினார் வடகிரந்தந் தன்னைப் பார்த்து
வடிவாக வாதத்தின் மார்க்கமெல்லாம்
அழுத்தமாய் இருந்ததொரு கைபாகத்தை
ஆதிமுதல் அந்தம்வரைக் கேட்டுக் கேட்டுப்
பழுத்தகனி போலவே சொன்னா ரப்பா
பாரிலே மானிடர்கள் பார்த்துத் தேறிக்
கழுத்திலிட்ட ஆபரணம் போலே செய்தார்
கனிவாக ஆயிரத்தைக் கனிந்து பாரே" (4)

என்பதில் வடகிரந்தமென்பதும் தமிழ் மக்கள் வடமொழியிற் செய்த நூல்களேயாகும். எங்ஙனமெனில் இந்நூற் பொருள்களே மற்றெல்லோர் சொன்ன நூல்களிலும் சில சில மாறுபாட்டுடனே வழங்கிவருவதலால் என்க.

"கனிந்துமே யாதியிலே யூகி தானும்
கனிவாக வைத்தியங்கள் கற்க (வேண்டிக்)
கனிந்துமே யகத்தியர் தம் பாதம் நோக்கி
நலமாக வெகுகோடி காலம் தொண்டால்
பணிந்துமே வேலை செய்து வருகு நாளில்
பதிவாக அகத்தியரும் மனம கிழ்ந்து
வணிந்துமே கைபாக வரிசையெல்லாம்
வடிவாக யூகி முனிபார்த்திட்டேனே". (5)

என்பதனால் எவ்வளவு காலம் தொண்டு செய்து கற்றுணர்ந்து நூல் செய்திருப்பார் என்பது உய்த்துணர்ந்து போற்றுக.

சித்தர்கள் தங்கள் நூல்களில் பொன்செய்யும் முறைமையும் மருத்துவமுறைமையும் மெய்யுணர்வுப் பயிற்சி முறைமையும் (வாத வைத்திய யோகஞானம்) விரவிக் கூறுவதே பெரும்பாலும் தங்கள் வழக்கமாகக் கொண்டனர். இவர் நூல்களும் மருத்துவத்திற்கு மிக இன்றியமையாதன. அகத்தியர் குழம்பு என்ற அருமையான மருந்தின் செய்பாகமும் கைபாகமும் கொடுக்கும் முறைமையும் இவர் வாதகாவியக் கும்மியிலும் வாத காண்டம் முதலாயிரத்திலும் உலாவிலும் கூறியருளினார். அது மிக்க பயனுடையதாகும்.

மாற்றுக்கலை பொய்யென்று வாய்க்கு வந்தவண்ணம்
வசை கூறுவோரை யூகிமுனிவர் தாக்குகின்றார்.

"ஆமேதான் உலகத்தில் வாதம் பொய்யோ அடுத்துமே
ஞானமது பொய்யோ அல்ல
காமேதான் யோகசித்தி காயசித்தி
கனிவாகப் பொய்யென்று சொன்ன வாதி

நாமேதான் நரகமென்ற பாதா ளத்தில்
நாடியே விழுந்திடுவார் நாடிக் கேளு
தாமேதான் வங்கி சங்கள் எல்லாம் பாழாம்
சரியாகச் சொல்லிவிட்டேன் பார்த்துத் தேறே.
என்றும் (பிடிவாதம் 624)

கொள்ளவே நவகண்டந் தன்னிலே தான்
கூறிரிய ரசவாதம் பொய்யோ என்றால்
துள்ளவே வங்கிசங்கள் எல்லாம் பொய்யாம்
சூதாடு வார் போலச் சொல்ல வேண்டாம்
கள்ளமாய்க் கைபாகம் கண்டு பாரு
காதலுடன் பொய்மறந்து கணக்குப் பாரு
துள்ளவே எல்லாமும் சித்தி யாகும்
துடியான ராசயோ கத்தைப் பாரே. 717

சித்தியாம் உலகத்தோர் பிழைக்கவென்று
சிறப்பாகப் பிடிவாதந் தன்னிலே தான்
புத்தியாய்ச் சொல்லிவிட்டேன் உற்றுக் கேளு
புனிதமாய் யோகத்தைப் புரண்டு பாரு
நத்தியாய்ப் பார்த்தாலே எல்லாம் சித்தி
நலமாகக் **காப்போடு கடையும் பாரு**
பத்தியே முதுரையில் நேர்மை பாரு
பதிவாகச் சரியாகும் பண்புள் ளோரே
என்றும் கூறுவன காண்க. 718

வாதம் பொய்யென்போரைச் செருப்பாலடி என்று கடினமாகவும் கூறு-கின்றார். யூகிமுனிவர் இயற்றிய நூல்களைப் படிப்போர்க்குக் கூறியது கூறலாகவும் திரும்பத் திரும்பவும் ஏன் கூறுகிறாரென்றும் நினைக்கத் தோன்றும், அவைகளெல்லாம் வெவ்வேறு நுட்பங்களை விளக்குவன.

யூகிமுனிவர் நூல்களை 8-3-1950-ல் திரு. குரு. இராமசாமிக்கோன் அவர்களிடம் யான் வாங்கும்போது அந்நூற் பொருள் உண்மைப் பயனுள்ளனவா? என்று ஐயுற்று வினவினேன். அவர்கள் ஆணித்தர-மான உறுதியுடன் அதன் திறத்தினை நவின்றார்கள். பின்னர் சித்த-யோகி சுவாமி சுந்தர மகாலிங்கம் அவர்களும் எடுத்துக்கூற அதன் பின் நூலாய்ந்து பார்த்தபோது உண்மை உண்மையே என்பது புலனா-யிற்று. அகத்தியர் இயற்றிய பத்து நூறாயிரம் பயின்ற இவர் செய்த நூல்களின் மதிப்புக்கு விண்ணுலகும் மண்ணுலகும் ஈடாகாது என்பது முற்றும் உண்மை. என் வாழ்வின்கண் யான் யாரிடமும் சென்று பொருள் கேளாத வண்ணம் பொருள் வழங்கித் துணை செய்த வள்ளல்களாக

இலங்கிய நூல்கள் சித்தர் நூல்களே. உலகமும் இப்பயனை அடைவதாக.

உரை எழுதிய முறை.

நூல்களில் பற்பல இடங்களில் உலகியல் அறிவும் வரலாற்றுக் குறிப்பும் மற்றும் பிற செய்திகளும் பற்றிக் கூறிய பாடல்களுக்குப் பொருள் எழுத வேண்டிய இன்றியமையாமை இன்மையால் வேண்டிய இடங்களுக்கு மட்டும் பொருள் முடிபு கருதித் தொகுத்து உரை எழுதியிருக்கின்றேன். உரையினை விரிப்பில் பெருகுமாதலின் சுருக்கமாகவே எழுதினேன். யூகிமுனிவர் பிடிவாதம் 1000 தனிநூல். வாத காவியம் முதற்காண்டம் 1000 - 2ஆம் காண்டம் 1000. இவ்விரண்டும் தனிநூல். இவற்றின் கண்ணும் அரிய பெரிய முறைகள் கற்கவேண்டிய முறைகள் அடங்கியுள்ளன. எடுத்துக்காட்டாக ஒன்று. பொன் செய்யும் முன்பு திரிமூர்த்தி பற்பம் செய்து பணங்களைத் தேடிப்பின் வாதம் பார் என்கின்றார்.

திரிமூர்த்தி பற்பம் செய்து பொருள் உண்டாக்கல்

செய்திடவே திரிமூர்த்தி பற்பம் தன்னைச்
சிறப்பாகவுலகத்தில் மானிடர்க்கு
எய்திட்ட நோயெல்லாம் ஓடிப் போக
எனையாண்ட மூர்த்தியுமே இயம்பினார் பார்
கைத்திட்ட வாதங்கள் செய்யுமுன்னே கடிதாக
இதை வைத்து வைத்தியம் செய்து
பைத்திட்ட பணங்களைத்தான் சம்பாதித்துப்
பரிவாக வாதத்தைப் பார்த்திடாயே 105

வீரரசம் இலிங்கரசம்

பார்த்திடவே வீரமது பலமோ பத்து
பதிவாகத் தண்டவாளம் பலமும் ரெண்டு
சேர்த்திடவே இவைரண்டும் நேக அரைத்துச்
சிறப்பாகப் பார்த்திடவே ரசமு மாகும்
நாத்திடவே ரசமெடுத்து அப்பால் வைத்து
நலமாக இலிங்கமது பலமும் பத்து
ஏத்திடவே திராவகத்தை விட்டு ரெம்ப
இழுத்தரைத்துக் கல்வத்திலிதமா யாட்டே 106

நாமேதான் நரகமென்ற பாதா ளத்தில்
நாடியே விழுந்திடுவார் நாடிக் கேளு
தாமேதான் வங்கி சங்கள் எல்லாம் பாழாம்
சரியாகச் சொல்லிவிட்டேன் பார்த்துத் தேறே.
என்றும் (பிடிவாதம் 624)

கொள்ளவே நவகண்டந் தன்னிலே தான்
கூறரிய ரசவாதம் பொய்யோ என்றால்
துள்ளவே வங்கிசங்கள் எல்லாம் பொய்யாம்
சூதாடு வார் போலச் சொல்ல வேண்டாம்
கள்ளமாய்க் கைபாகம் கண்டு பாரு
காதலுடன் பொய்மறந்து கணக்குப் பாரு
துள்ளவே எல்லாமும் சித்தி யாகும்
துடியான ராசயோ கத்தைப் பாரே. 717

சித்தியாம் உலகத்தோர் பிழைக்கவென்று
சிறப்பாகப் பிடிவாதந் தன்னிலே தான்
புத்தியாய்ச் சொல்லிவிட்டேன் உற்றுக் கேளு
புனிதமாய் யோகத்தைப் புரண்டு பாரு
நத்தியாய்ப் பார்த்தாலே எல்லாம் சித்தி
நலமாகக் **காப்போடு கடையும் பாரு**
பத்தியே மூதுரையில் நேர்மை பாரு
பதிவாகச் சரியாகும் பண்புள் ளோரே
என்றும் கூறுவன காண்க. 718

வாதம் பொய்யென்போரைச் செருப்பாலடி என்று கடினமாகவும் கூறுகின்றார். யூகிமுனிவர் இயற்றிய நூல்களைப் படிப்போர்க்குக் கூறியது கூறலாகவும் திரும்பத் திரும்பவும் ஏன் கூறுகிறாரென்றும் நினைக்கத் தோன்றும், அவைகளெல்லாம் வெவ்வேறு நுட்பங்களை விளக்குவன.

யூகிமுனிவர் நூல்களை 8-3-1950-ல் திரு. குரு. இராமசாமிக்கோன் அவர்களிடம் யான் வாங்கும்போது அந்நூற் பொருள் உண்மைப் பயனுள்ளனவா? என்று ஐயுற்று வினவினேன். அவர்கள் ஆணித்தரமான உறுதியுடன் அதன் திறத்தினை நவின்றார்கள். பின்னர் சித்தயோகி சுவாமி சுந்தர மகாலிங்கம் அவர்களும் எடுத்துக்கூற அதன் பின் நூலாய்ந்து பார்த்தபோது உண்மை உண்மையே என்பது புலனாயிற்று. அகத்தியர் இயற்றிய பத்து நூறாயிரம் பயின்ற இவர் செய்த நூல்களின் மதிப்புக்கு விண்ணுலகும் மண்ணுலகும் ஈடாகாது என்பது முற்றும் உண்மை. என் வாழ்வின்கண் யான் யாரிடமும் சென்று பொருள் கேளாத வண்ணம் பொருள் வழங்கித் துணை செய்த வள்ளல்களாக

இலங்கிய நூல்கள் சித்தர் நூல்களே. உலகமும் இப்பயனை அடைவதாக.

உரை எழுதிய முறை.

நூல்களில் பற்பல இடங்களில் உலகியல் அறிவும் வரலாற்றுக் குறிப்பும் மற்றும் பிற செய்திகளும் பற்றிக் கூறிய பாடல்களுக்குப் பொருள் எழுத வேண்டிய இன்றியமையாமை இன்மையால் வேண்டிய இடங்களுக்கு மட்டும் பொருள் முடிபு கருதித் தொகுத்து உரை எழுதியிருக்கின்றேன். உரையினை விரிப்பில் பெருகுமாதலின் சுருக்கமாகவே எழுதினேன். யூகிமுனிவர் பிடிவாதம் 1000 தனிநூல். வாத காவியம் முதற்காண்டம் 1000 - 2ஆம் காண்டம் 1000. இவ்விரண்டும் தனிநூல். இவற்றின் கண்ணும் அரிய பெரிய முறைகள் கற்கவேண்டிய முறைகள் அடங்கியுள்ளன. எடுத்துக்காட்டாக ஒன்று. பொன் செய்யும் முன்பு திரிமூர்த்தி பற்பம் செய்து பணங்களைத் தேடிப்பின் வாதம் பார் என்கின்றார்.

திரிமூர்த்தி பற்பம் செய்து பொருள் உண்டாக்கல்

செய்திடவே திரிமூர்த்தி பற்பம் தன்னைச்
சிறப்பாகவுலகத்தில் மானிடர்க்கு
எய்திட்ட நோயெல்லாம் ஓடிப் போக
எனையாண்ட மூர்த்தியுமே இயம்பினார் பார்
கைத்திட்ட வாதங்கள் செய்யுமுன்னே கடிதாக
இதை வைத்து வைத்தியம் செய்து
பைத்திட்ட பணங்களைத்தான் சம்பாதித்துப்
பரிவாக வாதத்தைப் பார்த்திடாயே 105

வீரரசம் இலிங்கரசம்

பார்த்திடவே வீரமது பலமோ பத்து
பதிவாகத் தண்டவாளம் பலமும் ரெண்டு
சேர்த்திடவே இவைரண்டும் நேக அரைத்துச்
சிறப்பாகப் பார்த்திடவே ரசமு மாகும்
நாத்திடவே ரசமெடுத்து அப்பால் வைத்து
நலமாக இலிங்கமது பலமும் பத்து
ஏத்திடவே திராவகத்தை விட்டு ரெம்ப
இழுத்தரைத்துக் கல்வத்திலிதமா யாட்டே 106

ஆட்டுநீ பீங்கானில் விட்டு மெள்ள அன்பாக
வுமி நெருப்பில் வறுத்துப்போடு
நாட்டிடுநீ கிடமதிலே போட்டு மூடு
நலமாக ஏழுமண் சீலை செய்து
ஓட்டிடு நீ அடுப்பேற்றிச் சாமம் நாலு
விதமாக எரித்திடவே ரசமு மேறி
காட்டிடுநீ மயிர்க்குச்சி தன்னா லேதான்
கனிவாக வழித்துநீ எடுத்துக் கொள்ளே.

கொள்ளவே வீரரசம் பலமும் ஐந்து
கொடியாக லிங்கரசம் பலமுமைந்து
மெள்ளவே பூரமது பலமு மைந்து
மிடுக்காகத் திரிரசமுமாச்சுதப்பா
கள்ளமாய் இவைமூன்றும் சேர்த்தரைத்துக்
கனிவாக இருசாமம் பொடியாய்ப்பண்ணு
துள்ள வேயிருசட்டிஉராஞ்சிச் சேரு
துடியாக வொருசட்டி நிறையவுப்பே
உப்பெல்லாம் வறுத்துமே சட்டி யிட்டு
உண்மையாய் நடுவதனில் ரசத்தை விட்டு

நப்பாக மேற்சட்டி கவிழ்த்து மூடி
நலமாக ஏழுமண் தான் சீலை செய்து
கப்பாக வடுப்பதனில் ஏற்றி நீயும்
கனிவாகக் கணபதியைப் பூசைபண்ணி
மெய்ப்பாகக் கடிகைதான் நூறுஎரிப்பு
மேன்மையாய் எரிந்திடவே பதங்கம் ஆமே 109

திரிமூர்த்தி பதங்கத்தால் தீரும் நோய்கள்

பதங்கத்தை மயிர்க்குச்சி தன்னாற்கிண்டி
பதிவாக எடுத்துமே வைத்துக் கொள்ளு
நிதம்பிதமாய்ச் சித்தர்களைப் பூசை செய்து நிர்ணயமாய்ப்
பணவெடைதான் வெல்லத் திட்டால்
கதம்பமாய் மணடலத்தில் சித்தியாகும் காரியமாய்ச்
சிவனரணை எல்லாம் தீரும்
விதம்பமாய் பதினெட்டுக் குட்டம் தீரும் விருப்பமாய்
அம்மையின்மேல் ஆணையாமே 110

ஆணையாம் குன்மங்கள் எல்லாம் தீரும்
அடைவாக நந்தியின்மேல்] ஆணையாகும்

காணலாம் வாதமெண்பதுவும் தீரும் கடிதாக
அசுவனிமேல் ஆணையாகும்
பாணலாம் பித்தமெல்லாம் தீர்ந்து போகும்
பதிவாகத் தன்மந்திரி யாணையாகும்
வாணலாம் காசமெல்லாம் தீர்ந்து போகும்
வடிவான அகத்தியர் மேலாணையாமே 111

ஆமேதான் விசபாண்டு அனைத்தும் தீரும்
ஆதியாம் புலத்தியர் மேல் ஆணையாகும்
காமேதான் விசபேதி கிராணி தீரும்
கனிவான தேரர் மேலாணையாகும்
வாமேதான் நோய்களெல்லாம் தீரும் தீரும்
வகையாக யூகிமே லாணையாகும்
தாமேதான் முப்பத்து முக்கோடி தேவர் தற்பரமேல்
ஆணையுண்டு மருந்துசெய்யே 112

''செய்யவே கைபாகமாக வைத்துச் சிறப்பாக
வைத்தியங்கள் மிகவும் பாரு,
வையகத்திலுனைப்போலே செய்வாருண்டோ வடிவாக
வைத்தியங்கள் பலிக்கும் பாரு
மெய்யாகச் சொல்லிவிட்டேன் வைத்தியம் பாரு''

என்றெல்லாம் ஆணையிட்டுச் சொல்லிய யூகிமுனிவரின் நன்னோக்கினை ஓர்க.. மருந்து செய்க வெற்றி பெறுக.

இத்தகைய நூலை உலகுக்கு வழங்கிய அருள்மிகு யூகிமுனிவர் திருவடிகளை மனத்தால் நினைத்து வாழ்த்தி வணங்குகின்றேன்.

முன்னாள் தி. மு. க. வின் தமிழக நல்வாழ்வுத் துறையமைச்சர் மாண்புமிகு க. அன்பழகன் அவர்கள் என்னை அழைத்து நூல் வெளி யீட்டுத் துறையில் ஊக்கப்படுத்தி என் ஆசிரியர் அருள்மிகு சிவயோகி. மா. இரத்தின சபாபதிப்பிள்ளையவர்களிடம் நூல்களை வாங்கி வரக் கட்டளையிட்டார்கள். அவர்கள் உவந்து தந்து வாழ்த்தினார்கள். சூதமுனிசூத்திரவுரையும் ஏழுநூற்றொகுதி (கோரக்கர் 6 - போகர் 1) யுரையும் அவர்கள் அரசு நிகழும்போதே எழுதிவெளியிட்டேன். பின்னர் அரசு மாற்றத்தால் திகைக்க நேர்ந்தபோது நூல்கள் வெளிவரவாய்ப்பில்லை. அமைச்சர் அன்பழகனவர்கள் மதுரைப் பல்கலைக்கழகத்தில் சித்தமருத்துவத்துறை நிறுவவும் யான் அங்கிருந்து பணிபுரியவும் வேண்டுமென்று கூறி அதற்காகப் பெருந்தொகை வைப்பு ஏற்படுத்தவும் முயலும்போது அரசு மாறுபாடு ஏற்பட்டது. எனவே அவர்களின் அருமைத் தம்பி வி. இ. நா. செ. நா. கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்

க. திருமாறனவர்கள் என்னைப்பற்றிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் முத்துச் சண்முகனார் அவர்களிடம் குறிப்பிட அவர்களும் முதன் முயற்சி எடுத்து இத்துறைக்குப் புதுவழி வகுத்தார்கள். பேராசிரியர் முயற்சிக்கும் அன்புக்கும் துணைக்கும் எல்லையில்லை. இம்மூவருக்கும் என் நன்றி என்றும் உரியன. இதற்காகப் பலமுறை நேரில் வந்து அழைத்து என்னை இத்துறையில் நீந்த நிற்பவனைத் தள்ளிவிட்டது போல் துணைபுரிந்த டாக்டர் தே. ஆண்டியப்பிள்ளையவர்களுக்கு மிக்க நன்றி.

சென்னை மாநிலச் சட்ட மொழி பெயர்ப்புத் துறை ஆணையர் ஜஸ்டிஸ் எஸ். மகராசனவர்கள் பன்னெடுங் காலமாக ஆற்றிவரும் பேருதவிக்கு அளவேயில்லை. அவர்கள் தங்கள் உந்து வண்டியில் என்னையுடனழைத்துக் கொண்டு வந்து சிவயோகி மா. இரத்தின சபாபதிப் பிள்ளையவர்களிடம் அறிமுகப்படுத்திய பெருமையினாலேதான் † இந்நூல்கள் கிடைத்தன. இன்றேல் ஒப்பற்ற நூலாகிய இது வெளி வர வாய்ப்பு ஏற்பட்டிருக்காது. மேலும் 37 ஆண்டுகள் தாங்கள் பயின்று உணர்ந்த அருந்தமிழைச் செவி வழியாகப் பருக எனக்கு ஊட்டி அருகிருந்து அமுதூட்டி மெய்நெறியும் புகட்டிய மேதகைய அண்ணல் இவர்கள்.

இச்சுவடிகளைப் பிழையில்லா உருவமாக்க முயன்று எழுதும்போது பட்ட வருத்தமும் கடினவுழைப்பும் சேர்ந்து சோர்ந்தபோது முன்பு சுவடிகளை எழுதிவைத்த ஆசிரியப் பெருந்தகையவர்களின் வருத்தத்தை நினைத்துக் கண்ணீர் சிந்தினேன். அவர்களை என்றும் திருவடிவணங்கி வாழ்த்துவதுடன் நன்றியும் எழுதி வணங்குகின்றேன். வெள்ளியம்பல-வாணரின் கால் நடனம் ஆடிவருந்துமே என்று பாண்டியன் வருந்தியது போல் யானும் குருவை நினைத்து வருந்தினேன். நூல் வெளிவரும் இப்போது அவர்களின் இன்மைகருதிக் கண்ணீர் சிதறுகிறேன்.

முக்காலமும் உணர்ந்த யூகி முனிவர் தம் நூல்கள் வருங்காலத்தில் திருமிகு மகராசனவர்களால் வெளிவரல் வேண்டுமென்று கண்டார்கள் போலும்.

''யோக மகராசன் யோக குருநாதன்''

என்ற தொடரை நூலில் அமைத்திருக்கின்றார்கள்.

---

† யூகிமுனிவர் பிடிவாதம் 1000
,, வாதகாவியம் முதற்காண்டம் 1000
,, ,, 2-ஆம் காண்டம் 1000
,, வாதவைத்திய உலா 1000

அத்தகைய யோக மகராசனை யோக குருநாதனைத்திருவடிகள் வணங்கி நன்றி கூறி வாழ்த்துகின்றேன். அவர்கள் அருள்மிகு கண்ணப்ப-சுவாமிகளையும் சிவயோகிகளையும் எனக்கு அறிமுகம் செய்து வைத்து மெய்ப்பொருளுணர்த்தச் செய்தாலும் பின்னர் தாமே குருவாக இருந்து எல்லாவிளக்கமும் கூறிச் சிவயோகியவர்கள் காலத்துக்குப்பின்னும் அவர்கள் எனக்குச் சொல்லாமல் விட்ட அமுதமழைபெறும் வழியையும் கற்பித்தார்கள். இந்நூற்கு ஒரு நல்ல அணிந்துரையும் வழங்கினார்கள். அவர்களின் உரையைக் குருவின் வாழ்த்தாக உலகினை வணங்கி ஏற்றுக் கொள்கின்றேன் இந்நூலுக்கும் மற்றொரு அணிந்துரை வழங்கியவரும் சித்த மருத்துவப் பெருவள்ளலும், இனாமாகச் சித்த மருத்துவம் செய்து ஏழைகளைக் காப்பவரும், மத்திய சித்த மருத்துவத்துறை இயக்குநராக இருந்து (ஊதியம் வேண்டாமென்று விலக்கி) பெரும் பணி புரிகின்ற-வருமாகிய டாக்டர். ஏ. ஆனந்தக்குமார் அவர்களுக்கு என் நன்றியும் உரித்து உலகமும் அவர்களுக்கு உறுதியாய் நன்றி செலுத்தும் கடப்பாடு உடையது. செந்திக்குமரர் கல்லூரியில் எல்லோருக்கும் செய்யும் வழக்கம் போல் 58-வது ஆண்டில் அக்கல்லூரித் தாளாளர் திரு. அ. கணேசனவர்கள் ஓய்வுக்கட்டளையை எனக்கும் உய்த்தார்கள். அது தெரிந்த அந்நாள் துணைவேந்தர் திரு சை. வே. சிட்டிபாபு அவர்கள் கணேசனிடம் சொல்லி மீண்டும் வேலையில் அமர்த்துவதாகப் பரிவுடன் கூற யான் வேண்டா-மென்று மறுக்க அவர்கள் உள்ளத்தில் தனியாக ஒரு பரிவு கொண்டு பல முறை மானியக் குழுவுக்கு எழுதி என்னையிப்பணியில் சேர்த்து என் நூல்களையெல்லாம் வெளியிடுவதாகவுரைத்து ஊக்கப்படுத்தினார்கள். அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றியென்றும் உரியது.

யூகிமுனிவர் வாதகாவிய முதற்காண்டம் 1000, 2 ஆம்காண்டம் 1000. உலா 1000 ஆகிய நூல்களை ஒப்பு நோக்கத் தந்துதவிய பாட்-டணிப் பேராசிரியர் திரு. குமாரசுவாமியவர்களுக்குப் பெருநன்றி.

செந்திக்குமரர் கல்லூரி அந்நாள் முதல்வர் திரு. எஸ் சிவசாமிய-வர்கள் இந்த முயற்சியிலீடுபட்டுச் செய்த முயற்சி பெரிது. கட்டளை விருதுநகர்க் கல்லூரிக்கே வந்தது. அவர்களின் ஆர்வத்துக்கு நன்றி அருள்மிகு வே. வ. இராமசாமியவர்கள் நீங்கள் பல்கலைக்கழகத்திலிருந்து பணியபுரிய வேண்டுமென்று கூறியதுடன் அவர்கள் உரைத்த ஆக்கமும் ஊக்கமுமே பெருந்துணையாயிற்று. நூல் வெளிவரும்போது ஐயா இல்லாத குறை என்னைக் கலங்கச் செய்கிறது. இப்பெரியார் இருவருக்கும் பெரு நன்றி. திரு. மிகு. சித்தலிங்கையா அவர்களும் அருள் மிகு பதிவாளர் ப. முருகன் அவர்களும் அன்பு மிகு. தி. அழகிய சொக்கலிங்கம் அவர்களும் என்னைத் துறவறத்திற்குப் போக விடாமல் தடுத்துப் பல்கலைக்கழகத்-துக்கு ஈர்த்துப் பணிபுரிய வைத்தார்கள். அவர்களுக்கு என்றும் நன்றி.

துணைவேந்தர் டாக்டர். வீ. ச. குழந்தைச் சாமியவர்கள் அழைத்து நூலின் தரம் கண்டு வெளியிட உதவுவதுடன் பல்கலைக்கழகத்திலிருந்து எனக்கு ஊதியவுயர்வு தருவதாகவும் கூறிய நற்சொற்களுக்கு நன்றி

கூறினால் அது சொல்லிலடங்காது. அவர்களுக்கும் எனது நன்றி மிக்கதாகும்.

அதனைப் பின்பற்றி பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினரும் பொறுப்புத் துணைவேந்தருமாக இருந்த திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராசனவர்களும் திரு. சத்திவேல், திரு. கனகசபாபதி, திரு. செல்வராசு, திரு. அ. சங்கரநாராயணன், திருச் செல்வி சகுந்தலா முதலிய ஆட்சிக்குழு உறுப்பினர்களும் நூலை வெளியிட ஒப்புதல் வழங்கி ஊக்கப்படுத்தி ஊதிய உயர்வும் தந்தார்கள். மேருமலையளவினும் பெருமதிப்புமிக்க யூகிமுனிவர் நூலுக்கு இவர்கள் செய்த உதவிக்கு மேருமலையனைய நன்றியைக் கூறுகிறேன். விருதுநகரிலிருந்து யான் பணியாற்றும்படி வந்திருந்த கட்டளையைப் பல்கலைக்கழகத்துக்கு மாற்றுவதற்கு தில்லிக்குச் சென்று சொற்றுணைபுரிந்து ஒரு வாரத்துக்குள் மாற்றித் தந்த பெருந்தகை உயர் கல்வித்துறை இயக்குநர், திரு. கே. வி. சுப்பிரமணியம் அவர்களுக்கு மிக்க நன்றியும் வாழ்த்தும் உரியன. என்னொடு இருந்து ஏடுகளைப் படித்தும் ஒப்பு நோக்கியும் துணை புரிந்த, திருச்செந்தூர் ஆதித்தனார் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் ந. கலியாணசுந்தரம் அவர்களுக்கும் என்றும் எனது நன்றி.

இவ்வளவு பெருமுயற்சி செய்தபின்னரும் வெளிவராமல் இருந்த இந்நூல் வெளிவருவதற்கு என்னைப் பலமுறையழைத்துத் தூண்டியும் விரைவு செய்தும் வெளிவரச் செய்கின்ற அருட்பெருந்தகை துணைவேந்தர் டாக்டர். வ. சுப. மாணிக்கம் அவர்களுக்கு நன்றி மட்டும் சொன்னாற்போதுமா? அவர்களுக்கு நன்றிக்கடன் செலுத்துதற் பொருட்டு மிகச் சிறந்தவொரு சித்த மருத்துவ நூலை என் பொறுப்பில் வெளியிட்டு அவர்களுக்கு உரிமையாக்கி உலகு உறுபயன் பெறச் செய்து எனது நன்றியை நிலை நாட்டுவேன். இப்பொழுதும் மிக்க நன்றி கூறுகிறேன்.

பதிப்புத்துறைத் தலைவர் டாக்டர். கதிர்மகாதேவன் அவர்கள் மேன்மையான நோக்கத்தோடு கண்ணும் கருத்துமாக நோக்கி இந்நூலைப்பதிப்பித்தார்கள். அவர்களுக்கு என் உளமார்ந்த பெருநன்றி.

கடவுள் போல் பெருந்துணை செய்து எனக்கு இப்பணிக்குக் கட்டளையருளிய பல்கலைக்கழகமானியக் குழுத்தலைவர் அவர்களுக்கு என்றும் நீங்கா நன்றி நிலைக்கக் கூறுகின்றேன். உலகுக்கெல்லாம் எல்லாமொழியாளருக்கும் பயன் தரும் இந்நூலினால் அவர்களது புகழும் உலகமெல்லாம் பரவுவதாகுக.

மதுரை-21
25-2-'82

இங்ஙனம்,
அன்பன் ந. சேதுரகுநாதன்

அணிந்துரை

திருமந்திரத்துக்கு உண்மைப் பொருளைச்சொன்னவரும், சிவ யோகத்திலே நின்று திளைத்தவரும், உரையாசிரியர் வித்துவான். ந சேதுரகுநாதன் அவர்களுக்கும் எனக்கும் இன்னும் பல அன்பர்களுக்கும் ஞான குருவாக இருந்தவரும் சமீபத்தில் அமரரானவருமான சிவயோகி. மா. இரத்தின சபாபதிபிள்ளையவர்கள் ஞானத்துறையில் மாத்திரமில்லாமல், சித்த மருத்துவத்துறையிலும் அனுபவ அறிவு பெற்றிருந்தார்கள்.

உலகத்துக்குக் கிடைக்காத அரிய நூல்கள் பலவற்றைச் சிவயோகி எழுதி வைத்திருந்தார்கள். அவர்கள் தம் சீடரான சேதுரகுநாதன் அவர்களுக்கு நான்கு நூல்களைக் கொடுத்துப் பிழை திருத்தம் செய்து அச்சிட வேண்டுமென்று பணித்தார்கள். அப்பணியைச் சிரமேற்கொண்டு நண்பர் சேதுரகுநாதன் அவர்கள் வெளியிடுகிற மூன்று நூல்களாவன :

(1) யூகிமுனிவர் எழுதிய பிடிவாதம் என்ற 1000 பாடல்களைக் கொண்ட நூல்.

(2) யூகிமுனிவர் எழுதிய வாத காவியம் என்ற 2000 பாடல்கள் கொண்ட நூல் (முதற்காண்டமும் இரண்டாம் காண்டமும்)

(3) யூகிமுனிவர் எழுதிய 1000 பாடல்களைக் கொண்ட (4250 வரிகளுடைய) வாதவைத்திய உலா.

யூகிமுனிவர் ஒரு சித்தர். ஆகவே, வைத்தியத்தையும் ரஸவாதத்தையும் யோக ஞான நெறிகளையும் கலந்தே பாடியிருக்கிறார். பாடல்களுக்குள்ளே பல முடிச்சுகளும், புதிர்களும் இருக்கின்றன. இவற்றை அவிழ்ப்பதற்குச் சித்த வைத்தியம், யோகம், ஞானம், ஆகிய துறைகளில் நல்ல பழக்கமும், ஆழ்ந்த பயிற்சியும் உடைய வல்லுநர்களாலேயே முடியும். அத்தகையவல்லுநர் இந்நூல்களுக்கு உரையெழுதிய வித்துவான் சேதுரகுநாதன் அவர்கள். அவர்களை நான் சென்ற 40 ஆண்டுகளாக அறிவேன். தமிழில் பலதிறப்பட்ட துறைகளில் ஆழ்ந்து விரிந்த கல்வி கற்றவர்கள் அவர்கள். பிரமிக்கத்தக்க படிப்பும், நினைவாற்றலும் இவர்களைப் போலுடைய புலவர் எவரும் தமிழ்நாட்டில் இல்லை.

ஆகவே, இந்நூல்களுக்கு அவர்கள் எழுதியஉரை முழு அதிகாரத்துடன் எழுதப்பட்டது என்று கொள்ளலாம். மருத்துவத்துறையில் எனக்குப் பயிற்சியில்லையென்றாலும், பதம் பார்ப்பதற்காக, உரைப்பகுதிகள் சிலவற்றைப் படித்துப் பார்த்தேன். மூலத்துக்கு நல்ல விளக்கம் கொடுக்கிறது இந்த உரை என்று நான் கருதுகிறேன்.

தமிழர்கள் எல்லாத்துறைகளிலுமே தம் மரபு என்ன என்பதை அறியாது மயங்கி நிற்கும் காலம் இது. இன்றையத்தமிழ் மருத்துவமும், தன் மூலத்தை அறியாது மயங்கி நிற்கிறது. இந்த உரையின் துணைகொண்டு, தமிழர்கள் யூகிமுனிவர் சொல்லும் செய்பாகம், கைபாகம் முதலியவற்றை அறியலாம் என்று நம்புகிறேன். அவர்கள் அறியாவிட்டாலும் அமெரிக்கர்களோ, ரஷ்யர்களோ, ஜெர்மானியர்களோ இந்நூலை மொழிபெயர்த்து உரிய மருந்துகளை உரிய விஞ்ஞான முறையில் செய்து மாந்தர் நோய்களைத் தீர்ப்பார்கள் என்று நம்புகிறேன்.

இந்த நூலை வெளியிடுவதற்குக் கட்டளை வழங்கிய பல்கலைக்கழக மானியக் குழுவின் செயலாளர் அவர்களையும், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தையும் பொதுமக்கள் சார்பிலே உளமாரப்பாராட்டுகிறேன்.

டாக்டர் எஸ். மகராஜன், பி.எஸ்.ஸி.பி.எல்,
முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி
சென்னை மாநிலச் சட்டமொழிபெயர்ப்புத் துறையாணையர்
சென்னை

சென்னை
20-3-'81

மதிப்புரை

சித்த மருத்துவத்துறையில், பழைய இலக்கியங்களில் உள்ள செய்யுட்களுக்குச் சரியான உரை எழுதக்கூடிய ஆற்றல் படைத்தவர்கள் தற்போது தமிழகத்தில் மிகச் சிலரே, அவர்களில் பேராசிரியர் சேதுரகுநாதன் அவர்கள் ஒருவராவார். அவர் உரை எழுதியுள்ள யூகிமுனிவர் பிடிவாதம் 1000. வாதகாவிய முதற்காண்டம் 1000. 2–ஆம் காண்டம் 1000, வாதவைத்திய உலா 1000 எனும் நூல்களுக்கு அணிந்துரை எழுதித்தர வேண்டுமென என்னைக் கேட்டுக் கொண்டார். பேராசிரியர் சேதுரகுநாதன் அவர்களுடைய உரை நூலுக்கு அணிந்துரை எழுதும் தகுதி எனக்கில்லை. எனினும் எனது அணிந்துரை வேண்டுமென அவர் பிடிவாதமாக இருப்பதால் இதனை எழுதுகின்றேன்.

தமிழ்மொழி இலக்கியங்கள் ஓரளவு காப்பாற்றப்பட்டுவிட்டன,

சித்த மருத்துவ இலக்கியங்கள் பன்னெடுங்கால உழைப்பின் பயனாய் உருவானவை. அவைகள் அழிந்து போமேயானால் ஏற்படுகின்ற இழப்பு ஈடு செய்ய முடியாத ஒன்று. தமிழ் மக்கள் எல்லா வகையாலும் நாள்தோறும் உரம் குன்றிக் கொண்டே போகின்ற காரணத்தால், சித்த மருத்துவ விஞ்ஞான இலக்கியங்கள் அழிவதால் எத்தகைய பெரும் இழப்பு நேரிடுகின்றது என்பதை உணரும் ஆற்றல் இல்லாதவராயுள்ளனர். தமிழக அரசும், தமிழகத்திலுள்ள பல்கலைக்கழகங்களும், பேராசிரியர் சேதுரகுநாதன் போன்றவர்களை உடனடியாகத் தக்கவாறு பயன்படுத்திக் கொள்ள முன்வருவதற்கு, இந்த உரைநூல் நினைவூட்டுவதாக அமைந்துள்ளது.

பேராசிரியர் சேதுரகுநாதன் அவர்கள் இத்தகு பணியைச் செய்ய கட்டளையிட்ட மானியக் குழுத்தலைவர், கோஎல் அவர்கள் நம் எல்லோருடைய பாராட்டுதலுக்கும், நன்றியறிதலுக்கும் உரியவராகின்றார்.

சென்னை
20-3-'81

டாக்டர் ஆ. ஆனந்தக்குமார், சி.சி.ஐ.எம்.
மத்திய சித்த மருத்துவ, ஆராய்ச்சித்துறை இயக்குநர்,
சென்னை.

உள்ளுறை

பா. எண்.		பொருள்	பயன்
1 முதல் 5	—	நூல்வந்தவழி. அகத்தியரை வணங்கித் தொண்டு செய்து கைபாக வரிசை பெற்றது.	
6 - 14	—	சவுக்காரவழலை	
15 - 16	—	துருசுச் சுண்ணம்	
17		சவுக்காரச் சூழ்ச்சம்	
18 - 26	—	வழலைச்சுண்ணம்	
27 - 31	—	சவுக்காரம் நீற்றும் வகை	
32 - 36	—	கல்லுப்புக்கட்டு	
37 - 47	—	சூதபற்பம் (உப்புக்குப்பி)	பத்துமாற்று. வாத பித்த சிலேத்துமம் நடுக்கல் மகோதரம் ஒருத்தலை வலி நரித்தலை வாதம் அண்ட வாதம் சயம் நீக்கல். மூச்சுக் காற்று ஓட்டத்தை ஒழுங்கு செய்தல். உடல் வலுவாக்கல்.
48 – 62	—	உப்புக்கெதை செய்தல் உப்புமணி செய்தல்	பத்துமாற்று
63 - 74	—	அயச்செம்பு வெள்ளியிற்சேர்	7 மாற்று, 4-ல் ஒருபங்கு தங்கம்சேர் நல்ல தங்கம்
75 - 83	—	புரட்டு அயச்செம்பு	
84 - 103	—	அயச் செம்புச் செந்தூரம்	100-க்கு ஒன்று சேர்க்க 10-மாற்று

பா. எண்.		பொருள்	பயன்
104 - 114	—	வங்கச்சுண்ணம்	செம்பு சுண்ணமாதல் சூதம் கட்டல், பறவைக் குளிகையாக்கல், காயசித்தி
115 - 119	—	துருசுச் சுண்ணம்	உருக்கினம் கட்டினம் பழுப்பினம் வைத்தியம் தங்கம் பண்டிதம் கோடா கோடி
120 - 122	—	தாளகச் சுண்ணம்	பத்து மாற்று
123 - 124	—	மனோசிலைச் சுண்ணம்	பத்தரை மாற்று
125 - 128	—	கெந்திச் சுண்ணம்	
129 - 134	—	இலிங்கச் சுண்ணம்	
135 - 140	—	வெள்ளைப் பாடாணச் சுண்ணம்	வெள்ளி பத்துவயது
141 - 146	—	தாமிரச்சுண்ணம்	பத்துமாற்றுத் தங்கம்
147 - 149	—	தங்கச்சுண்ணம்	பத்தரைமாற்று, காயசித்தி
150 - 152	—	அயச்சுண்ணம்	பொன்னுண்டாம் காயம் இறுகியேறும், தேகம் வாடாது.
153	—	வங்கச்சுண்ணம்	வங்கச்சுண்ணத்தால் தாளகம் சுண்ணமாகும்
154	—	தாளகச்சுண்ணம்	இதனால் கந்தகம் சுண்ணமாம்
155 - 159	—	கெந்திச்சுண்ணம்	இதனால் செம்பு சுண்ணமாம்
160 - 165	—	செம்புச்சுண்ணம்	பத்தரைமாற்று
166 - 173	—	காரியச்சுண்ணம்	பிரமமுனி மறைப்பினை வெளிப்படுத்துதல் இது சரக்குகளைக் கொல்லும் தாளகத்தைச் சுண்ணமாக்கும்

பா. எண்.		பொருள்	பயன்
174 - 179	—	துருசுச்சுண்ணம்	துருசு குருவாகும் இதனால் தங்கம் சுண்ணமாகும்
180	—	தங்கச்சுண்ணம்	இதனால் எல்லாச்சித்தி-யும் உண்டாகும்
181 - 183	—	நாகச்சுண்ணம்	ஒன்பான் உலோகமும் செம்பொன்னாகும் காயசித்தியாகும்
184 - 188	—	தொந்த செந்தூரம்	செம்பில் ஐந்நூற்றுக்கு ஒன்றிடப் பத்துமாற்று
189	—	நாகச் செயநீர்	சரக்கெல்லாம் கட்டும்
190 - 194	—	இலிங்கமெழுகு	ஒன்பதிலும் பதினாலு மாற்று. நமன் உண்ட-கற்பம் நானும் உண்டேன்
195 - 197	—	வீரமெழுகு	பதினாறுமாற்று வெள்ளி சேர்க்க எட்டு
198 - 201	—	வெள்ளைப்பாடாண மெழுகு	நல்லபத்துமாற்று வெள்ளியாகும்
202 - 203	—	மனோசிலை மெழுகு	பத்துமாற்று
669 - 672	—	,,	நூறுமாற்று களங்காக்கி மாற்றப் பத்து மாற்றாகும்
204 - 206	—	தங்கமெழுகு	ஒன்பதிலும் ஆயிரத்துக்கு ஒன்றீயப்பத்தரை. மண்டலத்தில் உடல் நிலைக்கும், நரைதிரை போகும். மலையைக் குத்தத்-தூளாகும். பறக்கும் நிலை உண்டாகும்.

பா. எண்.		பொருள்	பயன்
207 - 215	—	வாதிக்குப்புத்தி	சவுக்காரச்சுண்ணம் வங்கச்சுண்ணம் செய்யச்சொல்லுதல் செம்புவலுக்குமெனல். நூற்பொருள் உணர்த்திய வழிமுறை கூறல்
216 - 220	—	நாகச்சுண்ணம்	துரிசுமுதலியன சுண்ணம் செய்ய உதவும்
221	—	துரிசுச்சுண்ணம் செந்தூரமாகும் நாகச்செந்தூரமுமாகும்	ரசக்கட்டு பொன்மாற்றுக்கலை வெற்றி
222 - 236	—	புகைநீர், வாயுநீர் என்பது வெடியுப்புத் திராவகம், வாய்நீர் அன்று எனல். நாகரசவுப்புச் செந்தூரம்	பொருள்களைக் கட்டவும் செந்தூரம் சுண்ணம் செய்யவும் உதவும். நாகரசவுப்புச் செந்தூரத்-தால் பத்து மாற்று. உடல் வலுக்கும் மதனன் போலாம்
		நாகரசவுப்புச் செந்தூரத்தால் தீரும் நோய்கள் வாதமெல்லாம் பித்தமெல்லாம் சிலேற்பனங்கள் எல்லாம் பெரு வயிறு சயம் பித்தவெட்டை காமாலை கண்ட மாலை புண்புரைகள் அரையாப்பு வளிவாதம் கரப்பான் நீர் மேகநீர் நோய்போகும்	மேலும் வீரம் சேர்த்துச் செந்தூரம் செய்ய மாற்றுக்கலை மிகும்
237 - 254	—	நாகக்கட்டு, நாகப்பிட்டு தங்கம் சேர்ந்த நாகச் செந்தூரம் புகைநீர் நீக்கும் நோய் :- நரை திரை குன்மம் நரித்தலை வாய்வு வளிவாதம் மேகவாய்வு பித்த வலி பித்தவாய்வு அடைவான	பத்து மாற்று

பா. எண்.		பொருள்	பயன்
		புற்று சிலேற்பனம் சூலை முதலியன போகும்	
255 - 268	—	திரிவங்கச் சுண்ணம் துரிசுச்சுண்ணம் சரக்கு 25ம் சுண்ணமாம் உபரசங்கள் சுண்ணமாம்; ஈயமாகும்	பத்துமாற்று
269 - 290	—	ரசம் தூயதாக்கும் முறை இரசபற்பம் திரிவங்கச்செந்தூ-தூரம் வயிரவர் உருச்செய்து பூசிக்கக் கூறுதல் நீக்கும் நோய் :- வலிகுன்மம் வாதகுன்மம் 84 வாதம். நரித் தலைவாதம். உடல் நிலைக்கும். நமன் உண்டகற்பம். மேகம் நீரிழிவு வெப்பு வாய்வு வளி வாதம் அந்திரவாதம் சிலேற்-பனம் நடுக்கல்வாதம் கூனிவாதம் பவுத்திரம் ஆறு கண்டமாலை காமாலை புறவீச்சு தமரகவாதம் குடல்வாதம் குண்டலி வாதம் பாண்டு பித்தபாண்டு வளிப் பாண்டு திமிர்வாதம் திமிர் குட்டம் திருகு குட்டம் கருங் குட்டம் வெண்குட்டம் தீரும். சட்டை கக்கும் ரணங்கள் தீரும். பாசுபதம் என்ற தெய்வநிலை-யுண்டாகும். விந்து இறுகும் கணங்கள் தீரும். குருவெளியின் ஒளியுண்டாகும். கண்செவ்-வல்லிப் பூப்போல் ஆகும்.	12 மாற்று 8 மாற்று

பத்தியவகை கூறுதல்

291 - 309	—	வெடியுப்புக் காய்ச்சும் முறையும் பயனும் சரக்கு நீற்றல். சூதங்கட்டல்	உப்பால் பயன் எல்லாம் ஆகும். அருளாகும் பொருளாகும்.

பா. எண்.		பொருள்	பயன்
310 - 345	—	பஞ்சபூதச் செந்தூரம் ஐவகை பூதப் பொருளின் வகை தூய்மையாக்கும் முறை பஞ்சலோகச் சேர்க்கை வகை பஞ்சலோகக்குரு நிகடை உருக்குவதற்கு உரிய குடோரி களங்குச் செந்தூரம்	 16 மாற்றுத்தங்கம் 10 மாற்று
345 - 362	—	பஞ்சலோகச் செந்தூரத்தால் தீரும் நோய்கள் வாதம் பக்க வாதம் திமிர்வாதம் முடக்கு வாதம் கனிவாதம் நரித்தலை வாதம் அண்டவாதம் விரைவாதம் அலைச்சல் வாதம் கண்டத்தின் வாதம் ஒருத்தலை வாதாம் மேற்றலை வாதம் தந்தவாதம் பித்தங்கள் பித்தவாதம் தந்த- பித்தம் மயக்கபித்தம் இரத்த பித்தம் தலைப்பித்தம் வலிப்- பித்தம் கண்டபித்தம் சளிப்பித்தம் ஒருத்தலைப்பித்தம் வலிகுன்மம் இரத்தகுன்மம் கண்டவலிவாத குன்மம் உகாரவலி குன்மபித்தம் தமரகவலிகள் தொந்தவலி குன்மம் சென்மவலி சிலேற்- பனங்கள் தொண்ணூற்றாறு முசல்வலிப்பு குதிஎர வலிப்பு குண்டலம் மேகம் பவுத்திரம் பெருவயிறு நீராம்பல் குலைமுட்டி காமாலை வெட்டை கல்லடைப்பு கண்ணோவு காதடைப்பு ஒருத் தலை நோய் தொனியடைப்பு விரணம் வேதாந்த அடைப்பு சயகாசம் பித்த காசம் வெறிப் பிரட்டல் வெத்தி காசம் உடல் வாதம் நளிருசூடு ஈளை முதலியன நீங்கும்	 தொழு நோய்கள் பல நீங்கல்

பத்தியவகை அறிவுரைகள்

பா. எண்.		பொருள்	பயன்
363 - 370	—	அயச்செம்பு வெள்ளிக்கருப்பு	தங்கமாதல்
371 - 405	—	நாகக்கட்டு இலிங்கக்கட்டு	16 மாற்று
		வீரசுத்தி களங்குச்செந்தூரம்	$8\frac{1}{4}$ மாற்று
		அறிவுரை	வெள்ளியில் 1000க்கு
			ஒன்று ஈய 20 மாற்று
406 - 437	—	பித்தளைச் செம்பு நிகடையில்	
		வைத்து ஊதச் சொல்லல்	தங்கமாதல்
		பித்தளைச் செம்புச் செந்தூரம்.	
		களங்கு நாலுமுகக்களங்கு	
438 - 443	—	புடத்திட்டம்	நிகடையில் வைத்து
			ஊதப் பொன்னாம்
444 - 462	—	சுண்ணத்திராவகம்	சுண்ணம் செய்யின்
		மஞ்ணிறச் செயநீரை வெள்-	வெற்றியாகும்
		ளையாய் முறிக்கும் முறை.	
		அண்டச்சுண்ணம் வாய்நீர்	
		என்பது வாய்வுநீர். அஃதாவது	
		புகைநீர். எச்சிலன்று எனல்	
463 - 493	—	வெள்ளியச்சுண்ணம். வீரச்	16 மாற்று
		சுண்ணம் துரிசுச்சுண்ணம்	8 மாற்று
		இரசக்கட்டு இரசமணி களங்கு.	
		தன்வந்திரி பாகம் பரிசவேதை	
		சூதக்களங்குச் செந்தூரம்	
494 - 509	—	நாகச் சுண்ணம்	16 மாற்று
		நீக்கும் நோய் :- நரை திரை	
		வாதம் எல்லாம் பித்தம் எல்லாம்.	
		சிலேற்பனம் எல்லாம் பெருவயிறு,	
		சயகாசம் பித்தகாசம் மாகாசம்	
		மந்தாரகாசம் சிலைகாசம் குட்ட-	
		மெல்லாம் விந்து இறுகிக்	பொன் நிலைக்கும்
		கல்லாகும். மேனிபசுமை-	
		யாகும். சட்டைகக்கும்.	
510 - 530	—	சாரக்கட்டு. மறைவெளியீடு.	10 மாற்று,
		மூலிகையால் ஆகாமை. சார	ஒவ்வொன்றிலும்
		வெண்ணெய். சாரமோர்.	

பா. எண்.		பொருள்	பயன்
		துரிசு வீரம் இலிங்கம் பூரம் தாளகம் மனோசிலை வெடியுப்பு கல்லுப்பு ஆகியவற்றைக் கட்டல். சீனச்சுண்ணம்	
531 - 563	—	சவுக்காரச்சுண்ணம் வெள்ளியச் சுண்ணம் துரிசுச் சுண்ணம் சாரச்செயநீர் செம்பு மெழுகு சிவவுருவம் செய்க, பூகிக்க, தாளகமெழுகு 16 மாற்று அம்மன் உருவச்சிலை வார்க்க. வீரமெழுகு 25 மாற்று பிள்ளையார் உருவம் செய். பூரமெழுகு பதினேழு மாற்று. முருகன் உருவத் தங்கச் சிலைசெய். மனோசிலை- மெழுகு. 25 மாற்று பிரமன் செய். பூசைசெய். சூதச் செந்தூர மெழுகு 100 மாற்று. தங்கவயிரவர் செய், பூசி.	தங்கம், 16 மாற்று 25 மாற்று 100 மாற்று 100 மாற்று இவற்றை விற்றலாகாது.
564 - 616	—	அக்கினித்திராவகம். வெள்ளை- யாய் முறிக்க. சுண்ணம் மெழுகு செய்க. வங்கச்சுண்ணம் துரிசுச் சுண்ணம் கட்டுவகை மெழுகு வகை எல்லாம் ஆகும். இரும்பி- னைத் தூய்மை செய்தல். நாகத்தைத் தூயதாக்கல். களங்கு களங்குச் செந்தூரம். காலை மாலை காற்பண அளவு 40 நாள். திரிகடுகில் வைத்து உண்டு வரத் தீரும் நோய்கள்:- வாதவலி குன்மம் பித்தகுன்மம் வயிற்- றிசிவு சிலேற்பனம் எல்லாம் பெருவயிறு சயகாசம் வயிற்று நோவு பவுந்தரம் பக்கவாதம் நெஞ்சுவலி நடுக்கல் தந்திமேகம் பிறமேகம் நரை திரை.	23 மாற்று

பா எண்.	பொருள்	பயன்
	மெழுகுவகை	
	இலிங்கமெழுகு வீரமெழுகு தொட்டிப் பாடாண மெழுகு வெள்ளைப் பாடாண மெழுகு கௌரி மெழுகு தாரமெழுகு. இவற்றின் களங்கு	9-லும் 100க்கு ஒன்று $10\frac{1}{4}$ மாற்று
17 - 624 —	பாடாணக் களங்குச் செந்தூரம் அட்டமாசித்தியாகும்	300க்கு ஒன்றிடப் பத்து மாற்று நரை திரை மாறும்
625 - 630 —	வெள்வங்கச் செயநீர்	துரிசு நீறும் எட்டெட்டும் நிலைக்கும்
631 - 694 —	துரிசு நீறு, அண்டச்சுண்ணம், தங்கச்சுண்ணம் உடல்நிலை பெறல் செம்புச்சுண்ணம் மூதுரை என்ற நூலைப் பற்றிக் குறிப்பிடல் இரும்புசுத்தி, செம்பில் $8\frac{1}{4}$ மாற்று. நாகக் கட்டு, செம்பில் 8 மாற்று, திராவகம்.	வாழைப்பழம் காயாகும் உண்ண உடல் வலுக்கும். நரை திரை நீங்கும்.
	இலிங்கமெழுகு மாற்று. வீர மெழுகு 10 மாற்று. பூரமெழுகு 8-மாற்று, தாளகசுத்தி, தாளக மெழுகு. 12-மாற்று, மனோ-சிலை மெழுகு. 100 மாற்று. குறைக்கும் முறை செய்யப் பத்துமாற்று. வெள்ளி முறை. கௌரிமெழுகு. $10\frac{1}{2}$ மாற்று. குதிரைப் பற்பாடாண மெழுகு. 100 மாற்று. பச்சைநிறம். குறைக்கப்பத்தரை.	செம்பு தங்கமாகும்.
695 - 739 —	நாகச்செயநீர். கொச்சி வீரவைப்பு நாகச் செயநீரும் புகை நீரும் சேர்த்துச் செயநீராக்குதல்.	8-மாற்று
	இலங்கமெழுகு	$10\frac{1}{2}$,,
	வீரமெழுகு	$12\frac{1}{2}$,,
	தங்கமெழுகு	நரைதிரை

பா. எண்.		பொருள்	பயன்
		தங்கக்குரு-10 மாற்று	போம்
			உடல் நிலைக்கும்
		தாம்பூரமெழுகு-நரம்பு பசுமை	
		யாகும் நரை திரைபோகும்	
		அயமெழுகு	10 மாற்று
		நீங்கும் நோய் :-	
		சூலை. பெருவயிறு, கல்லடைப்பு	நரை திரை
		வாய்வு பக்கவாதம் ஒருத்தலை	நீங்கும்
		நோய் பிடரிவலி மண்டைக்குத்து	
		இடுப்புவலி கைகால் இசிவு	
		நரித்தலை வாதம்	
		சயம் காசம் பொல்லாச்சூடு	
		தசையடைப்பு பவுத்திரம் ஏப்பம்	தொழு நோய் நீங்கல்
		இருமல் சோகை சன்னி தவிப்பு	
		இளைப்பு கண்டமாலை	
		கல்லடைப்பு இலிங்கப்புற்று	
		முதலிய நோய் நீங்கும்	
		நாகமெழுகு - நாகச் செந்தூரம்	100 மாற்று
		நீக்கும் நோய் :	
		எல்லாவகைப்பித்தம், பித்தநீர்	கடுநோய் நீக்கம்
		சிலேற்பனம் பெருவயிறு 32.	
		மூலம் பித்தவாய்வு வலிகுன்மம்.	
		நரை திரை. நூல்சொல்லி	
		வந்த வழிமரபு கூறல்.	
740 - 760	—	காரீயச் செப்பு. செம்பஞ்சுநிறச்	
		செம்பு செம்பில் சாயம் ஏற்றல்	
761 - 774	—	நொறுக்குவெள்ளி. செப்பு வந்த	
		இடங்களிலெல்லாம் சேர்க்க.	10 மாற்று
		செம்பில் அயம் சேர்த்தல்	
		பிரித்தல் செம்புக்குச் கெந்திச்	
		சாயம் ஏற்றல்	
775 - 798	—	அயச்செம்புச் செந்தூரம்	நரைதிரை
		களங்காதல் கைபாகம் சிவன்	நீங்கல்
		சொன்னார். பத்தியம்	மெய்யுணர்வு வரல்
		மூதுரையில் சொன்னமுறையைத்	
		திருத்திப் பிடிவாதத்தில் கூறியமை	

பா. எண்.		பொருள்	பயன்
799 - 846	—	சுருக்கு அயச்செம்பு. சிவபெருமான் கூறியது. இரும்பைச் சேர்த்துப் பிரித்து நீக்குதல் செம்பஞ்சு போன்ற செம்பு. விராலி நீர் இலிங்கக்கட்டு பூவரசங்காய்த் தயிலம். இலிங்கமெழுகு. வீர மெழுகு. களங்கம் களங்குச் செந்தூரம். தண்ணீராய் மாற்றுக் காணும். 64-ம் கைகூடும் நோய் நீங்கும், உடல் நிலைக்கும்	1008-மாற்று $10\frac{1}{4}$ ஆக்கல்

அறிவுரைகள்

847 - 870	—	சருகுபித்தளைச்செம்பு. இரும்புக்கட்டு	$8\frac{1}{4}$ மாற்று
871 - 912	—	நல்லநாகக்கட்டு. கைபாகம் செய்பாகம் பச்சைச்சாரத்தில் நாகம் கட்டல் நாகக்களங்கு. களங்குச் செந்தூரம் 40 நாள் உண்ண நீங்கும் நோய்கள் : வாதம் நடுக்குவாதம் கூன்-வாதம் திமிர்வாதம் அசுவனிவாதம் தமரகவாதம் நரித்தலைவாதம் திமிர் அண்ட-வாதம் வாத அண்ட வாதவீக்கம் முடக்குவாதம் ஆறும் பித்த அண்டவாதம் திமிர்பித்தம் அலைபித்தம் தலைபித்தம் மேகம் வெட்டை பீனிசம் தலைநோய் சூலைகண்டமாலை வலிகுன்மம் 8. பிளவை நீர்மேகம் மேற்றலைவலி பெருவயிறு வாதவெட்டை பித்த வெட்டை மேகம் 21 முதலியன நீங்கும்	10 மாற்று கடுமையான நோய் நீக்கல்

பத்தியவகைகள்
சூதக்கட்டுவகை கூறல்
அறிவுரைகூறல். தவநெறி செப்பல்

பா. எண்.		பொருள்	பயன்
912 - 927	—	நாகக்கட்டு சாரமுறை, சாரச்சுண்ணம் உபரசாயம் உப்பு முதலிய கட்டு மெழுகு. அறிவுரை தவம் செய்யெனல்	$8\frac{1}{2}$ மாற்று
928 - 934	—	வெள்ளிமுறை	10 மாற்று வெள்ளி
935 - 939	—	கருவங்கபற்பம்	$8\frac{1}{2}$ மாற்று
940 - 942	—	தாளகநீறு	$8\frac{1}{2}$ மாற்று
943 - 944	—	கௌரிச்சுண்ணம்	$10\frac{1}{2}$ மாற்று
945 - 966	—	கைபாகம் செய்பாகம் சாயப் போக்கு செம்பிற் சேர்ந்த இரும்பினைக் கழற்றும்முறை. தன்வந்திரியின் செயல். நாகரசப்பிட்டு, தங்கநிறம். சாயம் நிலைத்தல் பொன் செய்யும் பாகம்.	தங்கமாதல்

பொருளடக்கம் முற்றிற்று

சுருக்க எழுத்து விளக்கம்

சீ.ம.செ. — சீலைமண் செய்து

வி.த.கா. — வில்லைதட்டிக் காயவைத்து

குறிப்பு : (1) எல்லாப் பொருள்களையும் நேரிற்பார்த்து உண்மையான வற்றையே வாங்குதல்

(2) எல்லாப் பொருள்களையும் தவறாமல் தூய்மை செய்தல்

(3) புடத்திட்டம் கருத்தொடு செய்தல். இவற்றில் தவறு செய்யலாகாது.

1 பலம் — 35 கிராம்

1 விராகனெடை — $3\frac{1}{2}$ கிராம்

யூகி முனிவர் பிடிவாதம் 1000

போற்றல்

ஆனைமுகன் ஆறுமுகன் பாதம் போற்றி
அடுத்துநின்ற அம்பிகைதன் பாதம் போற்றிக்
கோனனைய சிவனுடைய பாதம் போற்றிக்
குருவினுட பாதமலர் கொண்டு போற்றி
வானனைய முனிதேவர் பாதம் போற்றி
வடிவான ரிஷிசித்தர் பாதம் போற்றி
மானனைய பிடிவாதம் ஆயிரத்து ரெண்டு
வழுத்தினேன் கைபாக வரிசை கேளே. 1

நூல் வந்த வழி

வரிசையாய்ச் சிவன்தானம் மைக்குச் சொல்ல
வடிவான அம்மைதான் மகிழ்ந்து நோக்கி
உருசையாய் அசுவனிக்குச் சொன்னார் வாதம்
உற்றுமே அசுவனியும் மகிழ்ந்து நோக்கி
நரிசையாய் நந்திக்குச் சொன்ன போது
நானிலத்தில் நந்திதான் மனம்ம கிழ்ந்து
பரிசையாய்த் தன்வந்திரிக் குரைத்தா ரையா
பரிவாகத் தன்வந்திரி பாரி லோர்க்கே 2

பாரிலே யகத்தியர்க்குப் பயின்று சொல்லப்
பதிவான அகத்தியரும் புலத்தி யர்க்குப்
பாரியாய்ச் சொல்லிடவே புலத்தி யர்தாம்
பதிவாகத் தேரையர்க்குப் பயின்றிட் டார்கள்
காரியாய்த் தேரருமே கேட்டுத் தேறிக்
கனிவாக யூகி முனி தனக்குச் சொன்னார்
வாரியே யூகி முனி சந்தோஷித்து
வடிவாக உலகத்தில் வழுத்தி னாரே 3

வழுத்தினார் வடகிரந்தந் தன்னைப் பார்த்து
வடிவாக வாதத்தின் மார்க்கம் எல்லாம்
அழுத்தமாய் இருந்ததொரு கைபா கத்தை
யாதிமுதல் அந்தம்வரைக் கேட்டுக் கேட்டுப்
பழுத்தகனி போலவே சொன்னா ரப்பா
பாரிலே மானிடர்கள் பார்த்துத் தேறிக்
கழுத்திலிட்ட ஆபரணம் போலே செய்தார்
கனிவாக ஆயிரத்தைக் கனிந்து பாரே. 4

கனிந்துமே யாதியிலே யூகி தானும்
கனிவாக வைத்தியங்கள் கற்க (வேண்டிக்)
கனிந்துமே அகத்தியர்தம் பாதம் நோக்கி
நலமாக வெகுகோடி காலம் தொண்டால்
பணிந்துமே வேலைசெய்து வருகு நாளில்
பதிவாக அகத்தியரும் மனம கிழ்ந்து
வணிந்துமே கைபாக வரிசை சொன்னார்
வடிவாக யூகிமுனி பார்த்திட் டேனே. 5

பார்த்திடவே அகத்தியரும் சவுக்கா ரத்தைப்
பகர்ந்திடவே யூகிமுனி தனக்குத் தானும்
ஏத்திடவே யூகிமுனி பார்த்துத் தேறி
இதமான வுலகத்தில் வாதிக் காகக்
காத்திடவே கைபாக வரிசை யாகக்
கனிவாக வுலகத்தில் சொன்னா ரையா
வாழ்த்திடவே சவுக்காரம் செய்த பேர்கள்
வகையாக நீற்றுவகை யறிவார் தானே. 6

சவுக்கார வழலை

தானென்ற களங்கோடு செந்தூரம் சுண்ணம்
தாட்டிகமாய்த் தைலமுதல் மெழுகு அஞ்சும்
வானென்ற வகையாக விவரம் சொன்னார்
வடிவாக எனையாண்ட குருவி னாலே
மானென்ற கைபாகம் விவர மாக
மயமாகச் சொல்லிடவே யூகி தானும்
கானென்ற வுபதேசம் கேட்டுக் கேட்டுக்
கனிவாக வுலகத்தில் சொன்னார் தானே 7

தானென்ற வுலகத்தோர் வாதந் தன்னைத்
தாட்டிகமாய்க் கைப்பிடித்தால் ஞான மாகும்
ஊனென்ற வாதந்தான் வாரா போனால்
உலகத்தில் ஞானமில்லை உற்றுப் பாரு
கானென்ற சவுக்காரக் களங்கி னாலே
கனிவாக எல்லாமும் சித்தி யாகும்
வானென்ற சித்தியதைப் பெற்றுக் கொண்டால்
வடிவாக எல்லாமும் வருகும் பாரே 8

வருகுமே சவுக்காரம் செய்யும் மார்க்கம்
வடிவாகச் சொல்லுகிறேன் உற்றுக் கேளு
குருவாகப் பூநீறு பதக்கு வாரிக்
குணமாகப் பாண்டத்தில் இட்டு நன்றாய்த்

துருவாகச் சுக்கானிறு பதக்கு வாரித்
துப்புரவாய்ப் பூநீற்றுக் குள்ளே யிட்டுப்
பருவாகப் பாணிபடி யெட்டு ஊற்று
பக்குவமாய்த் திரிநாள்வை பருவங் கேளே. 9

பருவமாய் மூன்றுநாள் சென்ற பின்பு
பதிவாகத் தெளிவிறுத்துப் பின்பு கேளு
உருவமாய்ச் சீதையை யூதிக் கொண்டு
உற்றுஎடு சேரொன்று அதிலே யிட்டு
நருவமாய் ஒட்டஎரி குழம்ப தாகப்
.. ..
புருவமாய்க் குழம்பான பதத்தில் தானும்
குணமாகக் கல்லாகும் பதத்தைக் கேளே. 10

கேளுமே சாம்பலது படியு மெட்டுக்
கெடியாகப் பொடியாக்கிப் பரப்பி நீயும்
ஆளுமே யதன்மேலே சீலை போட்டு
அடைவாகக் குழம்பாக அதிலே யூற்று
நாளுமே நீர்தானும் சாம்பல் தன்னில்
நலமாகச் சொக்கியே இறுகிப் போகும்
வாளுமே உண்டைபண்ணிக் கதிரி லிட்டு
வடிவாகக் காய்ந்தபின் வரிசை கேளே 11

கேளுமே நெல்லைத்தான் பாணி யாலே
கெட்டியாய்ப் பிசறியே பாண்டத் திட்டுத்
தாளுமே மல்லிகையின் இலைப ரப்பித்
தப்பாமல் உண்டைதனை மேலே வைத்துக்
காளுமே மல்லிகையிலை மேல்ப ரப்பிக்
கருணைபெற அதின்மேலே நெல்லை மூடு
பாளுமே போகாமல் அடுப்பி லேற்றிப்
பதறாமல் ஆவிவரப் பருவம் பாரே. 12

(மல்லிகையிலை பூநீறு)

பாருமே ஆவிதான் கண்ட தானால்
பக்குவமாய்த் தீயாற்றி யெடுத்துக் கொள்ளு
தூருவமாய் உண்டையதுள் எண்ணெய் கக்கித்
துப்புரவாய் இருந்துவிடும் சொல்லக் கேளு
நாருமாய்க் கல்வத்தில் இதனை யிட்டு
நலமாக அரைக்கவே அமுரி வாங்கு
வாருமே அதைமுறிக்க வடிவு கேளு
வடிவாக வாலையென்ற சட்டி யிட்டே 13

(அமுரி-வெடியுப்புத்திராவகம்)

இட்டுநீ புகைநீரை வாங்கு மைந்தா
இதமாகச் சவுக்காரந் தன்னி லிட்டு
நட்டுமே யிருசாமம் அரைத்து மைபோல்
நலமாக வில்லைகட்டிக் கதிரி லிட்டுக்
கட்டுமே காய்ந்தபின்பு அஞ்சு சுண்ணம்
கனிவாக அதற்குள்ளே வைத்து மூடு
பட்டுமே பத்தெருவில் புடத்தைப் போடு
பதிவாகத்தீ யாற்றி யெடுத்துப் பாரே. 14

பாடல் 9 முதல் 14½ வரை. உரை

ஒரு பெரிய பானைக்குள் பதக்குப் பூநீறும் பதக்குச் சுக்கான் நீறும் போட்டு எட்டுப்படி தண்ணீர் விட்டு மூன்றுநாள் வைத்துத் தெளிவிறுத்துச் "சீதை குளித்த மஞ்சள்" என்ற பெயருள்ளதாக மஞ்சள் விரலி போல் கடற்கரை ஓரங்களிலே கிடக்கும். அதனையெடுத்து உலையில் வைத்து ஊதி ஒரு சேர் நிறுத்து அதிலே போட்டுக் கலக்கி நன்றாக எரித்துக் குழம்பாக்குக. கற்போலாகும் பதத்தில் எட்டுப்படி சாம்பலைப் பொடியாக்கிப் பரத்தி அதன் மேல் சீலை விரித்துக் குழம்பை அதன் மேலே ஊற்று. நீர்சாம்பலில் இறங்கும். சவுக்காரம் இறுகிவிடும். உருண்டையாக்கி வெயிலிவிட்டுக் காய்ந்தபின்பு நெல்லைத் தண்ணீர்விட்டுப் பிசறிப் பாண்டத்தில் இட்டு அதன் மேல் மல்லிகையிலைபரப்பி உண்டைகளையதன் மேலிட்டு மேலும் மல்லிகையிலை பரப்பி அதன்மேல் நெல்லையிட்டு மூடி அடுப்பில் ஏற்றிப்பருவமாக எரித்து ஆவிவரும் நேரம் பார்த்துத் தீயாற்றி யெடுத்துக் கொள்க. எண்ணெய் கக்கித் துப்புரவாய் இருக்கும். அமுரி விட்டுப்புகை நீர் வாங்கிச் சவுக்காரவுண்டையைக் கல்வத்திலிட்டுப் புகை நீர் விட்டரைத்து வி. த. கா. அஞ்சுசுண்ணக் குகைக்குள் வைத்துப்பத் தெருவிற்புடமிடுக. தந்தம் போல் இறுகிப்பூப்போல் விளைந்து நிற்கும்.

"பிரமன் சரசுவதி பேசு மனத்தால்
துரியம் பிறையிதழ் சூழ்ந்திதழ் பத்து
வரமாம் மகாரம் வழங்கும் உகாரம்
தரமான சீதரன் தன்னுடை தேவியே"

"தேவியென் தாயார் சீதை லட்சுமி
ஆவிக் கனுபோகி யந்தர மாலினி
பாவித்துப் பார்க்கவே பாவங்கள் ஓடிடும்
பாவிக்கு ஒன்றும் பலியாது பார்த்திடே".

(மச்சமுனி -800)

யாக்கோபு செந்தூரம் முந்நூறு காண்க. புலத்தியர் 300-இல் கடல்நுரைச் சுண்ணம் காண்க. பிடிவாதம் 531 முதல் 536 வரை காண்க,

துருசுச் சுண்ணம்

எடுத்துமே பார்த்தவுடன் தந்தம் போலாம்
இறுகியே பூப்போல விளைந்து நிற்கும்
அடுத்துமே வீரமது நாலத் தொன்று
அடைவாசச் சேர்த்தரைத்துப் பின்பு கேளு
நடுத்துமே துருசு என்ற கட்டிமேலே நலமாகப் பூசியே
காய வைத்து
விடுத்துமே பத்தெருவில் அடுக்கிப் போடு
விதமாகத் துருசதுவும் நீறுமாமே 15

ஆமேதான் துருசதுவும் நீறினாக்கால்
அடைவாக அண்டரண்டம் துளைந்து ஆடும்
வாமேதான் சூதமது கட்டிப் போகும்
வடிவாகச் சகலசரக் கதுவும் நீறும்
பாமேதான் † உபரசங்கள் நீறும் ஆகும்
பதிவான உலோகமெல்லாம் நீறிப் போகும்
தாமேதான் இதனாலே எல்லாம் நீறும்
தாட்டிகமாய்ப் பாகமதைத் தாக்கிப்பாரே.
† பாசாணங்கள் என்றும் வேறு பாடம் 16

சவுக்கார சூட்சம்

தாக்கியே சவுக்காரம் செய்யும் மார்க்கம்
தாட்டிகமாய்க் கல்லுப்புப் பூநீர் இரண்டும்
பாக்கியே சுக்கான்நீர் என்று சொன்னார்
பாவகமாய் இம்மூன்றும் கூடும் போது
வாக்கியே புடத்திலிட உருகிப் போகும்
வடிவாகக் காரமில்லை கருத்துப் போகும்
நோக்கியே தீயிலிட அகன்று போகும்
நுணுக்கமாய் வெண்கண்டர் தன்னி லாச்சே. 17

15, 16 துரிசுச்சுண்ணம், 17. சவுக்காரசூட்சம்

உரைநடை :

முன்கூறிய சவுக்காரக்கட்டினோடு நாலில் ஒரு பங்கு வீரம் சேர்த்து அரைத்துத் துருக் கட்டியின் மேல் பூசிக்காய வைத்துப் பத்தெருவில் புடம் போடு. நீறி விடும். அந்நீற்றால் சூதம் கட்டும். எல்லாச் சரக்கும் நீறும். உபரசங்கள், பாஷாணங்கள் உலோகங்கள் ஆகிய எல்லாம் நீறும். பாகமாகச் செய்து பார்த்திடுக. மேலும் சவுக்கார நுட்பம் தேர்க. கல்லுப்பு, பூநீறு, சுக்கான் நீறு இவைகளைச் சொன்னார் பிறர். இம்மூன்றும் கூட்டிப்

புடமிட்டால் உருகிப் போகும் காரமின்றிக் கருத்துப் போகும். தீயிலிட்டால் அகன்று போகும். சீனத்தினாலேதான் அது ஒழுங்காகும்.

*எழுநிலைச் சுண்ணம்

ஆச்சப்பா சீனத்தால் எல்லா மாச்சு
அடைவான கட்டாச்சு மெழுகு மாச்சு
வாச்சப்பா கடுஞ்சுண்ணம் செந்தூர மாச்சு
வடிவான புகைநீரும் வழக்க மாச்சு
நாச்சப்பா வெண்கண்டர்க் காரத் தாலே
வடிவாக யெல்லாமும் சித்தி யாச்சே
மூச்சப்பா ஒடுங்கினால் சடம் நில்லாது
மூனையான சுழிமுனையை முயன்று பாரே. 18

பாருமே துரிசுனுட சுண்ணந் தொட்டுப்
பதிவான மூலிகை ஏதா னாலும்
காருமே யிட்டுப் பிழிந்து பாரு
களகளென நீராகும் கண்டு பாரு
வாருமே நீரிறுத்து வைத்துக் கொண்டு
வடிவாகச் சரக்கெல்லாம் சுருக்குப் போடு
நாருமேகட்டியே மணிபோ லாகும்
நலமான லோகத்தில் பழுக்கும் பாரே. 19

பழுக்குமே தொட்ட தெல்லாம் சித்தியாகும்
பதையாமல் பாசாணங் கட்டிப் போகும்
நழுக்குமே உபரசங்கள் ஈய மாகும்
நலமான காயசித்தி லோக சித்தி
வழுக்குமே தொட்டதெல்லாம் சித்தி மெத்த
வாதாடி வாதமது மருவும் பாரே
கழுக்குமே கண்டருட மகிமை யாலே
கனவேகம் உண்டாகும் கருதிப் பாரே. 20

பாருமே சவுக்காரம் முன்னே வைத்துப்
பதிவாக உபரசத்தை நீற்றிக் கொள்ளு
காருமே உபரசங்கள் லோகத் துள்ளே
கனிவாகச் சேர்ந்தாலே தங்க மாகும்
வாருமே சவுக்காரம் இல்லாப் போனால்
வடிவாக நீற்றினங்கள் வண்மை யில்லை
ஏருமே உழுதாலே வெள்ளாண்மை யாகும்
ஏரில்லான் அறுத்தடித்த கதையு மாமே. 21

*(யூகி முனிவர் வாதபரிபூரணம் 200-70, 71, 72, 73 காண்க.)

கதையாகும் லோகத்தில் சவுக்காரம் தான்
கண்டக்கால் நிசமாகும் காணாப் போனால்
வதையாச்சு வாதந்தான் பொய்யே யென்று
மாண்டுமே போனார்கள் அநேகங் கோடி
விதையாச்சு நட்டேனென்று சொல்லு வார்பார்
வீணாதி வாதியர்கள் சொல்லும் புத்தி
உதையாச்சு வாதத்தில் கோடி வித்தை
ஒன்றுமே அறியாத உலுத்தர் தானே. 22

தானென்ற ரசவாதி யோக வாதி
தனித்துநின்ற சாத்திரத்தை யறியா மூடர்
ஊனென்ற சவுக்காரம் முடித்தேன் என்பான்
உருவுடனே பொன்செய்வேன் என்பான் வாதி
கானென்ற சோத்துக்கு இடமில் லாமல்
கனிவான சுண்ணங்கள் முடித்தேன் என்பான்
வானென்ற உப்பு வகை யறியாமற்றான்
வாகாகச் சொல்லியே மாளு வானே. 23

மாளாமல் சவுக்காரம் சுண்ணமானால்
மயமான வாதசித்தி வசியமாகும்
தேளாகும் கொட்டுதல் போல் சுண்ண மாகும்
திடமான சுண்ணத்தால் கோடி வித்தை
வாளான கோடியினால் அநேகங் கோடி
வடிவான கட்டினமும் உருக்கினமுங் கோடி
பாளான மனத்தைவிட்டுச் சவுக்கா ரத்தைப்
பார்த்திடவே எல்லாமும் பண்பு மாமே. 24

ஆமேதான் சவுக்காரச் சண்ணத் தாலே
ஆடலாம் கவர் கோடி யநேக வித்தை
நாமேதான் காண்டத்தில் சொல்வி விட்டேன்
நலமான கும்மியிலே அநேகம் சொன்னேன்
தாமே தான் மூதுரையில் சவுக்க ரந்தான்
சாற்றினேன் இதுரெண்டும் ஒத்துப் பார்த்துப்
பாமே தான் வழலைதனை முடித்துக் கொள்ளு
பக்குவமாய் நூலறிய வினையமாகும். 25

வினையான தீவினையை விட்டா யானால்
வேதாந்த சித்தாந்தம் இரண்டும் வந்து
மனையான வாசிதனில் உள்ளே செல்லும்
மாய்கையது தவறிவிடும் வண்மை மெத்த

உனையாள ஒரு பொருளாம் வழலைச் சுண்ணம்
உண்மையாய் வந்துவிட வாசி யேறும்
தனையாளத் தனையறிந்து கூடு கூடு
தப்பாமல் எல்லாமும் சித்தி யாமே. 26

18 முதல் 26 வழலைச் சுண்ணம்

சீனத்தால் கட்டு, மெழுகு, கடுஞ்சுண்ணம், செந்தூரம், புகைநீர் ஆகிய எல்லாம் ஆச்சு. துரிசுச் சுண்ணத்தை வழக்கமாகக் கையாளும் மூலிகை ஏதேனும் ஒன்றில் இட்டுப் பிழிந்து பார். களகளவென நீராகும் அதனை எடுத்து எல்லாவகைச்சரக்குகளிலும் சுருக்குப் போடு கட்டிவிடும். மணிபோலாகும், நல்லலோகத்திலூட்டப் பழுத்துவிடும். தொட்டதெல்லாம் பழுக்கும். பாசாணம் கட்டும், உபரசங்கள் ஈயமாகும். காய சித்தியும் லோக சித்தியுமாகும்; இது சீனத்தின் சிறப்பாலேதான். முதலில் சவுக்காரம் வைத்துப் பின்பு உபரசத்தை நீற்றிக்கொள்; அதனை உலோகத்துள்ளே சேர் தங்கமாகும். சவுக்காரம் இல்லாவிட்டால் நீற்றினங்களில் வன்மையில்லை. பொய்வாதி சவுக்காரமும் உப்பு வகையும் அறியாமல் வருந்துவான். சவுக்காரத்தால் கோடிவித்தையாடலாம். இந்நூலில் சொன்னேன். எனது கும்மியிலும் மூதுரையிலும் கூறியவற்றை ஒத்துப்பார். வழலைச்சுண்ணம் செய்து கொள்.

சவுக்காரத்தால் நீற்ற வகை

சித்தியாஞ் சுண்ணமது செய்ய வென்றால்
சிறப்பான சவுக்காரம் முன்னே செய்து
முத்தியாய்க் காரமதை நிரம்பச் செய்து
முடிவான சரக்கிலே கட்டு கட்டு.
நத்தியே கதிர்முன்னே காயப் போடு
நலமாகும் பத்தெருவிற் புடத்தைப் போடு
சத்தியந்தான் சகலமுந்தான் சுண்ணமாகும்
சாரித்துச் சகலசித்தும் ஆடலாகும். 27

ஆடவே யண்டபகி ரண்ட மெல்லாம்
அடைவாக ஆடலாம் துருசுச் சுண்ணம்
நாடவே செய்தாலோ நமன்கை யாடு
நலமாகத் திருவுளத்தை நம்பிச் செய்யக்
கூடவே குபேரனைப்போல் கூடி வாழும்
குணமான லாகிரியைத் தள்ளிப் போடு
வாடவே சவுக்காரம் முன்னே வைத்து
வடிவாகச் செய்திடவே சித்தி யாமே. 28

சித்தியாம் வழலையது முடிந்த தானால்
சிறப்பாகச் சகல சித்தும் உடனே யாகும்
முத்தியாம் மூவுலகும் சித்தி யாகும்
முடிவான கருணைதரச் சித்தி மெத்த
வித்தியாம் சவுக்காரச் சுண்ணத் தாலே
விரைச்சுப் போய்க் கல்லுப்பு உருகி யாடும்
நத்தியே நவலோகம் சித்தி மெத்த
நலமான யோக சித்திக் காய மாமே 29

காயமாம் காயசித்தி மெத்தப் பண்ணு
கனிவான வாதசித்தி வந்த பேர்க்கு
மாயமே தொட்டதெல்லாம் சித்தி யாகும்
மயமான வாத சித்தி மருவ லாகும்
நாயன்மார் சொன்னதெல்லாஞ் சித்தி மெத்த
நலமாகத் தொட்டதெல்லாம் நாடும் சித்து
ஞாயமாய் சொல்லிவிட்டே னுற்றுப்பாரு
நலமான மந்திர சித்து ஆடும் பாரே. 30

ஆகுமே மந்திரசித்து வந்த பேர்கள்
ஆடுவார் கோடிவித்தை யருளைக் காண்பார்
வாருமே சவுக்காரம் வந்த பேர்கள்
வடிவான பொருள் சித்து மார்க்க மாகும்
நாருமே நூலறியா வாதி மார்கள்
நலமாகத் தொட்டதெல்லாம் சித்தி யாகா
பாருமே கலக்கத்தில் நின்ற வாதி
பலமாக ஒன்றுமில்லை நடத்தை தானே. 31

27 முதல் 31. சவுக்காரத்தால் நீற்று வகை

முதலில் சவுக்காரம் செய்து காரமும் மிகுதியாகச் செய்து சரக்கின் மேலே கட்டு. காய்ந்தபின் பத்தெருவில் புடமிடு. உண்மையாகவே எல்லாமும் சுண்ணமாகும். துருசுச் சுண்ணம் செய்தால் அண்ட பகிரண்ட-மெல்லாம் விளையாடலாம். கூற்றுவன் நடுங்குவன். அதனைச்செய்யச் சவுக்காரம் முன்னே செய். சவுக்கார வழலை முடிந்தால் எல்லாம் உறுதி-யாகும். சவுக்காரச் சுண்ணத்தால் கல்லுப்பு நன்றாகக் கட்டும். உருகியாடும். ஒன்பான் உலோகமும் பொன்னும். யோக சித்தியும் காய சித்தியும் செய்து கொள். உண்மையாகச் சொல்லிவிட்டேன். சவுக்காரம் செய்தவர்கள் பொருட்சித்தி அடைவார்கள். நூலுண்மை அறியார்க்கு வாய்க்க மாட்டா,

கல்லுப்புக்கட்டு

தானென்ற கல்லுப்புக் கட்டக் கேளு
தாட்டிகமாய்ப் பாறையுப்புப் படியும் நாலு
ஊனென்ற பொடியாக்கிப் பாண்டத் திட்டு
உறுதியாய்த் தண்ணீரை உரைக்கக் கேளு
பானென்ற கிளிஞ்கில் நீர் படியும் நாலு
வளமான பூநீறு படியும் நாலு
ஊனென்ற பாணிபடி யெட்டு ஊற்று
உறுதியாய்க் கலக்கியே வைத்திடாயே. 32

கலக்கியே வாலையென்ற சட்டி மூடிக்
கனிவாக மண்ணாலே சீலை செய்து
உலக்கியே அடுப்புதனில் ஏற்றி நீயும்
உண்மையாய் எரிப்பாயே தீபம் போலே
நலக்கியே நாதவிந்தும் இறங்கும் பாரே
நலமாக இந்நீரு படியும் நாலு
துலக்கியே பாறையுப்புப் படியும் நாலு
நலமாக விட்டுமே கலக்கி வையே. 33

விட்டுநீ கலக்கியே அடுப்பி லேற்றி
விதமாக ஒட்டஎரி குமுறத் தானும்
நட்டுமே உப்பதனை யுடைத்துச் சீவி
நலமாகச் சீவினதில் கவசம் கேளு
கட்டுமே கடல் நுரையும் மேனி தானும்
கனிவாகச் சீனமுமே மூன்றுங் கேளு
முட்டுமே எடைசமனாய்ச் சேர்த்தரைத்து
முனிவாக உப்புக்குக் கவசம் பண்ணே. 34

பண்ணியே மேல் கவசம் பண்ணிப் பின்பு
பதிவாக அதன்மேலே மண்ணுச் சீலை
உண்ணியே செய்திட்டுப் புடமும் கேளு
உறுதியாய்ப் பத்தெருவில் அடுக்கிப் போடு
நண்ணியே தீயாற்றி யெடுத்துப் பாரு
நலமான தந்தநிறம் போலே யாகும்
கண்ணியே யெடுத்து நீ யுடைத்துப் பாரு
கனிவாக ஈயமது கருணை யாமே 35

(35க்குக் குறிப்பு : "உப்பையே கட்டவென்றால் ஒன்றிலும் ஆகா தப்பா, உப்பையே புளியுமுப்பும் உடனஞ்சு கூடிக் கொல்லும், உப்பையே கொண்டு தானும் ஓடலாம் ஆடலாகும், உப்பையே மூலமூர்த்தி உரைத்த ஐந்நூறும் பாரே. "பாரே நீ உப்பைக் கட்டப் பகருவேன் பாருள் ளோர்க்காய், நேரே நீ இணங்கன் சுண்ணம் நேராக வெள்ளை கூட்டித், தாரே நீ வெள்ளை வார்த்துத் தாக்கியே யரைத்துக் கட்டி, கோரே நீ யூதிப் போடு கொடு வெள்ளைச் சுண்ணமாமே.)

(போகர் நிகண்டு 13. பழம்புளி, கடல்நுரை, நாமென்ற மேனி இம்மூன்றையும் அடைபோல் இரண்டு செய்து மேற்கவசம் செய்க.)

ஆமேதான் இந்தவுப்பு ஈயம்போ லாம்
அடைவாகக் கரியதனில் வைத்து ருக்கு
நாமேதான் வெள்ளிபொன்போல் கண்விட் டாடும்
நலமாக வைரம்போல் இறுகிக் காணும்
தாமேதான் இந்தவுப்பில் வேதை கோடி
தாட்டிகமாய்க் குருகோடி செந்தூரங் கோடி
வாமேதான் நவலோகம் எட்டுக் கோடும்
வடிவான ஞானிக்கு அமர்ந்த வாறே. 36

32 முதல் 36 கல்லுப்புக் கட்டு

பாறையுப்பு படி நாலு பொடி செய்து பாண்டத்தில் இட்டுப் பூநீறு நாலு படி, கிளிஞ்சல் நீறு நாலு படி சேர்த்துத் தண்ணீர் எட்டுப்படி ஊற்றிக் கலக்கி வாலையாகிய மேல் சட்டி மூடிச் சீலை மண் செய்து அடுப்பேற்றி எரி. விளக்குப் போல் எரிக்கப் புகை நீர் இறங்கும். இந்நீர் நாலு படியில் பாறை உப்பு நாலு படி சேர்த்துக் கலக்கி அடுப்பிலேற்றி ஒட்ட எரி. உப்பாகும். அந்த உப்புக் கட்டின் மேல் கடல் நுரை, மேனியுப்பு சீனம், ஆகிய மூன்றும், எடைசமனாகச் சேர்த்து அரைத்துக் கவசம் செய்து சீலை மண் செய்து பத்தெருவில் புடமிடுக. தந்தம் போல் நிறமுடையதாகும். உடைத்துப் பார் ஈயமாகும். கரியில் வைத்து உருக்கினால் வெள்ளி பொன் போல் கண்விட்டாடும். வயிரம் போல் இறுகிக் காணும். இதனால் வேதை கோடி. குரு கோடி. செந்தூரம் கோடி. செந்தூரம் நவலோகம் எட்டிலும் பாயும்.

சூத பற்பம்

தானென்ற இந்தவுப்பை * மேருப் பண்ணத்
தாட்டிகமாய் மெழுகாலே மேருப் பண்ணிப்

* மேரு — காசிக்குப்பிபோல் அடியில் உருண்டையாய் மேலே குழாய் உருவமாகச் செய்யப்பெறுவது.

பானென்ற மண்கட்டிக் காயப் போடு
வடிவாகக் காய்ந்தபின்பு மருவக் கேளு
ஊனென்ற மெழுகுதனை உருக்கித் தள்ளு
உறுதியாய் அதன்பின்பு உண்மை கேளு
கானென்ற இந்தவுப்பை மூசைக் குள்ளே
கடிதாக உருக்கியே சொல்லக் கேளே. 37

சொல்லவே மேருவுக்குள் உருக்கி யுள்ளே
செயமாக ஊற்றிடவே மேரு வாகும்
துள்ளவே மேருவைத்தான் சீவிப் போடு
துடியாக வெங்கலம்போல் நிறமு மாகும்
கல்லவே நிறமுடைய மேரு — தன்னில்
கனிவாகச் சூதமது சேரு ஊற்று
நல்லவே வலப்பக் கல்லாலே மூடு
நலமாகச் சிலைசெய்து காய வையே. 38

(பொன்னூமத்தைச் சாறு விட்டு எண் சாமம் அரைத்து மெழுகு போல் உருண்டை செய்து குப்பிக்கு அரைவாசி வைக்க. போகர் நிகண்டு 83)

காயவைத்து வைக்கிற பாகங் கேளு
கனிவாகத் தளச்சட்டி யுள்ளே தானும்
மாயவைத்து மணலிடுவாய் விரலும் நாலு
மயமாகப் பண்ணிக்கொண் டதிலே மேரு
காயவைத்து நல்லாக வைத்து மூடு
நலமாக மணலிட்டு மூடி நீயும்
காயவைத்து வாலையென்ற அடுப்பி லிட்டு
நலமாகப் பன்னிரண்டு சாமந் தானே. 39

தானேதான் பன்னிரண்டு சாமத் தீதான்
தாட்டிகமாய் எரித்துமே பிரித்துப் பாரு
வானென்ற சீசாவைக் கொட்டிப் பாரு
வடிவாகத் தேங்காயின் திருவைப் போலாம்
கானேதான் அதைக்கொட்டிப் பார்க்கும் போது
கனிவாகத் தந்தம் போல் நிறமு மாகும்
பானென்ற இதையெடுத்து நவலோகத்தில்
பாய்ச்சிடவே நூற்றுக்கு ஒன்று தானே 40

ஒன்றிடவே மாற்றுத்தான் சொல்லக் கேளு
உறுதியாய் மாற்றதுவும் பத்து மாகும்
நன்றிடவே உப்புக்குங் காவிக் கேகா
நலமாக இத்தரைக்கு மேல தாகும்

பன்றிடவே யிதை விற்றுச் சீவ னத்தைப்
பதிவாகப் பண்ணியே ஞானம் பாரு
வன்றிடவே சுழிமுனையை வருத்திப் பாரு
வடிவான சிவ ஞானம் வருகும் பாரே. 41

வருகுமே அந்திசந்தி பணங்கால் வீதம்
வடிவாக மண்டலத்தில் கொண்டு பாரு
நருகுமே திரிகடுகி லுண்ணும் போது
நலமான வாதமெல்லாம் நடுக்கல் போகும்
திருகுமே பித்தமுதற் சிலேற்ப னம்போம்
திடமான சிலேற்பனங்கள் மாண்டு போகும்
பெருகுமே மகோதரமும் எங்கே போகும்
பொல்லாநோய் எல்லாமும் ஓடிப் போகும் 42

ஓடியே கடல்தனிலே ஓடிப் போகும்
உண்மையாய் மதிரவியும் ஒத்துப் போகும்
நாடியே ஒருத்த லைநோய் எல்லாம் போகும்
நலமான காயசித்தி நட்பு மெத்த
கூடியே நரித்த லையின் வாதம் போகும்
குணமான அண்டத்தின் வாதம் போகும்
பாடியே சயமுதலா யோடிப் போகும்
வடிவான சித்திதரும் வண்மை தானே. 43

வண்மையாய்ப் பத்தியத்தின் மார்க்கங் கேளு
வடிவாகக் கத்தரிக்காய் முருங்கைப் பிஞ்சு
உண்மையாய் அரைக்கீரை முளைக் கீரை யாகும்
உறுதியாய் மிளகாகும் உண்மை பாரு
தண்மையாய்ச் சிறு கீரை பயத்தங் கீரை
தாட்டிகமாய் வாழைக்காய் காளி வற்றல்
கண்மையாய் முள்ளங்கிக் கனிவு மாகும்
சதிராகு மிவையெல்லாங் கூட்டிக் கொள்ளே. 44

கொள்ளவே முசுட்டையொடு அத்திப் பிஞ்சு
குணமான அவரைக்கா காயுமாகும்
நள்ளவே வழுதலங் காய் கூட்டிக் கொள்ளு
நலமான சுண்டவத்தல் கறியு மாக்கித்
துள்ளவே புளிதள்ளு புகையிலையுந் தள்ளு
துடியான ஆவின்மோர் கூட்டிக் கொள்ளு
தள்ளவே யிப்படிக்கு மண்டலந் தான்
கனிவாகக் கொண்டிடவே சித்தி யாமே. 45

சித்தியாம் நரைதிரைக ளற்றுப் போகும்
சிறப்பான பசுநரம்பு இறுகிக் காணும்
முத்தியாம் விந்திறுகும் கண்து லங்கும்
முனைவான செவ்வலரிப் பூப்போ லாகும்
நத்தியாம் ஒளிவாகும் மேனி தானும்
நலமாகும் சூதபற்பத் தாலே யெல்லாம்
வித்திலே முளைத்தமுளை போலே யாகும்
விதமாக நரம்பிறுகும் மேன்மை தானே. 46

தானென்ற சூதபற்பம் நவலோ கத்தில்
தாட்டிகமாய் நூற்றுக் கொன்று தாக்க
வானென்ற மாற்றுத்தான் பத்து மாகும்
தாட்டிகமாய் உப்புக்கும் காவிக்குந் தான்
கானென்றே யிறங்கிவிடும் இதனை விற்று
கனிவாக வுண்டுடுத்திப் பின்பு கேளு
நானென்று அயச்செம்பை வைத்துக் கொள்ளு
நலமாக எல்லாமும் சித்தி தானே. 47

37 முதல் 47

சூதபற்பம்

இந்த உப்பினால் குப்பி செய்தல் வேண்டும். குப்பிக்கு மேரு என்றும் பெயர் உண்டு. மெழுகினால் குப்பி செய்து அதன் மேல் மண் பூசிக்காய வைத்து மெழுகினை உருக்கி எடுத்துவிட்டு அந்த இடைவெளியில் கட்டிய உப்பினை உருக்கி ஊற்ற அது நல்ல குப்பியாகும் குப்பியை வடிவாகச் சீவி ஒழுங்கு செய்க அதனுள் ஒரு சேர் சூதம் ஊற்று. மாக்கல்வட்டினால் மூடி சீ. ம. செ. காய வை. பின்பு தளச்சட்டியினுள்ளே நாலுவிரல் உயரம் மணலிட்டு அதன் மேல் குப்பியை வைத்து மேலும் மணலிட்டு மூடி அடுப்பேற்றிப் பன்னிரண்டு சாமம் எரித்துப் பிரித்துப்பார் தேங்காய்ப் பூப்போல் இருக்கும். அதனைக் கொட்டிப் பார்க்கும் போது தந்தம்போற் காணப்படும். இதனை ஒன்பான் உலோகத்திலும் நூற்றுக்கு ஒன்று உருக்கு முகத்திலீய உறுதியாய்ப் பத்து மாற்றாகும். உப்பும் காவியும் பூசிப்புடமிட்டாலும் நிறம் போகாது. இதனை விற்று உண்டுடுத்தி வாழ்ந்து சுழிமுனையை அழுந்த நோக்கிப்பாரு. சிவஞானம் உண்டாகும்.

தீரும் நோய்

காலைமாலை காற் பணவெடை திரிகடுகில் வைத்துத்தேன் விட்டுக் குழைத்து உண்க. வாதமெல்லாம் போகும். பித்தம் சிலேற்பனமும் போகும். மற்றும் நடுக்கல், மகோதரம், ஒருத்தலைவலி, நரித்தலைவாதம்,

அண்டவாதம், சயம் ஆகிய நோய்கள் கட்டலுக்கே ஓடிப்போகும். மூச்சுக் காற்றின் ஓட்டமும் ஒழுங்காகும். காய சித்தியாகும்.

பத்தியம்

கத்தரிக்காய் முருங்கைப்பிஞ்சு அரைக்கீரை முளைக்கீரை மிளகு சிறு கீரை பயற்றங்கீரை வாழைக்காய் மிளகுதக்காளிவற்றல் முள்ளங்கி முசுட்டைக்காய் அத்திப்பிஞ்சு அவரைக்காய் வழுதலங்காய் சுண்டைவற்றல் ஆவின் மோர் இவையெல்லாம் ஆகும். புளியும் புகையும் தள்ளு. இங்ஙனம் நாற்பது நாள் உண்ணக் காய சித்தியாகும். நரைதிரையற்றுப் போகும். பசு நரம்பு இறுகிக் காணும் விந்திறுகும் கண்துலங்கும். செவ்வலரிப் பூப்போல் விளங்கும். மேனி ஒளியுடன் இலங்கும்.

உப்புக் கெதை

தானென்ற வுலகத்தில வாதி மார்கள்
தனித்துமே கல்லுப்பைக் கட்டாத தாலே
வானென்ற இந்தவுப்பு அல்ல வென்று
மனக்குறைகள் நிரம்பவே சொல்லு வார்கள்
கானென்ற சவுக்கார நீற றிந்தால்
கனிவாகக் கல்லுப்புக் கட்டிப் போகும்
தானென்ற கட்டினதோர் உப்பி னாலே
தாட்டிகமாய்ச் சகல சித்தியாட லாமே. 48

ஆடவே அண்டபகி ரண்ட மெல்லாம்
அடைவான லோகமுதல் உபரசங்கள்
வாடவே உப்பிருபத் தைத்து தானும்
வடிவாகக் கட்டாகும் மெழுகு மாகும்
நீடவே உப்பாலே அநேக வித்தை
நிலையான உப்பைவிட்டால் ஒன்று மில்லை
கூடவே உப்பில்லாக் கரும மெல்லாம்
கூடாது வாதமது கொள்கை தானே. 49

தானென்ற உப்பைத்தான் கட்டிக் கொண்டு
தாட்டிகமாய் ஈயமாய்ப் பண்ணிக் கொண்டு
நானென்ற வுப்பினுட ஈயத்தாலே
நலமாக நவலோகம் பழுத்துப் போகும்
ஊனென்ற வுப்பதுவும் களங்க மானால்
உறுதியாய் நவலோகம் எட்டி யோடும்
வானென்ற ரிஷிசித்தர் உப்பி னாலே
வடிவாக வாதசித்தி செய்தார் தானே. 50

தானென்ற வுப்பினுட கெதையைக் கேளு
தாட்டிகமாய் மெழுகாலே கெதை போற் பண்ணி
ஊனென்ற அஞ்சுபட்டை வைத்துப் பின்பு
உறுதியாய் மெழுகின்மேல் மண்ணைப் பூசி
நானென்றே காயவைத்து மெழுகைத் தானும்
நலமாக அகற்றியே போட்ட பின்பு
வானன்ற வுப்புருக்கிக் கருவில் வாரு
நலமாகப் பட்டையஞ்சும் நல்ல வாமே. 51

ஆமேதான் பட்டையஞ்சில் வண்ணம் கேளு
ஆதியாம் சிவப்பொன்று வெளுப்பு மஞ்சள்
வாமென்ற பச்சை நிறம் கருப்பு அஞ்சும்
வடிவாகச் சாயத்தை ஏத்தும் பாகம்
நாமேதான் சொல்லுகிறேன் உற்றுக் கேளு
நலமாகப் பட்டையினால் புதைத்துப் போடு
சாமேதான் லிங்கத்தைப் புகை நீ ராலே
சரியாக அரைத்துமேல் பூசி டாயே. 52

பூசியே பத்தெருவிற் புடத்தைப் போடு
பொலிவாகப் பார்த்திடவே சிவப்பு மாகும்
நாசியே மறுபட்டை தன்னிற் கேளு
நலமாகக் கார்முகியை யரைத்துப் பூசி
வாசியே புதைத்துமே புடத்தைப் போட
வடிவாகக் கருப்பாக இருக்கும் பாரு
காசியே மறுபட்டை தன்னிற் கேளு
சரியான வீரத்தை யரைத்துக் கட்டே 53

கட்டியே புதைத்திட்டுப் புடத்தைப் போடு
கனிவாக வெள்ளைநிற மாகும் பாரு
தெட்டியே மனோசிலையைக் கல்வத் திட்டுச்
சிறப்பாக இருசாமம் மைபோ லாட்டி
குட்டியே பட்டைதனில் பூசி நன்றுய்க்
குணமாகப் புதைத்து நீ புடத்தைப் போடு
நட்டியே துருசுதனை யரைத்து மைபோல்
நலமாக மறுபட்டை பூசிப்போடே. 54

போடவே யிப்படிக்குப் பட்டை அஞ்சில்
பொலிவாகப் பூசியே புடத்தைப் போடு
கூடவே அஞ்சுநிற மாயி ருக்கும்
குணமாகக் கடாட்சத்தில் வைத்துக் கொள்ள

நாடவே உலகுதன்னில் சாத்திரத்தில்
நலமாக யாத்திரைதான் பண்ணும் போது
தேடவே செம்புருக்கிப் பட்டை தன்னைத்
திறமாகச் சீவியே போட்டி டாயே. 55

போட்டிடவே பத்தரைதான் மாற்றுக் காணும்
பொலிவாக இதைவிற்றுச் சீவ னத்தைக்
காட்டிடவே பண்ணியே உண்டுடுத்துக்
கனிவாக ஞான வழி யடுத்துக் கூடு
பார்த்திடவே சிவசொத்தை வறுமை போலுண்ணு
பண்பாகச் சிவஞானம் வந்து கூடும்
நாட்டிடவே குருஞானம் வெளியு மாகும்
கைகண்ட வித்தையது கருவாய்ப் பாரே. 56

பாருமே உப்பைமுந்திக் கட்டி யாடு
கனிவாகக் பஞ்சவர்ணம் ஆகும் பாரு
காருமேஉப்பென்றால் எளிதோ அல்ல
கனிவான சத்தியுட நாதமாகும்
தாருமே உப்பாலே கட்டுமாச்சு
தாட்டிகமாய் மெய்யறிவு தன்மையாகும்
கூருடனே அப்புடனே உப்புச் சேரில்
குணமாக எல்லாமும் வருகும் பாரே. 57

பாரேநீ சித்தரெல்லாம் உப்பைக் கட்டிப்
பதிவாக நவலோகந் தன்னி லீந்தார்
காரே நீ யிட்டிடவே நூற்றுக் கொன்று
கருணையாய்த் திசைமாற்றுக் கண்டுபாரு
நாரேநீ உப்பில்லாக் கருமம் எல்லாம்
நலமாக ஒன்றுமில்லை நாட்டி லோற்குச்
சேரேநீ உப்புடனே அப்புச் சேர்நீ
சுகமாக நூறு தொந்தம் ஏறும் தானே. 58

தானென்ற உப்புருக்கி ம்ணியாய் வார்த்துத்
தாட்டிகமாய் அஞ்சுமணி பண்ணிக் கொள்ளு
கோனென்ற செம்பட்டு தன்னிற் கோத்துக்
கூராக அஞ்செழுத்தும் ஓதித் தீரு
பானென்ற சற்குருவாம் கடாட்சமாகும்
பதிவான சிவன்வந்து பரிந்து சொல்வார்
கானென்ற அம்மையவள் கருதுவாள் பார்
காட்டியே வாதவித்தை சொல்லுவாளே. 59

சொல்லவே சுழிமுனையைத் தொந்தம் பாரு
சூட்சாதி சூட்சமெல்லாம் தொன்மை யாகும்
மெல்லவே சுருதிமுறை யறியா வாதி
மேலாகப் பேசிடுவார் விதமு மாக
கல்லவே உப்பைவிட்டார் அநேகர் கெட்டார்
காரியமாய் உப்பில்லாக் கரும மெல்லாம்
அல்லவே அழிம்பாச்சு வுப்பில் லாதால்
அடைவாக ஆதியுப்பு அடைவு கேளே. 60

அடவாக வுப்புத்தான் தெரிப்பு அடங்கில்
ஆண்மையாய்க் கட்டினால் நவலோ கத்தில்
திடமாகப் புகுந்துமே பழுத்துப் போகும்
திட்டமாய் எல்லாமும் சித்தி யாகும்
வடவாகச் சித்தியெல்லாம் உப்பி னாலே
வாதமாம் ஆட்டமெல்லாம் உப்பி னாலே
குடமாக உப்பில்லாக் கரும மெல்லாம்
கூடியே சித்தியில்லை குணமு மாமே. 61

ஆமேதான் கல்லுப்பில் அநேக வேதை
அடைவான கோடான கோடி வேதை
நாமேதான் சொல்லிவிட்டோம் பிடிவாதத்தில்
நன்றாக இந்நூலை நம்பிப் பாரு
காமேதான் நூலில்லா வாதம் பார்த்தால்
கனிவாகப் புடசெயமு மாகா பாரு
தாமேதான் கைபாக மாகச் செய்து
தனித்துமே பார்த்தாலே யெல்லா மாமே. 62

48 முதல் 62 உப்புக்கேதை

சவுக்கார நீறறிந்தால் கல்லுப்புக்கட்டும்; அதனால் உலோக-வகைகள் உப்புஇருபத்தைந்து உபரசங்கள் ஆகிய எல்லாம் கட்டாகும்; மெழுகுமாகும்; உப்பை விட்டால் "ஒன்றுமில்லை; உப்பைக் கட்டி ஈய-மாக்கிக் கொள்ள நவலோகம் பழுக்கும். உப்பினால் செங்கோல் செய்யும் நெறியைக் கேட்பாயாக : மெழுகினால் ஐந்து பட்டையுள்ள செங்கோல் ஒன்று செய்து அதன் மேல் மண்பூசிக்காய வைத்து மெழுகை உருக்கி நீக்கி விட்டு அந்தமண் குழலுக்குள் உப்பினை உருக்கி ஊற்றி உலர்த்தி ஒழுங்கு ஆக்கு. ஐந்து பட்டையுள்ள கோலாகும். ஒவ்வொரு பட்டை-யிலும் நிறம் ஏற்ற வேண்டும் (அது ஐந்து நிறச்செங்கோலாகும். மேலுறை-யிட்டுக்கையிற்கொண்டு செல்க. வெளியூரில் வேண்டுமிடத்தில் செம்பு உருக்கிப்பட்டையில் சிறிது செதுக்கித்தூவப்பத்தரைமாற்றுகும். இதுவே

அரசற்கும் துறவிக்கும் செங்கோலாகும்) சாதிலிங்கத்தைப் புகைநீர் விட்டரைத்து ஒருபட்டையிற்பூசிப்பத்தெருவிற்புடமிட அப்பட்டை சிவந்த பவழ நிறமாகும் அடுத்த பட்டையிற் கார்முகிற்பாடாணத்தை முன்போல் அரைத்துப் பூசிப் போடக்கருப்பு நிறமாகும். மறுபட்டையில் வீரம் பூசிப்போடுக. வெள்ளைநிறமாகும்; அடுத்த பட்டைக்குமனோசிலைநிறம் மஞ்சள். அடுத்தபட்டைக்குத்துருசு; நிறம் பச்சை. இதனால் உண்டு; டுத்து வாழ்ந்து ஞானம்பார். முதலில் உப்பைக்கட்டு. ஐந்துநிறம் ஆகும். உப்பு சத்திநாதம். சித்தரெல்லாம் உப்புக்கட்டி ஒன்பான் உலோகத்தில் ஈந்தார். நூற்றுக்கு ஒன்றீயப் பத்து மாற்றாகும்.

உப்பை உருக்கி மணியாய் வார்த்து ஐந்து நிறம் ஏற்றி அஞ்சுமணியாய் ஆக்கிச்செம்பட்டு நூலில் கோத்து ஐந்தெழுத்து ஓது. சிவன் வந்து மெய்மை சொல்வார் அம்மை வந்து அருள் மொழிவாள். வாதவித்தையும் கூறுவார். சுழி முனையைத் தொடர்ந்து பார். உப்பை விட்டோர் கெட்டார். உப்பு தெறிப்படங்கக்கட்டினால், ஒன்பான் உலோகத்தில் புகுந்து பழுத்து விடும் கல்லுப்பில் கோடான கோடி வேதை உண்மை சொல்லிவிட்டேன் இந்நூலை நம்பிப்பார். கைபாகம் செய்பாகமாகச் செய்தால் எல்லாம் ஆகும்.

குறிப்பு :- போகர் நிகண்டு ஐநூறில் உப்புக்கதை கூறப் பெற்றுளது. அதனையும் நோக்கிக் காண்க.

அயச் செம்பு

ஆமேதான் சீவனத்துக் கிடமே கேளு
    அடவாக உப்புக்கு முன்னே தானும்
காமேதான் அயத்தை நீமுன்னே பாரு
    கனிவான சீவனத்துக் கிடமே யாகும்
வாமேதான் முந்தியேதான் செம்பைச் செய்து
    வடிவான வெள்ளிதனில் கொடுத் துருக்கு
நானேதான் மாற்றென்ன எட்டு மாகும்
    நலமாகச் சீவனத்தைப் பண்ணி டாயே. 63

பண்ணியே சீவனத்துக் கிடமே கேளு
    பண்பான அயச் செம்பு பகரக் கேளு
நண்ணியே செம்பதுவும் பலமு நாலு
    நலமான செம்புதனைத்தகடு தட்டி
ஒண்ணிடவே வெடியதுவும் பலமும் நாலு
    உறுதியாய்க் கல்வத்தில் நேக ஆட்டிக்
கண்ணிடவே பழச்சாறு சாமம் ஆட்டிக்
    கனிவாகக் கதிரிலிடு கண்டு பாரே. 64

கண்டுபார் கல்லுப்புப் படிதான் நாலு
கனிவாகப் பொடியாக்கி வறுத்துப் போடு
பண்டுபார் அம்மிதனில் இட்டு மைபோல்
பதிவாகப் பின்பொருகால் வறுத்துப் போடு
வண்டுபார் முன்செம்பு தன்னையிட்டுப்
பதிவாக மூடியே பின்பு கேளு
தண்டுபார் பெரியபுடம் போட்டுத் தீரு
தாட்டிகமாய் நொறுங்கியே கருத்துப் போகும் 65

கருத்திருக்கும் பொடியதனைக் கல்வத் திட்டுக்
கனிவாக இன்னமொரு கருவு கேளு
நருத்ததுமே தாளகந்தான் பலமும் ஒன்று
நலமாகச் சுண்ணாம்பில் சுத்தி செய்து
பருத்துமே தாளகமேல் வளைய லுப்பைப்
பதிவாக அரைத்துமே கவசம் கட்டி
ஒருத்துமே கரியோட்டில் குமுற வாட்டு
உண்மையாய் அடுக்கடுக்காய் வாட்டிடாயே. 66

வாட்டியே புகைமேலே கிளம்பும் மட்டும்
வடிவாகப் பார்த்தெடுத்துத் தண்ணீர் தன்னில்
நாட்டியே போட்டிடவே நன்றாய்க் கேளு
நலமாக ஒருநாள் தான் சென்றபின்பு
மூட்டியே எடுத்துப்பார் செந்தூர மாகும்
முயற்சியாய்ச் சிவந்துவிடும் தாளகத்தைத்
தாட்டியே முன்கரித்தூள் இடையே சேர்த்துத்
தாட்டிகமாய் நாலில் ஒன்று சேர்க்கக் கேளே. 67

சேரவே சுத்திரச செந்தூ ரந்தான்
செயமாகச் சேர்த்திட்டு அரைநீர் கேளு
வாரவே புகைநீரை வழுத்தக் கேளு
வடிவாக வெடியுப்பும் பலமும் பத்து
கூரவே சீனமது இருபத் தைந்து
குணமாக இரண்டுமொன்றாய்ப் பொடித்து நல்லாய்ச்
சாரவே கலையத்தில் அடைத்து வாலை
சாட்சியாய் மூடியே சீலை செய்யே 68

சீலைசெய்து வாலையென்ற அடுப்பி லிட்டுச்
செயமாகத் தீ யெரிப்பாய் முன்னீர் வந்து
காலையாய் வெளைள்நிறம் ஆகும் பாரு
கனிவாக வெள்ளையைத்தான் வீசிப்போடு

நாலைசெய்து மஞ்சள்நீர் தன்னை வாங்கு
நலமாக முன்செய்த தாள கத்தில்
வாலையாய் விட்டுமே யரைத்து வில்லை
வடிவாகக் கதிரிலிடு காயத் தானே 69

தானேதான் காய்ந்தபின்பு சுண்ணாம்பும் உப்பும்
தாட்டிகமாய் மேற்கவசம் கட்டிப் போடு
வானேதான் புடம்பெரிதாய்ப் போட்டுத் தீரு
வடிவாகச் சிவந்துநிற மாகக் காணும்
ஊனேதான் அதையெடுக்க வித்தை கேளு
உறுதியாய் அதையுருக்கக் கட்டிப் போகும்
கானேதான் செத்தசெம்பைப் பிடிக்கக் கேளு
கனிவாக அரப்பொடியும் பலமும் நாலு. 70

நாலாக இடைசேர்த்துப் பழச்சா றிட்டு
நலமாக இருசாமம் நவில ஆட்டிக்
காலாக வில்லைகட்டிக் கதிரில் வைத்துக்
கனிவாக மேற்கவசம் கனியக் கட்டிப்
பாலாகப் பெரியபுடம் போட்டெ டுக்கப்
பதிவாகக் கருப்பென்ற நிறமு மாகும்
வேலாக வெண்காரம் இடையே சேரு
விதமாகக் கல்வத்தில் இட்டிடாயே. 71

இட்டுமே பழச்சாறு விட்டு ஆட்டி
இதமாக வில்லைகட்டிக் காயப் போடு
பட்டுமே பெரிதாகப் புடமும் போடு
பதிவாகக் கருப்பென்ற நிறமு மாகும்
வட்டுநீ கருத்ததென்று எறிந்தி டாதே
வடிவாகக் கருத்ததெல்லாம் தங்க மாகும்
முட்டுமே கருப்பைத்தான் வாங்கிப் போட
மூவுலகு மெய்க்கவே செம்புமாமே 72

ஆமேதான் உருக்கிடவே சிவப்பு மாகும்
அடவாகக் கோவையுட கனிபோ லாகும்
தாமேதான் வெள்ளிதன்னை யூதிப் போட்டுத்
தப்பாமலதில்நாலி லொன்று சேரே
காமேதான் உருக்கிடவே மாற்றுக் கேளு
கனிவாக மாற்றேழு காணும் நேர்மை
வாமேதான் பொன்னைப்போல் இலங்கும் பாரு
வடிவாக நாலிலொன்று தங்கம் சேரே. 73

தங்கமது சேர்த்திடவே தங்க மாகும்
தாட்டிகமாய் உப்புக்குங் காவிக் குந்தான்
பங்கமது வாராது புடமி றங்கும்
பதிவாக இதைவிற்றுச் சீவ னத்தைச்
சங்கமாய்ச் செய்திடவே பின்பு கேளு
சரியாக ஞானவழி யடுத்துக் கூடு
துங்கமாய்ச் சுழிமுனையில் வரவு பாரு
துடியாகக் காயசித்தி தொன்மை தானே. 74

63 முதல் 74 அயச்செம்பு

உப்புக்குமுன் அயச்செம்பு செய். வெள்ளியிற் கொடு. எட்டுமாற்று. அதனைக்கேள். வெடியுப்பு நாலு பலம் எடுத்துப் பழச்சாறு விட்டரைத்துத் தகடாகத்தட்டிய நாலு பலச் செம்பில் பூசிக் காயவை. பின்பு நாலுபடி கல்லுப்பு வாங்கிப் பொடித்து வறுத்து அம்மியிலிட்டுப் பழச்சாறுவிட்டரைத்துக் காய வைத்துப் பின்பு ஒரு முறை வறுத்து எடுத்து, முன் செம்பினைக் கலையத்துள்ளிட்டு அதன் மேல் அந்த வறுத்த உப்பிட்டு மூடிச் சீ. ம. செ. பெரிய புடம் போட்டெடு. நொறுங்கிக் கருப்பாக இருக்கும். பின்பு ஒருபலம் தாளகம் எடுத்து சுண்ணாம்புக் கல்லில் வைத்து நீருற்றிக் கழுவித் தூயதாக்கி வளையலுப்பை அரைத்துக் கவசித்துக் கரியோட்டில் வைத்துப் புகை வரும்வரை வாட்டித் தண்ணீருக்குள்ளே எடுத்துப்போட்டு ஒருநாட்கழித்து எடுத்துப் பார் செந்தூரமாக இருக்கும். அச்செந்தூரத்தை முன்பு கருத்த தூளுடன் சேர்த்து வெடியுப்புச் செயநீர் விட்டரைத்து வி. த. கா. சுண்ணாம்பும் உப்பும் அரைத்துக் கவசித்துப் பெரியபுடம் போடு. சிவந்து நிற்கும். அதனை உருக்கக் கட்டிப் போகும். அங்ஙனம் கட்டிய செம்புடன் நாலு பலம் அரப்பொடி சேர்த்துப் பழச்சாறு விட்டரைத்து வி. த. கா. மேற்கவசம் செய்து பெரியபுடம் போடு. கருப்பாகும். அதனுடன் வெண்காரம் சேர்த்துக் கல்வத்திலிட்டுப் பழச்சாறு விட்டு ஆட்டி வி. த. கா பெரிய புடம் போடு கருப்பாகும். கருத்ததென்று மயங்காதே கருத்ததெல்லாம் தங்கமாகும். அக்கருப்புத்தூளை உருக்கச் சிவந்து கோவைப்பழம் போன்ற செய்பாகும். வெள்ளியை யூதி எடுத்து நாலில் ஒருபங்கு சேர்த்து உருக்கு. ஏழு மாற்று. நாலில் ஒன்று தங்கம் சேர். நல்ல தங்கமாகும். இதனுல் வாழ்ந்து சுழிமுனை நோக்கித் தவம் செய்து காய சித்தியாக்கு.

புரட்டு அயச்செம்பு

தானென்ற வயச்செம்பு சுருக்கு மெத்தத்
தாட்டிகமாய் வாதிமார்கள் அயத்தைத் தானும்
வானென்ற மூலிகையில் செம்பு ஆனால்
வழியாகா வெண்பார்கள் உலுத்த வாதி

நானென்று மூலிகையிற் செய்து பார்த்து
நல்லகரி யாகிவிட அலுத்துத் தானும்
கானென்று தூரவே எறிந்து போட்டுக்
கனிவாக இன்னமொன்று பார்ப்பார் தானே 75

ஆமேதான் அரப்பொடியை அராவித் தானும்
அடைவாக வெள்ளைப் பாஷாணம் சேர்த்துக்
காமேதான் உருக்கிவிட உருகித் தானும்
கனிவாகச் செம்பிலிடை யீந்து பார்த்து
வாமேதான் களங்காச்சு வெள்ளி நாலு
வடிவாக வொன்றிட்டு வூதிப் போட்டுச்
சாமேதான் தங்கத்தை யிடையே சேர்ப்பார்
தாட்டிகமாய்க் கடைதனிலே விற்பார் தானே 76

தானேதான் செட்டிகள் வாங்கிப் பார்த்து
தாட்டிக மாய்கல்லில் உரை பார்த்துச் சொல்வான்
ஊனேதான் ரசவாதம் செய்த பொன்னாம்
உதவாது செட்டியவன் சொன்ன போது
நானேதான் ஒரு காசும் இரண்டு காசும்
ஈயென்று சொல்வார்கள் என்ன செய்வர்
கானே தான் போட்ட தங்கம் வீணாய்ப் போகக்
கனிவாக இன்னொன்று பார்ப்பார் தானே 77

பார்த்துமே கெவுரியுடன் அயத்தைச் சேர்த்துப்
பதிவாக உருக்கிடவே ஈய மாகும்
நாத்திடவே செம்புதனிற் கொடுத்துப் பார்க்க
நல்லகளங் காயிருக்க வெள்ளி தன்னில்
காத்துடனே கொடுத்தூதித் தங்கம் சேர்ப்பர்
கனிவாகச் சேர்த்துடனே கடையிற்காட்ட
வாத்துமே செட்டியவன் உரைத்துப் பார்த்து
வடிவாக வாணாங்காண் என்ற வாறே 78

வாறுகேள் செம்பெடுக்கத் தெரியா மல்தான்
வடிவாக அயமதனைப் பிடித்துக் கொண்டு
தேறுகேள் நாய்கடித்த வெள்ளெ லும்புபோல்
திடமாக அலைகுவார் வாதி மார்கள்
கூறுகேள் செம்பைத்தான் முன்னே கொன்று
கூடியே உறவாக அயத்தைச் சேரு
தூறுகேள் செத்தசெம்பு ஓடா தப்பா
துடியாக இழுத்துமே வருகும் பாரே. 79

வருகுமே செத்தசெம்பு பிடிக்கக் கேளு
வடிவாக அரப்பொடிதான் பிடித்துக் கொள்ளும்
பெருகுமே இரும்பதுவும் சேராப் போனால்
பெலப்படாச் செம்பதுவும் ஓடிப் போகும்
நருகுமே வெள்ளிதனில் பழுக்க மாட்டா
நலமாகக் கைபாகந் தவறிப் போனால்
குருகுமே கைபாகந் தப்பாமல் தான்
தாட்டிகமாய் செய்துநீ முடித்தி டாயே. 80

முடித்திடவே அயச்செம்பு தன்னை வாங்கு
முடிவாகக் காதுதன்னில் இரண்டு வட்டம்
தடித்துமே பண்ணியே காதில் போட்டுத்
தாட்டிகமாய் மகரகுண் டலங்கள் பண்ணு
வடித்துமே மோதிரங்கள் வேடம் பூண்டு
வடிவாகக் காவிவஸ்திரங்கள் பூணு
விடுத்துமே சிவயோக மார்க்க மெல்லாம்
விதமாசச் செய்துமே இருந்தி டாயே. 81

இருந்திடவே சகலசித்தி யாக வென்றால்
இதமாகப் பிடிவாதம் தனைஎப் பாரு
வருந்திடவே அயச்செம்பை வைத்துத் தேறு
வாதாடித் திரியாதே வன்மை பாரு
கருந்திடவே நூலெல்லாம் சோதித் தேறு
கனிவாக ரசவாதம் ஏவல் கேட்கும்
பருந்துபோல் முழிக்காதே பரம யோகம்
பார்த்திடவே யெல்லாமும் பாதை யாமே. 82

பாதையாம் வெகுபாதை அயத்தில் செம்பு
பதிவாகச் செம்பதுதான் பிறந்த போது
நாதையாம் வெகுவேதை நாடிப் பாரு
நலமாகச் சித்தருட நூலுக் குள்ளே
கார்தையாம் முனிநூலு பாக மாகும்
கனிவாக நூலில்லா வாதம் பார்த்தால்
வாதையாம் வாதமில்லை வந்து கூடா
வடிவாகச் சித்திதர வடிவு மாமே. 83

75 முதல் 83

புரட்டு அயச்செம்பு

மூலிகையின் துணையால் அயச்செம்பு செய்து பார்த்து அது நன்றாய் வராமைகண்டு எறிந்து போட்டு வேறுவழிதேடுவர். வெள்ளைப் பாடாணமும்

அரப்பொடியும் சேர்த்து உருக்கிச் செம்பில் இட்டுக் களங்காக்கி வெள்ளி-யில் நாலுக்கு ஒன்று சேர்த்து உருக்கித் தங்கமும் அதனொடு சேர்த்துக் கடையிற் கொண்டுபோய் விற்பர். அதனை வணிகன் வாங்கிப் பார்த்துக் கல்லில் உரைத்து இதுரசவாதப்பொன் வேண்டாமென்று சொல்ல ஏதேனும் சிலகாசு கேட்பர். போட்ட தங்கம் வீணாக வேறு ஒன்றுபார்ப்பர்.

கௌரியுடன் அயம் சேர்த்து உருக்கி ஈயமாக்கிச் செம்பிற்கொடுத்துக் களங்காக்கி வெள்ளியிற் கொடுத்துத் தங்கம் சேர்த்துக் கடையிற்காட்ட வணிகன் 'வாணாம்காண்'' என்பான்

செம்பெடுக்கத்தெரியாமல் இரும்பினைப்பிடித்துக் கொண்டு வாதி-மார்கள் வெள்ளெலும்பு கடித்த நாய் போல் அலைகுவர். அது தவறு.

செம்பினை முன்னே கொன்று அயத்தைச் சேரு : செத்த செம்பு ஓடாது. துடியாக இழுத்துக் கொள்ளும். இரும்பு அரப்பொடி செத்த செம்பினைப் பிடித்துக் கொள்ளும். இரும்பு சேராவிட்டால் செம்பு வலுக்-காமல் ஓடி விடும். ஓடிவிட்டால் வெள்ளி பழுக்காது கைபாகம் தவறாமல் ஊக்கத்துடன் செய்து கொள். அயச்செம்பினால் காதுவளையமும் மகர-குண்டலமும் மோதிரமும் செய்து அணிந்து கொள். காவியுடுத்துச் சிவ-யோகம் பார். இந்நூலைப்பார். ஆய்ந்து தேறு. பருந்து போல் விழி யாதே.

அயச் செம்புச் செந்தூரம்

வடிவாக அயச்செம்பு செந்தூ ரிக்க
வலுவாகச் சொல்லுகிறேன் உற்றுக் கேளு
துடியாக அயச்செம்பு பலமு மொன்று
துப்புரவாய்த் தங்கமது பலமு மொன்று
குடியாக இதுவிரண்டும் சேர்த்து ருக்கிக்
குணமாகத் தகடாகத் தட்டிக் கொண்டு
முடியாக நாறும்பூ இடையே சேரு
முனிவாக நாலுக்கு ஒன்று தானே. 84

தானேதான் ஒன்றுமே சிகரமிட்டுத்
தாட்டிகமாய் இரண்டுமொன்றாய்க் கல்வத் திட்டு
வானேதான் பழச்சாறு விட்ட ரைத்து
வடிவாக மேற்பூசி மார்க்கங் கேளு
நானேதான் கதிர்தனிலே காய வைத்து
நலமாக உப்புக்குள் தகட்டை யிட்டு
மானேதான் புடமிடவே கருத்துப் போகும்
மயமாகத் திரும்பவுமே பூசி டாயே. 85

பூசியே காயவைத்துப் புடமும் போடு
பொலிவாக இப்படியே நொறுங்கு மட்டும்
தாசியே புடமிடவே அஞ்சு தானும்
தாட்டிகமாய்க் களங்காகும் கரியுமாகும்
நாசியே களங்கெடுத்து வெள்ளி தன்னில்
நாடியே இருபதுக்கு ஒன்று தாக்கு
வாசியே மாத்ததுவும் பத்து மாகும்
மயமாக வுப்புக்கு ஏகா வாறே. 86

வாறுகேள் இதைவிற்றுச் செலவு செய்து
வடிவாக உண்டுடுத்திப் பின்பு கேளு
கூறுகேள் ஞானவழி யடுத்துக் கூடு
குணமாக வாதசித்தி குணமு மாகும்
தாறுகேள் சுழிமுனையை நாட்டம் பாரு
தாட்டிகமாய்வாசியோ கத்தைத் பாரு
மாறுகேள் சகலசித்துங் கடிசி லாகும்
மயமாக வாதசித்தி வடிவு மாமே 87

வடிவாகச் செந்தூரம் செய்யக் கேளு
வாதாடித் திரியாதே கைபா கத்தைக்
குடியாகச் சொல்லுகிறேன் உற்றுக் கேளு
குணமாகக் களங்குக்கு நாலத் தொன்று

துடியாகக் கெந்தியுடன் சூதம் சேர்த்துத்
துப்புரவாய்க் கல்வத்தில் இட்டுத் தானே
முடியாகப் புகைநீரை விட்டு ஆட்டி
முனிவாக வில்லைகட்டிக் காயப் போடே. 88

போடவே காய்ந்தபின்பு ஓட்டி விட்டுப்
பொலிவாகப் புடம்போட்டு எடுத்துப் பாரே
ஆடவே அத்தியுட பழமு மாகும்
அடைவாகக் கல்வத் திலிதனை யிட்டு
மூடவே கற்பூர வல்லிச் சாற்றால்
முனிவாகச் சாமம்நால் அரைத்துப் போடு
வாடவேகாய வைத்து ஓட்டி விட்டு
வடிவாகப் புடம்போட மார்க்கம் கேளே 89

கேளுமே பத்தெருவில் அடுக்கிப் போடு
கெடியாக எடுத்துப்பார் செந்தூ ரமாகும்
ஆளுமே செந்தூ ரம் நவலோகத்தில்
அணைத்திடவே நூற்றுக்கு ஒன்று தானும்
காளுமே நவலோகம் பழுத்துப் போகும்
கனிவான மாத்தென்ன பத்து மாகும்
தூளுமே உப்புக்குங் காவிக் குந்தான்
துடியாக இறங்கிவிடும் தொன்மை தானே 90

தானென்ற நூல்தனிலே நாதாக்கள் சொன்ன
தாட்டிகமாம் செம்பையவர் மறைத்துப் போட்டார்
தானென்ற வெறும் அயத்தைச் செம்பு செய்யக்
கருணையாய்ச் சொன்னார்கள் கபடமாக
வானென்ற கபடமெல்லாம் பிடிவா தத்தில்
வடிவாகச் சொல்லிவிட்டேன் வைத்துப் பாரு
நானென்ற சகலசித்தி இதிலே யாகும்
நாதாக்கள் சொன்னஇந்த நடத்தை தானே. 91

நடக்கையாம் செம்பைத்தான் முன்னே வைத்து
நலமாக வெள்ளிதனில் கொடுத்த பின்பு
வடக்கையாம் பொன்னாக்கு வித்து உண்ண
வடிவான பின்புதான் உப்பைத் தானும்
தொடக்கையாம் வைத்துமே பின்பு கேளு
துடியான சவுக்காரச் சுண்ணம் பண்ணு
ஒடக்கையாய் எல்லாமும் சித்தி யாகும்
ஓதரிய பிடிவாதிக் கோதி னோமே. 92

ஓதினோம் பிடிவாதி தனக்குத் தானும்
ஒத்துமே பார்க்கையிலே தவறி னாக்கால்
நாதியே மூணுதரம் சோதிச்சேறு
நலமாக ஒருதரம் தான் வந்து கூடும்
பாதிமதிச் சடையரவர் சொன்ன நீதி
பதிவாகக் கைபாகம் தப்பிச் சானால்
நீதியாய் ஒன்றுமில்லை எல்லாம் சித்தி
நிலையாகப் பாகமாய்ச் செய்தி டாயே 93

செய்திடவே பலனாகும் செயமும் மெத்த
செய்யாதே போனாலோ செயமு மில்லை
வைதிடவே வாதமதை வங்கி சங்கள்
வடிவாகப் பாழாகும் வண்மை பாரு
கைதிடவே பலனறியச் செம்பு சொன்னேன்
கனிவாகக் கனிந்துமே செய்து கொள்ளு
நைதிடவே எல்லாமும் சித்தியாகும்
வடிவாக நூல் பாரு வழக்க மாமே. 94

வழக்கமாய் அயச்செம்பு கிடையா விட்டால்
வடிவான ஞானமில்லை யோக மில்லை
தழக்கமாய் வஸ்துவில்லை தன்மை யில்லை
தருதுரும்ப னாயலைவார் தர்க்க வாதி
பழக்கமாய்ப் பேசாதே செம்பைப் பாரு
பரதவித்துத் திரியாதே பாரு வாதம்
குழக்கமாய்க் குடிகேடு நினைக்க வேண்டாம்
கொள்ளையொடு கொள்ளையிது கூறினோமே. 95

கூறினோம் குருடர்தான் வாதி மார்கள்
குணமாக மூலிகையி லிருக்கு தென்பார்
வாறியே வடிவாகச் சொல்லு வார்பார்
வடிவாக நூலைத்தான் பார்த்தே னென்பார்
மாறியே ஞானவழி வந்து தென்பார்
மயமான காவிவே டங்கள் பூண்டு
சாறியே தொழிலறியாச் சவங்கல் வாதி
சாட்சியாய்ச் சொல்லுவார் வாதி யோரே. 96

வாதிதானயச் செம்பு கண்டே னென்பார்
வடிவாக ரிஷிகளைப் போல் பேசு வார்கள்
சாதியார் பலருடனே பேசிப் பேசிச்
சாரித்து அலைவார்கள் வாதி மார்கள்

நாதியாய்த் தேசத்தில் அலைந்து சுற்றி
நலமாக நூலறியா வாதி சோதி
மாதியாய்ச் சொல்லிடுவார் மார்க்க மாக
மயமான நெஞ்சறிவை மகிழ்ந்து பாரே. 97

பாருமே குருட்டுவழி வாதி மார்கள்
பதிவான கோடானு கோடியாகும்
நாருமே அயச்செம்பு கோடா கோடி
நலமான களங்குவகை கோடா கோடி
வாருமே செந்தூரம் கோடா கோடி
வடிவான பற்பவகை கோடா கோடி
சாருமே கட்டினமும் கோடா கோடி
சாரித்து எல்லாமும் பார்த்திடாயே. 98

பார்த்திடவே சகலசித்தும் உடனே யாகும்
பரிவான கைபாகங் கண்ட பேர்கள்
ஏத்திடவே குளிகைமுதல் கண்ட பேர்கள்
இதமான நூல்வகையைக் கண்ட பேர்கள்
நாத்திடவே கைபாகங் கண்ட வாதி
நலமாக யோகசித்து குளிகைச் சித்து
வாத்திடவே எல்லாமும் சித்தே யாகும்
வடிவான பொருளறிந்த வடிவு மாமே. 99

ஆமேதான் செம்புபழுக்க அறியா வாதி
ஆதிசிவன் சோதிவித்தை பொய்யே என்பான்
பாமேதான் சாத்திரங்கள் பொய்யே என்பான்
பதிபாச வினையறியப் பலனைக் காண
நாமேதான் சொல்லிவிட்டேன் பிடிவா தத்தில்
நலமாக இந்நூலை யறிந்து தேறு
காமேதான் காதலித்துப் பொருளைக் காணக்
கனிவாக எல்லாமும் சித்தி யாமே. 100

சித்திபெற்ற பெரியோர்கள் நூலைப் பார்ப் பார்
சிறப்பான கைபாகந் தன்னைப் பார்ப்பார்
முத்தியே மூவுலகும் பார்த்துத் தேறி
முனையான காதலரைக் கண்டு நாடி
புத்தியாய் அயச்செம்பைச் செய்து மெல்ல
பூதலமெல் லாம்புகழ் பொருந்துவார்பார்
நத்தியே வாதவித்தை யவர்க்கு வந்து
நலமாகக் கூடுமது நன்மையாமே. 101

ஆமேதான் நாதாக்கள் தொட்ட தெல்லாம்
அன்பாகச் சித்தியது ஆகும் பாரு
வாமேதான் வடிவுடைய தபோத னர்க்கு
வடிவாகச் சகலசித்தி வடிவு மாகும்
நாமேதான் செகவாதி வங்கந் தன்னை
நாடியே தொட்டக்கால் செம்பேயாகும்
பாமேதான் பலநூலும் பார்த்து ணர்ந்து
பதிவாக வாதிதான் பரிசு தானே. 102

தானேதான் சாத்திரத்தில் நாதாக்கள் சொன்னார்
தாட்டிகமாய்ச் செம்பாலே அயத்தைக்கொன்று
வானென்ற செம்பெடுக்கச் சொன்னார் சித்தர்
வடிவாக வுலகத்தில் வாதி மார்கள்
நானேதான் வெறுஅயமும் செம்பாய்ப் போனால்
நலமாகும் வாதமிது நன்மை யாகும்
கானேதான் வாதிதான் புலம்பி ஏங்கிக்
கனிவாகச் சுட்டுமே கெட்டார் தானே. 103

84 முதல் 103 அயச் செம்புச் செந்தூரம்

அயச்செம்பும் தங்கமும் வகைக்கு ஒரு பலம் சேர்த்து உருக்கித் தகடாகத் தட்டி, நாலுக்கு ஒன்று கந்தகமும் சீனமும் சேர்த்துப் பழச்சாறு விட்டரைத்துத் தகட்டிற் பூசிக்காயவைத்து உப்புக்குள் வைத்து புடமிடக் கருத்துப் போகும். இங்ஙனம் நொறுங்கு மட்டும் ஐந்து முறை போட அது களங்காகும். கரித்தூளாகவும் இருக்கும். வெள்ளியில் இருபதுக்கு ஒன்று சேர்க்கப்பத்துமாற்றாகும். கைபாகம் கேள். களங்கிற்கு நாலில் ஒன்று கெந்தகமும் சூதமும் சேர்த்துப் புகைநீர் விட்டரைத்து வி.த.கா. (வில்லைதட்டிக்காய வைத்து) சீ.ம.செ (சீலை மண்செய்து) புடமிட்டுப்பார். அத்திப்பழம் போலாகும். பின்னர் கற்பூரவல்லிச் சாறு விட்டரைத்துப் பத்-தெருவில் அடுக்கிப்போடு செந்தூரமாகும். ஒன்பது உலோகத்திலும் நூற்றுக்கு ஒன்றிடு. பத்துமாற்று. நாதாக்கள் செம்பை மறைத்தார். கபடம் நீக்கிப் பிடிவாதத்தில் தெளிவாகச் சொன்னேன். இதனைச் செய்து கொண்டு பின் உப்புக்கட்டு. சவுக்காரச் சுண்ணம் செய். ஒருமுறை தவறி-னால் மூன்று முறை ஆய்ந்து செய். சிவன் சொன்ன நெறி. கைபாகந்-தப்பினால் பயன் இல்லை. மேலும் அறிவுரை செய்யுளிற்காண்க.

இந்நூலில் 363 முதல் கூறும் அயச்செம்பும் பின்னர்க்கூறும் சுருக்க அயச் செம்பும் இவர் வாதாங்க தீச்சையிற் கூறும் அயச்செம்பும் காண்க.

வங்கச் சுண்ணம்

கெட்டுமே வெகுபணத்தைச் செலவு செய்து
கேள்வியில்லா ரசவாதம் பார்த்தே னென்பார்
முட்டுமே யொன்றுமில்லை பொய்யோ வென்பார்
முடிவான சாத்திரத்தில் பலனோ வில்லை
பிட்டுமே புடமாறு பருவந் தன்னில்
பேயாநீ புடம்பெரிசாய்ப் போட்டாய்என்பார்
கட்டுமே யொன்றுமில்லை காண வேண்டாம்
கருணைபுரி ரசவாதி காண லாமே. 104

காணவே யகத்தியரும் சுருக்கம் முந்நூறு
கைமுறையாய் நீற்றினத்தைக் கருதிச் சொன்னார்.
தோணவே யுலகத்தில் வாதி மார்கள்
துரிசதுவை நீற்றுவோ மென்று சொல்லி
வாணவே வங்கத்தி னிடையே சூதம்
வடிவாகச் சேர்த்துமே புட்டாய்ப் பண்ணி
ஊணவே வெடியுப்பை இடையே சேர்த்து
உறுதியாய் வாய் நீரா லரைப்பார் தானே. 105

அரைத்துமே புடம் போட்டு எடுத்துப் பார்த்து
அடைவாகக் காரமில்லை எறிந்து செல்வார்
நிரைத்துமே கைபாக மில்லை யென்று
நிலையாகச் சொல்லுவா ரனந்த வாதி
துரைத்துமே யகத்தியரும் கைபாகத்தைத்
துடியாகச் சொல்லவில்லை சொன்னால் தானும்
நரைத்துமே உலகமெல்லாம் துரிசுச் சுண்ணம்
நலமாக ஆகுமே மறைத்தார் தானே. 106

தானென்ற மறைத்ததொரு துரிசுச் சுண்ணம்
தப்பாமல் சொல்லுகின்றேன் அப்பா கேளு
வானென்ற வெள்ளீயம் பலமும் ஒன்று
வடிவாகக் கரண்டியிலிட் டுருக்கிக் கொண்டு
தேனென்ற சூதத்தை இடையே தொந்தி
திடமாகப் பிட்டாகும் பிட்டி னோடே
பானென்ற வெடியுப்பு அஞ்சாங் காய்ச்சல்
பதிவாக இடைசேறு கல்வத் திட்டே 107

இட்டுமே எலுமிச்சம் பழச்சாறு விட்டுச்
சேர்த்தரைக்க நாற்சாமம் அரைத்து மைபோல்
நட்டுமே வில்லை தட்டிக் காயப் போடு
நலமாகக் காய்ந்தபின்பு நாட்டம் கேளு

விட்டுமே ஓட்டிலிட்டுப் புடத்தைப் போடு
வாதியவர் தானெடுக்கச் செத்துப் போகும்
முட்டுமே முந்நூற்றில் கைபா கத்தை
. முடிவாக மறந்ததனை மொழிகு வேனே 108

மொழிகுவேன் வங்கமென்ற பற்பந் தன்னை
மோகித்து எடுத்துமே கல்வத் திட்டு
நழிகுமே பாணிதனை நிறைய விட்டு
நலமாக இருசாமம் ஆட்டி மைபோல்
கழிகுமே கொதியிட்டு இறுத்துப் பாரு
கனிவாக வெடியுப்புக் கரைந்து போகும்
நழிகுமே அடியில் நின்ற வங்கந் தன்னை
நலமாக எடுத்துநீ நாட்டக் கேளு. 109

நாட்டவே கடுஞ்சுண்ண மாக்கக் கேளு
நலமாக அண்டோடு பலமும் பத்து
காட்டவே இதுசுத்தி சொல்லக் கேளு
கனிவாக உவர்மண்ணும் சுண்ணம் நேரே
ஊட்டவே பாணிபடி ரெட்டி விட்டு
உறுதியாய்க் கரைத்து நீ தெளிவை வாங்கி
மூட்டவே யண்டோட்டுக் குள்ளே யிடு
முனிவாகக் குழற எரி முன்பு தானே. 110

தானேதான் எரித்திட்டு ஓட்டை வாங்கு
தப்பாமல் ஓட்டிலே யிருந்த எண்ணெய்
வானேதான் கக்கியே ஓடிப் போகும்
வடிவாக அலம்பியே கல்வத்திட்டு
நானேதான் பழச்சாறு விட்ட ரைத்து
நலமாக வில்லைகட்டிக் கதிரில் வைத்து
ஊனேதான் பெரியபுடம் போட்டுத் தீரு
உறுதியாய்ச் சுண்ணமாய் ஆகும் பாரே. 111

பாருமே அண்டமது கடுமைச் சுண்ணம் பதிவாகச் சவுக்காரச் சுண்ணம் போலாம்
நாருமே யிந்த எடை வங்க பற்பம் நலமாகச் சேர்த்துமே பழச்சாறு விட்டு
வாருமேயிருசாம மரைத்து வில்லை வடிவாகப் பண்ணியே காய வைத்துத்
தாருமே கரியிலிட்டூதிப் போடு தாட்டிகமாய் வங்கமது சுண்ணமாமே. 112

ஆமேதான் வங்கமது கடுமைச் சுண்ணம்
அடைவாக வீரமது நாலத் தொன்று
காமேதான் சேர்த்துநீ வாய்நீர் விட்டுச்
சரியாக வில்லைகட்டிக் காயப் போடு
பாமேதான் அஞ்சுசுண்ணத் துள்ளே யிட்டுப்
பதிவாகக் காடையென்ற புடத்தைப் போடு
நாமேதான் வங்கமது நீறு மாகும்
வடிவான சுண்ணாம்பாம் வண்மை யானே. 113

வண்மையாம் வங்கமது நீறிற் றானால்
வடிவான செம்பதுவும் சுண்ண மாகும்
உண்மையாம் செம்பாலே கோடி வித்தை
உறுதியாய்ச் சூதமது கட்டிப் போகும்
தண்மையாம் கெவுனமது குளிகை யாகும்
தாட்டிகமாய்க் காயசித்தி யுடனே யாகும்
பெண்மையாய்ச் சரக்கெல்லாம் சுண்ணமாகும்
பேதையே வாதிமுன்னே செய்தி டாயே. 114

104 முதல் 114 வங்கச்சுண்ணம்

உரை :- மிகவும் செலவு செய்து கேள்வியில்லார் ரசவாதம் பொய்யே என்பார். அகத்தியர் சுருக்கம் முந்நூற்றில் கைமுறையாய் நீற்றினம் சொன்னார் வாதியர் துரிசு நீற்ற முயன்று வங்கத்தில் சூதம் சேர்த்து (வங்கம்-ஈபம்-சூதம்-ரசம்)ப்புட்டாக்கி வெடியுப்பைச் சேர்த்துப் புடம் போட்டுக்காரமில்லை என்று கூறி எடுத்தெறிவார். அகத்தியர் கைபாகம் சொல்லவில்லை.

மறைத்தமுறையைக் கூறுகின்றேன். ஒருபலம் வெள்ளீயம் சுரண்டி-யிலிட்டுருக்கி அதனொடை இரசம் விட்டுத் தொந்தித்துப் புட்டாக்கி 5-ஆம் காய்ச்சல் வெடியுப்பை அதனொடை சேர்த்துப் பழச்சாறு விட்டாட்டி நாலு சாமம் அரைத்தபின்பு வி. த. கா. சீ. ம. செ. புடமிடுக. அந்த வங்கபற்-பத்தைக் கல்வத்திலிட்டுத் தண்ணீர் விட்டரைத்துக் கொதிக்கவைத்து இறுத்துப் பார்க்க வெடியுப்புக்கரைந்து போகும். அடியில் நிற்கும் வங்கத்தை எடுத்து வைத்துக் கொண்டு பாடலிற் கூறியவாறு அண்டச்சுண்ணம் செய்து மேற்படி வங்கபற்பத்துடன் சேர்த்துப் பழச்சாறுவிட்டரைத்து வி,த.கா.சீ ம.செ. கரியிலிட்டு ஊதுக. வங்கம் சுண்ணமாகும். அத்துடன் நாலிலொருபங்கு வீரம் சேர்த்து வாய் நீராலரைத்து வி. த. கா. அஞ்சு சுண்ணக்குகைக்களிட்டுக் காடைப்புடம் போடுக. வங்கம் நீறிச்சுண்ணாம்-பாகும்.

இந்நூல் 166 முதல் 173 வரை நோக்கு.

வங்கம் நீறிற்றானால் செம்பு சுண்ணமாகும். அதனால் வித்தை கோடி சூதம் உறுதியாகக்கட்டும். பறவைக் குளிகையாகும். காயசித்தியாகும். வெண்மையாய்ச்சரக்கெல்லாம் சுண்ணமாகும். வாய்நீர்-வாய்வு நீர். அஃதாவது புகைநீர். வாலையின்வாய்வழிவடிகின்றதனால் வாய்நீர் என்றும் கூறுவர்.

துரிசுச்சுண்ணம்

முன்னேதான் செய்திடவே வங்கச் சுண்ணம்
முடிவாகப் பலமொன்று கல்வத் திட்டுக்
தன்னேதான் வாய் நீரால் துவள வாட்டித்
தாட்டிகமாய்த் துரிசு என்ற கட்டிமேலே
நன்னேதான் கட்டியே காயவைத்து
நலமாகக் காய்ந்தபின்பு நடத்தை கேளு
வன்னேதான் மேற்கவசம் சுண்ணங்கட்டி
வடிவாகப் பத்தெருவிற் புடத்தைப் போடே 115

போடவே தீயாற்றி யெடுத்துப் பாரு
போக்கோடே துரிசியது சுண்ணாம்பாகும்
வாடவே இச்சுண்ணம் கால னொக்கும்
வடிவாக மலைகளெல்லாம் நீறிப் போகும்
கூடவே உபரசங்கள் நீறு மாகும்
குணமான தங்கமுதல் நீறிப் போகும்
தேடவே எமனொக்கும் இந்தச் சுண்ணம்
திடாகரித்து இதைமுன்னே வைத்திடாயே. 116

வைத்திடவே துரிசுதனை யெடுத்து வாதி
வளமாகச் சாறுவரா மூலி தன்னில்
கைத்திட்டுப் பணவெடைதான் இட்டுத்தானே
கனிவாகப் பிழிந்திடவே நீர்க ளாகும்
மைத்திட்டு நீராலே கோடி வித்தை
வடிவாகக் கட்டினமும் உருக்கினமு மாகும்
நைத்திட்டுச் சகலமுந்தான் சுண்ண மாகும்
நலமாகச் சுண்ணத்தில் வேதை கேளே. 117

வேதைதான் அநேகந்தான் கோடா கோடி
வித்தையிது தீற்றினிங்கள் கோடா கோடி
பாதைதான் பழுப்பினங்கள் கோடா கோடி
பதிவாகத் தங்கமது கோடி கோடி

வாதைதான் அநேகந்தான் கோடா கோடி
வைத்தியமும் பண்டிதமும் கோடா கோடி
நாதைதான் பழுப்பினமும் கொடுப்பினமும் கோடி
நலமாகத் துரிசினுட சுண்ணந்தானே. 118

ஆட்டான துரிசுதனைச் சுண்ணம் பண்ணி
அடைவாக வாதத்தைச் செய்யச் சொன்னேன்
மூட்டான வாதிமார் இதனைவிட்டு
முனிவாக மூலிகையி லிருக்கு தென்பார்
நாட்டான காட்டிலே அலைந்து சுற்றி
நலமாக மூலிகையைப் பிடுங்கி வந்து
தூட்டான சுருக்கிடவே கரியாய்ப் போகத்
துடியாக எடுத்துமே எறிவார் தானே. 119

115 முதல் 119 துரிசுச் சுண்ணம்

முன்செய்த வங்கச் சுண்ணம் ஒருபலம் எடுத்துக் கல்வத்தில் இட்டுப் புகைநீரால் (வாய்வுநீர்-வாய்நீர்) துவள ஆட்டித்துரிசுக் கட்டியின்மேல் பூசிக் காய்ந்தபின் சுண்ணாம்புக் கவசம் செய்துபத்தெருவிற்புடமிட அது நீறிச் சுண்ணாம்பாகும் இச் சுண்ணம் காலனொக்கும். தங்கம் உபரசம் ஆகிய எல்லாமும் நீறும். சாறுவராத தழைகளில் பணவெடைதுரிசுச் சுண்ணமிட்டுப் பிழியச் சாறு வரும். அதனால் கோடி வித்தை. கட்டினமும் உருக்கினமும் ஆகும். எல்லாவகையும் சுண்ணமாகும். அதனால் வேதை கோடி. அதனால் வேதையும் வித்தையும் பழுப்பினமும் தங்கமும் வைத்தியமும் பண்டிதமும் கோடா கோடியாகும். அத்துரிசு செய்து வாதம் செய்யச் சொன்னேன். மூலிகையைக் கொண்டு வந்து சுருக்கிட்டுக் கரியாக்கி எறிபோருமுளர்.

தாளகச் சுண்ணம்

தானென்ற துரிசியது சுண்ணம் ஒன்று
தாட்டிகமாய்க் கல்வத்திலிட்டுத் தானும்
வானென்ற பழச்சாறு விட்ட ரைத்து
வடிவாகத் தாளகத்தின் மேலே கட்டு
கானென்ற கைபடா கட்டித் தீரு
கனிவாகக் கையிலே பட்டு தானால்
நானென்ற கையதுவும் பொருமி நீறும்
நலமாகத் தாளகத்தைக் காயப்போடே 120

போடவே காய்ந்த பின்பு சொல்லக் கேளு
போலிவாகப் பத்தெருவிற்புடத்தைப்போடு
நாடவே தாளகந்தான் நீறுமாகும்
நமனுண்ட தாளகந்தான் நீறு தன்னை

முத்தியாம் முனைசுழியில் அணுவாய்க் கண்டால்
முனையான சொரூபமது வந்து கூடும்
புத்தியால் இதைநம்பிப் பாரு பாரு
புதுசாக யோகமது பொருந்துமாகும்
சித்திபெறக் கைவல்ய மாக வேதான்
சீராகச் சேர்த்து நீ குணமும் கண்டு
முத்திபெறச் சிவஞான மொழியைப் பாரு
மூதண்ட கூடமுத லாகும் பாரே. 128

125 முதல் 128. கெந்திச்சுண்ணம்

பத்துப்பலக் கெந்தியின்மேல் துருசின் சுண்ணம் முன்போல் அரைத்துப் பூசிக் காய வைத்துப்பத்தெருவில் புடமிடுக. சுண்ணமாகும். ஒன்பது வகை உலோகத்திலும் நூற்றுக்கு ஒன்று இடுக. பதினாறு மாற்றாகும். எடைக்கெடை செம்பு சேர்த்துருக்கப் பத்து மாற்று. உப்பும் காவியும் அரைத்துப் பூசி உருக்கினாலும் நிறம் மாறாது. இதனை விற்றுச் செலவு செய்து உண்டு உடுத்தி ஞானவழியடுத்துக் கூடு. சமுசார வலையிற் சிக்கியலையற்க. சுழிமுனையில் அணுவடிவம் கண்டால் சொரூபசித்தி வந்து சேரும். சிவஞான மொழியைப் பார்.

இலிங்கச் சுண்ணம்

ஆகுமே இலிங்கமது பலமும் ஒன்று
அடைவான துரிசினுட சுண்ணம் ஒன்று
வாகுமே கல்வத்திலிட்ட ரைத்து
வடிவாக இலிங்கத்தின் மேலே கட்டித்
தாகுமே கதிர்முன்னே காயப் போடு
தப்பாமல் பத்தெருவிற் புடத்தைப் போடு
வேகுமே இலிங்கமது கட்டியாக
விதமாக நீறிவிடும் விதமு மாமே. 129

ஆமேதான் இலிங்கமது கட்டி யாக
அடைவாக நீறினால் வேதை கேளு
நாமேதான் வெள்ளிதனில் நூற்றுக் கொன்று
நலமாக இட்டிடவே மாற்றுக் கேளு
பாமேதான் பதினாறு மாற்று மாகும்
பதிவாக இம்மாற்றைக் குறைக்கக் கேளு
சாமேதான் செம்பதனை இடையே சேர்த்துச்
சரியாக உருக்கிடவே தணிந்துபோமே 130

தணிந்துபோம் மாற்றான பத்து மாகும்
    தாட்டிகமாய் இதை விற்றுச் சீவனத்தைக்
கணிந்துமே செய்திடவே பின்பு தானும்
    கனிவாக ஞானவழி யடுக்கலாமே
வணிந்துமே மதிதனிலே ஏறி யாடு
    வடிவாகும் பொருளாகும் வண்மைமெத்த
பணிந்துமே வடமொழியைப் பார்த்து வாதம்
    பதிவாகச் சோதிச்சுச் சொன்னேன் பாரே. 131

பாருமே உலகோர்க்கு வாதம் மேவில்
    பதிவாகத் தருதுரும்பன் பெண்ணைச் சேர்த்துக்
காருமே காயத்தைக் கெடுத்து நல்லாய்க்
    கனிவாகத் தண்ணீரில் சுழலைப் போல
வாருமே சுழன்றலைந்து மாளுவார் பார்
    வடிவாகப் பரதவித்துத் திரிவார் வாதி
தாருமே ஒன்றோடு ஒன்று சேர்த்துத்
    தப்பித்து ஒன்று சொல்வார் வாதியோரே. 132

வாதியாந் துரிசதனை வாங்கி வாங்கி
    வடிவாக மூலிகையைப் பிடுங்கி வந்து
சோதிபெறத் துருசதனில் சுருக்குப் போட்டுச்
    சுத்தமாய்த் துருசதுவுங் கரைந்து போக
நீதியாய்ச் சாத்திரத்தி லொன்று மில்லை
    நிலையாகச் சூத்திரத்தைப் பார்ப்போமென்று
கோதியே மனதுதான் ஆங்கா ரத்தால்
    குணமாகச் சொல்லியே புலம்பு வாரே. 133

புலம்புவார் புவியிலுள்ளோர் ....
    புகலரிய சாத்திரநூல் வந்ததென்று
அலம்புவார் ஆதியந்தம் கண்டேனென்று
    அடவாகச் சொல்லுவார் அவர்கள் மெய்க்கத்
தலம்புகுந்த சீடர்களைப் போலே தானும்
    தாட்டிகமாய்ச் சொல்லிடுவார் தருக்க வாதி
கலம்புகுந்து காதலரைப்போலே சொல்லித்
    தாட்டிகமாய் அலைவார்கள் தர்க்கமாகும். 134

129 – 134. இலிங்கச் சுண்ணம்

ரு பல இலிங்கக் கட்டியின் மேல் ஒருபலம் துருசுச் சுண்ணம் முன்போ அரைத்துக் கைபடாமல் பூசிக் காயவைத்துப் பத்தெருவில் புடமிடுச் சுண்ணமாகும். வெள்ளியில் நூற்றுக்கு ஒன்று இட பதினாறு

மாற்றாகும் செம்பு ஒத்த அளவு சேர்த்துருக்கிப் பத்து மாற்றாக்குக. தவ நெறிசார்க. பெண்ணைச் சேர்ந்து உடம்பைக் கெடுத்துத் தண்ணீரின் சுழற்சி போல சுழன்று அலைந்து திரிவார் சிலர். மற்றவை அறிவுரை.

வெள்ளைப் பாஷாணச் சுண்ணம்

ஆமேதான் துரிசினுட சுண்ணந் தானும்
அடைவாகப் பலமொன்று நிறுத்துக் கல்வம்
பாமேதான் இட்டுமே வாயு நீரால்
பதிவாக அரைத்து நீ பகரக் கேளு
நாமேதான் வெள்ளையைத்தான் சுத்தி செய்து
வடிவாக வெள்ளைமேல் கவசம் கட்டித்
தாமேதான் காயவைத்துப் பின்பு கேளு
தாட்டிகமாய் அதின்மேலே கவசம் கேளே. 135

கவசமாய்ச் சுண்ணாம்புக் கவசம் கட்டிக்
கனிவாகப் பத்தெருவிற் புடத்தைப் போடு
நவசமாய் வெள்ளையென்ற பாசாணந்தான்
நலமாக நீறிவிடும் நல்லாய்த்தானும்
உவசமாய் வெள்ளியம் நூற்றுக் கொன்று
உறுதியாய் இட்டிடவே வெள்ளியந்தான்
பவசமாய் நீர்வாங்கும் வெள்ளியாகும்
பத்துவய தாகியே பரிவு தானே 136

பரிவான வெள்ளியது சுத்த வெள்ளி
பதிவாக அதைத்தானும் விற்று நீயும்
குரியாகச் சீவனங்க ளிதிலே பண்ணிக்
குணமாக ஞானயோ கத்தைப் பாரு
மூரியாக எல்லாமும் சித்தி யாகும்
மூவுலகும் எரித்ததொரு சிவனே சொன்னார்
பிரிவாகச் செம்புதனில் நூற்றுக் கொன்று
பிசகாமற் கொடுத்திடவே வெள்ளியாமே 137

வெள்ளியாம் செம்புதான் வெள்ளி யானால்
விதமாக விக்கிரகம் பண்ணி வைத்துத்
துள்ளியே பூசைசெய்து தொந்தம் பாரு
துடியான சகலசித் தாகும் பாரு
கண்ணியே கனிவாக வெள்ளி வித்தை
கனிவாக உலகத்தில் சொன்னா ரில்லை
நண்ணியே வாதந்தான் பிடிவாதத்தில்
நலமாகச் சொல்லிவிட்டேன் நயந்து பாரே 138

பாருமே வெள்ளைக்கு வெள்ளி வித்தை
பதிவாக விந்நாலிற் சொல்லி விட்டேன்
காருமே யிதையறிந்த வாதி மார்கள்
கனிவாக வெள்ளைப்பா ஷாணந் தன்னைச்
சாருமே நீற்றுவகை நன்றாய்ப் பாரு
சரியாகப் பண்டிதமும் நிலைக்கும் காரு
ஊருமே வெள்ளியது நிசமு மாகும்
உண்மையிது சத்தியமாம் உத்துப் பாரே. 139

உத்துமே பார்த்தாலே சகல சித்தி
உறுதியாய் வாதசித்தி வசிய சித்தி
நத்துமே காரீயம் கொடுத்து ஊத
நலமாக வோடாது ஒளித்திடாது
பத்துமே தும்பைமலர் போலே யாகும்
பதிவாகச் சித்திதரும் பண்பு மெத்த
கத்துமே காரணமாய் உலகம் பாரு
கண்டித்துப் பார்த்தவுடன் சித்தி யாமே. 140

135-140. வெள்ளைப் பாடாணச் சுண்ணம்

வெள்ளைப் பாடாணத்தைச் சுத்தி செய்து அதன்மேல் வாயு நீர் விட்டரைத்த துருசுச் சுண்ணம் பூசிக் காயவைத்து அதன் மேல் சுண்ணக்கவசம் செய்து பத்தெருவிற் புடமிடச் சுண்ணமாகும். வெள்ளியம் உருகுமுகத்தில் நூற்றுக்கு ஒன்றிட வெள்ளி பத்து மாற்றாகும்.

தாமிரச்சுண்ணம் (தாமிர சுத்தி)

சித்தியா மின்னமொன்று சொல்லக் கேளு
செயமான தாம்பூர வேதை மார்க்கம்
பத்தியாய்த் துருசினுட சுண்ணந் தன்னைப்
பதிவாகத் துத்தியிலை தன்னி லிட்டு
நத்தியே தாம்பூரம் துட்டாய் வாங்கி
நலமாகச் சட்டிதனில் துட்டை யிட்டு
முத்தியே யடுப்பதனி லேத்தித் தீயை
முனிவாக இட்டுமே சொல்லக் கேளே. 141

சொல்லவே துத்தியிலை கசக்கி நீயும்
சுருக்காக இலைபோட்டு வறுத்துப் பாரு
வல்லவே முச்சாமம் வறுத்திட்டாக்கால்
வடிவாகத் தம்பூரம் சிவந்து காணும்

நல்லவே யின்னமொரு சாமம் தானும்
நலமாக வறுக்கையிலே தங்க மாகும்
கொல்லவே பத்தென்ன மாத்துக் காணும்
குலமாக இதைவிற்றுக் கூடு கூட்டே. 142

கூடவே யிதைவிற்றுச் செலவு செய்து
குணமாக வுண்டுடுத்திப் பின்பு தானும்
ஆடவே சிவயோக வழியி லேறு
அடவாகச் சுழிமுனையி லடவு பாரு
காடவே வழியோடே சுழியி லேறு
கனிவாக யோகசித்துக் கடிசி லாகும்
வாடவே தாம்பூரம் பழுத்த போது
வடிவாக எல்லாமுஞ் சித்தி யாமே. 143

(சித்திபெற)த் தாம்பூரம் சுண்ண மானால்
சிறப்பாகக் காயசித்து கடிசிலாகும்
முத்திபெற ஞானவழி யுடனே யாகும்
மூவுலகும் காணலா மனேக வித்தை
நத்தியே வழியோடே கைபாகத்தை
நலமாகப் பார்த்திடவே சித்தி சித்தி
நித்தியமாய் வாழ்கின்ற வரையி லேறு
நிலையாகக் கைகண்ட விதமு மாமே 144

ஆமேதான் கைகண்ட துரிசுச் சுண்ணம்
அடைவாக முன்னேதான் கைபாகத்தை
நாமேதான் வைத்துமே பின்பு கேளு
நலமாக எப்பொருளும் நன்மை யாகும்
பாமேதான் விதமெல்லாங் கைபா கத்தால்
பரிவாக யோகமுதல் பரிந்து காணும்
போமேதான் பொல்லாத வாதி மார்கள்
புவிதனிலே வெகுபேரு புலம்புவார்கள். 145

புலம்பாமல் துரிசினுட சுண்ணந் தொட்டுப்
போக்கோடே மூலிகையைப் பிழிந்து நீயும்
வலம்பியே சரக்கெல்லாம் கட்டி யாடு
வடிவாகச் சகலசித்தும் ஆடலாகும்
உலம்பியே உருகாதே உத்துப் பாரு
ஓகோ கோ காயசித்தி உடனேயாகும்
வலம்பியே வாதிமகன் வைத்திய னாவான்
வடிவாகச் சகலசித்தும் ஆடலாமே. 146

141-146 தாமிரச்சுண்ணம் (தாமிர சுத்தி)

செம்புத்துட்டைச்சட்டியிலிட்டு அடுப்பேற்றித் துத்தியிலையில் துருசுச் சுண்ணமிட்டுக் கசக்கி எடுத்துத் துட்டின் மேற்போட்டு மூன்று யாமம் வறுக்கச் சிவக்கும். பின்னுமொருயாமம் வறுக்கப் பத்து மாற்றுத் தங்கமாகும். மேலும் மற்ற உலோகங்களைச் சுண்ணமாக்குவது போல் சுண்ணமாக்கக் காய சித்தியாகும். கைபாகம் தவறாது செய்க. பாகமாய் யோக நெறி பரிந்து காண்க.

தங்கச்சுண்ணம்

ஆடவே தங்கமது சுண்ணம் பண்ண
அறைகிறேன் கைபாகம் அருமை கேளு
வாடவே துரிசினுட சுண்ணந் தன்னை
வடிவாக வாய்நீரால் குழைத்துப் பின்பு
நாடவே தங்கமென்ற தகட்டில் வைத்து
நலமாக மேலேதான் பூசிப் பூசி
ஊடவே காயவைத்துப் புடத்தைப் போடு
உத்துமே தங்கமது நீறு மாமே. 147

ஆமேதான் தங்கமது நீறிற் றானால்
அடவான நவலோக மேம மாகும்
காமேதான் செம்புதனில் நூற்றுக் கொன்று
கனிவாக இட்டிடவே கனிந்து பாரு
நாமேதான் பத்தரைதான் ஆணிக் கொக்கும்
நலமாக வுப்புக்குங் காவிக் கேகா
சாமேதான் இதைவிற்று உண்டு தேறு
சரியாக ஞானவழி யடுத்த வாறே. 148

வாறுகேள் சுழிமுனையி லேறி யாடு
வடிவாகப் பூரணத்தை மருவி நோக்கு
தாறுகேள் தமர்வாச லுள்ளே சொக்கு
தாட்டிகமாய்க் காய சித்தி யுடனே யாகும்
பாறு கேள் காயமது சித்தி யானால்
பதிவாக நரைதிரைக ளற்றுப் போகும்
கூறு கேள் தமர்வாச லுள்ளே சொக்கு
குணமாக சூட்சமது துயந்து பாரே 149

147-149 தங்கச்சுண்ணம்

துரிசுச் சுண்ணத்தை புகைநீரால் (வாய்நீர்) குழைத்துத் தங்கத் தகட்டிற் பூசிப் பூசி யுலர்த்திக்காய வைத்துப் புடமிடத்தங்கம் நீறும்.

ஒன்பது வகை உலோகமும் தங்கமாகும். செம்பில் நூற்றுக்கு ஒன்றிடப் பத்தரைமாற்று உரையாணிக்கு ஒத்து வரும். அதனை விற்றுச் செலவு செய்து பூரணத்தை மருவிக் காண்க. தமர் வாசல் உள்ளே சொக்கு. காய சித்தியாகும்.

அயச்சுண்ணம்

பாருநீ அயமதுவும் பலமு நாலு பதிவான துரிசினுட
சுண்ணம் நாலு
காருமே அரைத்து நீ கவசங் கட்டிக் கனிவாகக்
கதிரிலிடு காய வைத்து
நாருமே பெரியபுடம் போட்டெடுக்க நலமாக
இரும்பதுவு நீறிப் போகும்
தாருமே யயமதுவு நீறி னாக்கால் தாட்டிகமாய்ச்
சகலசித்தியாகும் பாரே. 150

ஆகுமே செம்பதுவு நூற்றுக் கொன்று அடைவாக
இட்டிடவே ஏமமாகும்
நாகுமே யுப்புக்குங் காவிக் கேகாநலமாக
அருகுகட்டி யிறங்கும் பாரு
பாகுபெற இதைவிற்றுச் செலவு செய்து
பதிவாகவுண்டுடுத்திப் பின்பு கேளு
நாகுபெறப் பூரணத்தை நோக்கிப் பாரு நலமாகக்
குருவாகு நாட்டிலோர்க்கே. 151

நாட்டியே அந்தி சந்தி பணங்கால் வீதம்
நலமாகமண்டலந்தானுண்டு தேறு
கூட்டியே பசுநரம்பு மின்னும் பாரு குணமாகக்
காயமது இறுகி யேறும்
வாட்டியே செவ்வல்லி போலே தேகம் வாடாது
காயமது வடிந்திடாது
ஊட்டியே ஞானமது மசக மாகு முறுதியாம் காய
சித்தி உறுதி யாமே. 152

150-152 அயச்சுண்ணம்

இரும்பு நாலு பலம் துருசுச் சுண்ணம் நாலு பலம் முன்போல் அரைத்து அதன் மேல் கவசம் கட்டிக்காய்ந்தபின் பெரும்புடமிடுக. நீறிவிடும். எல்லாச் சித்தியுமாகும். செம்பில் நூற்றுக்கு ஒன்றிடச் செம்பொன்னாகும். அருகுகட்டிப்புடமிறங்கும். காலை மாலைகாற்பண அளவு நாற்பது நாள் உண்ணப் பசுநரம்பு மின்னும். காயம் இறுகிக் காணும்.

செவ்வல்லிப் பூப்போல காணும் உடல். வாடாது வடிந்திடாது. ஞானம் எளிதிலாகும். உடல் உறுதியாம் உறுதியாகும்.

வங்கச்சுண்ணம்

ஆமேதான் வங்கத்தைத் தகடு தட்டி
யாதரவாந்துரிசினுட சுண்ணந்தானும்
வாமேதான் வாய்நீரால் குழைத்துப் பின்பு வடிவாகத்
தடவியே மார்க்கங்கேளு
நாமேதான் காய வைத்துப் புடமே போடு நலமாக
ஆறவிட் டெடுத்துப் பாரு
பூமேதான் வங்கமது பொருமி நீறும் புகலரிய
வங்கத்தின் பெருமை கேளே. 153

153. வங்க சுண்ணம்

வங்கத்தைத் தகடாகத் தட்டித் துருசுச் சுண்ணத்தைப் புகை நீர் விட்டுக் குழைத்துப் பூசிக் காய வைத்துப் புடமிடப் பொருமி நீறும். அதன் பெருமை கேள்.

தாளகச்சுண்ணம்

கேளுமே வங்கமென்ற சுண்ணந் தன்னைக் கெடியாகக்
கல்வத்தில் குழைத்து மைபோல்
ஆளுமே தாளகத்தின் மேலே கட்டு அடைவாகக்
கதிரிலே காயவைத்து
நாளுமே பத்தெருவிற் புடத்தைப் போடு நலமாக
ஆறவிட்டெடுத்துப் பாரு
கூளுமே தாளகந்தான் சுண்ணமாகும் குணமாகச்
சுண்ணமதை யெடுத்துக் கொள்ளே. 154

154. தாளகச் சுண்ணம்

வங்கச் சுண்ணத்தைக் கல்வத்திலிட்டு மைபோல் குழைத்துத் தாளகத்தின் மேலே கட்டிக் கதிரில் காயவைத்துப்பத்தெருவிற் புடமிடச் சுண்ணமாகும்.

கெந்திச்சுண்ணம்

கொள்ளவே தாளகந்தான் சுண்ண மானால்
கொடியாகக் கல்வத்து இதனை இட்டு
நள்ளவே வாய் நீரா லரைத்து மை போல்
நலமாகக் கந்தகத்தின் மேலே கட்டு

துள்ளியே கதிரினிலே காயப் போடு
துடியாகப் பத்தெருவில் புடத்தைப் போடு
துள்ளவே தீயாறி யெடுத்துப் பாரு
துடியாகக் கெந்தியது சுன்னமாமே. 155

சுன்னமாங் கெந்தியது நீறிற் றானால்
சுயமாக நூற்றுக்கு ஒன்று தானும்
நன்னயமாய் இட்டிடவே வண்ணங் கேளு
நலமான மாற்றென்ன பனிரண்டாகும்
சன்னமாம் இந்தங்கந் தன்னைத் தானும்
கனிவாக நடேசர்தான் பண்ணி வைத்துத்
தன்னிகராய்ச் செபதபங்கள் பண்ணிக் கேளு
தாட்டிகமாய்ச் சகலசித்து மாடலாமே 156

ஆடவே வாதமது ஏவல் கேட்கும் அடைவான வாத
சித்தி யருளுமாகும்
ஊடவே லோகசித்து உடனேயாகும் உண்மையாய்த்
தொட்டதெல்லாம் பழுத்துப் போகும்
கூடவே அந்திசந்தி பணங்கால் வீதம் குணமாக
உண்டுவரமண்டலத்தில்
(நாடவே) காய சித்தியுடனே யாகும் நரைதிரைக
ளெல்லாமும் போகுந்தானே. 157

போகுமே யெல்லாமுஞ் சித்தி யாக பொல்லாத
கெந்தகத்தை நீற்றிக் கொள்ளு
வாகுமே காயசித்தியுடனேயாகும் வடிவான லோகசித்தி
கணத் திலாகும்
பாகுமே கைபாகத் தாலே யெல்லாம் வடிவாக
எல்லாமும் சித்தியாமே
நாகுமே மௌனமா யிருந்து கொண்டு நலமாக
வாதத்தைப் பார்த்திடாயே 158

பார்த்திடவே சித்தர்கள்தாம் பாடி வைத்த பரிபாஷை
நாமத்தைப் பகர்ந்து சொன்னேன்
ஏத்திடவே கைபாக மறிந்து நீயும் இதமாகச் செய்திடவே
அநேக சித்தி
காத்திடவே சித்தியெல்லா மெதனா லாச்சு கனிவாகக்
கெந்தகத்தா லநேக சித்தி
பார்த்திடவே சகலமெல்லாஞ் சித்தியாகப் பதினாறு
மாற்றாகும் பண்புமாகும். 159

155 முதல் 159 கெந்திச்சுண்ணம்

தாளகச் சுண்ணத்தைப் புகைநீர் விட்டரைத்துக் கெந்தியின் மேல் கவசம்கட்டிக் காயவைத்துப் பத்தெருவிற்புடமிட நீறும். இக்கெந்திச் சுண்ணத்தை நூற்றுக்கு ஒன்று கொடுக்கப் பன்னிரண்டு மாற்றாகும். இத்தங்கத்தால் அம்பலக்கூத்தன் உருவம் செய்து பூசை புரிந்து செபதபங்கள் செய்க. எல்லாச் சித்தும் விளையாடலாம்.

தாமிரச்சுண்ணம்

ஆமேதான் கெந்தகநீறு பலமு மொன்று அடைவான
கல்வத்திலிட்டுக்கொண்டு
நாமேதான் கதிரிலே காயப் போடு நன்றாகக்
காய்ந்தபின்பு நன்மை கேளு
வாமேதான் பத்தெருவிற் புடத்தைப் போடு வடிவாகத்
தீயாற்றி யெடுத்துப்பாரு
காமேதான் றீயாத்தி யெடுத்துப் பாரு கனிவாக
எடுத்திடவே கண்டுபாரே. 160

*(2-வது அடியில் நோக்குக செம்பு சேர்க்க)
எடுத்துநீ பார்த்திடவே தங்கம் போலாம் இதமாக
நீறிவிடுஞ் செம்புதானும்
அடுத்துமே செம்பதுவுஞ் சுண்ணமானால் அடைவான
காயசித்திலோக சித்தியாகும்
படுத்துமே செம்புருக்கியதிலே தாக்கு பதிவாக
நூற்றொன்று தாக்கி யாடு
தொடுத்துமே பத்தரைதான் மாற்றுமாச்சு துடியாக
வுப்புக்கு இறங்கும் பாரே 161

162-ஆம் பாடல் இல்லை

வழிபாரு யோகநிட்டை வடிவு பாரு வகையாகத்
தமர்வாசல் வழியில்புக்கி
கழிபாரு கணபதியின் பொருளைக் காணு கடனாக
வழிகாணத்துறையுமாகும்
சுழிகாண வடமொழியைப் பார்த்துக் கற்று சுகாதீத
பூரணத்தைச் சொக்கியாடு
நழிகாணு நாலானபொருளுங் காண நாடியே சித்தி
தரு நன்றாய்ப்பாரே. 163

நன்றாகப் பார்த்திடவே யெல்லாஞ் சித்தி
நலமான காயசித்தி யோகசித்தி
கன்றாத காதலுடன் சித்தி மெத்தக்
கனிவாகப் பொருளெல்லாம் பேத மில்லை

வன்றாக எப்பொருட்கும் இறைவ னான
வடிவான சதாசிவத்தி னிலையைக் கண்டால்
உண்டாக வுறுதிமிகப் பொருளுங் காண
உற்றுமே சைதன்னியத் துறுதி பாரே. 164

உறுதிபார் சைதன்னிய வீதி யறிந்து
உற்றுமே பூரணமு நிலையு மாச்சு
அறுதிபார் ஓம்நமசி வாய மாகும்
அடுத்துமே வாதமது ஏவல் கேட்கும்
உறுதிபார் மனுவேகம் யோக மாகும்
மயமான எப்பொருளு மருவ லாகும்
நறுதியுட தீச்சை விதி யுடனே யாகும்
நலமான வாதமது நாடுந் தானே. 165

160 - 165 செம்புச்சுண்ணம்

ஒருபலம் கந்தகச் சுண்ணமெடுத்துக் கல்வத்திலிட்டுப் புகைநீர் விட்டரைத்துச் செம்பில் மேல் அப்பிக்காயவைத்துப் பத்தெருவிற்புடத்தைப் போடு. நீறி விடும். தங்கம் போலாகும். சுண்ணமுமாகும். செம்பில் நூற்றுக்கு ஒன்று கொடுக்கப்பத்தரை மாற்றாகும். ஞான வழியடுத்துக் கூடு. ஓம்நமசிவய என்றோது. வாதம் ஏவல் கேட்கும்.

காரீயச் சுண்ணம்

தானேதான் காரீயச் சுண்ணந் தன்னைத்
தாக்காகப் பிரமமுனி மூந்நூறு தன்னில்
வானேதான் மூலிகையி லரைத்துப் போட
வடிவாகச் சொன்னார்கள் வலுவு மெத்த
கானே தா னிப்படிக்கு ஈயந் தன்னைக்
காரணமாய்ப் புடம்போடச் சாகா வாறு
நானேதான் மறைத்தவித்தை பிடிவா தத்தில்
நலமாகச் சொல்லிவிட்டே னயந்து பாரே. 166

பாருநீ காரீயஞ் சேரு வொன்று
பக்குவமா யாட்டமுரி தன்னிலே தான்
வாருமே யுருக்கியே தரமும் பத்து
வடிவாகச் சாய்த்த பின்பு மருவக் கேளு
நாருநீ யீயத்தில் களிம்பு அற்று
நலமாக இருக்குமது நன்மை பாரு
சாருமே கரண்டிதனி லுருக்கிக் கொண்டு
நலமாகக் சூதமிடை சேர்த்துக் கொள்ளே 167

கொள்ளவே பிட்டாகுங் கல்வத் திட்டுக்
கூறரிய வெடியுப்பு அஞ்சாங் காய்ச்சல்
நள்ளவே முன்னெடைக்குச் சேர்த்துக் கொள்ளு
நலமாகக் கல்வத்தி லதனை யிட்டுத்
துள்ளவே பழச்சாறு விட்ட ரைத்துத்
துடியாக வில்லைபண்ணிக் காயப் போடு
கள்ளவே காய்ந்தபின்பு ஓட்டி லிட்டுக்
கனிவாகப் பத்தெருவிற் புடத்தைப்போடு 168

போடவே காரீயம் பற்ப மாகும் போக்கோடே
காரீயச் சுண்ணம் பண்ண
ஆடவே சொல்லுகிறேன் கைபா கத்தை
அடைவாகச் சொல்லுகிறேனுற்றுக்கேளு
நாடவே கல்வத்தி லிட்டுப் பின்பு நலமாகப்
பாணிவிட்டு மைபோ லாட்டி
ஊடவே முச்சாமம் சென்ற பின்பு உறுதியாய்க்
கொதியிட்டு இறுத்துக் கொள்ளே 169

கொள்ளவே யுப்பெல்லாங் கரைந்து போகுங்
குணமாகப் பின்புதண்ணீர் விட்டுத் தானும்
மெள்ளவே யரைத்து இரு சாமஞ் சென்றால்
மேன்மையாய் இறுத்துமே யுப்புப் போக
விள்ளவே யுப்பெல்லாம் கரைத்தி றுத்து
விதமாக வங்கபற்பந் தன்னைத் தானும்
துள்ளவே யெடுத்துக்கல் வத்தி லிட்டுத்
துடியாகச் சேர்க்கின்ற செயலைக் கேளே. 170

கேளுமே பிண்டமது சுத்தி கேளு
கெடியாகவுவர்மண்ணுஞ் சுண்ணாம்பு சேரே
வாளுமே சேர்த்துநீ பாணி ரெட்டி
வடிவாக விட்டுமே தெளிவு இறுத்து
நாளுமே கிளிஞ்சலது பலமு நாலு
நலமாக வுவர்மண்ணு தன்னிற் போட்டு
தாளுமே குமுறவெரி பிண்டந் தானும்
நலமாகக் கக்கியது எண்ணெய் தானே 171

எண்ணெய்தான் கக்கியே பிண்டந் தானும்
இதமாக விருக்குமதுபிண்டந் தன்னைச்
கண்ணெயாய்ப் பெரியபுடம் போட்டெ டுக்கக்
கனிவாகப் பிண்டமது சுண்ணமாகும்

வண்ணமாம் இச்சுண்ணங் கால னொக்கும்
 வடிவாக வங்கபற்ப மிடையே சேர்த்துத்
தண்ணவே பழச்சாறு விட்ட ரைத்துத்
 தாட்டிகமாய் வில்லைதட்டிக் காயப்போடே 172

போடவே காய்ந்தபின்பு எடுத்து நீயும்
 பொலிவாக அஞ்சுசுண்ண முள்ளே யிட்டு
நாடவே மூடியது புடத்தைப் போடு
 நலமாக வெடுத்துப்பார் சுண்ணமாகும்
மூடவேயிச்சுண்ணங் கால னொக்கு
 முடிவான இது போற போக்கைக் கேளு
வாடவே தாளகந்தான் பலமும் பத்து
 வடிவாகச் சுத்திமுறை வகையைக் கேளே. 173

(குறிப்பு : இந்நூல் 104 முதல் 114 வரை நோக்குக)

166–173. காரீயச்சுண்ணம் - உரை

பிரமமுனி முந்நூற்றில் அவர் காரியத்தைச் சுண்ணம் செய்ய மூலிகையிலரைத்துப்புடமிடச் சொன்னார். அங்ஙனம் செய்தால் நீறாது. அந்நூலில் மறைத்த நுட்பத்தை இந்நூலில் சொல்லி விட்டேன். ஒருசேர் காரியம் வாங்கி ஆட்டமுரியில் பத்துமுறை உருக்கிச் சாய்க்கக் களிம்பு நீங்கித்தூயதாகும். கரண்டியிலிட்டுருக்கி அதனொடை சூதம் சேர்க்கப் பிட்டாகும். அதனைக் கல்வத்திலிட்டு அஞ்சாங்காய்ச்சல் வெடியுப்பு அதனொடை சேர்த்துப் பழச்சாறு விட்டாட்டி வி. த கா. சி ம. செ. பத்தெருவிற்புடமிடப்பற்பமாகும், அதனைச்சுண்ணம் செய்யும் நுட்பத்தைக் கூறுகின்றேன். உற்றுக்கேள். அந்தப்பற்பத்தைக் கல்வத்திலிட்டுத் தண்ணீர் விட்டு மைப்போலாட்டி மூன்று சாமம் வைத்திருந்து பின்பு கொதிக்க வைத்துத்தண்ணீரை இறுத்துவிடு. உப்புக்கரைந்து விடும். அதன் பின்பும் தண்ணீர் விட்டரைத்து இருசாமம் கழிந்தபின் தண்ணீரை இறுத்து உப்பைப் போகச்செய்து வங்க பற்பத்தை யெடுத்துக் கொள்க. அந்தவங்கபற்பத்தைக் கல்வத்தி லிட்டுச் செய்கின்ற செயலைக்கேள்.

உவர்மண்ணும் சுண்ணாம்பும் சேர்த்து அதனளவுக்கு இருமடங்கு தண்ணீர் விட்டுத் தெளிவு இறுத்து அந்நீரினுள் தசையுள்ளடங்கிய கிளிஞ்சில் சிப்பி நாலுபலம் இட்டுக் குமுற எரிக்க அந்தச் சிப்பிப் பண்டம் எண்ணெய் கக்கித் தூயதாகும். அச்சிப்பிகளைப் பிண்டத் தசையுடன் பெரும்புடமிடச் சுண்ணமாகும். இச்சுண்ணத்தை வங்கபற்பத்துடன் ஓர் அளவாகச் சேர்த்துப் பழச்சாறு விட்டரைத்து வி. த. கா. எடுத்து அஞ்சுசுண்ணக்குகைக்குள் வைத்துப்புடமிடச் சுண்ணமாகும். சரக்குகளைக் கொல்லுந்தரத்தில் இது காலனொக்கும், இது போகின்ற போக்கினைக் கேள்.

தாளகச்சுண்ணம்

கேளுமே கற்சுண்ணஞ் சுட்டுக் கொண்டு
கெடியாகத் தாளகத்தை யதற்குள் வைத்து
நாளுமே வெந்நீரை விட்டு நீற்று
நலமாக விப்படிக்கே யஞ்சு மாகும்
வாளுமே தாளகந்தான் கடிய சுத்தி
வடிவாகக் கழுவியதை மார்க்கங் கேளு
பாளுமே போகாதே வங்கச் சுண்ணம்
பதிவாக மேற்கவசங் கட்டி டாயே. 174

காட்டியே மேற்கவசங் காயப் போடு
கனிவாகப் பத்தெருவி லடுக்கிப் போடு
மூட்டியே தீயாற்றி யெடுத்துப் பாரு
மூவுலகு மெய்க்கவே தாரம் நீறும்
நாட்டியே தாரத்தைக் கல்வ மிட்டு
நலமாக வாய்நீரா லரைத்து மைபோல்
தூட்டியே துரிசின்மேல் கவசங் கட்டித்
துடியாகக் கதிர் தன்னில் காயப் போடே 175

174 - 174½ தாளகச் சுண்ணம்

தாளகம் பத்துப்பலம் எடுத்துச் சுண்ணாம்புக் கல்லினுள் வைத்து வெந்நீர் ஊற்றி நீற்றுக. ஐந்துமுறை இங்ஙனம் செய்து கழுவித் தூயதாக்கி அதன் மேல் வங்கச் சுண்ணம் பூசிக் காயவைத்துக் கவசித்து பத்தெருவிற்புடமிட வங்கம் சுண்ணமாகும். இது மூவுலகும் மெய்க்கும்.

துரிசுச் சுண்ணம்

போடவே காய்ந்தபின்பு சொல்லக் கேளு
பொலிவாகச் சுண்ணமென்ற கவசங்கட்டு
ஆடவே காயவைத்து அதன்பின் கேளு
அடைவாகப் பத்தெருவிற் புடத்தைப் போடு
நாடவே தீயாற்றி யெடுத்துப் பாரு
நலமாக மேற்கவசந் தள்ளிப் போடு
ஊடவே துரிசியது கடுமையாகும்
துடியான சுண்ணமது தூக்குந்தானே. 176

தானென்ற துரிசதுவுங் கடுமை யாகும்
தாட்டிகமா யிருக்குமது காரங் கேளு
வானென்ற துரிசினுட சுண்ண மொன்று
வடிவான வீரமொன்று மத்தித்தேதான்

கானென்ற தாளகத்தின் மேலே கட்டு
    கனிவாகக் காய்ந்தபின்பு வயணங் கேளு
நானென்ற சுண்ணாம்பு மேலே கட்டி
    நலமாகப் பத்தெருவிற் புடத்தைப் போடு. 177

போட்டுஎடு தாளகத்தின் சுண்ண மாகும்
    பொலிவான சுண்ணமது கடுமையாகும்
நாட்டுமே சுண்ணமெடை வீரம் சேர்த்து
    நலமாக வாய்நீரால் மத்தித்துத் தான்
மூட்டுமே துரிசுக்கு மேலே கட்டு
    முதலாகக் காயவைத்துப் பின்பு கேளு
வாட்டுமே பத்தெருவி லடுக்கிப் போடு
    வடிவாகத் துரிசியது குருவுமாமே. 178

குருவாகுந் துரிசினுட சுண்ணத் தாலே
    குணமாகச் சுரூபமணி பண்ணித் தானும்
விருவாகச் செகசாலந் தன்னி லேதான்
    விதமாகச் சித்திபெற்றார் தேவர் தானும்
உருவாகச் சித்தியெலாந் துரிசி னாலே
    உலகத்தில் ஞானவித்துத் துரிசி னாலே
திருவாகத் துரிசதுவைத் தொந்தம் பண்ணித்
    திடமாக வைத்திடவே சித்தி யாமே. 179

174½ - 179 - துருசுச் சுண்ணம் - உரை

தாளகச் சுண்ணத்தைக் கல்வத்திலிட்டுப் புகைநீராலரைத்துத் துரிசின்மேல் கவசம் கட்டிக் காயவைத்து அதன்மேல் சுண்ணக் கவசமிட்டுக் காய்ந்தபின் பத்தெருவிற் புடமிட்டு ஆறிய பின்னெடுத்துப் பார்க்க, துரிசு கடுஞ்சுண்ணமாகும். துரிசுச்சுண்ணம் ஒன்று வீரம் ஒன்று மத்தித்துத் தாளகத்தின் மேலே கட்டிக் காய்ந்தபின்பு சுண்ணாம்புக் கவசம் செய்து காய்ந்தபின் பத்தெருவிற் புடமிடத் தாளகச் சுண்ணமாகும். இந்தத்தாளகச் சுண்ணத்துடன் வீரம் சேர்த்துப் புகைநீராலரைத்துத் துரிசுக்கு மேலே கட்டிக் காயவைத்துப் பத்தெருவடுக்கிப் புடமிடத் துரிசு குருவாகும். துரிசுக்குருவால் இரசமணியாகிய சொரூபமணி செய்து தேவர்கள் சித்தி பெற்றார்கள். சித்தியெல்லாம் துரிசினாலே. ஞானவித்தும் துரிசினாலே. துரிசினைத் தொந்தம் பண்ணி (பலமுறை சேர்த்துச் சேர்த்துச் சுண்ணம் பண்ணி) வைத்துக் கொள். சித்தியாகும்.

தங்கச்சுண்ணம்

சித்தியாந் துரிசினுட சுண்ணந் தன்னைச்
சிறப்பாகக் கல்வத்திலிட்டுக் கொண்டு
புத்தியால் வாய்நீரால் மத்தித் தேத்திப்
புனிதமாய்த் தங்கமென்ற தகட்டில் பூசி
நத்தியே பத்தெருவிற் புடத்தைப் பொடு
நலமாக வெடுத்துப்பார் தங்கம் நீறும்
புத்தியாய்த் தங்கமது நீற்றி னாக்கால்
புனிதமாய்ச் சகலமெல்லா மாகும் பாரே. 180

180 - தங்கச்சுண்ணம் - உரை

துரிசுக்குருச் சுண்ணத்தைக் கல்வத்திலிட்டுப் புகைநீராலரைத்துத் தங்கத்தகட்டிற் பூசிப் பத்தெருவிற்புடமிடத் தங்கம் நீறும். இதனால் எல்லாச் சித்தியும் உண்டாகும்.

நாகச்சுண்ணம்

ஆகுமே தங்கமது நீறு தன்னை
அடைவாகக் கல்வத்து இதனை யிட்டுப்
பாகுபெற வீரமது இடையே யிட்டுப்
பதிவாக நாகமென்ற தகட்டில் பூசி
நாகுமே கதிரிலிடு காய வைத்து
நாடிய பத்தெருவில் புடத்தைப் போடு
பாகு பெற நாகமது பூத்துத் தானும்
பதிவாகச் சுண்ணமது ஆகுந்தானே. 181

தானென்ற நாகமது நீறிற்றானால்
தாக்கான நவலோகம் ஏம மாகும்
வானென்ற காயசித்து உடனே யாகும்
வடிவான நரம்பிறுகும் வண்மை மெத்த
ஊனென்ற உறைபாகங் கண்டு தேறு
உறுதியாய் ஞானவழி யடுத்துக் கண்டு
தேனென்ற கைமுறையாய்ச் சொன்னே னப்பா
செகசால மாகுமே செய்து பாரே 182

(உறை-மருந்து)

பாருமே செகசால வித்தை யாலே
(பண்பாக) நவலோக மேமமாகும்
காருமே மதியமுர்த முண்ட பேர்கள்
கனிவாக வுட்பொருளைக் கனிந்து பாரு

நாருமே யடிதொடுத்து நுனிமட் டுக்கும்
நலமாக ஏறிடவே நன்மை யாகும்
சாருமே சதியாகத் திரிய வேண்டாம்
சாட்சியாம் ஞானவழி அடுத்துப் பாரே 183

181 - 183-நாகச்சுண்ணம் — உரை

தங்க நீற்றைக் கல்வத்திலிட்டு அதனெடைக்கு வீரம் சேர்த்து அரைத்து நாகத்தகட்டிற் பூசிக் காயவைத்துப் பத்தெருவிற்புடமிட நாகம் பூத்துச்சுண்ணமாகும். ஒன்பது வகைப் பொன்னும் செம்பொன்னாகும். உண்டால் காயசித்தியாகும். நரம்பு இறுகும். இதனைக் கைமுறையாய்ச் சொன்னேன். இதனைக் கொண்டு ஞானவழியடுத்துப் பாரு.

தொந்த செந்தூரம்

அடுத்துமே நாகமது சுண்ணந் தன்னை
அடைவாகப் பலம் நிறுத்து அப்பாற் கேளு
நடுத்துமே கல்வத்தி லிட்டுக் கொண்டு
நலமாக வாய்நீரா லரைத்து நல்லாய்
வடுத்துமே தங்கமென்ற தகட்டிற் பூசி
வடிவாகக் காயவைத்து மார்க்கங் கேளு
படுத்துமே பத்தெருவில் அடுக்கிப் போடு
பதிவாகத் தீயாற்றி யெடுத்துப் பாரே 184

பாருமே தங்கமது நீறிப் போகும்
பதிவாகச் சூதமதை யிடையே சேர்த்து
நாருமே புகைநீரா லரைத்து மைபோல்
நலமாகக் காயவைத்து நட்புக் கேளு
தூருமே காசியென்ற மேருக் கிட்டு
துணமாகப் பன்னிரண்டு சாமந் தானும்
வாருமே யெரித்துப் பார் செந்தூ ரமாகும்
வடிவாகத் தொந்தசெந்தூ ரமாமே. 185

ஆமேதான் தொந்தசெந் தூரந் தன்னை
அடைவாகச் செம்புதனிலஞ்ஞூற் றொன்று
வாமேதான் இட்டிடவே பத்து மாத்து
வடிவாக இரும்பினிலைஞ் ஞூற்றுக் கொன்று
நாமேதா மிட்டிடவே மாற்றுக் கேளு
நலமாக எட்டாகு நயந்து பாரு
கோமேதான் காரீயம் ஐஞ்ஞூற் றொன்று
குணமாகக் கொடுத்திடவே குணமாம் பாரே. 186

குணமாக மாற்றுத்தான் எட்டே காலாம்
குருக்குவழி கோடானு கோடி வேதை
மணமாக நவலோகம் எல்லாந் தானும்
மதியாது தான் பழுக்கும் மகிமை பாரு
உணவாகத் தொந்தமது நிரம்ப ஏறில்
உறுதியாய் மாற்றதுவும் உயர்ந்து பொங்கும்
கணமாக உண்டிடவே நரைதிரையு மில்லை
காரணமா யாகுமிது கருதிப் பாரே. 187

கருதியே சுழிமுனை வட்டத் துள்ளே
கனிந்துமே சிவயோகம் கண்டு தேறி
வருதியே வாயுவேகம் கொண்டு நாடி
வடிவாக மவுனத்தை மதியில் தாக்கு
உறுதியே தாக்கிடவே யெல்லாம் சித்தி
உற்றுமே வாதமதைத் தொந்தித் தேற்றிப்
பிருதிவியே பயனறிந்து பதிவு கண்டு
பாருப்புப் பலனறியப் பாக மாமே. 188

184-188 தொந்தசெந்தூரம்

அந்த நாகச்சுண்ணம் ஒருபலம் நிறுத்துக்கல்வத்திலிட்டுப் புகைநீராலரைத்துத் தங்கத் தகட்டிற்பூசிக் காயவைத்துப் பத்தெருவிற் புடமிட நீறிவிடும். இந்தத் தங்கச் சுண்ணத்துடன் சூதத்தை அளவாகச் சேர்த்துப் புகைநீரால் அரைத்துக் காயவைத்து மேரு என்ற காசிக்குப்பியில் இட்டுப் பன்னிரண்டு யாமம் எரிக்கச் செந்தூரமாகும். இது தொந்தசெந்தூரம். அஃதாவது நாகம், தங்கம், ரசம் ஆகிய மூன்றுங் கலந்த கலவைச் செந்தூரம்.

இதனைச் செம்பில் ஐந்நூற்றுக்கு ஒன்று கொடுக்கப்பத்து மாற்று. இரும்பினில் அவ்வாறு கொடுக்க எட்டு. காரியத்தில் கொடுத்தால் எட்டே காலாகும்.

குறுக்குவழியிலும் பலப்பல மாற்று உண்டாம். எண்வகைப் பொன்னும் செம்பொன்னாம். நாகம், தங்கம், ரசம் ஆகியவற்றை மேலும் மேலும் சேர்த்து அரைத்துப்புடமிட்டு ஒன்றையொன்று கூட்டிப்புடமிட்டுக் கலவைச் செந்தூரம் (தொந்தசெந்தூரம்) செய்யச் செய்ய மாற்று உயரும். நிலவுப்பின் பயனறியப் பயனாகும்.

நாகச் செயநீர்

பாகமாம் நாகமென்ற சுண்ணந் தன்னைப்
பதிவாகப் பலம் நிறுத்துக் கல்வத்திட்டு
யூகமாய் வீரமது இடையே சேர்த்து
உற்றுமே பீங்கானி லிட்டுக் கேளு

பாகமாய்ப் பனியில்வைக்கச் செயநீ ராகும்
பதிவாக ஆறுபோல் செயநீர் தன்னை
வாகமாய் இறுத்துமே வைத்துக் கொண்டு
வடிவாகச் சரக்கெல்லாம் கட்டக் கேளே. 189

உரை

நாகச்சுண்ணம் ஒருபலம் நிறுத்துக் கல்வத்தில் இட்டு அது செயநீராகும் அளவு உணர்ந்து அந்த அளவிற்கு வீரம் சேர்த்து அரைத்துப் பீங்கானில் விட்டுப் பனியில் வைக்க அது செயநீராகும். அதனை இறுத்து வைத்துக் கொண்டு சரக்கு வகை கட்ட வழி கேள். (யூகி முனிவர்கும்மியில் நாகச் செயநீர் காண்க.)

இலிங்க மெழுகு

கட்டவே லிங்கமது கம்பி வாங்கிக்
கனிவாகப் பழச்சாறு முலைப்பா லிட்டு
இட்டவே கரியோட்டி லிட்டு நன்றாய்
இருசாமம் இதமாகச் சுருக்குப் போடு
வட்டவே லிங்கமது சுத்தியாகும்
வடிவாக ரேக்கதுவும் தகடு வாங்கி
நட்டவே நாகமென்ற செயநீர் தன்னில்
நலமாகத் தோய்த்துமே சுத்தி டாயே. 190

சுத்தியே கற்பூரம் கொளுத்தி விட்டுச்
சுருதிபெற லிங்கத்தைக் குமற வாட்டு
நத்தியே வாட்டிடவே லிங்கந் தானும்
நலமாக மெழுகாகும் நாட்டம் பாரு
புத்தியே மெழுகெடுத்து நவலோ கத்தில்
புனிதமாய் இட்டிடவே மாற்றுக் கேளே
வத்தியே பதினாலு மாற்று மாகும்
வடிவாக இதைவிற்று வலுமை கேளே. 191

கேளுமே புருவத்தீ ஞானம் பாரு
கெடியாக ஞானவழி யடுத்துக் கூடு
நாளுமே கெவுனவழி வன்மை யாகும்
நமனுண்ட கற்பமது நானும் உண்டேன்
வாளுமே லிங்கத்தை மெழுகு பண்ணி
வடிவாக முனிவடிவு நோக்கிப் பாரு
பாருமே கைபாக மாகச் செய்து
பதிவாக வடிவாகப் பண்பு மாமே. 192

பண்பான பொருளறியார் பயனைக் காணார்
பரிதவித்து வாதத்தைச் சுட்டுக் கெட்டு
உண்பாக ஒன்றுந்தான் அறியா மற்றான்
உற்றுமே கைப்பொருளும் உறுதி போச்சு
நண்பாக வீணாகக் கெட்டா னென்பார்
நலமாக வாதிமார்கள் சொல்லும் புத்தி
தெண்பாகக் காயத்தைச் சித்தி பண்ணார்
சிறப்பாக வாதியவர் செய்கை தானே. 193

தானென்ற நாதாக்கள் செய்த பாகம்
தாட்டிகமாய் உலகோர்க்குக் கிட்டா வாதம்
ஊனென்ற உறுதிமிகக் கொண்டு பின்பு
உற்றுமே வாதத்தி லடிமைப் பட்டு
நானென்ற பொருளெல்லாம் வீணு மாச்சு
நலமாகக் கைபாகம் அறிந்தோர் யோகி
வானென்ற சிவபூசைக் கிதுவே யாதி
வடிவாக ஆதியந்தம் வடிவு கேளே. 194

190-194 உரை

பழச்சாறும் முலைப்பாலும் கலந்து, கரியோட்டில் கம்பிலிங்கம வைத்துச் சுருக்கு இரண்டு சாம நேரம் கொடுத்து, அதன்மேல் நாகச் செயநீர் தோய்த்த தங்க ரேக்குத் தகட்டினைச் சுற்றிக் கற்பூரம் கொளுத்தி அதன் நெருப்பில் குமுற வாட்டு. இலிங்கம் மெழுகாகும். அதனை ஒன்பான் வகை வெறும் பொன்னில் இட அது செம்பொன்னாகும். அதன் மாற்று பதினாலு. இதனை விற்று வளஞ்செய்துகொண்டு புருவத்தீ ஞானம் பார். ஞான வழியடுத்துக் கூடு கெவுன வழியும் வளமாகக் கிட்டும். நமன் உண்ட கற்பம் இது. நானும் உண்டேன். மேலும் அறிவுரை செய்யுளில் காண்க.

வீரமெழுகு

வடிவாக நாகத்தின் செயநீர் தன்னை
வாகாக இறுத்துமே வயணம் கேளு
துடியாக வீரமது பலத்தை வாங்கித்
துப்பரவாய் நாகமென்ற செயநீர் தன்னில்
முடிவாகக் கரியோட்டி லேற்றிக் கொண்டு
முனிந்துமே கடிகையொன்று சுருக்குப் போடு
நொடியாக வீரமது மெழுகு மாகும்
நுணுக்கமாய்ச் செம்புருக்கி நூற்றுக் கொன்றே. 195

ஒன்றிடவே மாற்றதவு முறுதி கேளு
உற்றுமே பதினாறு மாற்று மாகும்
தன்றிடவே இதைக்குறைக்க வித்தை கேளு
கனிவாக வெள்ளிதான் இடையே சேரு
வன்றிடவே சேர்த்துருக்கி மாற்றுப் பாரு
வடிவாக எட்டதுவு மாகும் பாரு
அன்றிடவே இம்மாற்றை விற்றுக் கொண்டு
அடைவாகச் செலவழித்து அருமை கேளே. 196

அருமையாய் மெய்ப்பொருளைத் தியானம் பண்ணு
அடைவான யோகசித்தி வாத சித்தி
வருமையாம் வடிவான சோதி யாகும்
வாகான செயநீரில் ரொம்ப வித்தை
கருமையாம் ஞானமது கைக்குள் ளாகும்
காதலித்துப் பொருளையது கண்டு வாங்கு
பெருமையாய் எல்லாமும் சித்தி யாகும்
பேசாதே மவுனத்தின் பேரு மாமே. 197

195-197 உரை

கரியோட்டில் ஒரு பலம் வீரக் கட்டியை வைத்து அதன்மேல் நாகச் செயநீரை ஒரு நாழிகை சுருக்குப் போடு. வீரம் மெழுகாகும். செம்பு உருக்கி நூற்றுக்கு ஒரு கூறு வீரமெழுகினைக் கொடுக்கப் பதினாறு மாற்றாகும். அதற்கு ஓரளவான எடை வெள்ளி கொடுத்துருக்க மாற்று எட்டாகும். இதனை விற்று வாழ்வு வாழ்ந்து மெய்ப் பொருளைத் தியானம் செய்.

வெள்ளைப் பாஷாண மெழுகு

ஆமேதான் வெள்ளைப் பாஷாணந் தன்னை
அடைவாகப் பலம் நிறுத்து அடுப்பில்வைத்து
நாமேதான் கற்சுண்ணத் துள்ளே யிட்டு
நலமாக உவர்மண்ணைக் கரைத்துக் கொண்டு
பாமேதான் வெந்துமே சுத்தி யாச்சு
பதிவாக இச்சுத்தி எண்ணெய் வாங்கும்
காமேதான் கரியோட்டி லேற்றிக் கொண்டு
கனிவாக நாகத்தின் செயநீர் தானே. 198

தானேதான் சுருக்கிடவே கடிகை கேளு
தப்பாமல் நாற்சாமம் சுருக்குப் போடு
வானேதான் வெள்ளைப் பாஷாணந் தானும்
வடிவாக மெழுகாகும் வண்மை பாரு

நானேதான் வெள்ளைப் பாஷாணந் தானும்
நலமாக மெழுகானால் சொல்லக் கேளு
கானேதான் வெள்ளீயம் நூற்றுக் கொன்று
கனிவாக இட்டிடவே கருணை கேளே. 199

கேளேவெள் ளீயமது மாற்றுக் கேளு
கெடியாகப் பத்தாகும் கணேசன் பூசை
வாளுமே செய்திட்டு வங்கந் தன்னை
வடிவாகக் கொடுத் தூது வரிசையாக
நாளுமே வங்கத்துக் கோடா பாரு
நலமாக வெள்ளியது நல்ல வெள்ளி
கூளுமே இந்தவெள்ளி அயனோ டொக்கும்
குணமாகும் எல்லாமே சித்தி யாமே. 200

சித்தியாம் நாதாக்கள் ஏது செய்வார்
செயமாக வங்கத்தைச் சுண்ணம் பண்ணிப்
புத்தியாய்ச் செம்பெல்லாம் நீற்றித் தானும்
செயமான எல்லாமும் நீற்றுவார் பார்
புத்தியாய்க் கெவுனத்தில் குளிகை கட்டிப்
புனிதமாய்ப் பார்ப்பார்கள் புனிதமாக
சித்தியாய் சீவனத்துக் கிடமே செய்வார்
செயமான வாதசித்தி செணத்தி லாமே. 201

198-201 உரை

வெள்ளைப் பாஷாணத்தை அடுப்பிலேற்றிய சட்டிக்குள்ளிருக்கும் கற்சுண்ணாம்புக்குள் வைத்து உவர்மண் கரைத்த தண்ணீர் ஊற்றிவைக்க வெந்து சுத்தியாகும். எண்ணெய் கக்கும். அதனைக் கரியோட்டிலேற்றி நாகச் செயநீர் சுருக்குத் தாக்குக. நாற்சாமம் சுருக்கிட மெழுகாகும். வெள்ளீயத்தை உருக்கிக் கொண்டு நூற்றுக்கு ஒன்று கொடுக்க பத்து மாற்று வெள்ளியாகும். இதனை ஆய்ந்து பார்க்க வங்கத்தைக் கொடுத்து ஊத வெள்ளி ஓடாது. இந்த வெள்ளி அயனோடொக்கும். நாதாக்கள் வங்கத்தைச் சுண்ணம் செய்து செம்பினை நீற்றிக் கொண்டு மற்றவற்றை யெல்லாம் நீற்றுவார்கள். பறக்கும் குளிகை கட்டிக் கொள்வார்கள். இங்ஙனம் வாழ்வுக்கு இடம் செய்து கொண்டு சித்தியடைவார்கள்.

669-672 மனோசிலை மெழுகு

சிணத்திலே தாகமென்ற செயநீர்தன்னைச் செய்பாக
மாயிறுத்து வைத்துக் கொண்டு
கணத்திலே மனோசிலையைச் சுத்தி செய்து
கனிவாகக் கரியோட்டில் கனிந்து வைத்து

சணத்திலே யிருசாமம் சுருக்குப் போடு சரியாகப்
பார்த்திடவே எல்லாம் சித்தி
வணத்திலே மனோசிலைதான் மெழுகுமாகும் வடிவான
மெழுகெடுத்து வைத்துக் கொள்ளே. 202

கொள்ளவே செம்புருக்கி நூற்றுக் கொன்று குணமாக
இட்டிடவே சொல்லக் கேளு
நள்ளவே மாற்றுத்தான் பத்து மாகும் நலமாக
உப்புக்கும் காவிக்கப்பா
துள்ளவே ஏகாது இதனை விற்றுத் துடியாக வுண்டு
டுத்திப் பின்பு கேளு
நள்ளவே சாரூபப் பதவி தேடு நலமான ஞானவிதி
யடுக்கும் பாரே. 203

202-203 உரை

மனோசிலையைத் தூயதாக்கிக் கரியோட்டில் வைத்து நாகச் செய நீரை இருசாமம் சுருக்குத் தாக்கு. மனோசிலை மெழுகாகும். செம்புருக்கி நூற்றுக் கொன்று கொடுக்கப் பத்துமாற்று. துடியாக உண்டுடுத்தி ஞான வழி பார்.

தங்கமெழுகு

அடுக்குமே நாகமது செயநீர் தன்னில் அடைவாகப்
புழுகோடு உரமும் சூதம்
மடுக்குமே வீரமுடன் மத்தித்துத்தான் வடிவாகத்
தங்கமென்ற தகட்டில் கட்டித்
தடுத்துமே சூடனுட தீயால் வாட்டி நலமாக
மெழுகாகும் தவலோகத்தில்
விடுத்துமே ஆயிரத்துக் கொன்று தாக்கு விதமாகப்
பத்தரைதான் வாதமாமே. 204

ஆமேதா னிம்மெழுகைப் பதனம் பண்ணி
அடைவாக அந்திசந்தி பணங்கால் வீதம்
காமேநான் கொண்டுவர மண்ட லத்தில்
கனிவாக நரைதிரைகள் அற்றுப் போகும்
சாமேதான் பசுநரம்பு இறுகி யேறும்
சரியாக காயசித்தி உடனே யாகும்
ஆமேதான் வஸ்துவாம் மேனி தானும்
அம்மம்ம மலைக்குத்தத் தூளு மாமே. 205

தூளுமாம் சஞ்சீவி போலே யாகும்
துடியான கெவுனமது சுருக்கு மெத்த
வாளுமே வடிவுடைய தேக மாகும்
வடிவான சித்தருக்கு மார்க்க மாகும்
கோளுமாம் குடிலமது இல்லை பாரு
குணமான வஸ்துவாம் நூலைப் பாரு
தாளுமே சுண்ணமெல்லாம் சித்தி யாகும்
தாட்டிகமாய்ச் சித்தியது வலுவு மாமே. 206

204-206 உரை

நாகச்செயநீரில் புனுகு, சூதம், உரம், வீரம் இவற்றை யிட்டு, மத்தித்துத் தங்கத் தகட்டில் கட்டிச் சூடத்தின் தீயால் வாட்டி மெழுகாக்கி ஒன்பதுவகை வெறும்பொன்னில் உருக்கு முகத்தில் ஆயிரத்துக்கு ஒன்று தாக்கப் பத்தரைமாற்றாகும்.

உரம் என்பது தங்கவுரமென்றும் வெள்ளியுரமென்றும் இருவகைப் படும். புலத்தியர் 300-ல் கூறப்பட்டுள்ளது. பார்த்துச் செய்து எடுத்துச் சேர்த்துக் கொள்க

இம்மெழுகினைக் காலை மாலை காற்பண அளவு உண்டு வர ஒரு மண்டலத்தில் நரைதிரையற்றுப் போகும். பசுநரம்பு இறுகி ஏறும். கல்லின் மேல் குத்தத் தூளுமாகும். விண்ணில் பறப்பதற்கு ஒத்த பறவையுடம்-பாகும் வடிவும் மிகுதி. வலிப சித்தியுமாகும். இத்துடன் 207 முதல் 215 வரை அறிவுரை காண்க.

வாதிக்குப் புத்தி

வலுவாகும் வழியுடைய வாதந் தன்னை
வன்மையாய்ப் பார்த்துவிட வழியு மாகும்
கலுவாகும் மெய்ப்பொருளைக் கண்டு தேறு
கனிவாகும் எல்லாமும் சித்தி மெத்த
உலுவாகச் சித்தி யெல்லாம் ஏதா லாச்சு
உற்றுமே நாகத்தை உறுதி பாரு
பலுவாகும் பாகமதைக் கண்டு தேறு
பண்பாக எல்லாமும் பாரீற் கேளே. 207

பாரிலே ஞானம்வந்தால் வாத மாகும்
பதிவான சிவயோகப் பண்பு மாகும்
ஊரிலே காயசித்தி யுடனே யாகும்
ஓங்காரப் பொருளெல்லாம் உற்றுப் பாரு

சாரியே யோகமெல்லாம் எளிதி லாகும்
சாயுச்சிய பதிவாகும் சார்ந்து பாரு
வாரியே சகலமெல்லாம் கைக்குள் ளாகும்
வடிவாகச் சிவமயத்தை வணங்கிடாயே. 208

வணங்கிடவே ஆதாரப் பொருளைத் தானும்
வழியாக வணங்கி மெல்ல வலுவு பாரு
உணங்கிடவே தேக சித்தி யுடனே யாகும்
உற்றுமே காரணத்தை உற்றுப் பாரு
நணங்குமே நாடிடவே சித்தி மெத்த
நலமாக ராசயோ கத்தைப் பாரு
வணங்கிடவே சவுக் காரம் சுண்ணம் பாரு
பாவித்துச் சகலசரக் கதனைப் பாரே. 209

பாருநீ சவுக்காரம் சுண்ணம் பண்ண
பதிவான உபரசங்கள் எல்லாம் நீறும்
காருமே குளிகைமுதல் கோடி வேதை
கண்கொள்ளா ரசவாதம் கருணை யாகும்
வாருமே வங்கத்தைச் சுண்ணம் பண்ண
வடிவாகச் செம்பதுவும் வலுத்து நீறும்
ஏருமே உழுதாலோ சித்தி மெத்த
ஏரில்லா தறுத்தடித்த கதையு மாமே. 210

கதையாக விட்டிடமுந் தெரியா தாகும்
கருத்தனிலே வேதையொன்றுங் காணா தாகும்
அதையாச்சு இதையாச்சு என்று சொல்லி
அலக்கழிந்து போவானே யுலக வாதி
பதையாதே யுலகத்தில் பதிவு மாகும்
பண்பாக வாதவிதி யடுத்துக் கூடு
குதையாக வலுவறிய கோடி வேகம்
குணமாகும் மணமாகும் குருவைப் பாரே. 211

குருவைத்தான் பார்த்திடவே சித்தி மெத்த.
குணமாகக் கைபாக வரிசை பாரே
வருவாக அலைந்ததினால் வாத மாமோ
வடிவான சொற்குறுதி வளப்பம் பாரு
திருவான திருவறிந்தா லவனே சித்தன்
திடாகரித்தால் வாதியவன்! தீர்க்க வானாம்
புருவான புருவமையப் பொருளைக் காண
புனிதமய மாகுமே பொருந்து வாயோ. 212

பொருந்தவே சிவனுமைக்கு வங்கந் தன்னை
பொருளாகச் சுண்ணமதைப் புகன்று சொன்னார்
வருதலே அம்மைமனம் மகிழ்ந்து நோக்கி
வடிவான அசுவினிக்குச் சொன்னா ரையா
கருதவே அசுவினியுஞ் சந்தோ ஷித்துக்
கனிவாக விசுவனிக்குச் சொன்னா ரப்போ
பொருந்தவே விசுவனியும் மனம் மகிழ்ந்து
புகலரிய நந்திக்குப் புகன்ற வாறே. 213

வாறுகேள் நந்தியவர் மனம்மகிழ்ந்து
வடிவாகத் தன்வந்திரிக்கு உரைத்தா ரையா
தேறுகேள் தன்வந்திரி உளந் தெளிந்து
திடமாக அகத்தியருக்குச் சொன்ன போது
காறுகேள் அகத்தியரும் முவந்து வந்து
கனிவாகப் புலத்தியர்க்குச் சொன்ன போது
நாறுகேள் புலத்தியரும் உள மகிழ்ந்து
நலமான தேரருக்குச் சொன்ன வாறே. 214

சொன்னதொரு தேரருமே யுளந் தெளிந்து
சுருதிபெறு யூகியைத்தான் கூட்டி வந்து
நன்னதொரு உலகத்தோர் பிழைக்க வென்று
நலமான யூகிமுனி கைபா கத்தை
கன்னதோர் கைபாக விபர மாகக்
கனிவாக வுலகத்தில் பிழைக்க என்று
தன்னிகராய் வங்கமென்ற சுண்ணந் தன்னைத்
தாட்டிகமாய்ச் சொல்லிவிட்டார் தர்க்க மாமே. 215

நாகச்சுண்ணம்

ஆமேதான் சகலகலை ஆயிரத்தில்
அடைவாக நாகமது சுண்ணந் தன்னை
வாமேதான் பிடிவாதந் தன்னிலேதான்
வடிவாகச் சொல்லுகிறேன் வைத்துப் பாரு
காமேதான் நாகமது பலமும் பத்து
கனிவாக இலுப் பெண்ணெய் தன்னி லேதான்
தாமேதான் சாரமது போட்டு நீயும்
தப்பாமல் உருக்கியே சாய்த்தி டாயே. 216

சாய்த்திடவே நாகமது சுத்தி யாகும்
சரியாக நாகமது கரண்டி யிட்டு
ஏய்த்திடவே சாரமிட்டு உருக்கித் தீந
இதமாக நாகமெடை (சூதம்) சேரப் புட்டாம்

வாய்த்திடவே நாகமென்ற புட்டை நன்றாய்
வடிவாகக் கல்வத்தி லிட்டுக் கேளு
நாய்த்திடவே கம்பியுப்பை யிடையே சேரு
நலமாகப் பழச்சாறு விட்டு ஆட்டே. 217

ஆட்டியே வில்லைக்கட்டிக் காயப் போடு
அடைவாகப் பத்தெருவிற் புடத்தைப் போடு
கூட்டியே எடுத்துப்பார் மஞ்சளாகக்
குணமாக இருக்குமது பாகங் கேளு
நாட்டியே கல்வத்தி லிட்டுத் தானே
நலமாகப் பாணிவிட்டு இருசா மந்தான்
மூட்டியே அரைத்தலம்பு நீரைத் தானும்
முனிவாக இறுத்துமே முன்பு கேளே. 218

கேளுமே தெளிவிறுத்து அடியில் நின்ற
கெடியான நாகமதை வைத்துக் கொண்டு
ஆளுமே யின்னுமொரு பாகங் கேளு
அடைவான அண்டமென்ற சுண்ணந் தன்னை
பாளுமே எடைசரியாய்ச் சேர்த்துக் கொண்டு
வடிவாகப் பழச்சாறு விட்டு ஆட்டி
கூளுமே வில்லைகட்டிக் காயப் போடு
குணமாகக் காய்ந்தபின்பு குணத்தைக் கேளே. 219

குணமாகப் பெரியபுடம் போட்டெடுக்கக்
கூறுதான் நாகமது சுண்ண மாகும்
வணமாகச் சுண்ணமெடை வீரம் போட்டு
வடிவாகப் பழச்சாறு விட்டு ஆட்டித்
தணமாக வில்லைகட்டிக் காயப் போடு
தாட்டிகமாய்ப் பத்தெருவில் புடத்தைப் போடு
குணமாகத் தீயாறி யெடுத்துப் பாரு
கூடியே நாகமது சுண்ண மாமே. 220

216-220 உரை

நாகச்சுண்ணத்தை இந்நூலில் வடிவாகச் சொல்லுகிறேன். இலுப்பெண்ணையிற் சாரமிட்டுக் கலக்கி வைத்துக் கொண்டு, பத்துப்பலம் நாகத்தைக் கரணடியிலிட்டுச் சாரம் தூவி இருபத்தொருமுறை சாய்த்திடுக. நாகம் துயதாகும். அதனைக் கரண்டியில் இட்டு உருக்கி அதன் எடை ரசஞ் சேர்ப்பாயாக. அது பிட்டுப்போல் ஆகும்.

குறிப்பு: நாகத்தை உருகிய பருவம் பார்த்து இறக்கி வைத்துக்கொண்டு அதன் மேல் கண்ணுச்சிரட்டை வைத்துக் கொண்டு அதன் வழியாக ஊற்றுக. இன்றேல் ரசம் சீறி மேலே தெரிக்கும்.

அந்த நாகப்பிட்டினைக் கல்வத்திலிட்டு அதனளவு கம்பியுப்பென்ற வெடியுப்பைச் சேர்த்துப் பழச்சாறு விட்டு அரைத்திடுக. அரைத்து வில்லைதட்டிக் காயவைத்துப் பத்தெருவில் புடமிடுக. மஞ்சள் நிறமாக இருக்கும்.

அதனைக் கல்வத்தி லிட்டுத் தண்ணீர் விட்டு இருசாமம் அரைத்துப்பின் நீர்விட்டு அலம்பித் தெளிவை இறுத்து அடியில் நின்ற நாகத்துடன் அண்டச் சுண்ணம் அதனளவு சேர்த்துப் பழச்சாறு விட்டு ஆட்டி-வி-த-கா (வில்லை தட்டிக் காயவைத்து) பெரிய புடம் போடச் சுண்ணம் அதனளவு வீரம் அதனொடு சேர்த்துப் பழச்சாறு விட்டு அரைத்து வி.த.கா பத்தெருவிற் புடமிட நாகம் சுண்ணமாகும்.

துருசுச் சுண்ணம்

நாகமது கண்ணத்தைக் கல்வத் திட்டு
நலமாக வாயுநீர் தன்னா லாட்டிப்
பாகமது துருசின்மேல் கவசம் கட்டிப்
பதிவாகக் காய்ந்தபின்பு பகரக் கேளு
யோகமது பத்தெருவில் புடத்தைப் போடு
ஒழுங்காகத் துரிசுசெந் தூரமாகும்
நாகமது செந்தூரம் அருண மாகும்
வடிவாகச் செந்தூரம் எடுத்து வையே. 221

221. உரை

நாகச் சுண்ணத்தைக் கல்வத்தி லிட்டு வாயுநீரால் ஆட்டித் துரிசின் மேல் கவசமாகக் கட்டிக் காய்ந்த பின் பத்தெருவில் புடமிடு. துரிசு செந்தூரமாகும். புடத்தில் மிகுந்தால் அதுவே சுண்ணமாகும். செந்தூர நிலையில் அதனை நாக செந்தூரம் எனினும் தகும். ஆகவே துரிசுச் சுண்ணம், துரிசுச் செந்தூரம், நாகச் செந்தூரம் என மூவகையாகச் செய்யலாம்.

குறிப்பு : வாயு நீரென்பது உமிழ் நீரன்று. அது புகை நீர். அது பின்னர் விளக்கப் பெறும்.

புகைநீர்

எடுத்துமே வைத்தபின்பு புகைநீர் கேளு
இதமாக வெடியுப்பு அஞ்சாங் காய்ச்சல்
விடுத்துமே பலம்பத்து நிறுத்துக் கொண்டு
விதமாகச் சீனமது சொல்லக் கேளு

நடுத்துமே மூவெட்டுப் பலமு மாகும்
நலமாக ரெண்டுமொன்றாய்க் கலையத் திட்டு
முடுத்துமே வாலையென்ற சட்டி மூடி
முனிவாகச் சீலைமண் செய்தி டாயே. 222

222. உரை

ஐந்தாங் காய்ச்சல் வெடியுப்பு பத்துப்பலம் சீனம் பதினாறுபலம் இரண்டுமொன்றாய்ப் பொடித்துத் தோண்டியிட்டு மேலே வாலை மூடி சீ ம.செ (சீலைமண் செய்து) அடுப்பேற்றித் தாமரை மொட்டளவாகத்தி எரிக்கப் புகைநீர் வரும், வெள்ளை நீரை விலக்கி மஞ்சள் நீரை எடுத்துக் கொள்க,

நாகரச செந்தூரம்

செய்துமே வாலையென்ற அடுப்பி லிட்டுச்
சிறப்பாகத் தீ எரிக்க முன்னர் வந்து
பைதுமே இறங்குமது வெள்ளை நீராம்
பதிவாக வெள்ளைதனை வீசிப் போடு
கைதுமே மஞ்சள்நீர் தன்னை வாங்கு
வடிவாக வாங்கியதை வைத்துக்கொண்டு
நைதுமே சூதமது பலமு நாலு
நலமாகப் பீங்கானி லிட்டுக் கேளே. 223

இட்டுமே புகைநீரைக் கொஞ்சம் குத்து
இதமாகக் கதிர்முன்னே காய வைத்து
நட்டுமே காளான்போல் பொருமிப் போகும்
நலமாகப் பொருமியதை யெடுத்து வைத்துக்
கட்டுமே புகைநீரைக் கொஞ்சம் குத்தக்
கனிவாகக் காளான்போல் பொருமிப்போகும்
வட்டுமே இப்படிக்குப் பூக்கும் மட்டும்
வடிவாக ஊற்றிடவே வன்மை யாகும். 224

வண்மையாம் நாகமென்ற சுண்ணத் தோடே
வடிவாகப் பூத்தரசம் சேர்த்துக் கொண்டு
உண்மையாய் அரைத்து வில்லை தட்டி
உறுதியாய்ப் பொடியாக்கிக் குப்பிக் கிட்டுத்
தண்மையாய் அரைவாசி குப்பிக்கிட்டுத்
தாட்டிகமாய் வளப்பக்கல் லாலே மூடி
உண்மையாய்த் தளச்சட்டி மணலி லிட்டு
உறுதியாய் நாலுவிரல் கனமா யிட்டே. 225

இட்டுமே குப்பியதை மேலே யிட்டு
இதமாக மணலிட்டு அடுப்பி லேற்றி
திட்டுமே பன்னிரண்டு சாமத் தீத்தான்
கனிவாக எரித்துநீ பிரித்துப் பாரு
வட்டுமே அத்திக்காய் நிறமு மாகும்
வடிவான பீங்கானி லிட்டுக் கேளு
இட்டுமே புகைநீரைக் கொஞ்சம் குத்தி
குணமாக அரைத்துமே வறுக்கக் கேளே. 226

வறுக்கவே உமிநெருப்பில் வறுத்துப் போடு
வடிவாகக் காசியென்ற மேருக் கிட்டு
ஒறுக்கவே முன்போல பனிரெண்டு சாமம்
ஒத்துமே எரித்தெடுக்கச் சிவப்பு மாகும்
பொறுக்கவே இப்படிக்கு அஞ்சு தானும்
போக்கோடே எரித்தெடுக்கச் செந்தூர மாகும்
குறுக்குமே செந்தூரத் தனை யெடுத்துக்
குணமாகப் பூசிக்க வித்தை கேளே. 227

கேளுமே வைரவர்க்குத் தியானம் செய்து
கெடியாகக் கணபதிக்குப் பூசை செய்து
ஆளுமே இதையெடுத்து நவலோ கத்தில்
அணைத்திடவே நூற்றுக்கு ஒன்று தானும்
காளுமே இட்டிடவே மாற்றுக் கேளு
கனிவாகப் பத்தாகும் கண்டு பாரு
நாளுமே உப்புக்குங் காவிக்குந்தான்
நலமாக ஓடாது நடத்தை பாரே. 228

நடத்தையாஞ் செந்தூரம் தன்னை வைத்து
தலமாக வுண்டுடுத்தி ஞானந்தேடு
இடத்தையாம் பூரணத்தைப் பொறியால் மாட்டு
இதமான காயமுமே வலுத்துப் போகும்
படத்தையாம் மன்மதன் போல் வடிவு மாகும்
ஒருவரிடம் பேசாதே உண்மை சொன்னேன்
கடத்தையாம் வளமாக இருந்து கொண்டு
காரியமாய்ச் செந்தூரம் பார்த் திடாயே 229

பார்த்திடவே அந்திசந்தி பணங்கால் வீதம்
பாரிலே உண்டிடவே பலனைக் கேளு
நாத்திடவே வாதமென்ற தெல்லாம் போகும்
நலமான பித்தமெல்லாம் நாடா தோடும்
ஏத்திடவே சிலேற்பனங்கள் அனைத்தும் போகும்

இதமான மகோதரமும் ஓடிப் போகும்
பூத்திட்ட மலர்போல சயங்கள் போகும்
போக்கோடே பித்தவெட்டை போகுந் தானே. 230

போகுமே காமாலை கண்ட மாலை
புண்புரைகள் அரையாப்புப் பொருமி யோடும்
ஆகுமே வளிவாதம் ஓடிப் போகும்
அம்மம்மா கரப்பனொடு நீர்கள் போகும்
தாகுமே மேகநீர் எல்லாம் போகும்
தாட்டிகமாய் இலிங்கமென்ற புற்றுத் தானும்
வாகுபெற எல்லாமும் ஓடிப் போகும்
வடிவான குணமறிந்து வடிவு கூட்டே. 231

கூட்டிடவே பூப்போன்ற சுண்ணத் தோடே
குணமாக வீரமிட மஞ்ச ளாகும்
வாட்டிடவே எடை சமனாய்ச் சேர்த்துக் கொண்டு
வடிவாகப் புகைநீரை விட்டு ஆட்டி
நாட்டிடவே உமிநெருப்பில் வறுத்துப் போடு
நலமாகப் பொடியாக்கிக் கடத்தி லிட்டு
மூட்டிடவே சீலைமண் ணேழு செய்து
முனையாக வாலையென்ற அடுப்பி லேற்றே. 232

ஏத்தியே பனிரெண்டு சாமத் தீத்தான்
இதமாக எரித்து எடு பிரித்துப் பாரு
வாத்திடவே குங்குமம்போல் சிவந்து காணும்
வடிவாக எடுத்துதீ கல்வத் திட்டு
நாத்தியே புகைநீரை விட்டு ஆட்டி
நலமாக இருசாமம் சென்ற பின்பு
கூட்டியே உமிநெருப்பில் வறுத்துப் போடு
குணமாகக் கடத்திலடைகொள்கை தானே. 233

அடைத்துமே மேல்மூடிச் சீலை செய்து
அடைவாக வாலையென்ற அடுப்பி லிட்டுக்
கடைத்துமே பன்னிரண்டு சாமத் தீதான்
கனிவாக எரித்திடவே சிவந்து காணும்
படைத்துமே வயிரவற்குப் பூசை செய்து
பதிவாகச் செம்புதனில் நூற்றுக் கொன்று
துடைத்துமே கொடுத்துவிட மாற்றுக் கேளு
துடியாகப் பத்துத்தான் துலக்க மாமே. 234

ஆமேதான் பத்தான மாற்றுத் தன்னை
அடைவாக விற்றுநீ செலவு செய்து
நாமேதான் உண்டுடுத்திக் கற்பங் கொள்ளு
நலமாகக் கற்பத்துக் கிதுவே யாதி
பாமேதான் பூரணத்தைப் பரிந்து நோக்கிப்
பாகமாய்ப் பார்த்திடவே சித்தி மெத்த
வாமேதான் வாதசித்தி நாகத் தாலே
வடிவாகக் கைபாகம் வரிசை தானே. 235

வரிசையாம் வீரத்தால் சுண்ண மாச்சு
வடிவான உப்பாலே நீற்றினமு மாச்சு
வரிசையாய் இதுரெண்டால் உணர்வு மாச்சு
உற்றுமே நாகரசம் வலுத்துப் போச்சு
கரிசையாய்க் காணவென்றால் வழியோ கோடி
கைமுறையாய் வந்தாலே அநேகங் கோடி
துரிசையாய்ச் சொல்லாத வாதந் தானும்
துப்புரவாய் அநேகசித்தி யாகுந் தானே. 236

உரை 223 - 236

ஒரு பீங்கானில் நாலுபலம் இரசம் விட்டுப் புகைநீரைச் சிறிது ஊற்ற அது காளான் போன்று பொருமி நீறும் அதனை வெயிலில் வைத்துப் பார்த்து மேலுல் துளித்த ரசத்திலெல்லாம் புகைநீர் விட்டு முற்றிலும் பூக்கச் செய்து எடுத்து நாகச்சுண்ணத்தோடு சேர்த்து அரைத்து வி. த. கா. பொடியாக்கிக் காசிக்குப்பியில் அரைப்பாகத்தளவு போட்டு மாக்கல் வட்டுக்-கொண்டு மூடித் தளச் சட்டியில் நாலுவிரலளவு மணலிட்டு அதன்மேல் குப்பி வைத்துச் சுற்றிலும் மணல் நிரப்பிப் பன்னிரண்டு யாமம் எரித்துப் பிரித்துப் பார்க்க வில்லைகள் அத்திக்காய்போல் இருக்கும். எடுத்துப் புகைநீர் சிறிது விட்டு அரைத்து உமி நெருப்பில் வறுத்துக் குப்பியில் போட்டுப் பன்னிரண்டு யாமம் எரித்து எடுக்கச் சிவப்பாகும். இங்ஙனம் ஐந்து முறை எரித்தெடுக்கச் செந்தூரமாகும். வயிரவரையும் பிள்ளை-யாரையும் பூசித்து ஒன்பதுவகை உலோகத்திலும் உருக்குமுகத்தில் அள-வறிந்து கொடுக்க மாற்று பத்தாகும். உப்பும் காவியும் அரைத்துப் பூசிப் புடமிட்டாலும் நிறம் குறையாது. இதனைக் கொண்டு உண்டுடுத்தி ஞானந் தேடு. பூரணத்தைப் பொறியால் மாட்டு. உடல் வலுக்கும். மன்மதன்போல் உருவுமாகும். ஒருவருடன் பேசாதே உண்மை சொன்னேன்.

அந்திசந்தி பணங்கால் வீதம் உண்ண வாதம், பித்தம், சிலேற்-பனம், மகோதரம், சயம், பித்த வெட்டை, காமாலை, கண்ட மாலை, புண்புரைகள், அரையாப்பு, வளிவாதம், கரப்பான் நீர்கள், மேகநீர், இலிங்-கப்புற்று ஆகிய நோய்கள் ஓடி விடும். முன்சொன்ன சுண்ணத்தோடு

வீரம் சேர்க்க மஞ்சளாகும் ஒத்தளவு சேர்த்துப் புகைநீர் விட்டரைத்து உமிநெருப்பில் வறுத்துப் பொடியாக்கித் தோண்டியிலிட்டு மூடி சீ. ம. செ. வாலையடுப்பிலேற்றி 12 யாமம் எரித்துப் பிரித்துப் பார்க்கின் குங்குமம் போல் சிவந்து காணும். அதனை எடுத்துக் கல்வத்திலிட்டுப் புகைநீரை விட்டு அரைத்து இரண்டு சாமம் சென்ற பின்பு உமிநெருப்பில் வறுத்துக் கடத்திலிட்டு மேல் மூடிச் சீலை செய்து வாலையடுப்பிலேற்றிப் பன்னிரண்டு சாமம் தீயெரிப்பாயாக. சிவந்து காணும்; வயிரவர்க்குப் பூசை செய். செம்பில் நூற்றுக்கு ஒன்று கொடு. பத்து மாற்று. இதனை விற்றுச் செலவு செய்து கற்பங் கொண்டு பூரணத்தை நோக்கி ஞானம் பெறுக.

வாதசித்தி நாகத்தாலே. வீரத்தால் சுண்ணமாகும். உப்பாலே நீற்றினமாகும். இவையிரண்டால் நாகரசம் வலுத்துப் போகும்.

நாகக்கட்டு

ஆகுமே நாகத்தைக் கட்டக் கேளு
அடைவான நாகமது சேரு ஒன்று
வாகுமே இலுப்பெண்ணெய் தனிலே கேளு
வடிவான சாரமது கொஞ்ச மிட்டுத்
தாகுமே நாகத்தை யுருக்கிச் சாய்க்கத்
தப்பாமல் நாகமது சுத்தி யாச்சு
ஏகுமே நாகமது சுத்தி யான
இதமான நாகமெட்டு வெள்ளீயம் ரெண்டே. 237

செயநீர்

ரெண்டாகச் சாரமிட்டு உருக்கிப் பின்பு
நிலையாக வட்டாகச் சாய்த்துக் கொண்டு
கண்டாகத் தூரவே வைத்துக் கொண்டு
கனிவாகச் செயநீரைக் கருதக் கேளு
வண்டாக வீரமொன்று சார மொன்று
வடிவான கல்லுப்பு இடையே சேர்த்து
முண்டாக வெடியுப்பு விராகன் ரெண்டு
முனையாக இவையெல்லாம் புகைநீ ராட்டே. 238

ஆட்டியே குழம்பாக வைத்துக் கொண்டு
அடைவான நாகத்தைக் கரியில் வைத்துக்
கூட்டியே நாகத்தைப் பழுக்கக் காய்ச்சிக்
குண்மாகச் செயநீரில் தோய்ச்சுத் தோய்ச்சு
வாட்டியே பதினொருகால் தோய்ச்சுத் தோய்ச்சு
வடிவாக நாகத்தைச் சார மிட்டு

மூட்டியே உருக்கியே உண்டையாக
　　முனிவாக வார்த்துநீ முறையைக் கேளே. 239

முறையாக வளையலுப்புச் சேரு ஒன்று
　　முனையாகக் கல்வத்தி லிட்டுக் கொண்டு
அறையாகப் பழச்சாறு லிட்டு ஆட்டி
　　அடைவாக நாகத்தின் மேலே கட்டிக்
குறையாகக் கரியோட்டில் குமற வாட்டு
　　குணமாகக் கல்லாகப் பின்பு கேளு
நறையாகச் சுண்ணாம்புக் கவசம் கட்டி
　　நலமாகப் பத்தெருவிற் புடத்தைப் போடே. 240

நாகப்புட்டு

போடவே நாகமது புகைய டங்கும்
　　பொல்லாத துர்க்குணங்கள் ஓடிப் போகும்
ஆடவே தங்கமது பலத்தை வாங்கு
　　அடைவாகத் தகடாகத் தட்டிக் கொண்டு
மூடவே கற்காவி பழச்சாறு விட்டு
　　முறையாக அரைத்துநீ குழப்பிக் கொண்டு
தேடவே தங்கமென்ற தகட்டைத் தோய்க்க
　　துப்புரவாய்த் தங்கமது எண்ணெய் கக்கும். 241

கக்குமே தங்கத்தி லிருந்த எண்ணெய்
　　தாட்டிகமாய்க் கக்கிவிடும் தன்மை கேளு
மிக்கவே நாகமது கட்டி நின்ற
　　முனையான நாகமது பலமு மொன்று
துக்கவே தங்கமது சேர்த்து உருக்கத்
　　துடியாக இரண்டுமது சேர்ந்து தானும்
விக்கவே பிட்டாகும் கல்வத் திட்டு
　　விதமாக வெடியுப்பு இடையே சேரே. 242

மேற்படி செந்தூரம்

சேர்த்துநீ தங்கமென்ற பிட்டி னோடே
　　செயமாக வெடியுப்பு அஞ்சாங் காய்ச்சல்
வார்த்துமே எடை சமனாய்ச் சேர்த்துக் கொண்டு
　　வடிவாகப் பழச்சாற்றில் சாமம் நான்கு
கார்த்துமே யரைத்திட்டு வில்லை கட்டிக்
　　கனிவாகக் கதிரிலிட்டுக் காயப் போடு
வார்த்துமே காய்ந்த பின்பு புடத்தைக் கேளு
　　வடிவாகப் பத்தெருவிற் புடத்தைப் போடு. 243

புடம்போடு ஆறவிட்டு எடுத்துப் பாரு
பேராக இட்டுமே பாணி யாலே
நடம்போடு இருசாமம் அரைத்து மைபோல்
நலமாகக் கொதி யிட்டுத் தெளிவிறுத்து
கடம்போடு அடியில் நின்ற மட்டைதானும்
கனிவாக இனமதுவைத் தூர வைத்து
விடம்போடு செம்புதனைத் தகடு தட்டி
விதமாக நாயுருவிச் சாற்றில் தோயே. 244

தோய்த்துமே அதராக எடுத்துக் - கொண்டு
துடியாகக் கல்வத்தில் இட்டுக் கேளு
நாத்துமே நாயுருவிச் சாற்றி னாலே
நலமாக அரைத்துவில்லைகட்டி நீயும்
வாய்த்துமே கதிரிலிட்டுக் காயப் போடு
வடிவாகக் காய்ந்த பின்பு வகையைக் கேளு
மாய்த்துமே பத்தெருவில் அடுக்கிப் போடு
மயமாக எடுத்துப்பார் செந்தூர மாமே. 245

ஆமேதான் தாம்பூரச் செந்தூரந் தான்
அடைவாகப் பலமொன்று கல்வத் திட்டு
நாமேதான் தங்கமது பற்பந் தன்னை
நலமாக இருசாமம இடையே ஆட்டி
வாமேதான் புகைநீரை விட்டுத் தானும்
வடிவாக இருசாமம் அரைத்து மைபோல்
தாமேதான் கதிரிலிடு காய்ந்தபின்பு
தாட்டிகமாய்ப் பொடியாக்கிக் கடத்தி லிட்டே. 246

இட்டுமே மேல்மூடிச் சீலை செய்து
இதமாக வாலையென்ற அடுப்பி லிட்டு
கட்டுமே யிருசாமம் எரித்துப் பாரு
கனிவாகச் செவ்வல்லிப் பூப்போ லாகும்
வட்டுமே செந்தூரத் தனையெ டுத்து
வடிவாகச் செம்புதான் நூற்றுக் கொன்று
குட்டுமே கொடுத் துருக்கு பத்துமாகும்
குணமாக உப்புக்கும் காவிக் காமே 247

ஆமேதான் அருகுகட்டி யிறங்கும் பாரு
அடைவாக இப்பொன்னை விற்று நீயும்
காமேதான் உண்டுடுத்திப் பின்பு கேளு
கனிவாக வாசியோ கத்தைப் பாரு

நாமேதான் பூரணத்தின் நிலைமை பாரு
நலமாக யோகசித்தி காய சித்தி
பாமேதான் ராசயோ கத்தின் சித்தி
பதிவாகப் பார்த்திடவே சித்தி யாமே. 248

சித்தியாம் அந்திசந்தி பனங்கால் வீதம்
சிறப்பாக திரிகடுகில் உண்டு வாநீ
புத்தியாம் நரைதிரைகள் அற்றுப் போகும்
பொலிவான குன்மமெல்லாம் ஓடிப் போகும்
நத்தியே நரித்தலையின் வாதம் போகும்
நலமான வளிவாதம் நாடா தோடும்
பத்தியாய் மேகமென்ற வாயு வெல்லாம்
பதிவாக வோடிவிடும் பண்பு மாமே. 249

ஆமேதான் பித்தவலி பித்த வாயு
அடைவான புத்தெல்லாம் ஆறிப் போகும்
நாமேதான் சிலேற்பனங்கள் நாடா தோடும்
நலமறிந்து புளியுப்புங் கலந்து தள்ளு
காமேதான் பித்தவலி பித்த வாயு
கனிவான நரைதிரைகள் காணா தோடுப்
சாமேதான் சூலையெல்லாம் தவறிப் போகும்
சரியான யோக சித்தி யாகும் பாரே. 250

ஆகுமே நவகண்டம் தன்னி லேதான்
அடைவாக வாதசித்தி மந்திர சித்தி
வேகுமே குளிகை சித்தி வயித்திய சித்தி
இதமாக எல்லாமும் சித்தி யாகும்
பாகுமே பிடிவாதம் தன்னைப் பாரு
பதிவாக இந்நூல் முடிவு பாரு
தாகுமே சகலமெல்லாஞ் சித்தி யாகும்
தாட்டிகமாய்க் காதலுடன் தன்மை யாமே. 251

தண்மையாம் சித்திக்க வேணு மென்றால்
தாட்டிகமாய் வினையமெல்லாம் சோதிச் சேறு
உண்மையாம் மெய்ப்பொருளை யுடனே பாரு
உற்றுநீ சகல சித்தி யாகும் நேர்மை
வண்மையாம் நூலறிந்தோர் வடிவு காண
வாதாடிச் சாத்திரத்தில் மருவிப் பாரு
கண்மையாம் சகலமெல்லாம் கைக்குள்ளாகும்
கனிவாகக் கண்டறிந்த கணக்கு மாமே 252

கணக்காக வாதத்துக் காசா னான
கனிவான தங்கந்தான் தாயு மாகும்
பிணக்காகத் தங்கத்தை விட்டா னானால்
பெருமைதரும் பொன்னில்லை பேதை வாதி
உனக்காகப் பொய்சொல்லும் வாதிக் குத்தான்
உண்மையாய் ஒன்றுமில்லை உற்றுப் பாரு
வணக்காகக் கண்டதெல்லாம் சித்தி யாகும்
வடிவான கரயசித்தி வடிவு மாமே. 253

ஆமேதான் வடமொழியைக் கண்டு தேறி
அடைவாக வடகிரந்தம் பார்த்துத் தானும்
நாமேதான் கைபாகம் உடனே சொன்னேன்
நலமாகக் கைபாகம் தன்னைக் காண
வாமேதான் வெகுகாலம் ஆகும் பாரு
வடிவாக அறியாதார் கோடா கோடி
சாமேதான் சொல்லிவிட்டேன் பிடிவா தத்தில்
நலமறிந்து செய்திடவே சித்தி யாமே. 254

237-254 உரை

இலுப்பை யெண்ணெயில் சாரம் சிறிது போட்டு ஒருசேர் நாகத்தை-யுருக்கிச் சாய்க்கத் தூயதாகும். அந்த நாகம் எட்டு வெள்ளீயம் இரண்டு சாரமிட்டுருக்கி வட்டாகச் சாய்த்து எடுத்து வைத்துக் கொள்க. செயநீர் கேள். வீரம் ஒன்றும் சாரம் ஒன்றும் கல்லுப்பினளவுக்குச் சேர்த்து வெடியுப்பு இரண்டு விராகன் கூட்டிப் புகைநீர் விட்டரைத்துக் குழம்பாக்கி வைத்-துக்கொண்டு அதனுள் நாகத்தைக்கரியில் வைத்துப் பழுக்கக் காய்ச்சித் தோய்த்துத் தோய்த்துப் பதினொரு முறை தோய்க்க. பின்னர் சாரமிட்டு உருக்கி உருண்டையாக வார்த்து வளையலுப்பைப் பழச்சாறு விட்டரைத்து அதன்மேல் கட்டிக் காய்ந்த பின் கரி யோட்டில் குமுற வாட்டு. நாகம் தீக்குணங்கள் நீங்கிப்புகையடங்கிக் கட்டும் பின்னர் தங்கத்தைத் தகடாகத் தட்டிக் கற்காவியும் பழச்சாறும் சேர்த்து அரைத்துக் குழப்பித் தகட்டை அதில் தோய்த்து ஏழுமுறை எடுக்க எண்ணெய் கக்கித் தூய-தாகும். நாகம் ஒருபலத்தில் தங்கம் சேர்த்து உருக்கப் பிட்டாகும். அதனைக் கல்வத்திலிட்டு வெடியுப்பு அதனளவு சேர்த்துப் பழச்சாறு விட்டு நாலுசாமம் அரைத்துப் பின் வில்லைகட்டிக் காய்ந்த பின்பு பத்-தெருவிற் புடமிடுக. பின்பு அதில் தண்ணீர் விட்டு அரைத்துக் கொதிக்க வைத்து இறுத்து அடியில் நின்ற மட்டியை எடுத்து வைத்துக் கொள்க. பின்னர் செம்பினை உருக்கித் தகடு தட்டி நாயுருவிச் சாற்றில் தோய்த்து அதராக நொறுங்கிய சிதறல்களை எடுத்துக் கல்வத்திலிட்டு நாயுருவிச் சாற்றால் அரைத்து வி. த. கா. பத்தெருவில் அடுக்கிப் புடமிட்டுவைக்கச்

செந்தூரமாகும். இச்செந்தூரம் ஒருபலம் நிறுத்து முன்கூறிய தங்க-பற்பம் இதனொடு சேர்த்து இரண்டு யாமம் அரைத்துக் (புகைநீரால்) காயவைத்துக் கடத்திலிட்டு (கடம்-தோண்டி) மேல்மூடி-சீ. ம. செ.கா, வாலையடுப்பில் இருசாமம் எரிக்கச் செவ்வல்லிப் பூப்போல் செந்தூரமாகும் செம்பில் நூற்றுக்கு ஒன்று பத்து மாற்று. செலவு செய்து ராசயோகம் பார்.

திரிகடுகில் காலை மாலை காற்பணத்தளவு உண்டு வர நரை திரைகள் அற்றுப் போகும்.

குன்மம், நரித்தலைவாதம், வளிவாதம், மேகம், வாயு, பித்தவலி, பித்தவாயு, புற்றுநோய், சிலேற்பனங்கள் ஆகிய நோய்கள் நீங்கும். புளி உப்பு நீக்குக. சூலை நோயும் நீங்கும். இந்நூலைக் காப்பு முதல் கடை வரை நோக்குக. நவகண்டங்களிலும் வாதசித்தி, வயித்தியசித்தி, மந்திர சித்தி, குளிகை சித்தி எல்லாம் உண்டாகும். கைபாகம் கண்டு தேற நாளாகும். இந்நூலில் கைப்பாகம் சொல்லிவிட்டேன்.

திரிவங்கம்

சித்தியாம் திரிவங்கக் செந்தூ ரத்தைச்
செப்புகிறேன் நாதாக்கள் கைபா கத்தை
நத்தியே பிடிவாதந் தன்னி லேதான்
நலமாக ஆயிரத் திருநூறு தன்னில்
முத்தியாய்ச் சொல்லுகிறேன் உற்றுப் பாரு
மோகமாய்ச் செய்தாக்கால் எல்லாம் சித்தி
வித்திலே முளைத்ததொரு முளையைப் போல
விதமாக எல்லாமும் பார்த்தி டாயே. 255

பார்த்திடவே திரிவங்கச் சுத்தி கேளு
பதிவாகக் காரீயம் பலந்தா னெட்டு
ஏத்திடவே குகையிலிட்டு உருக்கி நீயும்
இதமாகக் கற்றாழம் பாலில் தானும்
வார்த்திடவே உருக்கியே சாய்ச்சுப் போடு
வடிவாக மூவேழு தரமும் சாய்ப்பாய்
நாத்திடவே எண்ணெய் கக்கும் காரீ யத்தை
நலமாக எடுத்துவைத்து நவிலக் கேளே. 256

நவிலவே நாகமது பலமும் நாலு
நலமாகச் சாரமிட்டுக் கரண்டி தன்னில்
உவிலவே யிட்டுருக்கிப் பின்பு கேளு
உறுதியாய் இலுப்பெண்ணெய் தன்னி லிட்டுக்

கவிலவே இருபத்தி யொன்று தானும்
கனிவாகச் சாய்த்திடவே சுத்தி யாச்சு
உவிலவே யிதையெடுத்து வைத்துக் கொள்ளு
இதமாக வெள்ளீயம் பலமும் வாங்கே. 257

பலம்நாலு ஆட்டமுரி படியொன் றுக்குள்
பதிவாக வெள்ளீயம் உருக்கிச் சாய்ப்பாய்
பிலனாகத் தரம்எட்டு உருக்கிச் சாய்க்கப்
பேர்பெரிய வெள்ளீயம் நீரை வாங்கும்.
கலமாகத் தங்கத்தைத் தகடு தட்டி
கனிவாகப் பழச்சாறு கல்காவி தன்னை
அலனாக விட்டரைத்துக் குழப்பிக் கொண்டு
அடைவாகக் காய்ச்சியே தோய்த்தி டாயே. 258

தோய்ச்சிடவே ஏழுதரம் பழுக்க காய்ச்சித்
துடியாகத் தோய்த்திடவே எண்ணெய்க் கக்கும்
வாய்ச்சிடவே திரிநாகம் சுத்தி செய்து
வடிவாக வைத்துப்பின் வகையைக் கேளு
நாய்ச்சிடவே மூன்றுமொன்றாய் உருக்கிக் கொண்டு
நலமாகச் சூதத்தைத் தொந்திச் சேதான்
பாய்ச்சிடவே எடைசமனாய்த் தொந்திக் சேறு
பதிவாகப் பிட்டாகும் பாரி லோற்கே. 259

பாரிலே பிட்டாகும் பிட்டி னோடே
பதிவாக வெடியுப்பு இடையே சேர்த்துக்
காரிலே பழச்சாறு விட்ட ரைத்துக்
கருணைபெற நாற்சாமம் சென்ற பின்பு
வாரிலே கதிர்முன்னே காய வைத்து
வடிவாக மேற்கவசம் வலுவாய்ச் செய்து
நாரியே பத்தெருவிற் புடத்தைப் போடு
நலமாகத் தீயாறி எடுத்துப் பாரே. 260

எடுத்துப்பார் வெண்ணீறாய்ப் பொருமிப் போகும்
இதமாகப் பொருமினதைக் கல்வத் திட்டு
அடுத்துமே பாணிபிட்டு அரைத்துச் சாமம்
அடைவாகக் கழுவியிறு வெடியுப்புத் தான்
நடுத்துமே கரைந்துமே வெண்ணீ றாகும்
நலமாக இருக்குமே இறுத்துப் போடு
விடுத்துமே அடியில் நின்ற மட்டை தானும்
விதமாகத் தண்ணீர்விட்டுக் கழுவி டாயே. 261

கழுவியே அரைத்தரைத்து இறுத்துப் போடு
கனிவாக அடியில்நின்ற மட்டை யோடே
நழுவியே சேர்க்கும்வகை சொல்லக் கேளு
நலமாகக் கொச்சியென்ற வீரந் தானும்
உழுவியே எடைசமனாய்ச் சேர்த்து நீயும்
உறுதியாய்ப் பழச்சாறு விட்ட ரைத்துத்
தழுவியே வில்லைதட்டிக் கதிரிற் போடு
தாட்டிகமாய்க் காய்ந்தபின்பு தன்மை கேளே. 262

தன்மையாய்க் காய்ந்தபின்பு சொல்லக் கேளு
தாட்டிகமாய் ஓட்டிலிட்டுச் சீலை செய்து
உண்மையாய்க் கதிர்தன்னில் காய வைத்து
உறுதியாய்ப் பத்தெருவிற் புடத்தைப் போடு
வன்மையாய்ப் புடமாறி எடுத்துப் பாரு
வடிவாகத் திரிவங்கம் சுண்ணாம் பாகும்
கன்மையாய்த் திரிவங்கம் சுண்ணாம் பானால்
கனிவாக எல்லாமும் சுண்ண மாமே. 263

சுண்ணாம்பாய்ப் போகும் இருபத் தைந்தும்
சூட்சமாம் சுருதியாய்ச் சுண்ண மாகும்
கண்ணமாம் உபரசங்கள் சுண்ண மாகும்
கட்டாகும் மெழுகாகும் கண்டு பாரே.
துண்ணமாம் உபரசங்கள் ஈய மாகும்
துடியான சகலமுந் தாள் சித்தியாகும்
வெண்ணமாம் சித்தியெல்லாம் உபரசத்தாலே
விதமாக எல்லாமும் சித்தி யாமே. 264

சித்தியது ஏதென்றால் சொல்லக் கேளு
சிறப்பாகத் திரிவங்கச் சுண்ணந் தன்னை
முத்தியாய்க் கல்வத்தி லிட்டுத் தானும்
முனையாகப் பழச்சாறு விட்டு அரைத்து
நத்தியாய்ப் பலக்கத்தான் மேலே தானும்
நலமாகப் பூசியே நாட்டங் கேளு
வத்தியே கதிர்முன்னே காய வைத்து
வடிவாகச் சுண்ணாம்புக் கவசம் கட்டே. 265

கட்டியே பத்தெருவில் புடத்தைப் போடு
கனிவாகத் தீயாறி எடுத்துப் பாரு
முட்டியாய்க் கவசத்தை உடைத்துப் பார்த்தால்
புதிதாகத் துரிசதுவும் சுன்ன மாகும்

வட்டியே துரிசினுடைய சுண்ண மாகும்
வடிவாகத் சித்த-ரெல்லால் குளிகை பண்ணி
முத்தியே மூவுலகும் பறந்து போனார்
முனிவாகத் துரிசினுட சுண்ணந் தானே. 266

ஆட்டான துரிசினுட சுண்ணந் தன்னை
அடைவாக தவலோகம் நூற்றுக் கொன்று
காட்டான இட்டிடவே தங்க மாகும்
கனிவாக இதைவிற்றுச் செலவு செய்து
வாட்டாக வுண்டுடுத்தி வழியைத் தேடு
வடிவாகச் சுழிமுனையை வழியில் தேறு
காட்டான குபேரன்போல் வாழ்வுண் டாகும்
குணமாக எல்லாமுஞ் சித்தி யாமே. 267

ஆமேதான் திரிவங்கச் சுண்ணந் தன்னை
அடைவாகச் செம்பதனில் நூற்றுக் கொன்று
வாமேதான் இட்டிடவே செம்புதானும்
வடிவாகப் பழுத்துவிடும் எட்டு மாற்றாம்
காமேதான் எட்டான மாற்றி னோடே
கனிவாக வெள்ளியெடை தானெ டுத்துத்
தாமேதான் உருக்கிடவே மாற்றுக் கேளு
தாட்டிகமாய்ப் பத்தாகும் சார்த்து பாரே. 268

255 - 268 உரை

காரியம் எட்டுப் பலம் எடுத்துக் குகையிலிட்டு ருக்கிக் கற்றாழம் பாலில் இருபத்தொரு முறை சாய்த்துத் தூயதாக்கிக் கொள்க. நாலுபலம் நாகத்தை இலுப்பெண்ணெய்யிற் சாரமிட்டு இருபத்தொரு முறை உருக்கிச் சாய்த்து எடுக்க.

நாலுபலம் வெள்ளீயத்தை ஆட்டமுரியில் எட்டுமுறை உருக்கிச் சாய்த்து எடுக்க பழச்சாறும் கற்காவியும் அரைத்துக் குழப்பி அதனுள் தங்கத் தகட்டை காய்ச்சித் தோய்ப்பாயாக. நாலுவகையும் சுத்தமாகும்.

காரியம் வெள்ளீயம் நாகம் ஆகிய மூன்றினையும் ஒன்றாகச் சேர்த்துக் குகையிலிட்டுருக்கி இறக்கி வைத்துக் கொண்டு அதன்மேல் கண்ணுச்சிரட்டை வைத்து மூடி அம்மூன்றனெடைச் சூதத்தை ஊற்றுக. சுரீரென்று உள்ளே வாங்கிப் பிட்டாகும். அதனெடைக்கு வெடியுப்புச் சேர்த்துப் பழச்சாறுவிட்டு அரைத்து நாற்சாமம் கழித்து வெயிலில் காய வைத்து மேற்கவசம் நன்றாய்ச் செய்து பத்து எருவில் நன்றாய்ப் புடமிடுக. வெண்ணீறாய்ப் பொருமிப் போகும். அதனைக் கல்வத்திலிட்டுப் பாணி விட்டு ஒருசாமம் அரைத்துக் கழுவி இறுக்க வெடியுப்புக் கரைந்து போகும்.

அடியில் நின்ற மட்டை நன்றாகத் தண்ணீர்விட்டுக் கழுவு. மீண்டும் அரைத்து இறுத்து எடுத்து வீரம் சமனெடை சேர்த்துப் பழச்சாறு விட்டரைத்து வி. த. கா. சீ. ம. செ பத்தெருவிற் புடமிடுக. திரிவங்கம் சுண்ணாம்பாகும் அதனால் மற்ற இருபத்தைந்து வகை உப்பும், உபரசங்கள் 120 வகையும் சுண்ணமாகும், கட்டாகும், மெழுகாகும், உபரசங்கள் ஈயமாகும். சித்தியெல்லாம் உபரசத்தாலே. திரிவங்கச் சுண்ணத்தைக் கல்வத்திலிட்டுப் பழச்சாறு விட்டரைத்துத் துரிசுக்குக் கவசம் செய்து பத்தெருவில் புடமிடு. துரிசு சுண்ணமாகும். இச்சுண்ணத்தால் குளிகை செய்து சித்தரெல்லாம் மூவுலகும் பறந்து சென்றார். இச்சுண்ணத்தை நூற்றுக்கு ஒன்று வெறும் பொன் ஒன்பது வகையிலும் கொடுக்க அவை செம்பொன்னாகும் இதனை விற்றுச் செலவு செய்து சுழிமுனை வழியில் நில். குபேரன்போல் வாழ்வு உண்டாம். செம்பில் எட்டுமாற்று, வெள்ளி சேர்த்துருக்கப் பத்துமாற்றாகும்

திரிவங்கச் செந்தூரம்

பாருமே திரிவங்கச் சுண்ணந் தன்னைப்
பதிவாகப் பலம்நிறுத்து வைத்துக் கொண்டு
காருமே செம்புருக்கி இடையே தாக்கு
கனிவாகச் செம்பதுவும் நொறுங்கிப் போகும்.
நாருமே அதையெடுத்துக் கல்வத் திட்டு
நலமாகப் பதங்கம் மூன்று சொல்லக் கேளு
வாருமே சூதமது பலமும்நாலு
வடிவாக வெள்ளீயம் பலமும் நாலே. 269

நாலாகப் பலம்நாலு கரண்டியிட்டு
நலமாக உருக்கியே சூதம் சேரு
காலாகப் புட்டாகும் புட்டைத் தானும்
கல்வத்தீ லிட்டுமே சொல்லக் கேளு
பாலாக வெற்றிலையின் சாற்றினாலே
பதிவாக இருசாமம் அரைத்து வில்லை
சேலாகத் தட்டியே காய வைத்துத்
திடமாகக் காய்ந்தபின்பு சொல்லக் கேளே. 270

சொல்லவே கடமிட்டு மேலே மூடிச்
சுயமாகச் சீலைமண் வலுக்கச் செய்து
கல்லவே வாலையென்ற அடுப்பி லிட்டுக்
கனிவாக இருசாமம் எரித்துத் தீரு
முல்லவே சூதமது உயரே ஏறி
முனிவாக இருக்குமது தீயை ஆற்றி

நல்லவே பிரித்துப் பார் மயர்க்குச்சி யாலே
நலமாக வழித்துமே நாட்டக் கேளே. 271

நாட்டவே வழித்துநல்லாய்த் துணியி லிட்டு
நலமாகப் பிழிந்திடவே சூதத் தானும்
வாட்டவே தும்பைமலர் போலே யாகும்
வடிவாக வாடையெல்லாம் ஓடிப் போகும்
ஊட்டவே சுத்தியது நல்ல சுத்தி
உறுதியாம் சுத்தித்த சூதந் தன்னை
கூட்டவே யெடுத்துநீ வைத்துக் கொண்டு
குணமாகச் சேர்பத்து உப்புத் தானே. 272

சேராகி உப்புடனே செங்கல் மாவு
சேர்த்துமே எடையாக அரைத்து மைப்போற்
காராகச் சட்டியிட்டு வறுத்துப் போடு
கனிவாகப் பொடியாக்கிப் பாதி தானும்
வாராகக் கடத்தி லிட்டு அமுக்கி நல்லாய்
வடிவாகப் பள்ளத்தில் சூத மிட்டு
பாராக மேலுப்பு மூடிப் போடு
பதிவாக மேற்கடந்தான் மூடு வாயே. 273

மூடியே சீலைமண் வலுக்கச் செய்து
முடிவாக வாலையென்ற அடுப்பிலிட்டுக்
கூடியே பனிரெண்டு சாமந் தானும்
குணமாக எரித்திடவே தீயை ஆற்றி
வாடியே எடுத்துப்பார் சூதந் தானும்
வடிவாகத் தும்பைமலர் போலாம் பற்பம்
காடியே பற்பத்தை மயிரிளுலே
கனிவாக வழ்த்துமே சொல்லக் கேளே. 274
சொல்லவே சூதபற்பம் செம்பிளுேடே

செயமாகச் சேர்த்துமே கல்வத் திட்டு
நல்லவேபழச்சாறு விட்டு ஆட்டி
நலமாக வில்லேக்கட்டிக் காய வைத்து
உல்லவே காய்ந்தபின்பு பொடியு மாக்கி
யுறுதியாய்க் காசியென்ற மேருக் கிட்டு
வல்லவே குப்பிக் கரை வாசி யிட்டு
வடிவாகச் சிலேமண் வலுக்கச் செய்யே 275

வலுக்கவே செய்தபின்பு வளப்பக் கல்லால்
வடிவாக மூடியே சொல்லக் கேளு
கலுக்கவே தளச்சட்டி தன்னிலேதான்
கனிவாக நாலுவிரல் சலங்கை மண்ணு
உலுக்கவே விட்டுநீ அமுக்கிப் போடு
உறுதியாய் காசியென்ற மேரு தன்னை
அலுக்கவே அதிலிட்டுச் சுற்றித் தானும்
அடைவாக மணலிட்டு அறையக் கேளே 276

அறையவே அமுக்கிநீ வாலை தன்னில்
அடைவாக வைத்துமே ஆண்மை கேளு
கறையவே பன்னிரண்டு சாமந் தீத்தான்
கனிவாகக் கமலம் காடாக்கினி யாக
நரையவே எரித்துப் பார் தீயையாற்றி
நலமாகப் பார்த்திடவே குப்பி தன்னை
குறையவே மணல்சிவக்கும் பருவம் பாரு
குணமாகக் குப்பி தனையெடுத்துக் கொள்ளே. 277

கொள்ளவே குப்பிஉடை நடுவி லேதான்
குணமாக அடியில்நிற்கும் முருக்கம்பூப்-போல்
நள்ளவே யிதைஎடுத்துச் சீசா தன்னில்
நலமாக இட்டுமே நாட்டக் கேளு
இள்ளவே வயிரவர்க்குப் பூசை பண்ணு
இதமாகக் கணபதிக்குப் பூசை பண்ணு
தள்ளவே செம்புருக்கி நூற்றுக் கொன்று
தாட்டிகமாய் இட்டிடவே மாற்றுக் கேளே. 278

இட்டிடவே மாற்றென்ன பனிரண்டாகும்
இதமாக இம்மாற்றைக் குறைக்கக் கேளு
கட்டிடவே வெள்ளிதான் இடையே சேர்த்துக்
கனிவாக உருக்கிடவே கனிந்து பாரு
விட்டிடவே மாத்தெட்டு உரைக்குக் காணும்
விதமாக உரைதானும் 'நல்லாக் காணும்
வட்டிடவே இதைச் செய்யும் வன்மை கேளு
வடிவாகச் சொல்லுகிறேன் வடிவு மாமே. 279

வடிவாக மெழுகாலே வயிரவன் தான்
வளமாகப் பண்ணியே மண்ணைக் கட்டு
துடியாக மண்ணிலே காயப் போடு
துணையாகக் காய்ந்தபின்பு மெழுக கற்று

நொடியாக அகற்றியே பின்பு கேளே
    நுணுக்கமாய்த் தங்கத்தை உருக்கிச் சாய்த்துப்
படியாக விக்கிரகம் பண்ணித் தானே
    பதிவாக வைத்துநீ பதிவு கேளே. 280

பதிவாக வைத்துநீ பூசை செய்து
    பகற்காலம் ஐந்தெழுத்தும் எட்டெழுத் தும்
நிதியாக ஓதியே நினைவாய்த் தானும்
    நிலையாகச் சூதமணி யாலே பூசி
கதிவாகப் பூசிக்கும் போது தானும்
    கனிவாக வாதமது ஏவல் கேட்கும்
நிதியாக வாதமது வந்து காணும்
    நிலையாக இந்த வித்தை நிசமு மாமே. 281

ஆமேதான் முன்வைத்த செந்தூரத்தை
    அடைவாக அந்திசந்தி பனங்கால் வீதம்
நாமேதான் உண்டிடவே சொல்லக் கேளே
    நரைதிரைகள் அற்றுவரும் உடலில் தானும்
வாமேதான் வலிகுன்மம் வாத குன்மம்
    வடிவான வாதம்எண்பத்தி நாலும்
காமேதான் பருதிகண்ட பனிபோ லாகும்
    பதிவாக இன்னமொன்று புகலக் கேளே. 282

புகலவே நரித்தலையின் வாதம் போகும்
    பொல்லாத நோயெல்லாம் பொருந்த ஓடும்
அகலவே காயசித்தி உடனே யாகும்
    அம்மம்மா கவனசித்தி கணத்தி லாகும்
உகலவே பித்தமெல்லாம் ஓடிப் போகும்
    உற்றுமே பார்த்திடவே சித்தி மெத்த
நகலவே நமனுண்ட கற்பமாகும்
    நாடறியக்காயசித்தி ஆட லாமே. 283

ஆடவே மேகநீ ரிழிவு போகும்
    அடைவான வெம்மையொடு வாயு போகும்
ஊடவே வளிவாதம் அந்திர வாதம்
    ஒழிந்துமே கடல்தனில் புக்கி யோடும்
நாடவே சிலேற்பனங்கள் நடுக்கல் வாதம்
    நலமான கூனிமுதல் வாதம் போகும்
பாடவே பரமபத வாதமெல்லாம்
    பகல்கண்ட பனிபோல ஓடுந் தானே. 284

தானென்ற பவுத்திரங்க்ள் ஆறும் போகும்
தாட்டி கமாய்க்கண்ட மாலைகளும் போகும்
வானென்ற காமாலையெல்லாம் போகும்
வடிவான பிறவீச்சு மாண்டு போகும்
நானென்ற நடுக்கலொடு கூனி வாதம்
நலமான தமரகமாய் வாதம் போகும்
கோனென்ற குடல்வாதம் குண்டலி வாதம்
குணமாகப் போகுமெனக் கூற லாமே. (285)

கூறவே பாண்டுவொடு குன்மம் போகும்
குலமான பித்தபாண் டுகளும் போகும்
வாறவே வழியான பாண்டு தீரும்
வையகத்தில் திமிர்வாதம் எல்லாம் போகும்
நாறவே திமிர்குட்டம் திருகுகுட்டம்
நலமான கருங்குட்டம் வெண்குட்டந் தான்
ஊறவே உளவான குட்ட மெல்லாம்
ஓடிவிடும் நன்றாக உறுதி பாரே. (286)

உறுதிபார் சட்டைகக்கும் ரணங்கள் தீரும்
ஓகோகோ பாசுபதம் உடனே யாகும்
வறுதிபார் விந்திறுகும் கணங்கள் தீரும்
வடிவான குருவெளியின் மார்க்க மாகும்
பறுதிபார் செவ்வல்லிப் பூப்போற் கண்ணும்
பதிவாக இருந்துவிடும் பாகம் பாரு
நறுதிபார் நாலான யோனிக் குள்ளே
நலமான பிணிப்பளவு மோடிப் போமே. (287)

ஓடிப்போம் பத்தியத்தை உரைக்கக் கேளு
ஓதரிய அரைக்கீரை முருங்கைப் பிஞ்சு
வாடிப்போம் கத்திரிக்காய் காளி வற்றல்
வடிவான செங்கீரை வடிவு கேளு
நாடிப்போம் சிறுகீரை மாதுளங்காய்
நலமான தூவையோடு விராலு மாகும்
மூடிப்பார் முன்னையொடு மாங்கா யாகும்
முனிவான தேங்காயாம் முனிந்து பாரே. (288)

முனிந்துமே வெள்ளாடு கோழி யாகும்
முனையான காடையொடு முன்னை யாகும்
வனிந்துபார் சிறுகீரை முசுட்டை யோடு
வடிவான முள்ளங்கி வடிவு மாகும்

நனிந்துபார் அத்தியுட பிஞ்சு மாகும்
நலமான பீர்க்குடனே நாடிச் சேரு
பனிந்துபார் வற்றலொடு சேர்த்துக் கொள்ளு
பதிவாக எல்லாமும் பகர்ந்தேன் யானே (289)

பகர்ந்திட்ட நல்லெண்ணை பசுவின் பாலும்
பாகமாம் சர்க்கரையும் பழமும் சேரே
வகர்ந்திட்ட இதுவெல்லாம் மண்ட லத்தில்
வடிவாகச் சேர்த்துநீ மருவிப் பாரு
உகர்ந்திட்ட பணியோடு தள்ளிப் போடு
உறுதியாய்ப் பூசணிக்காய் உற்றுத் தள்ளு
அகர்ந்திட்ட இப்படிக்குக் கூட்டி னாக்கால்
அடைவான சகலசித்தும் ஆட லாமே. (290)

திரிவங்கச் செந்தூரம்

269 - 290 உரை

ஒரு பலம் திரிவங்கச் செந்தூரத்தைச் செம்பு உருகும்போது அதனொடு சேர்க்க நொறுங்கிவிடும். (செம்பு ஒரு பலம்தான்) அதனை எடுத்துக் கல்வத்திலிட்டு அதனொடு ரச பதங்கம் சேர்த்து அரைத்தல் வேண்டும். பதங்கம் சொல்லக் கேட்பாயாக. நாலு பலம் வெள்ளியத்தினை உருக்கி அதனொடு நாலு பலம் (சூதம் என்ற ரசத்தை) சூதத்தைச் சேரு. (குகையில் உருகி நின்ற வெள்ளியத்தின் மேல் கண்ணுச் சிரட்டை வைத்து ரசம் சீறி மேலே தள்ளாமல் மெல்ல விடுக.) (அல்லது இறக்கி வைத்துக் கொண்டு குகையின் மேல் சிரட்டை வைத்துக் கொண்டு ஊற்றுக.) இரசம் பிட்டாகும். அந்த ரசப் பிட்டினைக் கல்வத்திலிட்டு வெற்றிலைச் சாற்றால் இரண்டு சாமம் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து ஒரு தோண்டியி- னுள்ளே போட்டு அதன் மேலே ஒரு சட்டி கவிழ்த்துச் சீலை மண் செய்து காய வைத்து மணல் அடுப்பிலேற்றி இரண்டு சாமம் எரிக்க ரசம் மேலே ஏறித் தும்பை மலர்போல் வெழுத்துப் பற்பமாக இருக்கும், தீயை ஆற்றிப் பிரித்து மயிர்க் குச்சியால் வழித்துத் துணியிலிட்டுப் பிழிந்துபார்க்க நாற்றம் நீங்கி நல்ல தூயதாகும். பின்பு பத்துச்சேர் உப்பும் பத்துச்சேர் செங்கல் மாவும் சேர்த்து அரைத்துச் சட்டியில் இட்டு வறுத்து எடுத்துப் பொடியாக்கி ஒரு சட்டியில் பாதியிட்டு அமுக்கி நடுவில் பள்ளம் செய்து அதில் ரசத்தை விட்டு அதன்மேல் செங்கலுப்புப் பொடியிட்டு மூடி மேலே ஒரு பானையால் மூடிச் சீலை மண் செய்து காயவைத்து அடுப்பேற்றிப் பனிரண்டு சாமம் எரித்துத் தீயாற்றி மயிர்க்குச்சியினால் வழித்துப் பார். தும்மை மலர்போற் பற்பமாகும்,

உறுதியாம் வாதத்துக் குருவு மாகும்
உற்றுநின்ற பஞ்சபூ தத்தா லெல்லாம்
அறுதியாய் நவலோகம் பழுக்கும் வேதை
அடைவாகச் சின்மயத்தின் அருளு மாகும்
வறுதியாய்க் கைபாக வரிசை யாலே
வாதாடிச் சண்டைகொள்ள வடிவு மாகும்
பறுதியாம் பயனறிந்தால் பலனு மாகும்
பாகத்தைக் கண்டவுடன் பாரில் தானே. 312

பாரிலே பஞ்சபூ தத்தின் நேர்மை
பதிவாகக் கண்டக்கால் பயனு மாகும்
காரியே பஞ்சபூ தத்தி லொன்று
கனிவாகத் தயவாலே வாதந் தானும்
வாரியே யெல்லாமும் சித்தி யில்லை
வாதாடி வழக்கோரம் பண்ண வேண்டாம்
ஏரியே பஞ்சபூ தத்தி லேதான்
இதமாகப் பார்க்கவே சித்தியாமே. 313

சித்தியது ஏதென்றால் சொல்லக் கேளு
சிறப்பான தங்கமென்ற பருவத் தாலே
முத்தியது காரீயத் தாலே பொன்னும்
முறையான செம்பாலே பொன்னு மாகும்
நத்தியது இரும்பாலே பொன்னு மாகும்
நலமான நாகத்தால் நிரம்பப் பொன்னு
புத்தியது இவையஞ்சால் பொன்னு மாகும்
புகலரிய எல்லாமும் சித்தி யாமே 314

தங்க சுத்தி

சித்தியாம் தங்கத்தில் சொல்லக் கேளு
சிறப்பாகத் தங்கமது பலமு மொன்று
புத்தியாய்த் தகடுதட்டி வைத்துக் கொண்டு
புகழாகக் கற்காவி பழச்சாற் றாலே
நத்தியாய் அரைத்துமே குழம்பு பண்ணி
நலமாகக் குழம்பிலே தங்கந் தன்னைப்
புத்தியாய் ஏழுதரம் பழுக்கக் காய்ச்சிப்
புலனாகக் காய்ச்சிடவே பெருமை யாமே. 315

காரீயசித்தி

ஆமேதான் ஏழுதரம் பழுக்கக் காய்ச்சி
அடைவாகத் தோய்த்திடவே தங்கத் தன்னை
வாமேதான் ஓடிவிடும் தங்க சுத்தி
வடிவாக ஆகிவிடும் வழக்கம் பாரு

நாமேதான் அப்பாலே வைத்துக் கொண்டு
நலமாகக் காரீயம் பலத்தை வாங்கு
காமேதான் கரண்டிதனில் உருக்கிக் கொண்டு
கடிதாகக் கற்றாழை நீரிற் சாயே. 316

நீரிலே பதினொருகால் குமுறச் சாய்த்து
நிலையாகப் பார்த்திடவே காரீயந்தான்
வாரியே எண்ணெய்க்கும் வழியு மாகும்
வடிவான காரீயம் தூர வைத்து
நாரியே செம்புதனைத் தகடு தட்டி
நல்மான வெடியுப்பு சீனக் காரம்
பாரியே கழுதையுடை கத்தத் தாலே
பதிவாக அரைத்துமே குழம்பாய்ப் பண்ணே. 317

குழப்பியே வைத்துமே செம்பின் மேலே
குணமாகப் பூசியே காய வைத்து
நழுப்பியே கரியோட்டில் பழுக்கக் காய்ச்சி
நலமாக ஏழுதரம் துவைத்துப் பாரு
வழுப்பியே செம்பினுட ஊற லற்று
வடிவாக இருக்குமே எண்ணெய் கக்கும்
மழுப்பியே கரியில் வைத்து உருக்கிப் பாரு
மயமாகப் பொன்போலே யாகுந் தானே. 318

அயச்சுத்தி

ஆடுமே பொன்போலே யாகும் பாரு
அடைவாகச் செம்புதான் கட்டிப் போச்சு
வாடுமே இதையெடுத்துத் தூர வைத்து
வடிவான அரப்பொடியும் பலமு மொன்று
கூடுமே குகையிலிட்டுப் பழுக்க வூது
குணமாக நன்றாகும் பழுத்த பின்பு
தேடுமே சம்மட்டி தன்னி னாலே
திடமாகத் தகடாகத் தாக்கி டாயே. 319

தாக்கிடவே அரப்பொடியில் நின்ற மண்ணு
தப்பாமலோடிவிடும் ஈயம் போலாம்
வாக்கிடவே யரப்பொடியைக் கார மிட்டு
வடிவாக உருக்கிடவே ஈய மாகும்
நாக்கிடவே குகையிலிட்டா லுருகா தப்பா
நலமாகக் கரியிலிட்டு உருக்கிப் போடு
நோக்கிடவே யீயமணி போலே யாகும்
நுட்பமாய் எடுத்துநீ வைத்துக் கொள்ளே. 320

நாககுத்தி

வைத்துமே புறம்பாக வைத்துக் கொண்டு
வடிவாக நாகமது பலமு நாலு
பைத்துமே சாரமிட்டு இலுப்பை எண்ணெய்
பதிவாக அதிலுருக்கிச் சாய்த்துப் போடு
நைத்துமே நாகமது சுத்தி யாகும்
நலமாக நாகத்தை யெடுத்துக் கொண்டு
வைத்துமே வில்லையது போலே சாய்த்து
வடிவாக வீரமுடன் கல்லுப்புச் சேரே. 321

சேர்த்துமே புகைநீரை விட்டு ஆட்டிச்
சிறப்பாகக் குழம்பாகப் பண்ணிக் கொண்டு
நாத்துமே குழம்பிலே ஊதி வாட்டு
நலமாக அடுக்கடுக்காய்க் குமுற வாட்டு
பார்த்துமே மேற்கவசம் கட்டக் கேளு
பதிவாக வளகிலுப்பு அரைத்துக் கட்டு
நாத்துமே கதிரிலிடு காயப் போடு
நலமாக எடுத்துமே சொல்லக் கேளு. 322

சொல்லவே பத்தெருவி லடுக்கித் தானும்
சுகமாகப் புடம்போடு எடுத்துப் பாரு
வில்லவே மேற்கவசம் பிரித்துப் பாரு
விதியாக நாகமது கட்டிப் போகும்
நல்லவே நாகமது புகையா மல்தான்
நலமாக இருக்குமது நன்மையாகும்
கொல்லவே நாகமதைத் தூர வைத்து
துடியான வெள்ளீயம் பலத்தை வாங்கே. 323

வெள்ளீயச் சுத்தி

வாங்கியே சுத்திமுறை வடிவு கேளு
வகையாக வெள்ளீயம் பலமு நாலு
தாங்கியே ஆட்டமுரி கொண்டு வந்து
தப்பாம லிதையுருக்கித் தன்மை கேளு
ஓங்கியே தரம்பத்து உருக்கிச் சாய்க்க
உறுதியாம் வெள்ளீயம் சுத்தி யாச்சு
பாங்கியே வெள்ளீயம் உருக்கிப் பின்பு
பதிவாக லேசாகத் தகடு வாரே. 324

வாருகேள் தகடாகச் செய்து கொண்டு
வடிவாக வீரமது கழஞ்சு ஒன்று
கூறுகேள் வெள்ளையென்ற பாஷா ணந்தான்
குறியாகப் பலமுமொன்று கூட இட்டுத்
தேருகேள் புகைநீரால் விட்ட ரைத்துத்
திடமாகக் குழம்பாகக் காய்ச்சிக் கொண்டு
நாருகேள் வெள்ளீயம் கரியி லிட்டு
நலமாகக் காய்ச்சியெடு தோய்ச்சி டாயே. 325

பஞ்சலோகச் சேர்க்கைவகை

தோய்ச்சிடவே யேழுதரம் வெள்ளீயந் தான்
துடியாக நீர்வாங்கி வெள்ளி போலாம்
வாய்ச்சிடவே இதையுருக்கி வைத்துக் கொண்டு
வடிவாக யெல்லாமும் சேர்க்கக் கேளு
பாச்சிடவே தங்கமது பலமு மொன்று
பதிவாகக் காரீயம் பலமு மொன்று
நாச்சிடவே செம்பதுவும் பலமு மொன்று
நலமான அயமதுவும் பலமு மொன்றே. (326)

ஒன்றாக நாகமது பலமு மொன்று
உறுதியாய் இவையஞ்சும் இடையே சேர்த்து
நன்றாக வெள்ளீயம் அய்ஞ்செ டைக்கு
நலமாகச் சேர்த்திடவே யிடையே தானும்
பன்றாகக் குகைதனிலே வைத்துருக்குப்
பதிவாக ஈயம்போல் சுருக்குத் தானும்
கன்றாகச் சூதத்தைக் கரண்டி யிட்டு
கனிவாக அய்ஞ்சையுந்தா னுருக்கிச் சாயே. (327)

ஷை புட்டுச் செய்ய

உருக்கியே சாய்த்திடவே புட்டுப் போலாம்
உண்மையாய்ப் புட்டையுந்தாள் கல்வத் திட்டு
நெருக்கியே இவ்வெடைக்கு வெடியுப்புக் கூட்டி
நிலையாகப் பழச்சாறு விட்டு ஆட்டிப்
பருக்கியே வில்லைகட்டிக் கதிரில் வைத்துப்
பதிவாகப் பத்தெருவிற் புடத்தைப் போடு
குருக்கியே புடமாறி யெடுத்துப் பாரு
குணமாகத் தும்பைமலர் போலாம் பாரே. (328)

பாருமே கல்வத்தி லிட்டுக் கேளு
பதிவாகப் பாணிவிட்டு அரைநேர் பாகம்
வாருமே மூன்றுநாள் வைத்து மைபோல்
வடிவாகப் பாணிவிட்டுக் கரைத்திருக்க
கூருமே வெடியுப்புக் கரைந்து போகும்
குணமாகத் தெளிவைத்தான் இறுத்துப் போடு
பாருமே கல்லுப்புக் கட்டுக் கேளு
பதிவாகக் கல்லுப்புப் பலமும் பத்தே. (329)

கல்லுப்புக் கட்டு

பத்தாகும் சமுத்திரத்தின் படிநீர் கேளு
பண்பாகப் படிநூறு அளந்து விட்டுக்
கத்தாகும் உவர்மண்ணும் சுண்ணம் நேரே
கனிவாகக் கலந்துமே திரிநாள் வைத்து
நத்தாகும் தெளிவிறுத்து உப்பை யிட்டு
நலமாக ஒட்டவே காய்ச்சிப் போடு
முத்தாகும் ஒட்டவே காய்ச்சி னாக்கால்
உறுதியாய்த் தந்தம்போல் நிறமு மாமே. (330)

ஆமேதான் தந்தம்போல் நிறமு மாகும்
அடைவான கடல்நுரைதான் சேரு ஒன்று
வாமேதான் சீனமது சேரு ஒன்று
வடிவாக மேனியதும் சேரு ஒன்று
நாமேதான் இவைமூன்றும் மையே போல
நலமாக உப்புக்குக் கவசம் கட்டிப்
பாமேதான் ரவிதனிலே காயப் போடு
பதிவாகப் பத்தெருவிற் புடத்தைப் போடே. (331)

போடவே பத்தெருவிற் புடத்தைப் போட்டுப்
பொலிவாகத் தீயாற்றி யுடைத்துப் பாரு
நாடவே உப்பதுவுந் தந்தம் போலாம்
நலமாக இப்படிக்கு அஞ்சுபுடம் போட்டுக்
கூடவே புடமாறி யெடுத்துப் பாரு
குலமாக வயிரம்போல் உப்புக் காணும்
ஊடவே யுப்பெடுத்துக் கரியில் வைத்து
உறுதியாய் உருக்கிடவே உருகும் பாரே. (332)

உருகியே முத்துமணி போலே யாகும்
உறுதியாய் முன்னிறுத்த பஞ்ச பூதம்
கருதியே யிந்தவெடை யுப்பைச் சேர்த்துக்
கனிவாக இருசாமம் அரைத்து மைபோல்
வருதியே வில்லைதட்டிக் காயப்போடு
வடிவாக மேல்மூடிச் சீலை செய்து
உறுதியே பத்தெருவிற் புடத்தைப் போடு
உண்மையாய்த் தீயாற்றி எடுத்தி டாயே. (333)

பஞ்சலோகக் குருவை வேதை செய்ய

எடுத்துமே பார்க்கையிலே கடுமை யாகும்
இதமாகச் சுண்ணாம்பா யிருக்கும் பாரே
அடுத்துமே குருவாகும் குருவைத் தானும்
அடைவாக இக்குருவைச் செம்பு தன்னில்
நடுத்துமே எடைக்கெடைதான் கொடுத்துத் தீரு
நலமாக உருகியது மணியு மாகும்
விடுத்துமே மணியெடுத்து உடைத்துக் கொண்டு
விதமாக வெள்ளிதனில் எட்டுக் கொன்றே. (334)

எட்டுமே ஒன்றிடவே உருக்கிக் கொண்டு
இறுதியே நிகடைதன்னில் ஊதிப் போடு
பட்டுமே வெள்ளியது தங்க மாகும்
பதினாறு மாற்றாகும் பாரி லோற்கே
முட்டுமே செம்புதான் இடையே சேரு
முனையாகச் சேர்த்துருக்கி நிகடைதன்னில்
விட்டுமே தங்கமது பாதி சேரு
வீறாக உருக்குவது வினைய மாமே. (335)

ஆமேதான் உருக்கியே ஊதிப் போடு
அடைவாக உப்புதனில் புடத்தைப் போடு
நாமேதான் அருகுகட்டி இறங்கும் பாரு
நலமாக இதையுருக்கி விற்றுப் போடு
தாமேதான் தங்கமதைக் கடையில் விற்றுச்
சரியாகச் செலவுக்கு வைத்துக் கொண்டு
காமேதான் சுழுமுனையைக் கண்டு பாரு
கருதியே சின்மயத்தைக் காணுவாயே. (336)

காணவே சின்மயமும் கண்டு தேறிக்
கனிவாக ஞானமொழி தீபம் ஆகும்
வானவே இராசயோ கத்தைப் பாரு
வடிவாகப் புருவமையம் வணங்கி யேந்து
ஊனவே உறுதியிட பொருளைக் காண
உற்றுமே ஓங்கார உறுதி பாரு
நானவே சௌபாக்கியப் பொருளுங் காணும்
நலமாகக் காதலுடன் நல்ல தாமே. 337

நல்லதாம் மேற்புருவந் தன்னி லேதான்
நலமாகப் பார்த்திடவே யோக மாகும்
நல்லதாம் பெருவெளியில் நாட்டம் பாரு
நலமாகக் கவனவெளி யோடலாகும்
சொல்லதாம் ராசயோ கத்தின் பேறு
சுகமாக விந்துதனி லர்ச்சித் தேத்து
மல்லதாம் பெருவெளியில் மவுனத் தாட்டும்
பதிபாச வினையாக வருக லாமே. 338

ஆமேதான் களங்குதனைச் செந்தூ ரிக்க
அடைவாகச் சொல்லுகிறே னப்பா கேளு
வாமேதான் களங்குதனைக் கல்வத் திட்டு
வடிவாகப் புகைநீரை விட்டு ஆட்டிச்
சாமேதான் கற்றாழம் பாலா லாட்டிச்
சரியாகச் சாமமரை மைப்போல் தானே
தாமேதான் வில்லைகட்டிக் கதிரில் வைத்துத்
தாட்டிகமாய்க் காய்ந்தபின்பு தன்மை கேளே 339

கேளுமே ஓட்டில் வைத்து மேலோடு மூடிக்
கெடியாகப் பத்தெருவிற் புடத்தைப் போடு
வாளுமே புடமாறி யெடுத்துப் பாரு
வடிவாகச் செந்தூர மாகு நேர்மை
தாளுமே செந்தூரம் முருக்கம் பூப்போல்
வடிவாக இருக்குமது வன்மை பாரு
நாளுமே வெள்ளிதனில் நூற்றுக் கொன்று
வடிவாக இட்டிடவே வடிவு கேளே. 340

வடிவாக நூற்றுக்கு வெள்ளி தன்னில்
வகையாக இட்டிடவே மாற்றுக் கேளு
நொடியாக ஆணிக்குப் பத்தே யாகும்
நொடிக்குள்ளே யுருகு கட்டி யிறங்கும் பாரு

துடியாக இப்பொன்னை விக்கிரகம்ப பண்ணித்
துப்புரவாய்ப் பூசிக்க வல்லா ராகில்
குடியாகச் சகலசித்தும் ஆடலாகும்
துப்புரவாய் ஞானவழி யடுக்க லாமே. 341

அடுக்கவே ஞானவழி வேணுமென்றால்
அடைவான பஞ்சபூ தியத்தைப் பாரு
துடுக்காகச் சொல்லாதே சொல்லக் கேளு
துணையாக நவலோகம் ஏம மாக்கி
முடுக்காக இதைவிற்றுச் செலவு செய்து
முனையான வாசியோ கத்தைப் பாரு
நடுக்காகச் சகலமும் சித்தி யாகும்
நலமாகும் குணமாகும் நன்மை யாமே. 342

நன்மையாம் பொருளறியார் வாதி மார்கள்
நலமாகப் பொன்செய்வேன் என்று சொல்லி
வன்மைதான் சரக்கைத்தான் வாங்கிச் சுட்டு
வடிவாகப் பொருளறியார் வன்மை யாகும்
உண்மையாய்ச் சாட்சிபோச னத்தைக் காணார்
உறுதியாய்ச் சீவனங்கள் ஒன்றுங் காணார்
தன்மைதான் உப்பைத்தான் காணா மூடர்
தாட்டிகமாய் வீம்பாகச் சொல்லுவாரே. 343

சொல்லுவார் செகத்திலே கேள்வி யாகச்
செயமாக வாதமதைக் கண்டே னென்று
மெல்லவே யோசனைகள் பலவும் பண்ணி
விதமாகச் சொல்லுவார் விருதா மாண்பார்
நல்லுவார்க் காருட மாகச் சொல்வார்
நலமாக வேடங்கள் பூண்டு கொள்வார்
வல்லவே உருவாக உருவைத் தேடி
வடிவாக ஆனந்தம் சொல்லு வாரே. 344

சொல்லுவார் பஞ்சலோகச் செந்தூ ரத்தைச்
சூதாகச் சொன்னார்கள் வாதிக் காக
மெல்லவே வாதியர்கள் செய்து பார்த்து
மேன்மையாய்க் கரிச்சுட்டுத் திரிவார் கோடி
நல்லுவார் விகடமதைச் சொல்லிச் சொல்லி
நலமாக வாதமதைப் பொய் யென்பார்கள்
வில்லுதான் வளைந்தாலோ அம்பு தைக்கும்
வெறுமரத்தில் புதை யெய்யா வாறுதானே. 345

வாரான பஞ்சலோகச் செந்தூ ரத்தை
    வடிவாகத் திரிகடுகில் அந்தி சந்தி
கூரான பணவெடைதா னிட்டுப் பாரு
    குணமாக மண்டலத்தி லெல்லாம் சித்தி
பாரான வாதமொடு பக்க வாதம்
    பதிவான திமிர்வாதம் முடக்கு வாதம்
காரான கனியென்று வாதத் தோடு
    கனிவான நரித்தலையின் வாத மாமே. 346

ஆமேதான் அண்டத்தின் வாதமோடு
    அடைவாக விரைவாதம் அலைச்சல் வாதம்
நாமேதான் கண்டத்தின் வாத மோடு
    கனியாக ஒருத்தலைத்தான் வாத மோடு
நாமேதான் மேற்றலையின் வாத மோடு
    நலமாகத் தந்தத்தின் வாத மாகும்
பூமேதான் பொல்லாத வாத மோடு
    புகலாகத் தீருமது புகழ்ந்து பாரே. 347

பாருமே பித்தங்கள் வாதம் போகும்
    பதிவான தந்தமுதல் பித்தந் தீரும்
வாருமே மயக்க பித்தம் ரெத்த பித்தம்
    பதிவான தலைப்பித்தம் மயக்க பித்தம்
காருமே வலிப்பித்தம் ஓடிப்போகும்
    கண்ட பித்தமொடு பித்தம் கனிவுபோகும்
சாருமே சனியுனுடை பித்த மெல்லாம்
    சரியான ஒருத்தலையின் பித்தம் போமே. 348

பித்தமுதல் வலிகுன்மம் ரத்த குன்மம்
    பேரான கண்டவலி வாத குன்மம்
நத்தமுதல் உகாரவலி குன்ம பித்தம்
    வடிவான தமருகமாம் வலிகள் போகும்
கத்தமுதல் தொந்தவலி குன்மம் போகும்
    கனிவான சென்மவலி காணோ தோடும்
வத்தமுதல் வடிவான கருணை நீங்கும்
    வாதமே வாதிக்கு வகுத்த வாறே. 349

வகுத்திடவே சிலேற்பனங்கள் தொன்னுற் றாறும்
    வாதாடி யோடுமது வன்மை கேளு
தொகுத்திடவே முசல்வலிப்பு குதிரை தானும்
    துடியாக ஓடியே விடுகும் பாரே

நகுத்திடவே குண்டலமும் மேக மும்போம்
நலமான பவுத்திரம் நாடா தோடும்
உகுத்திடவே உலுவாதி மகோதரங்கள்
உற்றுமே போகுமது உறுதி பாரே. 350

பாருமே நீராம்பல் மகோ தரங்கள்
பதிவான குலைமுட்டி பவுந்திர ரோகம்
சாருமே காமாலை வெட்டை போகும்
சரியான கல்லடைப்புக் கண்ட வாதம்
நாருமே கண்ணோவு காதடைப்பு
நலமாக ஒருத்தலை நோய் நாடாதோடும்
வேருமே தொனியடைப்பு விரணம் போகும்
வேதாந்த அடைப்புப்போம் விரும்பிப் பாரே. 351

விரும்பிடவே சயகாசம் பித்த காசம்
வெளியான பிரட்டலோடு வெத்தி காசம்
நரும்பிடவே யுடல்வாதம் நளிரு சூடு
நல்லதொரு பெறுவயிறு ஈளை போகும்
கரும்பிடவே கைக்கூலி வருகும் பாரே
கனிவான பொருளாகும் கண்டு கொள்ளு
பெரும்பிடவே சிவயோக வழியிற் சேரு
செயமான வீரமதைச் செய்தி டாயே. 352

செய்திடவே பஞ்சலோகக் கருத்தைத் தானும்
செயமாகக் களங்கு முன்னே செய்து கொள்ளு
பைதிடவே பனிரண்டு கண்டு தேறு
பாகமுதல் யோகமுதல் பதிவு காணும்
வைதிடவே சிவயோகம் வந்து சேரும்
வடிவாகப் பஞ்சலோகம் கருவா லாகும்
எய்திடவே லோகங்கள் எல்லாம் சித்தி
இதமாகப் பார்த்திடவே யின்ப மாகும் 353

ஆமேதான் இன்பத்தை யறிந்தாற் கேளு
அடைவான பிடிவாதத் தாலே யாகும்
வாமேதான் கொஞ்சநாள் சுட்டுப் போட்டு
வடிவாக ஒன்றுமில்லை யென்பார் மூடர்
காமேதான் கைபாகம் அறியா மல்தான்
கழிவாகச் செய்துமே கருணை யுற்று
நாமேதான் வாதவித்தை யில்லை யென்பார்
நலமாக உருத்தெரியார் வாதி தானே (354)

வாதிதான் பத்தியத்தைச் சொல்லக் கேளே
வடிவுடனே உப்புடனே புளியுந் தள்ளு
நாதியாம் நல்லெண்ணெய் சேர்த்தி டாதே
நல்லாகச் சேர்த்தாக்கால் காயம் போகும்
சோதிபெறப் புளியாரை சேர்த்துக் கொள்ளு
சுயமான பால்பழமும் சேர்த்துக் கொள்ளு
நீதியாய்ச் சர்க்கரையும் சேர்த்துக் கொள்ளு
நிலையாகும் சித்தாகும் நேர்மை தானே. (355)

தானேதான் நூல்படித்துச் செந்தூரம் பண்ணிச்
சாட்சியாய் நவலோகத் துள்ளே தாக்கு
வானென்ற வடிவாகப் பழுத்துப் போகும்
வகையான வாதசித்தி வருக லாகும்
தேனேதான் சரக்கறிந்தோன் வாதி யாகும்
திடமாக அறியாட்டால் செல்வ மாடு
ஊனேதான் உடல்காயம் சித்தி செய்யான்
உறுதியாய் மாடாகும் உண்மை தானே. (356)

உண்மையாய் ஞானவழி யடுத்துக் கூடு
ஒருவருடன் பேசாதே மவுனமாகத்
தன்மையாம் நூலெல்லாம் படித்துத் தேறு
தாட்டிகமாய் எல்லாமும் சித்தி மெத்த
வன்மையாய்ச் சித்திதர வேணு மென்றால்
வடிவான பொருளடங்கி மார்க்கம் மார்க்கம்
கென்மையாய் மனத்துடனே வைத்துக் கொள்ளு
கெடியான வாதசித்தி வருகுந் தானே. (357)

வருகுமே வாதசித்தி வந்த பேர்கள்
வடிவாக ஒருவருடன் பேச மாட்டார்
உருகுமே ஞானங்கள் மிகவும் பார்ப்பார்
உற்றுமே ஆறுதலம் கடந்து நிற்பார்
பெருகுமே முனைசுழியில் அணுவா கத்தான்
பேதைபோல் இருப்பார்கள் பெரியோர் தாமும்
வருகுமே வாத சித்தி பூதசித்தி
வடிவாக வாதமெல்லாம் சகசந் தானே (358)

தானென்ற நூல்தனிலே நாதாக்கள் சொன்னார்
தாட்டிகமாய் உப்பாலே யுப்பைக் கட்டி
ஊனென்ற வாதத்தைச் செய்யச் சென்னார்
உறுதியாய் செய்பாகத்தாலே யெல்லாம்

கானென்ற உறுதிமிகக் காண லாகும்
கருத்துணரும் வழிகளெல்லாம் கண்டு தேறி
பானென்ற பதிபாச வினையி னாலே
பார்த்துணரும் ஞானவழி யடுத்துப் பாரே. (359)

பாருமே மனமதுதான் ஆங்கா ரத்தால்
பதிவாக வேயுப்பைக் காய்ச்சிக் கொண்டு
நாருமே கம்பியாய்க் காய்ச்சி நீயும்
நலமாகப் பொருளறிய நன்மை யாகும்
வாருமே யுடல்பொருள் ஆவி மூன்றும்
வடிவாகத் தத்தமாய்ப் பண்ணிக் கொண்டு
ஏருமே யுழுதாலே வேளாண்மை யாகும்
இதமாகப் பார்த்தாலோ சித்தி யாமே. (361)

சித்தியாம் சித்திக்க வேணு மென்றால்
இதமாகச் சிந்தையதைக் கட்டி யாடு
நத்தியாய் உப்பாலே யெல்லா மாச்சு
நலமாக உப்பறிந்தால் யோகி யாகும்
பக்தியாய் சித்தர்கள் யெல்லாந் தானும்
நலமாக வாரிதிக்குள் உப்புக் காய்ச்சிச்
சித்தியாய் சொல்லெல்லாம் ஏதலாச்சு
சிறக்கவே சித்திமிக வருகும் பாரே. (361)

வருகுமே லோகசித்தி காய சித்தி
வடிவான போதசித்தி வடிவு மாகும்
தருகுமே நல்லாகச் சித்தி யாகும்
தாட்டிகமாய் வாதசித்தி பூத சித்தி
திருகுமே வைத்தியங்கள் முன்னே பண்ணித்
திட்டமாய் வடிவான சோதியாகும்
கருகுமே கண்டதெல்லாம் சித்தி மெத்த
கனிவாக உறுதிமிக வாகும் பாரே. (362)

பஞ்சபூதச் செந்தூரம்

310 - 362 உரை

பஞ்சபூதச் சத்தான உண்மையெல்லாம் சித்தர் மறைத்தார். வட நூலை ஆய்ந்து பார்த்துத் துப்புரவாய் இந்நூலில் சொன்னேன். பகையாகச் சொல்லவில்லை.

ஐம்பூத வகை

தங்கம்-மண், காரீயம்-தண்ணீர். செம்பு-நெருப்பு. இரும்பு-காற்று. நாகம்-வெளி. இவ்வைந்து கூறான இவ்வைந்தும் கூடும்போது வாதத்திற்குக் குருவுமாகும். கைபாக வரிசை தவறாமல் செய்தால் ஐம்பூதப் பொருளால் ஒன்பது உலோகமும் பழுக்கும். பயனுண்டாகும். ஐவகை உலோகத்தால் சித்தியாகும். தங்கமென்ற பருவத்தால் காரீயத்தால் பொன்னாம். செம்பாலே பொன்னாம். இரும்பாலே பொன்னாம் நாகத்தால் நிரம்பப் பொன்னாகும். இவையஞ்சாலே பொன்னுமாகும்.

கற்காவியைப் பழச்சாறு விட்டு அரைத்துக் குழம்பாக்கி வைத்துக் கொண்டு தங்கத் தகட்டைப் பழுக்கக் காய்ச்சி ஏழுமுறை தோய்க்கத் தூயதாகும்.

காரீயத்தை உருக்கிச் சோற்றுக் கற்றாழஞ் சாற்றில் பதினோரு முறை சாய்க்க நயமாகும்.

வெடியுப்பும் சீனமும் கழுதை நீரில் அரைத்துக் குழப்பி வைத்துக் கொண்டு செம்புத் தகட்டில் பூசி காய வைத்து எடுத்துக் கரியோட்டில் வைத்துக் காயச்செய்து எடுத்து மேற்படிக் குழம்பில் தோய்க்க. இங்ஙனம் ஏழு முறை தோய்க்க நயமான செம்பாகப் பொன் போலாகும். செம்பு கட்டிப் போகும்.

இரும்பு அரப்பொடியைக் குகையிலிட்டு ஊதிக்காயவைத்து எடுத்துக் கல்லின்மேல் வைத்துச் சம்மட்டியினால் தகடாக அடிக்க இரும்பில் நின்ற மண் விலகி ஈயம் போலாகும் குகையிலிட்டு உருக்கினால் உருகாது. கரியை குடைந்து அதனுள்ளிட்டுக் காரமிட்டு உருக்கினால் உருகும். ஈய மணி போலாகும்.

நாலு பலம் நாகத்தைச் சாரமிட்டு உருக்கி இலுப்பெண்ணெயில் நயமாகுமளவு உருக்கிச் சாய்க்க அது தூய நயமானதாகும். பின்பு அதை வில்லை போலாக்கி வைத்துக் கொண்டு வீரமும் கல்லுப்பும் சேர்த்துப் புகை நீர் விட்டு ஆட்டிக் குழம்பாக வைத்துக் கொண்டு நாகவில்லையைக் குழம்பில் தோய்த்து அடுக்கடுக்கக் குமுற வாட்டு. பின்பு அவ்வில்லைகளின் மேல் வளையலுப்பை அரைத்துப் பூசிக் காய வைத்து (கவசங்கட்டி) பத்தெருவில் வைத்துப் புடமிடு. நாகம் கட்டும். நாகம் புகையாது.

வெள்ளீயம் நாலுபலம் எடுத்து உருக்கி ஆட்டமூரியில் பத்து முறை சாய்க்க நயமாகும். ஒரு பலம் வெள்ளையும் ஒரு கழஞ்சு வீரமும் கல்வத்திலிட்டு, புகை நீர் விட்டரைத்துக் குழம்பாக ஆக்கிக் காய்ச்சி வைத்துக் கொண்டு வெள்ளீயத்தைக் காயவைத்துத் தோய்த்து

எடு ஏழு முறை தோய்க்க நீர் வற்றி வெள்ளி போலாம். இதை உருக்கி வைத்துக் கொண்டு வடிவாக எல்லாம் சேர்க்க வகை கேள்.

தங்கம் ஒரு பலம், காரீயம் ஒரு பலம், செம்பு ஒரு பலம் இரும்பு ஒரு பலம், நாகம் ஒரு பலம் ஆகிய இவைபஞ்சும் ஒன்றாய்ச் சேர்த்து பின்பு வெள்ளியம் ஐந்து எடையொடு ஒன்றாய்ச் சேர்த்து குகையில் வைத்து உருக்கிக் கொள்க. ஈயம் போல் இருக்கும். சூதத்தைக் கரண்டியில் விட்டு முற்கூறிய ஐந்தையும் உருக்கிச் சாய்க்கப் பிட்டுப் போலாகும். அவ்வெடைக்கு வெடியுப்புச் சேர்த்துப் பழச்சாறு விட்டு ஆட்டி வில்லை தட்டிக் காய வைத்துப் பத்தெருவிற் புடமிடுக. தும்பை மலர் போலாம். அதனைக் கல்வத்திலிட்டு தண்ணீர்விட்டு அரைத்துப் பின் மூன்று நாள் வைத்து இருந்து தண்ணீர் விட்டுக் கரைத்து இருக்க. வெடியுப்புக் கரைந்து போகும். தெளிவினை இறுத்து விடு.

இனிக் கல்லுப்புக் கட்டு. கல்லுப்பு பத்துப்பலம் எடுத்து வைத்துக் கொள். கடல் நீர் நூறுபடி அளந்து அதனுள் உவர் மண்ணும் சுண்ணாம்பும் போட்டு மூன்று நாள் வைத்திருந்து பின்பு தெளிவு இறுத்து அதனுள் முற்கூறிய உப்பைப் போட்டு ஒட்டக் காய்ச்சு. தந்தம் போலாகும். கடல் நுரை ஒரு சேர், சீனம் ஒரு சேர், மேனியிலை ஒரு சேர் இவை மூன்றையும் மைப்போல் அரைத்து உப்புக்குக் கவசம் கட்டி வெயிலில் காயப் போட்டுப் பத்தெருவில் புடமிடுக. தந்தம் போலாம். இங்ஙனம் ஐந்து புடம் போட வயிரம் போலாம். கரியில் வைத்து உருக்க உருகியாடும். முத்து மணி போலே யாகும். முன் கூறிய பஞ்ச பூதப் பொருளையும் உப்பு மணியையும் ஓரளவாகச் சேர்த்தரைத்து வில்லை தட்டிக் காய வைத்துச் சீலை மண் செய்து பத்தெருவில் புடமிடுக. கடுமையாய்ச் சுண்ணாம்பாய் இருக்கும். இது தான் குரு. இக் குருவைச் செம்பில் எடைக்கெடை கொடுத்து ஊத மணியாகும். மணியை எடுத்து உடைத்து வெள்ளியில் எட்டுக்கு ஒன்று சேர்த்து உருக்கிச் சுக்கான் கல்லில் செய்த நிகடையில் வைத்து ஊதிப் போடு. வெள்ளி பதினாறு மாற்றுத் தங்கமாகும். அதனெடைக்குச் செம்பு சேர்த்து உருக்கி நிகடையில் வைத்து ஊதிப் பாதி எடை தங்கம் சேரு. வினையமாக உருக்கு. உருக்கி ஊதி உப்பில் வைத்துப் புடம் போடு. தங்கம் அருகு கட்டி இறங்கும். இதை உருக்கி விற்றுச் செலவு செய்து சுழி முனையில் நின்று மெய்யுணர்வு பெறுவாயாக. ஞானஒளி தீபமாகும். இராசயோகம் செய். புருவ நடு வணங்கி ஏத்து. உறுதியுள்ள பொருளைக் காண ஓங்கார உறுதி காணு. பெருவெளியில் நாட்டம் பாரு. கவன வெளியோடலாகும்.

மேற்சொன்ன மணிக் களங்கினைச் செந்தூரம் செய்ய அதைக் கல்வத்திலிட்டுப் புகைநீரை விட்டு ஆட்டிக் கற்றாழம் பாலாலும் ஆட்டி

ஒருச் சாமம் மைப்போல் அரைத்து வில்லைக் கட்டிக் காயவைத்துச் சீலை மண் செய்து பத்தெருவில் புடமிடு. செந்தூரம் முருக்கம் பூப் போலாகும் வெள்ளியில் நூற்றுக்கு ஒன்று இ-ப் பத்து மாற்று. இப் பொன்னால் தெய்வத் திருவுருவம் செய்து வழிபாடு செய்ய வல்லவராகில் எல்லாம் வாய்க்கும். ஞான நெறி அடைய வேண்டின் ஐந்து உலோகத்தைப் பாரு. ஒன்பரன் உலோகத்தையும் பொன்னாக்கி விற்றுண்டு வளிநிலை காண்க. பொருளறியார் வாதிமார்கள். சரக்கை வாங்கிச் சுட்டுப் பொருளறியார். உப்பைக் காணார் மூடர் பஞ்சலோகச் செந்தூரத்தைச் சூதாகச் சொல்லி வைத்தார்கள், வாதிகளுக்காக, உண்மையுணராமல் கரிச்சுட்டுத் திரிவார் கோடி. பின் வாதம் பொய் என்பர். வில் வளைந்தால் அம்பு தைக்கும். வெறும் மரத்தில் அம்பு வைத்து எய்யொணாதே. புதை-அம்புக்கட்டு''. புதையம் பிற்பட்டுப் பாடுன்றும் களிறு'' குறள்

இச்செந்தூரத்தைத் திரிகடுகில் காலை மாலை பண வெடை உண் நாற்பது நாளில் எல்லாம் வாய்க்கும்.

செந்தூரம் நீக்கும் நோய்கள்

வாதம், பக்க வாதம், திமிர் வாதம், முடக்கு வாதம் கூனி வாதம், நரித்தலை வாதம், அண்ட வாதம், விரை வாதம், அலைச்சல் வாதம், கண்ட வாதம், ஒருத்தலை வாதம், மேற்றலை வாதம், தந்த வாதம், பித்த வாதம், தந்த பித்தம், மயக்க பித்தம், ரெத்த பித்தம், தலைப் பித்தம், வலி பித்தம், கண்ட பித்தம், சூரிப் பித்தம், ஒருத்தலைப் பித்தம், வலி குன்மம், ரத்த குன்மம், கண்ட வலி, வாத குன்மம், உகார வலி, குன்ம பித்தம் தமரக வலி, தொந்த வலி குன்மம், சென்ம வலி சிலேற்பனங்கள் தொண்ணூற்-றாறு, முசல் வலிப்பு, குதிரை வலிப்பு, குண்டல வலிப்பு, மேகம், பவுத்திரம் மகோரதம், நீராம்பல், குலைமுட்டிப் பவுத்திர ரோகம், காமாலை, வெட்டை, கல்லடைப்பு கண்டை வாதம், கண்ணடைப்பு, கண்ணோவு, காதடைப்பு, ஒருத்தலை நோய், தொனியடைப்பு, விரணம், வேதாந்த அடைப்பு, சய காசம், பித்த காசம், வெறிப் புரட்டல் வெற்றக் காசம், உடல் வாதம், நளிறுசூடு, பெரு வயிறு ஈளை முதலியன நீங்கும்.

பஞ்சலோகக் களங்கினை முதலில் செய். பன்னிரண்டுங்காண். உலோகங்கள் எல்லாம் வாய்க்கும். பிடிவாதம் நூலால் ஆகும். வகை-யறியாமல் சில காலம் சுட்டுப் பேரட்டு ஒன்றுமில்லை என்போர் மூடர்.

பத்தியம் கேள். உப்பும் புளியும் தள்ளு நல்லெண்ணெய் சேர்த்தால் உடல் ஓடிப் போம். புளிப்புக்கு நிகராக புளியாரை சேர்த்துக் கொள். நல்ல பால், பழம் சேர்க்க. சர்க்கரையும் ஆகும்.

• 356 முதல் 362 வரை அறிவுரை காண்க.

யூகி முனிவர் பிடிவாதம் 1000 - ந. சே. உரையுடன்

அயச்செம்பு

வருகுமே இன்னமொரு அயச்செம்பு சொல்வேன்
வடிவாகக் கைபாக விபர மாக
தருகுமே சொல்லுகிறேன் உற்றுக் கேளு
தாட்டிகமாய்க் கைபாக விபர மாக
நருகுமே சொல்லுகிறேன் உற்றுக் கேளு
நலமாகத் துரிசதுவுஞ் சேரு வொன்று
கருகுமே வாங்கியதை யனலிலிட்டுக்
கனிவாக ஊதிடவே வெள்ளை யாமே. 363

வெள்ளையாம் நீர்வாங்கிக் கடுமை யாக
விதமாக இருக்குமது தும்பைப் பூவாம்
கள்ளையாம் அதையெடுத்து வைத்துக் கொண்டு
கனிவாகத் துரிசினுக்கு முக்கால் கெந்தி
வள்ளையாம் அரையாகும் சூடன் சேரு
வடிவாக வீரமது காலும் சேரு
தள்ளையாம் இவைநாலுங் கல்வத் திட்டுத்
தாட்டிகமாய்ப் பழச்சாறு விட்டு ஆட்டே 364

ஆட்டியே நாற்சாமம் சென்ற பின்பு
அடைவாகக் கதிரிவிடு தினமுந் தானும்
வாட்டியே நல்லாகக் காய்ந்த பின்பு
வடிவாக மேற் கவசம் வண்ணம் கேளு
ஊட்டியே புதிதாக அயத்தைத் தானும்
உண்மையாய்ப் பழச்சாறு விட்டுத் தானே
மூட்டியே யரைசாமம் நால தாக
முனிவாக அரைத்துவழி உண்டை மேலே. 365

உண்டைமேல் கட்டியே கதிரி விட்டு
உறுதியாய் நன்றாகக் காய வைத்து
பண்டையாய்ச் சுண்ணாம்பு தன்னைத் தானும்
பக்குவமாய் அரைத்துமேல் கவசம் கட்டிக்
துண்டையது மேற் (கவசம்) மண்ணுஞ் செய்து
துடியாகப் புடமதனைச் சொல்லக் கேளு
வண்டையாய்க் கனஎருவில் புடத்தைப் போடு
வடிவாகப் புடமாறி யெடுத்தி டாயே. 366

எடுத்துமே கல்வத்தி லிட்டுக் கேளு
இதமாக வெங்காரம் பாதியிட்டு
அடுத்துமே பழச்சாறு விட்ட ரைத்து
அடைவாக வில்லைகட்டிக் கதிரிற் போடு
நடுத்துமே காய்ந்தபின்பு நல்லாய்க் கேளு
நலமாகப் பத்தெருவிற் புடத்தைப் போடு
விடுத்துமே புடமாறி யெடுத்துப் பாரு
விதமாகக் கரியாகும் முன்பு கேளே 367

கேளுமே காரமிட்டு உருக்கி னாக்கால்
கெடியாக உருகியது சத்தே யாகும்
வாளுமே சத்தெடுத்துக் காரம் கூட்டி
வடிவாக உருக்கிடவே வன்மை மெத்த
ஊளுமே பின்புதான் காரம் கூட்டி
உற்றுநீ உருக்கிடவே சத்து மாகும்
பாளுமே போகாது சத் தெடுத்துப்
பதிவாக செம்புதனி லிடை யுருக்கே, 368

உருக்கவே ரெண்டிடைதா னுருகி நிற்கும்
ஓகோகோ இதையெடுத்து வெள்ளி நாவில்
பெருக்கிடவே யொன்று கொடு கருத்து நிற்கும்
பிசகாமல் கருத்ததென்று மயங்க வேண்டாம்
வருக்கிடவே மயங்கினால் வாதமில்லை.
வடிவான உபரசத்தின் செம்பைக் காணார்
குருக்கிடவே செல்பென்றா லெளிதோ வல்ல
குணமாகக் செம்பைமுந்தி வைத்துக் கொள்ளே, 369

கொள்ளவே கருப்பான வெள்ளி தன்னில்
குணமான சுக்கானை அரைத்துக் கொண்டு
துள்ளவே வட்டமாய் நிகடை வைத்துத்
துடியாக வெள்ளியென்ற கருப்பை வைத்துத்
தள்ளவே குமுறவே ஊதித் தானும்
தாட்டிகமாய்ப் பார்த்திடவே தங்க மாகும்
விள்ளாதே யொருவருடன் சொல்லி டாதே
விதமாகச் சொல்லிடவே நரக மாமே. 370

363 - 370 - அயச் செம்பு

இன்னுமொரு அயச்செம்பு கைபாக விளக்கமாகச் சொல்லுகிறேன் ஒருசேர் துரிசு எடுத்து நெருப்பிலிட்டுச் சுட்டிட வெள்ளையாகும். முக்காற் சேர் கெந்தியும் அரைச் சேர் சூடனும் அத்துடன் சேர். வீரம் காற்சேர் கூட்டு. பழச்சாறு விட்டுக் கல்வத்திலரை. நாடோறும் வெயிலிலிடு. நன்றாகக் காய்ந்த பின்பு அயத்தைப் பழச்சாறு விட்டரைத்து வழித்து முன் மருந்துப் பொருளுருண்டையின் மேல் கவசம் கட்டு. கட்டிக் காய வைத்துப் பின்பு அதன்மேல் சுண்ணாம்பைப் பக்குவமாய் அரைத்துக் கவசம் கட்டு. அதனமேல் மண் கவசமும் செய்து காய்ந்த பின்பு கன எருப்புடம் போடு. பின்னர் வெங்காரம் பாதி எடை சேர்த்துப் பழச்சாறு விட்டரைத்து வி. த. கா. 10 எருப்புடமிடு. கரியாகும். காரமிட்டுருக்கு சத்தாகும். மேலும் இருமுறை காரங் கூட்டியுருக்கச் சத்தாகும். அதனொடை செம்பு சேர்த்துருக்கிப் பார் உருகி நிற்கும். இதனை எடுத்து வெள்ளியில் நாலுக்கு ஒன்று கொடு கருத்து நிற்கும். கருத்ததென்று மயங்காதே. மயங்கினால் வாதமில்லை. சுக்கான் கல்லை ஆவின் நீர் விட்டு அரைத்துக் குகையாக்கினால் அது நிகடையென்று பெயர் பெறும். அந்த நிகடை மேல் வெள்ளிக் கருப்பினை வைத்துக் குமுற ஊதத் தங்கமாகும். ஒருவருடனும் சொல்லாதே. சொன்னால் நரகம் உண்டாகும் அதனைச் செந்துரித்து உண்ணக் காய சித்தியாகும். யோக சித்தியுமாகும்.

நாகக் கட்டு

ஆமேதான் நாகமது உடனே யாகும்
அடைவான காயசித்தி யடுத்துக் கொள்ளு
நாமேதான் செந்தூரம் பண்ணி யுண்ண
நலமாகக் காயசித்தி யோக சித்தி
காமேதான் காதலுடன் கனிந்து பாரு
கனிவாகக் கண்டதெல்லாம் சித்தி யாகும்
வாமேதான் சித்திக்க வேணு மென்றால்
வடிவாக யோகத்தை மருவிப் பாரே. 371

மருவியே செம்புதனைக் களங்கு பண்ண
மயமாகச் சொல்லுகிறே னுற்றுக் கேளு
விருவியே நாகமது கட்டுக் கேளு
விதமாக நாகமது சேரு வொன்று
கருதியே இலுப்பெண்ணெய் தன்னி லேதான்
நலமாகச் சாரமது போட்டுக் கொண்டு

வருதியே உருக்கியே சாய்க்கக் கேளு
அறிவாக நாலெட்டுத் திரமு மாமே.
திரமாக உருக்கியே சாய்த்துப் போடு
திடமாகச் சாய்த்த பின்பு சொல்லக் கேளு
வரமாகப் புகைநீரு ஒன்று கேளு
வடிவாக வெடியுப்புக் காய்ச்ச லஞ்சு
அரமாகப் பலம்பத்துச் சீனம் கேளு
அடைவாக மூவெட்டுப் பலமு மாகும்
கரமாக இரண்டுமொன்றாய் இடித்துக் கேளு
கனிவாகக் கலையத்தி லடைத்தி டாயே. 373

அடைத்துமே வாலையென்ற சட்டி மூடி
அடைவாகச் சீலைமண் வலுக்கச் செய்து
படைத்துமே வாலையென்ற அடுப்பிலிட்டு
வடிவாகத் தீயெரிக்க வெள்ளை நீராம்
கடைத்துமே வெள்ளையைத்தான் வீசிப் போடு
கனிவாக மஞ்சள்நீர் பிடித்துக் கொண்டு
நடைத்துமே சீசாவில் வைத்து நீயும்
நலமாக வீரமது கழஞ்சு போடே. 374

போடவே சாரமலு கழஞ்சு போடு
பொல்லாத கல்லுப்புக் கழஞ்சு போடு
ஆடவே குழம்பாகப் பண்ணிக் கொண்டு
அடைவாகக் குழப்பியே நாகந் தன்னை
வாடமே கரியோட்டில் அடுக்க வாட்டு
வடிவாக இப்படிக்குத் திரமும் நீயும்
கூடவே வாட்டியே உருக்கிக் கொண்டு
குணமாக வில்லையாய்ச் சாய்த்தி டாயே. 375

சாய்த்திடவே வில்லைக்கு மேலே கேளு
சரியான வளகிலுப்பைப் புகைநீ ராலே
வாய்த்திடவே சாமமரை மேலே கட்டி
வடிவாகக் கதிரிலிடு காயப் போடு
நாய்த்திடவே மண்கவசம் மேலே கட்டி
நலமாகக் காய்ந்தபின்பு நன்மை கேளு
பாய்த்திடவே நூறுஎரு அடுக்கிப் போடு
நாடியே தீயாற்றி யெடுத்துப் பாரே 376

எடுத்துப்பார் நாகமது குகையி லிட்டு
இதமாக உருக்கிடவே மணிபோ லாகும்

அடுத்துமே நாகத்தைப் புறம்பாய் வைத்து
அடைவாக இலிங்கமது சேரு வொன்று
கடுத்துமே கரியோட்டி லேத்தி நீயும்
காரணமாய் முலைப்பாலும் பழச்சாற் றாலே
விடுத்துமே சுருக்கிட்டுச் சாமம் நாலு
விதமாக எடுத்துநீ கழுவி டாயே. 377

கழுவியே அதன்பின்பு சொல்லக் கேளு
கனிவாக இலிங்கத்தைக் கரியோட் டில்தான்
கழுவியே கெந்தியது பலமு மொன்று
நலமாகச் சீனமது பலமு மொன்று
வழுவியே இரண்டுமொன்றாய்ப் பொடித்துக் கொண்டு
வடிவாக எடையாகப் பகுந்து கொண்டு
குழுவியே கரியோட்டில் கொஞ்ச மிட்டு
குணமாக உருக்கியே குணமும் பாரே. 378

குணமாக இலிங்கத்தை யதிலே யிட்டு
குணமாக (நன்றாகப்) புரட்டித் திரு
மணமாக இப்படிக்குப் புரட்டிக் கொண்டு
மயமாகப் பார்த்திடலே இலிங்கந் தானும்
வணமாகக் கம்பியது இறுகிக் காணும்
வடிவாக இலிங்கத்தைக் கழுவிக் கொண்டு
கணமாகப் புகைநீரால் இலிங்கந் தன்னைத்
தாட்டிகமாய் இருசாமம் சுருக்குப் போடே 379

போடவே இலிங்கமது கட்டிப் போகும்
பொலிவாக இலிங்கத்தை மெழுக தாக்கி
ஆடவே சொல்லுகிறே னுற்றுக் கேளு
அடைவாக ரேக்கதுவுங் கழஞ்சி ஒன்று
நாடவே இலிங்கத்தின் மேலே கட்டி
நலமாகக் கற்பூர தீபந்தன்னில்
ஊடவே மெழுகாக வைத்து நீயும்
உற்றுமே மெழுகுதன்னை யெடுத்து வையே 380

வைத்துமே மெழுகுத னை எடுத்து வைத்து
வடிவாக வீரமது சேரு வொன்று
நைத்துமே துண்டாக வெட்டிக் கொண்டு
நலமாகக் கிழிபோலே டோளை கட்டி
வித்துமே பிரண்டைதான் தூக்கு ஒன்று
விதமாக நையவே தட்டி நீயும்
முத்துமே பாணிவிட்டுக் கியாழத் துள்ளே
முனையாக வைத்துளரி வீரந்தானே 381

வைத்துமே யெரித்திடவே சாமம் கேளு
வடிவாகச் சாமமது வொன்று தானும்
கைத்துமே எரித்துப்பார் வீரந் தானும்
கனிவாகச் சுத்தியது கடிசி லாகும்
பத்துமே வீரத்தை யெடுத்துக் கொண்டு
பதிவாக ஓட்டிலிட்டுப் புகைநீர் குத்த
முத்துமே மெழுகாகும் மெழுகைத் தானும்
முனையாக இருக்குமது முறைமை கேளே 382

கேளுமே மெழுகெடுத்து வைத்துக் கொண்டு
கெடியாக அயம்நின்று உருகும் போது
வாளுமே நாலுக்கு ஒன்று போடு
வடிவாகச் சுழித்துமே யுள்ளே வாங்கும்
நாளுமே கட்டியதோர் நாகம் ஒன்று
நலமாக உருகையிலே இலிங்கம் ஒன்று
தாளுமே வீரமொன்று கூடப் போடு
தப்பாதே யெல்லாமும் உருக்கி டாயே 383

உருக்கிடவே அடிக்கடிக்குக் காரங் கூட்டி
உண்மையாய் உருக்கிடவே களங்க மாகும்
நெருக்கிடவே களங்கத்தை யெடுத்துக் கொண்டு
நேராக வைத்துநீ பூசை பண்ணு
முருக்கிடவே வயிரவற்குப் பூசை பண்ணு
முனையாகக் கணபதிக்குப் பூசை பண்ணு
நெருக்கிடவே களங்கத்தை யெடுத்துக் கொண்டு
நேராக நவலோகம் நூற்றுக் கொன்றே 384

ஒன்றேதான் இட்டிடவே உறுதி கேளு
உண்மையாய் மாற்றென்ன பதினாறாகும்
வன்றாக வெள்ளியைத்தான் இடையெடுத்து
வடிவாக உருக்கிடவே மாற்றுக் கேளு
நன்றாக ஆணிக்கு எட்டே காலாம்
நலமாக உப்புக்குங் காவிக் கேகா
பன்றாக இதைவிற்றுச் சீவனத்தைப்
பதிவாக ஞானவழி பாரு பாரே. 385

பாருமே ஞானவழி யடுத்துக் கொண்டு
பதிவாக அயச்செம்பை முன்னே வைத்துக்
காருமே வெள்ளிதனில் கொடுத்து ருக்கு
கனிவாக மாற்றாறு காணும் காணும்

வாருமே வறுமை போல் இதனை யுண்டு
வடிவாக உண்டுதேறி வழியைத் தேடு
தூருமே வழிகண்டால் ஒளியு மாகும்
துடியான ஞானவிதி யடுத்துப் பாரே. 386

அடுத்துமே விசுத்தியிலே யாங்கா ரத்தை
அடைவாக நிறுத்துமே யாண்மை பூண்டு
கடுத்துமே சுழிவழியில் கலக்க முற்றுக்
கனிவாக யோகமுதல் கண்டு பாரு
உடுத்துமே யுண்டுடுத்தி வழியைத் தேடி
உறுதியாய்ச் சிவயோக வழியில் புக்கி
நடுத்துமே நாதவொலி தீபங் காண
நலமாகப் பார்த்திடவே நன்மை யாமே. 387

ஆமேதான் முன்னேதான் வாதம் செய்து
அடைவாக உப்பைத்தான் முன்னே கட்டி
நாமேதான் நவலோகத் தன்னி லய
நலமாக மாற்றாகும் நன்மை பாரு
காமேதான் கையறிந்தால் கனக மாகும்
கருத்துணரும் வாசியோ கத்தைப் பாரு
பாமேதான் பலவகையும் பரீட்சை பாரு
பாகமதை யறிந்தவனே சித்த னாமே. 388

சித்தனா னென்றுசொல்லி வாய்ப்பேச் சாலே
சிறப்பாகச் சொல்லியே மனது கண்டு
முத்தனாம் வெகுவாகச் சொல்லு வார்பார்
முனையாக வாதவிதி முனிந்து கேளு
நத்தனாம் நவலோகம் நாடில் வேதை
நலமாகப் பார்த்து நீ நன்மை கண்டு
கத்தனாம் காரணத்தைக் கனிவால் தானே
காரியமாய் மெய்ப்பொருளைக் கண்டு பாரே. 389

கண்டுபார் பொருளறிந்து காண வேண்டில்
காரணமாய் வகையறிந்து கண்டு வாதம்
பண்டுமே பதிவாகச் செய்து கொள்ளு
பதிவாக யூகிமுனி பகர்ந்த நேர்மை
வண்டுபார் வழியோடே சுழியைக் கண்டு
வாதாடி அநேகமதை வைத்துக் கேளு
முண்டுபார் வாதமது கடிசி லாகும்
முதண்ட கூடமெல்லாம் மொழிய லாமே. 390

மொழியவே காரத்தால் காரம் மெத்த
மூவுகுலஞ் சஞ்சரிக்க மொழிய லாகும்
அழியவே உருக்கினத்துக் காதி கேளு
அடைவான வீரமிட்டால் மெழுகுமாகும்
உழியவே மெழுகாலே கோடி வித்தை
உற்றுணர்ந்த வாதியவர் சொல்லக் கேளு
தழியவே சாலோகம் தன்மை யாகும்
தாட்டிகமாய் ஓங்கார வழியு மாமே 391

வழியாக ஐம்புலனை மாறி மாறி
வடிவாகச் சுழிமுனையில் அக்கினி தேவர்
துழியாகக் கண்டுமே குழுற வூது
துப்புரவாய் மௌனத்தைத் தீட்சை செய்யக்
கழியாக வாயுவெல்லாம் அறுத்துத் தள்ளு
கனிவாக யோகநிட்டை கண்டு பாரு
விழியான விதமறியப் பொருளு மாகும்
விதபான காதலுடன் வெற்றி யாமே 392

வெற்றிபெறக் களங்கமதைச் செந்தூ ரிக்க
விதமாகச் சொல்லுகிறேன் உலகத் தோர்க்கு
முத்திபெறத் தன்வந்தரி சொன்ன வித்தை
முனையாகச் சொல்லுகிறேன் முனைந்து கேளு
நத்தியே களங்கதுவும் பலமு நாலு
நலமான சூதமது பலமும் ஒன்று
முத்தியே கெந்தியதே பலமும் ஒன்று
முடிவாகப் பார்த்துஉடை முனிந்து கேளே 393

கேளுமே யுடைத்துநீ கல்வத் திட்டுக்
கெடியாகப் பொற்றலையின் சாற்றா லாட்டி
ஆளுமே சாமமாய் ஆட்டி நீயும்
அடைவாக வில்லைக்கட்டிக் காயப் போடு
காளுமே காய்ந்தபின்பு ஓட்டி விட்டுக்
கனிவாகச் சீலைமண் வலுக்கச் செய்து
நாளுமே இருபதெரு அடுக்கிப் போடு
நலமாகத் தீயாற்றி யெடுத்துப் பாரே 394

எடுத்துப்பார் முருக்கம்பூப் போலே யாகும்
இதமாகச் சிவப்பென்ன சொல்லப் போகா
அடுத்துமே இதையெடுத்து அகல வைத்து
அடைவாக வயிரவற்குப் பூசை பண்ணு

நடுத்துமே கணபதிக்குப் பூசை பண்ணு
நலமாகச் செம்பு ஆயிரத்துக் கொன்று
விடுத்துநீ கொடுத்துப்பார் மாற்றுக் கேளு
விதமாக இருபதுதான் விருப்ப மாமே 395

விருப்பமாம் இருபதுதான் மாற்றுத் தன்னை
விதமாக அதைக்குறைக்க வித்தை கேளு
நருபதுதான் வெள்ளியைத்தான் இடையே சேர்த்து
நலமாகச் சேர்த்துருக்க நன்மை யாகும்
கருப்பமாய் மாற்றெட்டுக் காணும் காணும்
கனிவாக [உப்புக்குங் காவிக் குந்தான்
விருப்பமாய் ஓடாலு ஒளிந்திடாது.
விதமாக விக்கிரகம் பண்ணுவாயே 396

பண்ணியே நடேசர்தான் பண்ணி நீயும்
பதிவாகக் கணபதியைச் செய்து கொண்டு
உன்னிடவே யிதைவைத்துப் பூசை செய்து
உறுதியாய் அஞ்செழுத்தும் எட்டெழுத்தும்
நன்னிடவே செபித்துநீ நாடி யூது
நலமாக சகலவித்தி யுடனே யாகும்
பொன்னிடவே சரக்கெல்லாம் வாதமாகும்
இனமாக அறிந்தவனே சித்தியாமே 397

சித்தியாம் சத்துருவால் சரக்குக் கொல்லு
செயமாகச் செத்தபின்பு மித்துரு தன்னைப்
புத்தியாய்ச் சேர்த்திடவே உயிரு மாகும்
புனிதமாய்க் களங்காகும் உறவு மாகும்
நத்தியே சகலசித்தும் ஆடலாகும்
நானறிந்த படிசொன்னேன் நாட்டம் பாரு
புத்தியாயப் பொல்லாத வாதிக்குத்தான்
போக்கோடே யொன்றுமில்லை புனித மாமே 398

ஆமேதான் வாதிக்கு அடுத்த வாறு
அடைவாகப் பிடிவாதம் செய்ய வேணும்
காமேதான் ஒன்றுதப்பில் ரெண்டு தப்பில்
கருணையய் மூன்றுதனில் பாக மாகும்
நாமேதான் பாகம்தான் கண்டு தானும்
நலமாகப் பிடிப்பார்கள் நல்ல தாகும்
வாமேதான் பாகமது கடிசி லாகும்
நாடியே சிவயோகம் நடத்தை தானே 399

நடத்தையாம் சிலபேர்கள் வாதி மார்கள்
நலமாகச் சாத்திரத்தைப் பார்த்துப் பார்த்து
விடத்தையாம் வெகுசூடு சுட்டுப் பார்த்து
விதமாக அதைவிட்டுச் சோதிடத்தைக்
கடத்தையாம் பார்த்திட்டு அறிவில் புக்கிக்
கனிவாகச் சோதிடத்தை யதையும் விட்டுக்
குடத்தையாம் மந்திரத்தைப் பார்த்துப் பார்த்துக்
குணமில்லை யென்றுசொல்வர் குருடர் தாமே 400

குருடர்தாம் ஒன்றுந்தா ன்அகப்ப டாமல்
குணமில்லை சாத்திரங்கள் தாம்பொய் யென்று
வருடியே சொல்வார்கள் அவத்தைப் பட்டு
வடிவாக இப்படிக்குப் புலம்பி யேங்கி
நெருடியே வாதத்தி லமடு பட்டேன்
நிலையான மந்திரத்தி லவதிப் பட்டேன்
கருதியே சோதிடத்தி லவகிப் பட்டேன்
கணக்கில்லை யென்பார்கள் வாதி தாமே 401

தானென்ற வாதிதான் புத்தி கேளு
தாட்டிகமாய்ப் பலபுத்தி யாலே யெல்லாம்
வானென்ற செய்திடவே சித்தி யில்லை
வழியில்லை துறையில்லை வன்மை யில்லை
ஊனென்ற உற்றுநீ புத்தி கேளு
உறுதியாய் ஒருபுத்தி யாகச் செய்தால்
நானென்ற வாதமது நடத்தை காணும்
நலமாக இன்னமது தவிலக் கேளே. 402

கேளுமே யொருபுத்தி யாக வேதான்
குணமாக அயச்செம்பை முன்னே வைத்து
வாளுமே கைபாகந் தவறி னாக்கால்'
வடிவாகப் பின்பொருகால் வைத்துக் கொள்ளு
காளுமே ஒன்றில்லாப் போனா லுந்தான்
கனிவாக ஒன்றுதனில் கணக்கு மாகும்
பாளுமே போகாது செம்பும் ஆகும்
பதிவாக மாற்றாகும் பரிந்து பாரே. 403

பாருமே மனமுந்தான் ஆங்கா ரத்தால்
பதிபாச விதியாலே பார்த்துச் சேரு
காருமே எல்லாமும் சித்தி யாகும்
கருணைபெறச் சித்தியெல்லாம் உப்பினா னாலே

வாருமே உப்பாலே சித்த ரெல்லாம்
வடிவாகச் சொரூபமணி பண்ணி னார்கள்
சாருமே உப்பாலே யுப்பைக் கட்டிச்
சரியாக வாதத்தைச் செய்து கொள்ளே. 404

கொள்ளவே சகலநூ லெல்லாம் பார்த்துக்
குணமாகச் சோதிச்சுக் கருவை யுன்னி
மெல்லவே நாதாக்கள் பதத்தைப் போற்றி
மேன்மைபெற வாணியுட பதத்தைப் போற்றித்
துள்ளவே உலகத்தில் வாதி மார்கள்
துடியாகப் பிழைக்கவே சொன்னே னப்பா
வள்ளலார் சொன்னபடி நானும் சொன்னேன்
(வளமாக) இதைச்சோதி வடிவு மாமே 405

இனி செம்பினைக் கணக்கு செய்ய உரைக்கின்றேன் கேள்: இலுப்பெண்ணெய்யில் சாரமிட்டு நாகத்தை முப்பத்திரண்டு முறை உருக்கிச் சாய்ப்பாயாக. பின்னர் வெடியுப்புப் பத்துப் பலமும் சீனம் இருபத்திநாலு பலமும் இடித்துத் தோண்டியினுள் விட்டு வாலை வைத்து மூடி சி.ம.செ. அடுப்பேற்றி எரிக்க நீர்வரும். வெள்ளை நீரை நீக்கி மஞ்சள் நீரைப் பிடித்துப் புட்டியில் ஊற்றி வைத்துக்கொண்டு அதில் வீரம் சாரம் கல்லுப்பு மூன்றும் வகைக்குக் கழஞ்சு சேர்த்துக் குழம்பாக்கி வைத்துக் கொண்டு நாகத்தைத் தோய்த்துக் கரியோட்டில் அடுக்கி வாட்டு. வாட்டியுருக்கிக் கொண்டு வில்லையாய்ச் சாய்த்து எடு. பின்பு வளையலுப்பைப் புகைநீர் விட்டரைத்து நாகத்துக்குக் கவசம் கட்டிக் காயவைத்துப் பின்பு மண் கவசம் கட்டி நூறு எரு அடுக்கிப் புடமிடுக. இட்டு எடுத்து உருக்க மணியாகும். மணியை எடுத்து புறம்பே வைத்து விட்டு, இலிங்கங் கட்டத் தொடங்கு. ஒருசேர் இலிங்கத்தைக் கரியோட்டில் வைத்து முலைப்பாலும் பழச்சாறும் நாலு சாமம் சுருக்கிட்டு எடுத்துக் கழுவி வை. பின்பு கெந்தியும் சீனமும் வகைக்கு ஒருபலம் எடுத்துப் பொடித்துப் பகுத்து வைத்துக் கொண்டு கரியோட்டில் சிறிது இட்டு உருக்கி இலிங்கக் கட்டியை அதன் மேல் வைத்துப் புரட்டுக எல்லாத் தூளும் சிறிது சிறிதாக இட்டு நன்றாய்ப் புரட்டிப் பார்க்க இலிங்கம் கம்பியாய் இறுகிக் காணும். பின்பு புகை நீரை இலிங்கத்துக்கு இருசாமம் சுருக்குத் தாக்கு. இலிங்கம் கட்டி விடும். அதனை மெழுகாக்கி அதன் மேல் ஒரு கழஞ்சு தங்கரேக்குச் சுற்றிக் கற்பூர தீபத்தில் வாட்டி மெழுகாக்கி எடுத்து வை. இனி வீர மெழுகு கேள். ஒரு தூக்குப் பிரண்டையை நையத் தட்டித் தண்ணீர் விட்டுக் கியாழம் செய்து ஒருசேர் வீரத்தைத் துண்டு துண்டாக வெட்டிக் கிழிக்கட்டிக் தோளாந்திரமாக வீரக் கட்டியில் கியாழ நீர் படாமல் தொங்கவிட்டு ஒருச்சாமம் எரித்துப் பார்க்க வீரம் தூயதாகும். ஓட்டில் வைத்துப் புகை நீர் குத்த மெழுகாகும். அயம் உருகும் போது நாலுக்கு ஒன்று மெழுகு

போடச் சுழித்து உள்ளே வாங்கும். கட்டிய நாகம் ஒன்று உருகும் போது இலிங்கம் ஒன்று வீரம் ஒன்று கூடப் போடு. பின்பு எல்லாம் சேர்த்துத் தப்பாமல் உருக்கிட அடிக்கடி காரம் கூட்டி உருக்கிடக் களங்கமாகும். களங்கத்தை யெடுத்து நேராக வைத்து நீ பூசை செய். வயிரவர்க்கும் கணபதிக்கும் பூசை செய். நவலோகம் நூற்றுக்கு ஒன்று தாக்கு. மாற்றுப்பதினாறு அதனெடை வெள்ளி சேர்த்து உருக்க எட்டே கால் மாற்றாகும். உப்புக்கும் காவிக்கும் போகாது. இதனை விற்று உண்டுடுத்து ஞானவழி பார். அயச்செம்பை முதலிற் செய்து வெள்ளியிற் கொடுத்தால் . ஆறுமாற்றுத்தான். மெய்யுணர்வு வழியைத் தேடு. வழி கண்டால் ஒளியுமாகும். விசுத்தியிலே ஆங்காரத்தை நிறுத்திச் சுழிவழி-யே கலந்து யோகமுறுவாயாக நாதவொலி தீபம் நயமாகப் பார்.

388-390 – அறிவுரை

வெண்காரத்தால் காரம் மிகுதி. அதுவே உருக்கினத்துக்கு ஆதி. வீரம் சேர்த்தால் மெழுகு ஆகும். மெழுகாலே கோடி வித்தை ஐம்-புலனையும் மாறி மாறிச் சுழி முனையில் நெருப்புத் தோன்றும் வண்ணம் குமுறவூது. விழியான வகையறியப் பொருளுமாகும்.

களங்கைச் செந்தூரஞ் செய்ய உலகோர்க்கு வகையாகச் சொல்-வேன். முத்தி பெற வழியாகத் தன்வந்திரி சொன்ன வித்தை.

களங்கு நாலு பலம். ரசம் ஒருபலம். கெந்தியொரு பலம். உடைத்துக் கல்வத்திலிட்டுப் பொற்றலையின் சாற்றால் ஆட்டி வி.த.கா. சீ.ம.செ. இருபதெருவடுக்கிப் புடமிடு. முருக்கம் பூப்போலாகும். பிள்ளை-யார்க்கும் வயிரவர்க்கும் பூசை செய்து செம்பில் ஆயிரத்துக்கு ஒன்று கொடுக்க இருபது மாற்று எடைக்கெடை வெள்ளி சேர்த்துருக்க எட்டு மாற்று. உப்புக்குங் காவிக்கும் ஓடாது. நடேசர் திருவுருவமும் பிள்ளை-யார் திருவுருவமும் செய்து அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஓதி ஊது. எல்லா நலமும் வாய்க்கும். எல்லாச் சரக்கும் வாதமாகும்.

பகைப் பொருளால் பொருள்களைக் கொன்ற பின்பு செத்த பொரு-ளொடு நட்புப் பொருளைச் சேர்க்க பின்பு உயிருண்டாகும். தூய களங்காகும். உறவுண்டாகும். வாதி பிடிவாதம் செய்ய வேண்டும். ஒரு முறை இருமுறை தப்பினால் மூன்றாவது முறையில் பாகமாகும். சிவ-போகமாகும். சிலர் நூல் பார்த்துச் சுட்டுச் சுட்டு அதை விட்டுச் சோதிடம் பார்த்து அதிலும் தேறாமல் மந்திரம் பார்த்து அதிலும் குணமில்லை என்பார் குருடர் தாமே. இத்தகைய குருடர் நூல் பொய்யென்பர். வாதத்தில் அமடுபட்டேன். மந்திரத்திலவதிப்பட்டேன். சோதிடத்தில் வருத்தப்-பட்டேனென்பார். பலவகை எண்ணத்தால் செய்ததனாற் பயனில்லை. ஒரு வகையெண்ணத்தால் செய்தால் உறுதியாகும். ஒருமைப்பாட்டுடன்

இருந்து உறுதியாகச் செய்க. அயச்செம்பு ஒருமுறை வைத்துக் கைபாகம் தவறினால் பின்பு ஒருமுறை வைத்துத் தேரு, பாழாய்ப் போகாது. மாற்றாகும். சித்தியெல்லாம் உப்பினாலே. உப்பினாலே சித்தரெல்லாம் சொரூபமணி செய்தார்கள். உப்பாலே யுப்பைக் கட்டி ஒழுங்காக வாதத்தைச் செய்துகொள். எல்லா நூலும் பார்த்து ஆராய்ந்து நாதாக்கள் திருவடி போற்றிக் கலைமகள் அடிகளைப் போற்றி உலகோர் வாழ நூல் கூறினேன். வள்ளலார் சொன்னபடி நானும் சொன்னேன். வளமாக இதனை ஆராய்ந்து பார் வடிவாகும்.

பித்தளைச் செம்பு

வடிவாகப் பித்தளையின் செம்பு தன்னை
வாதிமகன் அறியானே வண்மை கேளு
துடியாக வுலகத்தில் எல்லா ருந்தான்
துப்புரவாய்ப் பிழைக்கவே சொல்லக் கேளு
நடியாகச் சருகுபித் தளையுந் தானும்
நலமாகச் சேரொன்று கார மிட்டு
முடியாக உருக்கியே தகடு வார்த்து
முனையாகப் பூசுவகை மொழியக் கேளே 406

மொழியவே தாளகந்தான் ரெண்டு சேரு
மேதினியிற் கற்சுண்ணம் கீழ்மேல் இட்டு
வழியாக வெந்நீரை விட்டு நீற்ற
வகையான தாளகந்தான் சுத்தி யாச்சு
நழியாகத் தாளகமும் சேரு வொன்று
நயமான வளையலுப்புச் சேரு ரெண்டு
குழியாகக் கல்வத்தி லிட்டுக் கேளு
குணமாகப் பழச்சாறு விட்டு ஆட்டே 407

ஆட்டியே இருசாமம் சென்ற பின்பு
அடைவாகப் பித்தளையின் மேலே கட்டி
வாட்டியே கதிர்தனிலே காயப் போடு
வடிவாகப் பின்னுமந்தக் கல்வத்திட்டு
நாட்டியே பழச்சாறு விட்ட ரைத்து
நலமாகப் பித்தளையின் தகட்டின் மேலே
கூட்டியே லேசாகத் தகடு தட்டிக்
குணமாகக் காயவைத்துப் பின்பு கேளே 408

கேளுமே கறியுப்புப் படியு நாலு
கெடியாக நன்றாக வறுத்துக் கொண்டு
வாளுமே அம்மியிட்டுப் பொடித்துக் தானும்
அடைவாகப் பின்னேதான் வறுத்துக் கொண்டு

பாளுமே போகாமல் உப்புக் குள்ளே
கனிவாக வைத்துநீ அமுக்கிப் போடு
காளுமே பெரியபுடம் போட்டெ டுக்கக்
கனிவாகப் பித்தளையும் நொறுங்கிப் போமே 409

நொறுங்கியே போன பின்பு தானும்
நுணுக்கமாய்த் தாளகத்தை யரைத்துப் பூசி
வறுங்கியே காயவைத்து உப்புக் குள்ளே
வடிவாகப் புடம்போட எல்லாந்தானும்
நறுங்கியே அதராக நொறுங்கிப் போகும்
நலமாக நொறுங்கினதோ ரெல்லாந்தானும்
கறுங்கியே கல்வத்தி லிட்டுக் கேளு
கனிவாக எடைசமனாய்க் கெந்தி சேரே 410

தானென்ற செந்தூரம் தன்னி லேதான்
தாட்டிகமாய் வெங்காரம் பாதி சேர்த்து
வானென்ற பழச்சாறு விட்டு ஆட்டி
வடிவாக வில்லைகட்டிக் கதிரி லிட்டு
கானென்ற வச்சிரமாங் குகையி லிட்டுக்
கனிவாக உருக்கிடவே கருப்பு மாகும்
நானென்ற காரமிட்டு உருக்கிப் பாரு
நலமாக இருக்குமது நன்மை யாமே 411

ஆமேதான் காரமிட் டுருக்கச் செம்பு
அடைவாகச் சிவப்பாகும் கோவை தானும்
வாமேதான் கனிபோலே யிருக்கும்அப்பா
வடிவாக நன்றாக வூதிப் போடு
காமேதான் வெள்ளிகளில் எட்டி லொன்று
கனிவாகச் செம்புதான் வைத்து ருக்கித்
தாமேதான் எடுத்துப்பார் கரியு மாகும்
தாட்டியமாய் நிகடைதனில் வைத்தி டாயே 412

வைத்துமே நிகடைதனில் வைத்து ஊதி
வடிவாக எடுத்துப்பார் பொன்போ லாகும்
தைத்துமே இதில்நாலுக் கொன்று தங்கம்
தாட்டிகமாய்ச் சேர்த்துருக்க எட்டு மாற்று
கைத்துமே உப்புக்குங் காவிக் கப்பா
கனிவாக ஓடாது ஒளிந்தி டாது
நைத்துமே யிதைவிற்றுச் சீவனத்தை
நலமாகச் செய்துமே நாட்டி டாயே 413

நாட்டியே பித்தளையின் செம்பி னாலே
நலமாகச் சித்தரெல்லாம் வெள்ளி தன்னில்
கூட்டியே கொடுத்துமே பொன்னே யாக்கிக்
குணமாக விற்றுமே யுண்டு டுத்தி
வாட்டியே சுழியுக்குள் வழியிற் சென்று
வடிவாக இருந்தாக்கால் சித்தர்தானும்
மூட்டியே இச்செம்பை வைத்துத் தானே
முனிவாக ஞான வழியடுத்துத் தேறே 414

அடுத்துமே பித்தளையின் செம்பு தன்னை
அடைவாகச் செந்தூ ரம் பண்ணக் கேளு
கொடுத்துமே பித்தளையின் செம்பு நாலு
துடியாகக் தங்கமது பலமு நாலு
விடுத்துமே தங்கத்தைக் தகடு வாங்கி
விதமாகக் கற்காவி பழச்சாற்றாலே
வடுத்துநீ அரைத்துமே பூசிப் பூசி
வடிவாகக் குழம்பிலே பூசி டாயே 415

தோய்த்திடவே தங்கமது எண்ணெய் கக்கும்
துடியாக நல்லசுத்தி யாகும் பாரு
வாய்த்திடவே பித்தளையின் செம் பெடுத்து
வடிவாக எடைசமனாய்ச் சேர்த்துக் கொள்ளு
நாத்திடவே யுருக்கியே தகடு வாங்கு
நலமாகத் தகட்டுக்குப் பூசக் கேளு
பாத்திடவே கெந்தியது தாளக ந்தான்
பதியாக எடைசமனாய்ச் சேர்த்துக் கொள்ளே 416

சேர்த்துமே பழச்சாறு விட்ட ரைத்துச்
சிறப்பாக (அளவாகப்) பூசிப் பூசி
வாத்துமே கதிரிலிடு காய வைத்து
வடிவாகப் பத்தெருவில் புடத்தைப் போடு
காத்துமே யதையெடுத்து உருக்கிப் பாரு
கனிவாகக் கருப்பாக இருக்கும் பாரே
நாத்துமே திரும்பவுமே பூசிப் பூசி
வடிவாகப் பத்தெருவில் புடத்தைப் போடே 417

போடவே களங்காகக் கரியு மாகும்
பொலிவாகக் கரிதன்னில் வெள்ளி தன்னில்
ஆடவே யெட்டுக்கு ஒன்று தாக்கு
அடைவாக உருக்கியே ஊதிப் போடு

நாடவே யூதினதை யெடுத்துப் பாரு
நலமாகத் தங்கமது ஆகும் நேர்மை
கூடவே யுப்புக்குங் காவிக் குந்தான்
குணமாக இறங்கிப் போம் கொள்கைதானே 418

தானென்ற களங்கெடுத்து நவலோ கத்தில்
தாக்கிடவே தங் கமுமாம் நல்லவித்தை
மானென்ற நாதாக்கள் மறைத்த நேர்மை
மயமாகப் பிடிவாதந் தன்னி லேதான்
கோனென்ற களங்கெடுத்து நவலோ கத்தில்
கூட்டிடவே தங்கமுமாம் நல்லவித்தை
மானென்ற இதுதன்னைச் செலவு செய்து
மயமாக உண்டுநீ வழியைத் தேடே 419

நாலு முகக் களங்கு

தேடவே நாலுமுகக் களங்கு கேளு
திறமாகப் பித்தளையின் செம்புநாலு
வாடவே உருகையிலே தங்கம் ஒன்று
வடிவாக நாகமொன்று உருகி யாட்டு
கூடவே யாடையிலே இலிங்க மொன்று
குணமாக உருகையிலே வீரமொன்று
நாடவே யெல்லாமும் உருகும் போது
நலமாகக் காரமிட் டுருக்கி டாயே 420

உருக்கிடவே களங்காகும் நவலோ கத்தில்
உறுதியாய் நூற்றுக்கு ஒன்று தாக்கு
பெருக்கிடவே தங்கமது பத்து மாகும்
பிசகாமல் சொல்லிவிட்டேன் பின்பு கேளு
நருக்கிடவே உப்புக்குங் காவிக் குந்தான்
நலமாகப் பிசகாது நன்மை சொன்னேன்
நெருக்கிடவே யிந்நூலை நேர்ந்து பாரு
நிலையாகப் பார்த்திடவே சித்தி யாமே 421

ஆமேதான் களங்குதனைச் செந்தூ ரிக்க
அடைவாகச் சொல்லுகிறே னறிந்து கேளு
நாமேதான் களங்குக்கு நாலத் தொன்று
நலமாகக் கெந்தியது ஒன்று சேர்ந்துப்
பாமேதான் நாலுக்கு ஒன்று சூதம்
பதிவாகச் சேர்த்தரைநீ பழச்சாற் றாலே
வாமேதான் வில்லைகட்டிக் கதிரிலிட்டு
பதிவாகக் காய்ந்தபின்பு பருவங் கேளே 422

பருவமாய்க் காய்ந்தபின்பு ஓட்டி லிட்டுப்
பதிவாகப் பத்தெருவில் புடத்தைப் போடு
உருவமாய்ப் புடமாறி யெடுத்துப் பாரு
உற்றுமே செந்தூரம் முருக்கம் பூப்போல்
கருவமாய் நவலோகந் தன்னி லேதான்
கனிந்துமே நூற்றுக்கு ஒன்று தாக்கு
திருவமாய்த் தங்கமது பத்து மாற்று
சிவசிவா தங்கத்தை யெடுத்துக் கொள்ளே 423

கொள்ளவே யிதைவிற்றுச் சீவ னத்தைக்
குணமாகச் செய்துடனே யோகம் பாரு
துள்ளவே யோகமது கடிதி லாகும்
நுடியான ஞானவழிக் கிதுவே யாதி
மெள்ளவே சுழிமுனையில் அக்கினித்தீ
மேன்மையாய் விளையுமது வித்தையாகும்
கள்ளமாய்ச் சொல்லவில்லை கூர றிந்து
கணக்காகப் பார்த்திடவே கருத லாமே 424

ஆமேதான் குருவறியான் பொருளைக் காணான்
அடைவான நூல்தன்னைப் பார்க்க மாட்டான்
காமேதான் கைந்நினைவாய்ச் சுடுவா னப்பா
கனிவாகப் புத்தியது கருணை யாக
வாமேதான் ரவிமதியும் சுழினை யோடே
வழியாகக் கண்டறியான் மார்க்க மாகும்
தாமேதான் மார்க்கத்தைக் கண்ட பேர்கள்
கனிவாக எல்லாமும் சித்தி யாமே 425

சித்தியாம் அந்திசந்தி பணங்கால் வீதம்
சித்தியாம் மண்டலந்தான் உண்டு தேறு
பத்தியாய் மண்டலத்தில் காய சித்தி
பதிவாக நரைதிரைகள் அற்றுப் போகும்
நத்தியே காயசித்தி யுடனே யாகும்
நலமாக வாதசித்தி வண்மை யாகும்
புத்தியாய்க் கண்டறிந்தோர் பெரியோ ராவர்
புனிதமாய் ஞானவழி யடுத்துப் பாரே 426

அடுத்துமே யோங்கார வழியிற் சென்று
ஆதியாய் வகையறிய ஆண்மை யாகும்
படுத்துமே பலவிதத்தில் ஞான மாகும்
பதியான காரணத்தைப் பரீட்சை பாரு

நடுத்துமே நாதவொலி யோங்கா ரத்தை
நாடியே பார்த்திடவே சகல சித்தி
விடுத்துமே சித்திதரும் மெய்யே யென்பார்
விதமாகச் சகலமுந்தான் பார்த்தி டாயே 427

பார்த்திடவே ஞானவழி யடுத்துத் தீரு
பதிலாகச் சிவயோக வண்மை பாரு
காத்திடவே வண்மையெல்லாம் கருதிப் பாரு
கனிவாக வாதுநூல் கண்டு தேரு
ஏத்திடவே வழியோடே சுழியி லேறு
இதமாக உலகத்தில் வாதம் மெய்யாம்
மாத்திடவே மாத்தாகும் வகையைப் பாரு
மயமான சோதிமய மாருந் தானே 428

ஆகுமே சிவயோக வழியிற் சென்று
அடுத்துமே ஞானவழி மூணாம் வீதி
பாகுமே பதிபாச வெற்றி தானும்
பாகமாய் வடிவான பரம சோதி
தாகுமே வாதிமகன் வைத்தியம் செய்யத்
தாட்டிகமாய் உற்றுமே வழியில் தேடு
கடுமே குணமறியக் கூடு கூடு
குணமாக அத்தோய்தம் குணமு மாமே 429

குணமாகத் தேவனுட வாத மாகும்
கொண்டிடவே வாதந்தான் வந்து தானால்
மணமாகும் வாதங்கள் நிலைத்துப் போகும்
வடிவாக வகையறியச் சித்தி மெத்த
பணமாக வாசியோ கத்தைப் பாரு
பதிவாக விதியோகம் பண்பு மாகும்
நிணமான சகல சித்தி யாடலாகும்
நிலையான வெடியுப்பா வெல்லா மாச்சே 430

ஆச்சப்பா களங்குதனில் வைத்து ஊத
அருளான தங்கமது ஆதி யாகும்
வாச்சப்பா ஆதியென்றால் வரிசை கேளு
வடிவான தங்கசித்து வடிவு மாகும்
நாச்சப்பா அம்பரமாம் வீதி தன்னில்
நலமாக ஞானவழி அடுத்துப் போற்று
காய்ச்சப்பா அருளான பூரணத்தைக்
கனிவாகக் கண்டிடவே சித்தி யாமே 431

சித்தியாம் பித்தளையின் செம்பு தன்னைச்
சேர்த்துமே அம்மனுக்குச் சொன்னா ரையா
கத்தியாம் அம்மனது மன மகிழ்ந்து
கருணைபெற அசுவனிக் குச்சொன் னபோது
நத்தியே அகவனியும் கேட்டுத் தேறி
நலமான விசுவனிக்கு நன்மை கூர்ந்து
முத்தியே விசுவனியும் மனம கிழ்ந்து
முனிவான நந்திக்குச் சொன்ன வாறே 432

வாறுகேள் நந்தியவர் மனம கிழ்ந்து
வடிவாகத் தன்மந்திரிக் கறிக்கை சொன்னார்
கூறுகேள் தன்வந்திரி மனம கிழ்ந்து
குணமாக அகத்தியர்க்குக் குருவாகத் தான்
நாறுகேள் சொல்லிடவே அகத்தியர் தாமும்
நலமாகப் புலத்தியர்க்கு நன்மை சொன்னார்
பேறுகேள் புலத்தியரு மனம கிழ்ந்து
பெருமைதரத் தேரற்குச் சொன்னவாறே 433

சொன்னதொரு தேரருமே மனம கிழ்ந்து
தேவியுப வாசத்தால் உலகத்தில் தான்
நன்னயமாய் யூகிக்குச் சொன்னாரையா
நலமாக யூகிமுனி யுலகத் தோர்க்குக்
கன்னல்போல் எல்லாரும் பிழைக்க வேதான்
காரணமாய் நாதாக்கள் சொன்னசொல்லை
இன்னிலத்தில் பிடிவாத மாகச் சொன்னார்
இதமாகப் பொருளறிய வாதமு மாமே 434

இதமாகக் களங்கெல்லாந் தெளிந்து சேர
இன்பமாய் நிகடையொன்று சொல்லக்கேளு
விதமாகச் சுக்கானாம் கல்லு தன்னை
வீதமாய்க் கோமியம்விட் டரைத்துக் கொண்டு
நதமாக வட்டமாகக் குகைபிடித்து
நாடியே களங்கிட்ட லோகம் வைத்து
பதமாக வங்கமென்ற நாளத்தூது
பதிவாகப் பழுப்புமயம் அற்றுப் போமே 435

போகுமே யாட்டெலும்பு சுட்டுக் கொண்டு
பெருமையாம் காடிவிட்டு மைபோ லத்தான்
வாகுமே யரைத்துநீ வட்ட மாக
வலுவாகக் குகைமண்ணு வலுவ தாகும்

நாகுமே யதனுள்ளே களங்கை வைத்து
நலமாக வங்கமென்ற நாளத் தூது
வாகுமே தங்கமய மாகும் பாரு
வடிவாகத் தொகை யறியவண்மை கேளே 436

வண்மையாம் எருமையுட மாட்டுச் சாணி
வடிவாகக் குகைபிடித்து மார்க்கங் கேளு
உண்மையாய்க் களங்குவைத்து ஊதிப் போடு
உறுதியாய்ச் செம்புதான் கக்கிப் போகும்
தண்மையாம் பொன்னாகும் எடுத்துக் கொள்ளு
தப்பாதே நிகடைகளை வைத்து நீயும்
பெண்மையாய் இதில்வைத்து ஊதிப்போடப்
போக்கோடே செல்வமாம் பேணிப்பாரே 437

406-437 பித்தளைச் செம்பு

ஒருசேர் சருகு பித்தளையைக் காரமிட்டுருக்கித் தகடாக வார்த்துக் கொள். மேற்பூச வகை கேள். இரண்டுசேர் தாளகத்துக்குக் கீழும் மேலும் கற்சுண்ணாம்பிட்டு வெந்நீர் விட்டு நீற்றத் தாளகம் நயமாகும். அத்தாளகம் ஒரு சேரும் வளையலுப்பு ஒரு சேரும் பழச்சாறு விட்டாட்டிப் பித்தளைத் தகட்டின் மேற்பூசிக் காய வைத்துப் பின்னுமொரு முறை தாளக வளையலுப்புக் குழம்பு பூசிக் காயவைத்து எடுத்துக்கொள். நாலுபடி கறியுப்பைப் பொடித்து வறுத்துச் சட்டியிலிட்டு அதற்குள் பித்தளைத் தகட்டை வைத்துப் பெரும்புடம் போட்டெடுக்க நொறுங்கும். மீண்டும் தாளகம் அரைத்தும் பூசிக் காய வைத்துப் புட்மிட அதாாக நொறுங்கும். அவ்வெடைக்குக் கெந்தி சேர்த்து வெங்காரம் பாதி சேர்த்துப் பழச்சாறு விட்டாட்டி வி.த.கா. வச்சிரக் குகையில் இட்டுக் கனிவாக உருக்கக் கரியாகும். காரமிட்டுருக்க நலமாக இருக்கும். கோவைக் கனிபோல் செம்பு சிவப்பு நிறமாக இருக்கும். வெள்ளியுடன் எட்டிறொன்று வைத்து உருக்கக் கரியாகும் எடுத்து நிகடையின் மேல் வைத்துப் புடமிடு. பொன் போலாகும். நாலுக்கு ஒன்று தங்கம் சேர். எட்டு மாற்று. உப்புக்கும் காவிக்கும் ஓடாது. சித்தரெல்லாம் பித்தளையின் செம்பெடுத்து வெள்ளியில் கொடுத்துப் பொன்னாக்கி விற்று உண்டுடுத்தி வாழ்ந்து சுழிவழியிற் சென்று ஞானம் கண்டார்.

பித்தளைச் செம்புச் செந்தூரம்

நாலு பலம் தங்கத் தகட்டுக்குப் பழச்சாற்றாலரைத்த கற்காவிக் குழம்பினைப் பூசி நெருப்பில் தோய்க்க நயமாகும். அவ்வெடைக்குப் பித்தளைச் செம்புத் தகடு சேர்த்து உருக்கித் தகடாக்கிப் பழச்சாற்றாலரைத்த கெந்தி தாளகக் குழம்பைப் பூசிக் காய வைத்து 10 எருப்புடமிடு

உருக்கக் கருப்பாகும். மீண்டும் பூசிப் பூசிப் 10 எருப்புடமிடக் களங்களாகக் கரியாகும். வெள்ளியில் எட்டுக்கு ஒன்று கொடு. உருக்கி ஊது. தங்கமாகும். மேற்படி களங்கினை ஒன்பது வகை உலோகத்தில் கொடுக்கத் தங்கமாகும். நல்லமுறை. நாதாக்கள் மறைத்த நேர்மை. இந்நூலிற் சொன்னேன்.

நாலுமுகக் களங்கு

பித்தளைச் செம்பு நாலு பங்கு உருகும்போது தங்கம் ஒருபங்கு சேர். நாகம் ஒருபங்கு சேர்த்து உருக்கியாட்டு. அப்பொழுது இலிங்கமொன்று சேர். குணமாக உருகுங்கால் வீரம் ஒரு கூறு சேரு. எல்லாமும் உருகும் போது காரமிட்டுருக்கு. களங்காகும். ஒன்பான் உலோகத்தில் நூற்றுக்கு ஒன்று கொடு. தங்கம் பத்து மாற்று. பிசகாமல் சொல்லிவிட்டேன். உப்புக்கும் காவிக்கும் பிசகாது.

இக்களங்கினைச் செந்தூரிக்கக் கேள். களங்கிற்கு நாவில் ஒரு பங்கு கெந்தியும் நாலில் ஒரு பங்கு சூதமும் சேர்த்துப் பழச்சாற்றால் அரைத்து வி.த.கா. சீ.ம செ. 10 எருபுடமிடு. செந்தூரம் முருக்கம் பூவாம். ஒன்பான் உலோகத்திலும் நூற்றுக்கு ஒன்றிடப் பத்தரை மாற்று. கள்ளமாகச் சொல்லவில்லை. கணக்காகப் பார்.

425-434. அறிவுரையும் பித்தளைச் செம்பு சொன்ன வழிமுறையும் செய்யுளிற் காண்க.

435-நிகடை

சுக்கான் கல்லைத் தூளாக்கி ஆவின் சிறு நீர் விட்டு அரைத்து வட்டமாகக் குகை செய்துக் களங்கிட்ட உலோகம் வைத்து வங்க நாளத்தால் ஊதப் பழுப்பு மயம் அற்றுப் போகும்.

ஆட்டெலும்பைச் சுட்டுக் காடிவிட்டு மைப்போல் அரைத்து மண் சேர்த்துக் குகை செய்து களங்கினை வைத்து வங்க நாளத்தால் ஊதத் தங்கமாகும்.

எருமைச் சாணியால் குகைபிடித்துக் களங்கு வைத்து ஊதச் செம்பு கக்கிப் போகும். பொன்னாகும். நிகடை வைத்துப் போக்கோடே ஊதச் செல்வமாம். பேணிப்பாரே.

புடத்திட்டம்

பேணியே புடவரிசை சொல்லக் கேளு
பிசகாதே கல்லுப்புச் சேரு ஒன்று
வாணியே அடுப்பதனில் வறுத்துப் போடு
வடிவாகச் செங்கலம் முக்காலிட்டுக்

காணியே பொடியாக்கி ஒட்டி லிட்டுக்
கனிவாக மட்டத்தைத் தகடுதட்டி
நாணியே யிதில்வைத்துப் புடத்தைப் போட
நலமாக அருகுகட்டி யிறங்கும் பாரே 438

இறங்கியே இறங்காமல் இருந்து தானால்
ஏத்தமாம் முன்போல புடத்தைப் போடு
வறங்கியே யருகுகட்டி யிறங்கும் பாரு
வடிவாக இதைக்குகையில் இட்டுக் காரம்
நறங்கியே இட்டுமே உருக்கிப் போட
வடிவாக வஸ்துவாம் வடிவு பாரு
நறங்கியே கைபாக மாகச் செய்ய
நலமாகச் சித்திதரும் நன்மையாமே 439

ஆமேதான் பொருளறியார் வாதி மார்கள்
அடைவாக நிகடைதனைக் காண மாட்டார்
காமேதான் நிகடைதான் என்னத்துக்குக்
கனிவாகச் சும்மாவா யூதிப் பார்த்துச்
சாமேதான் ஒன்றுமில்லை யென்பார் மூடர்
சார்ந்துமே நிகடைவிதியாலே யெல்லாம்
பாமேதா னுண்டாகும் பருவ மாகும்
பாகமாய்ச் செய்தாலே பதன மாமே 440

பதனமாய்ச் சுடுவாதி செய்யு மார்க்கம்
பாகத்தை யறியாமல் நினைத்துப் பார்த்து
விதனமாய் இதுவெல்லாம் பொய்யோ வென்று
விதமாகச் சொல்லுவார் அலுத்துப் பார்த்துக்
கதனமாய்ப் புடவரிசை என்னத்துக்குக்
கதியான நிகடையது என்னத்துக்கு
விதமாக இதுவெல்லாம் பொய்யோ வென்று
விருப்பமாய்ப் புலம்புவார் விரும்பி டாயே 441

விரும்பியே சொல்லிட்டு வேதை மார்க்கம்
விதமாக மூலிகையி லிருக்கு தென்று
அரும்பியே நாய்போல அலைந்து சுற்றி
அடைவாக எல்லாமும் பொய்யே என்பார்
நரும்பியே யவர்களுக்கு வாத மில்லை
நலமான செயலில்லை நாட்டமில்லை
குரும்பியே யலைந்திடுவோர் குறுகத் தானே
குணமாகச் சித்தியில்லை கூர்ந்து பாரே 442

கூர்ந்துபஞ்ச பூதத்தைக் கண்ட பேர்கள்
குறிப்பறிவர் நன்னூலைக் கண்டுதேறி
வார்ந்துமே கைபாகம் கண்டு தேறி
வடிவாகச் செய்திடுவார் வரி சையாக
நார்ந்துமே கட்டுகளும் மெத்தச் செய்வார்
நலமாகச் சுண்ணமுதல் செய்து பார்த்து
கார்ந்துமே வாதவித்தை கண்டு சொல்வார்
கனிவாகப் பார்த்த வரேகணக்கு மாமே 443

438-443 – புடத் திட்டம்

வறுத்த கல்லுப்பு ஒருசேரும் பொடித்த சிவப்புக் கலையம் முக்கால் சேரும் ஓட்டில் இட்டு மட்டப்பொன்னைத் தகடு தட்டி அதனுள் வைத்துப் புடமிட அருகு கட்டித் தங்கம் இறங்கும். இறங்கியும் இறங்காமலும் இருந்தால் முன்போல் பின்னும் புடமிட அருகு கட்டியிறங்கும். அதனைக் குகையிட்டுக் காரமிட்டுருக்க நலமாகும். இங்ஙனம் கைபாகமாகச் செய்க.

நிகடை என்னத்துக்கு என்பார் மூடர். நிகடை விதியால் எல்லாமாகும். பாகத்தையறியாமல் புட வரிசை என்னத்துக்கு, நிகடை எனனத்துக் கென்பார் அறியார். மூலிகையில் செம்பொன்னெறியிருக்குதென்று புகன்று நாய்போல அலைகுவார். ஐம்பூதப் பொருளறிவார் கைபாகம் தேர்ந்து கட்டும் சுண்ணமும் உணர்ந்துவாத வித்தை கண்டு சொல்வார். கணக்காக ஆகும்.

சுண்ணத் திராவகம்

கணக்காகச் சுண்ணமென்ற திறவு கோற்குக்
காரணமாய்ச் சொல்லுகிறேன் கனிந்து கேளு
துணக்காக நூல்தனிலே சொல்லவில்லை
துடியாகக் கைபாக வரிசையாக
வணக்காகப் புகைநீரால் வைத்துக் கொண்டால்
வடிவாகச் சகலமுந்தான் நீறிப் போகும்
பணக்காக நீறினதில் வேதை கோடி
வடிவாகப் பார்த் தாக்கால் சித்தியாமே 444

சித்தியாம் நாதாக்கள் நூல்கள் தன்னில்
சிறப்பாகப் பலவிதமாய்ப் பாடிப் போட்டார்
முத்தியாய் வாதிமார் இதனை வைத்து
முடிவாகப் பார்க்கையிலே தப்பிப் போகும்

நத்தியே தப்பாதே நூல்கள் தன்னில்
நலமாகப் பாடினார் கைபா கத்தை
முத்தியே மூவுலகு மெய்க்கச் சொன்னார்
முடிவாக வாதிக்கு எய்யா வாறே 445

வாறுகேள் அகத்தியரும் புலத்தி யற்கு
வடிவாகச் சொல்லிடவே அநேகந் தொல்லை
நாறுகேள் கைபாக விவர மெல்லாம்
நாட்டினேன் வாதமென்ற படிப்புத் தண்ணில்
கூறுகேள் குணமாகச் சொல்லி விட்டேன்
கூக்குரலாய் வாதமதை நம்பிப் பாரு
தேறுகேள் சிவயோகம் அடுத்துக் காணும்
திடமாகும் மணமாகும் குருவைப் பாரே 446

பாருமே குருவருளால் மௌன மாகப்
பதிவாக நன்னூலை வாசித் தோது
கூருகேள் எல்லாமுஞ் சித்தி யாகும்
குணமாக வாசியோகத் தைப்பாரு
காருமே நாதாக்கள் கண்ட வாதம்
கனிவாக மெய்ப்பொருளைக் காண வேண்டி
நாருமே பிறப்பிறப்பு நாடிப் பாரு
நலமாக எல்லாமும் நாடி டாயே 447

நாடியே புகைநீரு சிவப்பு மாகும்
நலமாக இச்சிவப்பை முறிக்க வேண்டில்
காடியே வெள்ளைநீ ரானாற் கேளு
கனிவாகச் சகலமெல்லாம் சுண்ண மாகும்
நீடியே இந்நீறு வடிவு மெத்த
நேரான இந்நீறில் வாதம் கோடி
வாடியே கட்டினங்கள் உருக்கி னங்கள்
வடிவாகக் கோடியாம் வண்மை யாமே 448

வண்மையாம் நவலோகம் பழுக்கும் மார்க்கம்
நலமாகப் புடமிறங்கும் மார்க்கம் சொன்னேன்
உண்மையாய்க் கைபாக வரிசை சொன்னேன்
உற்றுமே கலைக்கியான வடிவு பாரு
தண்மையாம் சித்தாகும் தாக்கிப் பாரு
தருதுரும்ப னாய்நீயும் அலைய வேண்டாம்
கண்மையாம் நூலெல்லாம் காதல் பாரு
கனிவாகக் காதலால் கருதிப் பாரே 449

கருதியே புகைநீரு ஒன்று கேளு
　　கைகண்ட வித்தையிது கருவாய்ப் பாரு
நருதியே சாத்திரத்தில் சொன்னா ரில்லை
　　நலமாகப் பிடிவாதம் ஆயிரத்தில்
வருதியே வரிசையாய்ச் சொல்லிப் போட்டேன்
　　வடிவாக யூகிமுனி வைத்துப் பார்த்துச்
சருதியே சகலசரக் கதனை நீற்று
　　நலமாக வரிசையிது நாடிப் பாரே 450

நாடியே வெடியுப்பு அய்ஞ்சாங் காய்ச்சல்
　　நலமாகப் பலம்பத்து நிறுத்துக் கொண்டு
வாடியே சீனமது இருபத் தைந்து
　　வடிவாகச் சேர்த்துமே இடித்துக் கொள்ளு
தேடியே கலையத்தி லிட்டுக் கேளு
　　தேத்தியே வாலையென்ற சட்டி மூடிக்
காடியே சீலைமண் வலுக்கச் செய்து
　　கனிவாக அடுப்பதனி லிட்டி டாயே 451

இட்டுமே தீயெரிக்கக் கமலம் போல
　　இதமாக முன்னீரு வெள்ளை நீராம்
கட்டுமே வெள்யைத்தான் தள்ளிப் போடு
　　கனிவாக மஞ்சள்நீர் வருகு மக்காள்
நட்டுமே மஞ்சள்நீர் சத்தி நாதம்
　　நலமாக ஆகிப்போம் நாட்டி லோர்க்கே
மட்டுமே மஞ்சள்தனை முறித்தா யானால்
　　மயமாக எல்லாமும் சித்தி யாமே 452

சித்தியாம் மஞ்சள்நீர் முறிக்கக் கேளு
　　சிறப்பாக அண்டத்தின் ஓடு சேர்தான்
பத்தியாய்ச் சுத்திமுறை சொல்லக் கேளு
　　பதிவாக உவர்மண்ணும் சுண்ணம் நேரே
புத்தியாய்ப் பாணிவிட்டுக் கரைத்துப் பின்பு
　　பொலிவாகத் தெளிவிறுத்துப் புகலக் கேளு
நத்தியே அண்டோட்டைச் சேரு போட்டு
　　நலமாகக் கொதியிட்டு இறக்கிடாயே 453

இறக்கியே அண்டமதைப் பார்க்கும் போது
　　இதமாக எண்ணெய்எல்லாம் கக்கிப் போகும்
நறக்கியே அண்டத்தைக் கல்வத்திட்டு
　　நலமாகப் பழச்சாறு விட்ட ரைத்து

மறக்கியே வில்லைகட்டிக் காயப் போடு
  மயமாகப் பெரியபுடம் போட் டெடுக்க
விறக்கியே அண்டமது கடுமை யாக
  வடிவாகச் சுண்ணாம்பாம் வடிவு கேளே 454

வடிவான அண்டத்தின் சுண்ணந் தன்னை
  வாதாடி முன்னிற்கும் புகைநீர் தன்னில்
துடியாகப் போட்டுப்பார் வெந்து நீறும்
  துப்புரவாய்ப் புகைநீரைப் பார்க்கும் போது
நொடிவாகச் சுண்ணாம்பு நீறு மாகும்
  நோக்காக இந்தநீர் எமனுக் கொக்கும்
குடியாக இந்தநீர் போற போக்கு
  குணமாகச் சொல்லுகிறேன் கூர்ந்து கேளே 455

கேளுமே ரத்தினத்தின் சுருக்கந்தன்னில்
  கெடியாகத் துரிசதுவைச் சுண்ணம் பண்ண
வாளுமே நூல்தனியே மறைத்துச் சொன்னார்
  வடிவாக வாய் நீரைச் சொன்னாரில்லை
நாளுமே வாதிகள்தான் யோசித்துத் தான்
  கனிவாக வாய்நீரை எச்சி லாக்கித்
தாளுமே எச்சிலென்று எண்ணாமல்தான்
  தாட்டிகமாய் எச்சிலைத்தா னரைப்பார் பாரே 456

எச்சிலைத்தான் விட்டரைத்து இன்பாக
  இதமாக வில்லைகட்டிக் காயப் போட்டு
வைச்சபடி புடம்போட்டு எடுத்துப் பார்க்க
  வடிவாகக் காரமில்லாப் போன தாலே
இச்சைபட எல்லார்க்குங் காட்டிக் காட்டி
  இதமாக நூல்தனிலே மறைத்துப் போட்டார்
நிச்சயமாய் நூலில்லாச் சுண்ணம் செய்து
  நிலைகெட்டு அலைவார்கள் கோடி தானே 457

கோடிதான் மனிதனுட அமுரி யெல்லாம்
  குணமாக வாய்நீரைத் தள்ளிப் போட்டு
வாடியே மனிதனுட சென்மந் தன்னில்
  வடிவாகக் காரமில்லை வழிகள் கேளு
நாடியே வாயுநீர் தன்னைக் கண்டால்
  நலமாக எல்லாமுஞ் சித்தி மெத்த
கூடியே மனிதனுட எச்சில் தன்னில்
  கூடுமோ காரமது குணமும் பாரே 458

குணமாக வலுவறிந்து செய்கை கண்டு
கூடியே கைபாகந் தன்னி லேதான்
வணமாகப் பொருளறிந்து வாட்டம் பாரு
வகையான குணமறிந்தால் வாதி கேளு
பணமாகப் பலவிதத்தில் பார்த்துப் பார்த்துப்
பதிவாகச் செயலறியாப் பண்பு வாதி
கணவாக வாத வித்தை அறியாமல்தான்
கனிவான வித்தைஇதை யுறுதி பாரே 459

உறுதியாய்ப் பார்த்திடவே யுண்மை கேளு
ஒகோகோ சித்தியது மெத்த வாகும்
அறுதியாய்ப் புகைநீரால் அநேகங் கோடி
ஆடியே பார்த்திடவே யன்பு மாகும்
வறுதியாய் வங்கத்தால் எல்லா மாகும்
வடிவான துரிசினால் வண்மை கோடி
கறுதியே கனமாகப் போட்டு மேதான்
கனிவாகச் செய்திடவே கார மாமே 460

ஆமேதான் காரத்தைக் கண்ட போதே
அடவாகச் சகலசரக் கதனை யெல்லாம்
வாமேதான் சுண்ணமது பண்ணு விக்கும்
வடிவாகச் சுண்ணத்தா லனேகங் கோடி
நாமேதான் வாதியர்க்குப் புத்தி வேணும்
நலமாக யோகமது நன்மை யாகும்
பாமேதான் பழுப்பினமுங் கோடா கோடி
பதிவாகச் சுண்ணமது கோடி தானே 461

கோடிதான் சுண்ணநீர் தன்னி லேதான்
கோடானு கோடியது வாத மாகும்
மூடியே வாதத்தை யறிந்தோர் சித்தர்
முனிவான காயசித்தி பண்ணி னோர்கள்
தேடியே வெகுசித்தர் மெத்த வுண்டு
திடமாகப் பொருளறியத் திண்மை யாகும்
நாடியே வாயுநீர் புகைநீ ராகும்
நாமாக யோகமென்ன நடத்தை தானே 462

444-462-சுண்ணத் திராவகம்

சுண்ணம் செய்தற்குத் திறவுகோலாகக் கைபாக வரிசையாக நூல்களில் சொல்லவில்லை புகைநீர் செய்து கொண்டால் எல்லாம் வாய்க்கும். நாதாக்கள் பல வகையாய்ப் பாடினர். முடிவாக நோக்கும்போது தவறு

உண்டாகும். அகத்தியர் புலத்தியர்க்கு வடிவாகச் சொன்னார். மிகத் தொல்லைப் படாமல் கைபாக விளக்கமெல்லாம் நிலைபெறச் சொல்லி நிலை நாட்டினேன் குருவருளால் அமைதியாக நூலை யோது. வளிநிலை தேர். மெய்ப்பொருளைக் காணப் பிறப்பிறப்பு நாடித் தேர்.

புகைநீரின் நிறம் சிவப்பு. இதனை முறித்து வெள்ளையாக்கினால் எல்லாப் பொருளும் சுண்ணமாகும். வாதம் கோடி, கட்டு உருக்கு மிகவும் ஆகும். பொன் வகையெல்லாம் செம்பொன்னாகும்.

கைகண்ட புகைநீர் ஒன்று கேள். நூல்களில் சொல்லவில்லை. பிடிவாதம் ஆயிரத்தில சொல்லி விட்டேன். எல்லா வகைப் பொருளும் நீற்றும் வரிசையிது.

வெடியுப்பு ஐந்தாம் காய்ச்சல் பத்தும் பலம் : சீனம் இருபத்தைந்து பலம் சேர்த்து இடித்துக் கலையத்தினுள் போட்டு வாலைச் சட்டி மூடி சீ.ம.செ. தாமரை நெருப்பு எரிக்க முன்னீர் வெள்ளையாக வரும். அதனை நீக்கிப் பின்னால் வரும் மஞ்சள் நீரைப் பிடித்துக் கொள். இது சத்திநாதம். இதனை முறித்தால் சுண்ண வகை பலிதமாம்.

உவர் மண்ணும் சுண்ணாம்பும் தண்ணீர் விட்டுக் கரைத்துத் தெளி-விறுத்து அதனுள் முட்டைத் தோட்டைப் போட்டுக் கொதிக்கச் செய்து எண்ணெய் கக்கிய பின் எடுத்துக் கல் வத்திலிட்டுப் பழச்சாறு விட்டு அரைத்து வி. த. கா. சீ. ம. செ. பெரிய புடமிடு. சுண்ணாம்பாகும். இச் சுண்ணத்தை முன் இறக்கிய புகை நீரினுள் இட்டுப்பார். வெந்து நீறும். சுண்ணத் திராவகமாகும். கூற்று வனையொக்கும். இரத்தினச் சுருக்கத்-தில் துரிசுச் சுண்ணத்தை மறைத்துச் சொன்னார். வாய்நீர் இன்னது என்று கூறினாரில்லை. ஆதலால் வாதிமார்கள் வாய்நீர் என்பதற்கு எச்சிலென்று பொருள் கொண்டு எச்சில்விட்டரைத்தார். அரைத்து வி.த கா. புடமிட்டுச் சுண்ணத்தில் காரமில்லாமற் போயினதால் அலைந்தார். வாய் நீர் வாயுநீர். அதாவது புகை நீர் தோண்டியின் மேல் கவிழ்த்திய வால் போன்ற காம்பின் வாய்வழி வழிகின்ற நீர் வாய்நீர். அதுவே புகைநீர். எச்சிலில் காரமில்லை. (அமுரியில் ஓரளவு காரமுண்டு) புகை நீராலும் வங்கத்தாலும் எல்வாம் வலுக்கும். துரிசினால் வளப்பம் மிகுதி காரத்தைக் கண்டபோதே சரக்கெல்லாம் சுண்ணமாகும். சுண்ண நீரால் கோடானு கோடி வாதம் ஆகும். பொருளறியத் திண்மையாகும்.

வெள்ளீயச் சுண்ணம்

தானென்ற வெள்ளீயம் பலமு மெட்டுத்
தாட்டிகமாய்ச் சூதமது பலமு மெட்டு
வானென்ற வங்கத்தை உருக்கிக் கொண்டு
வடிவாகச் சூதத்தை நழுவா மல்தான்

கானென்று தொந்திக்கப் புட்டு மாகும்
கனிவாக வெடியுப்பு இடையே சேர்த்து
நானென்ற பழச்சாறு விட்ட ரைத்து
நலமாக வில்லைக்கட்டி ரவியில் போடே 463

போடவே காய்ந்துமே சொல்லக் கேளு
பொலிவாகப் பத்தெருவில் புடத்தைப் போடக்
காடவே புடமாறி எடுத்துப் பாரு
கனிவாகக் கல்வத்தி லிட்டுத் தானே
நாடவேபாணி விட்டரைத்த ரைத்து
நலமாகக் கழுவியே இறுத்துப் போடு
வாடவே யடியில் நின்ற வங்கந்தன்னை
வடிவாக எடுத்துமே வரிசை கேளே 464

வரிசையாய் அடியில்நின்ற வங்கந் தன்னை
வடிவாக வீரத்தை இடையே சேர்த்து
நரிசையாய் வாயுவென்ற புகைநீ ராலே
நலமாக அரைத்துவில்லை காயப் போடு
கரிசையாய்ப் பத்தெருவில் புடத்தை போடு
கனிவாக நீறியது சுண்ண மாகும்
பரிசையாய்ச் சுண்ணத்தின் பரிசு மெத்த
பதிவான வீரமது சுண்ண மாமே 465

463-465-வெள்ளியச் சுண்ணம்

வெள்ளீயம் பலம் எட்டு குகையில் விட்டு உருக்கி இறக்கி வைத்துக் கொண்டு குகையின் மேல் கண்ணுச் சிரட்டை வைத்து எட்டுப் பலம் சூதத்தை ஊற்றுக. ரசம் சீறி எழுந்து துள்ளாமல் விழிப்பாக ஊற்றி இணைத்துப் பார்க்கப் பிட்டுப் போலாகும். அவ்வெடைக்குப் பழச்சாறு விட்டரைத்து வி. த. க. சீ. ம. செ 10 எருப்புடமிடு, அதனைக் கல்வத்திலிட்டுப் பாணி விட்டரைத்துக் கழுவித் தெளிவினை இறுத்து விடு. வெடியுப்புக் கரைந்து நீரொடு விலகி விடும், அடியில் நின்ற வங்கத்தையெடுத்து எடைக்கு எடை வீரம் சேர்த்துப் புகைநீரால் அரைத்து வி. த. கா.சீ ம. செ 10 எருப்புடமிடு நீறிச் சுண்ணமாகும். வீரம் சுண்ணமாகும்.

துரிசுச் சுண்ணம்

சுண்ணமாம் வீரமது சுண்ண மானால்
துடியான துரிசதுவும் நீறிப் போகும்
கண்ணமாம் துரிசதுவும் பலமும் ஒன்று
கனிவாகத் தணலிலிட்டு நீரை வாங்கு

கண்ணமாம் வங்கமென்ற சுண்ணந் தன்னைக்
காதலித்து அதன்மேலே கவசங் கட்டி
வண்ணமாம் ரவிதனிலே காயப் போடு
விதமாகப் பத்தெருவில் புடத்தைப் போடு 466

புடம்போடத் துரிசதுவும் நீறிப் போகும்
பொல்லாத துரிசதும் கால னொக்கும்
திடம்போடப் பசுக்காத சுண்ண மாகும்
திறமாகக் கடுஞ்சுண்ணம் துரிசுச் சுண்ணம்
நடம்போடச் சாறுவராத் தழையி லேதான்
நலமாக சாறுபிழி நீரு மாகும்
வடம்போடச் சாறுபிழி நீருமாகும்
வடிவாகக் கரண்டிதனி லிட்டி டாயே 467

இட்டுநீ சூதத்தை யதிலே யிட்டு
இதமாகக் கரண்டிதனில் கொதிக்க வைத்துப்
பட்டுமே யிட்டலிபோல் சூத மாகும்
பதிலாகச் சூதத்தை யுருட்டிக் கேளு
நட்டுமே அய்ஞ்சாகப் பண்ணிக் கொண்டு
நலமாக மத்தங்காய் அய்ஞ்சி னுள்ளே
விட்டுமே உள்ளிட்டு மூடித் தானே
விதமான காடையென்ற புடத்தைப் போடே 468

புடம்போட்டு இப்படியே அஞ்சு காயில்
போக்கோடே புடம்போட்டு எடுத்துக் கொண்டு
நடம்போடு சூதமது இறுகி நிற்தும்
நலமாக இறுகாதே போனாற் கேளு
வடம்போடு பின்னுமந்தக் காயில் வைத்து
வடிவாகக் காடையென்ற புடத்தி லேதான்
நடம்போடு சூதமது இறுகிப் போகும்
நலமாகச் சூத மணியிறுகும் பாரே 469

இருக்குமே சூதமதைக் கரியி லிட்டு
இதமாக உருக்கிடவே யுருகி யாடும்
பெருக்கவே சூதமணி குளிகைக் காகும்
பேதமையாய்க் கெவுனமது ஓட லாகும்
வருக்கவே வாய்வேகம் மனவே கத்தால்
வாதாடி யோடிவிடும் வணக்கம் மெத்த
கருக்கவே சித்தரவ ரெல்லா ருந்தான்
கனிவாகக் காணுவர் கருதிப் பாரே 470

கருதியே குளிகைதனைக் கேட்டுக் கேட்டு
வாங்கிடுவார் அவர்தமக்குக் கொடுக்க வேண்டாம்
நிருதியே கொடுத்தாலே குளிகை தன்னை
நேராகக் கீழேதான் விழுந்து போவீர்
வருதியே சித்தர்கள்தான் வாது ஆடி
வடிவாகப் பிடுங்கியே ஓடிப் போவார்
குருதியே குணமாக யோகம் பார்ப்பார்
குடியாக மௌனத்தில் தீட்சை தானே 471

தானென்ற தீட்சைலிதி தன்னி லேதான்
தாட்டிகமாய்க் குளிகைதனை மறைத்துச் சொன்னார்
வானென்ற வையகத்தில் குளிகை தன்னை
வடிவாகச் சொல்லிவிட்டேன் வணக்கம் பாரு
நானென்ற ஆணவத்தை முறித்துத் தள்ளு
நலமாகக் காயசித்தி வடிவு பாரு
ஊனென்ற யோகசித்தி யுறுதி யாகும்
உற்றுமே யறிந்தவனே சித்த னாமே 472

ஆமேதான் சித்தனல்ல யோகி யாகும்
அடவான உலகத்தில் வாதி மார்கள்
நாமேதான் செயலறியக் கண்டேன் யோகி
நலமான பரமபத நன்மை யாகும்
காமேதான் கருவாகப் பார்த்துத் தேறு
கனிவாகக் கருத்துறவே காண்பான் வாதி
வாமேதான் வடிவான பொருளுங் காண்பான்
வகையான நூல்பார்த்தான் வாதி யாமே 473

ஆமேதான் கட்டினதோர் சூதந் தன்னை
யடவாகக் குகையிலிட்டு உருக்கிப் பாரு
வாமேதான் பொன்மணிபோல் திரண்டு தோணும்
வடிவாக உருகுமது வண்மை பாரு
தாமேதான் உருகையிலே கம்மித் தானால்
தாட்டிகமாய்ப் பின்னுமந்தக் காய்க்குள் வைத்துச்
சாமேதான் புடமிடவே கட்டி நின்று
தாட்டிகமாய் ஆடிவிடுந் தண்மை யோரே 474

தண்மையாய் உருகுமுனை யாகும் போது
தக்கதோர் நாலுக்கு ஒன்று தங்கம்
வண்மையாய்த் தங்கமெடை நாகம் போடு
வடிவான நாகமெடை சூதம் போடு

உண்மையாய்ச் சூதமெடை வீரம் போடு
உறுதியாய் வீரமெடை இலிங்கம் போடு
கண்மையாய்க் களங்காகும் நவலோ கத்தில்
காட்டிடவே நூற்றுக்கு ஒன்று தானே 475

ஒன்றுதான் கொடுத்திடவே மாற்றுக் கேளு
உறுதியாய்ப் பதினாறு மாற்று மாகும்
நன்றுதான் பதினாறு மாற்றெ டைக்கு
நலமான செம்பைச்சேர் உருக்கிப் பாரு
கன்றுதான் மாற்றதுவும் எட்டுக் காணும்
கனியாக உப்புக்குங் காவிக் குந்தான்
பன்றுதான் ஓடாது ஒளித்தி டாது
பதிவாக இதைவிற்றுச் செலவு செய்யே 476

செய்துநீ உண்டுடுத்தி வரிசை கேளு
சிறப்பாகச் சிவசொத்தை வறுமை போல
கைதுமே உண்டுநீ ஞானம் பாரு
கனிவாக வாசிதனை இறுகக் கும்பி
பைதுமே ஓங்கார வழியைத் தேடு
பதிவாக வுற்றுநீ பருவம் பாரு
கைதுமே பருவத்தைக் கண்ட போது
கனிவாக அக்கினியில் சுணக்குப் பாரே 477

கணக்காக அக்கினியில் மிஞ்சிப் பாரு
கருதியே சுழிதனிலே ஏறி யாடு
வணக்காக வாதுபுரி வழக்கம் பாரு
வடிவாக ரிஷியோகம் வருதல் காணு
தனக்காக லட்சுமியாம் பீடம் தன்னில்
தாட்டிகமாய் இருந்துநீ கும்பித் தேறு
உனக்காக வாய்வேக மனது பூண்டு
உருவாக அக்கினியினி லைமை காணே 478

காணவே சிவயோகம் கண்டு பாரு
கனிவாக வழிகண்டு கணக்குப் பார்த்து
வாணவே ஐம்புலனை யறுத்துத் தள்ளு
வடிவாக எப்பொருட்கும் இறைவனான
ஊணவே கடவுளதை நோக்கிப் பாரு
உறுதியாம் மௌனத்தை ஒளிவு பாரு
நாணவே ஒளிவறிந்து சித்தி மெத்த
நலமாகப் பார்த்துணரச் சித்தி யாமே 479

சித்தியாம் கயிலைதனில் சிவனுந் தானும்
சிறப்பாக அம்மைக்கு மகிழ்ந்து செய்து
புத்தியாய்க் கைபாகம் காட்டினார் பார்
புலனாக ஐம்புலனைப் புக்கி யேறி
நத்தியே நந்தியவர் கண்டா ரப்போ
நலமாகக் கைமுறையைக் கண்ட போது
கத்தியே கைபாகத் துடனே யெல்லாம்
கணமாகக் கண்டுமே குணத்தைப் பாரே 480

குணமாகக் கண்டுதன் வந்திரிக் குத்தான்
கூடியே கைபாக மாகச் சொன்னார்
வணமாகத் தன்வந்திரி கைபா கத்தை
வடிவாகச் சொல்லியே கண்ட போது
நணமாக அகத்தியர்க்கு நாடிச் சொல்லி
நண்பாகக் கைமுறையும் பார்த்துக் கொண்டார்
உணவாகப் புலத்தியர்க்கு உறுதி காட்ட
உண்மையாய்த் தேரருமே கேட்டிட் டாரே 481

கேட்டுமே தேரருமே மனம கிழ்ந்து
கெடியாக யூகிக்குச் சொன்ன போது
நாட்டுமே யூகிதான் மனம கிழ்ந்து
நலமாகக் கைபாக நடத்தை காண
வாட்டுமே பாகத்தை யெல்லாம் சொல்லி
வடிவாகப் பாகத்தை வாது கூடா
பாட்டுமே வாதியவர் கண்டு தேறி
வடிவாகப் பார்த்துணர வண்மை தானே 482

தானென்ற முன்னேதான் சூதந் தன்னைத்
தாட்டிகமாய் வங்கத் தால் நீறுபண்ணு
வானென்ற துரிசினாற் சூதந் தன்னை
வடிவாகக் கட்டியே குளிகை பண்ணு
நானென்ற குளிகைதனை வைத்துப் பூசி
நலமாக யோகமுதல் நடப்புக் காணும்
ஊனென்ற உறுதியாய் உற்றுப் பாரு
உண்மையிது சத்தியம் உண்டு பாரே 483

உண்டுபார் சர்வபரி பூரணத் தை
உற்றுமே திசைநோக்கி உற்றுப் பாரு
கண்டுபார் மனத்தொடுங் கிஅறிவில் கூடு
கனிவாக அறிந்தமட்டும் கருணை பாரு
வண்டுபார் சிவனுடைய வேடம் போடு
வடிவாக லகிரிதன்னை மாட்டி யூது
முண்டுமே செய்யாதே பரிச வேதை
முக்கியமாய்ப் பார்த்திடவே சித்தியாமே 484

ஆமேதான் சித்திதனைக் கண்ட பேர்கள்
அடவாகக் காயசித்தி பண்ணு வார்கள்
நாமேதான் உலகத்தில் வாதி மார்கள்
நலமாகச் சித்தருட நூலைப் பார்த்துக்
காமேதான் வடமொழியைப் பார்த்துச் சொல்லிக்
கனிவாகப் பார்த்துணர்ந்து சுட்டுக் கெட்டுப்
பூமேதான் புலம்பியே அழுவா ரப்பா
பொய்யில்லை மெய்யாகும் புதுமை கேளே 485

கேளுமே சூதமென்ற களங்கு தன்னைக்
கெடியாகச் செந்தூரம் செய்யக் கேளு
வாளுமே களங்கதுவும் பலமும் நாலு
வடிவாகக் கல்வத்தி லிட்டு டைத்து
நாளுமே கெந்தியது நாலத் தொன்று
நலமாகச் சூதமது நாலத் தொன்று
கூளுமே கல்வத்தி லிட்டுத் தானும்
குணமாகப் புகைநீரால் குமுற ஆட்டே 486

ஆட்டியே யிருசாமம் சென்ற பின்பு
அடைவாக வில்லைகட்டிக் காயப் போடு
மூட்டியே காய்ந்தபின்பு முறையைக் கேளு
முனிவாகப் பத்தெருவிற் புடத்தைப் போடு
நாட்டியே புடமாறி யெடுத்துப் பாரு
நலமாக அத்தியின் பழமு மாகும்
வாட்டியே பின்னுமந்தக் கல்வத்தி லிட்டு
வடிவாகப் புகைநீரா லாட்டி டாயே. 487

புகைநீரா லாட்டியே வழியைக் கேளு
பின்புதான் இருசாமம் சென்ற பின்பு
தகையாகக் கல்வத்தில் வில்லை கட்டித்
தாட்டிகமாய்க் கதிரிவிடு காய வைத்து
நகையாகப் பத்தெருவில் அடுக்கிப் போடு
நாடறிய முருக்கம்பூப் போலே யாகும்
வகையாக இதையெடுத்துப் பதிய வைத்துப்
பாகமாய்ச் சிவபூசை பண்ணி டாயே. 488

பண்ணியே வயிரவற்குப் பூசை பண்ணு
பதிவாக நவலோகம் நூற்றுக்கு ஒன்று
நண்ணியே யிட்டிடவே ஏம மாகும்
நலமாக ஏமத்தைப் பதனம் பண்ணு

கண்ணியே உப்புக்குங் காவிக் கப்பா
கனிவாக இறங்கிவிடும் கலக்கம் பாரு
உண்ணியே ஒருவரிடம் பேச வேண்டாம்
உறுதியாய்ச் சிவசொத்தை வறுமை யாலே 489

வறுமையாய் உண்டிடவே வழியைக் கேளு
வடிவான ஞானத்தின் பொருளு தன்னை
கறுமையாம் மௌனமது கலக்க முற்றுக்
காதலித்துப் புருவமையம் கணக்குப் பாரு
உறுமையாம் பூரணத்தை உற்றுப் பாரு
ஓகோகோ பூரணமும் நிலையு மாகும்
அறுமையாம் பூரணத்தைக் கண்ட பேர்கள்
ஆதார வழியாகும் அறிந்து பாரே. 490

அறிந்துபார் வடிவுடைய வாதி மார்கள்
வடிவான சூதத்தைக் கட்டித் தானே
தெரிந்துமே களங்குசெய்து நவலோ கத்தில்
நேராகக் கொடுத்துமே பொன்னே செய்து
வரிந்துமே இதைவிற்றுச் செலவு செய்து
வடிவாக இராசயோ கத்தைப் பாரு
முறிந்துமே யுலகத்தில் வாதி மார்கள்
முனிவாகக் கைபாகம் முறியத் தானே 491

முறிந்துமே கைபாகம் அறியாமல் தான்
முனிவான சரக்குகளை வாங்கி வாங்கி
நறிந்துமே சூடாகச் சுட்டு சுட்டு
நலமாக ஒன்றுமில்லாப் போன தாலே
வரிந்துமே சாத்திரந்தான் பொய்யே என்று
வடிகாகக் கைபாகம் மெய்யீ தென்பார்
வரிந்துமே யுலகத்தில் சண்டி மாடு
வாரிதிக்குள் அலைபோல அலைவார் தானே. 492

அலையாமல் சொல்லுகிறேன் உற்றுக் கேளு
ஆரறிவார் சுண்ணமென்ற திராவ கத்தை
கலையாக இந்தநீர் தனக்குப் பேரு
கனிவாக வாயுநீர் இதன்பே ராகும்
வலையாக வழியோடே சுழியைப் பாரு
வாடியே யலையாதே யுப்பைப் பாரு
கலையாகக் கற்றுணர்ந்த வாதிக் கப்பா
கனிவாக எல்லாமும் சித்தி யாமே. 493

நாகச் சுண்ணம்

சித்தியாம் நாகமென்ற சுண்ணந் தன்னைச்
சிறப்பாகச் சொல்லுகிறேன் உற்றுக் கேளு
பத்தியாய் நாகமது சேரு வாங்கு
பதிவாக இலுப்பெண்ணெய் தன்னிலே தான்
நத்தியே மூவேழு தரமும் சாய்ப்பாய்
நலமாக நாகமது சுத்தி யாச்சு
கத்தியே கரண்டியிட்டு உருக்கிக் கொண்டு
கனிவாக சூதத்தை யிடையே சேரே. 494

சேர்த்துமே யிடை-சேர்த்து வெடிதான் கேளு
செப்பமாய் எடைசமனாய்ச் சேர்த்துக் கொண்டு
பார்த்துமே பழச்சாறு விட்ட ரைத்துப்
பதிவாக வில்லைகட்டிக் காயப் போடு
நாத்துமே காய்ந்தபின்பு நவிலக் கேளு
நலமான ஒட்டிலிட்டு ஒடு மூடிப்
பார்த்துமே பத்தெருவில் அடுக்கிப் போடப்
பதிவாக நாகமது பற்ப மாகும் 495

ஆமேதான் பற்பத்தைக் கல்வத்தி லிட்டு
அடவாகப் பாணிவிட்டு அரைத்துத் தானும்
காாமதான் கழுவியே இறுத்துப் போடு
கனிவாக அடியில்நின்ற நாகத் தோடே
பாமேதான் வீரமது எடையே சேர்த்துப்
பதிவாகச் சுண்ணமென்ற புகைநீ ராலே
வாமேதான் இருசாமம் அரைத்து மைபோல்
வடிவாக வில்லை கட்டி வளப்பம் கேளே 496

வளப்பமாய் கதிரிலிட்டுக் காயப் போட்டு
வடிவாகக் காய்ந்தபின்பு வரிசை கேளு
நளப்பமாய்ப் பத்தெருவில் புடத்தைப் போடு
நாகமது சுண்ணாம்பாம் நாட்டி லோற்கு
களப்பமாம் நவலோகம் நூற்றுக் கொன்று
கனிவாக இட்டிடவே மாற்றுக் கேளு
துளப்பமாய்ப் பதினாறு மாற்று மாகும்
தொல்லுலகில்" இரசவாதம் தொன்மை தானே 497

தானென்ற நாகமது சுண்ணந் தன்னைத்
தாட்டிகமாய் அந்திசந்தி பணங்கால் வீதம்
கானென்ற மண்டலத்தி லுண்டு தேறு
கனிவாக நரைதிரைக ளற்றுப் போகும்

வானென்ற வாதமெல்லாம் ஓடிப் போகும்
வடிவான பித்தமெல்லாம் மாண்டு போகும்
தானென்ற சிலேற்பனங்கள் காணா தோடும்
கனிவான மகோதரமும் காணா போமே 498

காணாத சயகாசம் ஓடிப் போகும்
கனிவான பித்தமென்ற காசத் தோடு
வானாத்த மாகாசம் மந்தார காசம்
வடிவான சிலைகாசம் மாண்டு போகும்
நானாத லகிரியெல்லாம் நாடா தோடும்
நானறிந்த படிசொன்னேன் நாட்டி லோற்கே
கோனான குருவருளாம் நாகச் சுண்ணம்
குணமாகப் பார்த்திடவே குணமு மாமே 499

ஆமேதான் புளியோடு உப்புத் தள்ளு
அடவான புளியாரை கூட்டிக் கொள்ளு
வாமேதான் கத்திரிக்காய் முருங்கை யோடு
வடிவாக இவையெல்லாங் கூட்டி யுண்ணே
சாமேதான் சகலபிணி யுடனே தீரும்
தப்பாமல் போகுமது தாக்கிப் பாரே
....
.... 500

பாருமே நரைதிரைகள் அற்றுப் போகும்
பதிவான குட்டமெல்லாம் பாரி லோடும்
வாருமே வடிவமெல்லாம் வேறே யாகும்
வகையான தேகமது கற்றூ ணாகும்
நாருமே சிலையாகும் விந்து தானாம்
நற்பசுமை மேனியாம் நாட்டம் பாரு
காருமே சட்டைகக்கிப் பாலை யாகும்
கனிவான யூகிமுனி குணம்சொன் னாரே 501

குணமான நாகத்தி னோட்டம் போல
கூடியே வாதசித்தி குணமு மாகும்
வணமான வாயுதான் வேகம் போல
வடிவான மலைதயனில் குத்தி னாக்கால்
தணமாகத் தவிடுபொடி யாகும் பாரு
தற்பரமாய்க் கருத்துரையும் கண்டு பாரு
உணவாக வேகத்தா லுண்மை கோடி
உற்றறிந்து பார்த்தவனே சித்தனாமே 502

ஆமேதான் சித்திபெற வேணு மென்றால்
அடவான நாகத்தைச் சுண்ணம் பண்ணு
காமேதான் நாகமென்றால் வாய்க்கௌசோ அல்ல
கனிவாக எல்லாமும் காணும் காணும்
சாமேதான் சாயுச்சிய பதவி யாகும்
சாரித்து அநேகவிதி சார லாகும்
பாமேதான் காயசித்தி யோக சித்தி
பதிவாகச் சித்திமிக ஆகும் பாரே 503

ஆகுமே யண்டத்தின் குவடு தன்னில்
அடவாகச் சித்தரவர் மெத்த வுண்டு
காகுமே அவரவர்கள் ஞானம் மெத்த
கனிவாக அவர்களிடம் வாதம் தானும்
பாகுமே குளிகையுண்டு சித்தி யுண்டு
பதிவான ரசவாதம் மிகவே யுண்டு
தாகுமே தயிலமுதல் போக்கு உண்டு
தப்பாமல் அவர்க்குநீ வணக்கம் செய்யே. 504

வணக்கஞ்செய் கையிலேயார் என்று கேட்டால்
வடிவான அவர்பதத்தை வணங்கி நல்ல
துணக்கமாய் யூகிமுனி சீஷ னாகும்
உறுதியாய் என்றுநீ சொல்லும் போது
கணக்கமாய் யூகிமுனி குளிகை தானும்
கைக்கொடுத்தா ரோஎன்று கேட்டா ரானால்
பிணக்கமாய் இருக்குதென்று சொல்லு நீயும்.
பேசாதே குளிகைதனைக் கேட்பார் தாமே. 505

கேட்டிடவே குளிகைதனைக் கொடுக்க வேண்டாம்
கெர்வமாய்க் கொடுத்தாக்கால் பிடுங்கிக் கொள்வார்
வாட்டியே நீதானும் கீழே வீழ்ந்து
வடிவாகச் செத்திடுவாய் வண்மை பாரு
காட்டிடவே உன்கையில் வைத்துக் கொள்ளு
கனிவாகக் குளிகைவைத்துச் சேதி சொல்லு
மூட்டிடவே சேதியைத்தான் கேட்டுச் சித்தர்
முனிவாகத் தொழுதிறைஞ்சித் தூத்து வாரே. 506

தூத்துவார் யூகிமுனி தனக்குத் தானும்
துடியாக விடைகொடுப்பார் சொல்லும்புத்தி
வாத்துவார் வடிவாகப் பொருளுங் காணார்
வடிவாக நூலின்வகை வண்மை சொல்வார்

நாத்துவார் நாலாறு தேகஞ் சொல்வார்
நலமாக முனியிருக்கும் தானம் சொல்வார்
மாத்துவார் சித்தர்களை வடிவ தாக
வன்மைமிக அறிவார்கள் யோகி தானே 507

தானென்ற யோகிகள்தாம் மெத்தக் காணும்
சாத்திரநூல் ரொம்பக் கேட்பா ரப்பா
வானென்ற வாதமுறை வசியம் கேட்பார்
வடிவாகப் பொருள்கேட்பார் வண்மை சொல்லு
தேனென்ற நூலெல்லாம் விசாரித் துத்தான்
திடமாகச் சொல்லிவிடு திறமையாக
கானென்ற ஆதார வழியைச் சொல்லு
கனிவாக யோகமுதல் வழியைச் சொல்லே. 508

சொல்லவே வழியுணர்ந்து பொருளைக் கண்டு
சூத்திரமாய் ஞானயோ கத்தைப் பாரு
வெல்லவே சூத்திரத்தின் பொருளைக் காணு
விதமாக ஞானவழி யடுத்துப் பாரு
கல்லவே பூரணத்தை நிலையைக் காணு
உறுதிமிக எல்லாமும் உற்றுப் பாரு
நல்லவே வழிதன்னைக் கண்டு பாரே
நாடாது சித்திமிக ஆகும் பாரே. 509

466-509 துரிசுச் சுண்ணம், இரசமணி முதலியன

துரிசு ஒரு பலம் எடுத்து நெருப்புக் கங்கின் மேல் வை. காய்ந்து நீர் வற்றும். அதன்மேல் வங்கச் சுண்ணத்தைக் கவசமிட்டுக் காய வைத்து 10 எருப்புடமிடு. கடுஞ் சுண்ணமாகும். சாறுவராத தழைகளிலே யிட்டுக் கசக்கிப் பிழியச் சாறு வரும். சாற்றினைக் கரண்டியில் விட்டு அதனுள் இரசம் விட்டுக் காய்ச்ச அது இட்டலிபோல் வெண்ணெய்யாகும். அதனை ஐந்து மணியாக உருட்டி ஐந்து ஊமத்தங்காயைக் குடைந்து விதை நீக்கி அவற்றினுள் ஐந்து மணியையும் தனித் தனி வைத்து மூடிக் காடைப் புடமிடு. இங்ஙனம் ஐந்து புடமிடு. மணி இறுகும். இறுகாவிட்டால் மேலும் புடமிடு. இறுகி விடும். மணியைக் கரியில் இட்டு உருக்க உருகி நிற்கும் இம்மணி குளிகைக்கு ஆகும். காற்று வேகம் மன வேகத்துடன் வானவெளியில் பறக்கலாம். குளிகை உன்னிடமிருத்தலறிந்தால் சித்தர்கள் கேட்பார்கள் கொடுத்தல் வேண்டாம். கொடுத்தால் வீழ்ந்து போவாய். சித்தர்கள் வாதாடிக் குளிகையைப் பிடுங்கிக் கொண்டு ஓடிப் போவார். விழிப்பாக இரு தீச்சை விதியில் குளிகையை மறைத்துச் சொன்னார். இங்கே வடிவாகச் சொல்லி விட்டேன். ஆணவத்தை முறித்துத் தள்ளு.

கட்டிய சூதத்தைக் குகையில் வைத்து ஊதிப் பார். பொன்மணி போல் திரண்டு தோன்றும். வடிவாக உருகும். உருகாமல் மங்கினால் மீண்டும் ஊமத்தங்காய்க்குள் வைத்துப் புடமிடு. கட்டி நின்று உருகி ஆடும்.

கட்டிய இரசமணி உருகும்போது நாலுக்கு ஒன்று தங்கம் போடு. அதனெடை நாகம் அதனெடை சூதம் அதனெடை வீரம் அதனெடை இலிங்கம் போடு. களங்காகும். ஒன்பான் வகைப் பொன்னிலும் நூற்றுக்கு ஒன்றிடப் பதினாறு மாற்றுச் செம்பொன்னாகும். எடைக்கெடை செம்பு சேர். எட்டு மாற்றாகும் உப்புங்காவியும் சேர்த்துப் பொடித்து அதன் நடுவில் வைத்துப் புடமிட்டால் தங்கம் ஓடாது. விற்றுச் செலவு செய்து உண்டுடுத்தி மெய்யுணர்வு நெறியைப் பார். காற்றினை இறுக அடக்கு. ஓங்கார வழிதேடு. சுழினைத் தீயை நோக்கு வாதுப்புரிப் பழக்கம் பாரு (வாதுபுரி - காற்று மண்டலம் - விசுத்தி) ஐம்புலனை அறுத்துத் தள்ளு. கடவுளை நோக்கு. ஒளியை உணர். சிவனிடமிருந்து அம்மை தெளிந்துணர்ந்து கைபாகம் சேர்ந்தனள். அம்மை நந்திக்குச் சொல்லப் பின்பு தன்வந்திரி அகத்தியர் புலத்தியர் தேரர் யூகி முனிவர் ஆகிய இவர்கள் ஒருவர்பின் ஒருவர் உரைக்கக் கேட்டுக் கைபாகம் தேறினர். முதலில் சூதத்தை வங்கத்தால் சுண்ணம் செய். பின்னர் துரிசினால் சூதத்தைக் கூட்டிக் குளிகை செய். குளிகையை வைத்துப் பூசை செய். யோகம் முதலிய நடப்பு உண்டாம் இது உண்மை (சத்தியம்) உண்டு பார். குறைவிலா நிறைவினைத் திசை நோக்கி உற்றுப் பார். மனமொடுங்கி அறிவில் கூடு. சிவன் திருக்கோலம் கொள். வளிநிலையூது. சித்தியினைக் கண்டவர்கள் காய சித்தி செய்வார்கள். வாதியர்கள் சித்தருட நூலைப் பார்த்தும் பார்க்காமல் வடமொழியைப் பார்த்துச் சுட்டுக் கெட்டுப் புலம்பி யழுவார். புதுமை கேள்.

சூதக் களங்குச் செந்தூரம் செய்ய முறை கேள். களங்கு நாலு பலம் கல்வத்திலிட்டுடைத்துக் கெந்தி நாலத்தொன்றும் சூதம் நாலத்தொன்றும் சேர்த்துப் புகை நீராற் குமுற அரைத்து இருசாமம் கழித்து வி.த.கா. சீ.ம.செ. 10 எருப்புடமிடு. அத்திப்பழ நிறமாகும். பின்னும் கல்வத்திலிட்டுப் புகை நீராலாட்டு. 2 சாமம் கழித்து வி.த.கா. சீ.ம.செ. 10 எருப்புடமிடு. முருக்கம் பூப் போலாம். இதனை வைத்துப் சிவபூசை செய். வயிரவற்கும் பூசை செய். ஒன்பான் வெறும் பொன்னிலும் நூற்றுக்கு ஒன்றிடு. செம்பொன்னாம் ஒருரிவரிடமும் பேசாதே. சிவன் செல்வத்தை வறுமைபோல் உண்டு தவம் செய் புருவநடு நோக்கு. மெய்ப் பொருளை உற்று நோக்கு.

சூதத்தைச் கட்டிக் களங்கு செய்து பொன்னிற் கொடுத்துச் செம் பொன்னாக்கி நற்றவம் செய்.

சுண்ணத் திராவகத்துக்கு வாயுநீர் என்பது பெயர்.

நாகச் சுண்ணம்

நாகத்தை இலுப்பெண்ணெய்யிற் சாய்த்து நயமாக்கிக் கரண்டியில் இட்டுருக்கிச் சூதத்தையிணைத்து அதனோடை வெடியுப்புச் சேர்த்துப் பழச் சாறு விட்டரைத்து வி.த.கா. சீ.ம.செ. 10 எருப்புடமிடு. நாகம் பற்பமாகும். அதில் தண்ணீர் விட்டரைத்துக் கழுவி தெளிவினை இறுத்து விடு. அடியில் நின்ற நாகத்தினொடை வீரம் சேர்த்துப் புகை நீரால் இருசாமம் அரைத்து வி த கா. சீ.ம.செ. 10 எருப்புடமிடு. நாகம் சுண்ணமாகும். வெறும் பொன் வகையில் நூற்றுக் கொன்றிடச் செம்பொன்னாகும். நாகச் சுண்ணத்தைக் காலை மாலை காற் பணவளவு நாற்பது நாள் உண்ண நரை திரை போகும். ஐவளி பித்து நீங்கும். பெருவயிறு போகும். சயகாசம் மாகாசம் மந்தாரகாசம் சிலைகாசம் நீங்கிப் போகும்.

புளியுப்புப் போக்கு. புளியாரை கூட்டு. கத்தரிக்காய் முருங்கைக் காய் கட்டு. எல்லா வகை நோயும் ஏகும். நரை திரையறும். குட்டம் போம். உடல் கற்றூணாகும். விந்து கல்லாகும். மேனி பசுமையாம். நாட்டம் பார். சட்டை கக்கும் இளமையாகும். குத்தினால் தவிடுபொடி கூழாங்கற்கள் ஆதலால் நாகச் சுண்ணம் செய்.

அண்டத்தில் குவட்டில் சித்தர் கூட்டம் உண்டு. அவர்களுக்கு மெய்யுணர்வுண்டு. இரசவாதம் உண்டு. குளிகையும் சித்தியும் உண்டு. தயிலம் முதலிய போக்கும் உண்டு. தவறாமல் அவரை நீ வணங்குவாயே.

வணங்குங்கால் யாரென்று வினவின் அவர் அடியை வணங்கி யூகி முனிவர் மாணவன் என்று கூறு. யூகி முனிவர் குளிகையை உன் கையிற் கொடுத்தாரோ என்று கேட்டால் இருக்கின்றது என்று சொல். குளிகையைக் கேட்பார் கொடாதே. கொடுத்தால் பிடுங்கிக் கொள்வார். பின்பு நீ கீழே விழுந்து செத்துவிடுவாய். காட்டிடவே உன் கையில் வைத்துக் கொள். குளிகை வைத்துச் செய்தி சொல். கேட்டுத் தொழுதிறைஞ்சித் தூத்துவார். யூகி முனிவரைக் காண விடை கொடுப்பார். வாழ்த்துவார். நூலின் வண்மை சொல்வார் நாலாறு தேகம் சொல்வார் முனிவர் இருக்கும் இடம் சொல்வார் நூல் கேட்பார் வாதமுறை வசியம் கேட்பார். பெருள் கேட்பார் திறமையாகச் சொல். ஆதார வழி சொல். யோக வழியும் கூறு. சூத்திரத்தின் பொருளைக் காணு. ஞானவழியடுத்துக் காண்.

சாரக்கட்டு

ஆகுமே சாரத்தைக் கட்டக் கேளு
அடைவாகச் சித்தியெல்லாம் மறைந்த சொல்லை
பாகுபெறச் சொல்லுகிறேன் உற்றுக் கேளு
பதிவாகச் சாரத்தின் போக்குத் தன்னை

வாகுபெற வுலகத்தில் சித்த ரெல்லாம்
வடிவாகக் சொல்லவில்லை இராம தேவர்
சாகுமே ஏழுகோடி யுகமும் பார்த்து
தப்பாமல் சாரத்தின் போக்கும் தானே. 510

போக்கான சித்தரெல்லாம் சாரக் கட்டை
புகலரிய கைந்நூலில் மறைத்துப் போட்டார்
வாக்கான நூலைத்தான் பார்த்துப் பார்த்து
வாதாடி வாதிதான் வதிலாய்ப் பார்த்து
பாக்கான பாக்கதுபோல் சாரந் தன்னைப்
பதிவாக உண்டையாய்ச் சீவிக்கொண்டு
தாக்காகச் செயநீரில் தோச்சுத் தோச்சு
வடிவாகக் கதிரிலிட்டு வழக்கம் பண்ணே 511

பண்ணியே கதிரிலிட்டுச் சாரந் தானும்
பதிவாகக் கரைந்துமே போன தாலே
உண்ணியே கைபாகம் பொய்யே என்பார்
உற்றுமே கைபாகம் கண்ட சித்தர்
நண்ணியே யொருவரிடம் சொல்லி டார்கள்
நலமாகக் கைபாகம் ஆகத் தானே
கெண்ணியே மூலிகையி லிருக்கு தென்று
கெடியாக மூலிகையில் வாங்கு வாரே 512

வாங்கியே மூலிகையை யிடித்துத் தானே
வடிவாகப் பிழிந்துமே சாரந் தன்னை
ஏங்கியே துவைத்துமே கதிரி லிட்டு
இதமாகச் சாரமது கரைந்து போகப்
பாங்கியே இதையெடுத்துத் தூர வைத்துப்
பதிவாகப் பின்னமொரு சாரக் கட்டி
தாங்கியே வாங்கிவந்து கட்டி யாகத்
தாட்டிகமாய் அரக்கிளக்கி மேலே கட்டே 513

கட்டியே வங்கத்தை யுருக்கிக் கொண்டு
கனிவாக உருகுமுகந் தன்னி லேதான்
எட்டியே துவைத்துமே யெடுத்துப் பாரு
இதமாகக் கரியாக இருக்கும் பாரு
வட்டியே தூரத்தே யெறிந்து வாதி
நொடிக்குள்ளே இன்னமொன்று நிலைக்கக் கேளு
சூட்டியே இன்னுமொரு சாரக் கட்டி
முடியவே வாங்கியே பின்பு கேளே 514

கேளுமே கருவிலே கட்டிப் பார்த்துக்
கெடியாகப் புகைந்துமே கெட்டுப் போகும்
வாளுமே இப்படிக்குப் பார்த்துப் பார்த்து
வடிவாக ஒன்றுமில்லாப் போன தாலே
நாளுமே கரிச்சுட்டுச் சுட்டுக் கெட்டு
நலமாகச் சாரத்தைக் கட்டா தாலே
பாளுமே வாதமது இல்லை யென்று
பரிவாகப் புலம்புவார் பாரில் தானே 515

பாரிலே சாரமது கட்டுக் கேளு
பதிவாகச் சாரமது சேரு வொன்று
காரிலே சுத்திமுறை சொல்லக் கேளு
கனியாகச் சாரமதைக் கட்டி யாகச்
சாரிலே சீவியதை நல்லாய்த் தானும்
கனிவாகக் கிளிஞ்சில்நீறு படியும் நாலு
வாரியே நீற்றுக்கு உள்ளே வைத்து
வடிவாக மேல்மூடி வண்மை கேளே 516

வண்மையாய்ச் சட்டிகொண்டு மேலே மூடி
வடிவாகச் சீலைமண் வலுக்கச் செய்து
உண்மையாய் அடுப்பதனில் வைத்துத் தானே
உறுதியாய்த் தீயெரிக்கச் சாமம் நாலு
கண்மையாய்த் தீயெரித்துப் பிரித்துப் பாரு
காதலாய்ச் சாரமது கட்டி யாகப்
பெண்மையாய் இருக்குமது எண்ணெய் கக்கும்
பேருலகில் கக்கினது பெருமை கேளே 517

பெருமையாஞ் சாரத்தி லிருந்த எண்ணெய்
பேசாதே எண்ணெய் கக்கும் பிரியமாக
அருமையாஞ் சாரத்தை யெடுத்துப் பின்பு
அடவாகக் கட்டுவதை அறியக் கேளு
தருமையாம் கல்லுப்புச் சேரு எட்டுத்
தாட்டிகமாய்க் கடல்நுரையும் சேரு எட்டு
வருமையாய் இரண்டுமொன் றாய்ப் பாணியாலே
வடிவாக அரைத்துமே வில்லை கட்டே 518

கட்டியே கரியில்வைத்துக் குமுற வூது
கனிவாகச் சுண்ணாம்பாம் காதல் கேளு
வட்டியே கல்லுப்புச் சுண்ண மானால்
வடிவாகச் சரக்குகள் தாம் வலுவாய்க் கட்டும்

முட்டியே கல்லுப்புச் சுண்ணந் தன்னை
முனையாக அரைத்துமே கவசம் கட்டி
நட்டியே சட்டிதனில் உப்பு இட்டு
நலமாக அதற்குள்ளே உண்டை வைத்தே 519

வைத்துமே யமுக்கியதை மேலே மூடி
வளமாக வாலையென்ற அடுப்பி லிட்டுக்
கைத்துமே யிருசாமம் எரித்துப் பாரு
கனிவாகச் சாரமது தந்தம் போலாம்
பைத்துமே இச்சாரம் அயனுக் கொக்கும்
பதிவான இச்சாரம் தனையெ டுத்து
கைத்துமே சுண்ணமென்ற புகைநீர்க் குள்ளே
கனிவாகச் சேரொன்றில் பலமும் போடே 520

போடவே வெந்துநல்லாய்க் கரைந்து போகும்
போக்கோடே மூன்றுநாட் சென்று பார்த்தால்
ஆடவே தயிர்போலே உறைந்து போகும்
அடவாகத் தயிரிலே மத்து இட்டுக்
காடவே கடைந்திடவே வெண்ணெய் எல்லாம்
கனிவாக எடுத்துமே வைத்துக் கொண்டு
ஊடவே முறிந்தமோர் தன்னி லேதான்
உறுதியாய்த் தூரிசுதனைத் தோய்ச்சுப் போடே. 521

தோய்ச்சிடவே வீரத்தைத் தோய்த்துப் போடு
துடியாக இலிங்கத்தைத் தோய்ச்சுப் போடு
வாய்ச்சிடவே பூரத்தைத் தோய்ச்சுப் போடு
வடிவாகத் தாளகத்தைத் தோய்ச்சுப் போடு
காய்ச்சிடவே மனோசிலையைத் தோய்ச்சுப் போடு
கனிவாக வெடியுப் பைத்தோய்ச்சுப் போடு
மாய்ச்சிடவே கல்லுப்பைத் தோய்ச்சுப் போடு
மயமாக நாள்மூன்று தோய்ச்சுப் போடே. 522

போடவே நாள்மூன்றும் மணலுக் குள்ளே
பொலிவாகக் கதிரினுள்ளே சென்ற பின்பு
ஆடவே யெடுத்துப்பார் கட்டி நிற்கும்
அடவான சரக்கெல்லாம் எடுத்துக் கொள்ளு
ஊடவே நாள்மூன்று கவசம் கேளு
உடனான சீனமது சேரு வொன்று
கூடவே சட்டியிட்டுப் பொரித்துப் போடு
குணமாகக் கல்வத்திலிட்டுக் கேளே. 523

இட்டுமே சாரமது வெளிந்த மோரால்
இதமாக அரைசாமம் நாலதாக
வட்டுமே அரைத்தபின்பு சொல்லக் கேளு
வடிவாக வில்லைக் கட்டிக் கதிரிலிட்டு
முட்டுமே காய்ந்தபின்பு புடமும் போட
முனிவாகப் பெரியபுடம் போட்டெடுக்க
நட்டுமே சீனமது கடுமை யாகும்
நலமாகச் சீனத்தின் செய்கை கேளே. 524

கேளுமே கட்டினதோர் சரக்கு மேலே
கெடியாக அங்கியிடு வலுவா கத்தான்
வாளுமே காயவைத்து அதன்மேற் கேளு
வடிவாகச் சுண்ணாம்புக் கவசம் கட்டி
நாளுமே பத்தெருவிற் புடத்தைப் போட்டால்
நலமாக நீறியது சுண்ணமாகும்
தேளுமே கொட்டினது போலே யாகும்
செகசாலம் ஆடலாம் திடமு மாமே. 525

திடமாக ஒவ்வொன்றில் தனியே கேளு
திட்டமாய் நவலோகம் நுற்றுக் கொன்று
படமாகக் கொடுத்திடவே மாற்றுத் தானும்
பத்துக்குக் குறையாது பாரி லோர்க்கு
அடமாகச் சொல்லாதே தொந்திச் சேறு
அனுதினமும் வாதமது ஏவல் கேட்கும்
இடமாக இப்புவியில் இருக்கும் மட்டும்
இன்பமாய்ச் சுண்ணத்தில் இயல்பு பாரே. 526

பாருமே சுண்ணத்தால் கோடி வேதை
பதிவாகப் புகைநீரால் கோடி வேதை
நாருமே கட்டினமும் கோடி வேதை
நலமாக வாதிக்கு அடுத்த புத்தி
வாருமே சொல்லிவிட்டேன் உற்றுக் கேளு
நலமான வித்தையெல்லாம் உப்பி னாலே
சாருமே யவரவர்க்குச் சொல்லும் புத்தி
சரியாக வாதமது சரித்துக் கொள்ளே. 527

கொள்ளவே நாகமது புகைநீ ராச்சு
குணமான சாரமது விந்து வாச்சு
நள்ளவே இதுரெண்டுங் கூடக் கூட்டி
நலமாகச் சேர்த்திடவே சரக்கு எல்லாம்

துள்ளவே கட்டிவிடும் நவலோ கத்தில்
துடியாகப் பாய்ந்திடவே பொன்னு மாகும்
விள்ளவே வாதவிதி யதிலே கேளு
விருப்பமாய் ஞானத்தின் செயலைப் பாரே. 528

பாருமே ஞானத்தின் பேரே தென்னில்
பதிவாகப் பூரணத்தைக் கண்ட பேர்கள்
வாருமே சிவஞான போத மாகும்
வடிவாகப் பூரணமும் வந்து கூடும்
நாருமே யகண்டபரி பூரணத்தை
நலமாகப் பார்த்திடவே யநேக வேதை
காருமே கண்கொள்ளா வேதை தன்னைக்
கனிவாக ஞானத்தின் கருத்தை யுன்னே. 529

உன்னியே பொருளறிந்தோன் வாதி யாகும்
உற்றுமே நூலறிந்தால் பாக மாகும்
நன்னியே பூரண்த்தைக் கண்டோன் சித்தன்
நலமாக எப்பொருட்கும் இறைவன் கர்த்தன்
துன்னியே துயர்தீர்த்தோன் கர்த்த னாகும்
துணையான குலமில்லான் சித்தன் சித்தன்
வன்னியே வடிவுடையோன் மயக்க மாகும்
வாதாடிப் பார்த்திடவே சித்தி யாமே. 530

510 - 530 — சாரக் கட்டு

சாரக் கட்டுக் கேள். சித்தியெல்லாம் மறைத்த உண்மையைப் பாகம் பெறச் சொல்லுகின்றேன். சாரப் போக்கினைச் சித்தர்கள் உருப்படியாகச் சொல்லவில்லை. இராமதேவர் ஏழுகோடி யுகம் பார்த்தார். சித்தரெல்லாம் கைந்நூலில் அதனை மறைத்துப் போட்டனர்.

சாரத்தைப் பாக்குப் போல் சீவி உருண்டையாக்கிச் செயநீரில் தோய்த்துக் கதிரிலிட்டுப் பின்சாரம் கரைந்து போகக் கைபாகம் பொய் யென்பார்.

மூலிகையைப் பிழிந்து சாரத்தைத் துவைத்துக் கரைத்து விட்டுப் பின்னுமொறு சாரக்கட்டி வாங்குவார். அரக்கினை இளக்கி மேலே கட்டி வங்கத்தை யுருக்கியதிலே தோய்த்து எடுத்துக் கரியாக்கித் தூரத்தே எறிவார்.

மேலும் ஒரு சாரக் கட்டி வாங்கிக் கருவிலே கட்டிப் பார்க்க அதுவும் புகைந்து போகக் கரிச்சுட்டுக் கெட்டுப் புலம்புவார்.

உண்மையாகச் சாரக்கட்டினைக் கேள்

நாலுபடி கிளிஞ்சில் நீற்றுக்குள் சாரக்கட்டியைச் சீவி வைத்து மேற்சட்டி மூடிச் சீ. ம. செ. நாலுசாமம் எரிக்கச் சாரம் எண்ணெய் கக்கிக் கட்டும். மேலும் கட்டக் கேள்.

கல்லுப்பும் கடல்நுரையும் வகைக்கு எட்டுச் சேர். கரியில் வைத்-துக் குமுறவூது. சுண்ணமாகும். கல்லுப்புச் சுண்ணத்தை அரைத்துச் சாரக் கட்டிக்குக் கவசம் கட்டி ஒரு சட்டியில் உப்பு இட்டுக் கட்டியை அமுக்கி வைத்து மேற்சட்டி மூடி இருசாமம் எரித்துப்பார். தந்தம் போல் கட்டுப்பட்டிருக்கும். எடுத்து ஒருசேர் சுண்ணப் புகைநீரில் ஒருபலம் போடு. வெந்து கரையும் மூன்று நாட்கழித்துப் பார்த்தால் தயிராகும். மத்திட்டுக் கடைந்து வெண்ணெயை எடுத்து வைத்துக் கொள். முறிந்த மோரில் துரிசு வீரம் இலிங்கம் பூரம் தாளகம் மனோசிலை வெடியுப்பு கல்லுப்பு ஆகிய இவற்றைத் தனித்தனியே மும்மூன்று நாள் தோய்த்-துத் தோய்த்துப் போட்டு மூன்று நாள் காய்ந்தபின் மணற்புடமிடக் கட்டும்.

பின்பு சீனத்தைப் பொரித்துச் சாரமோரால் அரைத்து (நாலு-சாமம்) வி. த. கா. சீ. ம. செ. பெரியபுடமிடச் சுண்ணமாகும். கட்டின சரக்கின் மேல் அங்கியிட்டுக் காய வைத்துச் சுண்ணாம்புக் கவசங் கட்டி 10 எருப்புடமிட நீறி அது சுண்ணமாகும். ஒன்பது வகைப் பொன்னிலும் நூற்றுக்கு ஒன்றிடப் பத்து மாற்றுச் செம்பொன்னாகும். மேலும் மேலும் தொந்தித்து ஏற்று.

சுண்ணத்தால் புகை நீரால் கட்டினத்தால் தனித் தனியே கோடி வேதை.

நாகம் புகை நீர். சாரம் விந்து. இரண்டும் கூட்டிச் சேர்க்க எல்லாம் கட்டும். இரும்பு முதலியவற்றில் துடியாகப் பாயும் செம் பொன்னாகும். பொருளறிந்தோன் வாதி. நூலறிந்தால் பாகம் வாய்க்கும்.

சவுக்காரம்

ஆமேதான் சாரமென்ற தெளிந்த நீரில்
அடவாகச் சவுக்காரம் சொல்லக் கேளு
வாமேதான் அமுரிபடி யெட்டு வாங்கு
வடிவாக அதைமுறித்து வண்மை யாக
நாமேதான் பூநீறு படியும் ரெண்டு
நலமாகக் கிளிஞ்சினீர் படியும் ரெண்டு
சாமேதான் அளந்துமே அதிலே விட்டுத்
தப்பாமல் கொதியிட்டு இறுத்துக் கொள்ளே 531

இறுத்துமே வெண்காரம் சேரு எட்டு
இதமாகப் பொரித்துமே தெளிவிலிட்டு
நறுத்துமே ஒட்டளரி நாக விந்து
நலமாகக் கட்டியது வெள்ளை யாகும்
குறுத்துமே கல்வத்தி லிட்டுக் கேளு
குணமாகச் சாரநீர் தெளிந்த நீரால்
வறுத்துமே நாற்சாமம் மைபோ லாட்டி
நலமாக வில்லைகட்டிக் காயப் போடே 532

காயவே வைத்துப்பின்பு சொல்லக் கேளு
கனிவாக அஞ்சுசுண்ணத் துள்ளே யிட்டுச்
சாயவே பத்தெருவிற் புடத்தைப் போடு
நலமாக ஆறியபின் னெடுத்துக் கொண்டு
மாயவே சவுக்காரம் கடுமை யாகும்
மயமான சகலசித்தும் ஆட லாகும்
சாயவே சித்துக்கும் அதிக மாகும்
சாட்சியாய் ஞானவழி யடுத்துப் பாரே 533

அடுத்துமே சவுக்காரச் சுண்ணத் தோடே
அடவாக வீரமிட்டு நாலத் தொன்று
கொடுத்துமே கல்வத்தி லிட்ட ரைத்துக்
குணமாகச் சவுக்காரம் தெளிந்த நீரால்
கடுத்துமே இருசாமம் நேக ஆட்டிக்
கனிவாக வில்லைதட்டிக் காயப் போடு
தொடுத்துமே அஞ்சுசுண்ணத் துள்ளே யிட்டுச்
சுகமாகப் பத்தெருவிற் புடத்தைப் போடே 534

போடவே புடமாறி யெடுத்துப் பாரு
போக்கோடே சவுக்காரம் சுண்ண மாகும்
ஆடவே சவுக்காரம் சுண்ண மானால்
அடவான சகலசரக் கதனைக் கட்டும்
வாடவே நீற்றினமும் உருக்கினமு மாகும்
வடிவாக எப்பொருளும் வண்மை யாகும்
சூடவே சித்திக்க வேணு மென்றால்
நிலையான சவுக்காரச் சுண்ணம் பண்ணே 535

பண்ணியே சவுக்காரம் சுண்ணத் தோடே
பதிவாக நாலுக்கு ஒன்று வீரம்
தன்னியே சேர்த்தரைத்து வெள்ளீ யத்தில்
தாட்டிகமாய்ப் பூசியே காய வைத்து

நண்ணியே பத்தெருவில் அடுக்கிப் போடு
நலமாகச் சுண்ணமது வங்கச் சுண்ணம்
உன்னியே வெள்ளியம் நீறி னாலே
உறுதியாய் எல்லாமும் நீறுந் தானே. 536

நீறுமே வெள்ளியம் நீறு தன்னை
நிலையாகச் சுண்ணாம்பு பலமும் ரெண்டு
காறுமே துரிசியின்மேல் கட்டிக் காயக்
கனிவாக மேற்கவசம் சுண்ணம் கட்டி
வாறுமே காயவைத்துப் புடத்தைப் போடு
வடிவாகக் கடுஞ்சுண்ணம் துரிசி யாகும்
கூறுமே துரிசதுவும் நீறு தன்னைக்
குணமாக எடுத்துமே அப்பால் வையே. 537

வைத்துமே முன்சாரக் கட்டைத் தானும்
வடிவாகச் சேர்த்தெடைக்கு அரைக்கும்போது
நைத்துமே பலபலெனச் செயநீ ராகும்
நலமான செயநீரில் புழுகு வீரம்
கைத்துமே யிட்டுடனே யாறு புள்ளி
கனிவாக வண்டு தானிருபத்தி ஒன்று
முத்துமே யிட்டுநீ முறையைக் கேளு
முனிவாகப் பீங்கானில் எடுத்து வைத்தே 538

எடுத்துமே வைத்தபின்பு சொல்லக் கேளு
இதமாக வேதைமுகந் தெரியக் கேள்நீ
அடுத்துமே செம்பென்ற தகடு வாங்கி
அடவாகச் செயநீரில் தோய்ச்சுத் தோய்ச்சுப்
படுத்துமே கற்பூர தீபந் தன்னில்
பதிவாக வாட்டிடவே மெழுகு மாகும்
நடுத்துமே மெழுகெடுத்து நவலோ கத்தில்
நலமாக இட்டிடவே தங்கமாமே 539

ஆமேதான் இத்தங்கம் சிவனுக் கொக்கும்
அடவாக இதைச்சிவனார் பண்ணிப் பூசி
நாமேதான் பூசிக்க எல்லாம் சித்தி
நலமாக யோகசித்தி காய சித்தி
வாமேதான் நாதமே யுற்றுப் பாரு
வடிவாகச் சகலசித்தி யுடனே யாகும்
தாமேதான் தாளகமும் சேரு வொன்று
தாட்டிகமாய்ச் சுண்ணாம்பில் சுத்தி செய்யே. 540

சுத்தி-செய்து முன்செயநீர் தடவி நீயும்
சுயமாகக் கற்பூர தீபந் தன்னில்
முத்தியே வாட்டிடவே மெழுகு மாகும்
மூதண்டம் ஆட்டுவிக்கும் மெழுகு மப்பா
நத்தியே மெழுகெடுத்து நவலோ கத்தில்
நாடியே நூற்றுக்கு ஒன்று ஈயச்
சத்தியே மாற்றென்ன பதினா றாகும்
நலமாகக் கருக்கட்டி அம்மன் வாரே. 541

வார்த்துமே அம்மனதைப் பதனம் பண்ணி
வடிவாக அஞ்செழுத்தும் எட்டெ ழுத்தும்
நாத்துமே ஓதிடவே சித்தி யாகும்
நலமான சித்திமிக ரொம்ப வாகு
காத்துமே வாதசித்தி யோக சித்தி
கனிவாகச் சித்தியது கடிசி லாகும்
நாத்துமே சித்திக்க வேண்டு மென்றால்
நலமாகத் தாளகத்தின் மெழுகு பண்ணே. 542

பண்ணிடவே நவலோகம் எல்லாந் தானும்
பதிவாகப் பழுத்துவிடும் பண்பு கேளு
உண்ணிடவே சோற்றுக்கு உறுதி யாகும்
உற்றுமே தாளகத்தால் எல்லாம் சித்தி
கண்ணுமே போட்டதொரு ஆவு போல
கனிவாகக் கதறியே நவலோ கத்தில்
பண்ணியே பாய்ந்துவிடும் பலனு மாகும்
பாகட்தைக் கண்டாக்கால் பதிவு மாமே. 543

ஆமேதான் வீரத்தைப் பலமு ரெண்டு
அடவாகச் சுத்திபண்ணி யறியக் கேளு
நாமேதான் பிரண்டைக்குட் சுத்தி செய்து
பதிவாக முன்செயநீர் வைத்து வாட்டு
சாமேதான் கற்பூர தீபந் தன்னில்
நலமாக இட்டிடவே மெழுகு மாகும்
பாமேதான் மெழுகெடுத்து நவலோகத்தில்
பாய்ச்சிடவே நூற்றுக்கு ஒன்று தானே. 544

ஒன்றுமே கொடுத்துருக்கிப் பார்க்கும் போது
உறுதியாய் இருபத்து ஐந்து மாற்று
நன்றுமே யிப்பொன்னை விற்க வேண்டாம்
நலமாகக் கணபதிக்குப் பண்ணி நல்லாய்

கன்றுமே கருவைத்துப் பூசை பண்ணிக்
    கனிவாகச் செய்திடவே சகல சித்தி
வன்றுமே சித்தியெல்லாம் வந்து கூடும்
    வாதாடித் திரிந்துநீ வழக்கம் பாரே. 545

வழக்கமாம் பூரத்தைப் பலமும் வாங்கி
    வடிவாக முலைப் பாலில் சுத்தி செய்து
கழக்கமாம் துரிசினுட செயநீர் தன்னில்
    தாட்டிகமாய்க் துவைத்துமே கற்பூரத்தில்
கிழக்கமாம் வாட்டிடவே மெழுகு மாகும்
    கனிவாக மெழுகெடுத்து நவலோ கத்தில்
பழக்கமாய் நூற்றுக்கு ஒன்று தாக்கப்
    பதினேழு மாற்ருகும் பண்பும் ஆமே. 546

ஆமேதான் இப்பொன்னைச் செலவு செய்ய
    அடவாக வேண்டாங்காண் சுப்பிரமணியர்
காமேதான் பண்ணுவித்துச் செபத்தை நோக்கக்
    கனிவாக அட்டமா சித்தி யுண்டாம்
வாமேதான் சித்துகளும் மெத்த உண்டாம்
    வடிவாக வாதமது ஏவல் சித்து
காமேதான் உண்டாகும் கண்டு பாரு
    காரணமாய்ச் சித்துகளும் ஆடும் பாரே. 547

ஆடுமே யண்டபகி ரண்ட மெல்லாம்
    ஆடலாம் வெகுகோடி அனந்தம் வேதை
நாடுமே சகலசித்துக் கதிகம் மெத்த
    தாட்டிகமாய் மௌனவொலி மெத்தக் காணும்
பாடுமே வாதவித்தைச் சுருக்கு மெத்த
    வடிவாக லோகமுதல் கற்ப மாகும்
கூடுமே கற்பத்துக் கிதுவே யாதி
    கொள்ளையிட வாதமிதில் கூறி னோமே. 548

கூறினோம் துரிசினுட சுண்ணத்தாலே
    கூடுமே நவலோகம் எல்லாம் தானும்
ஆறினோம் பழக்கமது வேதை யாகும்
    அடவாகத் தங்கமது வடிவு மாகும்
நாறினோம் நடப்பதுவும் நல்ல தாகும்
    நாதாந்தப் பெருவெளியில் நாட்டம் பாரு
கூறினோம் சகலசித்துக் குணமு மாகும்
    குணமாக எப்பொருளுங் குணமு மாமே. 549

ஆமேதான் மனோசிலையைச் சுண்ண நீரில்
அடவாகச் சுத்தி செய்து அப்பால் கேளு
தாமேதான் துரிசினுட செயநீ ராலே
தாட்டிகமாய்த் துவைத்துமே கற்பூரத்தில்
நாமேதான் வாட்டிடவே சாமம் ஒன்று
நலமான மனோசிலைதான் மெழுகு மாகும்
வாமேதான் மெழுகெடுத்து நவலோ கத்தில்
வடிவாக இட்டிடவே வண்மை கேளே. 550

வண்மைகேள் நூற்றுக்கு ஒன்று தாக்க
வடிவான மாற்றென்ன இருபத் தைந்தாம்
உண்மைகேள் இப்பொன்னை விற்றி டாதே
உறுதியாய்ப் பிர்மாவைப் பண்ணிப் பூசி
தண்மையாய் அஞ்செழுத்தும் எட்டெ ழுத்தும்
தாட்டிகமாய்ப் பூசையே பண்ணித் தீரு
கண்மையாய்ப் பூசிக்கச் சகல சித்தும்
கனிவாக ஆகுமது கணக்கு மாமே. 551

கணக்காகச் சூதசெந் தூரம் கேளு
காரியமாய்ப் பலமொன்று நிறுத்துக் கொண்டு
துணுக்காக முலைப்பாலில் சுத்தி செய்து
துடியாகத் துரிசியென்ற நீரி னாலே
வணக்காகத் தோய்ச்சுமே கற்பூ ரத்தில்
வடிவாக வாட்டிடவே மெழுகு மாகும்
பிணக்காக நவலோகம் நூற்றுக் கொன்று
பேதையரே கொடுக்கவே பின்பு கேளே. 552

கேளுமே மாற்றதுவும் நூறு மாகும்
கெடியாக இம்மாற்றை விற்க வேண்டாம்
நாளுமே சொர்ண வயிரவர் தானும்
நலமாக மெழுகுகட்டிப் பின்பு கேளு
தாளுமே மண்ணைத்தான் அரைத்துக் கட்டி
நலமாக மெழுககற்றிப் பின்பு கேளு
ஊளுமே நூறான மாற்றுப் பொன்னை
உற்றுமே கருவினிலே யுருக்கிச் சாயே. 553

உருக்கியே வயிரவர்போ லுருவ மாகும்
உற்றுமே யிதைவைத்துப் பூசை பண்ணு
நெருக்கியே நாற்பத்து முக்கோ ணத்தை
இயல்பாகப் பூசைசெய்து வைத்து நீயும்

சுருக்கியே பஞ்சாக்கர விதியி னாலே
கனிவாகப் பூசித்து வாசி தன்னில்
பருக்கியே பூரணத்தைக் கண்டு தேறு
பதிவாக ஞானமது பருகும் பாரே. 554

பருகுமே ஞானவொலி கீத மாகும்
பதிவான ஞானமென்ற நடப்புக் கேளு
வருகுமே நீதியாய் வாழப் பார்த்து
வடிவாகச் சிவயோகம் வண்மை பாரு
குருகுமே சிலம்பொலியின் கீத மாகும்
குணமான குரலினுட செயலாம் பாரு
திருகுமே வழியோடே சுழியி லேறு
சிறப்பாகக் கெவுனமது சித்தி யாமே. 555

ஆமேதான் சித்திக்க வேணு மென்றால்
அடவாக வாதத்தின் பொன்னி னாலே
காமேதான் விக்கிரகம் பண்ணித் தானே
கனிவாக வைத்துமே பூசை செய்து
நாமேதான் பூசைசெய்ய மனமும் வைத்தால்
நலமிக்க காயசித்தி யுடனே யாகும்
வாமேதான் சித்திக்க வேணு மென்றால்
வடிவாகத் துரிசதுவைச் சுண்ணம் பண்ணே 555

பண்ணிடவே ஓங்கார வழியி லேகி
பதிவாக றீங்கார வழியிற் புக்கி
கண்ணிடவே பூரணத்தைக் கண்டு நாடு
கனிவாக ஒமெனவே யொலித்து நாடு
விண்ணிடவே காரணத்தின் செய்கை யாலே
வேதாந்தப் பொருளெல்லாம் வீத மாகும்
பண்ணிடவே பூரணத்தைப் பாரி லேத்து
பதிபாச விதியதனைப் பார்த்து வாங்கே 557

வாங் கியே கர்த்தனைத்தான் துதியே செய்து
வடிவான மௌனத்தின் வண்மை பார்த்து
ஓங்கியே வட்டத்தில் வாதி மார்கள்
உரமாகிக் காயத்தைச் சித்தி செய்து
தூங்கியே திரியாதே கெவுனந் தன்னில்
துடியாக வாசியோ கத்தைக் கண்டு
பாங்கியே பதிபாச வழியி லேகிப்
பரப்பிரம மானதொரு பதத்தைப் போற்றே 558

போற்றவே பரம்தன்னைக் கண்டால் சித்தி
புகலரிய விதியாலே உலகத் தோர்கள்
காற்றவே வாதத்தைச் செய்யா மூடர்
கனிவாகப் பேசிடுவார் கலக்க முற்று
கூற்றுமே சுழிமுனையைக் காணா தாலே
குணமாக ஐம்பொறியைக் கலக்க முற்று
வாற்றவே உலகத்தில் மனித ரோடே
வடிவாக அமைதியாய் இருப்பார் தானே 559

தானேதான் நூல்தனிலே துரிசுச் சுண்ணம்
தன்மையாய் வெகுகோடி சுண்ணம் சொன்னேன்
வானென்ற சுண்ணமெல்லாம் துரிசி னாலே
வடிவான நீற்றினமும் துரிசி னாலே
கானென்ற ஆதாரந் துரிசி னாலே
கனிவாக நிலையதுவுந் துரிசி னாலே
மானென்ற துரிசு-விட்டா லொன்று மில்லை
மயமாகத் துரிசுசொன்ன நீறு மாமே 560

நீறான துரிசுவிட்டால் சூதம் சாகா
நிலையான வுப்புவிட்டால் குலமு மில்லை
வாறான குடோரிவிட்டால் உருக்கினமு மில்லை
வடிவான வெடியுப்பு விட்டா னானால்
கூறான சுண்ணமதும் இல்லை கண்டாய்
குணக்கேடு செய்யாமல் உற்றுப் பாரு
வாறான பொருளறிந்து வந்து கூடும்
வடிவாகப் புகை நீரில் வடிவு மாமே. 561

வடிவமாம் சணப்போது நல்லாக் காயம்
வடிவான காயத்தை நிறுத்த வென்றால்
துடிவமாம் புகைநீரு தன்னி லேதான்
துப்புரவாய் வெள்ளையாய் முறிக்கக் கேளு
குடியான சுண்ணாம்பாய் முறிந்து நிற்கும்
கூரறிந்து சுண்ணநீர் வேதை கோடி
படிவாகக் கட்டினமும் உருக்கினமுங் கோடி
பகரரிது புகைநீரு குருவி னாட்டே. 562

ஆட்டான புகைநீரை வைத்தா யானால்
அடவாகச் சுண்ணமிட்டு முறித்துப் போடு
கூட்டான குணமாகும் குணத்தைப் பாரு
குடிகேடு செய்யாதே குருவைப் பாரு

நாட்டான நலனறிந்த குருவைச் சொன்னேன்
நலமாகக் குருவுதனை வைத்துத் தேறு
ஊட்டான யோகத்தின் சித்துத் தானும்
உறுதியாய் வருகுமது உண்மை தானே, 563

531-563 - சவுக்காரம்

சாரநீரில் சவுக்காரம் செய்முறை கேள் எட்டுப்படி அமுரியை முறித்து அதனுள் பூநீறும் கிளிஞ்சில் நீறும் வகைக்குப்படி இரண்டு போட்டுக் கலக்கிக் கொதிக்க வைத்து இறுத்து அத்தெளி நீரில் எட்டுச் சேர் வெண் காரணம் பொரித்துப் போட்டு ஒட்ட எரி. நாத விந்து நலமாகக் கட்டுப் பட்டு வெள்ளையாகும். கல்வத்திலிட்டுத் தெளிந்த சாரநீரால் மைப்போல் அரைத்து வி. த. கா. ஐந்து சுண்ணக் குகைக்குள் வைத்து சீ. ம. செ. 10 எருப்புடமிடு. ஆறியபின் எடு. சவுக்காரம் கடுமையாகும். சவுக்காரச் சுண்ணத்தோடு நாலில் ஒரு பங்கு வீரமிட்டுக் கல்வத்திலிட்டரைத்துச் சவுக்காரம் தெளிந்த நீரால் நெகிழ ஆட்டி வி. த. கா. அஞ்சு சுண்ணக் குகைக்குளிட்டு சீ. ம. செ. காயவைத்து 10 எருப்புடமிடச் சவுக்காரம் நல்ல சுண்ணமாகும். சரக்கினைக் கட்டவும் நீற்றவும் உருக்கவும் உதவும்.

சவுக்காரச் சுண்ணத்துடன் நாலுக்கு ஒன்று வீரம் சேர்த்து அரைத்து வெள்ளீயத்தின் மேற் பூசிக் காயவைத்து 10 எருப்புடமிடு. வங்கம் சுண்ணமாகும். வெள்ளீயம் நீரினால் எல்லாம் சுண்ணமாகும்.

வெள்ளீய நீற்றினைத் துருசுக்குக் கவசம் செய்து அதன்மேல் 2 பலம் சுண்ணம் கவசம் கட்டிக் காயவைத்துப் புடமிடு. துரிசு கடுஞ் சுண்ணமாகும் எடுத்து வை.

சாரக்கட்டும் துரிசுச் சுண்ணமும் எடைக்கெடை சேர்த்தரைக்கப் பலபலெனச் செயநீராகும். அதற்குள் புனுகு வீரம் ஆறுபுள்ளி வண்டு இருபத்தி ஒன்று இட்டுப் புட்டியில் ஊற்றி வை.

செம்புத் தகட்டை அடைவாக அச்செயநீரில் தோய்த்துக் கற்பூர தீபத்தில் வாட்ட மெழுகாகும். ஒன்பதிலும் இட்டிடத் தங்கமாகும். இத்-தங்கம் சிவனுக்கு ஒப்பாகும். சிவனுருவம் செய்து பூசை செய். எல்லாம் வயமாகும். தலமும் வயமாம். உடலும் வயமாம். நாதமேயுற்றுப் பாரு எல்லாம் வலுக்கும்.

ஒருசேர் தாளகம் தூயதாக்கி (சுண்ணாம்பினுள் வைத்து நீற்றி) முன் செயநீர் தடவிக் கற்பூர தீபத்தில் வாட்டு. மெழுகாகும். இம் மெழுகு மூதண்டத்தையும் ஆட்டுவிக்கும். ஒன்பதிலும் நூற்றுக்கு ஒன்-றீயப் பதினாறாகும். கருக்கட்டி அம்மன் வாரே. வடிவாக ஐந்தெழுத்-

தும் எட்டெழுத்தும் ஓத வயமாகும். தாளக மெழுகு செய். பாகத்தைக் காணப் பயன் உண்டாகும்.

வீரத்தைப் பிரண்டைச் சாற்றில் முன் கூறிய வண்ணம் தூயதாக்கி முன் செயநீர் தோய்த்துக் கற்பூர தீபத்தில் வாட்டு. மெழுகாம். ஒன்பதிலும் நூற்றுக்கு ஒன்று ஈய இருபத்தைந்து மாற்றாகும். இப்பொன்னை விற்க வேண்டாம். பிள்ளையார் திருவுருவம் செய்து கனிவாகப் பூசை செய். எல்லாம் வலுக்கும்.

பூரம் ஒருபலம் எடுத்து முலைப்பாலில் தூயதாக்கித் துருகச் செய நீரில் தோய்த்துக் கற்பூர விளக்கில் வாட்டு. மெழுகாகும். ஒன்பதிலும் கொடுத்துப் பார். பதினேழு மாற்றாகும். இப்பொன்னையும் விற்றல் வேண்டாம். முருகன் திருவுருவம் செய்து பூசனை செய். எண்வகைச் செல்வமும் (அட்டமா சித்தியும்) உண்டாகும். கற்பத்துக்கு இதுவே முதல் வாத வித்தையால் கொள்ளையிட வழி கூறினோம். துரிசுச் சுண்ணத்தால் ஒன்பதும் தங்கமாம். நாதாந்தப் பெருவெளியில் நாட்டம் பாரு.

மனோசிலையைச் சுண்ண நீரில் தூயதாக்கித் துரிசுச் செயநீரில் தோய்த்துக் கற்பூர தீபத்தில் வாட்ட மெழுகாகும். ஒன்பதிலும் நூற்றுக்கு ஒன்றிய 25 மாற்றாகும். வில்லாதே. பிரமவுருச் செய்து பூசி வயமாம்

சூதம் ஒருபலம் எடுத்து முலைப்பாலில் நயமாக்கித் துரிசு நீரில் தோய்த்துக் கற்பூர விளக்கில் வாட்டு. மெழுகாம். ஒன்பதிலும் நூற்றுக்கு ஒன்று கொடு. நூறு மாற்று தங்க வயிரவர் உருவம் செய். மெழுகால் உருவம் செய்து மண்பூசிக் காய வைத்து மெழுகை நீக்கிவிட்டு அந்த இடை வெளியில் நூறு மாற்றுச் செம்பொன்னை உருக்கி வார்த்துத் தங்கத் திருவுருவம் செய்து நாற்பத்து முக்கோணத்தில் வைத்துப் பூசி. ஐந்தெழுத்து விதிப்படி பூசி. வளிநிலை நெறியாக நிறைவு கண்டு தெளி. ஞானஒலி கீதமாகும். சிலம்பொலியின் கீதமாகும் குருவின் அருளாகும் வழியோடு சுழியிலேறு. பொன் செய்கை வயப்பட வேண்டுமெனின் திருவுருச் செய்து பூசை வழிபாடு செய். துரிசுச் சுண்ணம் செய். பதிபாச வழியதனைப் பார். ஓங்கார ரீங்கார வழியிற் புகுந்து நிறைவு காண். வளிநிலை செய். சுழிமுனை காணாததாலே ஐம்பொறி கலங்கியிருப்பார். எல்லாம் துரிசினால். துரிசு சேராவிட்டால் சூதம் கட்டாது. உப்பு விட்டால் இனமில்லை. குடோரிவிட்டால் உருக்கினமில்லை. வெடியுப்பு விட்டால் சுண்ணமில்லை. புகைநீரினால் பயனுண்டாகும். உடலை நிலைபெறச் செய்யப் புகை நீர் முறித்து வெள்ளையாக்கல் வேண்டும். அண்டச் சுண்ணமிட்டுப் புகை நீரை முறித்துவிடு குருச் செய்து கொள்.

அக்கினித் திராவகம்

உண்மையாய் இன்னமொரு புகைநீர் கேளு
உற்றுமே கைபாக வரிசை யாலே
தண்மையாய்ப் புகைநீரைச் செய்யக் கேளு
தாட்டிகமாய்ச் சகலசித்தும் ஆட லாகும்
வண்மையாம் வெடியுப்பு அஞ்சாங் காய்ச்சல்
வடிவாகப் பலம்பத்து நிறுத்துக் கொண்டு
கண்மையாய் சீனமது இருபத் தைந்து
கனிவாக இரண்டு மொன்றாய் இடித்திடாயே 564

இடித்துமே கலயத்தில் இட்டுக் கேளு
இதமாக வாலைஎன்ற சட்டி மூடி
வடித்துமே சீலைமண் கனக்கச் செய்து
வடிவாக வாலைஎன்ற அடுப்பி லிட்டு
நடித்துமே தீஎரிக்க வெள்ளை நீராம்
நலமாக வெள்ளையைத்தான் வீசிப் போடு
முடித்துமே மஞ்சள்நீர் வருகும் பாரு
குணமாகச் சீசாவில் பிடித்திடாயே 565

பிடித்துமே தூரவைத்துப் பின்பு கேளு
பிசகாமல் வெடியுப்புப் பலமும் பத்து
நடித்துமே சீனமது இருபத்தைந்து
நலமாகப் பொடியாக்கிச் சட்டியிட்டு
வடித்துமே உருக்கியே வெள்ளை நீரை
வடிவாகப் புகைநீரை விட்டுப் பின்பு
துடித்துமே மஞ்சள்நிறம் புகையும் போது
துடியாக எடுத்துமே கலையத்திட்டே 566

இட்டுமே புகைநீரு தன்னைத் தானும்
இதமாக ஊற்றிடவே கொதித்து வேகும்
நட்டுமே வாலைஎன்ற சட்டி மூடி
வடிவாகச் சீலைமண் வலுக்கச் செய்து
பட்டுமே யடுப்பிலிட்டு எரித்து வாங்கு
நலமாகப் புகைபடா தன்னில் வாங்கு
முட்டுமே யிப்படிக்கு முறையாய் வாங்கு
முனிவாக அஞ்சுதரம் வாங்கி டாயே 567

வாங்கிடவே முருக்கம்பூப் போலே நீர்கள்
வடிவாக இருக்குமது வண்மை சொன்னேன்
தேங்கிடவே புகைநீரு கால னொக்கும்
திடமாகக் காரந்தான் மெத்த வுண்டு

பாங்கிடவே யிந்தநீர் மகிமை தன்னைப்
பதிவாகச் சொல்லவில்லை பாரி லோர்க்கு
வாங்கிடவே புகையாலே எல்லா மாச்சு
வாதசித்தி வசியமது மருவ லாமே 568

மருவவே இந்நீரை முறிக்கக் கேளு
மயமாக ஏரலென்ற மருளு தானும்
கருவவே பலம்பத்து நிறுத்துக் கொண்டு
கனிவாகச் சங்கதுவும் பலமும் பத்து
நருவவே முட்டையது ஓடு பத்து
நலமாக முப்பதுவும் பலமு மாச்சு
உருவவே உவர்மண்ணும் சுண்ண மிட்டு
உறுதியாய்ப் பாணிபடி பத்து வாரே 569

வார்த்துமே யடுப்பிலிட்டுக் கொதிக்க வைத்து
வடிவாக ஒட்டளரி குமுறத் தானும்
காத்துமே எரிந்தபின்பு கழுவி வாங்கிக்
கனிவாக எல்லாமும் கனிந்து வாங்கு
நாத்துமே மூன்றையுந்தான் கல்வத் திட்டு
நலமாகப் பழச்சாறு விட்டு ஆட்டி
மூத்துமே வில்லைகட்டிக் கதிரி லிட்டு
முனிவாகக் கலந்த பின்பு மொழியக் கேளே 570

மொழியவே சரவுலையில் வைத்து ஊது
மேன்மைபெறக் குமுறவே வைத்து ஊது
நழியவே பூப்போல பூத்து நிற்கும்
நலமாக எடுத்துமே யப்பா லிட்டுக்
கழியவே முன்னிற்குந் திராவ கத்தில்
கனிவாகச் சேருவொன்று நிறுத்துக் கொண்டு
துழியவே சுண்ணமது பலமும் ஒன்று
துடியாக நிறுத்துப்புகை நீரில் போடே 571

போட்டுமே பார்த்திடவே குமுறி வேகும்
பொலிவாகப் புகைஞ்சுமே கரைந்து போகும்
காட்டுமே மஞ்சளது வெள்ளை யாகும்
கனிவாகச் சுண்ணாம்பு நீறுமாகும்
வாட்டுமே இந்நீரில் புழுகு பூரம்
வடிவாக ஆறுபுள்ளி வண்டு முட்டை
நாட்டுமே வகையொன்று கழஞ்சி இட்டு
நலமாகத் திரிநாள்வை நல்ல தாமே 572

ஆமேதான் வைத்திடவே கொதித்து வேகும்
அடவாக வேகுமே ரொம்பத் தானும்
தாமேதான் இந்நீரின் பேரே தென்னில்
தாட்டிகமாய்ச் சத்தியுட நாத மாகும்
வாமேதான் சிவமென்றும் பரமென்றுந்தான்
வடிவாக இதற்குப்பேர் நாத விந்து
காமேதான் பேராகும் வஸ்து வாமே
கனிவாக வஸ்துவைக் காண லாமே. 573

காணவே இந்நீரை வைத்துக் கேளு
கனிவாகச் சகலசரக் கதனை யிட்டு
நாணவே சரக்கெல்லாம் சுண்ணம் பண்ணி
நலமாகச் செந்தூரம் மெழுகு பண்ணு
வாணவே கைபாகம் அறிந்து செய்தால்
வடிவாகச் சகலசித்தும் நொடிக்குள் ளாகும்
பாணவே சித்தெல்லாம் ஏதா லாச்சு
பதிவாகச் சித்தென்ன வெடியுப் பாலே. 574

உப்பாலே யெல்லாமும் உறுதி யாச்சு
யோகசித்தி (காயசித்தி) யொழுங்கு மாச்சு
அப்பாலே காயசித்தி யநேக மாச்சு
ஆதிபரி ஞானமும் அடுக்க லாச்சு
தப்பாதே வண்ணானைக் கண்டு தேறு
தவித்துமே புண்ணாகி யலைய வேண்டாம்
நப்பாக வேப்பைக் காய்ச்சித் தேறு
நலமாகக் குருவாகும் நடத்தை பாரே. 575

நடத்தைபார் துரிசதுவும் பலமும் பத்து
நலமாகக் கரியோட்டில் வைத்து மெல்ல
படத்தைபார் ஊதிடவே நீறிப் போகும்
பதிவான வெண்ணிறமும் ஆகும் பாரு
குடத்தைபார் அக்கினியாம் முறிந்த நீரில்
குணமாகத் தோய்ச்சுமே பட்சம் போடு
விடத்தைபார் பட்சமது ஆன பின்பு
விதமாக எடுத்துமே அப்பால் கேளே. 576

கேளுமே துரிசதுவும் கதிரி லிட்டுக்
கெடியாகச் சுண்ணாம்பாய்க் கட்டிப்போகும்
வாளுமே மேற்கவசம் சொல்லக் கேளு
வடிவாக வங்கத்தைக் கரண்டி யிட்டு

நாளுமே உருக்கியிடை சூதம் சேர
நலமாகப் புட்டாகும் புட்டி னேரே
நாளுமே வெடியுப்பு இடையே சேர்த்துக்
கனிவாகப் பழச்சாறு விட்டு ஆட்டே 577

ஆட்டியே வில்லைகட்டிக் காயப் போடு
அடவாகக் காய்ந்தபின்பு அறையக் கேளே
நாட்டியே ஓட்டிலிட்டுப் புடத்தைப் போடு
நலமாகத் தீயாற்றி யெடுத்துப் பாரு
கூட்டியே பற்பமா யிருக்கு மப்பா
குணமாகக் கல்வத்தி லிட்டுப் பாணி
சாட்டியே விட்டரைத்துக் கொதியை யிட்டு
நலமாக இறுத்துமே நவிலக் கேளே 578

நவிலவே யண்டமென்ற ஓடு தானும்
நலமாகப் பலம்பத்து நிறுத்துக் கொண்டு
உவிலவே யுவர்மண்ணும் சுண்ணாம் பிட்டு
உறுதியாய்ப் பாணிபடி யெட்டு விட்டு
துவிலவே யண்டோட்டை யதனுள் ளிட்டுத்
துடியாக அடுப்பதனி லேத்தித் தானும்
கவிலவே கொதியிட்டுப் புடமுந் தானும்
கணித்துமே வெய்யலிலே காய வையே 579

காயவைத்துப் பெரியபுடம் போட்டெடுக்கக்
கனிவாக அண்டமது நீறிப் போகும்
வாயவைத்து நீறினதோர் அண்டத் தோடே
வடிவாக எடைசமனாய் வங்க பற்பம்
நாயவைத்துச் சேர்த்திட்டு (க் கல்வத் திட்டு)
நலமாக முன்செய்த புகைநீ ராலே
வாயவைத்து அரைத்துமே கடுமை யாக
வடிவாக ஊதிடவே சுண்ண மாமே 580

சுண்ணமாம் ஊதிடவே வங்கச் சுண்ணம்
சுருதியாய்க் கடுமையாய் இருக்கும் பாரு
வண்மையாய் வங்கமென்ற ராசா தானும்
வடிவாகச் சுண்ணாம்பு வடிவு மெத்த
நண்மையாய் யமனாகும் வங்கச் சுண்ணம்
நாடியே சகலசித்தும் உடனே யாகும்
சுண்மையாம் கோலாகும் வங்கச் சுண்ணம்
கருதியே வங்கத்தின் பெருமை தானே 581

பெருமையாம் வங்கமென்ற சுண்ணந் தானும்
பிசகாமல் பலம்நிறுத்துக் கல்வத் திட்டு
நருமையாம் நாலுக்கு ஒன்று தானும்
நலமாக வீரமிட்டு முன்னீராலே
அருமையாய் அரைத்திடுநீ பின்பு கேளு
அடவாக முன்தோய்த்த துரிசு மேலே
கருமையாய் மேற்கவசம் கட்டு கட்டு
கனிவாகக் காய்ந்தபின்பு கனிவு கேளே 582

கனிவாக மேற்கவசம் கட்டிப் பின்பு
காதலுடன் அஞ்சு சுண்ணம் மேலே கட்டி
நனிவாகக் கதிரிலிட்டுக் காயப் போடு
நாடியே பத்தெருவில் புடத்தைப் போடு
வனிவாகத் தீயாற்றி யெடுத்துப் பாரு
வடிவாக மேற்கவசந் தள்ளிப் பின்பு
பனிவாகப் பார்த்திடவே துருசுச் சுண்ணம்
வகையாகக் கடுமையாம் வடிவ மாமே. 583

ஆமேதான் துரிசதுவும் நீறி னாக்கால்
அண்டபகி ரண்டமெல்லாம் துளைந்து ஆடும்
காமேதான் சரக்கெல்லாம் கட்டிக் கொள்ளும்
கனிவாகச் சகலசுண்ணம் ஆகும் பாரு
வாமேதான் உப்புமுதல் இருபத் தைந்தும்
வடிவாகக் கட்டாகும் மெழுகு மாகும்
சாமேதான் ஒவ்வொன்றில் கோடி வேதை
சாட்சியாய் எல்லாமும் சித்தி யாமே. 584

ஆமேதான் உபரசங்கள் நூற்றி ரண்டும்
அடவாகப் பத்துமே சுண்ணமாகும்
தாமேதான் சுண்ணத்தால் வேதை கோடி
கனிவாகக் கட்டினமும் உருக்கினங்கள்
தாமேதான் கோடானு கோடி யாகும்
தாட்டிகமாய்த் துரிசினுட சுண்ணத் தாலே
நாமேதான் சித்தரவர் குளிகை கட்டி
நலமாகக் கெவுனவழி யோடி னாரே. 585

ஓடினார் அண்டபகி ரண்ட மெல்லாம்
உறுதியாய் வெகுஓட்டம் தேடிப் பின்பு
நாடியே துருவனுட வீட்டி லேகி
நலமாக மலைகளெல்லாம் சஞ்சரித்துக்

(கூடியே பலநலமும் குறிப்பிற் கண்டு)
குணமாக இருந்திட்டார் சித்தர் தாமும்
வாடியே வஸ்துவொடு கண்டு தேறி
வடிவாகப் பார்த்திட்டார் வாசி தானே. 586

வாசியோ கத்தையே மருவிப் பார்த்து
வடிவாக அக்கினியின் நிலைய றிந்து
பாசியே வஸ்துசுத்தி பானம் ஈய
பதிவாகச் சித்தரெல்லாம் பருவங் கண்டு
காசியே கந்தகிரி மலைக ளெல்லாம்
காரணமாய் அலைந்துமே கருதி வாழ்ந்து
நாசியே காயசித்தி பண்ணித் தேறி
நலமாக வந்திடவே நல்ல தாமே 587

நல்லாக வாதசித்தி வேணு மானால்
நலமாகத் துரிசியென்ற சுண்ணம் பண்ணு
கல்லாக நவலோகம் பழுக்கும் வேதை
காரணமாய்க் கண்டறியக் கருணையாகும்
வல்லாகக் கைபாக மாகச் செய்து
வடிவாக இருந்திடவே வண்மை மெத்த
கல்லாகக் (கட்டிடவே) துரிசுச் சுண்ணம்
சரியாக வைத்திடவே சாட்சி யாமே 588

ஆமேதான் துரிசியென்ற சுண்ணந் தன்னை
அடவாகக் கல்வத்தி லிட்டு நீயும்
தாமேதான் வீரமது நாலுக் கொன்று
தப்பாதே தானரைத்து வில்லை கட்டி
பாமேதான் கதிரிலிட்டுக் காயப் போடு
கனிவாக வில்லைமேல் கவசம் போடு
நாமேதான் அஞ்சு சுண்ணம் மேலே கட்டி
நலமாகப் பத்தெருவிற் புடத்தைப் போடே 589

போடவே தீயாறி யெடுத்துப் பாரு
பொலிவாகத் துரிசியது கடுமை யாகும்
நாடவே விராலிஇலைக் குள்ளே யிட்டு
நலமாகக் கசக்கியே பிழிய நீராம்
வாடவே இந்நீரைப் பீங்கா னிட்டு
வடிவாக அரப்பொடியும் பலமு நாலு
கூடவே இந்தநீர் தன்னி லிட்டுக்
குணமாக ஊறவைத்து உருக்கி டாயே 590

உருக்கிடவே குகையிலிட்டு உருக்கிப் போடு
உறுதியாய் வெள்ளிபொன்போல் கண்விட் டாடும்
நெருக்கிடவும் இரும்பதுவும் திரைக ளற்று
நேராக மண்ணெல்லாம் ஓடிப் போகும்
வருக்கிடவே யிரும்பதுவும் வெள்ளி பொன்போல்
வடிவாக ஆகுமது வண்மை யாகும்
கருக்கிடவே சவுடுதிரை யற்றுப் போகும்
கனிவாக எல்லாமும் சித்தி யாமே 591

சித்தியாம் நாகமது கட்டக் கேளு
சிறப்பாக நாகமது சேரு வொன்று
நத்தியே இலுப்பெண்ணெய் தன்னி லேதான்
நலமாகச் சாரமிட்டு உருக்கி நீயும்
பத்தியே இருபத்தி யொன்று தானும்
பதிவாக உருக்கியே சாய்த்த பின்பு
வத்தியே விராலியிலை முறிந்த நீரில்
வடிவாகச் சாய்த்துவரைப் பத்து மாமே 592

பத்தாக உருக்கியே சாய்த்திட் டாக்கால்
பளிச்சென்ற நாகமது வெள்ளி போலாம்
சத்தாக இருக்குமது நாகந் தானும்
சரியாகத் தூரவே வைத்துக் கொண்டு
முத்தாகத் தங்கமது சுத்தி கேளு
முனையாகக் கற்காவி பழச்சாற்றாலே
வத்தாக அரைத்துநீ குழம்ப தாக்கி
வடிவாகத் தங்கத்தைத் தோய்ச்சிடாயே. 593

தோய்ச்சிடவே யேழுதரம் பழுக்கக் காய்ச்சித்
துடியாக ஏழுதரம் துவைத்து நீயும்
பாய்ச்சிடவே பார்த்தாக்கால் எண்ணெய் கக்கிப்
பதிவாக இருக்குமது பண்பு பாரு
நாய்ச்சிடவே இந்தசுத்தி நல்ல சுத்தி
நலமாக எல்லாமும் சொல்லக் கேளு
வாய்ச்சிடவே அயம்நின்று உருகும் போது
வடிவாக நாலுக்கு ஒன்று தானே. 594

ஒன்றுதான் தங்கமிடு உறுதி கேளு
ஓதரிய தங்கமெடை நாகம் போடு
கன்றுதான் களங்காகும் நவலோ கத்தில்
கனிவாக நூற்றுக்கு ஒன்று தாக்க

பன்றுதான் களங்காகும் நவலோ கத்தில்
(பண்பாகத்) திசைமாற்று பாரி லோற்கே
வன்றுதான் உப்புக்குங் காவிக் கப்பா
வடிவாக இறங்குமது வண்மை யாமே. 595

பாகுமே இத்தங்கம் தன்னைத் தானும்
பதிவாக விற்றுமே செலவு செய்து
கூருமே வாசிதனைப் பார்த்து நிற்கக்
குணமாகச் சொல்லிவிட்டேன் குறுக்குப் போக்கு
நாகுமே சிவசொத்தை வறுமை போல
நலமாக வுண்டுமே நாட்டி லோற்குச்
சாருமே சகலநூ லெல்லாம் பாரு
சாரித்துப் பார்த்திடவே சித்தியாமே. 596

ஆமேதான் சித்திக்க வேணு மென்றால்
அடவாகத் துரிசுதனைச் சுண்ணம் பண்ணு
நாமேதான் சாறுவராத் தழைகளி லெல்லாம்
நாட்டியே இட்டுநீ நல்லா கத்தான்
வாமேதான் சாறுவரும் அதையெ டுத்து
வடிவாகச் சகலசரல்க் கெல்லாம் கட்டு
தாமேதான் இரும்பதனி விட்டு ருக்கு
தாட்டிகமாய் உருகியே தன்மை யாமே. 597

தன்மையாம் சிவயோகம் வந்து தானால்
தாட்டிகமாய் வாதசித்தி யுடனே யாகும்
உண்மையாம் வாதமது என்னத் துக்கு
உறுதியாய்ச் சிவயோகம் வருகத் தானும்
கண்மையாய் வாதம் வந்த போதி லேதான்
கனிவாக மனத டக்கிக்கண்டு கொள்ளு
வண்மையாம் மனதுதனை விட்டா யானால்
வடிவாக உடனேதான் மாளு வாரே. 598

மாளாமல் அயக்களங்கும் செந் தூரிக்க
மயமாகச் சொல்லுகிறேன் கைபா கத்தை
நாளாக வைத்துமே உண்டு தேறு
நலமாகச் செந்தூர வரிசை கேளு
பாளாகக் களங்கமது பலமு நாலு
வசிவாகக் கெந்தி ஒன்று சூதம் ஒன்று
தேளாகச் சேர்த்ததனைக் கல்வத் திட்டுத்
திடமாகப் புகைநீரை விட்டு ஆட்டே. 599

ஆட்டியே இருசாமம் சென்ற பின்பு
அடவாக வழித்துமே வில்லை கட்டி
நாட்டியே கதிரதனில் வைத்துப் பின்பு
நலமாக வட்டோட்டுக் குள்ளே யிட்டு
ஊட்டியே பத்தெருவில் அடுக்கிப் போடு
உறவாக எடுத்துப்பார் கருப்பாய் நிற்கும்
மூட்டியே கல்வத்தில் பின்பு இட்டு
முனிவாகப் புகைநீரை விட்டு ஆட்டே. 600

ஆட்டியே முச்சாமம் புகைநீ ராலே
அடவாக அரைத்துமே வில்லை கட்டி
நாட்டியே காயவைத்துப் பின்பு கேளு
நலமாக ஓட்டிவிட்டுச் சீலை செய்து
கூட்டியே புடம்போடு எடுத்துப் பாரு
குருவாகும் நவலோகம் ஆயிரத் தொன்று
மூட்டியே விட்டுருக்க மாற்றுக் கேளு
முனிவாக இருபத்து மூன்று மாற்றே. 601

மாற்றான இருபத்து மூன்று மாற்று
மயமாக இதைக்குறைக்க வித்தை கேளு
காத்தாகச் செம்பிடைதான் வைத்து ருக்கு
கனிவாக மாற்றதுவும் எட்டு மாகும்
நாத்தாக இதைவிற்றுச் சீவ னத்தை
நன்றாகச் செய்துமே பின்பு கேளு
பாத்தாக ஞானவழி யடுத்துக் கூடு
பதிவாகச் சுழிமுனையின் வழியிற் சேரே. 602

சேரவே வழியோடே சுழியிற் சேர்ந்து
சித்திபெற ஆறுதலம் புக்கித் தானே
காரவே அக்கினியைக் கண்டு நீயும்
கனிவாக ஞானத்தின் செயலைக் காண
நாரவே ஞானமென்றால் எளிசோ அல்ல
நாதாந்த சற்குருவின் நாட்டம் பாரு
கூரவே நாட்டமென்ற பொருளைக் கண்டு
குணமாகச் சிவசொத்தை வறுமை போல. 603

வறுமையாய் உண்டுடுத்தி வழியைக் கேளு
வாதாடித் திரியாதே வணக்கம் மெத்த
அறுமையாய் அயச்செம்பை முன்னே வைத்து
அடவாகச் செந்தூரம் பண்ணி யுண்ணக்

கறுமையாய் இத்தேட்டுக் கனக மாகும்
காரணமாய்ப் பொருளீது கண்டு பாரு
தறுமையாத் தாய்யுதத்தைப் பூசித் தேத்து
தாட்டிகமாய் யோகமது தண்மை யாமே. 604

தண்மையாய் அந்திசந்தி பணங்கால் வீதம்
தாட்டிகமாய்த் திரிகடுகில் வைத்து நீயும்
உண்மையாய் மண்டலந்தான் உண்டு தேற
உறவான வாதவலி குன்ம மெல்லாம்
வண்மையாய்ப் போகுமது பித்த குன்மம்
வடிவான வயிற்றிசுவு மாண்டு போகும்
கெண்மையாய்ச் சிலேற்பனங்கள் எல்லாம் போகும்
கெடியான மகோதரங்கள் போகுந் தானே. 605

போகுமே சயகாசம் வயிறு நோதல்
பொல்லாத பவுத்திரமும் போகும் பாரு
ஆகுமே பட்சமாம் வாதத் தோடு
அடவான நெஞ்சுவலி யாண்மை போகும்
தாகுமே நடுக்கலொடு தந்தி மேகம்
தாட்டிகமாய்ப் பிரமேகம் தானே போகும்
ஏகுமே எல்லாமும் சித்தி யாகும்
இருந்தவிடம் பிணிபலவும் ஓடுந்தானே 606

தானேதான் பத்தியமாய் உண்டு தேறு
தடையறவே மேனிதனில் நரைதிரையும் போகும்
வானேதான் கைபாக மாகச் செய்து
வடிவாகக் குடியிருந்து மனையில் வாழு
கோனேதான் குருவருளால் சமாதி புக்கு
குனிவாகச் சமாதியிலே யிருந்து தேறு
ஞானேதான் நவலோகம் சித்தி யாகும்
நலமான யோகமிது நடத்தை பாரே 607

பாரப்பா விராலியிலை முறிந்த நீரில்
பதிவாக இலிங்கமது சேரு வொன்று
காரப்பா கரியோட்டில் ஏத்தி நீயும்
கனிவாகப் பழச்சாறு முலைப்பால் விட்டுக்
கோரப்பா இருசாமம் சுருக்குப் போடு
குணமாகக் கழுவியதை வேறே வைத்து
சாரப்பா கரியோட்டில் ஏத்தி நீயும்
சரியாக விராலியிலைச் சாறு தானே 608

தானாக இருசாமம் சுருக்குப் போடு
சமுசியங்கள் எண்ணாமல் லிங்கந்தன்னை
வானாகக் கட்டுமே மெழுகு மாகும்
வடிவாக நெருப்புக்கு ஓடா பாரு
நானாக இலிங்கமதை யெடுத்து வைத்து
நலமாக வீரமது சேரு வொன்று
கானாகக் கரியோட்டில் மேலே யேற்றி
காரணமாய் நாற்சாமம் சுருக்குப் போடே 609

போடவே விராலியிலைச் சாற்றி னாலே
போக்கோடே யிருசாமம் சுருக்குப் போடு
காடவே வீரமது மெழுகு மாகும்
கனிவாக மெழுகெடுத்துப் புறம்பாய் வைத்து
நாடவே பூரமது சேரு வொன்று
நலமாகக் கரிஓட்டில் ஏத்தி நீயும்
வாடவே விராலியிலை முறிந்த நீரில்
வடிவாக இருசாமம் சுருக்கி டாயே 610

சுருக்கிடவே பூரமது மெழுகு மாகும்
துடியாக மெழுகெடுத்துத் தூர வைத்து
விருக்கிடவே இன்னமொரு மார்க்கங் கேளு
வடிவாகத் தொட்டியது சேரு வாங்கு
முருக்கிடவே சுத்திமுறை சொல்லக் கேளு
முனிவாக மூலைப்பாலும் சுருக்குப் போடு
நடுக்கிடவே யெடுத்துமே விராலி நீரால்
நலமாகச் சுருக்கிடவே நன்மை யாமே 611

ஆமேதான் சுருக்கிட்டுச் சாமம் ஒன்று
அடவாகச் சுருக்கிடவே மெழுகு மாகும்
நாமேதான் மெழுகெடுத்து அப்பால் வைத்து
நனிவாகக் கௌரியது சேரு வொன்று
வாமேதான் வெள்ளாயி தனிலே கேளு
வைத்துநீ சுத்திபண்ணி ஓட்டி விட்டு
சாமேதா னிருசாமம் சுருக்குப் போடு
சரியாக எடுத்திடவே தற்க மாமே 612

தற்கமாம் கரியில் வைத்து உருக்கிப் பாரு
தடையறவே மெழுகாக ஆகும் பாரு
வறீகமாம் தூர அதை வைத்துப் போட்டு
வடிவாகச் செம்பென்ற தொட்டி தானும்

கற்கமாய் எடுத்துமே ஒட்டி விட்டு
கனிவாக விராலியிலைச் சாற்றி னாலே
உற்கமாய் இருசாமம் சுருக்குப் போடு
உறவாகத் தொட்டியது மெழுகு மாமே 613

மெழுகெடுத்து அப்பாலே வைத்துக் கொண்டு
மேன்மைபெறக் குதிரைப்பல் சேரு ஒன்று
அழுகெடுத்துக் கரியோட்டில் மேலே வைத்து
அடவாக இருசாமம் சுருக்குப் போடு
நழுகெடுத்து எல்லாமும் எடுத்து வைத்து
நலமாகத் தங்கத்தைக் குகை யிலிட்டு
வழுகெடுத்துப் பலம்நாலு உருகும் போது
வடிவாக வீரமது மெழுகுபோ டே 614

போடவே வீரமது மெழுகு போட்டுப்
போதாவாய்ச் கட்டினதோர் லிங்கம் போடு
ஆடவே லிங்கமெடை தொட்டி போடு
அடவாகத் தொட்டியெடை வெள்ளை போடு
நாடவே வெள்ளையெடை கௌரி போடு
நலமாகக் கௌரியெடை தாரம் போடு
கூடவே களங்காகும் களங்கெடுத்து
குணமாக நவலோகம் சொல்லக் கேளே 615

சொல்லவே ஆயிரத்துக் கொன்று போடு
சுருக்காகக் குகையிலிட்டு உருக்கித் தானே
மெல்லவே பார்த்து எடு களங்க மாகும்
மேன்மையாய்ப் பார்த்திடவே தங்க நிறமாகும்
வல்லவே மாற்றதுவும் சொல்லக் கேளு
வடிவாகப் பத்தரைதான் ஆணிக் கொக்கும்
நல்லவே யிகைவிற்று உண்டு டுத்தி
நலமாகச் சிவஞானம் மருவி டாயே 616

பாடாணக் களங்குச் செந்தூரம்

மருவிடவே பாஷாணக் களங்கு தன்னை
மயமாகப் பலம்நாலு கல்வத் திட்டு
நருக்கிடவே எலுமிச்சம்பழச் சார் நேரே
நலமாகப்புகை நீரு இடையே யிட்டு
பருக்கிடவே கலக்கியே விட்டு ஆட்டி
பதிவாக இருசாமம் கனிய ஆட்டிக்
கருக்கிடவே வில்லைகட்டிக் கதிரி லிட்டுக்
கனிவாகக் காய்ந்தபின்பு கணக்குக் கேளே 617

கணக்காக வட்டோடு குணமாய்த் தட்டிக்
கனிவாக அதற்குள்ளே வில்லை வைத்து
வணக்காக மூடியே சீலை செய்து
வடிவாகப்பத் தெருவிற் புடத்தைப் போடு
தணக்காகத் தீயாற்றி யெடுத்துப் பாரு
தாட்டிகமாய்ச் செந்தூரம் முருக்கம் பூவாம்
தணக்காக நவலோகம் மூந்நூற் றொன்று
துடியாக இட்டுருக்கு தொன்மை தானே 618

தானென்ற நூல்தனிலே நாதாக்கள் சொன்ன
தாட்டிகமாய் எல்லாமும் மறைத்துப் போட்டார்
கானென்ற பிடிவாதந் தன்னி லேதான்
பாஷாணச் செந்தூரம் (பதிவு) சொன்னேன
வானென்ற அந்திசந்தி பணங்கால் வீதம்
வடிவாக உண்டுவர வடிவு மாகும்
தேனென்ற நவலோகம் மூந்நூற் றொன்று
திடமாகக் கொடுத்துருக்க மாற்றுக் கேளே 619

மாற்றான பத்துத்தான் மாற்று மாகும்
மயங்காதே காவிக்கு நிலைத்து நிற்கும்
மூற்றாகும் இதைவிற்றுச் சீவ னத்தை
முனிவாகச் செய்திட்டுச் சீவ னத்தைப்
பாற்றாகும் பண்ணியே பின்பு கேளு
பதிவாக ஞானவழி யடுத்துக் கேளு
நாற்றாகும் நாடியே பொருளைப் பாரு
நல்மாக யோகமது நடத்தை தானே 620

தானென்ற பத்தியந்தான் சொல்லக் கேளு
தாட்டி கமாய் உப்போடு புளியுந் தள்ளு
வானென்ற கசப்போடு எல்லாந் தள்ளு
வடிவாக உண்டுமே வடிவு கேளே
கானென்ற மன்மதன்போல் வடிவு மாகும்
கனிவாக வடிவாலே யெல்லாம் சித்தி
மானென்ற சித்திமிகக் கண்ட பேர்கள்
பதிவாகச் சிறுபிள்ளை யாவார் பாரே 621

ஆகுமே சிறுபிள்ளை யாக வென்றால்
அடவாகச் செந்தூரம் பண்ணி யுண்டு
வாகுமே நரைதிரைகள் அற்றுப் போகும்
வடிவான சிலேற்பனநீர் வாங்கும் பாரு

தாகுமே காயமது இறுகும் விம்மும்
தாட்டிகமாய் ஐம்புலனை யறுத்துப் போடு
பாகுமே பொருளாசை வைக்க வேண்டாம்
பதிவாக நரம்புபச்சை யாகுந் தானே 622

தானென்ற காயசித்திக் கிதுவே யாதி
தாட்டிகமாய்ப் பாஷாண கார சாரம்
வானென்ற உப்புவகை இருபத் தைந்தும்
வடிவாகக் கட்டினமும் உருக்கினமு மாகும்
நானென்ற ஆணவத்தை முன்னே தள்ளி
நலமாக வாதத்தைப் பின்னே பாரு
கானென்ற அட்டமா சித்தி யெல்லாம்
கனிவாக ஆகுமது கருணை யாமே 623

ஆமேதான் உலகத்தில் வாதம் பொய்யோ
அடுத்துமே ஞானமது பொய்யோ அல்ல
வாமேதான் யோகசித்தி காய சித்தி
கனிவாகப் பொய்யென்று சொன்ன வாதி
நாமேதான் நரகமென்ற பாதா ளத்தில்
நாடியே விழுந்திடுவார் நாடிக் கேளு
காமேதான் வங்கிசங்க ளெல்லாம் பாழாம்
சரியாகச் சொல்லிவிட்டேன் பார்த்துத் தேரே 624

564-624 – அக்கினித் திராவகம்

வெடியுப்பு அஞ்சாம் காய்ச்சல் 10 பலம். சீனம் 25 பலம். இரண்டையும் இடித்துக் கலயத்திலிட்டு வாலைச் சட்டி மூடி சீ.ம.செ.கா. எரித்து வெள்ளை நீர் நீக்கி மஞ்சள் நீரைப் பிடித்து வை. பின்பு சீனம் 25 பலம் வெடியுப்புப் பத்துப் பலமும் முன்போல் வாலையிலிட்டு வெள்ளை நீர் நீக்கிப் புகைநீர் மஞ்சளாக வரும் பருவத்தில் முன்பு எடுத்த நீரை விட்டுப் புகை நீரை இறக்கு இங்ஙனம் ஐந்துமுறை புகைநீர் விட்டுக் காய்ச்சி எடு. முருக்கம் பூப்போல் சிவப்பாக இருக்கும். இதனை முறிக்க வழி கேள். ஏரல் 10 பலம். சங்கு 10 பலம். முட்டைத் தோடு 10 பலம். பத்துப்படி நீரில் உவர்மண்ணும் சுண்ணமுமிட்டு அதற்குள் அந்த முப்பது பலமுமிட்டுக் கொதிக்க வைத்து எடுத்துக் கழுவிக் கல்வத்திலிட்டுப் பழச்சாறு விட்டு அரைத்து வி.த.கா. சரவுலையிலிட்டு ஊது. பூப்போல பூத்து நிற்கும். எடுத்து முன்கூறிய திராவகத்தில் ஒருசேர் எடுத்து அதனுள் ஒரு பலச் சுண்ணமிடு. குமுறி வெந்து கரையும் மஞ்சள் நீர் முறிந்து வெள்ளை நீராகும். இதனுள் புனுகு பூரம் ஆறுபுள்ளி வண்டின் முட்டை வகைக்குக் கழஞ்சு இட்டு மூன்று நாள் வை. கொதித்து வேகும்

இதற்குச் சத்திநாதம் என்பது பெயர். சிவமென்றும் பரமென்றும் நாதவிந்து என்றும் வஸ்து என்றும் பெயர் உண்டு. இந்நீரால் எல்லாப் பொருள்களையுஞ் சுண்ணம் செய். மெழுகும் செந்தூரமும் உண்டாக்கு. எல்லாம் வாய்க்கும்.

பத்துப் பலம் துரிசினைக் கரியோட்டில் வைத்து ஊதி வெள்ளையாக்கி முற்கூறிய முறிந்த அக்கினித் திராவகத்தில் ஒழுங்காகத் தோய்த்துப் பதினைந்து நாள் போடு. பின்பு எடுத்துக் கதிரிலிட்டுக் காய வை. சுண்ணாம்பாய்க் கட்டிப் போகும். அதற்கு மேற்கவசம் கேள். கரண்டியில் வங்கமிட்டுருக்கி இரசம் சேர்த்துப் பிட்டாக்கியதனுடன் வெடியுப்புச் சேர்த்துப் பழச்சாறு விட்டரைத்து வி.த.கா. சீ.ம.செ. புடமிடு. பற்பமாக இருக்கும். கல்வத்திலிட்டுத் தண்ணீர் விட்டரைத்துக் கொதிக்க வைத்துத் தெளிவிறுத்து எடுத்து முன்பு கூறிய முறைப்படி செய்த அண்டச் சுண்ணத்துடன் சேர்த்து முன் செய்த புகைநீரால் அரைத்துக் கடுமையாக ஊதச் சுண்ணமாகும். வங்கமென்ற ராசாதானும் வடிவாகச் சுண்ணாம்பாம். இது கூற்றுவனையொக்கும் எல்லா வயமும் ஆகும். இந்த வங்கச் சுண்ணம் ஒருபலம் எடுத்து நாலுக்கு ஒன்று வீரமிட்டு முன்னீரால் அரைத்து முன் தோய்த்த துரிசின் மேல் கவசம் கட்டிக் காய்ந்த பின்பு அஞ்சுசுண்ணம் மேலே கட்டிக் காயப் போட்டுப் பத்தெருவில் புடமிடத் துரிசு கடுஞ்சுண்ணமாகும். சரக்கெல்லாம் கட்டும். சுண்ணமாகும். உப்பு முதல் இருபத்தைந்தும் கட்டாகும். மெழுகாகும் ஒவ்வொன்றில் கோடி வேதை. உப ரசங்கள் நூற்றிருபதும் சுண்ணமாகும் சுண்ணத்தால் வேதை கோடி. கட்டினமும் உருக்கினமும் கோடானுகோடி துரிசுச் சுண்ணத்தால் சித்தர்கள் குளிகை கட்டிக் கெவுன வழியோடினார்கள் அண்ட பகிரெண்டமெல்லாம் வெகு ஓட்டம் ஓடித் துருவனுட வீட்டிலேகி மலைகளிலெல்லாம் இயங்கி இருந்தனர். வளிநிலை பொருந்தி நெருப்பின் நிலையறிந்து வஸ்து சுத்தி பானம் ஈயப்பருவங் கண்டு கந்தகிரி மலைகளெல்லாம் கண்டு அலைந்து காயசித்தி பண்ணித் தேறினார்கள்.

வாத சித்தி வேண்டின் துரிசுச் சுண்ணம் செய். ஒன்பதும் பழுக்கும்.

துரிசுச் சுண்ணத்துடன் நாலுக்கு ஒன்று வீரமிட்டு அரைத்து வி.த.கா. அஞ்சு சுண்ணம் மேலே கவசங்கட்டி 10 எருப்புடமிடு. துரிசு கடுமையாகும். விராலி இலைக்குள்ளிட்டுக் கசக்கிப் பிழிந்த நீரினுள் அரப்பொடி நாலு பலம் இட்டு ஊற வைத்து உருக்கு. வெள்ளி பொன் போல் கண் விட்டாடும். சவுடு திரையற்றுப் போகும்.

சாரமிட்ட இலுப்பெண்ணெய்யில் 21 முறை உருக்கிச் சாய்ந்த நாகத்தை விராலி இலை நீரில் பத்துமுறை உருக்கிச் சாய்க்க வெள்ளிபோல் நாகம் சத்தாக இருக்கும்.

கற்காவிப் பழச்சாற்றுக் குழம்பில் தங்கத்தை ஏழுமுறை பழுக்கக் காய்ச்சித் துவைக்க நயமாகும்

அயம் உருகும்போது நாலுக்கு ஒன்று தங்கமிடு. தங்கத்தினெடை நாகம் போடு. களங்காகும். ஒன்பதிலும் நூற்றுக்கு ஒன்று சேர். களங்காகும். பின்னர் ஒன்பதிலும் கொடுக்கப் பத்து மாற்று. உப்புக்குங் காவிக்கும் ஒழுங்காகத் தங்கம் இறங்கும். இது குறுக்குப் போக்கு. விற்றுச் சிவசொத்தை வறுமை போல் உண்டு எல்லா நூலும் பார். துரிசுச் சுண்ணத்தைச் சாறு வராத தழைகளிலெல்லாம் இட்டுச் சாறெடுத்து இரும்பிலிட்டு உருக்கு உருகும்.

இனி அயக்களங்கினைச செந்தூரிக்க வழி கேள். களங்கு நாலு பலம். கெந்தியும் சூதமும் வகைக்கு ஒரு பலம். சேர்த்துப் புகைநீர் விட்டரைத்து இருசாமம் சென்றபின் வி. த. கா. சீ ம. செ. 10 எரு அடுக்கிப் புடமிடு. கருப்பாக இருக்கும் கல்வத்தில் இட்டுப் புகை நீர் விட்டரைத்து மூன்று சாமம் அரைத்து வி. த. கா. சீ ம செ. புடமிடு. குருவாகும். ஒன்பது வகைப் பொன்னிலும் ஆயிரத்துக்கு ஒன்று சேர்த்து உருக்க இருபத்து மூன்று மாற்றாகும். எடைக்கெடை செம்பு சேர்த்துருக்கு எட்டு மாற்றாகும் விற்றுச் செலவு செய்து உண்டுடுத்தி நாட்டமென்ற பொருளைக் கண்டு வாழ்.

அயச் செம்பை முதலில் செய்து செந்தூரம் பண்ணியுண். தாயின் திருவடியைப் பூசித்து ஏத்து.

காலை மாலை காற்பண அளவு திரிகடுகில் வைத்து நாற்பது நாள் உண்டு தேறு. வாதவலி குன்மம் பித்த குன்மம் வயிற்றிசிவு சிலேற்பணவகை மகோதர வகை சயகாசம் வயிற்று நோவு பவுத்திரம் பக்கவாதம் நெஞ்சு வலி நடுக்கல் தந்திமேகம் பிரமேகம் நீங்கும். நரை திரை போம். குடியிருந்து மனையில் வாழ் குருவருளால் சமாதியிலே இருந்து தேறு.

பழச்சாறும் முலைப்பாலும் கலந்து இருசாமம் சுருக்கிட்ட இலிங்கக் கட்டியைக் கரியோட்டில் வைத்து விராலி இலைச்சாறு இருசாமம் சுருக்கிடு கட்டாகும், மெழுகாகும் நெருப்புக்கு ஓடாது. இதுபோல் தொட்டிப்பாடாணத்தைத் தூயதாக்கிச் சுருக்கிட்டு மெழுகாக்கு. வீரம் பூரம் இரண்டினையும் தனித்தனியே விராலி நீர்ச் சுருக்கிட்டு மெழுகாக்கு. பின்னர் கௌரியை வெள்ளாவியில் வைத்துத் தூயதாக்கி விராலி நீர்ச் சுருக்கிட்டு மெழுகாக்கு. பின்னர் செப்புத் தொட்டிப் பாடாணத்தையும் சுருக்கிட்டு மெழுகாக்கு. பின்னர் குதிரைப் பற்பாடாணத்துக்குச் சுருக்கிட்டு மெழுகாக்கு (தாரமும் இங்ஙனம் ஆக்குக. பின்னர் தாரம் கூறுவதனால் முன்னர் விடுபட்டது என்க)

நாலுபலம் தங்கத்தைக் குகையிலிட்டு உருக்கி வீரமெழுகு போடு கட்டின இலிங்கம் போடு. அதனெடை தொட்டி வெள்ளை கௌரி தாரம் தனித் தனி நிறுத்துப் போடு களங்காகும். ஒன்பதிலும் ஆயிரத்துக்கு ஒன்று போடு களங்காகும். குகையிலிட்டு உருக்கு. தங்க நிறம். பத்தரைதான் ஆணிக்கு ஒக்கும்.

பாடாணக் களங்குச் செந்தூரம்

மேற்கூறிய பாடாணக் களங்கில் நாலுபலம் நிறுத்தெடுத்துக் கல்வத்தில் இட்டுப் புகைநீரும் பழச்சாறும் கலந்து ஊற்றி அரைத்து வி. த. கா. சீ. ம. செ. 10 எருப்புடமிடு. முருக்கம் பூப் போலாம். ஒன்பதிலும் முந்நூற்றுக்கு ஒன்று கொடு. பத்து மாற்று. நாதாக்கள் மறைத்தனர். இந்நூலில் பாடாணச் செந்தூரம் சொன்னேன்.

காலை மாலை காற்பண அளவு உண்டு வர வடிவாகும். மெய்ப் பொருளை நோக்கு. பத்தியம் கேள். உப்பு புளி கசப்பு நீக்கு. மன்மதன் போல் வடிவுமாகும். சிறுபிள்ளை போலாவார். நரை திரையற்று போகும். சிலேற்பண நீர் வாங்கும். காயம் இறுகும். விம்மும் நரம்பு பச்சையாகும். ஐம்புலனை அறுத்துத் தள்ளு.

பாடாண கார சாரமும் உப்புவகை இருபந்தைந்தும் கட்டினமும் உருக்கினமும் ஆகும். எண்வகைச் செல்வமும் (அட்டமா சித்தியும்) உண்டாகும். வாதமும் ஞானமும் பொய்யென்று கூறின் நரகமென்ற பாதாளத்தில் வீழ்ந்திடுவர் வங்கிசங்கள் பாழாகும். பார்த்துத் தேர்.

வங்கச் செய நீர்

தேறவே வெள்ளியச் செயநீர் கேளு
　　செம்மையுடன் நாகமது கட்டிப் போகும்
வாறவே இதுலகுவு முன்னே பாரு
　　வடிவான யோகசித்தி காய சித்தி
கூறவே ஆகுமது கொள்கை பாரு
　　குணமாக எல்லாமும் சுண்ண மாகும்
தூறவே கிணறுதனில் தூறெடுத்தால்
　　துடியாகச் சலமாகும் சூட்சம் பாரே　625

பாருமே வெள்ளியம் பலமும் நாலு
　　பதிவாகக் கரண்டிதனி லிட்டுக் கேளு
நாருமே யுருக்கியே சூதந் தானும்
　　நழுவாமல் இடையாகத் தொந்திச் சேறு
காருமே தொந்திக்கப் புட்டு மாகும்
　　கனிவாகக் கல்வத்தி லிட்டு டைத்துக்
கூருமே வீரமது இடையே சேரு
　　குணமாக நாற்சாமம் அரைத்தி டாயே　626

அரைத்திடவே பலபலெனச் செயநீ ராகும்
அட்வாகச் செயநீர்தான் நிறத்தைக் கேளு
வரைத்திடவே சிவந்தசல மாயி ருக்கும்
வாதாடு மிச்சலமும் கார மாகும்
நரைத்திடவே காலனொக்கும் செயநீர் தானும்
நலமாக இந்நீரில் எல்லாம் மாளும்
பரைத்திடவே செம்பதுவும் நீறிப் போகும்
பதிவோடு உப்போடு எல்லாந் தானே 627

தானென்ற தங்கமது நீறிப் போகும்
தாக்கான உபரசங்க ளெல்லாம் நீறும்
வானென்ற இக்குருவால் அநேகம் கோடி
வடிவாக வாதமாய் வண்மை பாரு
தானென்ற கைபாகத் தாலே லோகம்
கனிவாகச் சித்திதரும் கண்டு பாரே
பானென்ற பரப்பிரமம் தெளிவு மாகும்
பதியான விதியறியப் பாரிலோர்க்கே. 628

பாரிலே வெள்ளீயம் செயநீ ரானால்
பதிவாகத் துரிசதுவும் உடனே நீறும்
காரிலே வெடியுப்புக் கம்பி யாகக்
(கணக்காக) நீறிவிடும் கருத்துப் பாரு
வாரியே வெடியாலே சகல சித்தும்
வகையாக எட்டெட்டும் சித்தி யாகும்
கூறியே சொல்லிவிட்டேன் குணத்தைப் பாரு
கூடியே வாழ்ந்தாலே சித்த னாமே. 629

சித்தனாய்த் திரிந்தலைந்து பிச்சை தன்னைச்
செம்மையாய் எடுத்துமே யுண்டு பார்த்துப்
பத்தனாய்த் திரிந்தாலோ என்ன லாபம்
பதிவாகச் செயநீரால் கோடி வித்தை
முத்தனாய் வாசியோ கத்தைப் பார்த்து
முனையழிந்து போகாமல் வாதம் பாரு
சுத்தனாய் வாதமது வந்து தானால்
சூட்சாதி சூட்சமது தொடர்ந்து பாரு. 630

துரிசு நீறு

பாருமே துரிசதுவும் நீறு கேளு
பண்பாகத் துரிசதுவை உண்டை யாக
நாருமே சீவிநீ பின்பு கேளு
நலமாகக் கரிதனிலே வைத்து ஊதக்

காருமே வெண்ணிறமாய் இருக்கும் பாரு
கனிவாக வெள்ளீயச் செயநீர் தன்னில்
வாருமே துவைத்துஎட்டு நாளுந் தானும்
வடிவாகத் கதிர்தனிலே போட்டி டாயே. 631

போட்டுமே செயநீரு உண்ணப் போகப்
(போக்கோடே) போட்டுமே பின்பு கேளு
நாட்டுமே நல்லாக வுண்டு தானால்
நலமாகத் துரிசதுவும் சிவந்து நிற்கும்
மூட்டுமே யதன்மேலே கவசம் கேளு
முனிவாக அண்டமது சேரு வொன்று
காட்டுமே சுத்திமுறை சொல்லக் கேளு
கனிவாக வுவர்மண்ணும் படியு நாலே. 632

நாலாகச் சுண்ணாம்பு படியு நாலு
நலமாக ரெண்டுமொன்றாய்ப் பாணி யிட்டுக்
காலாகக் கொதியிட்டு இறுத்துக் கொண்டு
கனிவாக அண்டமென்ற ஓடு தன்னை
வாலாக அதிலேதா னிட்டுப் பாரு
சிவசிவா அண்டஎண்ணெய் கக்கும் பாரே. 633

கக்கியே அண்டமது சுத்தி யாகும்
கனிவாக அண்டமெல்லாம் வழித்துக் கல்வம்
தக்கியே யிட்டுநீ பழச்சாறு விட்டு
தாட்டிகமாய் இருசாமம் அரைத்து வில்லை
துக்கியே கட்டிகதிர் காய வைத்துத்
துடியாகக் கரியிலிட்டு ஊதிப் போட
மிக்கவே கடும்சுண்ணம் அண்டச் சுண்ணம்
விதமாகக் கல்வத்திலிட்டுக் கேளே. 634

இட்டுமே வீரமது நாலத் தொன்று
இதமாக வீரமிட்டு அரைநேர் சாமம்
கட்டுமே முன்துரிசு மேலே தானும்
கனிவாகக் கட்டியே கதிரி விட்டு
நட்டுமே அஞ்சுசுண்ணம் மேலே கட்டி
நலமாகக் காயவைத்துப் புடமும் போடு
முட்டியே தீயாற்றி யெடுத்துப் பாரு
மூதண்ட மேற்கவசம் பிரித்துப் பாரே. 635

பாருமே துரிசதுவும் கடுமை யாகப்
பதிவாக நீறிவிடும் கடுமை யாக
நாருமே இத்துரிசு காலனொக்கும்
நலமாக இதனாலே வாதம் கோடி
காருமே யுடலறிந்து காத்துக் கொள்ளு
கனிவாக எல்லாமும் சித்தி யாகும்
வேருமே யடுத்தடுத்து நுனிமட் டுக்கும்
வெற்றிபெற ஏறியே இருக்கலாமே. 636

இருக்கவே தங்கமது தகடு வாங்கி
இதமாகத் தகடதுவை யோட்டி லிட்டுப்
பெருக்கவே யூதியே தங்கந் தன்னைப்
பேசாமல் ஏழுதரம் காய்ச்சிக் கொண்டு
நருக்கவே வெள்ளீயச் செயநீர் தோய்ச்சு
நலமாக எடுத்துப்பார் வெள்ளை யாகும்
சுருக்குமே யதுதானும் வெட்டை யாகும்
அடவாக அதன்மேலே பூசக் கேளே. 637

பூசவே யண்டமென்ற சுண்ணந் தன்னைப்
பிசகாமல் பூசியே கதிரி லிட்டு
வாசவே காய்ந்தபின்பு புடத்தைப் போடு
நலமாக ஆறியபின் சொல்லக் கேளு
பாசவே தங்கமது கடுமை யாகப்
பதிவாக நீறியது சுண்ண மாகும்
நாசவே தங்கமது நீறினாக் கால்
நலமாகக் காயசித்தி சணத்தி லாமே 638

சணத்திலே நவலோகம் நூற்றுக் கொன்று
சிறப்பாக இட்டிடவே மாற்றுக் கேளு
வணத்தியே பத்தாகும் வன்மை யாகும்
வடிவான இதைவிற்று உண்டு டுத்துக்
கணத்திலே ஞானயோ கத்தைப் பாரு
கனிவாகக் காயசித்தி பண்ணித் தீரு
உணத்தியே சகலமுந்தான் சித்தி யாகும்
உறுதியாம் வாதமது வண்மை யாமே 639

ஆமேதான் செம்பதுவைத் தகடு தட்டி
அடவாகக் கரியோட்டில் பழுக்கக் காய்ச்சி
நாமேதான் வெள்ளீயச் செயநீர் தன்னில்
நன்றாகத் தோய்த் திடவே வெள்ளையாகும்

பாமேதான் மடக்கினால் ஒடிந்து போகும்
பதிவாக அண்டமென்ற சுண்ணந் தன்னைச்
சாமேதான் கட்டியே கதிரிற் போடு
சரியாகக் காய்ந்தபின்பு சொல்லக் கேளு 640

சொல்லவே பத்தெருவில் புடத்தைப் போடு
சோதிமய மாகவே சொல்ல வேதான்
நல்லவே தாம்பூரம் சுண்ண மாகும்
நலமாகத் தாம்பூரம் சுண்ணமானால்
வெல்லவே நவலோகம் நூற்றுக் கொன்று
விதமாக இட்டுருக்கு மேன்மை யாகும்
அல்லவே தங்கமது சிவந்து நிற்கும்
கனிவாகச் சிவசொத்தைக் கண்டு பாரே 641

கண்டுபார் இதைவிற்றுச் சீவனத்தைக்
கனிவாகச் செய்துமே பின்பு கேளு
பண்டுமே காயசித்தி பண்ணக் கேளு
பதிவாகத் தாம்பூரச் சுண்ணந் தன்னை
முண்டுமே பணமெடுத்து நிறுத்து நல்லாய்
முனையான வாழையென்ற கனியிலிட்டால்
உண்டுமே பழமதுவும் காயே யாகும்
உறுதியாம் இதை யுண்ணு உறுதியாமே 642

உறுதியாம் உண்டிடவே மேனி தானும்
உற்றுமே நரைதிரைகள் அற்றுப் போகும்
வறுதியாம் காயமது கற்றூ ணாகும்
வடிவாகப் பசுநரம்பு பசந்து காணும்
நறுதியாம் மேனியது கத்தூரி வீசும்
நலமாக வாதமது எளிசி லாகும்
குறுதிசேர் இரத்தமது மெத்த விம்மும்
குணமாக லோகசித்து குணமு மாமே 643

ஆமேதான் மூதுரையிற் செம்புச் சுண்ணம்
அடவாகச் சொல்லிவிட்டேன் கைபாகத்தை
நாமேதான் பிடிவாதந் தன்னிலே தான்
நலமாக வெகுசுளிவு நம்பிப் பாரு
சாமேதான் சுருக்கத்தைக் கண்டு பாரு
நலமாக வெகுசுளிவு நாட்டங் கேளு
வாமேதான் நாட்டத்தைக் கண்டபேர்கள்
நாடியே பாகமதை நாடிப் பார்த்தே 644

போத்தவே காரீயம் தகடு தட்டிப்
பொலிவாக வெள்ளீயச் செயநீர்க் குள்ளே
காத்தவே யேழுதரம் உருக்கிச் சாய்க்கக்
கனிவாகக் காரீயம் வெட்டை யாகும்
காத்தவே காரீய வெட்டை தன்னை
நலமான செம்புருக்கி நூற்றுக் கொன்று
வாத்தவே கொடுத்துருக்கி யூதிப் போடு
வடிவாகச் செம்பதுவும் தங்க மாமே 645

ஆமேதான் தங்கமது பசுமை யாகும்
அடவாக இத்தங்கம் புடமி றங்கும்
சாமேதான் புடமிறங்குந் தங்கந் தன்னைத்
தாட்டிகமாய் விற்றுநீ தன்மை பாரு
சாமேதான் உண்டுடுத்தி ஞானம் பாரே
கனிவாக எல்லாமுங் கண்டு போற்று
தாமேதான் போற்றிடவே சகல சித்தி
தாட்டிகமாய் ஆகுமது தன்மை யாமே 646

ஆமேதான் இரும்பதனைத் தகடு தட்டி
அடவாகக் கரியோட்டில் பழுக்கக் காய்ச்சி
நாமேதான் வெள்ளீய நீரில் தோய்க்க
நலமாக இரும்பதுவும் சவுடு அற்று
காமேதான் வெள்ளிபோல் இலங்கும் பாரு
கனிவாகக் காரமிட்டு உருக்கி னாக்கால்
சாமேதான் தங்கம்போல் ஆடும் பாரு
வடிவாகச் செம்புதான் நூற்றுக் கொன்றே 647

ஒன்றாக இட்டுருக்கு மாற்றுக் கேளு
உறுதியாய் (மாற்றதுவும்) எட்டே காலாம்
நன்றாக உப்புக்குங் காவிக் கேகா
நலமாக இதைவிற்றுச் செலவு செய்து
வன்றாக உண்டுடுத்திப் பின்பு கேளு
வடிவாக ஞானவழி யடுத்துக்கூடு
பன்றாக வாசியோகத்தைப் பாரு
பதிவாக எல்லாமும் சித்தி யாமே 648

சித்தியாம் நாகமது பலமும் எட்டு
சிறப்பாக இலுப்பெண்ணெய் தன்னி லேதான்
நத்தியே உருக்கியே தரமும் பத்து
நலமாகச் சாய்த்திடவே நாகந் தானும்

பத்தியாய் எண்ணெய் கக்கும் நாகந்தானும்
பதிவாக நாகமதைக் கரண்டி யிட்டு
வத்தியே சாரமிட்டு உருக்கிச் சாய்க்க
வடிவாக வெள்ளியச் செயநீர் தானே 649

தானென்ற வெள்ளியச் செயநீ ராலே
தாட்டிகமாய் நாகமது கட்டிப் போகும்
வானென்ற இதையெடுத்துச் செம்பு நூறில்
வடிவாக ஒன்றிடவே மாற்றுக் கேளு
நானென்ற எட்டாகுந் தங்கந் தன்னை
நலமாக உப்புக்குங் காவிக் கேகா
பானென்ற இதைவிற்றுச் செலவு செய்து
பதிவாக உண்டுடுத்தி வண்மை பாரே 650

வண்மையாம் செம்புதான் பழுத்துப் போகும்
வடிவாக இதையெடுத்து வாது கேளே
வண்மையாம் சிவசொத்து வறுமை போல
உறுதியாய்ச் சுழிமுனையி லுறுதி காணத்
தண்மையாய் ஆதியொடு அந்நம் பாரு
(தரமான) வாதியாய் வந்து கூரக்
கண்மையாய்க் கனிந்துமே உலக மானால்
கனிவாக எல்லாமுங் கண்டு பாரே 651

கண்டுபார் காலோடு கனிந்து பாரு
கனிவாக எப்பொருட்கும் இறைவன் ஆன
முண்டுமே அவனைத்தான் துதித்துப் போற்று
முனிவாகச் சிவனவனாம் சொரூப மாகும்
வண்டுமே பொருளறிய வணக்கம் பாரு
வடிவாக உறுதியவர் வணக்கம் பாரு
பண்டுமே பரிகார மாகக் காணும்
பதிவாக எல்லாமும் பரிந்து கேளே 652

பரிந்துமே வெள்ளியச் செயநீர் தன்னில்
பதிவாக இறுத்துமே சேரு ரெண்டு
கரிந்துமே வெடியுப்புப் பலமும் பத்து
கனிவாகச் சீனமது இருபத் தைந்து
நரிந்துமே பொடியாக்கிக் கலையத் திட்டு
நலமாக வாலையென்ற சட்டி மூடி
வரிந்துமே மண்சீலை செய்து பின்பு
வடிவாகத் தீயெரிக்கச் சித்தி யாமே 653

ஆமேதான் முன்னீரு வெள்ளை நீராம்
அடவாக வெள்ளைநீர் தள்ளிப் போடு
காமேதான் மஞ்சள்நீர் வருகும் பாரு
கனிவாக மஞ்சள்நீர் தன்னைத் தானும்
வாமேதான் பிடித்துமே சேரு வொன்று
வடிவாக வெள்ளீயச் செயநீ ரோடே
தாமேதான் எடைசமனாய்ச் சேர்த்துக் கொண்டு
தாட்டிகமாய் விட்டுமே வைத்தி டாயே 654

வைத்திடவே காரமுள்ள நீரு மாகும்
வடிவாக இந்நீரில் வேதை கோடி
நாத்திடவே களங்கவகை கோடா கோடி
நலமாகச் செந்தூரம் கோடா கோடி
வைத்திடவே வேதைவகை கோடா கோடி
பதிவாகக் கைபாகம் பரிந்து கொள்ளு
நைத்திடவே மௌனமாய் இருந்து கொள்ளு
நலமாக வாதசித்தி ஆண்மை கேளே 655

ஆண்மையாய் லிங்கமது பலமும் ஒன்று
அடவாகச் சுத்திசெய்து ஓட்டி லிட்டுக்
காண்மையாய் வெள்ளீயச் செயநீர் தன்னை
வடிவாக இலிங்கத்தின் மேலே தானும்
வாண்மையாய்த் தோய்ச்சுமே கற்பூரத்தில்
வடிவாக வாட்டிடவே கடிகை யொன்று
பாண்மையாய் வாட்டிடவே லிங்கந் தானும்
பதிவாக மெழுகாகும் பண்பு மாமே. 656

ஆமேதான் நவலோகம் நூற்றுக் கொன்று
அடவாக இட்டுருக்கு ஆண்மை கேளு
நாமேதான் திசைமாற்று ஆகும் பாரு
நலமாக யோகசித்தி நடப்பு மாகும்
சாமே தான் இதைவிற்றுச் செலவு செய்து
சரியாக வுண்டுமே பின்பு கேளு
தாமேதான் சுழிமு னையில் நாட்டம் பாரு
தாட்டிகமாய் எல்லாமும் தண்மை யாமே. 657

தண்மையாம் சித்திக்க வேண்டுமென்றால்
தாட்டிகமாய் வாதசித்தி பண்ணித் தேறு
உண்மையாய் வாதமென்னல் எளிசோ அல்ல
உறுதியாய் வாதமும் வைத்திய சித்தி

வண்மையாய் ஆகுமது வடிவு சொன்னேன்
வடிவான செயலைத்தான் கண்டு சோதி
பண்மையாய்ச் சோதிக்க வேணு மென்றால்
பதிவாகக் எல்லாமும் பண்பு மாமே 658

பண்பாக வீரமது பலமு மொன்று
பதிவாகச் கரியோட்டி லேததி நீயும்
வண்மையாய் வெள்ளியச் செய நீராலே
வடிவாக இருசாமம் சுருக்குப் போடு
தண்மையாய் வீரமது மெழுகு மாகும்
தாட்டிகமாய் மெழுகெடுத்து வைத்துக் கொள்ளு
உண்மையாய் நவலோகந் தன்னி லேதான்
உற்றுமே கொடுத்திடவே யுறுதி யாமே. 659

உறுதியாய் மாற்றதுவும் பத்து மாகும்
உற்றுமே இதைவைத்துப் பூசித் தேத்து
வறுதியாய்ப் பூசிக்க எல்லாமும் சித்தி
வடிவாகப் பொருளான சித்தி வண்மை
நறுதியாய்ச் சித்திக்க வேணு மென்றால்
நலமாக வீரமதை வைத்துத் தேறு
பறுதியாய் வீரத்தை வைத்து தேறப்
பதிவாக எல்லாமும் வடிவு மாமே. 660

ஆமேதான் பூரமது பலமு நாலு
அடவாக வெள்ளியச் செயநீர் கேளு
நாமேதான் துவைத்துமே கற்பூ ரத்தில்
நலமாக வாட்டிடவே மெழுகு மாகும்
சாமேதான் மெழுகெடுத்து நவலோா கத்தில்
சரியாகக் கொடுத்துநீ உருக்கிப் பாரு
வாமேதான் தங்கமது எட்டு மாற்று
வடிவாக ஆகுமது வண்மை கேளே. 661

கேளுமே தாளகமு மெழுகு சொல்வேன்
கெடியாகச் சுத்திமுறை பண்ணக் கேளு
வாளுமே கற்சுண்ணம் ஊதி நீற்றி
வடிவாகக் கல்லாகப் பரப்பிக் கொண்டு
நாளுமே தாளகந்தான் மேலே யிட்டு
நாடியே அதன்மேலே கல்லுத் தானும்
பாளுமே பரப்பியே வெந்நீர் ஊற்றப்
பதிவாக நீறிவிடும் பண்பு மாமே. 662

பண்பாகத் தாளகந்தான் சுத்தி செய்து
பதிவாக எடுத்துநீ ஒட்டி விட்டு
உண்பாக உறுதியாய்ச் சுருக்குத் தானும்
உறுதியாய் முலைப்பாலும் சுருக்குப் போடு
வண்பாகக் கழுவியதைப் பின்பு தானும்
வடிவாகக் கற்பூர தீபந் தன்னில்
நண்பாக வெள்ளீயச் செயநீர் தன்னில்
நலமாகத் துவைத்துமே வாட்டி டாயே 663

வாட்டிடவே தாளகந்தான் மெழுகு மாகும்
வடிவாக மெழுகெடுத்து நவலோ கத்தில்
நாட்டிடவே நூற்றுக்கு ஒன்று தாக்கு
நலமாக மாற்றென்ன பன்னிரண் டாகும்
காட்டிடவே மாற்றென்ன பதினாறாகும்
கனிவாக இம்மாற்றைக் குறைக்கக் கேளு
பாட்டிடவே வெள்ளியது நாலு பங்கு
பதிவாகச் செம்பதுவும் மூன்று பங்கே 664

பங்காக மூன்றுமே வைத்துருக்குப்
பதிவாக எடுத்துப்பார் தங்க மாகும்
வங்காக இதையெடுத்து உருக்கி நீயும்
வடிவாகத் தகடுதட்டிப் பின்பு கேளு
தங்கமாம் உப்பதுவும் பலமும் நாலு
துடியாகச் செங்கல்மாப் பலமு நாலு
புங்கமாம் பொடியாக்கிக் கீழ்மேல் இட்டுப்
புதிதாகப் பத்தெருவில் புடத்தைப் போடே 665

போடவே பத்தெருவில் புடத்தைப் போடப்
பொலிவாகத் தங்கமது அருகு கட்டி
ஆடவே இறங்குமது அடவு கேளு
ஆதியாம் ஆவிரையின் பூப்போ லாகும்
தாடவே இதையெடுத்து விற்று நீயும்
தாட்டிகமாய்ச் செலவுசெய்து பின்பு கேளு
நாடவே சுழிமுனையைப் பார்த்துத் தேறு
நலமாக யோகசித்தி காயசித்தி யாமே 666

சித்தியாம் மெய்ப்பொருளைக் கண்டு தேறச்
சிறப்பாக யோகமுதல் சித்தி யாகும்
பத்தியாய் வாதசித்தி முன்னே பாரு
பதிவாகச் சித்திதரும் பண்பு மாகும்

நத்தியே வாதிக்குப் பாகந் தோணும்
நலமாகப் பூதசித்தி நடப்பு மாகும்
அத்தியாயச் சிவனொளிவைக் கண்டு தேற
அடவாகச் சித்திதரும் அருமை யாமே 667

அருமையாம் வெள்ளீயச் செயநீ ராலே
ஆடலாம் அண்டரண்ட புவன மெல்லாம்
கருமையாய் உப்பாலே எல்லா மாச்சு
கனிவாக வாசிதனை யிருத்திக் கும்பி
நருமையாம் சுழிமுனையி லணுவு மாகும்
நாதாந்த சாரவெளி நடப்பு மாகும்
பருமையாம் நடப்புக்கு இதுவே சாரம்
பண்பாக நாடியே நடத்தை பாரே 668

நடத்தைபார் மனோசிலையின் மெழுகு தன்னை
நலமாகச் சொல்லுகிறேன் நாட்டி லோர்க்கு
விடத்தைபார் மெய்பாகம் கண்டு தேர
விதமாக யோகசித்தி விதமு மாகும்
படத்தைபார் யோகமென்றால் அதுவே சித்தி
பதிவாக ஞானசித்தி பாரி லோர்க்கு
முடத்தையாய் மூவுலகும் போக்கு மாகும்
முனிவாகப் போக் கதுவைமொ ழிந்து பாரே 669

மொழிந்துபார் மனோசிலையைச் சுத்தி செய்து
மோகமாய்க் கழுவியதை முன்னே கேளு
வழிந்துபார் வடிவாகக் கற்பூரத்தில்
வகையாக வெள்ளீயச் செயநீர் தன்னில்
அழிந்துமே தோய்ச்சுமே வாட்டி வாட்டி
அடவாகக் கடிகையொன்று குமுற வாட்டி
நழிந்துமே பா ர்த்திட மே மாகும்
நலமாக மெழுகெடுத்து நவலோ கத்தில் 670

லோகத்தி லிட்டிடவே மாற்றுக் கேளு
நொடியாக நூறாகும் நுண்மை பாரு
பாகமாய் இதைத்தணிக்கப் பதிவு கேளு
பதறாதே வெள்ளியது நாலு மாகும்
தாகமாய்ச் செம்பதுவும் மூணு மாகும்
தாட்டிகமாய் இரும்பதுவும் ரெண்டுமாகும்
யோகமாய்க் காரீயம் ஒன்று மாகும்
உற்றுமே எல்லாமும் உருக்கி டாயே 671

உருக்கிடவே களங்காகும் வெள்ளி பத்து
உருக்கிடவே செம்புரெண்டு சேர்த்து ருக்கிப்
பருக்கிடவே களங்கொன்று சேர்த்து ருக்கிப்
பதிவாக ஊதிடவே பாரிற் கேளு
நருக்கிடவே ஊதியே உருக்கிப் போடு
நலமான மாற்றென்ன பத்து மாகும்
வருக்கிடவே உப்புக்குங் காவிக் கேகா
வடிவாக இதைவிற்றுச் செலவு செய்யே 672

செய்யவே உண்டுடுத்தி வழியைக் கேளு
செயமாக வாசியோ கத்தைப் பாரு
பையவே சுழிமுனையைக் கண்டபோது
பதிவாக ஞானமது உடனே வந்து
நையவே ஏவலது மிகவே கேட்கும்
நலமாக ஆதார வழியைத் தேடு
கையவே கனிவாக ஆடு மேதான்
கனிவாகச் சித்திதரும் வாதி மாரே 673

வாதிமார் இதையறிந்து செய்ய மாட்டார்
வடிவாகக் கைபாகம் தெரிந்த பேர்கள்
நீதியாய்ச் செய்திடுவார் உலக நீதி
நிலைக்கவே செய்திடுவார் கண்டு பார்த்து
கோதியே யாராய்ந்து குணமும் கண்டு
குணமாகு வழியறிந்து குருவைப் பாரு
சாதியாய் வலுவான பொருளுங் கண்டு
சரியாகப் பார்த்தாலே சித்தி யாமே 674

சித்திபெற மனோசிலையின் மெழுகி னாலே
சிறப்பாக எல்லாமும் சித்தி யாகும்
புத்தியாய்க் கண்டெடுத்தால் யோக சித்தி
புனிதமாய் எல்லாமும் பெருமை யாகும்
நத்தியே அந்திசந்தி பணங்கால் வீதம்
நலமாக வுண்டிடவே சகல சித்தி
பத்தியாய்ப் பலனறிந்து பதிவு மாகும்
பாகமாய் எல்லாமும் சித்தி யாமே 675

ஆமேதான் மனோசிலையின் மெழுகி னாலே
அடவான சித்தரெல்லாம் சித்தி பெற்று
நாமேதான் குளிகைசித்து பண்ணிப் பண்ணி
நலமாக யோகசித்துப் பெற்றா ரப்பா

வாமேதான் கண்டபடி சொல்லா மல்தான்
வடிவாக மனோசிலையை மெழுக தாக்கி
தாமேதான் நவலோகந் தன்னி லேதான்
தாட்டிகமாய்க் கொடுத்திட்டு வாதம் பாரே 676

வாதமது எளிதாக இருக்கும் பாரு
வடிவாகக் கைபாகந் தெளிந்தால் கேளு
நாதமது தங்கமது நொடிக்குள் ளாகும்
நலமாகத் தெருவெல்லாம் தங்க மாகும்
பூதமதை யறிந்தவனே வாதி யாகும்
புகலரிய வாதமது சுருக்கந் தன்னை
நீதமாய்க் கண்டிடவே சுருக்க மாகும்
நிலையாகச் சுருக்கெல்லாம் நேர்ந்து பாரே 677

நேர்ந்துமே இன்னமொரு வெள்ளி மார்க்கம்
நிலையாகச் சொல்லுகிறேன் உற்றுக் கேளு
வார்ந்துமே வெள்ளைப்பா ஷாணம் தன்னை
வடிவாக வெள்ளாவி தனிலே யிட்டுக்
கூர்ந்துமே யுள்ளிட்டு மேலே மூடிக்
குணமாக இருசாமம் எரித்துப் போடச்
சார்ந்துமே வெள்ளையது சுத்தி யாகும்
கனிவாகச் சுத்திசெய்து எடுத்தி டாயே 678

எடுத்துமே வெள்ளையது சுத்தி யாகும்
இதமாக வெள்ளீயச் செயநீர் தன்னில்
கடுத்துமே தோய்ச்சிடவே கற்பூ ரத்தில்
கனிவாக வாட்டிடவே மெழுகு மாகும்
நடுத்துமே வெள்ளீயம் நூற்றுக் கொன்று
நலமாக இட்டுருக்கு நடப்புக் கேளு
வடுத்துமே வெள்ளீயம் சவுடுதிரை யற்று
வடிவாக வெள்ளிபோல் விளங்கும் பாரே 679

விளங்குமே வெள்ளீயம் வெள்ளி யாச்சு
விதமாக வெள்ளீயநீர் செத்துக் கூராம்
தளங்குமே சூதமது கட்டிப் போகும்
தாட்டிகமாய் இட்டலிபோல் விரைத்துப் போகும்
களங்குமே யிந்தவெள்ளி தன்னைத் தானும்
கனிவாக விக்கிரகம் பண்ணி நீயும்
துளங்குமே பண்ணிவைத்துச் சிவபூ சை செய்
துடியாக எல்லாமும் சித்தி யாமே 680

சித்தியாம் அஞ்செழுத்தும் எட்டெழுத்தும்
திறனாகச் செபித்திடவே நல்ல மார்க்கம்
பத்தியாய் முக்கோண வழியிற் சென்று
பதிவாக ஞானத்தின் பொருளைக் காண
நத்தியே சிவயோகம் நலமே யாகும்
நலமான சிவபதவி நடப்பு மாகும்
முத்தியாம் மூவுலகு பொருளு மாகும்
மூலத்தின் பொருளான மூர்த்தி யாமே 681

ஆமேதான் இந்தவெள்ளி வித்தை சொன்னேன்
அடவான யோகமுதல் அடவு சொன்னேன்
நாமேதான் களங்குமுதல் வரிசை சொன்னேன்
நாதாக்க ளாமேது நடப்புச் சொன்னேன்
காமேதான் இந்தவெள்ளி தனக்குத் தானும்
கனிவாக யோசிக்குப் பதிவாய்ச் சொன்னேன்
தாமேதான் பாகத்தைத் தவற விட்டுத்
தப்பியே செய்யாதே சார்ந்து பாரே 682

சார்ந்துமே யின்னமொரு வித்தை கேளு
சரியான கௌரியுட பாக மாகும்
வார்ந்துமே கௌரியது மெழுகு கேளு
வடிவான எப்பொருட்கும் இறைவர் சொன்ன
கார்ந்துமே கௌரியது பலமும் நாலு
கனிவாகச் சுத்திமுறை கனிந்து கேளு
நார்ந்துமே வெள்ளாவி தன்னி லேதான்
நலமாக வைத்துமே சுத்தி செய்து 683

செய்துமே வெள்ளியச் செயநீர் தன்னில்
சிறப்பாகத் தோய்த்துமே கற்பூ ரத்தில்
பைதுமே வாட்டுநீ பரிந்து கேளு
பதிவாகக் கடிகையது சாமம் ஒன்று
வைதுமே வாட்டியே பார்க்கும் போது
வடிவாகக் கௌரியது மெழுகு மாகும்
நைதுமே மெழுகெடுத்து நவலோ கத்தில்
நலமாக நூற்றுக்கு ஒன்று தானே. 684

தானேதா னொன்று கொடு மாற்றுக் கேளு
தாட்டிகமாய்ப் பத்தரைதான் மாற்று மாகும்
நானேதான் உப்புக்குக் காவிக் கப்பா
நலமாக இறங்கிவிடும் நன்மை சொன்னேன்

கானேதான் இதைநம்பி வேலை செய்து
    கனிவாகக் கைபாகம் கண்டு தேறு
வானேதான் எல்லாமும் சித்தி யாகும்
    வடிவுடைய பொருளெல்லாம் வண்மை யாமே 685

வண்மையாம் மெய்ப்பொருளாம் வாத மார்க்கம்
    வாதாடித் திரியவே வண்மை யாகும்
வண்மையாய் எல்லாமும் சித்தி சித்தி
    வகையாகக் கைபாக நிலைய றிந்து
பெண்மையாய்க் கண்டிடவே பேறு மாகும்
    பேதையாய் அலையாதே வெள்ளீ யத்தைத்
தண்மையாய்ச் செயநீரு பண்ணித் தேறு
    சகல சித்துமாகுமது தர்க்க வானே 686

தர்க்கமாய்ச் சொல்லாதே வெள்ளீயத்தைத்
    தாட்டிகமாய்ச் செயநீரு பண்ணி னாக்கால்
வர்க்கமாய் எல்லாமும் சுண்ணமாகும்
    வடிவாகச் சுண்ணத்தால் கோடி வேதை
கர்க்கமாய்க் காதலாய் உலகந் தன்னில்
    கனிவாகச் சொல்லிவிட்டேன் கண்டு பாரு
உர்க்கமாய்க் கைபாகம் அறியா வாதி
    உற்றுமே பார்த்தறிய உண்மை யாமே 687

உண்மையாய் இன்னமொரு மெழுகு மார்க்கம்
    உறுதியாய்ச் சொல்லுகிறோம் உற்றுக் கேளு
தன்மையாய்க் குதிரைப்பல் பாஷாணந்தான்
    தாட்டிகமாய்ப் பலம்நிறுத்து வைத்துக் கொண்டு
கண்மையாய் முன்செய்த சுத்தி போலக்
    கனிவாகக் கழுவியே சொல்லக் கேளு
வண்மையாய் வெள்ளீயச் செயநீ ரில்தான்
    வடிவாகத் துவைத்துமே மார்க்கம் கேளே. 688

கேளுமே துவைத்துநீ சொல்லக் கேளு
    கெடியாகக் கற்பூர தீபந் தன்னில்
ஆளுநீ வாட்டியே சாமம் ஒன்று
    அடவாகப் பார்த்திடவே மெழுகு மாகும்
நாளுமே செம்புதனில் நூற்றுக் கொன்று
    நலமாக இட்டுருக்க மாற்றுக் கேளு
தாளுமே மாற்றுத்தான் நூறு மாகும்
    தப்பாமல் அதையெடுத்து வைத்திடாயே. 689

வைத்திடவே மாற்றதுவும் நிறத்தைக் கேளு
வடிவாகப் பச்சையது மாற்று மாகும்
நைத்திடவே யிதைத்தணிக்க வித்தை கேளு
நலமான செம்புமூ வெட்டு மாகும்
கைத்திடவே வெள்ளியது எட்டு மாகும்
கனிவாக இவைரெண்டும் தங்கத் தோடே
உத்திடவே உருக்கிநீ பார்க்கும் போது
உறுதியாய்ப் பத்தரைத்தான் ஆணி யாமே. 690

ஆணியாம் பொன்னதனை விற்று நீயும்
அடவாகச் செலவுக்கு வைத்துக் கொண்டு
நாணியே உண்டுடுத்திப் பின்பு கேளு
நலமாக வாசியோ கத்தைப் பாரு
தாணியே வைத்தியசிந்தா மணியி லேதான்
தாட்டிகமாய்ச் சொல்லிவிட்டேன் ஞானந் தன்னை
ஊணியே பார்த்தாலோ யோக மாகும்
உற்றுமே யோக சித்தி பார்த்திடாயே. 691

பார்த்திடவே யோகமென்ற திறவு கோலைப்
பதிவாகச் சொல்லிவிட்டேன் பரிந்து பாரு
நாத்திட்டு நட்டாற்போல் வாத மார்க்கம்
நலமாக வாதத்தை நம்பிச் செய்தால்
சாத்திடுமே சகலசித்தி யுடனே யாகும்
சரியாகக் கவுனவெளி யோட லாகும்
காத்திடுமே யுயிர்வதைகள் செய்ய வேண்டாம்
கனிவாகச் சித்தியது கணக்கு மாமே. 692

கணக்காக வாதமது என்னத்துக்கு
கனிவாகச் சிவலோக ஞானத் திற்கு
துணக்காகச் செலவுக்கே யாகச் சொன்னேன்
துடியான சூட்சத்தைக் கண்டு தேறு
வணக்கமாய்க் கைபாகம் கண்டு தானால்
வடிவாக லோகசித்தி தங்க சித்தி
உனக்காக ஆகமது உண்மை சொன்னேன்
உற்றுமே யறிந்தவனே ஞான வானே. 693

ஞானமது ஆகவே வாதம் சொன்னேன்
நலமாக யோகமுதல் நடப்புச் சொன்னேன்
மோனமது கைபாக வரிசை பாரு
மேன்மைதரு நூலதனில் மேன்மை பாரு

கானலாய்க் கருதுமொன்று கண்டு தேறு
கனிவாக வடிவுடையோர் கருதிச் சொல்வர்
பானமது கண்டோர்க்குப் பலனு மாகும்
பதிபாச விளையதனைத் தேய்த்து வாயே. 694

625-694-வங்கச் செயநீர்

வெள்ளீயச் செயநீர் கேள். இது நாகத்தைச் செம்மையாக கட்டும். இது எளிது முன்னே பார்.

நாலு பலம் வெள்ளீயம் கரண்டியில் இட்டு உருக்கி அதனெடை இரசம் சேர்த்து இணைக்கப் பிட்டாகும். கல்வத்தில் இட்டு வீரம் சேர்த்து நாற்சாமம் அரைக்கச் செயநீராகும். செந்நிறமாக இருக்கும். செம்பு உப்பு தங்கம் உபரசம் எல்லாம் நீறும். இது குரு. இதனால் மிகப் பலவாதம் பலிக்கும். துரிசு இதனால் நீறும். வெடியுப்பு கம்பியாக நீறும் இதனால் அறுபத்து நாலும் வாய்க்கும்.

துரிசு நீறு

துரிசுக் கட்டியை உருண்டையாகச் சீவிக் கரியில் வைத்து ஊத வெண்ணிறமாகும். வெள்ளீயச் செயநீரில் தோய்த்துத் தோய்த்து எட்டு நாள் வெயிலில் காயப் போடு. செயநீரை நன்றாக வுண்டால் துரிசு சிவந்து நிற்கும். கவசம் கேள். முன்னர்க் கூறிய அண்டச் சுண்ணம் எடுத்து நாலில் ஒரு கூறு வீரம் சேர்த்து அரைத்துக் கவசமிட்டுக் காயவைத்து அதன்மேல் அஞ்சு சுண்ணம் கட்டிக் காய்ந்த பின்பு புடமிடத் துரிசு நீறிக் கடுஞ் சுண்ணமாகும். இதனால் வாதம் கோடி.

தங்கத் தகட்டை முன்னர்கூறிய வண்ணம் தூயதாக்கி வெள்ளீயச் செயநீரில் தோய்க்க வெள்ளையாகும். வெட்டையாக இருக்கும். அண்டச் சுண்ணம் பூசிக் காய வைத்துப் புடமிடத் தங்கம் கடுஞ்சுண்ணமாகும். அதனால் காய சித்தி யுண்டாகும். ஒன்பதிலும் நூற்றுக்கு ஒன்றிடப் பத்தாகும். விற்று உண்டுடுத்தி ஞான யோகத்தைப் பார். காய சித்தி பண்ணு.

செம்புத் தகட்டைக் கரியோட்டில் வைத்துப் பழுக்கக் காய்ச்சி வெள்ளீயச் செயநீரில் தோய்க்க வெள்ளையாகும். மடக்கினால் ஒடியும். அண்டச் சுண்ணக் கவசமிட்டு 10 எருப்புடமிடு. செம்பு சுண்ணமாகும். ஒன்பதிலும் நூற்றுக்கு ஒன்றிடச் சிவந்த தங்கமாகும். இச் சுண்ணத்தைப் பண எடை எடுத்து வாழைப் பழத்தினுள்ளிட்டால் பழம் காயாக மாறி விடும். அதனையுண்ணு. நரை திரை அற்றுப் போகும். உடல் கற்றூணாம். பசு நரம்பு பசந்து காணும். உடல் கத்தூரி வாசம் வீசும். பூதுரையில் செம்புச் சுண்ணம் அடைவாகச் சொல்லி விட்டேன். கைபாகம் இந்நூலில் சொன்னேன் நம்பிப் பாரு.

காரீயத்தகட்டை வெள்ளியச் செயநீரில் ஏழு முறை உருக்கிச் சாய்க்க வெட்டையாகும். செம்பில் நூற்றுக்கு ஒன்று கொடுத்துருக்கி ஊதிப் போடு. தங்கம் புடமிறங்கும். பசுந் தங்கமாகும். விற்று உண்டுடுத்தி ஞானம் பார்.

இரும்புத் தகட்டினைப் பழுக்கக் காய்ச்சி வெள்ளியச் செயநீரில் தோய்க்க வெள்ளிபோலாகும். உருக்கினால் தங்கம் போலாம். செம்பில் நூற்றுக்கு ஒன்றிடு. எட்டே காலாம்.

எட்டுப் பலம் நாகத்தை இலுப்பெண்ணெய்யில் பத்து முறை சாய்த்து நயமாக்கிப் பின் சாரமிட்டுருக்கி வெள்ளீயச் செயநீரில் சாய்க்கக் கட்டும். செம்பில் நூற்றுக்கு ஒன்றிட எட்டு மாற்றாகும். உண்டுடுத்தி வாழ்ந்து சுழி முனையில் உற்றி காண். எப்பொருட்கும் இறைவனான அவனைப் போற்று. பொருளறிய வணக்கம் பாரு.

2 சேர் வெள்ளியச் செயநீரோடு வெடியுப்புச் செயநீர் எடை நேராகச் சேர். காரமுள்ள நீராகும். இந்நீரில் வேதை கோடி. களங்கு வகை செந்தூர எகை மாற்று வகை கோடா கோடி. கைபாகம் தேர்ந்து கொள்.

ஒரு பலம் இலிங்கத்தை நயமாக்கி ஓட்டில் வைத்து வெள்ளீயச் செய நீர் சுருக்கிட்டுக் கற்பூர விளக்கில் ஒரு நாழிகை வாட்ட மெழுகாகும். ஒன்பதிலும் நூற்றுக்கு ஒன்றிட்டு உருக்கு. பத்து மாற்றாகும். விற்றுப் பயன்படுத்தி சுழி முனை பார்.

ஒரு பல வீரத்தைக் கரியோட்டில் வைத்து வெள்ளியக் செயநீரால் இருசாமம் சுருக்குத் தாக்கு. மெழுகாகும். ஒன்பதிலும் கொடுக்கப் பத்து மாற்றாகும்.

பூரம் பலம் நாலு எடுத்து மேற்படி செயநீரில் தோய்த்துக் கற்பூர விளக்கில் வாட்ட மெழுகாகும் ஒன்பதிலும் நூற்றுக்கு ஒன்று தாக்க எட்டு மாற்று.

தாளகத்தைச் சுண்ணாம்புக் கல்லில் வைத்து நீற்றித் தூய்மை செய்து முலைப்பால் சுருக்குத் தாக்கிக் கழுவியெடுத்து வெள்ளியச் செய-நீர் தோய்த்துக் கற்பூர விளக்கில் வாட்டு, ஒன்பதிலும் நூற்றுக்கு ஒன்று தாக்கு. பன்னிரண்டு மாற்று. பதினாறுமாகலாம். வெள்ளி நாலு பங்கும் செம்பு மூன்று பங்கும் வைத்துருக்கிப் பார். தங்கமாகும். இதை எடுத்து உருக்கித் தகடு தட்டி நாலு பலம் உப்பும் நாலு பலம் செங்கல் மாவும் சேர்த்துப் பொடியாக்கித் தகட்டுக்குக் கீழும் மேலும் இட்டுப் பத்தெருப் புடமிடு. தங்கம் அருகு கட்டி இறங்கும். ஆவிரையின் பூப்போலாகும்.

பயன்படுத்திச் சுழிமுனையை நோக்கித் தவம் செய். சிவனொளியைக் கண்டு தேறு.

மனோசிலை மெழுகு சொல்வேன். மனோசிலையைத் தூயதாக்கிக் கழுவி வெள்ளீயச் செயநீரில் தோய்த்துக் கற்பூர விளக்கில் வாட்டி ஒரு நாழிகை வரைக்குமுற வாட்டி மெழுகாக்கி ஒன்பதிலும் கொடுக்க நூறு மாற்றாகும். இம்மாற்றைக் குறைக்க வழி கேள். வெள்ளி நாலு செம்பு மூன்று இரும்பு இரண்டு காரியம் ஒன்று ஆக எல்லாம் சேர்த்துருக்கக் களங்காகும். வெள்ளி பத்தும் செம்பிரண்டும் சேர்த்து உருக்கி முன்கூறிய களங்கு ஒன்று கொடுக்கப் பத்து மாற்றாகும். விற்று உண்டுடுத்தி ஞானம் பார். காலை மாலை காற்பண அளவு உண்ண எல்லாம் வாய்க்கும். மனோசிலை மெழுகினால் சித்தரெல்லாம் சித்தி பெற்றுக் குளிகை சித்தி பண்ணி யோக சித்துப் பெற்றார். கண்டபடி பேசாமல் மனோசிலையை மெழுகாக்கி ஒன்பதிலும் கொடுத்து மாற்றுப் பார். பொன் செய்வது எளிது. கைபாகம் தெரிந்தால் தங்கம் நொடிக்குள் உண்டாகும். தெருவெல்லாம் தங்கமாகும்.

வெள்ளி செய்முறை

வெள்ளைப் பாடாணத்தை வெள்ளாவியிலேயிட்டு மூடி இருசாமம் எரிக்கத் தூயதாகும். வெள்ளை நயமாகும் வெள்ளீயச் செயநீரில் தோய்த்துக் கற்பூரமெழுகில் வாட்ட மெழுகுமாகும் வெள்ளீயத்தில் நூற்றுக்கு ஒன்று கொடுக்கச் சவுடு திரையற்று வெள்ளி போலாம். வெள்ளீயம் வெள்ளியாகி விட்டதென்பது தெளிவு. இதனால் சூதம் கட்டும். இட்டலி போல் விரைத்துப் போகும். இந்த வெள்ளியால் திருவுருவம் செய்து சிவபூசை செய் ஐந்தெழுத்தும் எட்டெழுத்தும் ஓது.

வெள்ளி வித்தை சொன்னேன். யோகம் முதலிய அடவு களங்கு முதலிய வரிசை கூறினேன். இந்த வெள்ளியை யோகிக்குப் பதிவாய்ச் சொன்னேன்.

கௌரி மெழுகு

கௌரியை வெள்ளையைப் போல் தூயதாக்கி வெள்ளீயச் செயநீரில் தோய்த்துக் (நாலு பல அளவு) கற்பூர விளக்கில் வாட்டு. ஒருச் சாமம் வாட்ட மெழுகாகும். ஒன்பதிலும் நூற்றுக்கு ஒன்று கொடு. பத்தரை மாற்று. இதனை நம்பி வேலை செய். வாதமார்க்கம் மெய்ப்பொருளாம் வாதாடித் திரிய வேண்டாம். வெள்ளீயச் செயநீர் செய். கோடி வேதை எல்லாமும் சுண்ணமாகும்.

குதிரைப் பல் பாடாணம்

இதனை முன்போல் நயமாக்கிக் கழுவி மேற்படி செயநீரில் தோய்த்துக் கற்பூர விளக்கில் ஒருச் சாமம் ஆட்டிப் பார்க்க மெழுகாகும்.

செம்பினில் நூற்றுக்கு ஒன்றிய நூறு மாற்று. பச்சை நிறமாக இருக்கும். செம்பு இருபத்து நான்கு பங்கும் வெள்ளி எட்டுப் பங்கும் மேற்கூறிய தங்கத்தில் ஒரு பங்குடன் சேர்த்து உருக்கிப் பார்க்கப் பத்தரை மாற்றாகும். யோகமென்ற திறவுகோலைப் பதிவாகச் சொல்லிவிட்டேன். நம்பிச் செய். சித்தியாகும். கவன வெளியோடலாகும். மேலும் அறிவுரை காண்.

நாகச் செயநீர்

தேத்தவே இன்னமொரு உப்பு மாக்கம்
திறமாகச் சொல்லுகிறேன் உற்றுக் கேளு
வாத்தவே நாகமென்ற செயநீர் தன்னை
நாதாக்கள் ஒளித்திட்ட குருவைக் கண்டு
பாத்தவே சகலநூல் எல்லாம் கண்டு
பதிவாகச் சிவன்சொல்லக் கேட்டுத் தேறி
நாத்தவே கைபாக வரிசையாக
நலமாகச் சொல்லுகிறேன் நாட்டி லோர்க்கே 695

நாட்டவே நாகமென்ற செயநீர் தன்னை
நலமாகச் சொல்லுகிறோம் நவலோகத்தில்
வாட்டவே பட்டிடவே பழுத்துப் போக
வடிவாக எல்லாமும் சித்தியாகக்
கூட்டவே சொல்லுகிறேன் கைபா கத்தைக்
குணமாகக் கைபாகம் கூர்மை யாகும்
மூட்டவே கூர்மையாம் அறிந்த பேர்கள்
முனிவாகச் சஞ்சீவி மொழிய லாமே 696

மொழியவே நாகமது சேரு ஒன்று
மேதினியில் நிறுத்துநீ கரண்டி யிட்டு
நழியவே உருகியபின் நடத்தை கேளு
நலமாகச் சூதத்தை இடையே தொந்தி
பிழிய வேபுட்டாகும் புட்டி னோடே
பாய்ச்சிடுவாய் கொச்சியென்ற வீரம்தானும்
கழியவே கொச்சியென்ற வீர வைப்புக்
கனிவாகச் சொல்லுகிறேன் உற்றுக் கேளே 697

கொச்சி வீரவைப்பு

உற்றுமே கடைதனிலே வீரம் வாங்கி
உறுதியாய்த் துரிசியது நாலுக் கொன்று
கற்றுமே யன்னமது பேதி தானும்
கனிவாக நாலுக்கு ஒன்று சேரு

முற்றுமே கல்லுப்பு நாலத் தொன்று
முனிவாக வீரத்தோ டொக்கச் சேர்த்து
நற்றுமே பொடியாக்கிக் காசி மேரு
நலமாக அடைத்துநீ வளப்பக் கல்லே 698

(குறிப்பு - கோடாசூரி வீரவைப்பு, யூகி வாதகாவியம் முதல் காண்டம் 748)

வளப்பத்தின் கல்லாலே மூடித் தானே
வடிவாகச் சீலைமண் ணேழு செய்து
தளப்பமாய்க் காசிதனி லெரித்து வாங்கு
தாட்டிகமாய்ப் பனிரெண்டு சாமம் தானும்
களப்பமாய் எண்ணாதே சொல்லக் கேளு
கனிவாக வீரமது உயர ஏறித்
தளப்பமாய் இருக்குமது துடியு மாகும்
துப்புரவாய்த் தேங்காயின் திருக லாமே 699

ஆமேதான் தேங்காயின் திருவல் போல
அடவாகத் தானிருக்கும் சொல்லக் கேளு
நாமேதான் இப்படிக்குத் தொந்தம் கேளு
நலமாக அஞ்சுதரம் தொந்தம் பண்ணி
வாமேதான் பார்த்திடவே கொச்சி வீரம்
வடிவாகச் சிவந்துமே நிற்கும் பாரு
காமேதான் சிவந்திருந்த வீரப் போக்கைக்
கனிவாகச் சொல்லவே வாயொண்ணாதே 700

ஒண்ணாது கொச்சியென்ற வீரந் தானும்
உறுதியாய்க் காரந்தான் மெத்த வுண்டு
நன்றாகக் காரத்தைச் சித்த ரெல்லாம்
நாடியே மறைத்தார்கள் சாத்தி ரத்தில்
வண்ணாகச் சிவனறியச் சொல்லிப் போட்டேன்
வடிவாகச் சாத்திரங்கள் எல்லாம் பாரு
புண்ணாகப் பார்த்துடனே சித்தி மெத்த
போக்கோடே சித்திக்க முறைமை கேளே 701

முறையாக நாகமென்ற புட்டி னோடே
முனிவாக இவ்வீர மிடையே சேரு
கறையாகச் சேர்த்தரைக்கத் தண்ணீ ராகும்
கனிந்துமே நீரதுவும் சிவந்து நிற்கும்

பறையாக இந்நீரு சேரு வொன்று
பதிவாக இன்னமொரு புகைநீர் கேளு
நறையாக வெடியுப்புப் பலமும் பத்து
நாடியே சீனமது பதினைந் தாமே 702

அஞ்சாக இவைரெண்டும் பொடியாய்ப் பண்ணி
அண்மையாய்க் கலையத்தி லிட்ட டைத்து
நஞ்சாக வாலையென்ற சட்டி மூடி
நலமாகச் சீலைசெய்து நாட்டங் கேளு
பஞ்சாகத் தீயெரிக்கப் புகைநீர் வந்து
பதிவாக வெள்ளைநீர் ஆகும் பாரு
வஞ்சாக வெள்ளிநீர் தள்ளிப் போடு
வடிவாக மஞ்சள்நீர் தன்னை வாங்கு 703

வாங்கியே சீசாவில் அடைத்துக் கொண்டு
வடிவாக] நாகமென்ற செயநீர் சேரு
தூங்கியே புகைநீரு சேரு ஒன்று
துடியாக இவைரெண்டு சேரப் பொங்கும்
பாங்கியே பொங்கிடவே கார மாகும்
பதிவாகக் காரத்தால் கோடி வாதம்
தாங்கியே ஆகுமது தன்மை சொன்னேன்
தாட்டிகமாய்ச் சவுக்காரம் போலே யாகும் 704

ஆமேதான் லிங்கமது சேரு வாங்கு
அடவாக நாகமென்ற செயநீர் தன்னில்
பாமேதான் துவைத்துநீ அனலி லேதான்
பதிவாக வாட்டியே பார்க்கும் போது
நாமேதான் மெழுகாகும் நவலோ கத்தில்
நலமாக நூற்றுக்கு ஒன்று தாக்கு
வாமேதான் இட்டுருக்கு மாற்று மாகும்
நலமாக எட்டாரும் நயந்து பாரே 705

நயந்துமே இப்பொன்னின் சத்தி மெத்த
நலமாக இதைவைத்துப் பூசை செய்து
பயந்துமே போகாமல் எட்டெழுத்தும்
பதிவாகச் செபதபங்கள் பண்ணிக் கொண்டு
கயந்துமே வாசியோ கத்தைப் பாரு
கணக்காக உறுதிநீ கண்டு பாரு
தயந்துமே பார்க்கவே முனையை நாடு
தாட்டிகமாய் எல்லாமும் ஆதி யாமே 706

ஆதியாம் இலிங்ககற்ப மெழுகு சொன்னேன்
அடவாக வீரமென்ற மெழுகு கேளு
நாதியாம் வீரமது சேரு வொன்று
நலமாக நாகமென்ற செயநீர் தன்னில்
வாதியாந் தோய்ச்சிட்டே யனலில் காட்டு
வடிவாக மெழுகாகும் வண்மை கேளு
சாதியாம் செம்புதனில் நூற்றுக்கு ஒன்று
சாரித்து ஒன்றிடவே தங்க மாமே 707

ஆமேதான் நூற்றுக்கு ஒன்று இட்டு
அடவாக உருக்கிப்பார் மாற்றுக் கேளு
நாமேதான் பத்தரையு மாகும் பாரு
நலமான உப்புக்குங் காவிக் கப்பா
சாமேதான் இறங்கிவிடும் பொய்போ காது
தாட்டிகமாய் இந்தவித்தை நிசமு மாகும்
பாமேதான் பதிவாக ஆகும் பாரு
பதமாக எல்லாமும் பாரி லோர்க்கே. 708

பாரிலே நாதவோங் காரந் தன்னைப்
பதிவான முக்கோண வழியுந் தாண்டு
காரிலே கனிவான பொருளைக் காணக்
காதலொடு வாதமுதல் கனிவு கண்டு
வாரிலே வடிவாக வடிவு நோக்கு
வகையாகப் பார்த்திடவே சுழியை நோக்கு
தாரிலே தனமாகும் தன்மை மெத்த
தாட்டிகமாய் ஞானவழி அடுத்தி டாயே 709

அடுத்திடவே வீரமென்ற மெழுகு தன்னை
அடவாகக் கல்வத்தில் இட்டுக் கேளு
நடுத்திடவே நாகமென்ற செயநீ ராட்டி
நலமாகத் தங்கமென்ற தகட்டில் பூசி
விடுத்திடவே ரவிதனிலே காய வைத்து
விதமாகப் பத்தெருவில் புடத்தைப் போடு
கடுத்திடவே தங்கமது மெழுகு மாகும்
கனிவாக நவலோகம் நூற்றுக்கொன்றே 710

ஒன்றாக இட்டிடவே மாற்றுக் கேளு
உறுதியாய்ப் பன்னிரண்டு மாற்று மாகும்
நன்றாக இதைக்குறைக்க வித்தை கேளு
நலமாக எட்டிலொன்று வெள்ளி சேர

பன்றாக மாற்றதுவும் எட்டு மாகும்
பதிவாக இதைவிற்றுச் சீவ னத்தைக்
கன்றாகப் பண்ணியே பின்பு கேளு
கனிவாகக் காயசித்தி பண்ணி டாயே. 711

பண்ணவே தங்கமென்ற மெழுகு தன்னைப்
பதிவாக அந்திசந்தி பணங்கால் வீதம்
உண்ணவே உண்டுவர உகாரத் தாலே
உறுதிமிக இருக்கலாம் தேகம் தானும்
நண்ணவே நரைதிரைகள் அற்றுப் போகும்
நமனுண்ட கற்பமது நானும் உண்டேன்
கண்ணவே கற்பத்துக் கிதுவே யாதி
கருணைபெற நாதாக்க ளாடு மாட்டே. 712

ஆட்டான கேள்வியினால் வாதம் சுட்டு
அறியாமல் பொய்யென்றா லாரென் செய்வார்
நீட்டான சாத்திரத்தில் நிலைக்க வேணும்
நிலையான மனதடக்கிச் செய்ய வேணும்
காட்டான காயசித்தி பண்ண வேணும்
கனிவான கைபாகந் தெரிய வேணும்
நாட்டான நாலாறு காண வேணும்
நலமாக மனமடக்கச் சித்தி யாமே 713

ஆமேதான் சித்திக்க வேணுமென்றால்
அடவான தங்கத்தை மெழுகு பண்ணு
நாமேதான் காயசித்தி யுடனே யாகும்
நலமாக யோகசித்தி நடத்தை யாகும்
தாமேதான் சகலசித்தி சோதி பாரு
தாட்டிகமாய்ச் சாத்திரத்தின் தன்மை பாரு
வாமேதான் எல்லாமும் சித்தி யாகும்
வடிவுடைய பொருளாகும் வண்மை யாமே. 714

ஆமேதான் தங்கமென்ற மெழுகு தன்னை
அடவாகக் கல்வத்தி லிட்டுக் கேளு
தாமேதான் நாகமென்ற செயநீர் விட்டுத்
தப்பாமல் இரு சாமம் ஆட்டித் தானும்
காமேதான் செம்பென்ற தகட்டின் மேலே
கனிவாகத் தடவியே காய வைத்து
நாமேதான் பத்தெருவில் புடத்தைப் போடு
நலமாகத் தீயாற்றி யெடுத்துப் பாரே 715

பார்த்தவுடன் பச்சையாய்க் குருவு மாகும்
பதிவான நவலோகம் நூற்றுக் கொன்று
நாத்திசையு மெய்க்கவே கொடுத்துப் பாரு
நலமாக யோகசித்து தங்க சித்து
வார்த்தவுட னாகுமே பத்து மாற்று
வடிவான பொருளறிய மார்க்கம் பாரு
காத்தவுடன் கனிவான கருத்துள் ளாடும்
காரணமாய் எல்லாமும் கண்டு கொள்ளே. 716

கொள்ளவே நவகண்டம் தன்னி லேதான்
கூரறிய ரசவாதம் பொய்யோ வென்றால்
துள்ளவே வங்கிசங்கள் எல்லாம் பொய்யாம்
சூதாடு வார்போலச் சொல்ல வேண்டாம்
கள்ளமாய்க் கைபாகம் கண்டு பாரு
காதலுடன் பொய்மறந்து கணக்குப் பாரு
துள்ளவே எல்லாமும் சித்தி யாகும்
துடியான ராசயோகத்தைப் பாரே. 717

யோகமது ராசயோ கத்தைப் பார்க்க
உற்றுமே வாதமதைச் சொல்லிப் போட்டேன்
தாகமாய் ரசவாதம் வந்த பேர்கள்
தனியான செம்புதனில் உழைப்பார் அப்பா
யூகிமுனி கண்டுமே பாகத் தோடே
உறுதியாய்ச் சொல்லிவிட்டேன் உற்றுப் பாரு
வாகமாய் எல்லாமும் சித்தி யாகும்
வடிவாகப் பார்த்திடவே வண்மை யாமே. 718

வண்மையாம் செம்புதனை மெழுகு தன்னை
வடிவாக அந்திசந்தி பணங்கால் வீதம்
உண்மையாய் உண்டிடவே மண்ட லந்தான்
உறுதியாய்ப் பச்சையென்ற வடிவு மாகும்
தண்மையாய் நரம்பதுவும் பச்சை யாகும்
தாட்டிகமாய் நரைதிரைகள் அற்றுப் போகும்
கண்மையாய்ச் சொல்லி விட்டேன் தாம்பூரத்தைக்
கனிவாக மெழுகு பண்ணக் கருதி டாயே. 719

கருதியே தாம்பூர மெழுகு சொன்னேன்
கனிவான அயத்தினுட மெழுகு கேளு
உறுதியாய் அயத்தகடு தட்டி நீயும்
உண்மையாய்ச் செம்பென்ற மெழுகு தன்னை

நறுதியே கல்வத்தி லிட்டுக் கேளு
நலமாக நாகமென்ற செயநீ ராலே
வருதியே அரைத்துநீ அயத்தின் மேலே
வடிவாகக் கட்டியே காயப் போடு 720

போட்டுநீ காய்ந்தபின்பு சொல்லக் கேளு
பொலிவாகப் பத்தெருவில் அடுக்கிப்போடு
நாட்டுமே தீயாற்றி எடுத்துப் பாரு
நலமாக அயமதுவும் மெழுகு மாகும்
காட்டுமே அயமெழுகைப் பதனம் பண்ணிக்
கனிவாக நவலோகம் நூற்றுக் கொன்று
மூட்டுமே கொடுத்துருக்கு பத்து மாற்று
முனிவாக எல்லாமும் சித்தி யாமே. 721

சித்தியாம் உலகத்தோர் பிழைக்க வென்று
சிறப்பாகப் பிடிவாதந் தன்னி லேதான்
புத்தியாய்ச் சொல்லிவிட்டேன் உற்றுக் கேளு
புனிதமாய் யோகத்தைப் புரண்டு பாரு
நத்தியாய்ப் பார்த்தாலே எல்லாம் சித்தி
நலமாகக் காப்போடு கடையும் பாரு
பத்தியே மூதுரையின் நேர்மை பாரு
பதிவாகச் சரியாகும் பண்புள்ளோரே. 722

பண்பாக அயமெழுகு சொல்லக் கேளு
பதிவாக அந்திசந்தி பணங்கால் வீதம்
உண்பாகம் திரிகடுகி லுண்டு தேறு
உற்றுமே வாதவலி குன்ம வாய்வு
நண்பாக மகோதரமும் நாடி யோடும்
நலமாக அட்டகுன்மம் ஓடிப் போகும்
பெண்பார்வை யாகாது புத்தி சொன்னேன்
பேருலகில் ரசவாதம் பெருமை தானே 723

தானென்ற சூலைமகோ தரமும் போகும்
தாட்டிகமாய்க் கல்லடைப்புத் தணிந்த வாய்வு
ஊனென்ற பட்சமொடு வாதம் போகும்
ஒருத்தலைநோய் பிடரிவலி மண்டைக் குத்து
நானென்ற இடுப்புவலி நாடா தோடும்
நலமான இசிவோடு அண்ட வாதம்
கானென்ற நரித்தலையாம் வாத மோடு
கனிவாகப் போகுமது கருந்துள் ளோரே 724

போகுமே பொல்லாத சயரோ கங்கள்
　　போக்கோடே காசமுத்தல் பொல்லாச் சூடு
நாகுமே கதிரொளிபோல் மேனி யாகும்
　　நாடர்து தசையடைப்பு நாட்டி வில்லை
வாகுமே பவுத்திரமும் ஏப்பம் போகும்
　　வடிவான இருமலொடு மாண்டு போமே
தாகுமே தவிராது சோகை சன்னி
　　தாட்டிகமாய்ப் போகுமது தண்மை யாமே 725

தண்மையாம் வெகுகோடி நோய்கள் போகும்
　　தவிப்பிளைப்பு கண்டத்தின் மாலை போகும்
உண்மையாய்க் கல்லடைப்பு இலிங்கப் புற்று
　　உறுதியாய்ப் போகுமது உண்மை பாரு
வண்மையாய் உலகத்தில் வாதி மார்கள்
　　வழக்காடு வோரயத்தைச் செய்ய மாட்டார்
பண்மையாய் இரும்பென்றால் எளிசோ அல்ல
　　பதிவாக இரும்பினுட பெருமை கேளே 726

பெருமையாம் அயமெழுகு தன்னைச் சொன்னேன்
　　பேதையற நாகத்தின் மெழுகு கேளு
அருமையாம் நாகமது சேரு ஒன்று
　　அடவான இலுப்பெண்ணெய் தன்னி லேதான்
கருமையாம் இருபத்து ஒன்று தானும்
　　காரணமாய் உருக்கியே சாய்த்த பின்பு
நருமையாம் சாரமிட்டு உருக்கித் தீரு
　　நலமாகச் சாய்த்திடவே சுத்தி யாமே 727

சுத்தியாம் நாகமது சேரு வொன்று
　　சூட்சமாய்க் கரண்டிதனில் வைத்துருக்கு
பத்தியாய் உருகியது மணிபோ லாடும்
　　பதிவாக நாலுக்கு ஒன்று சூதம்
முத்தியாய்ச் சேர்த்துருக்கிக் கல்வ மிட்டு
　　முனையாக வெள்ளீயச் செயநீ ராலே
நத்தியே விட்டரைத்துக் கடிகை கேள்நீ
　　நலமாக இரண்டாகும் நடப்புத் தானே 728

தானேதான் விட்டரைத்து வில்லை தட்டித்
　　தாட்டிகமாய்க் கதிரிலிட்டுக் காயப் போடு
நானேதான் காய்ந்தபின்பு சொல்லக் கேளு
　　நலமாகப் பத்தெருவிற் புடத்தைப் போடு

கானேதான் தீயாறி யெடுத்துப் பாரு
கனிவாகச் செந்தூரம் அருணன் போலாம்
மானேதான் செந்தூரம் தனையெடுத்து
மயமாக நவலோகம் நூற்றுக் கொன்றே 729

ஒன்றாக இட்டுருக்கிப் பார்க்கும் போது
உறுதியாய் மாற்றென்ன நூறு மாகும்
கன்றாக மிகக்களிம்பு மாயி ருக்கும்
கனிவாக இக்களிம்பு குறைக்கக் கேளு
நன்றாக வெள்ளியெட்டுச் செம்பு நாலு
நலமாகச் சேர்த்துருக்கக் குறைந்து போகும்
வன்றாக மாற்றென்ன பத்து மாகும்
வடிவாகக் காவிக்கு இறங்குந் தானே 730

இறங்குமே யிதைவிற்றுச் சீவ னத்தை
யிதமாகச் செய்துமே ஞானந் தன்னை
வறங்குமே தேடி நீ வண்மை யாக
வடிவாகக் காய்சித்தி யுடனே பண்ணு
நறங்குமே அந்திசந்தி பணங்கால் வீதம்
நலமாகத் திரிகடுகி லுண்டு தேற
முறங்குமே வாதமுதல் பித்த மெல்லாம்
முடிவாக ஓடுமது மொழிய லாமே 731

மொழியவே பித்தநீர் பித்த மெல்லாம்
முனிவாக ஓடிவிடும் சிலேற்ப னங்கள்
தழியவே மகோதரங்கள் முப்பத்தி ரண்டும்
தாட்டிகமாய் ஓடுமது தண்மை பாரு
கழியவே மூலமுதல் பித்த வாய்பு
கனிவாக வலிகுன்மம் காணா தோடும்
நரியவே நரைதிரைகள் மீறி யோடும்
நாடாது வாயுவறும் நன்மை யாமே 732

ஆமேதான் உலகத்தில் வாதந் தன்னை
அடவாகக் கைபாகந் தெரியாதாலே
நாமேதான் வாதத்தைப் பொய்யென் பார்கள்
நலமாக யோகசித்தி நடப்பு மாகும்
வாமேதான் மனமிரங்கி வாதந் தன்னை
வடிவாகச் சொல்லிவிட்டேன் பிடிவா தத்தில்
தாமேதான் சொல்லிவிட்டேன் கருவைப்பாரு
கனிவாகச் சித்திதரும் கண்டு பாரே 733

கண்டுபார் உப்போடு உபர சங்கள்
காரணமாய்ச் சொல்லிவிட்டேன் கனிந்து கேளு
பண்டுமே பரியாசம் போலே யெண்ணிப்
பதிவாகச் செய்யாதே பாரி லேதான்
வண்டுபோ லாராய்ந்து வடிவம் பாரு
வாதாடிச் சூதாடி வண்மை யாக
முண்டுமே செய்யாதே முடிந்து கேளு
முனிவாக எல்லாமும் முனிந்து பாரே 734

பாருமே யென்றுசொன்னார் சிவனுந் தானும்
பதிவாக அம்மைக்கு அருளிச் செய்ய
நாருமே அம்மைதான் மனம கிழ்ந்து
நலமாக அசுவனிக்குச் சொன்னா ரப்பா
சாருமே அசுவனியும் உளங்கு ளிர்ந்து
சரியாக விசுவனிக்குச் சொன்னா ரப்பா
காருமே விசுவனியும் சோதித் தேறிக்
கனிவாக நந்திக்குச் சொன்ன வாறே 735

வாறுகேள் நந்தியவர் மகிழ்வு கூர்ந்து
வடிவாகத் தன்வந்திரி தனக்குச் சொன்னார்
கூறுகேள் தன்வந்திரி வாதந் தன்னைக்
குணமாகக் கைபாகம் சோதித் தேறி
நாறுகேள் அகத்தியர்க்குச் சொன்ன போது
நலமாக அகத்தியரும் கருணை கூர்ந்து
பாறுகேள் புலத்தியர்க்குச் சொன்ன போது
பதிவாகப் புலத்தியரும் பலன்சொன் னாரே 736

சொன்னதொரு புலத்தியரும் அருளே கூர்ந்து
துடியாக வடநூலை ஆய்ந்து பார்த்து
கன்னல்போல் கைபாக மாகச் சொன்னார்
கனிவாகத் தேரருமே சொன்னார் தாமே
அன்னியமாய்த் தேரருமே உள்ளங் கூர்ந்து
அடவாக உலகத்தில் வந்து சேர்ந்து
தன்னிகராய் வடமொழியைத் தேர்ந்து பார்த்து
தாட்டிகமாய்க் கனிவாகச் சொல்லிட் டாரே 737

சொன்னதொரு களங்கோடு செந்தூ ரம் சுண்ணம்
சொற்பெரிய தைலமொடு மெழுகு கூட
நன்னயமாய்க் கைபாக வரிசை கூட
நலமாகப் பார்த்துமே தேறி நல்லாய்

கன்னல்போல் சொல்லிவிட்டேன் செம்புப் போக்கைக்
கனிவாக இதன்பெருமைக் கணக்கு மெத்த
இந்நிலத்தில் ரசவாதி பிழைக்கத் தானும்
இதமாக யான்கண்டு சொல்லினேனே. 738

சொல்லிவிட்டேன் கைபாகந் தன்னைப் பார்த்து
சிறப்பாகச் சாத்திரத்தைப் படித்துத் தேறி
நல்லியே சூத்திரமு நல்லாய்ப் பார்த்து
நலமாக வகைகண்டு நாடிக்கண்டு
உல்லிடவே வகையதனை விரும்பிப் பார்த்து
உறுதியாய் எல்லாமும் கண்டு தேறு
கல்லிடவே எல்லாமும் சித்தி யாகும்
சாத்திரத்தைக் கண்டவர்க்கு வாத மாமே. 739

வாதமது கைபாக வரிசை கண்டாய்
வடிவாக எளிசாகும் வண்மை பாரு
நாதமது ஏவலது கேட்கும் பாரு
நலமாகக் காயசித்தி யுடனே யாகும்
பூதமது பணிவிடையாம் செய்ய நன்று
பிலமான காயத்தைச் சித்தி பண்ணு
சூதமது உடனேதான் கட்டிப் போகும்
சூட்சாதி சூட்சமது துயந்து பாரே. 740

695-740 - நாகச் செயநீர்

இன்னமொரு உப்பு வழியைச் சொல்லுகின்றேன். நாதாக்கள் ஒளித்திட்ட குருவைக் கண்டு, நூலெல்லாம் பார்த்து, சிவன் சொல்லக் கேட்டுத் தெளிந்து, கைபாக வரிசையாக நாகச் செயநீரைச் சொல்லு கின்றேன்.

நாகம் ஒரு சேர். கரண்டியில் போட்டு உருக்கிப் பின்பு இறக்கி வைத்துக் கொண்டு இரசம் சீறித் துள்ளாமல் கண்ணுச்சிரட்டை மேலே வைத்து இரசத்தை ஒழுக விடுக. பிட்டாகும். அதனோடு வீரம் சேர்த்தல் வேண்டும். அதற்குரிய கொச்சி வீர வைப்புக் கூறுகின்றேன் கேள்.

698-700 கொச்சி வீர வைப்பு

கடைவீரம் ஒரு பங்கு. அதனுடன் அன்னபேதி நாலிலொரு பங்கு. கல்லுப்பு நாலிலொரு பங்கு. துரிசு நாலிலொரு பங்கு ஆகிய மூன்றையும் சேர்த்துப் பொடியாக்கி மேருவென்ற பெயருள்ள காசிக் குப்பியில் போட்டு வளப்பக்கல் என்ற மாக்கல் வட்டால் மூடி ஏழு சீலை

மண் செய்து காயவைத்துப் பன்னிரண்டு சாமம் எரித்து வாங்கு. தேங்காய்த் திருகல்போல் உயர ஏறி இருக்கும். இங்ஙனம் ஐந்துமுறை முற்கூறிய பொருள்கள் சேர்த்து எரிக்கச் சிவந்த கொச்சி வீரமாகும்.

நாகப் பிட்டுடன் இவ்வீரத்தை எடைக்கெடை சேர்த்து அரைக்கத் தண்ணீராகும். சிவந்து நிற்கும். இந்நீர் ஒருசேர் முற்கூறிய முறைப்படி செய்த வெடியுப்புச் செயநீர் ஒருசேர் ஆக இரண்டினையும் ஒன்று சேர். பொங்கும் காரமாகும்.

இலிங்கம் ஒருசேர் எடுத்து நாகச் செயநீரில் தோய்த்து அனலில் வாட்ட மெழுகாகும். ஒன்பதிலும் நூற்றுக்கு ஒன்று சேர். எட்டுமாற்று ஆகும். பயன்படுத்திக்கொண்டு தவம் செய்.

ஒருசேர் வீரத்தை மேற்படி செயநீரில் தோய்த்து அனலில் காட்டு மெழுகாகும். செம்பில் நூற்றுக்கு ஒன்று கொடு. பத்தரை மாற்றுத் தங்கமாம்,

வீரமெழுகைக் கல்வத்தில் இட்டு நாகச் செயநீரால் ஆட்டித் தங்கத் தகட்டில் பூசி வெயிலில் காயவைத்து பத்தெருப் புடமிடு. தங்கம் மெழுகாகும். ஒன்பதிலும் நூற்றுக்கு ஒன்றிடப் பத்து மாற்று. எட்டி-லொன்று வெள்ளி சேர்க்க மாற்றும் எட்டாகும்,

தங்க மெழுகினைக் காலை மாலை காற்பண அளவு உண்டு வர உடலுறுதியாம். நரைதிரைகள் அற்றுப் போகும். நமன் உண்ட கற்பம் இது. நானும் உண்டேன். இதுவே கற்பத்துக்கு ஆதி.

மேலும் 713, 714-ல் அறிவுரை காண்க.

செம்புக் குரு

தங்கமெழுகைக் கல்வத்திலிட்டு நாகச் செயநீர் விட்டு இருசாமம் ஆட்டிச் செம்புத் தகட்டின்மேல் தடவிக் காயவைத்து 10 எருப்புடமிடு பச்சையாய்க் குருவாகும். ஒன்பதிலும் நூற்றுக்கு ஒன்று கொடுக்கப் பத்து மாற்று.

செம்பு மெழுகினைக் காலை மாலை காற்பண அளவு மண்டலம் ஒன்றுண்ண உடல் பச்சை நிறமாகும். நரம்பும் பச்சையாகும். நரை திரையற்றுப் போகும். செம்பினை மெழுகு செய்யக் கருது. இனி அய-மெழுகு கேள்.

அய மெழுகு

அயத் தகட்டின்மேல், நாகச் செயநீர் விட்டு அரைத்துச் செம்பு மெழுகினைப் பூசிக் காயப் போட்டு 10 எருப்புடமிடு. அயம் மெழுகாகும்.

ஒன்பதிலும் நூற்றுக்கு ஒன்று கொடு. பத்து மாற்று. எல்லாமும் சித்தியாகும். உண்மையுணர நலமாக என் நூலைக் காப்பு முதல் கடைசி வரைப் பார். ''நலமாகக் காப்போடு கடையும்பாரு''.

காலை மாலை காற்பண அளவு அயமெழுகினைத் திரிகடுகுத் தூளில் வைத்துத் தேனில் குழைத்து உண்டு தேறு.

வாதவலி குன்மவாய்வு மகோதரம் அட்டகுன்மம் ஒடிவிடும். (பெண் பார்வை ஆகாது) சூலை மகோதரம் கல்லடைப்பு தணிந்தவாய்வு பக்கவாதம் ஒருத்தலை நோய் பிடரிவலி மண்டைக்குத்து இடுப்புவலி கைகால் இசிவு அண்டவாதம் நரித்தலை வாதம் போய் விடும். பொல்லாத சயரோகம் காசம் பொல்லாச் சூடு தசையடைப்பு பவுத்திரம் ஏப்பம் இருமல் சோகை சன்னி கண்டமாலை கல்லடைப்பு இலிங்கப்புற்று தவிப்பு இளைப்பு முதலியன நீங்கும். மேனி கதிரொளியாகும். 'வெகுகோடி நோய்கள் போகும்'. உறுதியாய்ப் போகும். வழக்காடுவோர் அயத்தைச் செய்ய மாட்டார். இரும்பென்றால் எளிதோ? அன்று. இரும்பினுட பெருமையைக் கேட்டுத் தெரிந்து கொள்.

நாக மெழுகு

நாகத்தை முன்கூறிய வண்ணம் தூயநயமாக்கி நாலுக்கு ஒன்று சூதஞ் சேர்த்துப் பிட்டாக்கி வெள்ளியச் செயநீர் விட்டு அரைத்து (இரு நாழிகை) வி.த,கா. சீ.ம,செ. 10 எரு புடமிடு. செஞ்ஞாயிறு போலாகும். ஒன்பதிலும் நூற்றுக்கு ஒன்று கொடு. உறுதியாய் நூறு மாற்று. மிகக் களிம்பினொடு இருக்கும். வெள்ளி எட்டும் செம்பு நாலும் அதனொடு சேர்த்து உருக்கப் பத்து மாற்றாகும். விற்றுச் செலவு செய்து நன்றாய் வாழ். காலை மாலை காற்பண அளவு திரிகடுகில் உணண நோயெல்லாம் போகும். நரை திரையற்றுப் போகும்.

வாதம் பித்தம் பித்தநீர் சிலேற்பனங்கள் மகோதரம் முப்பத்து ரெண்டு ஆகியன போகும். மூலம் பித்த வாய்வு வலி குன்மம் நரை திரை வாய்வு ஆகியன நீங்கும்.

கைபாகம் அறியார் மாற்றுக்கலையைப் பொய் என்பர். மனமிரங்கி மாற்றுக் கலையைச் சொல்லி விட்டேன். கருவைப் பார். கனிவாகப் பலிதமாகும்.

மாற்றுக்கலை கற்பித்தவழி

சிவன் அம்மை அசுவனி விசுவனி நந்தி தன்வந்திரி அகத்தியர் புலத்தியர் தேரர் யூகி முனிவர் ஆகியவர்கள் ஒருவர் பின் ஒருவர்க்காகக் கற்பிக்க இறுதியில் யூகி முனிவர் கரும்பு போல் இனிமையாக உலகோர்க்கு எடுத்துச் சொன்னார். கைபாகம் சாத்திரம் சூத்திரம் எல்லாம் வகை கண்டு

சொன்னேன். நூல் கண்டவற்கு மாற்றுக்கலை தெரியும். (மேலும் அறிவுரை செய்யுளிற் காண்க)

காரீயச் செம்பு

பாருமே உலகத்தில் வாதி மார்கள்
பதிவான செம்பெடுக்க அறியா மல்தான்
காருமே மூலமுத லாறா தாரம்
கனிவாகத் தேடியே அலைவா ரப்பா
சோறுமே பிச்சையது வாங்கி யுண்டு
சூட்சாதி சூட்சமெல்லாம் காணா வாதி
நாருமே வாதமது பொய்யென் பார்கள்
நமனான காயத்தை உறுதி பாரே 741

உறுதியாய் அறியாமல் வாதந் தன்னை
உற்றுமே பாராத வழக்கத் தாலே
நறுதியாய் நானறிந்த படியே சொன்னேன்
நாட்டிலே வாதசித்தி நல்ல தாகும்
அறுதியாய் ஞானமதுக் கிதுவே யாதி
ஆராய்ந்து பார்த்தவனே சித்தன் யோகி
வறுதியாய்ச் சாத்திரத்தைக் கண்ட வாதி
வடிவாக வாதமது செய்வர் தாமே 742

வாதமது செய்துமே உண்டு டுத்தி
வடிவாக யோகசித்தி வடிவு கண்டு
பூதமதை யறிந்துமே பஞ்ச லோகம்
புதிதாகக் கட்டியே புனித மாக
நாதமதைக் கெந்தியது ஆகும் பாரு
நலமாக வருகுமதை நம்பிப் பாரு
காதலுடன் அறிந்தவனே சித்தி பெற்றோன்
கனிவாக எல்லாமும் கண்டு பாரே 743

கண்டுபார் இன்னமொரு செம்பு மார்க்கம்
கனிவாகக் காரீயச் செம்பு சொல்வேன்
முண்டுமே கைபாக வரிசை யாகும்
முடிவான வாதியவன் முன்னே செய்து
பண்டுபார் இதைவிற்றுச் சீவ னத்தைப்
பதிவாகச் செய்துமே யுண்டு தேறு
வண்டுபார் இச்செம்பு வேதை கோடி
வடிவாகத் தங்கமது ஆகும் பாரே 744

ஆகுமே துரிசியது சேரு வொன்று
அடவாகக் கரியோட்டில் வைத்து ஊத
நாகுமே வெள்ளைநிறம் ஆகும் பாரு
நலமாகக் காரத்தை இடையே யிட்டு
வாருமே கல்வமிட்டு அரைத்து உருக்கு
வடிவாகப் பதம்பாரு வண்மை கேளு
சாருமே எல்லாமும் ஒடுங்கி நிற்கும்
சத்தமது கேட்குமாம் தன்மை யாமே 745

ஆமேதான் சத்தமது கேட்கும் போது
அடவாகத் தீயாற்று பின்பு பாரு
நாமேதான் சிவந்தநிற மாயி ருக்கும
நலமாக உருகாது பருவந் தன்னில்
காமேதான் எடுத்துநீ கல்வத் தில்தான்
கனிவாகக் கொட்டியே கருத்துக் கேளு
தாமேதான் புதுசான அரப்பொ டியும்
தாட்டிகமாய் எடைசமனாய்ச் சேர்த்தி டாயே 746

சேர்த்துமே பழச்சாறு விட்ட ரைத்துச்
சிறப்பாகக் காயவைத்துப் பொடிய தாக்கு
காத்துமே குகையிலிட்டு உருக்கித் தீரு
கனிவாக உருகாது புட்டுப் போல
தாத்துமே இருக்கையிலே யெடுத்துக் கொட்டி
நலமாக வெங்காரம் (சமன்) நாலத் தொன்று
வார்த்துமே சேர்த்தரை பழச் சாற் றாலே
வடிவாக வில்லைகட்டிக் கதிரி லிட்டே 747

இட்டுமே காய்ந்தபின்பு சொல்லக் கேளு
இதமாக ஓட்டிலிட்டு மூடி நீயும்
கட்டுமே சீலை செய்து புடத்தைப் போடு
கனிவாகப் பெரியபுடம் போட்டெ டுக்க
நட்டுமே திரும்பவுமே கல்வத் திட்டு
நலமாக வெங்கார மிடையே சேரு
முட்டுமே பழச்சாறு விட்ட ரைத்து
முனிவாக வில்லைகட்டி மொழியக் கேளே 748

மொழியவே காயவைத்துப் பின்பு கேளு
மேதினியில் ஓட்டிலிட்டுப் புடத்தைப் போடு
நழியவே திரும்பவுமே கல்வத் திட்டு
நலமாகப் பழச்சாறு விட்ட ரைத்து

கழியவே வில்லைகட்டிக் கதிரி லிட்டுக்
கனிவாகப் புடத்தையே போட்டுத் தீரு
தழியவே யிப்படிக்குப் புடமும் போடத்
தாட்டிகமாய் இரும்பதுவும் கருக்கும் தானே 749

கருக்குமே இரும்பதனை வெங்கா ரந்தான்
கனிவாகக் கொன்றுவிடும் புடத்தி லேதான்
வருக்கமே உருகுமுகந் தன்னி லேதான்
வடிவாக வெங்காரங் கொல்ல மாட்டா
நருக்கமே செம்பைவிட்டு இரும்பு தானும்
நலமாக ஓடிவிடும் நல்ல தாகும்
பெருக்கமே செம்பதனை யுருக்கிப் பாரு
பிசகாமல் அயமிருந்தால் பின்பு கேளே 750

கேளுமே பரிட்சைதனைச் சொல்லக் கேளு
கெடியாகச் செம்பதுவும் கருத்துப் போகும்
நாளுமே யதையெடுக்க வித்தை கேளு
நலமாகச் செம்பதனைத் தகடாய்த் தட்டி
காளுமே கல்லுப்புப் பலமு நாலு
(கணக்காக) ஒன்றிடுநீ சுண்ணந் தன்னை
வாளுமே ரெண்டுமொன்றாய்க் கரைத்துக் கொண்டு
வடிவாகக் குழப்பியே வன்மை கேளே. 751

வண்மையாய்க் குழம்பியே வைத்து நீயும்
வடிவாகச் செம்புதனைக் காய்ச்சிக் காய்ச்சி
உண்மையாய் தோய்ச்சுமே பார்க்கும் போது
உறுதியாய்ச் செம்பில்நின்ற அயமும் தானும்
தண்மையாய்க் கழன்றதுவும் செம்பு தானும்
தாட்டிகமாய்ச் சோதிமய மாயி ருக்கும்
கண்மையாய்ச் செம்பதனைத் தகடு தட்டிக்
காரணமாய் மேற்பூச மருந்து கேளே 752

கேளுமே மேற்பூச மருந்து கேளு
கெடியாகக் கெந்தியது முக்கா லாகும்
வாளுமே வீரமது காலு மாகும்
வடிவாக ரெண்டுமொன்றாய்க் கல்வத் திட்டு
நாளுமே பழச்சாறு விட்ட ரைத்து
நலமாகச் செம்பென்ற தகட்டில் பூசி
பாளுமே சுண்ணாம்புக் கவசம் கட்டிப்
பதிவாகப் பத்தெருவில் புடத்தைப் போடே 753

போடவே பத்தெருவில் புடத்தைத் தானும்
பொலிவாக எடுத்துப்பார் நொறுங்கிப் போகும்
ஆடவே நொறுங்காமல் இருந்த தானால்
அடவாகப் பின்னுமே புடத்தைப் போடு
நாடவே புடமாறி யெடுத்து நல்லாய்
நலமாகக் கரிபோல தூளு மாகும்
வாடவே தூளெல்லாங் கார மிட்டு
வடிவாக உருக்கிடவே வண்மை யாமே 754

வண்மையாம் காரமிட்டு உருக்கிப் பார்க்க
வடிவாகச் சத்தாக இருக்கும் பாரு
தண்மையாய்ச் சத்தெடுத்து உடைத்துப் பாரு
தவளநிற மாகஅது உடைந்து போகும்
உண்மையாய் இதைக்கார மிட்டு ருக்கு
இதமாகச் சத்தில்நின்ற காரந் தானும்
பெண்மையாய் ஓடிவிடும் பின்பு தானும்
பேசரிய கைபாகம் சொல்லக் கேளே 755

சொல்லவே காரீயம் நாலத் தொன்று
கருதிபெற நாலுக்கு ஒன்று தானும்
நல்லவே களங்கு எடை சேர்த்தரைத்து
நலமாக வில்லைகட்டிக் கார மிட்டு
வெல்லவே யுருக்கிவிடு ஈயந் தானும்
விதமாகச் சத்தில்நின்ற செம்பு தானும்
கல்லவே காரீயம் இழுத்துக் கொள்ளும்
கனிவாகக் குகையிலிட்டு உருக்கிடாயே 756

உருக்கிடவே ஈயமது புகைந்து போகும்
உண்மையாய்ச் செம்பைத்தான் உருக்கிக் கொண்டு
பெருக்கிடவே தகடாகத் தட்டி நீயும்
பேசாமல் உப்பதனில் காய்ச்சித் தோய்க்க
நருக்கிடவே யீயமது புகைந்து போகும்
நலமாகச் செம்பதுவும் நிறத்தைக் கேளு
வருக்கிடவே செம்பஞ்சு நிறமு மாகும்
வடிவாக இச்செம்பு அதீத மாமே 757

ஆமேதான் செம்பஞ்சு நிறமு மாகும்
அடவாக ஈயமது களங்குக் காதி
நாமேதான் வர்ணமது மிகவும் உண்டாம்
நலமாகச் செம்பாலே கோடி வேதை

வாமேதான் ஈயமென்றால் எளிசோ அல்ல
வடிவாக ஈயமது சேர்ந்து வந்தால்
காமேதான் வெள்ளிதனில் பழுக்கும் பாரு
கனிவாக எல்லாமும் சித்தி யாமே 758

ஆமேதான் பட்டுநூல் தனக்குச் சாயம்
அடவாகப் போட்டதுபோல் வாத மார்க்கம்
நாமேதான் செம்புக்கு இரும்புச் சாயம்
நலமாக முன்னேதான் ஏற்றிக் கொள்ளு
காமேதான் துவராகும் துவரி னோடே
கனிவாகக் கெந்தியது துவர்பி டிக்கும்
சாமேதான் வர்ணமது நிரம்ப வாகும்
சரியாக ஆகுமது தண்மை யாகும் 759

தண்மையாம் செம்பதனில் சாயம் ஏற்றிக்
தப்பாமல் வெள்ளிதனில் கொடுத்த போது
வண்மையாம் வாங்கியே பழுத்துப் போகும்
வடிவான சித்திமிக வரிசை யாகும்
உண்மையாய்ச் சொல்லிவிட்டேன் பிடிவா தத்தில்
உற்றுமே யாராய்ந்து சோதித் தேறு
பண்மையாய்ச் சோதித்தால் எல்லாம் சித்தி
வடிவாக ஆகுமது வழக்கம் பாரே 760

741-760 - காரீயச் செம்பு

ஒருசேர் துருசு எடுத்துக் கரி ஓட்டில் வைத்து ஊது. வெள்ளை யாகும். அதனெடை காரம் சேர்த்துக் கல்வத்திலிட்டு அரைத்து உருக்கு. எல்லாம் ஒடுங்கி நிற்கும். ஓசை கேட்கும். தீயாற்றிப் பார். சிவந்த நிறமாக இருக்கும். உருகாத பருவத்தில் எடுத்துக் கல்வத்தில் கொட்டி புதிய அரப்பொடி எடை சமமாகச் சேர்த்துப் பழச்சாறு விட்டு அரைத்து சிறப்பாகக் காயவைத்துப் பொடியாக்கிக் குகையிலிட்டு உருக்கு. உருகாது. பிட்டுப் போல இருக்கும். எடுத்துக் கல்வத்தில் கொட்டி வெங்காரம் நாலில் ஒன்று சேர்த்துப் பழச்சாறு வார்த்து அரை வி.த.கா. சீ.ம.செ. பெரும்புடமிடு. எடு. மீண்டும் இருமுறை இங்ஙனம் புடமிடு. இரும்பு கருப்பாக இருக்கும். இரும்பினை வெங்காரம் கொன்று விடும். (உருகு முகத்தில் கொல்லாது) செம்பினை விடுத்து இரும்பு ஓடிவிடும். செம்பினை உருக்கிப் பார். அதனொடு அயம் இருந்தால் செம்பு கருப்பாக இருக்கும். அதனை நீக்க வழி கேள். நாலு பலம் கல்லுப்பும் ஒருபலம் சுண்ணாம்பும் ஒன்றாய்க் கரைத்துக் குழப்பி வைத்துக் கொண்டு செம்பினைக் காய்ச்சிக் காய்ச்சி உண்மையாய்த் தோய்ச்சுத் தோய்ச்சுப் பார்க்கும் போது அதனொடு

நின்ற இரும்பு கழன்று போம். செம்பு ஒளியுள்ளதாகும். அதனைத் தகடாகத் தட்டி அதனெடைக்கு முக்கால் கெந்தியும் காற்பாகம் வீரமும் சேர்த்துக் கல்வத்தில் இட்டுப் பழச்சாறு விட்டு அரைத்து அந்தச் செப்புத் தகட்டின் மேல் பூசிச் சுண்ணாம்புக் கவசம் கட்டிப் பத்தெருவில் புடம் போட நொறுங்கும். நொறுங்காமல் இருந்தால் பின்னும் ஒரு புடம் போடு. கரித்தூளாக இருக்கும். வெண்காரமிட்டு உருக்கச் சத்தாக இருக்கும். அதனை எடுத்து உடைத்துப் பாரு. தவள நிறமாக அது உடைந்து போகும். இதனைக் காரமிட்டு உருக்கு. சத்தில் நின்ற காரம் ஓடிவிடும். காரீயம் நாலுக்கு ஒன்று அந்தக் களங்கின் எடை சேர்த்து அரைத்து வி.த.கா. காரமிட்டு உருக்கி விடு. சத்தில் நின்ற செம்பினைக் காரீயம் இழுத்துக் கொள்ளும். குகையிலிட்டு உருக்கு. ஈயம் புகைந்து போகும். மீண்டும் செம்பினைத் தகடாகத் தட்டிக் காய்ச்சி உப்பில் தோய்க்க மீண்டும் ஈயம் புகைந்து போகும். செம்பு செம்பஞ்சுக் குழம்பின் நிறமாகும். இச் செம்பு அதீதமாகும். அடைவாக ஈயம் களங்குக்கு ஆதி. நிறம் மிகவும் உண்டாகும். செம்பாலே மாற்றுக் கோடி. ஈயம் எனிதன்று ஈயம் சேர்ந்து வந்தால் வெள்ளி பழுக்கும். பட்டு நூலுக்குச் சாயம் போட்டது போல் செம்புக்கு இரும்புச் சாயம் முன்னதாக ஏற்றிக் கொள். துவராகும். அத்துவரினோடு கெந்தியும் துவர் பிடிக்கும். நிறம் நிரம்ப ஆகும். செம்பில் சாயம் ஏற்றி வெள்ளியிலிட்டுருக்கும் போது வெள்ளி பழுத்து விடும். உண்மையைக் கூறிவிட்டேன். ஆராய்ந்து தெளி.

நொறுக்கு வெள்ளி

வழக்கமாம் வெள்ளி வழுத்தக் கேளு
வடிவாக வெறுவெள்ளி தன்னி லேதான்
நழக்கமாய்க் கொடுத்திடவே மாற்றே றாது
நலமாக வெள்ளியதைச் சுத்தி செய்ய
கழக்கமாய்ப் பழுத்துவிடும் கண்டு பாரு
காரணமாய்க் கைமுறையும் செய்முறையும் பாரு
உழக்கமாம் எல்லாமும் சித்தியாகும்
உற்றுமே யராய்ந்து பார்த்தி டாயே 761

பார்த்திடவே வெள்ளியது சேரு வாங்கு
பதிவாகத் தகடாகத் தட்டிக் கொண்டு
காத்திடவே கெந்தகத்தை யிடைய ரைத்துக்
கனிவாகப் பழச்சாறு தன்னி னாலே
வார்த்திடவே அரைத்துமேல் பூசித் தீரு
வடிவாகப் பத்தெருவில் புடத்தைப் போடு
நாத்திடவே நொறுங்கியது கரித்தூ ளாகும்
நலமாகத் தூளுக்கு நாலத் தொன்றே 762

ஒன்றாக இட்டுமே வீரந் தன்னை
உற்றுமே பழச்சாறு விட்ட ரைத்து
நன்றாக வில்லைகட்டிப் புடத்தைப் போடு
நலமாகத் தீயாற்றி யெடுத்துப் பாரு
கன்றாக வெள்ளியது மாவு மாகும்
கனிவாகக் காரமிட் டுருக்கி னாக்கால்
வன்றாகக் குறையாது எடைபோ காது
வடிவாகத் தும்பைமல ராகும் பாரே 763

ஆகுமே இந்தவெள்ளி தன்னைத் தானும்
அடவாகச் செம்புவந்த இடங்க ளெல்லாம்
தாகுபெறச் சேர்த்திடவே வர்ண மேறும்
தாட்டிகமாய் உட்கொண்டு பழுக்கும் பாரு
வாகுபெறப் புடமிறங்கும் வேதை ரொம்ப
வடிவாக வாதமிதி வெளிசி லாகும்
பாகுபெற வாதமது வந்த பேர்கள்
பதிவாகச் சொல்லார்கள் பண்பு மாமே 764

ஆமேதா னிந்தவெள்ளி பலமும் பத்து
அடவாக முன்செம்பு பலமும் ஒன்று
தாமேதான் குகையிலிட்டு உருக்கிப் போடத்
தப்பாது எட்டாகுந் தன்மை பாரு
தாமேதான் தங்கமென்ற தாயைத் தானும்
கனிவாக எட்டுக்கு ஒன்று சேரு
வாமேதான் உருக்கிடவே மாற்றுத் தானும்
வடிவாகப் பத்தாகும் வண்மை யாமே 765

வண்மையாம் உப்புக்குங் காவிக் குந்தான்
வடிவாக ஓடாது வழக்கம் பாரு
தண்மையாய் இதைமுன்னே வைத்துக் கொண்டு
தாட்டிகமாய்ச் செலவுசெய்து பின்பு தானும்
உண்மையாய் அயச்செம்பைச் செந்தூ ரித்து
உறுதியாய் நவலோக பழுக்கச் செய்து
தண்மையாய் வாசியோ கத்தைப் பாரு
கனிவாகச் சித்தியது ஆகுந் தானே 766

தானென்ற நூல்தனிலே நாதாக்கள் சொன்ன
தாட்டிகமாய் எல்லாமும் செம்பு பண்ண
வானேதான் சொல்லிவிட்டார் வடிவு பாரு
வடிவாக அறியாத வாதி மார்கள்

நானேதான் காடுமே அலைந்து கெட்டு
நலமாகத் திரிவார்கள் வாதி யோரு
பானேதான் வாதத்தி லமடும் பட்டுப்
பதிவாக வாதியவர் பரீட்சை தானே 767

பரீட்சையாய்ச்சாத் திரத்திறத்தைப் பாராமல்தான்
பாகமதை இன்னதென்று அறியாமல்தான்
வரீட்சையாய் வாதத்தைத் தூஷ ணித்து
வடிவாகச் சாத்திரங்கள் பொய்யென் பார்கள்
நரீட்சையாய் நாய்போல அலைந்த லைந்து
நலமாக ஒன்றுமில்லாப் போன தாலே
கரீட்சையாய்க் காதலித்து வாதி தானும்
கருணைபெறப் புலம்புவார் காண லாமே 768

காணவே வாதியிடம் காத்திருந்தேன்
கனிவாகச் சாத்திரத்தைப் பாரா மல்தான்
ஊணவே ஒருவாதம் வந்த தென்று
உறுதிமிக நிரம்பவே சொல்லிச் சொல்லித்
தோணவே அலைவார்கள் சுட்டுச் சுட்டுத்
தொல்லுலகில் கரிக்குப் பொன் காசு காணேன்
வாணவே என்றுசொல்வர் வருத்தப் பட்டு
வாடியே அலைவரவர் மார்க்கத் தாரே 769

மார்க்கமாய் அயத்தினால் செம்பே யாச்சு
மயமான செம்புக்குக் கெந்தி தரனும்
வார்க்கமாய்ச் சாயமது மிகவே யாச்சு
வடிவாக வீரத்தால் பிரிக்க லாச்சு
நார்க்கமாய் எல்லாமும் கைபா கத்தால்
நாடறியச் சித்தியது நவில லாச்சு
கார்க்கமாய் வல்லோர்கள் செய்த நேர்மை
காதலித்துப் பார்க்கவே கணக்கு மாமே 770

கணக்காகப் பெரியோர்கள் வாதம் தன்னைக்
காதலித்து வெகுபாடு பட்டுப் பட்டுத்
துணக்காகக் கைபாகந் தெரியா தாலே
தொடர்பாக ஒன்றொன்றாய்ச் சோதிச் சுத்தான்
பிணக்காக வெகுகாலம் பார்த்துத் தேறி
பிசகாமல் அவரவர்க்கு வணக்க மாக
உணக்காகப் பணிவிடைகள் நிரம்பச் செய்து
உறுதியாய்க் கைபாகம் அறிந்து கொண்டேன் 771

கொண்டுமே வடமொழியைப் பார்த்துப் பார்த்துக்
கூரறிய சிவஞான போதங் கண்டு
முண்டுமே காதலித்த பொருளைக் கண்டு
முனிவாக எல்லாமும் அறிய லாகும்
வண்டுமே கைபாகம் அறிந்த பேர்கள்
வடிவாகச் செய்திடுவார் வழக்க மாக
உண்டுமே திரிந்தவற்கு வாத மில்லை
உற்றுமே பார்த்தவற்கு வாதந் தானே 772

தானென்ற வாதந்தா னௌிதில் வந்து
தாட்டிகமா யாகுமது தன்மை பாரு
வானென்ற கையாகந் செம்பு மார்க்கம்
வடிவாக ஆகுமது வண்மை யாகும்
நானென்ற ஆணவத்தை விட்டுக் கேளு
நாடியே பார்த்தறிய நல்ல தாகும்
கோனென்ற குணமறியச் சொல்லிப் போட்டேன்
கோடான கோடிவித்தை வாதந் தானே 773

வாதமாம் அயச்செம்பைக் கண்ட போது
வடிவாகத் தரித்திரம் விலகிப் போகும்
நாதமாம் கைபாகத் தாலே வாதம்
நலமாக வந்துவிடும் நடத்தை பாரு
சூதமதைக் கட்டினவன் வாதி யாகும்
சுடுவாதி துரோகியவன் காண மாட்டான்
காதல்தரும் அனுபவத்தைக் கண்ட போது
காரணமாய் ஞானம்வரும் கணக்கு மாமே 774

761-774 நொறுக்கு வெள்ளி

வெள்ளியைத் தூய தாக்கல் வேண்டும். வெறும் வெள்ளியில் மாற்று ஏறாது. தூய்மை செய்த வெள்ளி பழுக்கும்.

ஒருசேர் வெள்ளியைத் தகடாகத் தட்டி அதனெடை கெந்தகத்-தைப் பழச்சாறு விட்டு அரைத்துப் பூசிக் காயவைத்து 10 எருப்புடமிடு. நொறுங்கிக் கரித்தூளாகும். அதற்கு நாலில் ஒரு பங்கு வீரம் சேர்த்துப் பழச்சாறு விட்டு அரைத்து வி.த.கா. புடமிடு. வெள்ளி மாவாகும் காரமிட்டுருக்கத் தும்பை போலாகும். இந்த வெள்ளியை செம்பு வந்த இடங்களிலெல்லாம் சேர்க்க நிறம் ஏறும். இந்த வெள்ளி பத்துப் பலமும் முன்செம்பு ஒரு பலமும் குகையிலிட்டு உருக்க எட்டுக்கு மாற்றாகும். எட்டுக்கு ஒன்று தங்க-மென்றதாய் சேர்த்து உருக்கு. பத்து மாற்று.

இதனை முதலிற் செய்து செலவுக்கு வைத்துக் கொள். பின்பு அயச்செம்பினைச் செந்தூ ரித்து ஒன்பதிலும் கொடு. தவம் செய். 767, 68, 69 அறிவுரை.

அயத்தினால் செம்பு வாய்ப்பாகும். செம்புக்கும் கெந்தி சாயம். வீரத்தால் பிரிக்க லாச்சு. 771-773 அறிவுரை. அயச்செம்பைக் கண்ட-வுடன் வறுமை நீங்கி விடும். காதல்தரும். அநுபவத்தைக் கண்ட போது காரணமாய் ஞானம் வரும்.

அயச்செம்புச் செந்தூரம்

கணக்கறிய அயச்செம்பைச் செந்தூ ரிக்கக்
காரணமாய்ச் சொல்லுகிறேன் உற்றுக் கேளு
துணக்காகச் செம்பதுவும் பலமும் நாலு
துடியாகத் தங்கமது பலமும் நாலு
வணக்காகக் காரீயம் பலமும் ஒன்று
வடிவாக உருக்கிடவே வெட்டை யாகும்
பிணக்காக வெட்டைதனைக் கல்வத் திட்டுப்
பிசகாமல் உடைத்திட்டுப் பேசக் கேளே 775

கேளுமே கெந்தியது முக்கா லிட்டுக்
கெடியாக வீரமது காலுமிட்டு
வாளுமே கல்வத்தி லிட்டு நன்றாய்
வடிவாகப் பொற்ற லையின் சாற்றா லாட்டி
பாருமே வில்லைகட்டி ரவியில் போடு
பதறாதே காய்ந்தபின்பு பண்பு தானும்
நாளுமே பத்தெருவில் அடுக்கிப் போடு
நலமாகத் தீயாற்றி எடுத்துப் பாரே 776

எடுத்துப்பார் கருப்பான களங்கு மாகும்
ஏழைமதி போகாதே விதத்தைக் கேளு
அடுத்துமே யிரும்பதுவும் புதுசாய் வாங்கி
அடவாக ராவியே இடையே சேரு
நடுத்துமே பழச்சாற்றில் சாமம் ஆட்டி
நலமாக வில்லைகட்டிக் காயப் போடு
வடுத்துமே ஓட்டிலிட்டுப் புடத்தைப் போடு
வடிவாக எடுத்துப்பார் வழக்கம் ஆமே 777

வழக்கமாம் காரமிட்டு உருக்கி னாக்கால்
வடிவாக உருகியது களங்கு மாகும்
தழக்கமாம் வெள்ளிதனில் பத்துக் கொன்று
தாட்டிகமாய் இருபதுக்கு ஒன்று தானும்

கழக்கமாய்க் கொடுத்துருக்கி ஊதக் கேளு
கனிவாகச் சுக்கானை நிகடை பண்ணி
உழக்கமாய் இதிலிட்டு ஊதிப் போடு
உற்றுமே யாணிக்கு ஒக்கும் பாரே 778

ஒக்குமே இந்தமுறை கை பாகத்தை
உற்றுமே சிவன்றானும் ஓதி னார்பார்
தக்குமே இதைவைத்துச் சீவ னத்தைத்
தாட்டிகமாய்ச் செய்துமே பின்பு கேளு
பக்குமே ஞானவழி யடுத்துக் கூடு
பதிவாகச் சுழியோடே வழியி லேறு
துக்குமே பரமபத மடைந்து வாழ்வாய்த்
துடியாக எல்லாமும் சித்தி யாமே 779

சித்திக்க வேணுமென்றால் சொல்லக் கேளு
சிவபதவி யறியாத வாதி மார்கள்
நத்தியே வாதத்தி லமடு பட்டு
நலமாக வெகுசூடாய்ச் சுட்டுச் சுட்டுப்
புத்தியாய் நிரம்புவுந்தான் கேள்விப் பட்டுப்
புதுமைரச வாதமது செய்து பார்ப்பார்
சத்தியமாய் எல்லாமும் சித்தி யாகும்
தாய்சொல்ல யான்கண்டேன் தன்மை யாமே 780

ஆமேதான் வாதமது ஆருக் கென்றால்
அடவான சித்தர்சிவ யோகிக் காகும்
நாமேதான் வாசியோ கத்தைப் பார்ப்போர்
நலமாக இவர்களுக்குச் சுருக்கி லாகும்
காமேதான் உலகத்தில் பெண்டி ரோடே
கனிவாகச் சேர்ந்தவர்க்குக் கருணை கேளு
சாமேதான் தொட்டதெல்லாம் கரியாய்ப் போகும்
தவசியாம் சித்தியாம் ஆகுந் தானே 781

ஆகுமே சிவசொத்து இச்சித் தோர்க்கு
அடவாக அவருக்குக் கிட்டா வாறு
பாகுமே தங்கமது செம்பாய்ப் போகும்
பதிவாக அவர்களுக்குக் கிட்டா வாறு
ஏகுமே வாதமது கிட்டி னாக்கால்
இதமாகப் பெண்டிர்க்கு நகைகள் செய்வார்
வாகுமே யவர்களுக்குக் கிட்டா பாரு
வடிவாக யூகிமுனி வகுத்தார் பாரே 782

பாருமே அயக்களங்கைச் செந்தூ ரிக்கப்
பண்பாகச் சொல்லுகிறேன் பாரி லோர்க்கு
வாருமே களங்கதுவும் பலமு நாலு
வடிவாகக் கல்வத்தி லிதனை யிட்டு
நாருமே வெடியுப்புப் பலமோ பத்து
நலமாகச் சீனமது நாற்ப தாகும்
சாருமே இவைரெண்டும் பொடித்துக் கொண்டு
சாற்றரிய கலையத்தி லடைத்தி டாயே 783

அடைத்துமே வாலை-என்ற சட்டி மூடி
அடைவாகத் தீயெரிக்க வெள்ளை நீராம்
கடைத்துநீ வெள்ளையைத்தான் பிடித்து வைத்துக்
காரணமாய் மஞ்சள்நீர் தனைப்பி டித்து
விடைத்துமே முன்களங்கில் விட்ட ரைத்து
விதமாக இருசாமம் அரைத்துக் சேளு
நடைத்துமே வில்லைகட்டிக் காயப் போடு
நலமாகக் காய்ந்தபின்பு எடுத்தி டாயே 784

எடுத்துமே பார்த்தவுடன் சிவப்பு மாகும்
இதமாகச் செந்தூ ரம் முருக்கம் பூவாம்
நடுத்துமே நவலோகம் நூற்றுக் கொன்று
நலமாக இட்டிடவே மாற்றுக் கேளு
விடுத்துமே எட்டரையு மாற்று மாகும்
விதமாக இதைவிற்றுச் செலவு செய்து
சுடுத்துமே உண்டுடுத்தி ஞானம் பாரு
கனிவாக யோகமுதல் கண்டு பாரே 785

கண்டுபார் யோகமுதல் சுழியை நாடிக்
கனிவாகச் சுழியோடே வழியிற் சேர
முண்டுபார் மூதண்ட கூடந் தன்னில்
முனைசுழியில் அணுவாதி முரசை யுற்று
மண்டுபார் யோகவிதி ஞானத் தீயில்
மயமாக உள்ளிருந்து மாயை தள்ளு
வண்டுமே எல்லாமும் சித்தி யாகும்
வாகாகப் பார்த்திடவே மயக்கம் போமே 786

மயக்கம்போம் வாசிதனைக் கண்டு ஊத
மயமான கருணையினால் வழியு மாகும்
தயக்கம்போம் வாதிக்குச் சொன்ன புத்தி
தாட்டிகமாய் மாயைதனை யறுத்துத் தள்ளு

வயக்கமாம் வடிவாகக் காய சித்தி
வகையாகச் செய்திடவே சித்தி மெத்த
துயக்கமாயச் சித்தியது எதனா லென்றால்
சிவசிவா சிலம்பொலியி னாட்டுத் தானே 787

ஆட்டான கேள்வியினால் பொன்னைக் கண்டால்
அடவாகக் கண்ணுக்குத் தெரியு மோசொல்
கூட்டான குணமாகச் சொன்னா லென்ன
கூடியே வஸ்துவைக் கண்டு தேறு
வாட்டான வகையறிந்து கூடு கூடு
வடிவாக ஊதிவர வழக்க மாகும்
நாட்டான நாடறிந்த விதமே கேளு
நலமாகப் பார்த்திடவே சித்தி யாமே 788

ஆமேதான் சித்திக்க வேண்டு மென்றால்
அடவான காயமதை யருமை யாக
நாமேதான் குடிலமது நன்றாய்த் தோணும்
நாடறியச் சிவஞானம் நம்பிச் செய்ய
வாமேதான் மண்டலத்தில் ஞான போதம்
வடிவாகும் திரேகமது கற்றூ ணாகும்
சாமேதான் சொல்லிவிட்டேன் பிடிவா தத்தில்
சரியாக வாதமது தன்மை யாமே 789

தண்மையாம் மூலவன்னிப் பொருளி னாலே
தடையறவே எல்லாமும் சித்தி காணும்
உண்மையாம் வடிவுடையோன் வழியும் காண்பான்
உற்றுமே களங்கதுவும் மெத்த வாகும்
கண்மையாய்க் கதிரொளியின் போத மாகும்
கனிவான நடனசபை கண்டு பாரு
வண்மையாம் நாதவொலி கீத மான
வகையான மெய்ப்பொருளாம் வழக்க மாமே 790

வழக்கமாம் அந்திசந்தி பணங்கால் வீதம்
பணவெடைதான் உண்டு பார் பண்புமாகும்.......
தழக்கமாம் செந்தூரம் உண்ணும் போது
தாட்டிகமாய்ப் பெண்தள்ளு புளியுந் தள்ளு
சுழக்கமாய் இவைமுதலாய்த் தள்ளி யுண்ணு
காரணமாய்ச் சித்திதரும் கணக்கு மாகும்
பிழக்கமாய் நரைதிரைகள் அற்றுப் போகும்
பேசாதே மவுனத்தின் பேறும் ஆமே 791

ஆமேதான் பேறாக வேண்டு மென்றால்
அடவான செந்தூரம் உண்டு பாரு
காமேதான் நரைதிரைகள் அற்றுப் போகும்
கனிவாக மெய்யுணர்வு வந்து தீரும்
காமேதான் மெய்யுணர்வு வந்த போது
கனிவாக வாதசித்தி கனிந்து பாரு
பாமேதான் ராசயோ கத்தைப் பாரு
பதிவாக எல்லாமும் பண்பு மாமே 792

பண்பாக அயச்செம்பு எடுக்கும் மார்க்கம்
பதிவாக மூதுரையிற் சொன்ன வெல்லாம்
நண்பாகத் திருத்தியே பிடிவா தத்தில்
நலமாகச் சொல்லிவிட்டேன் நயந்து பாரு
உண்பாரை உடுப்பாரைக் கண்டு ஏங்கி
உறுதியாய்த் திரியாமல் வாதம் பாரு
பெண்பார்வை தள்ளியே வாதம் பார்த்தால்
பேருலகிற் சித்திதரும் பெருமை தானே 793

ஆமேதான் அயக்களங்கில் வேதை கோடி
அடவாகச் செந்தூரம் கோடா கோடி
நாமேதான் கைபாகம் கோடா கோடி
நலமான பொருளாசை கோடா கோடி
வாமேதான் சுட்டலைவார் கோடா கோடி
வடிவாகச் சாத்திரத்தைப் பாரார் கோடி
தாமேதான் வாதத்துக் கலைவார் கோடி
தனிச்செம்பு முடிப்பார்கள் கோடி தானே 794

கோடியாம் இரும்பைவிட்டுச் செத்த செம்பைக்
குணமாக நீபார்த்து உருக்கித் தீரு
வாடியே மெலியாது செம்பு தானும்
வடிவாக வெள்ளியது தன்னி லேதான்
கூடியே கொடுத்துநீ பழுக்கச் சுட்டுக்
குணமாகத் தங்கமது நாலத் தொன்று
தேடியே சேர்த்திடவே சித்தி சித்தி
சிவமாகச் சித்திக்க நூலைப் பாரே (795)

பாருமே சாத்திரத்தை விட்டு நீயும்
பண்பாக வாதவித்தை பார்த்தா யானால்
காருமே ஒன்றுந்தான் சித்தியில்லை
கனிவாக வாதமது வருக மாட்டா

நாருமே பெண்ணாசை கொண்டு வாழ்ந்து
நலமாக இருப்பவரோ உலக நீதி
தேருமே மனசொன்றி அறிவில் கூட்டித்
திடாகரித்துப் பார்த்திடவே சித்த னாமே (796)

சித்தனாம் ஆகவென்றால் சொல்லக் கேளு
சிறப்பாக முன்னேதான் செம்பைச் செய்து
பத்தனாய் உண்டுடுத்துப் பின்பு தானும்
பதிவாக வாதவிதி சாத்தி ரத்தை
நத்தியே பார்த்திடவே நல்ல சித்தி
நலமான பொருளெல்லாம் சித்தி யாகும்
முத்தியே மூவுலகுக் கேற்ற சித்தி
முனிவாகச் சொல்லிவிட்டேன் மூர்க்கமாமே (797)

மூர்க்கமாய் உப்பாலே கோடி வித்தை
முனிவான செந்தூரத் தாலே கோடி
ஆர்க்கமாம் உபரசத்தால் கோடி வேதை
அடவாக அயச்செம்பால் கோடி வித்தை
ஏர்க்கவே கைபாகங் கண்ட வாதி
இதமாகச் சித்தனா விருப்பா ரப்பா
வார்க்கவே உப்பில்லா வாதம் பார்த்தால்
வடிவாகச் சித்தியில்லை வாதி மாரே (798)

775-798 - அயச்செம்புச் செந்தூரம்

செம்பு நாலு பலம். தங்கம் நாலு பலம். காரியம் ஒரு பலம். இம்மூன்றும் ஒழுங்காக உருக்க வெட்டையாகும். இதனை உடைத்துக் கல்வத் திலிட்டு கெந்தி முக்காலும் வீரம் காலும் சேர்த்துப் பொற்ற லைக்கறிப்பான் சாற்றாலாட்டி வி.த.கா. 10 எருப்புடமிடு. கருங்களங்காகும். புதிய இரும்பு வாங்கி அராவி அதனொடை சேர்த்துப் பழச்சாறு விட்டு அரைத்து வி த.கா. சீ.ம.செ. புடமிடு. எடுத்துக் காரமிட்டுருக்கு. களங்காகும் வெள்ளியில் பத்துக்கு ஒன்று இருபதுக்கு ஒன்று கொடுத்து உருக்கி ஊத ஆணிக்கு ஒக்கும்.

சுக்கான் கல்லை ஆவின் நீர் விட்டரைத்து நிகடை செய்து அதனுள் வைத்து ஊத வெற்றி. . இந்த முறைமையான கைபாகம் சிவபெருமான் அருளியது. 780, 781, 782 அறிவுரை

செந்தூர முறை சேர்

களங்கு பலம் நாலு. இதனைக் கல்வத்திலிட்டு முன் சொன்ன முறைப்படி செய்த வெடியுப்புத் திராவகம் விட்டு 2 சாமம் அரைத்து

வி. த. கா. புடமிட்டு எடு. முருக்கம் பூப்போலாகும். ஒன்பதிலும் நூற்றுக்கு ஒன்றிட எட்டரையாம். செலவுக்காம். உண்டுடுத்தித் தவம் செய். மூதண்ட கூடச் சுழிமுனையில் அணு முதலிய சுழி ஒளியுள் ஞானத் தீயில் நின்று பார். மாயையை அறுத்துத் தள்ளு. வளிநிலை பழக மயக்கம் போம். உறுதியாகும். எதனால் வசம் என்றால் சிவசிவா சிலம்பொலியின் ஆட்டுத்தான். மூலவன்னிப் பொருளினாலே தடையறவே எல்லாமும் வெற்றியாகும். மெய்ப்பொருள் வழக்கம் பார். கதிரொளி நடனசபை நாதவொலி கீதம் தேர்.

காலை மாலை காற்பண அளவு உண். பெண் புகை புளி தள்ளு. நரை திரையற்றுப் போகும். முன்னர் மூதுரையிற் சொன்னவற்றைத் திருத்திப் பிடிவாதத்தில் சொன்னேன். அயக் களங்காலும் செந்தூரத்தாலும் வேதை மிகுதி.

இரும்பை விட்டுச் செத்த செம்பை உருக்கு, வெள்ளியிலே கொடு. நாலிலொன்று தங்கம் சேர். வாய்க்கும். நூனுட்பங்கள் விட்டு மாற்றுக்கலை பார்த்தால் வாய்க்காது. மனம் ஒன்றி அறிவிற் கூடிப்பார். மூவுலகுக்கு ஏற்ற சித்தி சொல்லி விட்டேன். உப்பாலே கோடி வித்தை. செந்தூரத்தாலும் உபரசத்தாலும் கோடி வித்தை உப்பில்லா வாதம் சித்தியில்லை.

சுருக்கு அயச் செம்பு

வாதியாம் இன்னமொரு செம்பு மார்க்கம்
வடிவாகச் சொல்லுகிறேன் வண்மை கேளு
நாதியாம் வெகுசுருக்கு செய்திட் டாக்கால்
நிலையாகும் சகலசித்தி யுடனே யாகும்
சாதியாம் கைபாகம் தவிர்ந்தி டாதே
சரியாகப் பார்த்திடவே சகல சித்தி
பாதிமதி சடையணிந்தோன் பரம நாதன்
பதிவாகச் சொன்னதிந்தப் பரிசு தானே 799

தானென்ற அரப்பொடியும் புதுசு தானும்
தாட்டிகமாய்ப் பலமொன்று கல்வத் திட்டு
நானென்ற துரிசியது சுட்டுத் தானும்
நலமாகப் பலம்நாலு செம்மி யிட்டு
கானென்ற கெந்தியது முக்கால் போடு
கனிவாக வீரமது காலும் இட்டு
வானென்ற பழச்சாறு விட்டு ஆட்டி
வடிவாக இருசாமம் ஆன வாறே 800

வாறுகேள் காய்ந்தபின்பு மூசைக் குள்ளே
வடிவாக வாரியே மேலே மூடி
நாறுகேள் சீலையது வலுக்கச் செய்து
நலமாக உருக்கிடவே யுருகி யாடும்
காறுகேள் நல்லாக உருக்கிக் கொண்டு
கல்வத்தில் கொட்டியே கருணை கேளு
பாறுமே வெங்காரம் பாதி சேர்த்துப்
பதிவாக அரைத்துமே பாரி லேதான் 801

பாரிலே அரைத்துமெள்ள வில்லை பண்ணிப்
பதிவாகக் கதிரிலிட்டுக் காயப்போடு
நாரியே காய்ந்தபின்பு ஓட்டி விட்டு
நலமாக மூடியே சீலை செய்து
வாரியே பத்தெருவில் அடுக்கிப் போடு
வடிவாகத் தீயாற்றி யெடுத்துப் பாரு
காரியே களங்காகும் கல்வத் திட்டுக்
கனிவாக வெங்காரம் பாதி சேரே 802

சேர்த்துமே பழச்சாறு விட்ட ரைத்துச்
செம்மையுடன் வில்லைபண்ணிச் சொல்லக் கேளு
காத்துமே பத்தெருவில் அடுக்கிப் போடு
கனிவாக எடுத்துமே குகையி லிட்டு
வாத்துமே உருக்கிடவே யுருகி யாடும்
வடிவாகக் கொப்பளித்து மணிபோ லாடும்
சாத்துமே மேலேதான் கருத்து நிற்கும்
சரியாக இரும்பெல்லாம் கழிந்து போமே 803

கழியுமே இரும்பதுவும் சவுடுதிரைகள் அற்றுக்
கழிவாகச் செம்பைவிட்டுக் கழிந்து போகும்
பழியுமே செம்பதுவும் நிறத்தைக் கேளு
பதிவாகச் செம்பஞ்சு நிறமு மாகும்
கழியுமே இச்செம்பில் வேதை கோ்டி
கனிவாகக் குருக்கோடி களங்கு கோடி
சழியுமே செம்பாலே எல்லாம் ஆச்சு
சரியாக வந்துவிடில் எல்லாம் ஆமே 804

எல்லாமாம் செம்பெடுத்து வெள்ளி தன்னில்
இதமாகக் கொடுத்துவிடப் பத்துக் கொன்று
நல்லாக இட்டிடவே மாற்றுக் கேளு
நலமாக மாற்றேழு காணும் காணும்

வல்லாக நாலுக்கு ஒன்று தங்கம்
வடிவாகச் சேர்த்துருக்கு எட்டு மாற்று
கல்லாக இருக்குமது இதனை விற்றுக்
கனிவாக ஆகுமது கணக்கு மாமே 805

கணக்காக இச்செம்பை முன்னே வைத்துக்
கனிவாக இதைவிற்றுப் பின்பு கேளு
துணக்காக உண்டுடுத்துச் சிவயோ கத்தைச்
சோதிக்க எல்லாமும் சித்தி சித்தி
வணக்கமாய்ப் பெரியோரைக் கண்டு நாடு
வடிவாகக் கைபாகம் பார்த்துத் தேறு
பணக்காக எல்லாமும் சித்தி யாகும்
பதிவாக அறிந்திடவே பலனு மாமே 806

பலனாக இச்செம்பைச் செந்தூரிக்கப்
பாகமதைச் சொல்லுகிறே னப்பா கேளு
வலனாக அயச்செம்பு பலமு நாலு
வடிவாகக் குகையிலிட்டு உருகும் போது
நலனாக நாலுக்கு ஒன்று தங்கம்
நாடியே குகையிலிட்டு உருகும் போது
கலனாக நாகமது ஒன்று தாக்கு
கனிவாக எல்லாமும் உருக்கி டாயே 807

உருக்கிடவே இலிங்கமது கட்டுக் கேளு
உணவாகச் சீனமது நாலு சேரு
வருக்கிடவே வெடியுப்பு ரெண்டு சேரு
வடிவாக இவைரெண்டும் கலையத் திட்டு
நருக்கிடவே சட்டி-கொண்டு மேலே மூடி
நலமாகச் சீலைமண் வலுக்கச் செய்து
சுருக்கிடவே தீயெரிப்பாய் சாமம் ஒன்று
கனிவாக வெள்ளைநீர் வருகும் பாரே 808

வருகுமே வெள்ளைநீர் தன்னை வாங்கி
வடிவாகச் சீசாவில் அடைத்து நீயும்
பருகுமே விராலியிலை ரொம்ப வாங்கிப்
பதிவாக இடித்துமே தூளுப் பண்ணி
நருகுமே புகைநீரைச் சேரு விட்டு
நலமாக இடித்துமே பிழிந்து நல்லாய்ப்
பெருகுமே பீங்கானில் இட்டுக் கேளு
பிசகாமல் இலிங்கமது சேரு வாங்கே 809

வாங்கியே கரியோட்டி லேற்றி நீயும்
வடிவாக முலைப்பாலால் சுருக்குத் தாக்கு
தாங்கியே சுருக்கிட்டுக் கழுவி வாங்கித்
தாட்டிகமாய் விராலியிலைச் சாற்றி னாலே
பாங்கியே சுருக்கிட்டுச் சாமம் ரெண்டு
பதிவாக இந்நீரிற் சாமம் நேரே
தேங்கியே சுருக்கிடவே இலிங்கந் தானும்
திடமாக முழுக்கட்டாய் கட்டுந் தானே 810

கட்டுமே இலிங்கமது மெழுகு தாக்கக்
கனிவாகக் கைபாக விவரம் சொல்வேன்
முட்டுமே பூசுரங்காய் குருணி வாங்கி
முனிவாக இடித்துமே கலையத் திட்டு
வட்டுமே பூப்புடத்தில் தைலம் வாங்கு
வடிவாகத் தைலமது இறங்கும் நல்ல
நட்டுமே தைலத்தால் கோடி வித்தை
நலமாக வித்தையதை நவிலக் கேளே 811

கேளுமே கட்டினதோர் இலிங்கந் தன்னில்
கெடியாகச் சுருக்கிடவே மெழுகு மாகும்
வாளுமே இலிங்கமது மெழுகெ டுத்து
வடிவாகத் தூரவே வைத்துக் கொண்டு
நாளுமே வீரமது மெழுகு கேளு
நலமாக வீரமது சேரு வொன்று
கூருமே கரியோட்டி லேத்தி நீயும்
குணமாக விராலியிலைச் சாறு தானே 812

தானென்ற சாற்றிலே சுருக்குப் போடு
தாட்டிகமாய் இருசாமம் சென்ற பின்பு
நானென்ற இதையெடுத்து வைத்துக் கொண்டு
நல்மாக (ஒழுங்காகச்) சுருக்குப் போடு
கோனென்ற மெழுகாகும் வீரந் தானும்
குணமாக மெழுகெடுத்து அப்பால் வைத்துப்
பானென்ற அயச்செம்பு உருகும் போது
பதிவாக நாலுக்கு ஒன்று தானே 813

தானேதான் தங்கமது ஒன்று போடு
தனியாக நாலுக்கு ஒன்று நாகம்
வானேதான் உருகையிலே கொடுத்து வாநீ
வடிவாக இலிங்கமது நாலுக் கொன்று

தானேதான் இலிங்கமெடை வீரம் போடு
கனிவாகக் களங்காக இருக்கும் பாரே
பானேதான் களங்கெடுத்து வயிர வற்குப்
பதிவாகப் பூசைசெய்து பரிவு கேளே 814

கேளுமே நவலோகம் நூற்றுக் கொன்று
கெடியாக இட்டுருக்கு எட்டு மாற்று
வாளுமே புடசெயமாம் இந்த வித்தை
வடிவாகச் செய்துமே பிழைத்து கொண்டு
நாளுமே வாசியோ கத்தைப் பாரு
நலமாகச் சுழிமுனையில் நன்மை பாரு
சாளுமே சுழிமுனையைக் கண்ட தேவர்
சரியாகச் சொல்லுவார் தருண மாமே 815

ஆமேதான் இக்களங்கு தன்னை வைத்து
அடவாகச் சீவனத்தைச் செய்து கொள்ளு
தாமேதான் சீவனத்தைச் செய்து கொண்டு
கனிவாகச் செந்தூரம் பண்ணக் கேளு
நாமேதான் கைபாக வரிசை கேளு
நலமாகப் பிடிவாதந் தன்னி லேதான்
சாமேதான் மூலிகையிற் சொல்ல வில்லை
சரியாகப் பார்க்கவே தருக்க மாமே 816

தருக்கமாம் களங்கதுவும் பலமும் நாலு
தாட்டிகமாய்க் கல்வத்தி லிட்டுக் கொண்டு
வருக்கமாம் புகைநீரை விட்ட ரைத்து
வடிவாக இருசாமம் சென்ற பின்பு
உருக்கமாம் உறுதியாய் வைத்துத் தேறு
உண்மையாய்க் கதிரிலிட்டுக் காயப் போடு
கருக்கமாய்ப் பொடியாக்கிக் குப்பி யிட்டுக்
கனிவாக மேல்மூடிப் பின்பு கேளே 817

கேளுமே பன்னிரண்டு சாமம் தீத்தான்
கெடியாகப் போட்டுநீ எரித்துப் பாரு
ஆளுமே கமலமுதல் தீபந்த தானும்
அடவாக எரித்திடவே பின்பு கேளு
நாளுமே குப்பியுடை பார்க்கும் போது
நலமாகச் சிவப்பாகும் செந்தூ ரந்தான்
பாளுமே நவலோகம் ஆயிரத்துக் கொன்று
பதிவாக இட்டிடவே பாக மாமே 818

பாகமாய் ஆயிரத்து எட்டு மாற்று
பதிவாகத் தண்ணீராய் மாற்றுக் காணும்
ஆகமாய் இம்மாற்று ஒருவ ருந்தான்
அடவாக வாங்கார்கள் தனித்துக் கண்டால்
யூகமாய் விற்றிடலாம் ஒழுங்கு மாகும்
உறுதியாய் இப்பொன்னைத் தணிக்கக் கேளு
தாகமாய் வெள்ளிதனை இடையே சேரு
தாட்டிகமாய்ச் செம்பு-தான் இடையே சேரு 819

சேர்த்துமே தானுருக்கி மாற்றுக் கேளு
சிறப்பாகப் பத்தரைதான் ஆணிக் கொக்கும்
பார்த்துமே பச்சையது பொன்னு மாகும்
பதிவாக இதையெடுத்து வைத்து நீயும்
சார்த்துமே அஞ்செழுத்தும் எட்டெ ழுத்தும்
சரியாகச் செபித்துமே இன்னம் கேளு
நார்த்துமே மணிமந்திரம் செபித்து நல்லாய்
நலமாகப் பூசைசெய்து பின்பு கேளே 820

கேளுமே இப்பொன்னை விற்க வேண்டாம்
கெடியாகக் கோயில்களில் வைத்திட் டாக்கால்
நாளுமே சகலசித்தி வாத சித்தி
நன்றாக எட்டெட்டும் சித்தியாகும்
பாளுமே போகாது பதிவு கேளு
பாங்காக நவகோடி சித்தர் தாமும்
வாளுமே வந்திட்டு நிருத்தம் செய்வார்
வடிவாக எட்டெட்டும் சித்தியாமே 821

ஆமேதான் எட்டெட்டும் சித்தியாக
அடவாக இப்பொன்னை வைத்துக் கேளு
நாமேதான் உண்டுடுத்தி நல்ல தாகும்
நலமாகச் சகலசித்தி நடப்பு மாகும்
பாமேதான் பசுபாச வினையும் தீரும்
பருதியொளி போலவே சித்தி யுண்டாம்
காமேதான் சொல்லிவிட்டேன் செந்தூ ரந்தான்
கனிவாகப் பார்த்திடவே கனக மாமே 822

கனகமாம் செந்தூரம் அந்தி சந்தி
கவலையுற மண்டலந்தான் முறைமை யாக
வளகமாம் திரிகடுகில் உண்டு வாநீ
வடிவாக வலிகுன்மம் எட்டும் போகும்

தனகமாம் வாயுவது சாடி யோடும்
தாட்டிகவான் சொன்னநல்ல புத்தி தன்னை
உனகமாம் உட்பொருளை ஆராய்ந் திட்டு
உற்றுமே பார்த்திடவே சித்தி யாமே 823

சித்தியாம் வாதவகை எல்லாம் தீரும்
சிறப்பாக அண்டத்தின் வாய்பு போகும்
புத்தியாம் நவலோகம் தங்கம் போல
புகலரிய மேனியது கற்றூணாகும்
நத்தியே வாலைமதன் போலே யாகும்
நலமாகக் கைபாகம் ஒளிவு காணும்
பத்தியாய் இதையுண்ணச் சித்தி மெத்த
பாரித்துப் பார்த்திடவே பகரு வாயே 824

பகரவே பித்தத்தின் நீர்கள் எல்லாம்
பதிவாக ஓடுமது பண்பு மாகும்
நகரவே பணமென்றால் சொல்லக் கேளு
நாதாந்த மூர்த்தியதை நாடிப் பாரு
வகரவே சேத்துமத்தைத் தீநீ ரெல்லாம்
வாதாடி ஒட்டுமது வழக்கம் சொன்னேன்
தகரவே மகோதரங்கள் எல்லாம் போகும்
தாட்டிகமாய்ச் குலைபிணி தன்மை யாமே 825

தன்மையாம் நீர்க்கட்டு நீரின் ரோகம்
தாட்டிகமாய் வெட்டைபிணி தானே யோடும்
வன்மையாம் வாதாடும் சோபை தீரும்
வடிவான கைபாக நிலைய றிந்து
உண்மையாய்ச் செய்திடவே யுலக வாழ்க்கை
உற்றுநீ யறிந்திடவே சித்தி மெத்த
பண்மையாய்ச் சித்திக்க வேணு மென்றால்
பாருலகில் ரசவாதம் பண்ணிடாயே 826

பண்ணிடவே ரசவாதம் வந்த போது
பதிவாக ஞானமது வலுத்துப் போகும்
உண்ணிடவே வாயுவது அகற்றிப் போடும்
உற்றுமே சகலசித்து ஆட லாகும்
நண்ணிடவே சித்தியது ஏதென் றாக்கால்
நலமாகச் சித்தருட சாத்தி ரத்தைக்
கண்ணிடவே பார்த்திடவே கருணை ரொம்பக்
காரணமாய்ச் சித்திதரும் கலக்க மாமே 827

ஆமேதான் கலக்கமதை நினைக்கி டாதே
அடவான மெய்ப்பொருளைக் கண்டு தேறு
நாமேதான் மெய்ப்பொருளாம் வாத மார்க்கம்
நலமான நிலையறிந்து நாடிப் பாரு
சாமேதான் நிலையென்றால் சாற்றக் கேளு
சரியாக லோகமது சகல சித்தி
வாமேதான் சத்தியமாய்ச் சொல்லி விட்டேன்
சதாசிவனும் அறியவே சாற்றி னேனே 828

799 - 828 - சுருக்கு அயச்செம்பு

இன்னமொரு செம்பு வழி கூறுவேன். கைபாகம் தவற விடாதே. இறைவன் சொன்னது இந்தப் பரிசு.

புதிய அரப்பொடி ஒருபலம். சுட்ட துரிசு நாலுபலம். கெந்தி முக்கால். வீரம் கால். பழச்சாறு விட்டு இருசாமம் ஆட்டிக் காய்ந்த பின் மூசைக்குள் இட்டு மேல்மூடிச் சீ.ம.செ. உருக்க உருகியாடும். கல்வத்தில் கொட்டி வெங்காரம் பாதி சேர்த்து அரைத்து வி.த.கா. சீ.ம.செ. 10 எருப்புடமிடு. களங்காகும். எடுத்துக் கல்வத்திலிட்டு பாதி வெங்காரம் சேர்த்துப் பழச்சாறு விட்டரைத்து வி.த.கா. சீ.ம.செ. 10 எருப்புடமிடு. எடுத்துக் குகைக்குள்ளிட்டுருக்கு. உருகியாடும். கொப்பளித்து மணி போலாகும். மேலே கருத்து நிற்கும் இரும்பெல்லாம் கழிந்து போகும். சவுடு திரையற்றுச் செம்பை விட்டுக் கழிந்து போகும். செம்பு செம்பஞ்சு நிறமாகும். இச்செம்பினால் மாற்றுக் கோடி. குருக்கோடி, களங்கு கோடி. செம்பாலே எல்லாம் ஆயிற்று. ஒழுங்காக வந்தால் எல்லாமாகும். செம்பெடுத்து வெள்ளியில் பதுக்கு ஒன்று இட்டுருக்க ஏழு மாற்று.

இதனைச் செந்தூரிக்க வழி தெரிந்து கொள். அயச்செம்பு 4 பலம் உருகும் போது நாலுக்கு ஒன்று தங்கம் கொடுத்து உருகும்போது நாகம் ஒன்று கூட்டு. எல்லாம் உருக்கு.

இனி இலிங்கக் கட்டுக் கேளு.

வெடியுப்புத் திராவகம் இறக்கும் போது முன்வரும் வெள்ளை நீரை ஒரு சேர் எடுத்து விராலியிலைத் தூளை அதனுள் போட்டு இடித்துப் பிழிந்து இலிங்கத்துக்குச் சுருக்கிடு. பின்பு கழுவியெடுத்து விராலியிலைச் சாற்றினாலே இரண்டு சாமம் சுருக்கிடு. பின்பு ஒரு முறை ஒருச் சாமம் சுருக்கிடு. இலிங்கம் முழுக்கட்டாகும். அதனை மெழுகாக்குதல் வேண்டும். பூவரசங்காய் குருணி வாங்கி இடித்துக் கலயத்தில் இட்டு பூப்புடத்தில் தைலம் வாங்கு. கட்டின இலிங்கத்திற்குச் சுருக்குத் தாக்கு. மெழுகாகும்.

இனி வீரமெழுகு கேள். ஒருசேர் வீரம் எடுத்து விராலி இலைச் சாற்றால் சுருக்கிடு இருசாமம் கழித்தபின்பு மீண்டும் எடுத்துச் (பூவரசங்காய்த் தைலம்) சுருக்கிடு. வீரம் மெழுகாகும்.

அயச்செம்பு உருகும்போது நாலுக்கு ஒன்று தங்கம் போடு. நாலுக்கு ஒன்று நாகம் போடு. அவ்வாறே நாலுக்கு ஒன்று இலிங்கம் போடு. இலிங்கமெடை வீரம் போடு. கனிவாகக் களங்காக இருக்கும் களங்கினை எடுத்து வைத்து வயிரவர்க்குப் பூசை செய். ஒன்பதிலும் நூற்றுக்கு ஒன்று கொடுத்து உருக்கு. எட்டு மாற்று. செய்து தவம் செய்.

இக்களங்கினைச் செந்தூரம் செய்ய முறை கேள். களங்கு நாலு பலம் கல்வத்திலிட்டுப் புகைநீர் ஊற்றியரைத்து இருசாமம் சென்ற பின்பு கதிரில் காயவைத்துக் காசிக்குப்பியில் இட்டு மேல் மூடித் தாமரைத் தீ விளக்குத் தீ ஒழுங்காக எரித்து எடுத்துப் பார். செந்தூரம் சிவப்பு நிறமாக இருக்கும். ஒன்பதிலும் ஆயிரத்துக்கு ஒன்று இட ஆயிரத்து எட்டு மாற்றாகும். தண்ணீராய் இருக்கும். இதனை ஒருவரும் விலைக்கு வாங்கார். இத்துடன் வெள்ளி செம்பு எடைக்கெடை சேர்க்கப் பத்தரையாகும். பசும் பொன்னாம். ஐந்தெழுத்தும் எட்டெழுத்தும் ஓது. பூசை செய். இப்பொன்னை விற்றல் வேண்டாம். கோவிலில் வைத்தால் எல்லாப் பலிதமும் உண்டாகும் அறுபத்து நான்கும் பலிக்கும். ஒன்பது சித்தர்களும் வந்து நடம்புரிவர். பசுபாச வினை தீரும். பரிதியொளி போன்று நலமுண்டாகும்.

காலை மாலை திரிகடுகில் ஒரு மண்டலம் முறைமையாக உண்ண வலி குன்மம் எட்டும் போகும். வாதவகை எல்லாந் தீரும். அண்ட வாய்வு போகும். உடல் தங்கம் போலாம். கற்றூண் போல் வலுக்கும். வாலை மதன் போலேயாகும்.

வாதநீர் பித்தநீர் சேத்துமநீர் மகோதரங்கள் சூலை நீர்க்கட்டு நீர்நோய் சோபை முதலிய நோய் போகும். ஞானம் வலுக்கும். மருந்து உண்ண வாயுவை நீக்கிப் போடும். மெய்ப் பொருளைக் கண்டு தேர். சத்தியமாகக் கூறிவிட்டேன். சதாசிவன் அறியச் சாற்றினேன். 829-846 அறிவுரை.

சாற்றினேன் வடமொழியைப் பார்த்துத் தேறிச்
சரியான வாதமொடு யோக நிட்டை
காற்றினேன் கனிவாக வாத நூலைக்
கனிவாகப் பார்த்துச் சித்தி காணவேண்டி
நாற்றிடவே பிடிவாதம் ஆயிரத்தில்
நலமாகச் சொல்லி விட்டேன் நடத்தை பாரு
வாற்றிடவே நடத்தைமிக ஆன பேர்கள்
வடிவாகச் சொல்வார்கள் பண்மை யாமே 829

வண்மையாம் வாகாக வாதம் பார்த்து
வடிவாகக் கைபாக வரிசை கண்டால்
தண்மையாம் சித்திக்க வேண்டு மானால்
தாட்டிகமாய் எல்லாமும் அநேக சித்தி
உண்மையாய்ச் சொல்லிவிட்டேன் அருளைப் பாரு
ஓகோகோ வாதவிதி யுற்றுப் பாரு
பெண்மையாய் எல்லாமும் கைபா கத்தால்
பேசாதே கைபாகம் பிறப்பு மாமே 830

ஆமேதான் அயச்செம்பு அறியச் சொன்னேன்
அடவான களங்கோடு செந்தூரம் சொன்னேன்
நாமேதான் கைபாக நடத்தை சொன்னேன்
நலமாகச் செம்பெடுக்க நாட்டம் சொன்னேன்
வாமேதான் சிவயோக வழியில் புக்கி
வடிவான திருவறிந்து மார்க்கம் கண்டு
தாமேதான் செய்திடவே சகல சித்தி
தாட்டிகமாய்க் கைபாக சித்தி தானே 831

சித்திக்க வேணுமென்றால் சொல்லக் கேளு
விசிவமான பூரணத்தின் செய்கை கண்டு
புத்தியினால் வாசியோ கத்தைக் கண்டு
புகலரிய சதுமுகமும் பொருத்தல் கண்டு
முத்தியாய் வழிஞான வரம்பு கண்டு
முனிவான சொல்லுறுதி முடிவு கண்டு
நத்தியே அட்டமா சித்தி கண்டு
நலமாகப் பூரணத்தை நாட்டி டாயே 832

நாடியே ஆறுதலம் வெளியாய்க் கண்டு
நன்மைதரும் சிலம்பொலியின் நடப்புக் கண்டு
கூடியே ஆதார வெளியும் கண்டு
குணமான அறுசுவையாம் பொருளை நல்கி
மூடியே சுகாதீத வரையி லேறி
முரசொலியுஞ் சிலம்பொலியு மருவல் கண்டு
சூடியே சுகமான நேசம் பாரு
சூட்சாதி சூட்சமதைத் தொடர்ந்து பாரே 833

பாருமே நடனவொலி கீதத் தாலே
பதிவாக ஆறுதலம் புக்கி நீயும்
வாருமே யண்டரண்டம் ஏறித் தீரு
வடிவாகக் காதலரைக் கண்டு நாடி

நாருமே சைதன்னிய வரையி லேறி
நாதாக்கள் சித்தாடி பணிந்து போற்றி
தேருமே சிவநடன தெரிச னத்தைக்
திடமாகப் பார்த்திடவே சித்தி யாமே 834

சித்தியாம் சருவபரி பூரணத்தைச்
செயமாகக் கண்டவனே சித்தன் யோகி
நத்தியே மனோவேகங் கொண்டு ஏறி
நலமாக ஆதார வழியிற் சொக்கிப்
புத்தியாய்க் கண்டறியப் பெருமை யாகும்
புகலவே பெருமைதரப் புத்தி புத்தி
சத்தியே கண்டல்லோ தரிசித் தேறு
சதாசிவனும் ஆண்மைமிகத் தருக லாமே 835

தருகவே கெவுனத்தி யோடும் போது
கனிவாகச் சித்தரெல்லாம் மெத்த வுண்டு
உருகவே யவரோடே வாது கூற
உணவாக வேண்டாங்காண் சருவ சித்தி
பெருகவே யாகுமது பேச வேண்டாம்
பிரியமாய் உலகத்தில் ஞானி தானும்
கருகவே மன்மதனை யொக்கப் பண்ணிக்
கனிவாக யோகியாய்க் கருகித் தானே 836

தானென்ற நூல்களிலே நாதாக்கள் சொன்னார்
தாட்டிகமாய்ச் சரக்கெல்லாம் கொன்று மேதான்
வானென்ற மித்துருவால் எழுப்பிக் கொள்ள
வடிவான அயச்செப்பு உடனே யாச்சு
நானென்ற ஆணவத்தை விட்டுப் போடு
நலமாக யோகமுதல் வாத சித்தி
ஊனென்ற உருவாகும் உறுதி தானும்
உற்றுமே கெவுனமது ஓடுந் தானே 837

ஓடுமே சூதத்தைக் கட்டி னோர்கள்
உறுதியாய்க் கெவுனமது உடனே யாகும்
கூடுமே தங்கசித்தி காய சித்தி
குணமான எல்லாமும் சித்தி யாகும்
வாடுமே கைபாகம் சித்தி யாகும்
வடிவான பொருளறிந்து மார்க்கம் பாரு
சாடுமே பட்டமது சீரு தப்பில்
சரியாகும் வாதமது ஆட்டுத் தானே 838

ஆட்டான பொருளறிந்தோன் வாதியாகும்
அடவான செயலறிந்தோன் சித்த னாகும்
கூட்டான குணமறிந்தோன் கெவுன நீதி
குலவாக எழும்பிமிகப் போவா னப்பா
தேட்டான செயலதனைக் கண்ட வாதி
சித்திபெற நாதரவர் செயலைப் போற்ற
நாட்டான நாகமென்ற லோகத் துள்ளே
நாடியே வகையறிய நன்மை தானே 839

தானென்ற சாத்திரத்தில் சொன்ன வாதம்
தவறாது யோகநிட்டை வந்த பேர்கள்
நானென்ற எல்லாமும் சித்தி யாகும்
உற்றுமே தொட்டதெல்லாம் உடனே சித்தி
நானென்ற அவையடக்கம் சித்தி யாகும்
நலமான சித்திமிக வந்து கூடும்
பானென்ற பலனாகும் (ஆய்ந்து பார்நீ)
தொட்டதெல்லாம் அறிந்துணரப் பண்பு மாமே 840

பண்பாக மனதடக்கம் பண்ணிக் கொள்ளப்
பகலவன்போல் மேனியாம் பரிந்து கூர
வண்பாக வாயுவினால் பலனைக் காண
வடிவாகச் சித்திதரும் வண்மை யாகும்
நண்பாக நன்மையது நாடா தோர்கள்
நலமாக அலைந்துமே திரிவா ராகும்
பெண்பார்வை தள்ளினோர் பேதை வாதி
பேசாதே யிருந்தவனே சித்த னாமே 841

சித்தனென்று பேர்படைத்தாய் எதனா லென்னில்
சிறப்பாக வாதசித்தி கண்ட போது
பத்தனாய்த் திரிந்துலையாப் பாகத் தாலே
பதிவாகக் காரணத்தின் பண்பி னாலே
முத்தனாய் இருப்பார்கள் முன்னே சொன்னேன்
முனிவாக யோகசித்தி மொழிய லாகும்
நத்தனாய் ஆறுதலம் வெளியைக் காண
நலமாக ஆதியந்தம் நன்மை பாரே 842

நன்மையாம் அயச்செம்பை முன்னே பாரு
நலமாக அதன்பின்னே களங்கை நல்லாய்
வண்மையாய்ப் பார்த்திடவே சித்தி ரொம்ப
வடிவாக இம்முறைகள் நிசமே யாகும்

தண்மையாய் அயச்செம்பை எடுத்து வேடம்
தாட்டிகமாய்ப் பண்ணியே போட்டுக் கொள்ளு
உண்மையாய்த் தொட்டதெல்லாம் சித்தி யாகும்
உறுதிமிக ஆகுமது உண்மை தானே 843

தானென்ற ரசவாதி யோக வாதி
தாட்டிகமாய்ச் சகலசரக் கதனைப் பார்த்து
நானென்ற ஆணவத்தால் சுட்டுச் சுட்டு
நலமாகச் சரக்குகளை நாடிப் பார்த்து
ஊனென்ற கைபாகம் தெரியா தாலே
உற்றுமே சத்துருவை யறியா தாலே
வானென்ற பாகத்தை விட்டு விட்டு
வடிவாக அலைவார்கள் வாதி யோரே 844

அலையாமல் கைபாகந் தன்னைக் கண்டு
ஆதரவாய்ச் சத்துருமித்துருவ றிந்து
கலையாகக் கைபாகம் சாத்தி ரத்தில்
கனிவாக மறைத்ததொரு பாகம் கண்டு
நிலையாகத் துரும்பைத்தான் தூணு மாக்கு
துடியாக எல்லாமும் அநேக சித்தி
விலையாக ஆகுமது தங்கந் தானும்
விதமாகக் குருவினால் விரும்பி டாயே 845

விரும்பியே ஓங்கார வட்டத் துள்ளே
விதமாகச் சகலநூல் எல்லாம் பாரு
அரும்பியே அலையாதே வண்டு போல
ஆதரவாய் நடப்பதனை யறிந்து கொள்ளு
கரும்பியே கனிவாகப் பொருளைக் காணக்
காதலரைக் கண்டுமே கனிந்து பொங்கி
நரும்பியே நலமாகப் பெற்றுத் தானும்
நாடியே யறிந்தவனே சித்த னாமே 846

சருத பித்தனைச் செம்பு

பாருமே இன்னமொரு செம்பு மார்க்கம்
பதிவாகச் சொல்லுகிறேன் உற்றுக் கேளு
நாருமே கைபாக வரிசையாக
நலமாகச் சொல்லுகிறேன் நன்மையாக
சாருமே யிதையறிந்த வாதி மார்கள்
சகலசித்தும் ஆடலாம் தண்மை யாக
காருமே குருபதத்தைத் தொண்டு பண்ணு
கனிவாகச் சித்திதரும் கனிவு மாமே 847

கனிவாகச் சருகினுட பித்த ளைதான்
காரியமாய் முன்சொன்ன நூலி லேதான்
வனிவாக முன்பின்னாய்ச் சொல்லிப் போட்டேன்
வடிவாக வந்திக்கி யகப்ப டாது
நனிவாக ஒருவரவர் கண்டா ரானால்
நாடியே யெல்லாரும் காணு வார்கள்
பனிபோலே மறைத்துமே நூல்கள் தோறும்
பாடினார் கள்எல்லாம் பாரில் தானே 848

தானென்ற முன்னேதான் சாத்தி ரத்திற்
சாதகமாய் மறைத்ததனை வெளியாய்க் கேளு
நானென்ற சருகதுவும் பித்த ளைதான்
நலமாகச் சேரொன்று வாங்கி நீயும்
கானென்ற பந்துபோல் கட்டி நீயும்
கனிவாக அதன்மேலே துணியைக் கட்டு
வானென்ற துணியதனைக் கட்டி மேலே
வடிவாகப் பத்தெருவிற் புடத்தைப் போடு 849

போடவே கரியாகும் பந்து தானும்
பொலிவாக அதையெடுத்துப் பொடித்துக் கேளு
நாடவே சட்டிதனி, லிட்ட முக்கி
நலமாக அதுமேலே கரியைக் கொட்டி
வாடவே மேலூத்தாய் ஊதி மெல்ல
வடிவாக உருகாதே ஊதிப் போடு
கூடவே யெடுத்துநீ பீங்கா னிட்டுக்
குணமாகத் திராவகத்தைச் சொல்லக் கேளே 850

சொல்லவே திராவகமும் சொல்லக் கேளு
சொற்பெரிய வெடிஉப்புப் பலமும் பத்து
நல்லவே மூவெட்டுச் சீன மாகும்
நலமாக இவைரெண்டும் பொடித்து நீயும்
கல்லவே கலயத்தி லடைத்துப் பின்பு
கனிவாக வாலையது சட்டி மூடி
வல்லவே சீலைமணி வலுக்கச் செய்து
வடிவான அடுப்பதனில் வைத்திடாயே 851

வைத்திட்டுத் தீயெரிப்பாய் கமலம் போல
வெள்ளை நீர் வருகும் பாரே
தைத்திட்டு அதையெடுத்து வீசிப் போடு
தாட்டிகமாய்ப் பின்னீரும் மஞ்சள் நீராம்

கைத்திட்டு மஞ்சள்நீர் தன்னை வாங்கு
காரணமாய்ப் பீங்கானி லடைத்து நீயும்
மைத்திட்டு யின்ன மொன்று சொல்லக் கேளு
வடிவாகத் தொந்தமதை மருவக் கேளு 852

கேளுமே யின்னமொரு சேதி கேளு
கெடியாகப் பொட்டலைதான் பலமும் பத்து
வாளுமே சீனமது மூவெட் டாகும்
வடிவாக யிதுரெண்டும் பொடித்துக் கேளு
தாளுமே கலையமிட்டு அடுப்பி லேத்துத்
தாட்டிகமாய்ச் சிறுகளரி உருகும் பாரு
காளுமே வெள்ளைநீர் புகைந்து போகும்
கனிவாக மஞ்சளது புகையு மாமே 853

ஆமேதான் மஞ்சளது புகையும் போது
அடவாக முன்புகைநீர் தன்னை விட்டு
காமேதான் வாலையென்ற சட்டி மூடி
கனிவாகச் சீலைமண் வலுக்கச் செய்து
நாமேதான் தீயெரித்துப் புகைநீர் வாங்கு
தப்பாமல் மஞ்சள் என்ற நீருமாகும்
தாமேதான் இந்நீரில் சகல சித்தி
தாட்டீகமா யாகுமது தன்மை யாமே 854

தன்மையாம் இந்நீரில் களங்கு கோடி
தாட்டீகமாய்ச் செந்தூரம் கோடா கோடி
உண்மையாம் தைலவகை கோடா கோடி
உத்துமே வாதமது வெள்ள மாகும்
வண்மையாம் உப்பாலே யெல்லா மாச்சு
வடிவாக உப்பில்லாக் கரும மெல்லாம்
பெண்மையா யொன்றுமில்லை சித்தி யில்லை
பேராகச் சித்திக்கும் உப்பால் தானே 855

தானென்ற முந்நூறும் பித்த ளைக்குத்
தாட்டிகமாய்ப் பீங்கானிலிட்டுக் கொண்டு
வானென்ற புகைநீரை மருவ விட்டு
வடிவாகப் புகைஞ்சுமே பொருமிப் பேரகும்
நானென்ற கரிஓட்டி லொட் டெரித்து
உருட்டியே காரங் கூட்டி
தானென்ற குகையி லுருக்கு முகத்தைப் பாரு
கனிவாகச் செம்பதுவும் ஆடுந் தானே 856

ஆடுமே செம்பாகம் உருகி நின்று
அருணநிறம் போலவே செம்பு நின்று
கூடுமே செம்பஞ்சு நிறம தாகக்
குணமாக ஆடுமது கொள்கை கண்டு
வாடுமே தண்ணீரில் தோய்ச்சுப் பாரு
வடிவாக அத்திக்காய்ச் செம்பு மாகும்
நாடுமே யிச்செப்பு வேதை கோடி
நலமாகக் குருக்கோடி நடத்தை தானே 857

காணவே நடத்தை யெல்லாம் யேதாலாச்சுக்
கனிவான வெடிஉப்பால் கனிந்து ஆச்சு
ஊணவே வெடிஉப்பை விட்டால் கெட்டான்
உத்துமே உப்பறிந்தோன் வாதி யாகும்
நாணவே உப்பாலே சகல சித்தி
நலமாகச் சித்திதரும் நன்மை யாகும்
பாணவே செகசாலம் உப்பினாலே
வடிவாக உப்பிட்டு வாதம் பாரே 858

பாருமே பித்த ளையின் செம்புக் குத்தான்
பதிவாக இன்னமொரு சாயங் கேளு
காருமே கெந்தகந்தான் பலமும் பத்துக்
கனிவாகக் காரமது நாலத் தொன்று
ஏருமே யிதுரெண்டும் பழச் சாற்றாலே
யிதமாக யிருசாமம் அரைத் திட்டாக்கால்
வாருமே மெழுகாகும் சுண்டைக் காய்போல்
வடிவாக உருட்டியே வண்மை யாமே 859

உருட்டியே சுண்டைக்காய் போலே தோணும்
உணர்வாகக் கதிர்தனிலே காய வைத்து
வருட்டியே காய்ந்த பின்பு வண்மை கேளு
வடிவாகக் கைபாக வரிசை யாகும்
நருட்டியே பித்த ளையின் செம்பு தன்னை
நலமாக உருக்கியே முகத்தில் தானும்
பருட்டியே கிராசமிடு எடைக் கெடைக்கு
பாங்காகக் கிராசமிடப் பண்பு மாமே 860

பண்பரகக் கிராசமிட்டுப் பார்க்கும் போது
பதிவாகச் செம்பதுவும் நொறுங்கும் பாரு
உண்பாகச் செம்பதுவும் நொறுங்கிச் செத்து
உறுதியாய்த் தவிடுபொடி யாகும் பாரு

நண்பாகத் தவிடுபொடி யான செம்பை
நலமாக எடுக்கும்வகை நாட்டக் கேளு
கண்பார்வை யாகவே கை பாகத்தைக்
கனிவாகச் சொல்லுகிறேன் கருத் துள்ளோரே 861

கருத்தாகச் சத்துருவால் கொன்று போட்டால்
கனிவான மித்துருவா லெழுப்பிக் கொள்ள
உருத்தாக முன்னூலில் சொல்லி விட்டேன்
உத்துமே யிதுரெண்டும் ஒத்துப் பாரு
வருத்தாகச் சத்துரு மித்துரு அறிந்து
வடிவாக வாதசித்தி மருவிப் பாரு
முருத்தாகச் சித்திக்க வேணு மென்றால்
உறுதியாம் செம்பதனை உத்துப் பாரே 862

உத்துநீ மித்துருவை சொல்லக் கேளு
ஓதரிய புதுசாக இரும்பை வாங்கு
கத்துமே உலைதனிலே காச்சிக் காச்சிக்
கனிவாக உலைதனிலே காய்ச்சித் தோய்க்க
வித்துமே அடித்துடனே அதராய் வீழும்
விதமாக இப்படிக்குத் திறமாம் எழு
கைத்துமே திரந்தானும் தோய்ச்சுப் பாரு
கனிவாக வெள்ளி நிறம் ஆகுந்தானே 863

ஆகுமே மண்ணெல்லாம் கழன்று போகும்
அடவான இதையெடுத்துக் தகடு தட்டி
வாருமே கெவுரி தனைக் கல்வத் திட்டு
வெடிவாகப் பழச்சாறு சாமம் விட்டு
நாகுமே அரைத்துடனே தகடு தன்னில்
நலமாக மேற்கவசம் கட்டித் தானே
பாகுபெறக் காயவைத்துப் புடத்தைப் போடு
பதிவாக இரும்பதுவும் கட்டுந் தானே 864

கட்டுமே யதையெடுத்து ஒடித்துத் தானே
கனிவாகக் குகையிலிட்டு உருக்கிப் பாரு
முட்டுமே யியம்போல் உருகும் பாரு
முனிவாக வெள்ளிபோல் கண் விட்டாடும்
நட்டுமே இந்தஅயம் கட்டி நின்ற
நலமாக ஆகுமது நன்மை பாரு
விட்டுமே செம்பதுவும் நொறுங்கி நின்ற
விதமாகத் தானெடையே சேர்த்திடாயே 865

சேர்த்துமே உருக்கிஉடை செம்பு மாகும்
சித்திபெறச் செம்பென்றால் எளிசோ அல்ல
வாத்துமே இச்செம்பில் வேதை கோடி
வடிவாக குருக்கோடி வண்மை கோடி
நாத்துமே சிவந்தநிற மாயி ருக்கும்
நலமாகச் செம்பு புடமிறங்கும் பாரு
காத்துநீ இப்படிக்குச் செம்பெ டுத்துக்
கனிவாக வைத்துநீ சித்தி பாரே 866

சித்திபார் வெடியுப்பின் நீரி னாலே
சிறப்பாகச் சகலசரக் கதனைக் கட்டு
முத்திபார் மூவுலகும் சித்தி யாகும்
முனிந்துமே சகலசித்தி முன்னே யாகும்
புத்தியினால் கண்டெடுக்கச் செம்பு சித்தி
புனிதமாய் நல்லசித்தி பொருளு மாகும்
நத்தியே வகையறிந்து சித்த ரோடே
நலமாகச் சித்திக்க வருகும் பாரே 867

வருகுமே செம்பெடுத்து வெள்ளி பத்தில்
வடிவாக ஒன்றிடவே யுருக்கித் தீரு
நருகுமே தங்கமது எட்டே காலாம்
நலமாக உப்புக்குங் காவிக் கப்பா
தருகுமே இறங்கிவிடும் பொய்போ காது
தாட்டிகமாய் எல்லாமும் சித்தி யாகும்
திருகுமே தங்கமது பசுமை மெத்தத்
திடமாக இருக்குமே திண்ண மாமே 868

திண்ணமாய் இத்தங்கந் தன்னைத் தானும்
திறமாக விற்றுநீ செலவு செய்து
நண்ணவே உண்டுதேறி வழியைத் தேடு
நாகாந்த சொருபமதை நாட்டி நில்லு
எண்ணமாய் அலையாதே குருவைக் காரு
இன்பமுற எந்நாளும் இதமு மாகும்
கன்னவே யோகசித்தி ஞான சித்தி
கனிவாக எல்லாமும் சித்தி யாமே. 869

சித்திதர எந்நாளும் சிவயோகத்தைத்
திடமாகப் பார்த்துமே யொல்லக் கேளு
புத்திதரும் ஞானவொளி தீப மாகும்
புதுமையாம் ஆறுதலம் அறிவில் புக்கு

நத்தியே திரித்துநீ நல்லாய்ப் பாரு
நடனவொலி தீபமதை நாடிக் கண்டு
சத்தியாய்க் கணபதியை நித்தம் பூசி
சகலசித்தி யாகுமே தன்மை யாமே. 870

847-870 – சருகுரித்தளைச் செம்பு

இன்னமொரு செம்புநெறி கூறுகிறேன் உற்றுக் கேளு. கைபாக மாக நலமாகச் சொல்லுகிறேன். இதனை அறிந்த வாதிமார்கள் எல்லாச் சித்தும் ஆடலாம். சருகுப் பித்தளையை முன் சொன்ன நூலில் முன் பின்னாகச் சொல்லிப் போட்டேன். பனிபோல மறைத்து நூல்கள் தோறும் பாடினார்கள்.

சருகு பித்தளையை ஒருசேர் வாங்கிப் பந்து போல் சுருட்டிக் கட்டி அதன்மேல் துணியைச் சுற்றி கட்டிப் பத்தெருவில் புடமிடு. கரியாக இருக்கும். அதனை எடுத்துப் பொடித்துச் சட்டியிலிட்டு அமுக்கி அதன் மேல் கரியைக் கொட்டி மேல் ஊத்தாக ஊதிப் போடு. ஊதி எடுத்துப் பீங்கானிலிட்டு முன் பலமுறை கூறிய வெடியுப்புத் திராவகத்தை மடக்குத் திராவகமாக இரண்டாம் முறையும் மடக்கிச் செய்து எடுத்து (ஒருமுறை இறக்கிய திராவகத்தை இரண்டாம் முறை இறக்கும் திராவகத்தில் மஞ்சள் நீர் வரும் பருவத்தில் ஊற்றி இறக்குக.) மேற்படி சருகு பித்தளைமேல் மருவ ஊற்று. புகைந்து பொருமிப் போகும். கரியோட்டிலிட்டு ஒட்ட எரித்து உருட்டிக் காரங்கட்டி குகையிலிட்டுருக்கு. செம்பு உருகிச் செம்பஞ்சுக் குழம்பு போலாகும். தண்ணீரில் தோய்த்துப் பாரு பித்தளை செம்பாகும். இதனால் மாற்றுக் கோடி. குருக்கோடி உப்பாலே எல்லாம் ஆயிற்று. வெடியுப்பை விட்டால் கெட்டான்.

இந்தப் பித்தளைச் செம்புக்கு இன்னுமொரு சாயம் சேர்க்கவேண்டும். பத்துப்பலம் கெந்தியும் நாலில் ஒன்று சாரமும் சேர்த்து பழச்சாறு விட்டு அரைத்துச் சுண்டக்காய் போல் உருட்டிக் காயவைத்து எடுத்து வைத்துக் கொண்டு, பித்தளைச் செம்பினைக் குகையிலிட்டுருக்கி உருகு முகத்தில் உருண்டையைத் தூள் செய்து கிராசமிடு (தூவு). எடைக்கெடை தூவப் பண்பு உண்டாகும். செம்பு நொறுங்கித் தவிடு பொடியாகும், பகைப் பொருளால் ஒடுக்கிய செம்பினை நட்புப் பொருளால் எழுப்பிவிட முன்பு கூறிவிட்டேன். இவ்விரண்டினையும் ஒத்துப் பாரு. நட்புப் பொருளைச் சொல்லக் கேள். புதிய இரும்பை எடுத்து உலையில் காய்ச்சிக் காய்ச்சித் தோய்த்து அடிக்க அதராய் விழும். இங்கனம் ஏழு முறை செய். வெள்ளி நிறமாகும். மண்ணெல்லாம் கழன்று விடும். இதை எடுத்துத் தகடுதட்டிப் பழச்சாறு விட்டரைத்து கௌரிக் குழம்பினைப் பூசிக் கவசித்துக் காய வைத்துப் புடமிடு இரும்பு கட்டும். அதை எடுத்துக் குகையில் இட்டு

உருக்கிப் பார். ஈயம் போல் உருகும். வெள்ளி போல் கண்விட்டாடும். நொறுங்கி நின்ற செம்பின் எடை சேர். உருக்கி உடை. செம்பாகும். வலுப்பெறச் செம்பென்றால் எளிதோ அன்று. இச் செம்பில் மாற்று மிகுதி. குரு மிகுதி. வெடியுப்பு நீரினாலே ஆக்கமாகும். எல்லாப் பொருள் களையும் கட்டு. மூவுலகும் சித்திக்கும்.

இச்செம்பு எடுக்க வெள்ளி பத்தில் ஒன்றிட்டு உருக்க எட்டேகால் மாற்று. உப்புக்கும் காலிக்கும் தங்கம் இறங்கும் பொய்யாய்ப் போகாது. இத்தங்கத்தினை விற்று உண்டுடுத்தித் தேறி நாதாந்த சொருபத்தை நாட்டி நில்லு. எந்நாளும் சிவயோகம் பார். ஞானஒளி தீபமாகும். ஆறு இடத்திலும் அறிவினால் புகுந்து நடனவொலி தீபம் நாடிக் கண்டு கணபதியை நாடோறும் பூசை செய். பலிக்கும்.

நல்ல நாகக் கட்டு

ஆமேதான் பித்தளையின் செம்பு தன்னில்
அடவாகக் குகையிலிட்டு உருகும் போது
தாமேதான் தங்கமது நாலாத் தொன்று
நலமாக உருகையிலே கொடுத்துத் தீரு
வாமேதான் நாகமது கட்டும் மார்க்கம்
வடிவாகச் சொல்கிறேன் உற்றுக் கேளு
சாமேதான் நாகமது கட்டுத் தன்னைச்
சாத்திரத்தில் சொல்லவில்லை தாக்கிப் பாரே 871

தாக்கிப்பார் சாத்திரந்தான் மெத்த வுண்டு
தாட்டிகமாய்ச் சாத்திரத்தில் மறைந்த நாகம்
பாக்கியமாய் முன்பின்னாய்ச் சொல்லிப் போட்டார்
பதிவாக இராமருட தேவர் தானும்
வாக்கியே சாரமது கட்டித் தானும்
நாகமது வகையாகச் சொல்வேன் பாரு
சாக்கியே மறைப்பெல்லாம் வெளியாய்ச் சொல்வேன்
பதிவாக ஆதியிலே சாரம் தானே. 872

சாரமது பச்சைதனில் நாகம் கட்டும்
சமுசயங்கள் எண்ணாதே சாரந் தன்னை
வாரமது சரக்காலே சாரம் கட்டின்
வடிவாக நாகமது கட்டா பாரு
கோரமாய்ச் சொல்லிவிட்டார் சித்தர் தாமும்
குணமாக மெய்யறிவைக் கூட்டிப் பாரு
பாரமாய்க் கைபாக வரிசை பாரு
பதிவாகச் சித்திதரும் பண்பு மாமே 873

பண்பாகப் பச்சையிலே கட்டும் மார்க்கம்
பதிவாகச் சொல்லுகிறேன் பாரி லோர்க்கு
உண்பாக உற்றுமே பார்க்கும் போது
உறுதியாம் கைவசமாம் உற்றுக் கேளு
திண்பாகச் சாரத்தைச் சுண்ணம் பண்ணித்
திடமாக நாகத்தை யுருக்கித் தானும்
வண்பாகக் கொடுத்துமே பார்க்கும் போது
வடிவாக நாகமது கட்டா பாரே 874

பாருமே கட்டுகின்ற பாகந் தன்னைப்
பதிவாகச் சொல்லுகிறேன் உற்றுக் கேளே
நாருமே நாகமது சேரு ஒன்று
நலமாக அயக்கரண்டி தன்னி லிட்டு
வாருமே சாரமிட்டு நாகந் தன்னை
வடிவாக உருக்கியே இலுப்பை நெய்யில்
காருமே சாய்த்திடுமே தரமும் கேளு
கனிவாக மூவேழு தரமும் சாயே 875

சாய்த்துமே பார்க்கின்ற போதி லேதான்
சரியாக எண்ணெயது கழன்று போகும்
வாய்த்துமே சுத்தியது நாக மாச்சு
வடிவாக இச்சுத்தி நல்ல சுத்தி
நாய்த்துமே இப்படிக்குச் சுத்தி பண்ணி
நலமாகக் கைபாகம் நவிலக் கேளு
பாய்த்துமே கரண்டியிட்டு, உருக்கிக் கொண்டு
பதிவாகச் சூதத்தை இடையே சேரு 876

சேர்த்துமே இந்த எடை சாரம் இட்டுச்
சிறப்பாகப் பாணியது கொஞ்சம் குத்தி
நாத்துமே அரைத்துவில்லை தட்டிப் பின்பு
நலமான வளையலுப்பு மேலே கட்ய
வாத்துமே பத்தெருவிற் புடத்தைப் போடு
வடிவாகத் தீயாற்றி யெடுத்துப் பாரு
காத்துமே சாரமது ஓடா பாரு
கனிவாக உருகியது மணிபோ லாமே 877

ஆமேதான் நாகமது உள்ளி ருந்து
ஆடியே புகையஞ்சும் கட்டிப் போகும்
நாமேதான் எண்ணெயெல்லாம் கக்கிப் போகும்
நலமாகப் புகையில்லை கீறல் இல்லை

தாமேதான் சகலமுந்தான் இதிலே சித்தி
தாட்டிகமாய்த் தங்கத்தை உடைக்கா பாரு
வாமேதான் இந்நாகம் நல்ல கட்டு
வாதியர்கள் அறியார்கள் வழக்க மாமே 878

வழக்கமாம் நாகமது கட்டு நல்லாய்
வடிவாக ஆகுமது வண்மை கேளு
கழக்கமாய் நாகமது கட்டி னாக்கால்
சணபேதி பணபேதி யாகும் பாரு
தழக்கமாம் சாரமது கட்டு கட்டு
தனியாக நாகமது கட்டிப் போகும்
வழக்கமாம் என்று சொன்னார் வல்லோர் தாமும்
வடிவாக மறைத்ததனை வண்மை தானே 879

வன்மையாம் இந்நாகம் வேதை கோடி
வடிவான குருக்கோடி வாகு கோடி
தண்மையாம் செந்தூரம் கோடா கோடி
தாட்டிகமாம் குருக்கோடி வாதி கோடி
பண்மையாம் அறிவுக்குள் மனத்தை யூட்டு
பதிவாகச் சித்தியது வண்மை யாகும்
உண்மையாய் இதுநிசமாம் உற்றுப் பாரு
உறுதியாய் எல்லாமே சித்தி யாமே 880

சோரனது பலமொன்று கரண்டி யிட்டுச்
சுடுதணலில் வைத்துருக்கிச் சொல்லக் கேளு
பாரமுடன் பொற்றலையைப் பாதி யிட்டுப்
பதிவாகக் கிண்டிடவே கருத்துப் போகும்
நேரமதாய் எடுத்தரைத்து வில்லை தட்டி
நின்றநிறை வளையலுப்பைக் கவசங் கட்டி
வாரமதாய்ப் புடம் போடக் கட்டிப் போகும்
வகைசொன்னார் யாக்கோபு வண்மை தானே
புடம்போட்டுக் கவசத்தைத் தள்ளிப் போட்டுப்
பொருளாக எட்டில்ரெண்டு சாரம் சேர்த்து
நடமாகச் சேர்த்தரைத்து உருக்கிப் பார்க்க
நாகமது முத்துப்போல் மணியு மாகும்
வடமான மணியெடைக்கு ஏமங் கூட்டி
வகையான ரவிபத்தில் ஒன்று தாக்கத்
திடமான தங்கமாம் யாக்கோபு சொன்னார்
தீர்க்கமதைக் கண்டுகொள்ளத் திறமை யாமே)

மேற்கோள் - யாக்கோபு வைத்திய சிந்தாமணி 51/700

சித்தியாம் முன்செம்பு பலமும் நாலு
சிறப்பாகத் தங்கமொன்று கட்டு நாகம்
வித்தியாம் ஒன்றுதான் கூடக் கூட்டி
விதமாக உருக்கிடவே களங்க மாகும்
நத்தியே களங்கமதை யெடுத்துத் தானே
நலமாகச் செம்புதான் நூற்றுக் கொன்று
சித்திபெற ஒன்றுநீ கொடுத்து ருக்கு
செயமாக மாற்றதுவும் சொல்லக் கேளே 881

கேளுமே மாற்றதுவும் பத்து மாகும்
கெடியாக உப்புக்கும் காணிக் கேகா
நாளுமே இதைவிற்றுச் சீவ னத்தை
நன்றாக உண்டுடுத்தி யோகம் பாரு
வாளுமே ஆறுதலம் புக்கு நின்று
. வடிவாகச் சுரிமனையில் வாவு காணும்
கூளுமே கஞ்சிதனைக் குடித்து வாநீ
குணமாகச் சொரூபமதைப் படைத்திடாயே 882

படைத்தாலோ உன்சிரசு தக்க தாகும்
பதிவான சிவநிட்டை பண்ணி நீயும்
குடைத்தலே சிவயோகம் பண்ணித் திரு
குணமாகும் மணமாகும் குருவைப் பாரு
துடைத்தாக்கால் வாதமில்லை சித்தி யில்லை
தோஷியாய்க் கரிச்சுட்டு அலைவார் பாவி
மடைத்தனமாய்ச் சொல்லாதே வாதந் தன்னை
வடிவாகச் சோதிக்கச் சித்தி யாமே 883

சித்தியாக நாகமது கட்டுத் தன்னைத்
திடமாக வாதிக்குச் சொல்ல வில்லை
புத்தியாய் ஞானிக்குச் சொன்னேன் அப்பா
புனிதமாம் வாதிக்குச் சொன்ன சொல்லு
நத்தியே ஒன்றைவிட்டு ஒன்று சொன்னேன்
நலமாக வாதமெல்லாம் ஏதா லாச்சு
சத்தியாம் நாகரச கெந்தி தன்னில்
நலமாக எல்லாமும் நாடி னோமே 884

நாடியே நாகமது கட்டுத் தன்னை
நலமாகப் பச்சையாய்க் கட்டித் தேறு
கூடியே கட்டாகும் மெழுகு மாகும்
கூறறிந்து அம்பலத்தில் கொள்கி நில்லு

வாடியே வளையாதே நாகந் தன்னை
வாதாடிக் கட்டிடமிக வலுவ றிந்து
தேடியே களங்குமுதல் செய்து தேறு
திடமாகும் சகலசித்தும் ஆட லாமே 885

ஆடவே யண்டபகி ரண்ட மெல்லாம்
அனைத்துமே நாகமது சுட்டி லேமம்
கூடவே நாகமென்றால் எளிசோ அல்ல
குணமான காயசித்தி குறுக்கி லாகும்
தேடவே புத்திதரும் பாகம் தானும்
திடமாகச் செய்தாக்கல் வலுவு மாகும்
கூடவே அம்பரத்தில் குணத்தைக் காணு
குணமாகச் சகலசித்தும் கூர்ந்து பாரே 886

பாருமே இக்களங்கைச் செந்தூரிக்கப்
பதிவாகக் கைபாக வரிசை கேளு
நாருமே பாகமது தப்பிற் றானால்
நலமாக வாகசித்தி தப்பும் பாரு
காருமே யொருமுறைதான் தப்பிப் போனால்
கனிவாக இருதரமும் சோதித் தேறு
வாருமே பொருளாசை மிகவும் வேண்டாம்
வையகத்தில் சித்தனாய் மருவ லாமே 887

மருவவே களங்கமது பலமும் நாலு
வடிவான கெந்தியது பலமும் ஒன்று
கருவவே தாளகமும் பலமும் ஒன்று
கனிவாக கல்வத்தி லிட்டுக் கேளு
துவளவே புகைநீரை விட்ட ரைத்துத்
துடியாக மூவேழு சாமம் தானும்
நருவவே யரைத்துநீ வில்லை கட்டி
நலமாகப் பத்தெருவில் புடத்தைப் போடே 888

போடவே ஓடதனைப் பிரித்துப் பாரு
புகலரிய செந்தூரம் முருக்கம் பூப்போல்
ஆடவே யிருக்குமது செந்தூ ரந்தான்
அடவாகச் செத்தூரம் கண்கொள் ளாது
நாடவே யிருக்குமது நவலோகத்தில்
நாட்டிடவே நூற்றுக்கு ஒன்று தானும்
கூடவே எட்டரைதான் ஆணிக் கொக்கும்
குணமாக மாற்றாகும் குருவு மாமே 889

குருவாக இதையெடுத்து விற்று நீயும்
குணமாக உண்டுடுத்திக் குருவைக் காரு
உருவாக ஆறுதலம் ஏறி யாடு
உறுதியாய் நவலோக மெல்லாந் தானும்
கருவாகப் பழுக்குமது கண்டு சொன்னேன்
கனிந்துமே நொடிக்குள்ளே சித்தி மெத்த
திருவாகும் செயமாகும் அருளைக் காணத்
திடமாக எல்லாமும் சித்தி யாமே 890

ஆமேதான் காயசித்தி பண்ணக் கேளு
அடவாக முன்னேதான் திரேகந் தன்னில்
நாமேதான் இருக்கின்ற நீரை வாங்கு
நலமாக அவிழ்தவகை நாட்டக் கேளு
தாமேதான் கடுக்காயும் சேரு வொன்று
தாட்டிகமாய் ஆவின்பால் தனில வித்து
காமேதான் உலர்த்தியே கதிரி லிட்டுக்
கனிவாகப் பொடியாக்கிக் கருணை கேளே 891

பொடியாக்கிக் கடுக்காயை வைத்துக் கொண்டு
புகலரிய சிவதைவேரு சேரு ஒன்று
குடியாகப் பிளந்துமே கதிரி லிட்டுக்
குணமாகப் பசும்பாலி லவித்தி றுத்து
நொடியாகக் காய்ந்தபின்பு பொடிய தாக்கி
நுணுக்கமாய் ரெண்டுமொன்றாப் பொடித்துப் பின்பு
வடிவாக வெருகடிதூள் எடுத்துக் கேளு
வடிவாக வெந்நீரில் போட்டி டாயே 892

போட்டுமே கலக்கியதில் பழச்சாறு ஊற்றிப்
பொறுமையாய் ஒருசிறங்கை யுண்டா யானால்
நாட்டுமே வாதநீர் பித்த நீரு
நலமான சிலேற்பனநீர் எல்லாம் போகும்
கூட்டுமே வாயுவெல்லாம் அரண்டு போகும்
குணமான் திரேகமது சித்தி யாகும்
மூட்டுமே மேகநீர் வடிந்து போகும்
முகிவான இப்படிக்கு உண்டு பாரே 893

உண்டுபார் நாளெட்டு உண்டு தானும்
உறுதியாய் உண்டுமே மண்ட லந்தான்
பண்டுமே யுண்டாலே முன்னோ யெல்லாம்
பறக்குமே பத்திபல மாண்டு போகும்

வண்டுபோல் திரேகமது வலிமை யாகும்
(வசமாகப்) பின்புதான் செந்தூ ரத்தைக்
கண்டுமே திரிகடுகில் உண்டு வாநீ
கனிவாக அந்திசந்தி கணக்கு மாமே 894

கணக்காக அந்திசந்தி பணங்கால் வீதம்
கனிவாக உண்டிடவே போகும் நோயை
வணக்காகச் சொல்லக்கேள் உற்றுக் கேள்நீ
வடிவான வாதமது நடுக்கு வாதம்
முணக்கான கூன்வாதம் திமிரு வாதம்
முனையான அசுவனியாம் வாதத் தோடு
மணக்கான தமரகமாம் வரதம் போகும்
வலுவான நரித்தலையாம் வாதம் போமே 895

போகுமே திமிரோடு அண்ட வாதம்
புனிதமாம் வாதஅண்ட வாத வீக்கம்
பாகுபெற முடக்கோடு ஆறும் போகும்
பதிவான பித்தமுதல் அண்ட வாதம்
ஆகுமே சரீரமுதல் சவுக்கியம் ஆகும்
தடையறுமே திமிர்பித்தந் தானே போகும்
வாகுபெற அலைபித்தம் குலைபித் தங்கள்
வடிவாகப் போகுமே வடிவு மாமே. 896

ஆமேதான் மேகமுதல் வெட்டை யெல்லாம்
அடவாகப் பீனிசத்தில் தலைநோக் காடு
காமேதான் சூலையோடு கண்ட மாலை
கனிவாக வலிகுன்மம் எட்டும் போகும்
வாமேதான் பிளவையொடு நீர்மே கங்கள்
வடிவான மேற்ற லையாம் வலியி னோடு
சாமேதான் மகோதரமும் ஓடிப் போகும்
சரியான காதலொடு கண்டு பாரே 897

கண்டுபார் கனகமொடு கண்ட மாலை
கருணைபெற்ற வாதவெட்டை பித்த வெட்டை
முண்டுமே மேகமது இருபத் தொன்று
முனிவாகப் போகுமது முனிந்து பாரு
வண்டுபோல் கேசரியை வழுத்தி யாடு
வடிவாக வஸ்துவைத்தான் மனத்தி லுண்ணு
குண்டுபோல் தேகமது கற்றூ ணாகும்
கனிவாக வாதம்பார் குணமு மாமே. 898

குணமாகப் பத்தியத்தைக் கூறக் கேளு
கூடியே புளிதள்ளு கோதை மாரைப்
பணமாகத் தள்ளிவிடு மயக்கந் தள்ளு
வடிவான அரைக்கீரை முருங்கைப் பிஞ்சு
உணவாந்தக் காளிவற்றல் அவரை வற்றல்
உறுதியாய் வழியோட கூட்டிக் கொள்ளு
பணமாக இப்படிக்கு உண்டு தேறு
பதிவாகச் சித்திவரும் வண்மை யாமே. 899

ஆமேதான் முசுட்டையொடு அத்திப் பிஞ்சு
அடவான கத்தரிக்காய் துவரை யாகும்
சாமேதான் முன்னையிலை ஆவின் பாலாம்
சாற்றரிய பிர்க்குடனே மாங்காய் ஆகும்
பாமேதான் பலகீரை கூட்டிக் கொள்ளு
பதிவாகப் பத்தியத்தின் பயன றிந்து
தாமேதான் உண்டிடவே சித்தி சித்தி
தாட்டிகமாய் நல்லதிது ஆகுந் தானே. 900

ஆகமே யுண்டுவர மண்ட லத்தில்
அடவான நோயெல்லாம் ஓடிப் போகும்
தாகுமே சௌபாக்கிய முடனே யாகும்
தாட்டிகமாய் ஆளிகண்ட ஆனை போலாம்
வாகுமே மண்டலந்தான் உண்ட போது
வடிவாகத் திரேகமது கற்றா ணாகும்
நாளுமே நரைதிரைகள் எல்லாம் போகும்
நாதாந்தச் சாரமிது நமுகும் பாரே. 901

பாருமே நாதாந்தம் மேலே நோக்கும்
பதிவான விந்ததுவும் இறுகிப் போகும்
பாருமே வெகுவாகப் பலனுண் டாகும்
பத்தியுடன் சித்திதரும் பரம போதம்
காருமே யக்கினிதிக் கருணை யோங்கும்
கனிவான மயேசுவரனைக் காண லாகும்
ஊருமே யுற்றுப்பார் வாத சித்தி
உண்மையாய் ஆகுமது உறுதி கேளே. 902

கேளுமே யுப்பைவிட்டால் ஒன்றும் இல்லை
கெடியாக நாகம்விட்டால் வர்ணம் இல்லை
வாருமே இரும்பைவிட்டால் செம்பும் இல்லை
வடிவாக வாகிவிட்டால் சித்த னில்லை

பாருமே பாகத்தை விட்டா யானால்
பதிவாக ஞானமில்லை பண்பு பாரு
தாருமே எல்லோரும் சித்த ராவர்
தாட்டிகமாய்ச் சகலசித்தும் கைக்குள் ஆச்சே. 903

ஆச்சப்பா சூதத்தைக் கட்ட வென்றால்
அடவான தங்கத்தில் மாக் கட்டுஆகும்
வாச்சப்பா செம்பாலே அமரக் கட்டு
வடிவான துரிசியினால் மாக்கட் டேதான்
நாச்சப்பா உப்பாலே அமரக் கட்டு
நலமான உபரசத்தில் மாக்கட் டுத்தான்
நீச்சப்பா கடுநீச்சு கட்டும் மார்க்கம்
நிலையாகும் வாதமது நிலைக்கும் பாரே 904

நிலைக்கவே யாதென்றே மயங்க வேண்டாம்
நிலையான ஆசுவினால் நிரம்பச் சித்தி
வலைக்கவே நோக்கமெல்லாம் ஆசு வாலே
வடிவாகச் சுட்டெல்லாம் உப்பி னாலே
கலைக்கவே புகைநீரை விட்டா யானால்
கனிவாக வந்துவிடும் சித்தி யாகும்
தலைக்கவே சித்தி வந்த வுடனே தானே
தாட்டிகமாய்ச் சகலமுந்தான் ஆடும் தானே 905

ஆடுமே யண்டரண்டந் துளைந்து ஆட
அடவான கெவுனமது சித்தி யாகும்
நாடுமே கெவுனசித்தி யோக சித்தி
நன்றாகக் குளிகைசித்தி மெத்தக் காணும்
வாடுமே மனோசித்தி வாயு வாலே
வடிவான கெவுனசித்தி சூதத் தாலே
பாடுமே மந்திரசித்தி வடிவு மாகும்
மனோவேக சித்திதரும் மாய்கை யாமே 906

ஆமேதான் மாய்கைதனை யறுத்துத் தள்ளு
அடவான மாய்கையது இருந்த தானால்
நாமேதான் வந்தவுடன் பொருளைக் காணு
நலமாக வாதசித்தி நன்மை யாகும்
பாமேதான் பரப்பிரம வெளியுந் தாண்டு
பதிவாகப் பூதசித்தி பொருளும் சித்தி
காமேதான் யோகமுதல் சித்தி யாகும்
கைகண்ட வாதமிது கருவைப் பாரே 907

பாரப்பா பூரணத்தை நோக்கிப் பாரு
பக்குவமாய்ப் பூரணமும் பொருளு மாகும்
நாரப்பா ஆகாச வெளியுந் தாண்டி
நன்மைக்கும் பூரணமும் நடத்தை காணும்
ஏரப்பா பிரமவொலி கீத மான
இதமான யோகசித்தி யுறுதி யாகும்
நாரப்பா வடமொழியைப் பார்த்துத் தேற
நனிவாகக் காயசித்தி கடிசிலாமே 908

கடிசாகச் சுழிமுனையில் வரையி லேறு
கனிவாகச் சித்திதரும் பொருளை யோர்ந்து
முனிவாகக் காரணத்தைக் கண்டு தேறு
முன்னேதான் வாதசித்தி வருகும் பாரே
துடியாக வாதசித்தி எளிதி லாகும்
துப்புரவாய் ஏகாந்த வெளியுமாகும்
குடியாக வீற்றிருக்கும் அருளைக் காணு
குணமாக இந்நூல் முழுதும் பாரே 909

பாரப்பா கேசரத்தில் மனத்தை யூட்டு
கனிவாகப் பொருளாலே யோக மாகும்
காரப்பா அக்கினியில் வரையில் ஏறிக்
கனிவாகச் சுழிமுனையைக் கண்டு பாரு
நீரப்பா நிறைந்ததொரு பூர ணத்தை
நிலையாகக் கண்டுமே பொருளை யூர்ந்து
கூரப்பா குணமாக வாதம் பாரு
குலமான சருவபரி பூரண மாமே 910

ஆமேதான் சருவபரி பூர ணத்தை
அடலாக நோக்கியே பார்த்துத் தேறு
காமேதான் பூரணத்தின் நிலையைக் காணு
கனிவாக யோகமது கடிசி லாகும்
வாமேதான் யோகசித்தி காய சித்தி
வடிவாகச் சித்திதரும் வண்மை யாகும்
நாமேதான் (முறையாகக்) கட்ட எல்லாம்
நாடியே வெகுயோகம் நம்பிப் பாரே 911

671 - 905 - நல்ல நாகக் கட்டு

பித்தளைச் செம்பினைக் குகையில் போட்டு அது உருகும் போது நாலில் ஒரு பங்கு தங்கமிடு. பின்பு கட்டிய நாகம் போட வேண்டும்.

அதற்கு உரிய கட்டினைக் கூறுவேன் கேள். அதனைக் கட்டும் முறையினை நூல்களில் சொல்லவில்லை. நூலில் நாகக் கட்டினை இராமதேவர் முன் பின்னாகக் கூறிவிட்டனர்.

பச்சைச் சாரத்தில் நாகம் கட்டும். ஐயுறாதே. சாரத்தைக் கட்டினால் அது நாகத்தைக் கட்டாது. மெய்யறிவைக் கூட்டிக் கைபாக வரிசை பார். ஒருசேர் நாகத்தைக் கரண்டியில் இட்டு உருக்கிச் சாரமிட்டு இலுப்பெண்ணெய்யில் இருபத்தேழு முறை சாய்ப்பாயாக. எண்ணெய் கழன்று போகும். அந்த நாகத்தைக் கரண்டியில் இட்டு உருக்கி அதனெடை இரசத்தைச் சேர். சேர்த்து அதனெடை சாரம் இட்டுப் பாணி விட்டரைத்து வி. த. கா. நயமான வளையலுப்பினை மேலே கட்டி 10 எருப்புடமிட்டுப் பார். சாரம் ஓடாது. உருகி மணி போலாகும். நாகம் உள்ளிருந்து ஆடிப் புகை ஐந்தும் அடங்கிக் கட்டிப் போகும். எண்ணெய் கக்கும். நலமான புகை இல்லை. கீறல் இல்லை. இது நல்ல நாகம். இது தங்கத்தை உடைக்காது. இங்ஙனம் கட்டினால் கணப் போதிலும் நொடிப் போதிலும் மாற்றாகும். இதனை உற்றுப் பாரு. முன்கூறிய அதனில் தங்கமெடை நாகம் போடு. உருக்கு களங்காகும். செம்பினையுருக்கி நூற்றுக்கு ஒன்று கொடு. பத்து மாற்று. உண்டுடுத்துத் தவம் செய். ஆறுநிலையிலும் புகுந்து பார். சுழி முனையில் நிறை நிலவு தோன்றும். உன் தலை தக்கதாகும். 884-886 அறிவுரை. இக் களங்கினைச் செந்தூரிக்கக் கைபாக வரிசை கேள். பாகந்தப்பினால் தங்கம் ஆதல் தப்பும்.

களங்கம் பலம் நாலு. கெந்தி ஒரு பலம். தாளகம் ஒரு பலம் இம்மூன்றும் கல்வத்திலிட்டுப் புகைநீர் ஊற்றி இருபத்தொரு சாமம் ஆட்டு. வி. த. கா. சீ. ம. செ. 10 எருப்புடமிடு. பிரித்துப் பார். புகலரிய செந்தூரம் முருக்கம் பூப்போல் இருக்கும். ஒன்பதிலும் நூற்றுக்கு ஒன்று சேர். எட்டரை மாற்று. ஆணிககு ஒக்கும். செந்தூரம் குருவாகும். உடல்நிலைப்புச் செய்ய வழி கேள். முதலில் உடலிலுள்ள நீரை வாங்கு. அவிழ்த வகை சேர்க்கவும் வழி கேள். ஒரு சேர் கடுக்காயை ஆவின் பால்விட்டு அவித்துக் காய வைத்துப் பொடியாக்கி வைத்துக் கொண்டு, ஒருசேர் சிவதை வேர் வாங்கிப் பிளந்து காயப் போட்டுப் பாலில் அவித்து உலர்த்திப் பொடியாக்கி அதனுடன் சேர்த்து ஒன்றாக்கி வைத்துக் கொள். வெறுகடித் தூள் எடுத்து வெந்நீரில் போட்டுக் கலக்கியதனொடு பழச்சாறு ஊற்றி ஒரு சிறங்கை உண். வாதநீர் பித்த நீர் சிலேற்பன நீர் வாய்வு ஆகியன அரண்டு போகும். உடல் நிலைப்பு ஆகும் மேகநீர் வடிந்து போகும். இங்ஙனம் உண்டு பார். எட்டுநாள் உண்டு பின்பு உணர்ந்து நாற்பது நாள் உண்ண நோயெல்லாம் பறக்கும். உடல் வலுக்கும் பின்பு செந்தூரத்தைத் திரிகடுகில் காலை மாலை காற்பண அளவு உண்.

நீங்கும் நோய் :

வளி நோய் நடுக்குவளி நோய் கூன்வளி திமிர்வளி அசுவினிவளி தமரகவளி நரித்தலைவளி அண்டவளி வீக்கம் முடக்கு ஆறுபித்தம் திமிர் பித்தம் அலைபித்தம் குலைபித்தம் மேகவெட்டை பீனிசம் தலை நோக்காடு சூலை கண்டமாலை வளிகுன்மமெட்டு பிளவை நீர்மேகம் மேற்றலைவளி பெருவயிறு வளிவெட்டை பித்தவெட்டை மேகம் இருபத்தொன்று நீங்கும். உடல் குண்டு போலாம் கற்றூணாகும்.

பத்தியமுறை அறிந்து கொள். புளி புணர்ச்சி மயக்கம் நீக்கு. அரைக்கீரை முருங்கைப் பிஞ்சு தக்காளி வற்றல் அவரை வற்றல் சேர்த்துக் கொள். முசுட்டை அத்திப் பிஞ்சு கத்தரிக்காய் துவரை முன்னையிலை ஆவின் பால் பீர்க்கங்காய் மாங்காய் பலகீரை இவை ஆகும் மண்டலம் உண்டுவர நோயெல்லாம் ஆளிகண்ட ஆனைபோல் ஓடும். நரைதிரை நீங்கும் நாதாந்தம் மேனோக்கும் விந்து இறுகிப்போகும்.

உப்பை விட்டால் ஒன்றுமில்லை. நாகம் சேரா விட்டால் வண்ணம் வராது. இரும்பினை விட்டால் செம்பு நிலையாது. வளிநிலைவிட்டால் உடல் நிலையாது. பாகத்தை விட்டாற் பயனில்லை.

சூதத்தைத் தங்கத்தை ஆசு ஆகக் கொண்டு கட்டினால் மாக்கட்டு செம்பினால் அமரக்கட்டு. துரிசினாலும் மாக்கட்டே தான். உப்பினாலும் அமரக்கட்டாம். உபர சத்தாலும் மாக்கட்டாம். ஆசு என்று மயங்கற்க. ஆசினால் பயன் மிகவுண்டு. 906-911 அறிவுரை.

நாகக் கட்டு

நம்பியே சாரமது கட்டக் கேளு
நாதாக்கள் மறைத்தபொருள் நன்மை யாகும்
தும்பியே கடல்நுரையும் பலமும் நாலு
துடியாக உவர்மண்ணும் சுண்ணம் நேரே
கம்பியே கலந்துமே பாணி தானும்
கனிவாகப் படிரெண்டு கலந்து விட்டுக்
கம்பியே யதைக் கலக்கிச் சட்டி யிட்டுச்
சரியாகக் கடல்நுரையும் கூடப் போடே 912

போட்டுமே குமுறளரி கைபா கத்தால்
குணமாக எரித்துநீ யொட்டக் காய்ச்சிக்
காட்டுமே கடல்நுரையைக் கழுவி வாங்கு
கனிவாகக் கடல்நுரையை உலையில் இட்டு

நாட்டுமே குமுறவே ஊதி னாக்கால்
நலமாகக் கடுஞ்சுண்ணம் ஆகும் நேர்மை
மூட்டுமே சுண்ணமெடைச் சாரம் சேரு
மோசமில்லை கல்வத்தி லிட்டி டாயே 913

இட்டுமே இருசாமம் அரைத்திட் டாக்கால்
இனிதாக ஆறுபோல் செயநீ ராகும்
பட்டுமே செயநீரை யிறுத்து நல்லாய்ப்
பாகமுடன் கலையத்தி லிட்டுப் பின்பு
வட்டுமே மேல்மூடிச் சீலை செய்து
வடிவாகத் தீயெரிக்கச் செயநீ ராகும்
முட்டுமே கடுஞ்சுண்ண மாகும் பாரு
முனையாக நீர்இறுத்து வைத்துக் கொள்ளே 914

கேளுமே புகைநீரை இறுத்து வைத்துக்
கெடியாகச் சாரமது கட்டி வாங்கு
ஆளுமே செயநீரில் தோய்ச்சுத் தோய்ச்சு
அடவாகக் கதிரிலிடு தினமும் ஏழு
நாளுமே சலங்கைமணல் தன்னி லிட்டு
நலமாக இப்படிக்குத் தரமும் ஏழு
காளுமே போட்டுநீ எடுத்துக் கொண்டு
கனிவாக இன்னமொரு கவசம் கேளே 915

கவசமது சொல்லுகிறேன் உற்றுக் கேளு
கனிவாகக் கடல்நுரையும் சேரு வொன்று
கவசமாய்ப் பொடித்துநீ கட்டி மேலே
கனிவாகக் கீழ்மேலே தானும் இட்டு
உவசமாய்ப் பத்தெருவில் புடத்தைப் போடு
ஓதரிய சுண்ணமது சார மாகும்
நவசமாய்ச் சாரமது சுண்ண மானால்
நலமாக (நாகமது) கட்டுந் தானே 916

கட்டுமே சாரமது சுண்ண மானால்
கனிவாக நாகமது உடனே கட்டும்
முட்டுமே உபரசங்கள் ஈய மாகும்
முனிவான இரும்பதுவும் உருகி யாடும்
வட்டுமே உப்புமுதல் இருபத் தஞ்சும்
வடிவாகக் கட்டாகும் மெழுகு மாகும்
கிட்டுமே யோகமது எளிசி லாகும்
கேசரியைப் பார்த்திடவே சித்தி யாமே 917

ஆமேதான் நாகத்தைச் சுத்தி பண்ணி
யடவாக நாகத்தை யுருக்கிக் கொண்டு
வாமேதான் சாரமது சுண்ணந் தன்னை
வடிவாகப் பத்துக்கு ஒன்று தாக்கு
காமேதான் நாகமது கட்டிப் போகும்
கனிவாகக் கட்டினதோர் நாகத் தாலே
சாமேதான் வாதமது எளிசி லாகும்
தாட்டிகமாய்ச் சகலசித்தும் ஆட லாமே 918

ஆடவே யண்டபகி ரண்ட மெல்லாம்
அடவாகச் சித்திதரும் சாரத் தாலே
கூடவே சாரமென்றால் எளிசோ அல்ல
குணமாக நாகமது நல்ல வித்தை
வாடவே நாகமது கட்டி நின்று
வடிவான தங்கத்தி லுருகி னாக்கால்
காடவே நவலோகம் பழுக்கும் வேதை
கைகண்ட வாதமிது கருவைப் பாரே 919

பாரப்பா நாகமது கட்டுத் தன்னைப்
பதிவாக அயச்செம்பு நூற்றுக் கொன்று
காரப்பா கொடுத்திடவே மாற்றுக் கேளு
கனிவாக எட்டரையாம் ஆணிக் கொக்கும்
கூரப்பா இம்மாற்றை விற்று நீயும்
குணமாக உண்டுடுத்தி ஞானந் தன்னை
ஆரப்பா அறிந்துநீ செயலைக் கண்டு
அடவாக வாதமது ஆண்மை யாமே 920

ஆமேதான் நாகத்தின் கட்டுத் தன்னை
அடவாக ரெண்டாக வகுத்துச் சொன்னேன்
தாமேதான் ரெண்டு மே யொத்துப் பாரு
சமுசயங்கள் எண்ணாமல் தங்கம் பண்ணு
வாமேதான் தங்கமது எளிதோ அன்று
வடிவாகத் தங்கமென்ற ஆத்தா ளைத்தான்
சாமேதான் துதிசெய்து போற்றி நீயும்
தப்பாமல் ஞானவழி தேடி டாயே 921

தேடவே சாரமது கட்டுச் சொன்னேன்
திட மாக அதுகொடுக்கும் வகையும் சொன்னேன்
நாடவே இம்முறைகள் பொய்யென் றெண்ணில்
நலமாக எல்லாமும் பொய்யு மாகும்

வாடவே சித்தரவர் சாரப் போக்கை
வடிவாக மறைத்துமே சொன்னா ரையா
கூடவே சாரத்தின் சுண்ணத் தாலே
குணமாக இராமருட தேவர் தாமே 922

தாமேதான் நாலுயுகம் வாதம் பார்த்துத்
தாட்டிகமாய்க் காயசித்தி பண்ணி னார்பார்
வாமேதான் சித்திக்க வேண்டு மென்றால்
வடிவாகப் பிடிவாதம் பழக்கம் பாரு
காமேதான் வழக்கமது ஏதால் என்றால்
கனிவான கண்டருட மகிமை யாலே
பூமேதான் சித்தரெல்லாம் பிழைத்தா ரப்பா
பூதலத்தில் ஞானியவர் புகன்றார் தானே 923

தானென்ற ஆறுதலம் பார்த்துத் தேறு
தாட்டிகமாய்க் காயசித்தி பண்ணித் தேற
நானென்ற ஆணவத்தால் வெளியாய்ச் சொன்னேன்
நாட்டிலே யோகமுதல் நடத்தை பாரு
கானென்ற கருணைமிக ஆதா ரத்தால்
கனிவாக யோகத்தில் கண்டாய் போல
வானென்ற பூரணத்தை நோக்கி யாட
வடிவாகச் சித்திதரும் வண்மை யாமே 924

வண்மையாய்ச் சாத்திரத்தை வடிவு பாரு
வாதாடி யோகத்தில் மருவி நில்லு
உண்மையாம் ஐம்பொறியின் வீதி ஏறி
உற்றுமே வழியிலே உறுதி நில்லு
தண்மையாம் ஞானவொலி கீத மாகும்
தாட்டிகமாய்ச் சகலசித்தும் தானே வந்து
கண்மையாம் இருக்குமது ஓங்கா ரத்தால்
கனிவான வாதத்தைக் கண்டி டாயே 925

கண்டிடவே வாதிமார் தானும் அப்போ
கனிவாக வாதவிதி யென்று சொல்லி
முண்டிடவே சாத்திரத்தைத் பாரா மல்தான்
முடிவான சூதத்தைக் கட்ட வென்று
வண்டுபோல் அலைந்துமே மூலி தன்னில்
வடிவாகச் சுருக்குமே தாக்கித் தாககி
நண்டுபோல் ஆசைபோல் அலைந்து வாதி
குணமாக அறிந்திடா வாதி தானே 926

வாதிதான் அலைந்தாலும் வாதம் தன்னை
(வடிவாக) அறியாத வழக்கத் தாலே
சோதிப்பாய்ச் சொல்லியே புலம்பி ஏங்கித்
துடியாக அலைந்துமே பொன்னைக் காணார்
நீதியாய் நிட்டைதனி லிருந்து பின்னும்
நிலையில்லாப் போனதினால் சிறிது காலம்
கோதியே மலைதனிலே யலைவார் கோடி
குணமாக வாதியவர் கூட்ட மாமே 927

912-927 - நாகக் கட்டு

நாகங்கட்டுவதற்குச் சாரக் கட்டுச் சொல்வேன் கேள். நாதாக்கள் மறைத்த பொருள் அது அறிந்து கொள் நன்மையாகும். ஒரு சட்டியில் இரண்டுபடி தண்ணீர் விட்டு அதனுள் உவர் மண்ணும் சுண்ணாம்பும் வகைக்கு நாலு பலம் போட்டுக் கலக்கி அதனுள் கடல் நுரையை நாலு பலம் போட்டுக் குமுற எரி. ஒட்டக் காய்ச்சி எடுத்துக் கழுவி உலையிலிட்டு ஊது. கடுஞ் சுண்ணமாகும். அதனை சாரம் சேரு. கல்வத்திலிடு இரு சாமம் அரை. ஆறுபோல் செயநீராகும். இந்த நீரை வாலையில் விட்டு காய்ச்சி இறக்கச் சிறந்த செயநீராகும். இந்நீரை இறுத்து வைத்துக் கொண்டு சாரம் ஒரு கட்டி வாங்கிச் செயநீரில் தோய்த்துச் சலங்கை மணலில் காயப் போடு. இப்படி ஏழுமுறை செய். இனி கவசம் கேள். கடல் நுரை ஒரு சேர் வாங்கித் தூள் செய்து சாரத்தின் கீழும் மேலும் இட்டு சீ. ம. செ. 10 எருப்புடமிடு சாரம் ஓதரிய சுண்ணமாகும். நாகம் கட்டும். உபரசங்கள் ஈயமாகும். இரும்பு உருகியாடும். உப்பு முதல் இருபத்தைந்தும் கட்டாகும். மெழுகாகும்.

நாகத்தைத் தூயதாக்கி உருக்கிக் கொண்டு பத்திலொன்று சாரம் போடு. கட்டாகும். கட்டித் தங்கத்தோடு சேர்ந்து நின்று உருகினால் ஒன்பதும் பழுக்கும். அயச்செம்பில் நூற்றுக்கு ஒன்று கொடுக்க எட்டரை யாகும். நாகக் கட்டினை இரண்டாக வகுத்துச் சொன்னேன். ஐயுறாது இரண்டினையும் ஒத்துப்பார்.

இராமதேவர் சாரச் சுண்ணத்தால் நாலுயுகம் வாதம் பார்த்துக் காயசித்தி செய்தார். நிலைபெற வேண்டுமெனின் பிடிவாத நூலைப் பார். துரிசின் சிறப்பால் சித்தர் எல்லோரும் பிழைத்தார். நானென்ற ஆணவத்தால் வெளியாய்ச் சொன்னேன். 925-927 அறிவுரை.

வெள்ளி முறை

ஆமேதான் வெள்ளியது செய்யக் கேளு
அடவாக இதுலெகுவு முன்னே பாரு
தாமேதான் வெள்ளையென்ற பாஷா ணந்தான்
தாட்டிகமாய்ப் பலம்நாலு நிறுத்துக் கொண்டு

வாமேதான் வெள்ளீயம் பலமு நாலு
வடிவாக உருக்கியே முகத்தில் தானும்
காமேதான் எடைசமனாய்க் கொடுத்து வாநீ
கனிவாக உடையுமது கணக்கு மாமே 928

கணக்கான உடைந்ததொரு வெள்ளீ யத்தில்
கனிவாக எடைசமனாய் வெள்ளி சேர்த்துத்
துணக்காக உருக்கிடவே வெட்டை யாகும்
துடியாக இந்தஎடை சொல்லக் கேளு
நணக்காக வெள்ளைப்பா ஷாணம் சேர்த்து
நலமாகக் கல்வத்தி லரைத்து நீயும்
கணக்காகச் சாரநீர் தன்னா லாட்டிக்
கருத்துடனே யிருசாமம் அரைத்தி டாயே 929

அரைத்துநீ இருசாமம் சென்ற பின்பு
அடவாக வில்லைகட்டித் கதிரி லிட்டு
துரைத்துநீ காய்ந்தபின்பு புடத்தைப் போடு
துடியாக இப்படிக்குப் புடமும் ஐந்து
வரைத்துநீ போட்டு எடு பாஷாணந்தான்
வடிவாகச் சுண்ணமது மருவி நிற்கும்
முரைத்துநீ சுண்ணமதை எடுத்துப் பூசி
துடியாக வெள்ளீயம் நூற்றுக் கொன்றே 930

ஒன்றான நூற்றுக்கு ஒன்று இட்டால்
ஓகோகோ வெள்ளியது மாற்றுக் கேளு
நன்றாக வெள்ளிதான் பத்து மாற்று
நலமாக இம்மாற்றை வங்கந் தன்னைக்
கன்றாகக் கொடுத்துநீ ஊதிப் பாரு
கனிவாக ஓடாதே ஒளிந்தி டாதே
நன்றாக இருந்திடுங்காண் நல்ல தாகும்
நலமான குருவாகும் நாடி டாயே 931

நாடியே இந்தவெள்ளி தன்னைத் தானும்
நலமாகக் கடைதனிலே விற்று நீயும்
கூடியே உண்டுடுத்திப் பின்பு கேளு
குணமாக வாசியோ கத்தைப் பார்க்கத்
தேடியே வாதவிதி சொன்னே னப்பா
திடமாக வெள்ளிவித்தை சீரு மாகும்
வாடியே மயங்காதே வாதந் தன்னை
வடிவாக வெள்ளிதனைச் செய்தி டாயே 932

செய்திடவே சகலநூல் எல்லாம் பார்த்துச்
செப்பரிய அடிதொடுத்து நுனிமட் டுக்கும்
பைதிடவே பலகாலம் பார்த்துப் பார்த்துப்
பதிவாகச் சோதிச்சுச் சரக்கைக் கண்டு
கைதிடவே காரணத்தின் விதியி னாலே
கனிவாக ஞானத்தின் பொருளை ஓர்ந்து
கைதிடவே வாதமதைக் கண்ட போது
தாட்டிகமாய் எல்லாமும் சித்தி யாமே 933

சித்தியாம் மெய்ஞான வடிவு தன்னைச்
சிறப்பாக வாதிக்கு வலுவு கேளு
நத்தியே கைபாகம் கண்ட போது
நலமாக வாதசித்தி யுடனே யாகும்
பத்தியாய் வந்துவிடும் பதிவு மாகும்
பாதாளி வாகினியாம் பரிந்து சொன்னேன்
சத்தியமாய் இந்தநூல் தன்னைக் கண்டால்
(தாட்டிகமாய் ஆகு மிகச் சார்ந்து பாரே 934

928-934 – வெள்ளி வித்தை

வெள்ளைப் பாடாணம் நாலு பலம் நிறுத்து வெள்ளியம் நாலு பலம் உருகுமுகத்தில் கொடுக்க உடையும். உடைந்த வெள்ளியத்தின் எடை வெள்ளி சேர்த்து உருக்க வெட்டையாகும். இந்த எடை வெள்ளைப் பாடானம் சேர்த்துச் சாரநீரால் இருசாமம் அரைத்து வி. த. கா. சீ. ம. செ. புடமிடு இங்ஙனம் ஐந்துமுறை புடமிடு. பாடாணம் சுண்ணமாக மருவி நிற்கும். எடுத்து வைத்துப் பூசை செய். வெள்ளியத்தில் நூற்றுக்கு ஒன்று கொடு. பத்துமாற்று வெள்ளியாகும். இதன் தரத்தை ஆய்ந்து தரம் உறுதிப்படுத்துவதற்கு வங்கத்தைக் கொடுத்து ஊதிப் பார். ஓடாது ஒளிந்திடாது முன் மருந்து குருவாகும். இந்த வெள்ளியை விற்று உண்டுடுத்தி வளிநிலை நின்று தவம் செய் எல்லா நூலும் அடிதொடுத்து முடிவரைத் தேர்ந்து பார்த்துப் பலகாலம் பார்த்து ஆய்ந்து சரக்கு வகை கண்டு ஞானத்தின் பொருளைஓர்ந்து மாற்றுக் கண்டபோது எல்லாம் நிறைவாகும் (வலுக்கும்)

கருவங்கபற்பம்

சார்ந்துமே யின்னமொரு வாத மார்க்கம்
தாட்டிகமாய்ச் சொல்லுகிறேன் நல்ல வித்தை
ஊர்ந்துநீ காரீய பற்பம் கேளு
உறுதியாய்க் காரீயம் பலமும் சேரு

வார்ந்துமே கரண்டிதனிர் வைத்து ருக்கி
வடிவாகக் கற்றாழம் நீரி லேதான்
பார்ந்துமே ஏழுதிரம் உருக்கிச் சாய்க்க
பதிவாகக் காரீயம் சுத்தி யாமே 935

சுத்தியாம் காரீயம் சுத்தி யாச்சு
சுகமாகக் காரீயம் கரண்டி யிட்டு
நத்தியே கரண்டிதனி லிட்டு ருக்கி
நலமாக ஈயமது இடையே சூதம்
முத்தியாய்ச் சேர்த்துநீ உருக்கிப் பாரு
முனையாகப் புட்டாகும் எடுத்துக் கல்வம்
சுத்தியே றிட்டுநீ வெடியை மாட்டு
சரியாக இடைசேரு தன்மை யாமே 936

ஆமேதான் வெடியுப்பை யிடையே சேர்த்து
அடவாகப் பழச்சாறு விட்டு ஆட்டிக்
காமேதான் வில்லைகட்டிக் காயப் போடு
கனிவாகக் காய்ந்தபின் சொல்லக் கேளு
நாமேதான் வட்டோட்டின் உள்ளே யிட்டு
நலமாகச் சீலை-செய்து நாட்டக் கேளு
பாமேதான் பத்தெருவில் புடத்தைப் போடு
பதிவாக எடுத்துநீ பார்த்தி டாயே 937

பார்த்திடவே மஞ்சள்போல் இருக்கும் பாரு
பதிவாகக் கல்வத்தில் இட்டுப் பின்பு
ஏத்தியே பாணிவிட்டு மைபோல் ஆட்டி
இதமாகக் குழப்பியே பின்பு தானும்
நாத்தியே உப்பதுவும் கரைந்து போகும்
நலமாக இறுத்துநீ நாட்டம் பாரு
சாத்தியே அடியில் நின்ற வங்கந் தன்னை
தாட்டிகமாய் எடுத்துநீ தன்மை கேளே 938

கேளுநீ வீரமது இடையே சேர்த்துக்
கெடியாகச் சங்கினுட திராவ கத்தால்
வாளுமே விட்டரைத்து வில்லை கட்டி
வடிவாகக் கதிரிலிட்டுக் காயப் போடு
நாளுமே காய்ந்தபின்பு சொல்லக் கேளு
நலமாக அஞ்சுசுண்ணம் உள்ளே யிட்டுக்
காளுமே பத்தெருவிய் புடத்தைப் போடு
கனிவாகத் தீயாற்றி யெடுத்துப் பாரே 939

932-939 – கருவங்கபற்பம்

நாலு பலம் காரீயம் எடுத்துக் கரண்டியில் இட்டு உருக்கிக் கற்றாழம் நீரிலே ஏழுமுறை சாய்ப்பாயாக. தூயதாகும். பின்பு அதனைக் கரண்டியிலிட்டுருக்கி அதனொடை சூதம் சேர்த்துப் பிட்டாக்கியெடுத்துக் கொண்டு அதனொடை வெடியுப்புச் சேர்த்துப் பழச்சாறு விட்டு ஆட்டி வி. த. கா. சீ ம செ. 10 எருப்புடமிடு. மஞ்சள் நிறமாகும். எடுத்துக் கல்வத்திலிட்டுத் தண்ணீர் விட்டு அரைத்துக் குழப்பித் தண்ணீரை இறுத்து விடு. உப்பானது கரைந்து ஓடிப் போகும். அடியில் நிற்கும் வங்கத்தினொடை வீரம் சேர்த்து சங்கத் திராவகம் விட்டு அரைத்து வி.த.கா. அஞ்சுசுண்ணக் குகைக்குள்ளிட்டு சீ.ம செ. 10 எருப்புடமிடு. சுண்ணாம்பாகும்.

தாளக நீறு

பாருமே தீயாற்றி யெடுத்துப் பாரு
பதிவாகச் சுண்ணாம்பு பருவ மாகும்
நாருமே வங்கமது கடுமை யாக
வடிவாக இருக்குமது வண்மை மெத்த
காருமே வங்கமது தும்பைப் பூவாம்
கனிவாக வங்கமதைக் கல்வத் திட்டு
வாருமே தாளகந்தான் மேலே கட்டு
வடிவாகக் கதிரிலிடு வண்மை கேளே. 940

வண்மையாம் கதிரிலிட்டுக் காயப் போடு
வடிவாக அதன்மேலே மண்ணும் செய்து
உண்மையாய்ப் பத்தெருவில் புடத்தைப் போடு
உறுதியாய்த் தீயாற்றி யெடுத்துப் பாரு
பெண்மையாம் தாளகமும் கடிய நீறாம்
பெருமையாய்த் தாளகத்தின் நீறு தன்னை
வண்மையாய் நவலோகம் நூற்றுக் கொன்று
வடிவாக இட்டிடவே வகையு மாமே. 941

வகையாக மாற்றதுவும் சொல்லக் கேளு
வடிவாக எட்டரையாம் ஆணிக்கு ஒக்கும்
தொகையாக வுப்புக்குங் காவிக் கேகா
துடியாக அருகுகட்டி யிறங்கும் பாரு
முகையாக இதைவிற்றுச் செலவு செய்து
மெய்ஞ்ஞான வித்தைகளை முன்னே செய்து
தகையாகச் சுழிமுனையி லேறி வந்து
தாட்டிகமாய்ச் நின்றிடவே தன்மையாமே. 942

940-942 - தாளகநீறு

அந்த வங்கச்சுண்ணத்தைக் கல்வத்திலிட்டு அரைத்துத் தாளகத்தின் மேலே கட்டு. காயவைத்துச் சீ. ம. செ. 10 எருப்புடமிடு. தாளகம் கடிய நீறாகும். ஒன்பதிலும் நூற்றுக்கு ஒன்றிட மாற்று எட்டரை. அருகு கட்டியிறங்கும். விற்றுச் செலவு செய்து உண்டுடுத்திச் சுழிமுனையில் ஏறி நில். தண்மையாகும்.

கௌரிச் சுண்ணம்

ஆமேதான் தாளகத்தின் சுண்ணந் தன்னைத்
தாட்டிகமாய்க் கௌரியது மேலே கட்டு
வாமேதான் காய்த்தபின்பு சுண்ணச் சீலை
வடிவாகச் செய்துநீ கதிரி விட்டு
நாமேதான் புடம்போட்டுத் தீயை யாற்றி
நலமாக எடுத்துமேற் கவசம் தள்ளி
தாமேதான் பார்த்திடவே கௌரிச் சுண்ணம்
தப்பாமல் ஆகுமது தண்மை யாமே. 943

தண்மையாம் நவலோகம் நூற்றுக்கு ஒன்று
தப்பாமல் தான்கொடுக்க மாற்றுக் கேளு
உண்மையாம் பத்தரைதான் மாற்றுக் காணும்
உறுதியாய் இதைவிற்றுச் செலவு செய்து
வண்மையாம் வாசியோகத்தைப் பாரு
வடிவாக ஞானவிதி யடுத்துக் கூடு
பெண்மையாய் வாதமது கைபா கத்தால்
பெருமையாச் செய்யவே வாதமாமே. 944

943-944 -கௌரிச் சுண்ணம்

தாளகச் சுண்ணத்தைக் கௌரியின் மேலே கட்டு. காய்ந்த பின்பு சுண்ணச் சீலை வடிவாகச் செய்து புடம் போடு சுண்ணமாகும். ஒன்பதிலும் நூற்றுக்கு ஒன்று கொடு. பத்தரையாம். தவம் செய்.

வாதம் கைபாகம்

வாதமாம் வர்ணஇனம் சொல்லக் கேளு
வடிவாக உப்போடு நாக ....
காதலாய்க் கெந்தியோடு வீரந் தானும்
கனிவாக அயத்தோடு வர்ணமாகும்

நாதமாம் சூதமுடன் இவைகள் எல்லாம்
நன்றாகச் சேர்ந்துவிடில் மதிப மூக்கும்
சாதகமாய் சொல்லிவிட்டேன் சாயப் போக்கை
தாட்டிகமாய் அறிந்தவனே வாதி யாமே. 945

வாதியாம் கைபாக வரிசை கேளு
வடிவாகச் செம்புடனே கெந்தி சேர்ந்தால்
நீதியாய்க் கரியாகும் கார மிட்டு
நிலையாக உருக்கிடவே சத்து மாகும்
சோதியாய் வெண்கலம்போல் தகர்ந்து நிற்கும்
சுருதிபெறச் செம்பெடுக்க வித்தை கேளு
நாதியாய்ச் சத்துருக்குநாலத் தொன்று
நலமாகப் புதியஅரப் பொடிதான் வாங்கே 646

வாங்குவாய் நாலுக்கு ஒன்று தானும்
வடிவாகப் பொடித்துநீ உருக்கி னாக்கால்
தாங்கியே உருகுமப்போ செம்பு தானும்
தாட்டிகமாய் இரண்டுமே கருத்து நிற்கும்
தூங்கியே திரியாதே செம்பெடுத்துத்
துப்புரவாய் உருக்கிடவே காரம் கூட்டி
பாங்கியே உருக்கியே கட்டியாகப்
பதிவாக உருக்கியே தகடு தட்டே 947

தட்டியே கரியோட்டில் தகடு வைத்துத்
தாட்டிகமாய் வலுக்கவே யூதி யூதி
நட்டியே மின்னுமப்போ பருவம் பார்த்து
நலமாகத் துவைத்துவர உப்பு தன்னில்
முட்டியே மூவாறு தரமும் தோய்க்க
முனிவாகச் செம்பை விட்டு இரும்பு தானும்
வட்டியே கழன்றுவிடும் இரும்பு தானும்
வடிவாக இப்படிநீ கழற்றி டாயே 948

கழற்றிடவே மின்னூ தும் பாகந் தப்பில்
கனிவாகச் செம்பைவிட்டு இரும்பு தானும்
வழற்றாகக் கழியாது செம்பிரும்பும்
வடிவாகச் சேர்ந்துமே இருந்து தானால்
தழற்றாகப் பொன்சாயம் ஏற்றி டாது
தாட்டிகமாய் ஒன்றுக்கும் உதவா பாரு
ப்ழற்றாகப் பட்டுக்குச் சாயம் போல
பதிவாகத் தப்பிடிலோ ஏறா வாறே 949

வாறுகேள் செம்பிலே (அயம்) இருந்த தானால்
வடிவாகப் பொன்சாயம் ஏற்றி டாது
கூறுகேள் செம்பிலிருந்து அயமும் போனால்
குணமாகப் பின்சாயம் ஏற்றுக் கொள்ளும்
நீறுகேள் வாதிக்கு நினைவு வேண்டும்
நிலையான ஊத்துமுகம் அறிய வேண்டும்
பாறுமே முன்பின்னும் அறியா வாதி
பரதவித்து விழலாக அலைவார் தானே 950

951-952 - ஏடு சிதைவு

அகற்றிட செம்பையெடு தங்க மாளும்

....

நகைத்துமே சித்தரவர் கூடிக் கூடி
நலமாக இரும்புடனே செம்பைச் சேர்த்துப்
பகைத்துமே ரெண்டுமொன்றாய் உருக்கிக் காய்ச்சிப்
பதிவாக உப்பிலே துவைத்துப் பார்த்துத்
தகைத்துமே இரும்பைவிட்டுச் செம்பு தானும்
நலமாகப் போகாதால் பின்பு கேளு 953

கேளுமே அம்மலைகள் எல்லாம் கிட்டம்
கெடியாக மிகரொம்ப ஆன தாலே
வாளுமே யோகிகள் பண்ணும் போது
வடிவாகத் தன்வந்திரி பகவான் வந்து
நாளுமே மின்னூதும் பருவம் பார்த்து
நலமாக உப்பிலே தோய்த்திட் டார்பார்
காளுமே செம்பை-விட்டு இரும்பு தானும்
கக்கியே போனவுடன் கண்டிட் டாரே 954

955-956 - ஏடு சிதைவு

கரைத்துநீ பாலிலிட்டுக் கரைத்தி றுத்துக்
கனிவாகத் தெளிவிறுத்துக் கல்லுச் சட்டி
வரைத்துநீ இட்டுமே யொட்டக் காய்ச்சி
வடிவாக உப்பாக எடுத்துக் கொண்டு
கரைத்துமே நாகரசப் புட்டி னோடே
நலமாகச் சேர்எடையாம் நாட்டக் கேளு
வரைத்துமே பழச்சாறு விட்டு ஆட்டி
வடிவாக அயச்செம்பு மேலே கட்டே 957

கட்டியே கதிரிலிடு காய்ந்த பின்பு
கனிவாக அதன்மேலே கய்லுப்புத்தான்
நட்டியே மேனியிலை இடையே சேர்த்து
நலமாக அரைத்துநீ மேலே கட்டி
முட்டியே பத்தெருவில் புடத்தைப் போடு
முனிவாக ஆறவிட்டு எடுத்துக் கொண்டு
வட்டியே மேல்கவசம் தள்ளிப் பாரு
வடிவாகத் தங்கம் போல் நிறமுமாகும் 958

நிறமான தங்கம்போல் நிறமு மாகும்
நேர்மையாய்ச் சாயமது நிலைத்து நிற்கும்
அறமாக இதையுடைத்து வெள்ளி தன்னில்
ஆதியாய்க் கொடுத்துருக்கு மாற்று ஏழு
கறமாக நாலுக்குத் தங்கம் ஒன்று
கனிவாகச் சேர்த்துருக்கப் பத்து மாற்று
வறமாக இம்மாற்றைச் செலவு செய்து
வடிவாக ஞானமதை வணங்கு வாயே 959

வணங்கவே தன்வந்திரி கைபா கத்தை
வாகாகச் சொல்லியே செய்து காட்ட
இணங்கியே தன்வந்திரி மறைந்து போனார்
இதமாகச் சித்தருந்தான் செய்து கொண்டார்
துணங்கியே வாதமது சிவசொத் தப்பா
துடியாகப் பிடிவாதந் தன்னி லேதான்
உணங்கியே கடைசியிலே கைபா கத்தை
யுற்றுமே காட்டினது உறுதி தானே 960

உறுதியாம் நாகமது கட்டுத் தன்னை
உண்மையாய்ச் சொன்னதொரு முன்னே தானும்
அறுதியாய்ச் சொல்லிவிட்டேன் இந்த நாகம்
அடவாகச் செந்தூரம் தனக்கு ஆகும்
வறுதியாய்க் கடைசியிலே சொன்ன நாகம்
வடிவாக அயச்செம்பு கண்க்கு வைத்து
மறுதியாய்ச் செம்பெடுத்து நாகப் புட்டைப்
பதிவாகப் பூசியே புடத்தில் வையே 961

வைத்திட்டு வெள்ளிதனில் கொடுத்து ருக்க
வடிவாகத் தங்கமது ஆகும் பாரு
நைத்திட்டுத் தங்கமதை விற்றுத் தானும்
நாடியே செலவுசெய்து ஞான யோகம்

கைத்துநீ பார்த்திடவே சித்தி மெத்த
காதலுறு கைபாக வரிசை யாகும்
பைத்துமே சொன்னபடி போலே பாரு
பதமாக ஆளுமது பருவ மாமே 962

பருவமாம் அயச்செம்பு எடுக்கும் மார்க்கம்
பதிவாகப் பிடிவாதம் தன்னி லேதான்
குருவாகச் சொல்லிவிட்டேன் கூறு தன்னைக்
குணமாகச் சிவன்மேலே ஆணை யாகும்
முருவாக இதில்சொன்ன பாகந் தப்பில்
முனிவாக ஒன்றுக்கும் வாரா தாகும்
இருளாக வாதம்பொய் என்பார் மாண்பர்
திகைத்துமே யலைவார்கள் திண்ண மாமே 963

திண்ணமாம் என்னூலில் எல்லாம் தன்னில்
திறமாக அயச்செம்பு சொல்ல வில்லை
உண்மையாய் ஒன்றைவிட்டு ஒன்று சொன்னேன்
உதவாத பாவம்வரும் என்று சொல்லி
தண்மையாய்ப் பிடிவாதம் தன்னி லேதான்
தாட்டிகமாய்ச் சொல்லிவிட்டேன் செம்பைத் தானும்
கண்மையாய்ச் சாத்திரத்தை யறியா மூடர்
கனிவாக ஒன்றாகச் செய்த வாறே 964

வாறுகேள் நாகமது இல்லாவிட்டால்
வாதத்தில் வர்ணமில்லை மதிப முக்கா
கூறுகேள் சூதமது சுணங்க னுப்புக்
குணஞ்சோர அயச்செம்பில் சூதம் பாயா
நாறுகேள் கெந்தித்துவர் இல்லா போனால்
நலமாக அயச்செம்பில் வர்ணம் ஏறா
தேறுகேள் உப்பில்லாப் போனாக் காலெ
திடமாக அயமதுவும் விலகா பாரே. 965

விலகாது செம்பதுவும் வரமாட்டாது
வேதையொன்றுங் காணாது வாதம் பொய்யாம்
நலகாது நிரப்பவுந்தான் வாதம் சுட்டேன்
கெட்டேனென்றே சொல்வர் நடத்தை பாரு
குலமான பேர்கள்வர உன்னைத் தானும்
கூடியே சிரிப்பார்கள் கூடு கூட
வலமாக அலையாதே பாக மாக
வடிவாகச் செம்பைவைத்து மருவிடாங்கே 966

சுவடியில் பின்பகுதி சிதையு. இவ்வளவே கிடைத்தன.

945-966 - வாதம் கைபாகம்

வண்ண இனம் சொல்லக் கேள். உப்புநாகம் கெந்தி விரம் அயத்தோடு வண்ணமாகும். சூதத்துடன் இவையெல்லாம் சேர்ந்தால் வெள்ளி பழுக்கும். சாயப் போக்கினைத் துணையாகச் சொல்லி விட்டேன். இனி கைபாக வரிசை கேள். செம்புடன் கெந்தி சேர்ந்தால் நெறியாகக் கரியாகும். காரமிட்டுருக்கச் சத்தாகும். வெண்கலம் போல் தகர்ந்து விடும். செம்பு எடுக்க முறைமை கேள். பகைப் பொருளுக்கு நாலில் ஒன்று புதிய அரப்பொடி சேர்த்து உருக்கினால்க்கால் உருகும். இரும்பும் செம்பும் கருத்து நிற்கும். காரம் கொடுத்து உருக்கித் தகடு தட்டு. கரியோட்டில் தகடு வைத்து வலுக்க ஊதிப் பருவம் பார்த்து உப்பில் பதினெட்டு முறை தோய்க்கச் செம்பினை விட்டு இரும்பு கழன்று விடும். கழற்றுதற்கு ஊதும் பருவந்தப்பினால் செம்பினை விட்டு இரும்பு நீங்காது செம்பும் இரும்பும் சேர்ந்து இருந்தால் பொன் சாரம் ஏற்றுக் கொள்ளாது. ஒன்றுக்கும் உதவாது. பொன் செய்வோர்க்கு இது நினைவு வேண்டும். ஊத்துமுகம் அறிதல் வேண்டும். முன்பின் அறியா வாதி பரதவித்து விழலாக அலைவான்.

95',952 - ஆம் பாடலிலுள்ள ஏடு சிதைவு

சித்தர்கள் கூடிக் கூடி இரும்பும் செம்பும் சேர்த்துருக்கி உப்புலே துவைத்துப் பார்த்தனர். செம்பினை விட்டு இரும்பு போகவில்லை, மலைப் பாங்கெல்லாம் கிட்டம் ஆயிற்று. அப்போது தன வந்தரி பகவான் வந்து முன்னூதும் பருவம் பார்த்து நலமாக உப்பிலே தோய்த்திட்டார். செம்பினை விட்டு இரும்பு போனவுடன் கண்டு கொண்டனர்.

955, 956 - ஏடு சிதைவு

(வெடியுப்பு) க் கரைத்து இறுத்துத் தெளிவிறுத்துக் கல்சட்டியில் விட்டு ஒட்டக் காய்ச்சி உப்பாக எடுத்து நாகரசப் பிட்டினோடு எடையொப்பாய்ச் சேர்த்துப் பழச்சாறு விட்டு அரைத்து அயச்செம்பின் மேல் கட்டிக் காயப் போட்டும் கல்லுப்பும் மேனிலையும் அரைத்துக் கவசம் கட்டி 10 எருப்பிடமிடு. தங்க நிறமாகும். இதையுடைத்து வெள்ளியில் கொடுத்து உருக்கு ஏழு மாற்று. நாலுக்கு ஒன்று தங்கம் சேர். பத்து மாற்று. இதனால் உண்டுடுத்துத் தவம் புரிந்து மெய்யுணர்வு பெறு.

தன் வந்திரி கைபாகம் சொல்லிச் செய்து காட்டி மறைந்துப் போனார். சித்தரும் செய்து கொண்டார். மாற்று சிவன் செல்வம். இந் நூலில் கைபாகம் இறுதியிற் சொன்னது உறுதியே தான். முன்பு உண்மையாகச் சொன்ன நாகக் கட்டினை அறுதியாய்ச் சொல்லி விட்டேன். இந்த நாகம் செந்தூரத்திற்கு ஆகும்.

கடைசியிற் சொன்ன நாகத்தை அயச்செம்புக்கு வைத்துக்கொண்டு செம்பினை எடுத்து நாகப்பிட்டியினைப் பதிவாகப் பூசிப் பீடத்தில் வை. வெள்ளியில் கொடுத்துருக்கு. தங்கம் உண்டாகும். அயச்செம்பு எடுக்கும் நெறியைக் கருவாகச் சொல்லிவிட்டேன். சிவன் மேல் ஆணையாகும். இந்நூலிற் சொன்ன பாகம் தப்பியினால் வராது வாதம் பொய்யென்று சொல்லித் திகைத்து அலைவார்கள்.

முன் சொன்ன என் நூல்களிலெல்லாம் அயச்செம்பினைத் திறமாகச் சொல்ல வில்லை ஒன்று விட்டு ஒன்று சொன்னேன். உதவாத பாவம் வரும் என்று நினைத்து இந் நூலில் (பிடிவாதத்தில்) செம்பினைத் திறமையாய்ச் சொல்லிவிட்டேன். நூலினையறியா மூடர் வேறு ஒன்றாகச் செய்த முறை தவறு. நாகமின்றேல் மாற்றில் வண்ணமில்லை. வெள்ளி பழுக்காது. சூதமும் வெடியுப்பு மாகிய இவற்றின் குணம் சேர்ந்தால் அயச் செம்பில் சூதம் பாயாது. கெந்தித்துவர் இல்லா விட்டால் அயச் செம்பில் வண்ணம் ஏறாது உப்பின்றேல் செம்பிற் கலந்த அயம் விலகாது. விலகாவிட்டால் செம்பு தூயதாக வராது. மாற்று ஒன்றும் காணாது. மாற்றுப் பொய்யாம். நிரம்ப மாற்றுக்காகச் சுட்டேன் கெட்டேன் என்று கூறு வாரின் நடத்தையும் கூர்ந்து பார் தவறு செய்யின் உன்னைப் பார்த்துச் சிரிப்பார்கள். அலையாமல் பாகமாகச் செம்பினை வைத்துப் பொருத்திக் கொள்வாயாக.

யூகிமுனிவர் பிடிவாதம் 1000
ந.சே. உரையுடன் முற்றிற்று

யூகிமுனிவர் பிடிவாதம் 1000

செய்யுள் முதற்குறிப்பகராதி

எண்-பாட்டெண்

அ

அகற்றிட 953
அஞ்சாக 703
அடவாக 61
அடுக்கவே 342
அடுக்குமே 204
அடுத்துமே பித்தளையின் 415
அடுத்துமே நாகமது 184
அடுத்துமே ஓங்கார 426
அடுத்துமே சவுக் 534
அடுத்துமே விசுத்தி 387
அடுத்திடவே வீர 710
அடைத்துமே 234
அடைத்துமே வாலை 784
அடைக்குமே வாலை 374
அருகுகட்டி 248
அருமையாம் வெள்ளீயம் 668
அருமையாய் 197
அரைத்திடவே 627
அரைத்துநீ இருசாமம் 930
அரைத்துமே 106
அலையாமல் சொல்லு 493
அலையாமல் கைபாகம் 845
அறிந்துபார் வடி 491
அறையவே 277

ஆ

ஆகுமே மந்திர 31
ஆகுமே கெந்தியது 125
ஆகுமேலிங்கமது 129
ஆகுமே செம்பதுவும் 151
ஆகுமே தங்கமது 181
ஆகுமே நாகத்தை 237
ஆகுமே நவ 251
ஆகுமே சிவ 429
ஆகுமே யண்டத்தின் 504
ஆகுமே சாரத்தை 510
ஆகுமே சிறுபிள்ளை 622
ஆகுமே துரிசியது 745
ஆகுமே யிந்த வெள்ளி 764
ஆகுமே சிவசொத்து 782

எண்-பாட்டெண்

ஆகுமே மண்ணெல்லாம் 864
ஆகுமே யுண்டுவர 901
ஆச்சப்பா 18
ஆச்சப்பா 431
ஆச்சப் பாசூதத்தை 904
ஆட்டியே 239
ஆட்டிடவே 218
ஆட்டான புகை 563
ஆட்டான 266
ஆட்டான துரிசினுட 264
ஆட்டியேயிருசாமம் 408
ஆட்டியே யிருசாமம் 487
ஆட்டியேவில்லை 578
ஆட்டியே யிருசாமம் 600
ஆட்டியேமுச்சாமம் 601
ஆட்டியே நாற்சாமம் 365
ஆட்டான கேள்வி 713
ஆட்டான கேள்வியினால் 788
ஆட்டான பொருள் 839
ஆடவே 28
ஆடவேயண்ட 49
ஆடவே தங்கமது 147
ஆடவே வாதமது 157
ஆடவே மே 284
ஆடவே சுண்ணம் 291
ஆடவே யண்டபகி 919
ஆடவே யண்டபகி 886
ஆடுமே யண்ட 548
ஆடுமே செம்பாகும் 857
ஆடுமே யண்டரண்டம் 906
ஆடுமே பொன் 319
ஆண்மையாம் 309
ஆண்மையாய் 656
ஆணியாம் பொன் 691
ஆதியாம் இலிங்க கற்பம் 707
ஆமேதான் துருசு 16
ஆமேதான் 25
ஆமேதான் இந்த 36
ஆமேதான் கல் 62
ஆமேதான் சீவ 63
ஆமேதான் 73
ஆமேதான் அரப் 76
ஆமெதான் செம் 100
ஆமேதான் நா 102

	எண்-பாட்டெண்
ஆமேதான்	113
ஆமேதான் இலிங்கமது	130
ஆமேதான் துரிசினுட	135
ஆமேதான் கைகண்ட	143
ஆமேதான் தங்கமது	148
ஆமேதான் வங்கத்தை	153
ஆமேதான் கெந்தக	160
ஆமேதான் தொந்த	186
ஆமேதான் வெள்	198
ஆமேதான் இம் மெழுகை	205
ஆமேதான் சகலகலை	213
ஆமேதான் பத்தான	235
ஆமேதான் தாம்பூர	246
ஆமேதான் அருகுகட்டி	248
ஆமேதான் பித்தளை	250
ஆமேதான் வடமொழி	254
ஆமேதான்	268
ஆமேதான் முன்	282
ஆமேதான்	294
ஆமேதான் வாதி	300
ஆமேதான் ஏழு	316
ஆமேதான் தந்தம்பேரல்	331
ஆமேதான் உருக்கியே	336
ஆமேதான் களங்குதனை	339
ஆமேதான் இந்	354
ஆமேதான் நரகமது	371
ஆமேதான் முன்னே	388
ஆமேதான் வாதிக்கு	399
ஆமேதான் கார	412
ஆமேதான் களங்கு	422
ஆமேதான் குரு	425
ஆமேதான்	440
ஆமேதான் கார	461
ஆமேதான் சித்	473
ஆமேதான் கட்	474
ஆமேதான் சித்	485
ஆமேதான் பற்பம்	496
ஆமேதான் புளியோடு	500
ஆமேதான் சித்திபெற	503
ஆமேதான் சாரமென்ற	531
ஆமேதான் இத்தங்கம்	540
ஆமேதான் வீரத்தை	544
ஆமேதான் இப்பொன்னை	547
ஆமேதான் மனோசிலை	550
ஆமேதான் சிந்திக்க	555
ஆமேதான் வைத்திடவே	573
ஆமேதான் துரிசதுவும்	584
ஆமேதான் உபரசங்கள்	585

	எண்-பாட்டெண்
ஆமேதான் துரிசிமென்ற	589
ஆமேதான் சித்திக்க	597
ஆமேதான் சுருக்கிட்டு	612
ஆமேதான் உலகத்தில்	624
ஆமேதான் செம்பதுவை	640
ஆமேதான் மூதுரையில்	644
ஆமேதான் தங்கமது	646
ஆமேதான் முந்நீரு	654
ஆமேதான் பூரமது	661
ஆமேதான் மனோசிலை	674
ஆமேதான் இந்தவெள்ளி	682
ஆமேதான் தேங்காயின்	700
ஆமேதான் இலிங்கமது	705
ஆமேதான் நூற்றுக்கு	708
ஆமேதான் சித்திக்க	714
ஆமேதான் தங்கமென்ற	715
ஆமேதான் உலகத்தில்	733
ஆமேதான் சத்தமது	746
ஆமேதான் செம்பஞ்சு	758
ஆமேதான் பட்டு நூல்	759
ஆமேதான் இந்த வெள்ளி	765
ஆமேதான் வாதமது	781
ஆமேதான் சித்திக்க	789
ஆமேதான் பேறாக	792
ஆமேதான் அயக்களங்கு	794
ஆமேதான் இக்களங்கை	816
ஆமேதான் எட்டெட்டும்	822
ஆமேதான் அயச்செம்பு	831
ஆமேதான் மஞ்சளது	854
ஆமேதான் பித்தளைக்கு	871
ஆமேதான் நாகமது	878
ஆமேதான் காயசித்தி	891
ஆமேதான் மேகமுதல்	897
ஆமேதான் முசுட்டை	900
ஆமேதான் மாய்கை	907
ஆமேதான் சருவ	911
ஆமேதான் நாகத்தை	918
ஆமேதான் நாகத்தின்	921
ஆமேதான் வெள்ளியது	928
ஆமேதான் வெடியுப்பை	937
ஆமேதான் தாளகத்தின்	943
ஆனைமுகன்	1

இ

இட்டிடவே	279
இட்டுநீ	14
இட்டுநீ	468

	எண்-பாட்டெண்
இட்டுமே	72
,,	108
,,	224
	482
இட்டுமே குப்பி	226
இட்டுமே காய்ந்த	748
இட்டுமே இருசாமம்	914
இட்டுமே சாரமது	524
இட்டுமே புகைநீர்	567
இட்டுமே வீரமது	635
இட்டுமே மேல்	247
இடித்து மேகல	565
இதமாக	435
இரண்டாக	238
இருக்குமே	470
இருக்கவே தங்க	637
இருந்திடவே	82
இறங்கியே	437
இறங்குமே	305
இறங்குமே இதை	731
இறக்கியே	454
இறுத்துமே	532

உ

உண்டிடவே	613
உண்டு பார்சர்	484
உண்டு பார் நாள்	394
உத்துமே	148
உண்மையாய் ஞானவழி	357
உண்டைமேல்	366
உண்மையாய் இன்னம்	688
உப்பாலே	575
உப்பை விட்டு	308
உருக்கியே	328, 554
உருக்கவே	369
உருக்கிடவே அடிக்கடிக்க	384
உருக்கிடவே கனல்	481
உருக்கிடவே	672, 591
உருக்கிடவே ஈயமது	757
உருக்கிடவேலிங்	808
உருகியே முத்துமணி	333
உருட்டியே சுண்டை	860
உத்து நீ	863
உறுதி பார்	445
உறுதிபார்ச	287
உறுதியாம்	312

	எண்-பாட்டெண்
உறுதியாய்	460
உறுதியாய் மாற்றதுவும்	660
உறுதியாய் அறியாமல்	742
உறுதியாய் நாகமது	961
உறுதியா	6
உன்னியே பொருள்	530

ஊ

ஊற்றியே	293

எ

எச்சிலைத்தான்	457
எடுத்துமே பார்	15
எடுத்து நீ	141
எடுத்துப்பார்	124, 261
	377, 777
எடுத்துப்பார் முருக்கம்பூ	395
எடுத்துமே	334, 539
எடுத்துமே ஒன்றிடவே	335
எடுத்துமே கல்வ	377
எடுத்துமே பார்த்த	785
எடுத்துமே வெள்	679
எடுத்து வைத்த	222
எண்ணெய்தான் கக்கியே	172
எரிந்துமேகா	301
எல்லாமாம் செம்பு	805

ஏ

ஏத்தியே	233

ஒ

ஒக்குமே இந்த முறை	779
ஒண்ணாது கொச்சி	701
ஒன்றிடவே	41, 196
ஒன்றாக நாகமது	327
ஒன்றாக இட்டுருக்கு	648
ஒன்றாக இட்டுருக்கி	730
ஒன்றாக இட்டுமே	763
ஒன்றாக இட்டிடவே	711
ஒன்றான நூற்	731
ஒன்றுதான் கொடுத்து	476
ஒன்றுதான் தங்கமிடு	595
ஒழுங்காகவே	306
ஒன்றேதான்	385

எண்-பாட்டெண்

ஓ

ஓதினோம் 93
ஓடிப்போம் 288
ஓடியே 43

க

கக்குமே 242
கட்டவே 190
கட்டியே 266
கட்டியே புதைத்திட்டு 54
கட்டியே வங்கத்தை 514
,, கரியில் வைத்து 519
,, யண்டமது 634
கட்டியே கதிரிலிடு 958
கட்டுமே யிலிங்கமது 811
கட்டுமே யதையெடுத்து 865
கட்டுமே சாரமது 917
கடிசாகச் சுழிமுனையில் 909
கணக்காக 253
,, 444
,, ஆக் 428
,, சூத செந்தூரம் 552
,, பட்டோடு 618
,, பாதமது 693
,, பெரியோர்கள் 771
,, இச்செம்பை 806
,, அந்திசந்தி 895
,, உடைந்ததொரு 929
கணக்கறிய அயச்செம்பை 775
கண்டிடவே வாதிமார் 926
கண்டுபார் 65
,, 370
,, இதைவிற்று 642
,, காலோடு 652
,, இன்னமொரு 744
,, யோகமுதல் 786
,, கனகமொடு 898
கதையாக விட் 211
கதையாகும் 22
கருதியே புகை 450
,, குளிகை 421
கருத்திருக்கும் 66
கருத்தாகச் சத்துருவால் 862
கருதியே சுழி முனை 188
கருதியே தாம்பூர மெழுகு 720

எண்-பாட்டெண்

கருக்குமே யிரும்பதனை 750
கரைத்துநீ பாலிலிட்டு 957
கலக்கியே 33
கவசமது சொல்லு 916
கவசமாய் 136
கழற்றி 949
கழியுமே இரும்பதுவும் 804
கழுவியே 378
,, 262
கனகமாம் செந்தூரம் 823
கனிந்துமே 5
கனிவாக மேற்கவசம் 583
கனிவாகச் சருகினுட பித்தளை 848

கா

காட்டியே மேற்கவசம் 175
காணவே 337
,, 105
,, சிவ 479
,, இந் நீரை 574
காணவே வாதியிடம் 769
காணவே நடத்தை 858
காணாத சயகாசம் 499
காய்ச்சியே 298
காயமாம் 30
காய வைத்து 39
காயவே வைத்து 533
காய வைத்துப்பெ 580

கு

குணமாக 220
,, 379
,, 430
,, 481
குணமாக வலு 459
,, நாகத்தின் 502
,, மாற்று 187
,, பத்தியத்தை 899
குருடர்தாம் 401
குருவாகுந் 179
குருவைத்தான் 212
குருவாக இதை எடுத்து 890
குழப்பியே 318

கூ

கூடவே 143
கூட்டிடவே 232

	எண்-பாட்டெண்
கூர்ந்து	443
கூறவே	284
கூறினோம்	96
கூறினோம்துரிசினுட	549

கே

கேட்டிடவே குளிகை	506
கேட்டுமே	104
கேட்டுமே தேரர்	482
கேளுமே அம்மலைகள்	954
,, இதை விற்று	122
,, இப் பொன்னை	821
,, இன்னமொரு சேதி	853
,, உடைத்து நீ	394
,, உப்பை விட்டால்	903
,, யொரு	403
,, ஓட்டில்	340
,, கட்டினதோர்	812
,, கருவிலே	515
,, கற்சுண்ணம்	174
கேளுமே கறியுப்பு	409
,, காரமிட்டு	368
,, கெந்தியது	776
,, சாம்பல்	11
,, சூதம்	486
,, தாளகமும்	662
,, துவைத்து நீ	689
,, துரிசதுவும்	577
,, தூக்குத்தான்	295
,, தெளி	219
,, நவலோகம்	815
,, நெல்	12
,, பரீட்சைதனை	751
,, பத்தெரு	90
,, பன்னிரண்டு	818
,, பிண்டமது	171
,, புகைநீரை	915
,, புருவத்தி	192
,, மாற்றதுவும்	553
,, ,,	882
,, மெழுகெடுத்து	383
,, மேற்பூச	753
,, கேளுமேரத்	456
,, வங்கம்	154
,, வயிரவர்	229

	எண்-பாட்டெண்
,, வீரமது	939
கேளே வெள்	200

கொ

கொண்டுமே வடமொழி	772
கொள்ளவே யதைமூடு	297
,, யிதை	494
,, யுப்பு	170
,, கருப்	370
,, சகலநூல்	405
,, செம்புருக்கி	203
,, தாளகம்	155
,, நவகண்டம்	717
,, நாகமது	528
,, பிட்டாகும்	168
,, முசுட்டை	45

கோ

கோடிதான்	458
கோடிதான் தூ	462
கோடியாம் இரும்பைவிட்டு	795

ச

சணத்திலே நவலோகம்	639

சா

சாய்த்திடவே	217, 376
சாய்த்துமே பார்க்கின்ற	876
சாய்த்துவே லாலை	263
சார்ந்துமே இன்னமொரு	683
சாரமதுபச்சைதன்னில்	873
சாற்றினேன் வடமொழியை	829
சிணத்திலே	202
சித்தனாய்த் திரிந்தலைந்து	630
சித்தனாயாக	797
சித்தரென்று	842
சித்தனான்	389
சிந்தியது ஏதென்றால்	265
,, ,,	314
சித்தியாம் அஞ்செழுத்து	681
,, அந்திசந்தி	249
,, ,,	426

	எண்-பாட்டெண்
சித்தியாம் இந்தவுப்பு	299
,, இன்னமொன்று	141
,, உலகத்தோ	723
,, கைகலை	480
,, சத்	398
,, சருவபரி	835
,, சித்திக்க	361
,, சுண்ணமது	272
,, தங்கத்தில்	315
,, திரிவங்கம்	255
,, துரிசினுட	180
,, நரைதிரைகள்	46
,, நாகம்	494
,, நாகமது	592
,, நாகமது பலமும்	649
,, நாகமதுகட்டுச்	884
சித்தியாம் நாதாக்கள்	445
சித்தியார் வெடியுப்பின்	867
சித்தியாய்ப் பித்தளையின்	432
சித்தி பெற்ற	101
சித்தி பெற	144, 675
சித்தி தர எந்நாளும்	870
சித்தியாம் மஞ்சள் நீர்	453
சித்தியாம் முன் செம்பு	881
,, மெய்ஞானம்	934
சித்தியாம் மெய்ப்பொருளை	667
,, வழலையது	29
,, வாதமதை	824
சித்திக்க வேணுமென்றால்	780, 832

சீ

சீலை செய்து	69

சு

சுண்ணமாம் வீரம்	466
சுண்ணாம்பாய்	264
சுத்தியாம்	201
சுத்தியாம் காரீயம்	936
,, நாகமது	728
சுத்தியே	19
சுருக்கிடவேபூரமது	611
சுண்ணமாம் கெந்தி	156

செ

செய்யவே உண்டுடுத்தி	673
செய்திடவே	94, 353
,,	932
செய்து நீ உண்	477
செய்துமேவாலை	223
செய்துமே வெள்ளீய	684

சே

சேரவே	68
,, வழி	603
சேராக	273
சேர்த்து நீ	243
சேர்த்துமே	322
,, இடை	495
சேர்த்துமே இந்த எடை	877
,, உருக்கியுடை	866
,, தானுருக்கி	820
,, பழச்சாறு	417, 747, 803
சொல்லவே ஆயிரத்து	616
சொல்லவே கடமிட்டு	271
,, காரீயம்	756
,, சுழிமுனையை	60
,, திராவகமும்	851
,, துத்தியிலை	142
,, பத்தெருவில்	323, 641
,, வழியுணர்ந்து	509
மேருவுக்கு	38
சொல்லிவிட்டேன்	739
சொல்லுவார் செகத்திலே	344
சொல்லுவார் பஞ்சலோகம்	345
சொன்னதொரு	215, 434
	737, 738

த

தங்கமது	74
தட்டியே கரியோட்டில்	948
தண்மையாம் அந்திசந்தி	605
,, இந்நீரில்	855
,, உருகு	475
,, சித்திக்க	252, 658
,, செம்பதனில்	760
,, நவலோகம்	944
,, மூலவன்னி	779
,, வெகு கோடி	726
தணிந்துபோம்	131
தந்தமாம் கரியில் வைத்து	613
தருக்கமாம் களங்கதுவும்	817
தருகவே கெவுனத்தில்	836

	எண்-பாட்டெண்
தர்க்கமாய்ச் சொல்லாதே	687
தன்மையாய்	263
தன்மையாம் சிவயோகம்	598
,, நீர்க்கட்டு	826
தாக்கிடவே	320
தாக்கியே	17
தாக்கிப்பார்	872
தானாக இருசாமம்	609
தானென்ற அயம்	75
,, அரப்பொடியும்	800
,, ஆறுதலம்	924
, இந்தவுப்பை	37
,, உப்பினாலே	51
,, உப்பை	50
,, உலகத்தில்	48
,, உலகத்தோர்	8
,, கல்லுப்பு	32
,, களங்கு	7,419
,, காயசித்தி	623
,, குறை	107
,, சாத்திரந்தான்	872
,, சாத்திரத்தில்	840
,, சாற்றினிலே	813
,, சூதம்	47
,, சூலை மகோதரங்கள்	724
,, செந்தூரம்	411
,, தங்கமது	628,814
,, தீட்சை	472
,, துரிசதுவும்	177
,, துரிசியது	120
,, நாகமது	182
,, நாகம்	498
,, நாதாக்கள்	194
,, நூல்தனிலே	766,619,91
,, நூல்களிலே	837
,, பத்தியந்தான்	621
,, பத்தியமாய்	607
,, பவுத்திரங்கள்	287
,, தானென்ற பிட்டரைத்து	729
,, முந்நூறும்	856
,, முன்னே தான்	483
,, முன்னே தான்	849
,, யூகி	508
,, ரசவாதி	23,844
,, வாதந்தான்	773
,, வாதிதான்	402
,, வெள்ளீயம்	263,463
,, வெள்ளியச்	650

	எண்-பாட்டெண்
தாமேதான் எரித்திட்டு	111
,, ஒன்றுமே	85
,, காய்ந்தபின்	40
,, காரியச்	166,199
,, சாத்திரத்தில்	103
,, செட்டிகள்	77
,, நூல்பார்த்து	356
தாமென்றவுப்பு	59
தாமேதான்	52
,, நாலுயுகம்	963
தானேதான்	40,70,607,685
தானேதான் நூல் பார்த்து	356

தி

திடமாக ஒவ்வொன்றில்	526
திண்ணமாய் இத்தங்கம்	869
திண்ணமாம் என்னூலில்	964
திரமாக வுருந்தியே	873
தூத்தூவார் யூகி	507
தூளுமாம்	206
தெளிவாக	307

தே

தேடவே சாரமது	922
தேடவே நாலுமுக	420
தேரவே வெள்ளீயச்	625
தேற்றவேயின்னமொரு	695
தோய்ச்சிடவே	259,326,523,594
தோய்த்திடவே	416
தோய்த்துமே	245
நடக்கையாம்	92
நடத்தையாம்	229,400
நடத்தையாம் துரிசதுவும்	576
,, பார்	669
நம்பியே சாரமது	912
நவிலவே	257,579
நயந்துமே	706
நல்லவே	275
நல்லதாம்	338
நல்லாக	588
நன்மையாம்	343,843
நன்றாக	164,296

நா

நாகமது	221
நாட்டவே	110,272,696

	எண்-பாட்டெண்
நாட்டிபே	152,414
நாடியே	885,833,932
நாடியே குகை	448
நாடியே வெடி	451
நாலாக	71,270
,, சுண்ணாம்பு	633

நி

நிலைக்கவே	905
நிறமான தங்கம்	959

நீ

நீரிலே	317
நீறான துரிசது	561

நே

நேர்ந்துமே	678

நொ

நொறுங்கியே	410

ஞா

ஞானமது ஆகவே	694
பங்காகமெய்	665
பகர்ந்திட்ட	290
பகர்ந்திடவே	230
பகரவே பித்தத்தின்	825
படைத்தாலோ	883
பண்ணவே	712
பண்ணியே	35, 64, 397, 489, 512, 536
பண்ணிடவே யோங்காரம்	557
பண்ணிடவே நவலோகம்	543
பண்ணிடவே ரசவாதம்	827
பண்பான	193
பண்பாக அயமெழுகு	723
,, அயசெம்பு	793
,, ,, க்கிராசமது	861
,, ,, பச்சையிலே	874
,, ,, மனதடக்கம்	841
,, ,, வீரமது	663
பதனமாய்க்	441

	எண்-பாட்டெண்
பதிவாக	281
பத்தாகும்	330
பத்தாகவுருக்கியே	593
பரிந்துமே வெந்	653
பரிவான	137
பரீட்சையாய்	767
பருவமாக	423
பருவமாம் அயச்	963
பருகுமே ஞான	555
பருவமாய்	10
பலம் நாலு	258
பலனாக இச்செம்பை	805
பழுக்குமே	20

பா

பாகமாம்	189
பாகமாய் ஆயிரத்து	819
பாரப்பா பூரணத்தை	908
பாரப்பா கேசரத்தில்	910
பாரப்பா நாகமது	920
பாரப்பா விராலிமலை	608
பாரிலே யகத்தியர்க்குப்	3
பாரிலே யரைத்து	802
,, எடை	126
,, சாரமது	516
,, ஞானம்	208
,, நாத ஓங்காரம்	709
,, பஞ்சபூதத்தின்	313
பாரிலே விட்ட	260
,, வெள்ளீயம்	629
பாருமே அண்	112
,, அயக்களங்கை	782
,, ஆவிதான்	13
,, இன்னமொரு	847
,, இக்களங்கை	877
,, இத்தங்கல்	596
,, உப்பு	57
,, உலகோர்க்கு	132
,, உலகத்தில்	741
,, என்று சொன்னார்	734
,, கட்டுகின்ற பாகம்	875
,, கல்வத்தில	329
,, குருட்	98
,, காரியம்	167
,, ,, குரு	447
,, சவுக்காரம்	21
,, சாத்திரத்தை	796

எண்-பாட்டெண்

பாருமே செகசாலம் 188
,, சித் 58
,, சுண்ணத்தால் 527
,, ஞானத்தின் 529, 386
,, தங்கமது 185
,, திரிவங்கம் 269
,, துரிசதுவும் 631, 636
,, துரிசினுட 19
,, நடனவொலி 834
,, நரைதிரை 501
,, நாதாந்தம் 902
,, நீராம்பல் 351
,, பித்தளையின் 859
,, பித்தங்கள் 348
,, மன 404
,, மனமது 360
,, வெள்ளீயம் 629
,, வெள்ளைக்கு 139
பார்த்திடவே அகத்தியரும் 6
,, சகலசித்தும் 99
,, சித்தர்கள் தாம் 159
,, திரிவங்கச்சுத்தி 256
,, ஞான 428
,, வாதந்தான் 127
,, யோகம் 692
,, வெள்ளி 761
பாருநீ சவுக்காரம் 210
பார்த்துமே 78
பாதையாம் 83
பொருந்தவே 213
பார்த்தவுடன் பச்சை 716

பு

புகலவே 283
புகை நீரால் ஆட்டியே 488
புடம் போட 467
புடம் போட்டு இல் 469
புடம் போடு 244
புலம்பாமல் 146
புலம்புவார் புவி 133

பே

பூசவே 638
பூசியே 53,86
பேணியே 438
பொ. பொடியாக்கிக் கடுக்காயை 892

எண்-பாட்டெண்

போ

போகுமே 606,725,896, 158,231,436
போடவே 523,535,590 610,615,754 850,889, 55 89,116,121 169,173,176 241,332,375 380,418,464 521,666
போட்டுமே 572,632,893 913
போட்டு நீ 721
போக்கான சித்தர் 511
போச்சப்பா 292
போற்றவே 559

ம

மயக்கம்போம் 787
மருவவே இந்நீரை 569
மருவவே களங்கமது 888
மருவிடவே பா 617
மருவியே செம்புதனை 372

மா

மாளாமல் 24,599
மார்க்கமாய் 770
மாற்றானபத் 620
மாற்றான இருபத்துமூன்று 606
முடித்திடவே 81
முத்தியாம் 128
முறிந்துமேகை 492
முறையாக 240,702
முன்னே தான் 115
முனிந்துமே 289

மூ

மூடியே 274
மூர்க்கமாய் 798

மெ

மெழுகெடுத்து 614

எண்-பாட்டெண்

மொ

மொழிகுவேன் 109
மொழியவே 302,407,571, 697,732,749
மொழிந்துபார் மனோசிலையே 670

வ

வகுத்திடவே 350
வகையாக 310,942
வண்மை 44,449.114, 437,225,304, 517,551,651, 719,752,755, 766,830,880,925, 941
வடிவாக 84, 88,280, 195,341,406
வடிவமாம் 562
வடிவான 455
வணங்கவே 960
வணக்கஞ் செய்கை 505
வணங்கிடவே 209
வரிசையாய் 2,236,465
வருகுமே 9,80,311,42,359 362,363,809,868
வலுவாகும் 207
வழக்கமாய் 95
வழிபாடு 163
வழுத்தினார் 4
வறுமையாய் உண்டிடவே 490
வறுக்கவே 227,276,
வழியாத ஐம்புலன் 392
வழக்கமாம் பூரத்தை 546
வழக்கமாம் 719, 778, 791
வளப்பமாய் 497
வளப்பத்தின் 699

வா

வாங்கியே 324, 513, 558 568, 704, 810
வாசியோகத்தை 587

எண்-பாட்டெண்

வாட்டியே 67
வாட்டிடவேதாளகந்தான் 664
வாதமது 677, 740, 743, 774
வாதமாம் 945
வாதிதான் 97, 355
வாதிமார் 674
வாதியாம் 799
வாதிதான் அலைந்தாலும் 927
வாதியாம் கைபாகவரிசை 946
,, துரிசதனை 132
வார்த்துமே 542, 570
வாரான பஞ்சலோகம் 347
வாருகேள் 79, 325
வாறுகேள் 87, 123, 433, 214, 149, 446, 736, 801 950, 965

வி

விட்டு நீ கலக்கி 34
விருப்பமாம் 396
விரும்பிடவே 352
விரும்பியே 442
விரும்பியே யோங்கார 846
வினையான 26

வெ

வெள்ளியாம் செம்பு 138
வெள்ளையாம் நீர் வாங்கி 364
வெற்றி பெற 393

வே

வேதை தான் 118
வேதையாம் 303
வைத்திடவே 117, 655, 690
வைத்திட் 852, 962
வைத்துமே 321, 381, 382, 413, 520, 538

யூகிமுனிவர் பிடிவாதம் 1000

அருஞ்சொற் பொருள்

பா.எண்.	வரி	
2	2	உருசை - உறுசுவை என்பதன் மரூஉ உருசி ருசி உருசை என்பனவும் காண்க.
	3	நரிசையாய் - நறுமணமாக, நறுவிசாய், நறு-மணமே பரிமளமாயிற்று.
	4	பரிசை - கேடயம், காப்பு
6	1	சவுக்காரம் - பூ நீறு சுக்கான்நீறு கடல்விரலி மஞ்சள் (சீதை குளித்த மஞ்சள்-சீதை) இவற்றால் செய்யப்பட்ட உருண்டை. கடையில் விற்கும் ஒரு வகைச் சவுக்கார உருண்டையும் உண்டு. (சோப்பு அன்று)
7	1	களங்கு - உருகிக் கலங்கி இறுகி இருக்கும் மருந்-துக் கலவை. கலங்கு களங்கு ஆயிற்று.
10	2	சீதை - சீதை குளித்த மஞ்சள் என்று வழங்கப் பெறுகிறது.
12	1	பாணி - தண்ணீர்
	3	மல்லிகையிலை - இது குறிப்பாகப் பூ நீற்றையும் குறிக்கும்
13	3	அமுரி - சிறுநீர்
	4	வாலை - தீ நீர் இறக்கும் வடிகாம்பு உள்ள மேல் மூடியுடன் கூடிய சட்டி
14	1	புகை நீர் - திராவகம், தீ நீர்
	3	அஞ்சு சுண்ணம் - ஐவகைச் சுண்ணத்தால் செய்த குகை
15	3	துருசு - மயில் துத்தம்
16	3	உபரசங்கள் - எலும்பு வகை ஓட்டின் வகை மணல் வகை நிமிளை முதலியன மணிவகை ஆகிய 120
17	4	வெண்கண்டர் - சீனக்காரம்
24	1	வாத சித்தி - செம்பொன் செய்யும் செயல் வலுத்தல்
25	4	வழலை - சவுக்கார வழலை
32	1	கல்லுப்பு, பாறையுப்பு - கடையில் கிடைக்கும்.
	3	கிளிஞ்சில் நீர் - குளத்துச்சிப்பி நீறு
36	1	மேரு - அடிப்பாகம் உருண்டையாய் மேற்பாகம் நீளக் குழாய் வடிவாய் அமைந்த குப்பி
38	4	வலப்பக்கல் - மாக்கல் வட்டு

பா.எண்.	வரி	
51	1	கெதை - பட்டந்தீட்டின கைத்தடி (வாதக்கோல்)
53	2	கார்முகி - கார் முகிற் பாடாணம் (இலிங்க வைப்பில் செந்நிறம் பெறாமல் நிற்கும் பொருள்)
58	2	திசைமாற்று - திசை-எட்டு. ஆகவே எட்டுமாற்று என்க. (திசைந்த மாற்று என்று கொண்டால் பத்தரை.)
	4	தொந்தம் - மீண்டும் மீண்டும் மருந்து கூட்டிச் செய்தல், தொந்தித்தல்-சேர்த்தல்
62	1	வேதை - மாற்று, பேதித்தல்-மாற்றமடைதல், பேதித்தல் வேதித்தல் என்று பகரம் வகரமாக மாறிற்று. பின்பு முதனிலையில் ஐ சேர்ந்து வேதை என்றாயிற்று.
63	2	அயம் - இரும்பு
64	3	வெடி - வெடியுப்பு
66	1	கல்வம் - குழியம்மி
	2	தாளகம் - அரிதாரம்
78	1	கெவுரி - கெவுரிப் பாடாணம்
80	1	அரப்பொடி - அரத்தினால் அராவிய இரும்புப்பொடி
84	4	நாறும் பூ - கெந்தகம்
92	4	பிடிவாதி - உறுதியாய்ப் பொன் செய்வோன்
98	4	கட்டினம் – கட்டுக்களின் வகை. இரசம், இலிங்கம், கந்தகம், சாரம், வீரம், பூரம், பாடாணங்கள் உப்புவகை இவற்றை நெருப்புக்கு ஒடாமல் கட்டுதல், நாகம் முதலியவற்றையும் கட்டுவர்
102	3	வங்கம் - ஈயம்
105	3	சூதம் - இரசம்
	4	வாய்நீர் - புகைநீர் வாலையின் வாய்வழியாக வருகிறநீர். அஃதாவது வெடியுப்புத் திராவகம். உமிழ்நீரன்று.
113	4	பழுப்பினம் - செம்பினைத் தங்கமாகப் பழுக்கச் செய்யும் செந்தூர சுண்ண வகைகள்
		கொடுப்பினம் - உலோக வகைகளிலும் உடல் வகைகளிலும் கொடுக்கப்படும் மருந்து வகைகள்
121	2	நமன் – இயமன்
129	1	இலிங்கம் - சாதிலிங்கம், உலாந்தா இலிங்கமென இருவகையுண்டு
131	3	மதி - வெள்ளி ஏறியாடும்-நிறம் கலந்து உருகிப் பொன்னாகிக் கண்விட்டாடும்

பா.எண்.	வரி	
138	2	தொந்தம் - ஒன்றனோடு ஒன்றனைச் சேர்த்தல், கலவை, சேர்மானம் என்று பொருள் கொள்க. ஒரு பொருளினை, கலப்பது தொந்திப்பதாகும். உருக்கியதனொடு மற்றொரு பொருளைக் பலமுறை கலப்பதுண்டு. நூறு தொந்தம் ஏறும் என்பர்.
152	1	பணங்கால்வீதம் - காற்பணவெடை, அஃதாவது ஒருகுன்றி எடை. உடல் வலிமை கண்டு கூட்டியோ குறைத்தோ வழங்குக. குறைத்து வழங்குவது நலம்.
171	1	பிண்டம் - தசையுடன் கூடிய கிளிஞ்சில், அஃதாவது குளத்தில் கிடக்கும் வாய்மூடிய சிப்பி
179	1	சுருபமணி - இரசமணி வகையில் ஒன்று. வாயிலிட்டால் உருவந்தெரியும். வாளால் வீசினால் ஒளியுடம்பில் வாள் பாயும், வெட்டில்லை. ஆகாயத்தில் வீசியது போல் இருக்கும்.
186	1	தொந்த செந்தூரம் - இரண்டு பொருள் முதலிய பல பொருள்கள் கலந்த செந்தூரம்
190	3	ரேக்கு - தங்கச்சுருள்
204	1	புழுகு - புனுகு
		உரம் - தங்க உரம். இது செய்யும் முறையைப் புலத்தியர் முந்நூறிற் காண்க.
219	2	அண்டம் - கோழிமுட்டை. முட்டைத் தோட்டினை (குஞ்சு பொரித்த பின்னுள்ளதை)ச் சுண்ணம் செய்க
230	3	மகோதரம் - பெருவயிறு என்ற நோய்
	4	சயம் - காசம். பித்தவெட்டை-பித்தத்தாலாகிய சூடு
232	4	வாலையென்ற அடுப்பு - மணலடுப்பு. அடுப்பில் பெரிய பானை வைத்து அதனுள் மணலிட்டு அந்த மணலில் குப்பி அல்லது குகை முதலியன வைத்து மூடிமேல் மணலிட்டு எரித்து எடுத்தல் வேண்டும்.
241	3	கற்காவி - காவிக்கல், கடைச்சரக்கு, பூங்காவியும் தனியே உண்டு
285	1	பவுத்திரங்கள் - மூல முளையுடைந்து புண்ணாகிய பின் உண்டாகும் ஓட்டைகள்
331	2	மேனி - குப்பைமேனியிலை
342	1	பஞ்சபூதியம் - ஐம்பொருட் செயல், இரும்பு, பொன், வெள்ளி, செம்பு, ஈயம் ஆகிய இவற்றின் மாற்று விளைவுகள்
345	4	புதை - அம்புக்கட்டு, இங்கே ஓரம்பினைக் குறித்தது

பா.எண்.	வரி	
370	2	நிகடை - சுக்கான் கல்லைப் பொடித்து ஆவின் நீர்விட்டு அரைத்துச் செய்த குகை.
376	1	வளகிலுப்பு - வளையலுப்பு. கடையிற் கிடைக்கும்
381	2	டோளைகட்டி - ஒரு சட்டியின் கழுத்தின் இருபக்கமும் துளையிட்டு ஒரு குச்சியைச் செருகி அதன் மேல் கயிறு கட்டிக் கயிற்றில் சரக்கு வைத்துக் கிழியாகச் சட்டிக்குள் தொங்கவிட்டுச் சட்டிக்குள் இருக்கும் நீரில் கிழி நனையாமல் விட்டு மேல் ஒரு சட்டிமூடி ஆவியினால் பொருள்கள் பக்குவமாகும் வண்ணம் எரிப்பது. திருமூலர் துளைகட்டி எரி என்றார். அதனைத் தோளாந்திர மென்றும் தோலாந்திர மென்றும் டோளை என்றும் மருவச் செய்து வடமொழி போலாக்கினர். வீரம் நனைந்தால் கரைந்து போய்விடும்.
382	1	சாமம் - 3 மணி நேரம்
448		மத்தங்காய் - ஊமத்தங்காய்
478	2	வாதுபுரி - காற்றுமண்டலம்-விசுத்தி
489	2	ஏமம் - தங்கம்
612	2	கௌரி - கௌரிப் பாடாணம்
613	2	தொட்டி - செப்புத் தொட்டிப் பாடாணம்
615	3	தாரம் - அரிதாரம். முதற்குறை கௌரிப் பாடாணத்தை அரன்தேவி என்றும் வெள்ளைப் பாடாணத்தை அயன்தேவி என்றும் தாளகத்தை அரியின்தேவி என்றும் கூறுவது நூன்முறை. தாரம் - தேவி மூன்று பொருள்களையும் மூவகை ஆற்றல் தங்கிய தெய்வமாகக் கூறினர். அவர்களுக்கு உரிய பிறபெயர்களாலும் வழங்குவர்.
651	3	ஆதியொடு அந்தம்பாரு - மூலாதாரத்தில் மனத்தை நிறுத்திப் பின்பு அதே வேளையில் உச்சி வெளியையும் நோக்கு
759	3	துவர் - சிவப்புநிறம்
776	2	பொற்றலை - பொற்றலைக் கரிப்பான்
780	2	அமடு - துன்பம்
811	2	பூசுரங்காய் - பூவரசங்காய்
	3	பூப்புடம் - மணலுக்குள் வைத்திடும் புடம்
839	2	கெவுன நீதி - விண்ணிற்பறந்து செல்லும் முறைமை